தமிழ் நூல்களில் பாடவேறுபாடுகள்

டாக்டர் வை. மாருதியாசிரியன்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
1990

தமிழ் நூல்களில் பாடவேறுபாடுகள்

டாக்டர். வெ. பழநியப்பன், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்.டி.
இணைப்பேராசிரியர்
தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
1990

முதற் பதிப்பு 1990
© அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

தமிழ் நூல்களில் பாடவேறுபாடுகள்
Tamil Noolkalil Padaverupadukal

விலை ரூபாய் : 55.00
U.S.$ 20.00

அச்சிட்டோர் : சக்தி விநாயகர் அச்சகம்
மதுரை.

கலைமாமணி, டாக்டர் ஆறு. அழகப்பன்
தமிழியல் துறைத்தலைவர்
இந்திய மொழிப்புல முதன்மையர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அணிந்துரை

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இன்றைய உலகத்திற்குத் தேவையான பல்துறை அறிவுப் பயிற்சியையும் அளித்து வரும் பல்கலை அறிவுக் கூடமாகும். பல்கலைக்கழகத் தமிழியல்துறை செவ்வியல் மொழியாகிய தமிழுக்கு எவ்வாறெல்லாம் ஆக்கமும் வளமும் சேர்க்க வேண்டுமென்று நாளுஞ் சிந்தித்து 'ஞானவேள்வி' நடத்தி வருவதைத் தமிழுலகு நன்கறியும். இவ்வேள்வியில் விளைந்த ஒளிப்பிழம்பே ஆசிரியர் டாக்டர் வெ. பழநியப்பன். இவர் தம் டாக்டர் பட்ட ஆய்வேடான 'தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் பாடவேறுபாடுகள் ஓர் ஆய்வு' (சங்க இலக்கியம் சிறப்பாய்வு) என்பதே இப்பொழுது 'தமிழ் நூல்களில் பாடவேறுபாடுகள்' என்ற தலைப்பில் நூலாக வெளிவருகிறது.

ஆய்வுகள் சில நுனிப்புல் மேய்வதாக அமைவதுண்டு. உழைப்புக் குறைவாக இருக்கப் பரப்பளவைக் குறைத்து, குறுகிய காலப் பயிர்ப்பலன் போல ஆய்வுப் பட்டம் பெறுவதும் உண்டு. ஆனால், இவ்ஆய்வாளர் தம் அயரா முயற்சியால், தம் ஆய்வுக்கெனமேற்கொண்ட நூல்களின் பல்வேறு உரைகளையும் பதிப்புக்களையும் தேடித் தொகுத்தும், அந்நூல்களில் காணலாகும் பல்வகைப்பட்ட பாடவேறுபாடுகளைக் கண்டு அவற்றுள் ஏற்கத் தக்கவற்றைத் தகுந்த முறையில் வகைப்படுத்தியும், அவை தொடர்பான கருத்துக்களைத் தம் முன்னோடியர் கருத்துக்களுடன் இணைத்து ஆராய்ந்தும். தம் ஆராய்ச்சித் திறத்தைப் புலப்படுத்தியுள்ளார்.

ஆய்வாளர் தம் சிறப்பாய்விற்காகத் தேர்ந்தெடுத்துக் கொண்டது சங்க இலக்கியம் ஆகும். தொன்மைத் தமிழ்ச் சிறப்புடைய சங்க இலக்கியம் வழி வழி மக்களிடையே பயிலப்

பெறுகையில் ஏடுபெயர்த்தெழுதுவோராலும், பாடஞ் சொல்லிக் கேட்கப் பெற்றவராலும் பாடவேறுபாடுகள் தோன்றுவதைத் தவிர்த்திருக்க இயலாது. நூல்களை அச்சிடுங்கால் அச்சகத்தாரால் அச்சடிக்கப் பெற்ற அச்சுப் படிகளைத் திருத்துவோர் சிறிது கவனக் குறைவாக இருப்பினும் பிழைகள் புகுந்துவிடும். பாடவேறு பாடுகளுடன் அச்சுப்பிழைகளும் சேர்ந்து கொண்டால் ஆய்வுக் களத்தில் தொல்லை மிகுதியாகும். இதனைத் தவிர்க்க வேண்டும் என்ற பொறுப்புணர்வில் ஆய்வாளர் "அச்சுப்பதிப்பில் பிழைகள் வந்திருந்தால் பிழைத்திருத்தம் போடுவதையாவது பதிப்பாளர்கள் ஒரு கடமையாகக் கருதவேண்டும்" என்று குறிப்பிடுவது சிறந்த ஆக்கக் குறிப்பாகும்.

'சங்க இலக்கியம்-சிறப்பாய்வு' என்ற அளவிலே 'தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் பாடவேறுபாடுகள்-ஓர் ஆய்வு என்ற தம் ஆய்வுக் களத்தை-ஆய்வெல்லையை வரையறை செய்து கொண்டுள்ளார் ஆய்வாளர். பரந்து விரிந்து ஆழ்ந்து நிற்கும் தமிழ்க் கடற்பரப்பில் இவ்வாறு வரையறை செய்து கொள்வதுதான் பொருத்தமும் இயல்வதுமாகித் தெளிவிற்கு வழிவகுக்கும்.

ஆய்வாளர் தம் ஆய்வுக்குத் தகுந்த வகையில் மேனாட்டுத் திறனாய்வு முறைகளைப் பயின்று, வேண்டியவற்றைத் தக்க இடங்களில் பயன்படுத்திச் செல்வதை நூலில் ஆங்காங்கும் காணலாம். 'பாடவேறுபாடு' என்னும் தலைப்பில் தமிழ்நாட்டு முன்னோடிகளாகிய அறிஞர் பலரின் கருத்துக்களையும் அணுகு முறைகளையும் இந்த ஆய்வாளர் தம் மனத்தகத்தே கொண்டு, பல பாட வேறுபாடுகளைச் சீர்தூக்கிப் பார்க்க முனைந்துள்ளார்.

பாடவேறுபாடானது, பாடபேதம் என்பதும், ரூபபேதம், உச்சாரணபேதம் என்பதும் ஆகிய அடிப்படையால் ஒன்றுக் கொன்று வேறுபாடுடையவை என்பதைக் கருதி, பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை, "துரியோதனன்-திரியோதனன் என்பன ரூபபேதங்கள்; மார்க்கம்-மாற்கம் எனவருவன உச்சாரண பேதங்கள்" என்று கூறுவார்; மேலும் இவ்விரு வேறுபாடுகளிலும் பொருள் மாற்றமில்லை. எனவே பொருள் மாற்றத்தோடு

அமைந்தவற்றைப் 'பாடபேதம்' என்றும், பொருள் மாற்றமின்றி வடிவாலும் ஒலியாலும் வேறுபடுவனவற்றை முறையே 'ரூபபேதம்', 'உச்சாரணபேதம்' என்றும் அவர் கருதுவது எடுத்துரைக்கப் படுகின்றது. அத்துடன் நில்லாது ஆய்வாளர், 'எவ்வகைப் பேதமாயினும் அனைத்தையும் பாடவேறுபாடுகளாகவே கொண்டு, அவற்றைப் பொருள் வேறுபாடுடையவை, பொருள் வேறுபாடற்றவை என இரு பிரிவுகளாகப்பகுத்துக் காண்டல் தெளிவும் எளிமையும் உடைய முறையாக அமையும்' என எழுதிச் செல்வது திறனாய்வு அணுகு முறையை எளிமைப் படுத்துங் குறிப்பாகக் கொள்ளலாம்.

சிறந்த செய்யுள் நூலுக்குப் பாடவேறுபாடுகள் தோன்றுவது இயல்பேயாகும். நூலாசிரியரின் காலத்திற்கும் நூலிற்கு உரை கண்ட உரையாசிரியரின் காலத்திற்கும் இடைவெளி நீண்டிருப்பின் உரையாசிரியர் தமக்குக் கிடைத்த ஏடுகளை நம்பியே 'மூலபாட ஆய்வு' செய்து, இயன்றவரையில் தேர்ந்த பொருள் நலங்காண முற்படுவார். ஒரே நூலுக்கு உரை யாசிரியர்கள் பலராக அமைகையில் அவரவர் கண்ட மூலபாட ஆய்வுகளையும் ஒப்புமை நோக்கில் கண்டு, தேர்ந்த முடிவுகளைக் காணும் பொறுப்பு ஆய்வாளரைச் சார்கின்றது. இத்தகைய பெரும் பொறுப்பினை இந்த ஆய்வேட்டின் ஆசிரியர் ஏற்றுள்ளது போற்றத்தக்கது.

பாடவேறுபாடுகள் பல்கிச்செல்லும் காரணத்தால் ஆராய்ச்சி முயற்சியில், ஓரளவு தளர்ச்சி பொதுவாக ஏற்படலாம். அத்தகைய தளர்ச்சி ஒரு சிறிதும் கொள்ளாமல், விடாமுயற்சியுடன் பாடவேறுபாடுகளைத் திறனாய்வு அடிப்படையில் பகுத்துக் கொண்டும், வகைப்படுத்திக் கொண்டும், தள்ளக்கூடியவற்றைத் தள்ளியும், கொள்ளக் கூடியவற்றைக் கொண்டும் தமிழாராய்ச்சி உலகத்திற்குப் பெரிதும் பாடுபட்டுள்ளார் இவ் ஆய்வாளர். இவர் தம் எம்.லிட். பட்டத்திற்கு மேற்கொண்ட 'புகழேந்தியும் நளவெண்பாவும் என்ற ஆய்வேட்டையும் பல்கலைக்கழக வெளியீடாகக் கொண்டுவந்து ஆய்வுலகின் பாராட்டினைப் பெற்றார். ஆய்வறிஞர் டாக்டர் வெ. பழநியப்பன், தமிழ்

முதுகலை வகுப்புகளுக்குத் தொல்காப்பியம், சங்க இலக்கியம் முதலியவற்றைப் பாடங்கற்பித்த அனுபவங் கொண்டவர். இலக்கியத் திறனாய்வுக் கட்டுரைகளை மாணவர்கள் புரிந்து கொள்ளும் வண்ணம் எழுதி வழங்கிய சிறப்பிற்குரியவர்.

பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப் பெறும் சிறந்த பட்ட ஆய்வேடுகள் நூல்களாக வெளிவர ஏழாவது ஐந்தாண்டுத் திட்டம் நிதி உதவி செய்தது. இத்திட்டத்தின் கீழ் இவ் ஆய்வேடு வெளிவருகிறது. இந்நூல் வெளிவர உறுதுணையாக இருந்த பல்கலைக்கழக ஆட்சிக்குழுவினர், வாழையடி வாழையாகத் தமிழ்ப்பணிக்கு முன் உதாரணமாக விளங்கும் செட்டிநாட்டரசர் குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழும் மாண்பமை இணைவேந்தர் டாக்டர் மு. அ. மு. இராமசாமி அவர்கள், வளரவேண்டிய பிரிவுப்பயிர்களுக்கு வான்மழையாக விளங்கும் நம் துணைவேந்தர் மாண்பமை டாக்டர் டி. சி. மோகன் அவர்கள் ஆகிய இவர்களுக்குத் தமிழ் உலகம் நன்றி கூறி மகிழ்கிறது.

நாளும் பொழுதும் பலப்பல நூல்கள் வரலாம். அவைகளில் சிலச்சில நூல்கள் சிறந்து விளங்குகின்றன. அச்சிலச்சில நூல்களில் செதுக்கிய கோயில் சிற்பமாக ஓரிரு நூல்கள் உண்டு. அவ் வடிவத்தைத் தந்த தமிழ்ச்சிற்பி டாக்டர் வெ. பழநியப்பன் அவர்களைப் பாராட்டி மகிழ்கிறேன்.

டாக்டர் ஆறு. அழகப்பன்
தமிழியல் துறைத்தலைவர்.

முகவுரை

பெருங்கொடைவள்ளல் அண்ணாமலையரசரின் பெருங் கருணைத் திறத்தால் உருவாகிய அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இன்று பல்வேறு துறைகளில் வளர்ச்சி பெற்று வைரவிழாக் கொண்டாடி மகிழ்ந்துள்ளது. நான் பயின்று பணியாற்றும் இப்பல்கலைக்கழகம் எனது தாய்ப் பல்கலைக் கழகமாகும்.

இப்பல்கலைக் கழகம் எனது எம்.லிட். பட்ட ஆய்வேடான **'புகழேந்தியும் நளவெண்பாவும்'** என்பதனை நூலாக வெளியிட்டுச் சிறப்பித்தது போல எனது முனைவர் பட்ட ஆய்வேடான **'தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் பாடவேறுபாடுகள்' (சங்க இலக்கியம் சிறப்பாய்வு)** என்பதனையும் இப்பொழுது நூலாக வெளியிட்டுச் சிறப்புச் செய்வதனை நான் என்றென்றும் நன்றியுடன் போற்றி மகிழ்வேன்.

வைரவிழாக் கண்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பீடுமிக்க தமிழியல்துறை பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு ஆய்வு நூல்களைத் தமிழ் உலகிற்கு அளித்த பெருமைக்குரியது. அம்முயற்சிக்கெல்லாம் தோன்றாத் துணையாய் என்றும் இருந்து வரும் **செட்டி நாட்டரசர் குடும்பத்தார்க்கும்,** இணைவேந்தர் மாண்பமை டாக்டர் மு.அ.மு. **இராமசாமி** அவர்கட்கும் எனது நெஞ்சம் நன்றி பாராட்டி மகிழ்கின்றது.

இவ்வகையில் எனக்கு ஊக்கமும் ஆக்கமும் தந்த மாண்பமை துணைவேந்தர் டாக்டர் **டி.சி. மோகன்,** பதிவாளர் டாக்டர் **பி. ஆர். கற்பகக்கணபதி** ஆகியோர்க்கும் என் நன்றி உரியது.

எனது வாழ்வில் என்றென்றும் தோன்றாத் துணையாக விளங்கி வரும் அண்ணாமலைப் பல்கலைக்கழக முன்னாள் நிகழ்நிலைத் துணைவேந்தர் பேராசிரியர், முத்தமிழ்வித்தகர் **லெ.ப கரு. இராமநாதன் செட்டியார்** மற்றும் இவ்ஆய்வு வழித் தடத்தில் நெறியாளர்களாக விளங்கிய அமரர் டாக்டர் **வ.சுப. மாணிக்கனார்,** டாக்டர் **நா. பாலுசாமி** ஆகியோருக்கும் நன்றி செலுத்தும் கடப்பாடுடையேன்.

ஆய்வு சிறக்கவும் என் வாழ்வு வளம் பெறவும், எனது ஆய்வுநூல்கள் அச்சேரவும் ஒல்லும் வகையெல்லாம் உதவிவரும் பெருமை மிகுதமிழியல்துறைப் பேராசிரியர் கலைமாமணி டாக்டர் **ஆறு. அழகப்பன்** அவர்களை நான் என்றென்றும் நன்றியுடன் போற்றி மகிழ்வேன்.

இந்நூல் அச்சுப் பணிக்குப் பெரிதும் உதவிய பல்கலைக்கழக வெளியீட்டுத்துறை அதிகாரி திரு. **வெ. இலக்குமணன்** அவர்கட்கும், நூலினை அச்சிட்டு உதவிய மதுரை சக்தி விநாயகர் அச்சகத்தாருக்கும் எனது நன்றி உரியதாகும்.

அண்ணாமலைநகர்	அன்புடன்
3—8—90	டாக்டர். **வெ. பழநியப்பன்**

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

அகம்	அகநானூறு
இல. விள.	இலக்கண விளக்கம்
இ. வை. அ.	இ. வை. அனந்தராமையர்
இளம்.	இளம்பூரணர்
இறை. உரை	இறையனாரகப்பொருள் உரை
உ. வே சா.	உ. வே. சாமிநாதையர்
எ	எழுத்ததிகாரம்
ஐங்.	ஐங்குறுநூறு
ஔவை.	ஔவை. சு. துரைசாமிப்பிள்ளை
கல்.	கல்லாடர்
கலி.	கலித்தொகை
க. வா.	கடவுள் வாழ்த்து
குறள்	திருக்குறள்
குறி. பா.	குறிஞ்சிப்பாட்டு
குறுந்.	குறுந்தொகை
சங். இல. பதிப்பு.	சங்க இலக்கியப் பதிப்பு
சிலப்ப.	சிலப்பதிகாரம்
சீவக.	சீவகசிந்தாமணி
சேனா	சேனாவரையர்
சொ.	சொல்லதிகாரம்
தமிழ்	தமிழ் விடுதூது
திருமுரு.	திருமுருகாற்றுப்படை
திருவேங். அந்.	திருவேங்கடத்தந்தாதி
திவ்ய.	திவ்யப்பிரபந்தம்
தெய்வ.	தெய்வச்சிலையார்
தே.	தேவாரம்

தொ.	தொல்காப்பியம்
நச்சி.	நச்சினார்க்கினியர்
நற்.	நற்றிணை
நன்.	நன்னூல்
நா. திரு.	நாச்சியார் திருமொழி
நூ.	நூற்பா
ப. உரை	பழைய உரையாசிரியர்
பதிற்.	பதிற்றுப்பத்து
பரி.	பரிபாடல்
பாவை.	திருப்பாவை
பு. வெ. மா.	புறப்பொருள் வெண்பாமாலை
புறம்.	புறநானூறு
பேரா.	பேராசிரியர்
பொ.	பொருளதிகாரம்
பொ. வே. சோ.	பொ. வே. சோமசுந்தரம்
ம. காஞ்சி	மதுரைக்காஞ்சி
மணி	மணிமேகலை
மயிலை.	மயிலைநாதர்
முத்.	முத்தொள்ளாயிரம்
வை. மு. கோ.	வை. மு. கோபாலகிருட்டினமாச்சாரியார்

உள்ளுறை

—*—

முன்னுரை

தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் பாடவேறுபாடுகள்-ஓர் ஆய்வு (சங்க இலக்கியம்–சிறப்பாய்வு) என்பது இவ் ஆய்வுக்குரிய தலைப்பு. இத்தலைப்பின் படி தமிழில் எல்லாக் காலத்தும் எழுந்த இலக்கிய இலக்கணங்களின் வேறுபாடுகளை ஆய்வுக்கு மேற்கொள்ள வேண்டும். எனினும், தொன்மை மிக்க இலக்கிய இலக்கணங்களில்தான் பாட வேறுபாடுகள் மிகுதியாதலாலும், அவற்றிற்குச் சில மரபுகள் இயல்பாகவே ஏற்பட்டிருத்தலாலும் இவ்வேறுபாடுகளில் செய்யப் பெறும் முடிவுகள் ஆய்வு நோக்கில் பெரும் பயன் உடையனவாதலாலும் இவ் ஆய்வில் தொல்காப்பியமும், கடைச்சங்க நூல்களும் முதன்மையாகவும் தலைமையாகவும் மேற்கொள்ளப்பட்டன. இத்தொன்னூல்களில் அமைந்த நெறிகள் பின்வந்த நூல்களுக்கும் பொருந்தும்.

தொல்காப்பியத்திலும் கடைச்சங்க நூல்களிலும் காணப்பெறும் பாடவேறுபாடுகளை ஆய்பொருளாகக் கொண்டு நிகழ்த்தப் பட்டுள்ள இவ்வாய்வு தமிழுக்குப் புதியது. பாடவேறுபாடுகளின் தோற்றத்திற்குரிய களங்கள், பாட வேறுபாடுகளின் பகுப்பாய்வு நிலை, மூல பாட ஆராய்ச்சி எனப் பல்வேறு கோணங்களில் தொன்மை சான்ற இலக்கிய இலக்கணப் பாட வேறுபாடுகளை ஆராய்ந்த இந்நிலை தமிழில் ஒரு கன்னி முயற்சியாகும்.

பாடவேறுபாட்டு ஆய்வில் முன்னோடியர்

இலக்கிய இலக்கணங்களில் காணப்பெறும் பாடவேறுபாடுகளை ஆராய்ந்த முன்னோடியர், அவ்வந் நூல்களின் உரையாசிரியர்களே யாவர். நூலாசிரியர் கருதிய மூலபாடம் இதுவே எனத் துணிந்தும், பிறர் பாடங்களைச் சுட்டியும், அவற்றின் தகவு தகவின்மையை அறுதியிட்டும், உரை கூறும் நெறியில் மூலபாடங்களைத் தேர்ந்து கொள்ளும் வழிமுறைகளை வகுத்தும் உரையாசிரியர்கள் தம் உரைகளில் பாடவேறுபாட்டு ஆய்வு நெறிகளைக் குறிப்பிட்டுப் போந்தனர்.

தொல்காப்பிய உரையாசிரியர்கள் இளம்பூரணர், சேனாவரையர், பேராசிரியர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடர், பெயர் அறியப்பெறாத உரையாசிரியர் ஆகியோர் பாடவேறுபாட்டு ஆய்வில் முன்னோடியர். தொல்காப்பியத்தின் இற்றைநாள் உரையாளர்கள், பதிப்பாளர்கள் ஆகியோரும் இவ் வாய்வுக்குத் துணையாவர்.

சங்க இலக்கியங்களில் பத்துப்பாட்டு நூலின் உரையாசிரியர் நச்சினார்க்கினியர், எட்டுத்தொகை நூல்கள் சிலவற்றுக்கு உரை வரைந்த பெயர் அறியப் பெறாத உரையாசிரியர்கள், பதிப்பின் வேந்து உ.வே. சாமிநாதையர் உள்ளிட்ட பதிப்பாளர்கள், புதிய நோக்கில் உரை கண்ட உரைவேந்தர் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை உள்ளிட்ட உரையாளர்கள் ஆகியோர் சங்க இலக்கியப் பாடவேறுபாட்டு ஆய்வில் இன்றியமையாதவர்கள்.

பாடவேறுபாடுகள் பற்றிய ஆய்வில் ஆராய்ச்சியாளர்களால் நிகழ்த்தப் பெற்ற பணிகளும் இவண் குறிப்பிடத்தக்கவை. 'மூல பாட ஆய்வியல்-ஓர் அறிமுகம்' (Introduction To Indian Textual criticism....) என்ற ஆங்கில நூலை எழுதிய எஸ். எம். காத்ரே பாடவகைகள், மூலபாட ஆய்வுக்குரிய சில அடிப்படை உண்மைகள், மூலபாடங்களை நிறுவும் முறைகள் எனப் பல நிலைகளில் மூலபாட ஆய்வு குறித்து ஆராய்ந்துள்ளார். அறிஞர் விநாயக மூர்த்தியின் 'மூலபாட ஆய்வியல்' என்னும் நூல் இத்துறையில் தமிழில் எழுந்த நூல்களில் குறிப்பிடத்தக்கவொன்று.

'திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும்' என்ற மு. சண்முகம் பிள்ளை எழுதிய நூல் பாடவேறுபாடுகளை வகைப் படுத்தும் போக்கையும், மூலபாடங்களைத் தேர்ந்தெடுக்கும் நோக்கையும் உணர்த்துகின்றது. தமிழில் தனியொரு இலக்கியத்துக்குரிய பாடவேறுபாடுகளை நூலின் ஒரு பகுதியாகக் கொண்டு விளங்கும் சிறப்பு இந்நூலுக்குரியது.

புறநானூற்றில் உ.வே சாமிநாதையர் பதிப்பில் குறிப்பிடப் பெற்ற பாட வேறுபாடுகள் 981 என எண்ணி, அவற்றில் பகுப்பாய்வுக்கு உரியனவாய 814 வேறுபாடுகளை எழுத்து, சொல்

என்னும் இருபெரும் தலைப்புக்களில் பல்வேறு உட்பிரிவுகளில் பகுத்துக் காட்டிய பகுப்பாய்வு நூலாக விளங்குவது மு. இராமகிருட்டினனின் 'பிரதிபேத ஆராய்ச்சி' என்ற நூல். பாட வேறுபாடுகளை ஆய்ந்து சிறந்த மூலபாடங்கள் இவையென நிறுவத் தனியே அறிஞர்குழு அமைத்து, கம்பராமாயணம் முழுமைக்கும் பல தொகுதிகளாகப் பாட வேறுபாட்டுப் பதிப்புக்கள் வெளியிட்ட அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் பணியும் பாட வேறுபாட்டு ஆய்வில் குறிப்பிடத்தக்கவொன்று. 'பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும்-சில குறிப்புக்கள்' என்ற சிறு நூலொன்றை டாக்டர் க. கைலாசபதி எழுதியுள்ளார்.

'பிரதிபேத ஆராய்ச்சி' என்ற நூலுக்கு அணிந்துரை எழுதிய டாக்டர் வி. ஐ. சுப்பிரமணியம், சொ. முருகப்பாவின் 'இராம காதை' நூலுக்கு அணிந்துரை எழுதிய டாக்டர் வ.சுப.மாணிக்கம் திவ்யப்பிரபந்தம் முதலாயிரப் பதிப்புரை எழுதிய பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை ஆகியோர் பாடவேறுபாடுகள் பற்றி அரிய கருத்துரை எழுதிய அறிஞர்கள் ஆவர்.

இலக்கிய வரலாற்று நூலில் மு. அருணாசலம் திருவாசகத்தின் பாடவேறுபாடுகளை ஆராய்ந்துள்ளார். க. வெள்ளைவாரணம் தொல்காப்பியப் பாடவேறுபாடுகள் சிலவற்றை ஆராய்ந்து நிறுவியுள்ளார். 'தொல்காப்பியத்தில் ஒரு சூத்திரம்' என்ற தலைப்பில் மு. அருணாசலம்பிள்ளை கழக 1008–ஆவது நூல் வெளியீட்டு விழா மலரில் ஒரு கட்டுரை எழுதியுள்ளார். 'திருக்குறளில் பாடவேறுபாடுகள்' என்பது சு. சாமிஐயாவின் கருத்தரங்கக் கட்டுரை. பாடவேறுபாடுகள் குறித்து ஆய்ந்த வேறுசில அறிஞர்களும் உளர்.

மூலபாட ஆய்வும் பாடவேறுபாடுகளும் பற்றி எழுந்துள்ள இந்நூல்களும், கருத்துரைகளும் 'தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் பாடவேறுபாடுகள் - ஓர் ஆய்வு' (சங்க இலக்கியம்-சிறப்பாய்வு) என்ற இவ்வாய்வுப் பேராற்றினைக் கடக்கப் புணையாகத்துணை செய்தன. முன்னோடியர் செய்த தினையளவு ஆய்வுகள், பனையளவாய் நிகழ்த்தப்பட்ட இவ்வாய்வுக்கு வழிகாட்டும் விளக்கங்களாக அமைந்தன. முன்னோர் காட்டிய

தடத்தின் ஒளியில் செய்த இவ்வாய்வு, பாடவேறுபாடுகளைப் பகுத்தாய்வதிலும், மூல பாடங்கள் இவையென நிறுவுவதிலும் குறிப்பிடத்தக்க தனித்தன்மையோடு விளங்குகின்றது என்பதைப் பணிவுடன் கூறிக் கொள்கிறேன்.

அடிப்படை நெறிகள்:

தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் பாட வேறுபாடுகள் பற்றிய பொதுத்தலைப்பில், சங்க இலக்கியங்கள் குறித்த இச்சிறப்பாய்வில், பாடவேறுபாடுகள் எழுந்த களங்களும், காரணங்களும் நுனித்தறியப்பட்டு, அவற்றின் அடிப்படையில் அவை பகுத்துரைக்கப்பட்டுள்ளதும் (Classification of variation) பொருள் வேறுபாட்டுடன் அமைந்த பாடவேறுபாடுகளை நிலை நிறுத்தி (Recension) அவற்றுள் பிழையென்று கருதும் பாடங்களை ஒதுக்கி, (Emendation) மூலபாடம் இதுவென நிறுவுதலும் ஆகிய பாடவேறுபாட்டு ஆய்வுப் பணிகள் (Study of variations) நிகழ்த்தப்பட்டுள்ளன.

தொல்காப்பிய நூற்பாக்களிலும், சங்க இலக்கியச் செய்யுட்களிலும் அமைந்த வேறுபாடுகளே இவ்வாய்வுக்கு உரிய பொருள். தொல்காப்பிய, சங்க இலக்கிய உரைகள், சங்க இலக்கியப் பாடல்களில் திணை, துறை விளக்கம், பாடிய புலவர்களின் பெயர்கள், பதிற்றுப்பத்து முதலிய நூல்களில் அமைந்த பாடற்றலைப்புக்கள், பத்துப் பாட்டில் பிற்சேர்க்கைப் பாடல்கள் ஆகியவற்றின் பாட வேறுபாடுகள் இக்கட்டுரைக்கண் ஆராயப்பெறவில்லை. இவற்றில் அமைந்த வேறுபாடுகள் மூலத்திற்கு நேரடியாகத் தொடர்பின்றி அமைந்தமையால் அவை இவ்வாய்வுக்குக் கருதப்பெறவில்லை.

பாடவேறுபாட்டாய்வு, தமிழ் போன்ற தொன்மையான நூலுக்கு மிக விரிந்த களமாகும். இக்களத்தில் புகுந்த ஆய்வாளர், தம் ஆய்வுக்கு வரம்பான சில நெறிகளை வகுத்துக் கொள்ளல் வேண்டும். அப்போதுதான் பாடவேறுபாடுகள் குறிப்பிட்ட பாகுபாடுகளில் அடங்கும். மொழியின் வளர்ச்சிக்குப் பயனுடையதாக அமையும். இந்நோக்கோடு சங்க இலக்கியப் பாடவேறுபாடுகளைச் சிறப்பாக ஆய்வு செய்யும் நான், அடிப்படை நெறிகளாகச் சில கோட்பாடுகளைப் பின்பற்றியுள்ளேன். இந்நெறிகள் கீழே வகைப்படுத்தப் பட்டுள.

1. ஒவ்வொரு நூலுக்கும் பதிப்புக்கள் பலவுள. பலரால் அவை பதிப்பிக்கப் பெற்றும் உள. இந்நிலையில் பாடவேறுபாடுகளைக் காட்டும் போது அடிப்படையாக ஒருநிலைக்களம் வேண்டுமன்றோ? ஒருவர் பதிப்பை அல்லது ஒரு பதிப்பை நிலைக்களமாகக் கொண்டாற்றான், இதனினும் இது வேறுபட்டதென்று நடைமுறையில் விளங்கச் சொல்ல இயலும். இதனால் நிலைக்களமாகக் கொள்ளப்பட்ட பதிப்பு, முதன்மையுடையது என்று பொருளாகாது. நடைமுறைக்கு ஏற்பத் தழுவிக் கொண்டதோர் முறையென்றே இதனைக் கொள்ளல் வேண்டும்.

இம்முறையில், பழமைச் சிறப்பும் பதிப்பு முதன்மையுமுடையனவாய பதிப்புக்களில் அமைந்த பாடங்கள் இக் கட்டுரைக்கண் அடிப்படைப் பாடங்களாகக் கொள்ளப்பட்டுள. தொல்காப்பியத்திற்கு இளம்பூரணர் உரைப்பதிப்புக்களும், நற்றிணைக்குப் பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் பதிப்பும், கலித்தொகைக்கு இ.வை. அனந்தராமையர் பதிப்பும், அகநானூற்றுக்கு ரா. ராகவையங்கார் பதிப்பும், எஞ்சிய ஐந்து எட்டுத்தொகை நூல்களுக்கும், பத்துப் பாட்டிற்கும் உ. வே. சாமிநாதையர் பதிப்புக்களும் அடிப்படை நூல்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. பாடல்களின் எண், மேற்கோள் சுட்டுக்கள் ஆகியன இப் பதிப்புக்களைப் பின்பற்றியே இக்கட்டுரைக்கண் உரைக்கப் பெற்றுள.

2. பாடவேறுபாடுகளைத் தொகுக்கும் பொழுது ஒரே நூலுக்கு எழுந்த பலர் பதிப்புக்களும், ஒரு நூலுக்கு ஒருவரே பதிப்பித்த பல்காலப் பதிப்புக்களும் தழுவப்பட்டுள. முழுநோக்குடன் பதிப்புக்களில் செலுத்தப் பெற்ற இப்பார்வை, முன்பின் எழுந்த வேறுபாடுகளைச் செம்மைப்படுத்துவற்கு உறுதுணையாக அமையும்.

3. தொல்காப்பியத்திற்கும் சங்க இலக்கியத்திற்கும் புலமை சான்ற தொன்மை உரைகள் உள. மூலபாடச் செம்மைக்கு உரைப்பார்வையும் இன்றியமையாதது. எனவே உரைநோக்கியும் மூலபாடங்களைச் செப்பம் செய்யும் நெறியும் இன்றியமையாதது.

4. மூலபாடங்களை முடிவு செய்வதில் பின்பற்றப்பட்ட மற்றொருவகை நெறியும் குறிப்பிடத்தக்கது. தொன்னூல்களில் கருத்தும், சொல்லும், நடையும் பல்லாற்றானும் ஒத்தனவாகவே அமைதல் இயல்பு. மூலபாடங்களைத் தெரிந்தெடுப்பதில் ஒப்புமையான பிற இலக்கியத் தொடர்களும் ஒருங்குவைத்துப் பார்த்து முடிவு செய்யப்பட்டுள்ளன.

5. இக்கட்டுரைக்கண் காணத்தகும் பாடவேறுபாடுகள், அவற்றின் சிறப்பு, சிறப்பின்மை பற்றி நோக்காது அனைத்தும் முழுமையாகத் தொகுத்துக் கொள்ளப் பெற்றுள்ளன. இங்ஙனம் தொகுக்குங்கால் பதிப்புக்களில் அச்சுப் பிழையால் நேர்ந்த மாறுதல்கள் பொருள்நோக்கு ஆய்வுக்குரியனவாகக் கொள்ளப் பெறவில்லை.

6. பாடவேறுபாடுகள் குறிப்பிட்ட வரம்பிற்குள் அடங்குவன வல்ல. எனவே பொருள்நோக்கு என்ற நிலையில் இன்றியமை யாதவை இக்கட்டுரைக்கண் ஆராயப்பெற்று நிறுவப்பட்டுள. தொகுக்கப் பெற்ற அனைத்து வேறுபாடுகளின் முழுப்பட்டியலைப் பின்னிணைப்பில் காணலம்.

7. சங்க இலக்கியங்கள் செய்யுள் நூல்களாதலால் மூலபாடங்களைத் தெரிவுசெய்வதில் யாப்புப் பற்றிய சிந்தனையும் இன்றியமையாதது. இத்தகைய நோக்கால் மூலபாடங்களாய செம்பாடங்களை எளிதில் முடிவு செய்ய இயலும். இத்தகைய கண்ணோட்டமும் இக்கட்டுரைக்கண் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

8. பாடவேறுபாடுகளில் பொருள் மாறுபாட்டுக்கு உரியனவே முழுமையான நோக்குக்குரியவை. எனவே நூல் தோறும் இத்தகைய பாடங்கள் தனித்தெடுத்து ஆராய்ந்து முடிவு செய்யப் பெற்றுள்ளன. கொள்ளத்தக்கனவும், தள்ளத்தக்கனவும் இவையென உரிய காரணங்களோடு சுட்டப்பட்டுள்ளன. பாட வேறுபாடுகள் பற்றிய முடிவுகள் சில, பின்னரும் ஆய்வுக்குரியவை என்றாலும் பெரும்பாலானவை எதிர்காலத்தில் உரைச் செம்மைக்கும், பதிப்புச் செம்மைக்கும் வழிகாட்டும்.

9. மூலபாடங்களைத் தெரிவு செய்யுங்கால் ஏற்படும் பிறிதொரு சிக்கலும் இவண் குறிப்பிடத்தக்கது. பொருள் மாறுபாடுடைய வேறுபாடுகளில் பொருட்சிறப்புடையனவாகவே ஒன்றுக்கு மேற்பட்டுப் பாட வேறுபாடுகள் இருக்கும்போது இதுதான் மூலபாடம் என ஒன்றினை மட்டும் உரிய காரணம் கூறித் தெரிவு செய்வதுதான் முறை. இந்நெறியைப் பின்பற்றியே இந்த ஆய்வில் முடிவுசெய்யப்பட்டுள்ள இடங்கள் பல. எனினும் இந்நெறியை எல்லா இடங்களிலும் முழுமையாகக் கடைப்பிடிப்பது என்பது வன்கண்மையாகும். சில இடங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட பாடங்களும் தக்க, சிறந்த பொருள்பயப்பனவாகவுள. இவ்விடங்களில் அப்பாடங்களும் பொருந்தும் என்று உரிய காரணங்களோடு சுட்டியுள்ளேன். இத்தகைய சிக்கல், பாட வேறுபாடுகள் பற்றிய ஆய்வில் தவிர்க்க இயலாதது.

இயல்பொருட் பொதிவு

இவ்வாய்வுக் கட்டுரைக்கண் வகுத்துக் கொள்ளப்பட்டுள்ள இயல்களையும், இயல்தோறும் தொகுத்துச் சுட்டப்பெற்றுள்ள இன்றியமையாத பொருட் பொதிவையும் கட்டுரையகத்துப் புகுமுன்னர் அறிதல் சாலும். எனவே இயல்வாரியாக அமைந்த பொருண்மைகள் இங்குக் குறிப்பாக மொழியப்பட்டுள.

அ) பாடவேறுபாடுகளை ஆய்ந்தறிந்து ஆசிரியனின் மூல பாடத்தைத் துணிந்து நிறுவுதல் 'மூலபாட ஆய்வியல்' (Textual Criticism) என்னும் பெயரால் தனியொரு அறிவியல் கலையாக இன்று வளர்ந்து வருகின்றது. பாடவேறுபாடு பற்றிய ஆய்வில் பயின்று வரும் கலைச்சொற்களுக்குரிய விளக்கங்களை அறிந்து, வேறுபாடுகள் எழுதற்குரிய களங்களை ஓர்ந்து, அவற்றை வகைப் படுத்துதற்குரிய நெறிகளை உணர்தல் இன்றியமையாதது. அப் பொழுதுதான் பாட வேறுபாடுகளின் வளர்ச்சி நிலையையும் மூல பாடங்களைத் தேரும் நுட்ப நிலையையும் அறிதல் இயலும். எனவே **'பாடவேறுபாடுகளின் தோற்றமும் வளர்ச்சியும்'** என்னும் பெயரிய முற்பகுதி வரலாற்றுச் சார்பு நிலையில் ஆராய்ந்து அமைக்கப் பட்டுள்ளது.

ஆ) தொல்காப்பியத்தில் அமைந்த 1595 நூற்பாக்களில் பாடம் வேறுபடுவன 542. இவற்றில் அமைந்த 1040 வேறுபாடுகளில் பொருள் மாற்றம் செய்யாத 909 வேறுபாடுகளை ஆய்ந்து, அவை தோன்றியமைக்கு உரிய களங்களையும் காரணங் களையும் அறிந்து அவற்றுக்கேற்ப எழுத்து, சொல், இலக்கணம், ஒப்புமை, என்ற பகுப்புக்களில் இவற்றைப் பகுத்து அமைக்கும் பணி, **'தொல்காப்பியப் பாட வேறுபாடுகள்-பகுப்பாய்வு'** என்னும் இரண்டாம் பகுதியில் நிகழ்த்தப் பட்டுள்ளது.

இ) தொல்காப்பியத்துக்கு மூலப் பதிப்புக்கள், உரைப் பதிப்புக்கள், உரைவளப் பதிப்புக்கள், ஒப்பாய்வுப் பதிப்புக்கள், புத்துரைப் பதிப்புக்கள் எனப் பல்வேறு பதிப்புக்கள் வெளியாகி யுள. எழுத்ததிகாரத்தில் எட்டுப் பதிப்புக்களால் அறியப்பெறும் 46 வேறுபாடுகள், சொல்லதிகாரத்தில் பத்துப் பதிப்புக்களால் அறியப்பெறும் 147 வேறுபாடுகள், பொருளதிகாரத்தில் ஏழு பதிப்புக்களால் அறியப்பெறும் 298 வேறுபாடுகள் ஆகக் கூடுதல் 491-ம் பதிப்புக்களால் அறியப்பெறும் பாட வேறுபாடுகள். இவை யனைத்தையும் பாகுபடுத்தி இவற்றில் பொருள்நிலை நோக்கில் இன்றியமையாத சில வேறுபாடுகள் மட்டும் விரிந்த நிலையில் ஆராயப்பட்டுள்ள மூன்றும் பகுதியே **'தொல்காப்பியப் பதிப்புக் களும்' பாட வேறுபாடுகளும்'** என்னும் கட்டுரை.

ஈ) தொல்காப்பிய உரையாசிரியர்கள் தம் உரை விளக்கங் களில், என்று பாடமோதுவாருமுளர் என்பன போன்ற சுட்டுக் களால், தம் காலத்தில் வழக்குப் பயிற்சியுடைய பொருள் மாறுபாடுடைய பாடங்களைக் குறிப்பிட்டுள்ளனர். இம்முறையில் எழுத்ததிகாரப் பகுதியில் மூன்றிடங்களிலும், சொல்லதிகாரப் பகுதியில் நான்கிடங்களிலும், பொருளதிகாரப் பகுதியில், இரண்டிடங்களிலும் இத்தகைய பாடவேறுபாட்டுக்குறிப்புக்கள் உள. இவ்வேறுபாடுகளின் பொருள்நிலை ஆராயப்பட்டு அவற்றின் தகவு, தகவின்மையை நிறுவுவதே **'தொல்காப்பிய உரைகளில் பாடவேறுபாடுகள்'** எனவரும் நான்காம் பகுதி.

உ) தொல்காப்பியத்தில் பொருள் மாற்றத்துடன் அமைந்த 131 இடங்களில் எழுத்ததிகாரத்தில் 22-ம், சொல்லதிகாரத்தில் 26-ம், பொருளதிகாரத்தில் 83-ம் உள. இவ்விடங்களில் வேறுபடும்

பாடங்களின் பொருட்சிறப்பும், இயையும் ஆராயப்பட்டு ஒவ்வொரு பாடத்துக்கும் பொருந்தும் காரணங்களின் அடிப்படையில் நூலாசிரியரின் கருத்துக்கியைய அந்தந்த இடத்திற்குரிய பொருட் சிறப்புடைய மூலபாடங்களை நிறுவும் பணி **'தொல்காப்பிய மூல பாடஆய்வு'** என்னும் ஐந்தாம் பகுதிக்கண் நிகழ்த்தப்பட்டுள்ளது. தொல்காப்பியத்தில் பொருள் மாற்றம் உடைய 131 இடங்களுக்கும் உரிய மூலபாடங்கள் இவையென்ற தெளிவான வரையறையை இக்கட்டுரையால் அறியலாம்.

ஊ) எட்டுத்தொகை நூல்களில் அமைந்த 2365 பாடல்களில் 1897-ல் மட்டும் பாடங்கள் வேறுபட்டு அமைந்துள. இவற்றில் மொத்தம் 6796 இடங்களில் அமைந்த 7669 வேறுபாடுகளில், பொருள் மாற்றமின்றிப் பல்வேறு களங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை 5358 வேறுபாடுகள். பத்துப்பாட்டு நூல்களில் மொத்தமுள்ள 3552 அடிகளில் 363 அடிகளில் மட்டும் பாடங்கள் வேறுபட்டுள. இவற்றில் 376 இடங்களில் 402 வேறுபாடுகள் உள. இவற்றில் பொருள் மாற்றமின்றிப் பல்வேறு களங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்தவை 306 வேறுபாடுகள். இங்ஙனம் எட்டுத்தொகையிலும் பத்துப்பாட்டிலும் அமைந்த பொருள் வேறுபடாத 5664 வேறுபாடுகளையும் எழுத்து வகை, சொல் வகை, இலக்கண வகை, ஒப்புமை வகை என்ற நாற்பெரும் பகுப்பில் பல்வேறு உட்பிரிவுகளில் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ள கட்டுரையே ஆறுவதாக அமைந்த **'சங்க இலக்கியப் பாடவேறுபாடுகள் – பகுப்பாய்வு'** எனவரும் கட்டுரை.

எ) நற்றிணை முதலாய எட்டுத்தொகை நூல்கள், திருமுருகாற்றுப்படை முதலாய பத்துப்பாட்டு நூல்கள் ஆகிய 18 நூல்களிலும் பொருள்மாற்றம் செய்யும் பாடவேறுபாடுகளை ஆராய்ந்து அவ்விடங்களுக்குரிய பொருந்தும் மூல பாடங்களை வரையறை செய்யும் கட்டுரை ஏழாவதாக அமைந்த **'சங்க இலக்கியம் - மூல பாட ஆய்வு'** என்பது நற்றிணையில் 96, குறுந்தொகையில் 110, ஐங்குறுநூற்றில் 89, பரிபாடலில் 290, பதிற்றுப்பத்தில் 105, கலித்தொகையில் 674, அகநானூற்றில் 460, புறநானூற்றில் 487 ஆகக் கூடுதல் 2311 வேறுபாடுகளில் இன்றியமையாதனவும், திருமுருகாற்றுப்படையில் 5.

பொருநராற்றுப் படையில் 8, சிறுபாணாற்றுப் படையில் 9, பெரும் பாணாற்றுப் படையில் 19, முல்லைப்பாட்டில் 2, மதுரைக் காஞ்சியில் 28, நெடுநல்வாடையில் 6, குறிஞ்சிப்பாட்டில் 8, பட்டினப்பாலையில் 2, மலைபடுகடாமில் 9 ஆகக் கூடுதல் 96 வேறுபாடுகளும் இப் பகுதிகளில் ஆராயப்பட்டு இவ்விடங்களுக்குரிய மூலபாடங்கள் இவையெனத் தெளிவுறுத்தப் பட்டுள்ளன.

தமிழ் இலக்கிய இலக்கண நூல்களில் பாடவேறுபாடுகள்-ஓர் ஆய்வு (சங்க இலக்கியம் சிறப்பாய்வு) என்னும் இவ்வாய்வுக் கட்டுரை, சங்ககால இலக்கிய இலக்கண நூல்களில் அறிஞர்களின் ஆராய்ச்சிக்கும் கருத்து வேறுபாட்டுக்கும் களமாயமைந்த பாட வேறுபாடுகள் குறித்து, முழுமையான கண்ணோட்டத்துடன் ஆய்வு செய்யப்பட்ட தனிச்சிறப்புக்கு உரியது. தொல்காப்பியத்திலும், எட்டுத்தொகை பத்துப்பாட்டு நூல்களிலும் அமைந்த 9111 வேறுபாடுகளில் பொருள் வேறுபாடற்ற 6573 வேறுபாடுகளைப் பகுப்பாய்வு செய்தும், பொருள் வேறுபாடுடைய 2538 பாடவேறுபாடுகளில் இன்றியமையாதனவற்றை ஆராய்ந்து சிறந்த மூலபாடங்களை நிறுவியும் இருவகையில் அமைந்தது இவ்வாய்வுரை.

இந்த ஆய்வுக் கட்டுரை, இருதொகுதிகளாக அமைந்துள்ளது. முதல் தொகுதியில் தொல்காப்பியம், சங்க இலக்கிய நூல்கள் பற்றிய பகுப்பாய்வுக் கட்டுரைகளும், மூலபாட ஆய்வியல் கட்டுரைகளும் உள. இரண்டாம் தொகுதியில் இந்நூல்களில் அமைந்த அனைத்துப்பாட வேறுபாடுகளும் முழுமையாகத் தொகுக்கப் பெற்றுப் பிற்சேர்க்கையாகத் தரப்பெற்றுள்ளன.

இரண்டாம் தொகுதியில் காணப்பெறும் எண்ணிறந்த பாட வேறுபாடுகள் இந்த ஆய்வுக்கு அடிப்படையாக உள்ளவை. பின்னேவரும் ஆய்வாளருக்கு மேலாய்வுக்குரிய பாடக்களஞ்சியங்களாகத் துணைசெய்யும் சிறப்பும் இவற்றுக்கு உண்டு ஆதலால், இவ்வேறுபாடுகளை அரிதில் முயன்று தொகுத்துப் பின்னிணைப்பு வடிவில் தந்துள்ளேன். இம்முறையில் இவ்வாய்வுக் கட்டுரை இரு தொகுதிகளாகப் பணிக்கப் பெறுகிறது.

பாடவேறுபாடுகள் பலதிறப்பட்டவை. பாடவேறுபாடுகள் இல்லாத இலக்கியங்கள் இன்று இல்லை என்று சொல்லத்தக்க நிலையில் அனைத்து இலக்கியங்களிலும் பாடவேறுபாடுகள் இன்று மலிந்துவிட்டன. இந்நிலையில் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வகையில் இதுவே சிறந்த மூலபாடம் என்று வரையறுத்துக் கூறும் பணியின் அருமையை அறிவுறுத்தியும், அவரவரும் பாட வேறுபாடுகளைப் பெருக்கக் கூடாது என்ற எச்சரிக்கையைச் சுட்டியும் வரும் அறிஞரின் மேற்கோளைக் காட்டி என் ஆய்வுக் கட்டுரையைப் பணிவன்புடன் படைக்கின்றேன்.

"தமிழிற் பல இலக்கியங்கள் பாட பேதங்கள் உடையவை. இந்நூற்றுண்டுப் பாரதியார் கவிதைகட்குக் கூடப் பாட பேதங்கள் தோன்றிவிட்டனவே. இப்பேதங்களை அகற்றி எல்லாரும் ஒப்பும் ஒருபாடம் காணல் எளிதன்று. இந்நிலையில் மனமும் சுவையும் போன போக்கில் காலந்தோறும் அவரவரும் பாடம் படைத்துவிடத் தோன்றினல் 'இலக்கியம்' 'கலக்கியம்' ஆகி விடாதா?" (இராமகாதை-அணிந்துரை-டாக்டர் வ. சுப. மாணிக்கம்).

—★—

1. பாட வேறுபாடுகளின் தோற்றமும் வளர்ச்சியும்

இலக்கியங்கள், அவ்வக்காலச் சூழலுக்கேற்ப ஆசிரியனால் படைக்கப்பெறும் சமுதாய வாழ்வியல் கருவூலங்கள். இலக்கணங்களோ, ஒருகாலத்தின் மொழியமைப்பை விளக்கிக் காட்டும் களஞ்சியங்கள். இலக்கண இலக்கியங்களில் இடம் பெறும் மொழியமைப்பு ஒரு நூற்பா அல்லது செய்யுளைச் சொல்லால் நிறைக்கவந்த வெற்றுச் சட்டகம் அன்று. அது ஆசிரியனின் உணர்வையும் அக்காலச் சூழலையும் வெளிப்படுத்திக் காட்டும் கருவி· எனவே, ஆசிரியன் படைத்து மொழிந்த குறிப்பிட்ட சொல்லாட்சி எதுவென ஆய்ந்து காணவில்லை என்றால், அந்த ஆசிரியனின் உள்ள உணர்வுகளை, அக்காலச் சமுதாய வாழ்வியல் பண்பாட்டை, அக்கால மக்களின் மொழிச் சிறப்பை நாம் அறிந்து போற்றவில்லை என்பதே கருத்து.

நூலாசிரியன் தன் உணர்ச்சி உந்தலால் படைத்து மொழிந்த, பொருட்செறிவும் சிறப்புமிக்க சொல்லாட்சியை, அதனையொத்த பிற சொற்களினின்றும் தனித்துப் பிரித்தறியும் அறிவியல் கலையே பாடவேறுபாட்டு ஆய்வு. பாடவேறுபாட்டு ஆய்வில் (Study of variations) பயிலும் அடிப்படையான சில கலைச்சொற்களுக்கு உரிய விளக்கங்களைக் காணுதல் இவண் முதன்மைப் பணியாம்.

தமிழ் இலக்கண இலக்கியங்களின் பழமை, நினைவுக்கு எட்டாத நெடுங்காலத்திற்கு உரியது. நூல் தோன்றிய காலத்தில் நூலாசிரியரின் ஏட்டின் மூலப்படி (Original autograph) ஒன்றாகவும், அதனை அடிப்படையாகக்கொண்டு காலந்தோறும், இடந்தோறும் எழுந்த ஏட்டின் நகல் படிகள் (immediate copies of autographs) பலவாகவும், நகல் படிகளை அடிப்படையாகக்கொண்டு பிற்காலத்தில் எழுந்த ஏட்டின் வழிப்படிகள் (Descendants or copies of copies) பலப்பலவாகவும் அமைதல் இயல்பு என உரைப்பர்.[1]

---

[1]Texts may be either autographs or immediate copies of autographs, or copies of copies and this in any degree. Introduction to *Indian Textual Criticism*-S. M. Katre (1954).P.19

நூலாசிரியன் பயன்படுத்திய மொழியமைப்பில் அமைந்த் சொல்லாட்சிகள் '**மூலபாடங்கள்**' (Original Texts) எனக் குறிப்பிடப் பெறும். இச்சொல்லாட்சிகளுக்கு இணையாக அவற்றின் இடத்தில் பிற்காலத்தில் நுழைந்த பொருளுடைய அல்லது பொருளற்ற சொற்கள் '**பாடவேறுபாடுகள்**' (variations) எனச் சுட்டப்பெறும். குறிப்பிட்ட மூலப்பாடத்திலிருந்து பொருளாலும், வடிவாலும் வேறு பட்டு அமையும் காரணத்தால் இவை பாடவேறுபாடுகள் என மொழியப்பட்டன. விளக்க நிலையில் இதனைக் கூறப்புகின், '**பொருள் மாற்றத்திற்கு இடம் தந்தும் தாராதும், ஒரு சொல் அல்லது தொடருக்கு அமையும் எழுத்து மற்றும் சொல் மாற்றங்களே பாட வேறுபாடுகள்**' எனலாம்.

பாட வேறுபாடுகளைப் '**பாட பேதங்கள்**' என்றும் '**பாடாந் தரங்கள்**' என்றும் உரைப்பர். "பாடபேதம் என்று குறிப்பது ஒரு சொல்லுக்குப் பிரதியாக வரும் பிறிதொரு சொல்லை. உதாரணமாக 'கோளறிமாதவன்' என்பதற்குக் 'கோளரிவாமனன்' என்று வருவது போல்வன பாடபேதங்கள்" எனப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை பாடபேதம் என்பதனைச் சான்றுடன் விளக்குவர்.[1]

'பாடவேறுபாடு-என்பது பாட்டின் வடிவம் பற்றியதோர் கூறுபாடு[2] என்று பொது நிலையிலும், 'பாட வேறுபாடு என்பது ஒரு சொல்லுக்கு மாறாக அதே ஓசையுடைய வேற்றுச் சொல் அல்லது அதே பொருளுடைய பிறிதொரு சொல் வந்து வழங்குவ தாகும்' என்று விளக்கமாகவும்[3] கூறப்பெறுதல் அறியத்தக்கது. 'பாடாந்தரம்' என்பதும் இப்பொருளினதே. ஒரு மூல பாடத்தின் இடத்தில் அதற்குப் பிரதியாக அமையும் பேதம் என்ற காரணத் தாலும், பல்வேறு ஏட்டுப் பிரதிகளில் ஒன்றுக்குப் பேதமாக அமைவது என்ற காரணத்தாலும் 'பாடபேதம்' என்பதற்குப் '**பிரதிபேதம்**' என்பதும் மற்றொரு சொல்.

---

[1] திவ்ய-முதலாயிரம்-பதிப்புரை-எஸ். வையாபுரிப்பிள்ளை

[2] திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும்-
மு. சண்முகம்பிள்ளை (1971)-ப. 117.

[3] மேலது. நூன்முகம் ப. VIII

பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை **பாடபேதம், ரூபபேதம், உச்சாரண பேதம்** என்பன ஒன்றுக்கொன்று வேறுபாடுடையவை என்பதைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "துரியோதனன்-திரியோதனன் என்பன ரூப பேதங்கள் : மார்க்கம் - மாற்கம் என வருவன உச்சாரண பேதங்கள்" என்பர். வையாபுரிப்பிள்ளை ரூப பேதங்கள் எனக் குறிப்பிடுவது '**வடிவ வேறுபாடு**', 'உச்சாரண பேதம்' என மொழிவது '**ஒலி வேறுபாடு**'. இவ்விரு வேறுபாடுகளிலும் பொருள் மாற்றமில்லை. எனவே பொருள் மாற்றத்தோடு அமைந்தவற்றைப் 'பாடபேதம்' என்றும், பொருள் மாற்றமின்றி வடிவாலும் ஒலியாலும் வேறுபடுவனவற்றை முறையே 'ரூபபேதம்' 'உச்சாரண பேதம்' என்றும் வையாபுரிப்பிள்ளை கருதுவது இதனால் புலனாகும்.

எவ்வகைப் பேதமாயினும் அனைத்தையும் பாடவேறுபாடுகளாகவேகொண்டு, அவற்றைப் பொருள் வேறுபாடுடையவை, பொருள் வேறுபாடற்றவை என இரு பிரிவுகளாகப் பகுத்துக் காண்டல் தெளிவும் எளிமையும் உடைய முறையாக அமையும்.

பல்வேறு ஏடுகளிலும் அமைந்த பல்வேறுபாடுகளில் நூலாசிரியனின் மூல பாடம் எதுவாக இருத்தல் வேண்டும் எனக் காணும் ஆய்வு மேலை நாடுகளில் **மூலபாடத் திறனாய்வு** (Textual criticism) என்னும் பெயரில் தனிக் கலையாக வளர்ந்து வருகிறது. "மூல பாடத்தை நிறுவ, மனிதன் பின்பற்றுகின்ற நுட்பமான, முறையான பயிற்சியே மூலபாடத் திறனாய்வு"[1] என்று அறிஞர் கூறும் விளக்கம் இங்கு அறியத்தகும். "மூலபாடத் திறனாய்வு என்பது ஏடுகளில் அமைந்த பாடங்களை ஆய்வு செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப் பொது அறிவைப் பயன்படுத்தும் எளிய வழி" என்று எப். டபிள்யூ. ஹால் மொழிவர்[2]

---

1. Postgate in companion to Latin studies-P. 791-Quoted in Introduction to *Indian Textual Criticism* (1954) P. 1.

2. But it is neither a disease nor a science, but simply the application of common sense to a class of problem which be set all inquirers whose evidence rests upon the authority to manuscript documents-F. W. Hall - *Companion to Classical* Studies. P. III-Quoted in *Introduction to Indian Textual criticism* (1954) P. 30.

ஏடுகளில் அமைந்த மூல பாடங்களைக் கண்டறியும் ஆய்வு, தமிழில் உரையாசிரியர்கள் காலத்திலேயே பயிற்சி பெற்றிருந்தது. "மூல பாட ஆராய்ச்சி தமிழுக்கு முற்றிலும் புதியதன்று. பழைய இலக்கிய இலக்கண உரைகாரர்கள் மூலபாட ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்திருக்கின்றனர். எடுத்துக்காட்டாக, தொல்காப்பியத்திற்கு உரைவகுத்த இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் முதலான அறிஞர்களும் மூலபாட ஆராய்ச்சியில் ஈடுபட்டு இருந்திருக்கிறார்கள். தம் உரைகளில் ஆங்காங்கே 'இன்னவாறு பாடங்கூறுவாறும் உளர்; எனினும் இன்ன காரணத்தால் அது பொருந்தாமை அறிக' என்றும் அவர்கள் கூறுமிடங்களை இதற்குச் சான்றாகக் கூறலாம்" என வரும் விளக்கம்[1] இக்கருத்தை வலியுறுத்தும்.

பாட வேறுபாட்டு ஆய்வில் இடம் பெறும் இன்றியமையாத கலைச்சொற்களையும் அவற்றின் விளக்கங்களையும் அறிந்துகொண்டு பிறகு பாடவேறுபாட்டு ஆய்வில் ஈடுபடுவதால் தெளிந்த கருத்துக்களைப் பெற இயலும்.

பாட வேறுபாடு எழுவதற்குரிய காரணங்கள்

பழைய நூலாசிரியரின் மூல ஏடுகள் இன்று நமக்குக் கிடைக்கப் பெறாதவை. நூல் தோன்றிய காலம் முதல் இன்று வரை அந்நூல் பலரால் பல்வேறு நிலைகளில் படி எடுக்கப் பட்டுள்ளது. பதினெட்டாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் சீகன் பால்கு தமிழில் அச்சு முறையை முதன் முதலாகக் கொணர்ந்தார். ஏட்டுப்படிகள் அச்சுப்படிகளாக உருக்கொண்டன. பல படிநிலைகளையும், காலத்தையும் கடந்து நிலைபெற்றுள்ள ஒரு நூலின் மூல பாடங்களில் சிலவோ, பலவோ, பல்வேறு வடிவ மாற்றம் பெற்றிருத்தல் இயல்பே.

பாடங்கள் வேறுபடுவதற்குரிய காரணங்கள் பலவாகும். அ) ஏடு பார்த்து நகல் எடுத்தலாலும் ஆ) தங்கொள்கைக் கேற்பப் பாடங்களைத் திருத்திக்கொள்வதாலும், இ)உரிய இடங்கள் பாடலில் நினைவு வராதபோது இடத்திற்குத் தக்கவாறு தாமே

[1] மூலபாட ஆராய்வியல் நோக்கில் ஐங்குறு நூற்றுப்பதிப்பு- அ. விநாயகமூர்த்தி-புலமை. தொகுதி-3. ஜூலை-செப்1977.

சொற்களை அமைத்துக்கொள்வதாலும், ஈ) தாம் கருதும் எதுகை மோனை அமைப்புக்கேற்பப் பாடங்களைத் திருத்துவதாலும், உ) இருக்கும் பாடலை மட்டமென்று கருதித் தாம் விரும்பியவாறு அமைப்பதாலும், ஊ) அச்சிடுங்காலத்தில் பாடங்களை ஒப்புமை நிலையில் திரித்துப் பதிப்பிப்பதாலும் பாடங்கள் வேறுபடுகின்றன என்று சொ. முருகப்பா குறிப்பிட்டுள்ளார்[1].

அ) ஒருவர் சொல்லக் கேட்டு எழுதும்போதும், தாமே பார்த்து எழுதும்போதும் ஒலி ஒப்புமை உடைய எழுத்துக்களையும், உருவ ஒப்புமை உடைய எழுத்துக்களையும் ஒன்றுக்குப் பதிலாகப் பிறிதொன்றை எழுதுவதாலும் ஆ) சொல்வார் எழுப்பும் ஒலி வேற்றுமையாலும், அவரிடம் தோன்றும் அயர்ச்சியாலும், ஒன்றைப் பிறிதாக உணர்ந்து எழுதுவதாலும், இ) ஒத்த ஓசையும் பொருளு முடைய சொற்களைச் சொல்லுவார் ஒன்றற்கொன்றுகக்கொண்டு கூறுவதாலும், ஈ) சந்திசேர்ந்தும் பிரிந்தும் வரும் சொற்றொடர்களை மூலப்படியில் உள்ளது போலன்றிச் சொல்லுவார் எழுதுவார் விருப்பம்போல் பிரித்தும் சேர்த்தும் எழுதுவதாலும், உ) ஏடெழுது வார் தமக்குத் தோன்றும் புத்துருவங்களை இடைமடுத்தலாலும், ஊ) ஏடெழுதுவார் தம் சொந்த விருப்பு வெறுப்புக்கேற்ப எழுதுவதாலும் பாடங்கள் வேறுபட்டு அமைகின்றன என்பர் மு. சண்முகம்பிள்ளை[2]. பொருளில் காணும் சில சிக்கல்கள், செய்யுளமைப்பில் பிழை, பொடிந்த இடங்களை நிரப்பும் முயற்சி, மதவேறுபாடு ஆகியனவே ஏடுகளில் பாடவேறுபாடுகள் எழுவதற் குரிய காரணங்களில் முக்கியமானவை என வி. ஐ. சுப்பிரமணியம் குறிப்பிடுவர்[3]. 'பாட பேதங்கட்கும் பிற மாற்றங்கட்கும் கற்போர் தொகைப்பெருக்கே காரணம்' என உரைப்பர் வ. சுப. மாணிக்கம்.[4]

---

[1] கம்பர் காவியம்-சொ. முருகப்பா (1958)-பக் 124-133

[2] திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும் மு. சண்முகம்பிள்ளை (1971) - ப. 102.

[3] பிரதிபேத ஆராய்ச்சி-அணிந்துரை-டாக்டர். வி. ஐ. சுப்பிரமணியம் (1969)-ப 12,

[4] ராமகாதை - அணிந்துரை - டாக்டர். வ. சுப. மாணிக்கம் (1969) ப. 11.

மூலபாடத் திறனாய்வு குறித்து நூல் எழுதிய எஸ். எம். காத்ரே ஏடுகளில் பாடங்கள் வேறுபடுவதற்குரிய காரணங்களை மூன்று பெரும் பிரிவுகளில் அடக்கிக் கூறுவர். அவை வருமாறு: 1. சிக்கல்களும் அவற்றைத் தீர்ப்பதற்கான முயற்சிகளும், 2. நீக்கம் 3. சேர்க்கை. முதல் பிரிவில், அ) ஒத்த எழுத்துக்களிலும் அசைகளிலும் சிக்கல், ஆ) சுருக்க எழுத்துக்களைத் தவறாகப் புரிந்துகொள்ளுதல், இ) ஒரு பொதுவான ஒப்புமையால் தவறான சொற்களை எழுதி விடுதல் ஈ) தவறான சேர்க்கை அல்லது பிரிப்பு முறை உ) சொற்களைச் சேர்த்தெழுதலும் பின்னே இடம் மாற்றி எழுதுதலும் ஊ) எழுத்து, சொல், வாக்கியம் ஆகியன முன்பின்னாக இடம் மாறி நிற்றல் எ) ஒரு மொழியைப் பிறிதொரு மொழியாக மாற்றும்போது எழுத்துக்கள் மாறி எழுதப்படுதல் ஏ) ஒலிப்பு முறையால் தவறு ஏற்படல் ஐ) எண்களில் குழப்பம் நேர்தல் ஒ) இயற்பெயர்களில் ஏற்படும் குழப்பம் ஓ) அரிய சொற்களுக்குப் பதிலாக எளிய சொற்களை மாற்றுதல் ஔ) பழைய எழுத்துக்களை விடுத்து ஒலிப்புக்கேற்பப் புதிய எழுத்துக்களைக் கூறுதல் க) தவறுகளாக அமைந்தவற்றைத் திருத்தி எழுதும் முயற்சி என்ற பதின்மூன்று உட்பிரிவுகளில் அடக்கிக் கூறப்பட்டுள்ளன.

நீக்கம் என்ற இரண்டாம் பிரிவில் அ) சொற்கள் அல்லது அசைகள் விடுபடல் ஆ) இயல்பாகவே ஏதேனும் ஒன்று விடுபடல் என்ற இரு உட்பிரிவுகள் அடக்கப்பட்டுள.

சேர்க்கை என்ற மூன்றாவது பிரிவில் அ) பக்கத்திலோ முன்னரோ பயின்ற ஒன்றைத் திரும்பவும் சொல்லுதல் ஆ) விளக்கங்களுக்காகச் சிலவற்றை இடைச்செருகுதல் இ) இரு சொற்களை ஒருங்கிணைத்துச் சொல்லுதல் ஈ) இனமானவற்றைச் சேர்த்து எழுதுதல் என வரும் நான்கு உட்பிரிவுகள் அடங்குவனவாகும்.

இங்ஙனம் ஏடுகளில் பாடவேறுபாடுகள் எழுவதற்கான காரணங்களை மூன்று பெரும் பிரிவுகளிலும் 19 உட்பிரிவுகளிலும் எஸ். எம். காத்ரே வகுத்துக் காட்டுவர்[1].

---

[1]Introduction to Indian Textual Criticism- S. M. Katre (1954) PP. 55-56.

பனை ஓலை ஏட்டுச் சுவடிகளில் எழுதுவோர் பின்பற்றிய எழுதுமுறைகள் பாடவேறுபாடுகள் தோன்றுவதற்குரிய களங்களை உருவாக்கும் இயல்புடையவை "ஏட்டுச் சுவடியில் உள்ள ஒரு நூலை ஆராய்ந்து வெளியிடுவதில் உள்ள துன்பம் மிக அதிகம். அச்சுப் பிரதியில் உள்ளவாறு ஏட்டுச் சுவடி அமைந்திராது. சுவடியில் எழுதுவோரால் நிகழும் பிழைகள் பல. குறியீடுகள், கொம்பு, காற்புள்ளி முதலியவையிரா. நெடிலுக்கும், குறிலுக்கும் வேறுபாடு தெரியாது. அடிகளின் வரையரைகளும் இரா. இது மூலம், இஃது உரை, இது மேற்கோள் என்று அறியவும் இயலாது. எல்லாம் ஒன்றாக எழுதப்பட்டிருக்கும்" என உ. வே. சாமிநாதையர் குறிப்பிட்டிருப்பதாலும் இதனையறியலாம்.

பாடங்கள் வேறுபடுவதற்குரிய காரணங்களாக ஆய்வாளர் பட்டியலிட்டுக் காட்டும் அனைத்தும் ஏற்கத்தக்கனவே. இவற்றுக்கு மேலும் சில காரணங்களை வகுத்துக்காட்டுதலும் இயலும். இங்ஙனம் காரணங்களைப் பட்டியலிட்டுப் பெருக்கிக் காட்டுவதைவிட, அவற்றை வேறு பாங்கில் வகைப்படுத்திக் காட்டுவது பொருத்தமாக அமையும்.

பாடங்களில் வேறுபாடுகள் எழுவதற்குரிய காரணங்களில் தொடர்பு கொண்டோர் நால்வர். அவர்கள் 1. ஏடெழுதுவோர் 2. ஏடுபடிப்போர் 3. சுவைஞர் 4. பதிப்பர் ஆகியோர். வேறுபாடுகள் எழுதற்குரிய மூலவர்களாக அமையும் இந்நால்வரையும் வேறுபடுவதற்குரிய காரணங்களையும் அடிப்படையாகக் கொண்டு இவற்றை வகைப்படுத்தலாம்.

ஒலி ஒப்புமை, வடிவொப்புமை, தொடையமைப்பு, பிறழவுணர்தல், வலிந்து கொள்ளல், அறியாமை, ஒருதலைத்துணிவு, அயர்ச்சி, விருப்பு, வெறுப்பு முதலாய பல்வேறு காரணங்களால் அ) ஏடழுதுவோர் பிழைபட எழுதுதல் ஆ) ஏடு படிப்போர் பிழையாகப் படித்தல் இ) ஏடு படித்துச் சுவைப்போர் பாடங்களை மாற்றுதல் ஈ) ஏடுகளைப் பதிப்போர் திருத்தியும், புதுக்கியும் வெளியிடல் என்ற மாற்றங்கள் நிகழுகின்றன. இக்காரணங்களையும் காரணிகளையும் அடிப்படைகளாகக்கொண்டே அனைத்துப் பாடவேறுபாடுகளும் எழுந்துள்ளன.

இவ்வாய்வுக் கட்டுரையில் குறிப்பிடப்பெறும் காரணங்கள், காரணிகள் ஆகியவற்றில் பிற ஆய்வாளர்கள் பலருங் கூறும் அனைத்துப் பிரிவுகளும் அடங்கும். மேலும் இவை பகுப்பாய்வுக்குத் தெளிவுறத் துணைசெய்யும் இயல்பினவாகவும் உள. எந்தவொரு நூலிலும் எந்தவொரு வேறுபாடும் நான்கு வகையாக இங்குக் குறிப்பிடப்பெறும். மூலவர்களாகிய காரணிகளும் அவர்களோடு தொடர்புடைய ஒன்றோ பலவோ ஆகிய காரணங்களுமின்றி நிகழுதலில்லை.

பாடவேறுபாடுகளை வகைப்படுத்துதல்

பாடவேறுபாடுகளை அவை எழுந்த களங்களையும், காரணங்களையும் சார்பாக வைத்து வகைப்படுத்தும் நோக்கு இந்த ஆய்வுக்கு இன்றியமையாதது. "பாட பரிசோதனையிலும் மூலச்சுவடிகளின் பரிசோதனையிலும் இப் 'பிழைகளை' ஆய்ந்து வகைப்படுத்துதல் விஞ்ஞான சாஸ்திர நோக்குப்படி இன்றியமையாததாகும்" என்று பாடவேறுபாடுகளை வகைப்படுத்த வேண்டிய தேவையைப் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை வலியுறுத்துவர்[1]. இத்தகைய நோக்குடன் ஆய்வாளர்கள் பலரும் முயன்று அவ்வப்போது தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தியுள்ளனர்.

பாடவேறுபாடுகள் என்பன வடிவ வேறுபாடு, சொல் வேறுபாடு என இருவகைப்படுமென்றும், வடிவ வேறுபாட்டில் விகுதி மாற்றம், உருபு மாற்றம், சந்தி வகையால் வருவது, போலியாக வருவது முதலிய உட் பிரிவுகள் அடங்குமென்றும், சொல் வேறுபாடு என்பதில் பொருள் மாற்றம் செய்வன, பொருள் மாற்றம் செய்யாதவை என்ற இரு உட்பிரிவுகள் அடங்குமென்றும் மு. சண்முகம் பிள்ளை குறிப்பிட்டுள்ளார்.

புறநானூற்றுப் பாட வேறுபாடுகளை வகைப்படுத்திய மு. இராமகிருட்டிணன் அவற்றை எழுத்து வேறுபாடுகள், சொல் வேறுபாடுகள் என இரு பெரும் பிரிவுகளில் அடக்கி மொழிவர். எழுத்து என்னும் பிரிவில்

---

[1] திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும்- மு. சண்முகம் பிள்ளை (1971) - மேற்கோள் ப. 119.

[2] திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும்- மு. சண்முகம்பிள்ளை (1971) பக் 116-117.

23 உட்பிரிவுகளையும், சொல் என்னும் பிரிவில் 39 உட்பிரிவுகளையும் அவர் வகுத்துக் காட்டியுள்ளார்.[2]

வேறுபாடுகள் தாமே அமைவன, தீர்மானித்து அமைப்பன என இருவகைப்படும் என்று மேலைநாட்டார் கூறுவர். அவற்றுள் தாமே அமைவன பெரும்பாலும் எழுதுங்கால் ஏற்படும் பிழையால் நம்மை அறியாமல் அமைவன; தீர்மானித்து அமைப்பன; பாடங்களைத் திருத்தும் முயற்சியால் நாம் அறிந்தே அமைப்பன.[3]

இக்கருத்தை அடிப்படையாகக்கொண்டு பாட வேறுபாடுகளைத் தற்செயற்பிழை, குறிக்கோட்பிழை என இரு வகையாகப் பகுத்துக் கூறுவர்[4]. இவற்றுள் தற்செயற்பிழை 'பெரும்பாலும் காட்சி காரணமாகத் தோன்றும் மயக்கமாகும்' என்றும், குறிக்கோட்பிழை என்பது மூல ஆசிரியர் இவ்வாறுதான் எழுதியிருப்பார் என்று பின்வந்தோர் கருதிச் செய்யும் மாற்றங்கள், பிரக்ஞை பூர்வமாகச் செய்யும் திருத்தங்கள்' என்றும் அவர் விளக்குவர்.

ஆய்வாளர்கள் வகுத்துக் காட்டும் இவ்வகைபாடுகளை உளங்கொண்டு தமிழ் இலக்கிய இலக்கணங்களில் சிறப்பாக, தொல்காப்பியம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களில் அமைந்த வேறுபாடுகளை 1 .எழுத்துவேறுபாடு 2. சொல்வேறுபாடு, 3. பொருள் வேறுபாடு 4. இலக்கண வேறுபாடு 5. ஒப்புமை நிலைவேறுபாடு என்று ஐந்து பெரும்பிரிவுகளில் வகைப்படுத்துவது சாலப்பொருத்தமுடையதாகும்.

---

[2]பிரதிபேத ஆராய்ச்சி- மு. இராமகிருட்டிணன் (1960)_பக் 6–7.

[3]'Variation is either spontaneous or determined. Spon tanious variation is unconcious variation perhaps a mere slip of the pen. Determined variation is concious and hence usually an attempt at emendation (correct or not) of the Copy being transcribed Textual criticism, Encyclopaedia of Britanica.

[4]பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும்-சில குறிப்புகள்- டாக்டர் க. கைலாசபதி (1980) ப. 10.

எழுத்துக்களின் சேர்க்கை, விடுபாடு, மாற்றம், முன்பின் இடமாற்றம் ஆகியவற்றால் நிகழ்வன எழுத்து வேறுபாடுகள் எனக்கொள்ளுதற்குரியவை. இம்மாற்றம் எழுத்தளவில் மட்டுமே நிகழ்வது. இதில் பெரும்பாலும் பொருள் வேறுபடும் நிலை இராது.

சொற்களின் சேர்க்கை, விடுபாடு, மாற்றம், முன்பின் இட மாற்றம், சொல் இரட்டித்தல் ஆகிய காரணங்களால் அமைவன சொல் வேறுபாடுகள். சொல்லளவில் மட்டுமே மாற்றம் நிகழும். இவ்வேறுபாடுகளிலும் பெரும்பாலும் பொருள் மாற்றம் இல்லை. ஓரிரு இடங்களில் நிகழும் பொருள் மாற்றங்களும் சிறப்புடையன வாக அமைதல் இல்லை.

ஒரே பொருளைத் தரும் வேறு சொல் இடம் பெறல், வேறு பொருளைத் தரும் வேறு சொல் இடம் பெறல் ஆகியன பொருள் மாற்றங்கள் என்னும் பிரிவுக்குரியன. மேலும் பொருள் அறிய இயலாத நிலையில் சிதைந்து வரும் வேறுபாடுகள், மிகுதியும் பொருள் மாற்றம் இல்லாதவை ஆகியனவும் இப்பிரிவில் அடக்கிக்கொள்ளத் தக்கவையாம்.

இலக்கணச் சார்பு வேறுபாடுகள் பலதிறத்தன. குறில்-நெடில் மாற்றங்கள், ஒருமை-பன்மை மாற்றங்கள், இன எழுத்து மயக்கங்கள், வல்லினம் இரட்டித்துவரல், சுட்டெழுத்து மாற்றங்கள், உடம்படுமெய், அளபெடை, சாரியை, வேற்றுமை உருபுகள், புணர்ச்சி, தொடர்ப் பிரிப்பு ஆகியனவற்றால் நிகழும் வேறுபாடுகள்; இடைச் சொல், ஆக்கக்கிளவி, சொற்சீரடி, போலி, பகரவகர மயக்கம், பால் மாற்றம், விகுதி மாற்றம், கால இடைநிலை மாற்றம், விகாரம் முதலான பல கூறுபாடுகள் இப்பெரும் பிரிவில் அடங்குவன வாகும். பொருள் வேறுபடுதல், வேறுபடாமை ஆகிய இருவகை நிலைகளும் இவற்றில் உண்டு.

ஒப்புமை நிலைவேறுபாடு என்பது எழுத்துக்களிடையே அமைந்த தோற்ற ஒப்புமையாலும், சொற்களை ஒலிக்குங்கால் அவற்றிடையே எழுத்துக்களில் அமையும் ஒலி ஒப்புமையாலும் விளையும் வேறுபாடுகள்.

இலக்கண இலக்கியங்களில் அமைந்த பாடவேறுபாடுகள் அனைத்தும் இவ்வகையில் அடங்குவனவேயாம்.

பொருள் நோக்கிலோ, எழுத்து, சொல் என்பவற்றின் அமைப்பு முறையிலோ, அனைத்துப்பாட வேறுபாடுகளையும் குறிப்பிட்ட வரையறைக்குள் உட்படுத்திப் பகுக்க இயலும். எனினும் சிலவகை வேறுபாடுகள் இப்பகுப்பு நியதிகட்கு அப்பாற்பட்டும் இயங்குவன என்ற கருத்தையும் நாம் மறுத்தல் இயலாது. உய்த்துணர்தல் மூலமாகக் கூடக் கண்டறிய முடியாத நிலையில் ஒரு பாட வேறுபாடு எழுந்திருக்க முடியும். பாடவேறுபாடுகள் சில, பகுக்க இயலாத நிலையிலும் அமையும் இயல்பை "ஆனால் பிரதி செய்வோர் அல்லது பதிப்பிப்போர் தமது மனக்கோட்டம், முற்சாய்வு, ஈடுபாடு, மொழிக் கொள்கை முதலிய மானசீகமான காரணங்களுக்காகச் செய்யும் மாற்றங்கள் எளிதில் வகைப்படுத்தக் கூடியன அல்ல. இவை எழுதுவோரது மனநிலை சம்பந்தமானவை. சம்பந்தப்பட்டவர்களின் "ஆளுமை நன்கறியப்படும்போதே அவர்களின் திருத்தங்களுக்கான ஏதுக்களும் அவற்றின் செயற்பாடும் ஓரளவு தெளிவாகும்" என்று க. கைலாசபதி மொழிவர்[1]

3. பாடவேறுபாடுகளின் வளர்ச்சி

பாடவேறுபாடுகள் காலத்துக்குக் காலம், ஏட்டுக்கு ஏடு, பதிப்புக்குப்பதிப்பு, மாறியும் பெருகியும் வரும் இயற்கையுடையன. முன்னே குறிப்பிடப் பெற்ற பல்வேறு காரணங்களில் ஒன்றையோ பலவற்றையோ அடிப்படையாகக்கொண்டு பாடவேறுபாடுகள் நாளும் பெருகி வருகின்றன.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கம்பராமாயணத்தைப் பாடவேறு பாட்டு ஆய்வு நோக்கில் 16 தொகுதிகளாக, தமிழ் உலகுக்கு வழங்கியுள்ளது. கம்பராமாயண மூலச் செய்யுட்கள் 10534 மிகைப்பாடல்கள் 1309 ஆகக் கூடுதல் 11843பாடல்களுக்கு உரிய 3, 18, 489 பாடவேறுபாடுகள் இப்பதிப்பின்கண் தரப்பட்டுள்ளன. மேலும் கம்பராமாயணப் பாடல்கள் அனைத்திலும் 11 பாடல்களுக்கு மட்டுமே பாடவேறுபாடுகள் இல என்பதும் குறிப்பிடத் தக்க செய்தியாகும். 'பாடபேதத்தைக் கணிப்பின் ஒரு பாடலுக்கு 27 பேத விழுக்காடு வரும்; ஓர் அடிக்கு 25 வரை பாடங்களும்

---

1. பாரதி நூல்களும் பாடபேத ஆராய்ச்சியும் - சிலகுறிப்புக்கள் - டாக்டர். க. கைலாசபதி (1980)ப. 12.

ஒரு சீர்க்கு 10 வரை பாடங்களும் உள' என வ. சுப. மாணிக்கம் இந்நூற்பதிப்பின் நன்றியுரையில் குறிப்பிடுவர். இவ்வெண்ணிக்கைப் பெருக்கம் கம்பராமாயணத்தின் பரந்த வழக்குப் பயிற்சி நிலையைச் சுட்டுவதோடு பாடவேறுபாடுகள் பெருகி அமைந்த வளர்ச்சி நிலையையும் சுட்டுகிறது.

கம்பராமாயணப் பாலகாண்டத்தின் அச்சுப் பிரதியில் உள்ள மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 1399. இதில் பாட வேறு பாடு இல்லாத பாடல்களின் எண்ணிக்கை 26 மட்டுமே. இப் பாடல்களில் பாடங்கள் எப்படி யெல்லாம் பல்கிப் பெருகியுள்ளன என்பதை சொ. முருகப்பா பின்வருமாறு குறிப்பிடுவார். "இப் பொழுது கிடைத்துள்ள படி, பாடபேதங்கள் 1 முதல் 26 வரை ஒருபாடலுக்கு ஏற்பட்டிருக்கின்றன. இந்தப் பாட பேதங்களைக் கொண்ட பாடல்களை எடுத்தெழுதினால் இன்றுள்ள கம்பராமாயண ஏட்டிலுள்ள 10559 பாடல்களும் சுமார் ஒரு கோடி பாடல்களாகக் காட்சியளிக்கும்" என்பது அவர் கூற்று[1]. பாடவேறுபாடுகளின் பெருக்கநிலை, நூலாசிரியன் கூறிய ஒரு மூல வடிவத்தைப் பல்வேறு வடிவினவாகத் திரித்துப் பெருக்கிக் காட்டும் அமைப்பு இங்குச் சுட்டப்பெறுதல் அறியத்தக்கது.

திருக்குறளில் பரிமேலழகர் தம்முடைய உரைப்பகுதியில் மட்டும் 48 இடங்களில் பிறர் உரைக்கும் பாடவேறுபாடுகளைக் குறிப்பிட்டுள்ளார் என மு. சண்முகம்பிள்ளை பட்டியலிட்டுக் காட்டி யுள்ளார்.[2] திருக்குறளின் பண்டைய உரையாசிரியர் பதின்மருள் இறுதியாக வாழ்ந்தவர் பரிமேலழகர். அவர் காலத்திலேயே திருக் குறளில் பொருள் நோக்கில் கருதத்தகும் நிலையில் 48 பாடவேறு பாடுகள் இருந்தன என்னும் செய்தியும், இப்பாட வேறுபாடுகளின் விரைந்த வளர்ச்சி நிலையை நமக்கு அறிவிக்கும் சான்று.

உ. வே. சாமிநாதய்யரின் புறநானூற்றுப் பதிப்பில் (1956) மட்டும் காணப்படும் வேறுபாடுகளில், உருவம் சிதையாத நிலையில், ஓரளவு செம்மையான உருவில் காணப்பெறும் பாடவேறுபாடுகளின்

1. 'கம்பர் காவியம்'- சொ. முருகப்பா (1953) ப. 132
2. திருக்குறள் யாப்பு அமைதியும் பாடவேறுபாடும்- மு. சண்முகம் பிள்ளை (1971) பக் 108-110.

எண்ணிக்கை 981 எனக்குறிப்பிடுவர் மு. இராமகிருட்டிணன்[1]. இந்த எண்ணிக்கையளவும் பாடவேறுபாடுகளின் விரைந்த வளர்ச்சியைச் சுட்டும் பிறிதொரு எடுத்துக்காட்டு.

எண்ணிக்கையளவில் மிகுந்து பரவிப் பெருகிக் கிடக்கும் பாடவேறுபாடுகள் ஏட்டுப் பிரதிகள் வழங்கிய காலத்திற்றான் மிகுதியும் பெருகின எனத் துணிய முடிகிறது. ஒரு நூலின் மூலப்படியை முதன் முதலில் ஏடுபெயர்த்து எழுதும்போது மூலத்தின் பாடங்கள் சிலவே நகலில் வேறுபட்டிருக்கும். பிறகு நகலிலிருந்து மேலும் மேலும் நகல்கள் பெருகிவருங்காலத்தில், ஏடுபெயர்த்தெழுதுவார் இயல்புக்கேற்பப் பிழைகளும் மிகுந்து பெருகுகின்றன. இவ்வேடுகள் நாட்டின் பல பகுதிகளிலும் பரவும்போது ஆங்காங்குள்ள சூழ்நிலைக்கேற்பச் சிற்சில மாற்றங்களும் தவிர்க்கவியலாதது. இம்முறையில் ஏடுகளில் பாடங்கள் பெருகுகின்றன.

இலக்கண நூல்களிலுங் கூட உரையாசிரியர் காலங்களில் பாடவேறுபாடுகள் அவரவர் கருத்துக்கேற்ப வேறுபட்டுப் பெருகுகின்றன. சான்றாக 'விழுமம் சீர்மையும் இடும்பையும் செய்யும்'[2] என்பது தொல்காப்பிய நூற்பா. இளம்பூரணர் இந்நூற்பாவின் வடிவத்தை இம்முறையில் கொண்டுள்ளார். விழுமம் என்ற சொல்லுக்குச் சீர்மை, இடும்பை என்பன பொருள்கள் என்பது இந்நூற்பாவின் கருத்து. சேனாவரையர், நச்சினார்க்கினியர் காலத்தில் இச்சொல்லுக்குச் சீர்மை, இடும்பை என்பவற்றோடு 'சிறப்பு' என்ற பொருளும் சேர்ந்தது. எனவே புதிய பொருளையும் கூட்டிய நிலையில் நூற்பாவின் வடிவம் 'விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்' என மாறியது. பின்னே வந்த தெய்வச்சிலையார் இளம்பூரணர் கொண்ட அமைப்பையும், சேனாவரையர், நச்சினார்க்கினியர் கொண்ட அமைப்பையும் சேர்த்து இணைத்த வகையில் நூற்பாவின் வடிவத்தை அமைத்துக் கொண்டார். எனவே 'விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் செய்யும்' என நூற்பாவின் வடிவம் மாற்றம் பெற்றது.

மொத்தத்தில் 'இடும்பையும் செய்யும்' 'சிறப்பும் இடும்பையும்; 'சிறப்பு இடும்பையும் செய்யும்' என்ற பாடவேறுபாடுகள் அமைந்தன.

---

[1]பிரதிபேத ஆராய்ச்சி-மு. இராம கிருட்டிணன் (1960). ப.5

[2].தொ. சொ. நூ. 347

பாடவேறுபாடுகளை ஆராயுங்கால், இலக்கண நூல்களைப் பார்க்கும் முறையிலும், இலக்கிய நூல்களைப் பார்க்கும் முறையிலும் சில குறிப்பிடத்தக்க வேறுபாடுகள் உள. இலக்கியங்களில் வரும் வேறு பாடுகளின் மிகுதியான எண்ணிக்கை அளவு இலக்கண நூல்களில் வருதலில்லை. இதற்குக் காரணம் இலக்கண நூல்களின் வழக்குப் பயிற்சி இலக்கியங்களின் பயிற்சியைவிடக் குறைவாக அமைவ தேயாகும்' இலக்கண நூற்பாக்களின் அமைப்பு செறிவும் வரம்பும் உடையன; நூற்பாக்கள் குறுகிய அடிகள் உடையன; இன்னோசை, தொடைநயம், சுவைநலம் எல்லாம் இலக்கணங்களுக்கு இயல்பாக உரியனவல்ல. இலக்கண நூற்பா அமைப்பில் ஏற்படும் ஒரு சில நுட்பமான மாறுபாடுகளுங்கூட வேறுபட்ட பொருளைத் தந்து மொழியமைப்பின் அடிப்படைக் கட்டுக்கோப்பைத் தகர்த்துவிடும். ஆதலின் இலக்கணத்தைக் கற்பாரும் கற்பிப்பாரும் படி எழுது வோரும் இது இலக்கண நூல் என்ற அச்சநினைவோடு அணுகுவர். எனவே பாடவேறுபாடுகள் இலக்கணங்களில் குறைவாகவே ஏற்படுதல் இயல்பு.

இலக்கியங்களைக் கற்பார், கற்பிப்பார், படியெடுப்பார் ஆகி யோர் தத்தம் சுவையுணர்வுக்கு ஏற்ப வேறுபாடுகளைப் படைத்து விடுதலால் இலக்கியங்களில் மிகுதியான அளவில் பாடவேறு பாடுகள் பெருகியுள்ளன.

பாடவேறுபாடுகளின் பெருக்க நிலையை இந்த ஆய்வுரைப் பொருண்மையாலும் தெளிவு செய்யலாம். தொல்காப்பியத்தின் 1595 நூற்பாக்களில் பாடவேறுபாடு உள்ள 542 நூற்பாக்களில் மட்டும் 894 இடங்களில் அமைந்த மொத்தப் பாட வேறுபாடுகள் 1040 என்றும், எட்டுத்தொகை நூல்களில் உள்ள 2365 பாடல் களில் பாடவேறுபாடுகள் 1897 பாடல்களில் மட்டும் 6796 இடங் களில் அமைந்த மொத்தப் பாடவேறுபாடுகள் 7669 என்றும், பத்துப் பாட்டு நூல்களில் அமைந்த 3552 அடிகளில் பாட வேறு பாடுகள் 363 அடிகளில் மட்டும் 376 இடங்களில் அமைந்த வேறு பாடுகள் 402 என்றும் இவ்வாய்வுரைக்கண் வரையறை செய்யப் பட்டுள்ள பாடவேறுபாடுகளின் எண்ணிக்கைப் பெருக்கமும் இவற்றின் வளர்ச்சி நிலையை நாம் அறியத் துணைசெய்கின்றன.

4, மூல பாடங்களைத் தெரிவு செய்தல்

பல்கிக் கிடக்கும் வேறுபாடுகளை ஆராய்ந்து பலவகையாலும் பொருத்தமும் சிறப்புங்கண்டு இதுவே நூலாசிரியன் கருதிய மூல பாடம் எனத் துணியும் பணி மிகுதியும் அருமைப்பாடுடையது.

மேலைநாட்டுத் திறனாய்வாளர், மூலபாடங்களைத் தெரிவு செய்வதில் நால்வகை நெறிமுறைகளைப் பின்பற்ற வேண்டும் எனக் குறிப்பிடுவர்[1]. அவை வருமாறு 1. குடிவழிக்கேற்ப ஏட்டுப் பிரதிகளிலும் பிறவற்றிலும் கிடக்கும் அனைத்துப் பாடங்களையும் தொகுத்தல் 2. இப்பாடங்கள் அனைத்தையும் ஆராய்ந்து நிலை நிறுத்தல் 3. ஆசிரியரின் மூலபாடம் இதுவெனத் துணியும் நிலையில் பொருட் சிறப்பில்லாப் பாடங்களை விலக்குதல் 4. ஆசிரியரோடு தொடர்புடைய சான்றுகளின் அடிப்படையில் மூலபாடங்களைத் தெரிவு செய்தல் என்பன.

தமிழ் இலக்கண இலக்கியங்களில் அமைந்த வேறுபாடுகளை ஆராய்ந்து மூல பாடங்களைத் தெரிவு செய்வதில் மிகுதியும் இன்றியமையாது வேண்டப்படுவது பொருள் நோக்கேயாகும். குறிப்பிட்ட வேறுபாட்டின் பொருளை அறிந்து, பிறபகுதியோடு அப்பொருளைப் பொருத்தி, ஏற்கத் தக்கவற்றை ஏற்று, தள்ளத் தக்கனவற்றைத் தள்ளிவிடலாம்.

பொருள்நோக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வேறுபாடுகளில் பொருந்தி, வருங்கால், அவற்றை எதுகை, மோனை, சந்தம் முதலாய யாப்பு நோக்கினுல் துணிதல் வேண்டும்.

---

1 Hence the classical model, applied to the criticism of Greek and Latin texts, divides textual criticism into four processes : 1. Heuristics or assembling and arranging the entire material consisting of manuscript and testimonia in the from of a genealogical tree or pedigree or stemma codicum 2. Racensio or restoration of the above material 3. Emendatio or restoration of the text of the author and 4. Higher criticism or separation of the sources utlised by the author, Introduction to Indian Textual criticism-S.M. Katre (1954. P. 31.

இவற்றுக்கு மேலாக, ஆசிரியர் காலமொழி நடைக்கு ஒத்த தாகப் பாடம் அமைந்துள்ள நிலையை ஆராயும் மொழி நோக்கும் இன்றியமையாதது.

எனவே, மூலபாடங்களைத் தெரிந்தெடுப்பதில் பொருள் நோக்கு, எதுகை, மோனை, சந்தம் முதலிய யாப்பு நோக்கு, ஆசிரியர்/கால மொழிநடை நோக்கு முதலிய மூவ்வகை நோக்குகள் இன்றியமையாதவை.

தேர்ந்தெடுக்கப்பட்ட பாடத்தின் பயிற்சி, பொருள் நிலை, ஆகியவற்றைத் துணிய அச்சொல் உரிய பொருளோடு பயின்ற பிற பயிற்சியிடங்களையும் சான்றுகளாகக் கொள்ளலாம். இச் சான்றுகள், அகச்சான்று, புறச்சான்று என இருவகைப்படும். அகச்சான்று என்பது குறிப்பிட்ட சொல்லுச்குரிய பொருட் பயிற்சி அந்த நூலிலேயே பயின்று வருதலைக் காணுதல்; புறச்சான்று என்பது குறிப்பிட்ட சொல்லுக்குரிய பொருட் பயிற்சி பிற நூல்களிலும் பயின்று வருவதைக் காணுதல். இம்முறையில் ஒவ்வொரு மூல பாடத்தையும் துல்லியமாகக் கண்டு நூலில் மூலவடிவத்தைக் காணுதல் வேண்டும்.

பரிபாடலில் உரையாசிரியர் பரிமேலழகர், கந்தி முதலிய ஆசிரியர்கள் மூல நூல்களில் சேர்த்துவிட்ட பகுதிகளை ஆராய்ந்து, வேறுபடுத்தி நூலாசிரியரின் மூலபாடத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கு உரையெழுதிய சிறப்பினைப் பரிபாடலின் உரைச்சிறப்புப் பாயிரம் உரைக்கும்[1]. நூலாசிரியரின் மூல பாடத்தைத் தெரிந்தெடுப்பதில் உரையாசிரியருக்கு இருந்த ஈடுபாட்டை இப்பகுதி விளக்கும்.

---

24. ''மிகைபடுபொருளை நகைபடுபுன்சொலிற்
றந்திடை மடுத்த கந்தி தன் பிழைப்பும்
எழுதினர் பிழைப்பு மெழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த வொவ்வாப் பாடம்
திருந்திய காட்சியோர் செவிமுதல் வெதுப்பலிற்
சிற்றறி வினர்க்குந் தெற்றெனத் தோன்ற
மதியின் நகைப்பு விதியுளி யகற்றி
எல்லையில் சிறப்பிற் றெல்லோர் பாடிய
அணிதிகழ் பாடத்துத் துணிதரு பொருளைச்
சுருங்கிய வுரையின் விளங்கக் காட்டினன்''

—பரிபாடல் உரைச்சிறப்புப் பாயிரம் 9-19

பாடவேறுபாடுகள், பாடம் தோன்றிய காலம் முதலாகவே உருக்கொண்டு வழங்கிவரும் சிறப்புடையன. நூலாசிரியரின் காலத்திலேயே அவன் நூலுக்குப் பலவிடங்களில் வேறுபாடுகள் ஏற்பட்டிருக்கலாம். பிற்காலத்திலும் முன்னர்க் கூறியாங்குப் பற்பல சூழல்களையும் அடிப்படையாகக் கொண்டு பாடவேறுபாடுகள் எழுந்திருக்கலாம். எனவே பரந்து கிடக்கும் வேறுபாடுகளை நுனித்தறிந்து மூலபாடம் தெரிவுசெய்தல் ஆராய்ச்சியாளரின் புலமைச் சிறப்புக்குப் புகழ் சேர்க்கும் பணியேயாகும்.

2. தொல்காப்பியப் பாடவேறுபாடுகள் : பகுப்பாய்வு

தொல்காப்பியத்தில் மூன்று அதிகாரங்களும், அதிகாரம்தோறும் ஒன்பது இயல்களும் உள. மொத்தமுள்ள இருபத்தேழு இயல்களிலும் இளம்பூரணப் பதிப்பின்படி அமைந்த மொத்த நூற்பாக்களின் எண்ணிக்கை 1595. தொல்காப்பிய நூற்பாக்களின் மொத்த எண்ணிக்கை 1610 என்றும் ஒரு கருத்து உண்டு.

இளம்பூரணர் பதிப்பின்படி அமைந்த 1595 நூற்பாக்களில்[1] 542 நூற்பாக்கள் மட்டுமே பாட வேறுபாடு உடையவை[2] எஞ்சிய 1053 நூற்பாக்களில் பாட வேறுபாடுகள் இல[3]. இந்த 542 நூற்பாக்களில் 894 இடங்களில்[4] அமைந்தபாட வேறுபாடுகளின் மொத்த எண்ணிக்கை 1040[5].

இவ்வேறுபாடுகளில், தொல்காப்பிய உரையாசிரியர்கள் கொண்ட பாடங்களால் அமையும் வேறுபாடுகளின் எண்ணிக்கை மட்டும் 531[6]. உரையாசிரியர்களின் உரைக்குறிப்புக்களால் அறியப்பெறும் வேறுபாடுகளின் எண்ணிக்கை9[7]. பதிப்பாசிரியர்களின் பல்வேறு பதிப்புக்களால் அறியப்பெறுவன 367 பாட வேறுபாடுகள்[8].

இவற்றுக்கு மேலும் ஒரே இடத்தில் உரையாசிரியர்களும் பதிப்பாசிரியர்களும் தனித்தனியே பாடம் கொண்ட இடங்கள்88[9] ஒன்றுக்கு மேலும் வேறுபாடுகள் அமைந்த இடங்களின் எண்ணிக்கை45.[10] இவண் குறிப்பிடப்பெற்ற ஐந்துவகை வேறு

1.	எ. 483,	சொ. 456,	பொ. 656—ஆகக்கூடுதல்	1595
2.	எ. 72,	சொ. 153,	பொ. 317—ஆகக்கூடுதல்	542
3.	எ. 411,	சொ. 303,	பொ. 339—ஆகக்கூடுதல்	1053
4.	எ. 83,	சொ. 218,	பொ. 593—ஆகக்கூடுதல்	894
5.	எ. 90,	சொ. 251,	பொ. 699—ஆகக்கூடுதல்	1040
6.	எ. 39,	சொ. 95,	பொ. 397—ஆகக்கூடுதல்	531
7.	எ. 3,	சொ. 4,	பொ. 2—ஆகக்கூடுதல்	9
8.	எ. 41	சொ. 16	பொ. 210—ஆகக்கூடுதல்	367
9.	எ. 4	சொ. 16	பொ. 68—ஆகக்கூடுதல்	86
10.	எ. 3	சொ. 20	பொ. 22—ஆகக்கூடுதல்	45

பாடுகளின் எண்களையும் கூட்டி மொத்தமுள்ள வேறுபாடுகளின் எண்ணிக்கை 1040 என அறியலாம்.

இவற்றுள் உரையாசிரியர்கள் கொண்ட பாடங்களினுல் அமையும் 531 வேறுபாடுகளையும் பல்வேறு பாங்குகளில் பகுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கம். பகுப்பாய்வு நோக்கில் வேறுபாடுகளை வகுத்துக் காட்டுவதால் அவை எழுந்தமைக்குரிய அடிப்படைக் காரணங்கள் புலனுகும்.

1. நூற்பாக்களின் எண்ணிக்கை

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் 9 இயல்களிலும் அமைந்த நூற்பாக்களின் எண்ணிக்கை 483. உரையாசிரியர்களான இளம்பூரணர்-நச்சினுர்க்கினியர் இருவரிடையேயும் இதில் வேறுபாடு இல்லை. எனினும், இளம்பூரணர் 102, 103 எனக் கொண்ட இரு நூற்பாக்களை நச்சினுர்க்கினியர் ஒரே நூற்பாவாகவும், நச்சினுர்க்கினியர் 440, 441 எனக் கொண்ட இருநூற்பாக்களை இளம்பூரணர் ஒரே நூற்பாவாகவும் கொள்வர்.

மேலும் எழுத்ததிகார 2, 4ஆம் நூற்பாக்களைச் சீர்பிரித்து அமைப்பதில் இரு உரையாளர்களும் வேறுபட்டுள்ளனர்[1].

அ. இளம். அவைதாம்
குற்றியலிகரம் குற்றியலுகரம் ஆய்தமென்ற
முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன. (2)
ஆ, ஈ, ஊ, ஏ, ஐ
ஓ, ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரளபிசைக்கும் நெட்டெழுத் தென்ப (4)

(ஆ) நச்சி. அவைதாம்
குற்றிய லிகரம் குற்றிய லுகரம்
ஆய்தம் என்ற
முப்பாற்புள்ளியும் எழுத்தோரன்ன (2)
ஆ, ஈ, ஊ
ஏ, ஐ
ஓ, ஔ என்னும் அப்பால் ஏழும்
ஈரள பிசைக்கும் நெட்டெழுத்தென்ப (4)

சொல்லதிகாரத்தில் ஒன்பது இயல்களிலும் அமைந்த நூற்பாக்களின் எண்ணிக்கை இளம்பூரணர் கருத்துப்படி 456. சொல்லதிகாரத்தில் இயல்தோறும் அமைந்த நூற்பாக்களின் எண்ணிக்கையைக் கூறும் பழம் பாடற் கருத்துப்படி, கிளவியாக்கம் 62, வேற்றுமை இயல் 22, வேற்றுமை மயங்கியல் 35, விளிமரபு 37, பெயரியல் 43, வினையியல் 51, இடையியல் 48, உரியியல் 98, எச்சவியல் 67 ஆகமொத்தம் 463 நூற்பா. நச்சினுர்க்கினியர் உரை எழுந்த காலத்தையொட்டி, இயலில் அமைந்த நூற்பாக்களின் எண்ணிக்கையைக் கூறும் இக்கருத்து எழுந்திருக்கலாம்.

பொருளதிகாரத்தில் உள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை 656. எண்ணிக்கையைக் கூறும் பழைய வெண்பா 665 என்று கூறுகிறது.

உரையாசிரியர்கள் தத்தம் கருத்துக்கேற்ப நூற்பாக்கள் சிலவற்றைப் பிரித்துக் கொண்ட அமைப்பினுல் இவ்வேறுபாடு எழுந்திருக்கலாம்.

2. நூற்பாக்களும் வேறுபாடுகளும்

எழுத்ததிகாரத்தில் 483 நூற்பாக்களில் பாடவேறுபாடு அமைந்த 72ல் காணப்பெறும் பாட வேறுபாடுகளின் மொத்த எண்ணிக்கை 90. எஞ்சிய 411 நூற்பாக்கள் பாட வேறுபாடுகள் இல்லாதவை.

பாடவேறுபாடுகள் அமைந்த 72 நூற்பாக்களில் ஒரே நூற்பாவில் (452) மட்டும் 3 இடங்களில் பாடங்கள் வேறுபடுகின்றன. இரு நூற்பாக்களில்(158, 445) ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு இடங்களில் வேறுபாடுகள் உள. எஞ்சிய நூற்பாக்களில் ஓ இடத்தில் மட்டுமே பாடவேறுபாடு உள்ளது.

எழுத்ததிகாரத்தில் அமைந்த மொத்தப் பாட வேறுபாடுகள் 90. இவற்றில் இளம்பூரணர் கொண்ட பாடத்திலிருந்து நச்சினுர்க்கினியர் வேறுபடும் பாடங்கள் 39; உரையாசிரியர்களின் உரைக் குறிப்பால் அறியப் பெறுவன 3; பதிப்பாசிரியர்களின் குறிப்பால் தெரியவருவன 41. உரையாசிரியர்களும், பதிப்பாசிரியர்களும் வேறுபடுவன 4. ஒன்றுக்கு மேலும் பாடங்கள் அமைந்தவை 3.

இளம்பூரணர் கொண்ட பாடத்திலிருந்து நச்சினுர்க்கினியர் வேறுபடும் பாடங்களின் எண்ணிக்கையைப் பட்டியலிட்டு 35 எனத் தொல்காப்பிய இளம்பூரண உரைப்பதிப்பொன்றில் குறிப்பிடப் பெற்றுள்ளது.[1] நூ. 160, 440, 452, 463 ஆகிய நான்கும் இப் பட்டியலில் குறிப்பிடப் பெறவில்லை.

எழுத்ததிகார உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினுர்கினியரேயன்றி பிற அதிகாரங்களுக்கு உரை எழுதியோரும், எழுத்ததிகார நூற்பாத் தொடர்களை ஆங்காங்கே தம் உரைகளில் விளக்கங்களுக்காக மேற்கோள் காட்டியுள்ளனர்.

சேனுவரையர், தெய்வச்சிலையார், பேராசிரியர் மூவரும் 31 இடங்களில் எடுத்துக்காட்டும் எழுத்ததிகார நூற்பாக்களில் எல்லாம் இளம்பூரணர் கொண்ட பாடங்களே பயின்றுள என்பது குறிப்பிடத்தக்கது. எனவே பிற்காலப் பதிப்பாசிரியர்கள் இளம்பூரணரின் உரையும் மூலமும் அடங்கிய பதிப்பையே அடிப்படையாகக் கொண்டு இந்நூற்பாக்களைப் பதிப்பித்திருக்கலாம் என்று இதனுல் அறியலாம்.

தொல்காப்பியத்தில் சொல்லதிகாரப் பகுதிக்கே மிகுதியான எண்ணிக்கையில் உரையாசிரியர்கள் உள்ளனர். இவர்களில் காலத்தால் மூத்தவர் இளம்பூரணர். ஆய்வாளர்கள் கூறும் கால வரிசையில் இளம்பூரணரை அடுத்துச் சேனுவரையரும் தெய்வச் சிலையாரும் உள்ளனர். நச்சினுர்க்கினியர், கல்லாடர் அவர்களை அடுத்து உள்ளனர். பெயர் அறியப் பெருத பழைய உரையாசிரியர் காலம் அறிய இயலவில்லை.

சொல்லதிகாரத்தின் உரையாசிரியர்கள் இயல்வாரியாகக் கொண்ட நூற்பாக்களின் எண்ணிக்கை கீழே குறிக்கப்பட்டுள்ளது.

உரையாசிரியர் இயல்	1	2	3	4	5	6	7	8	9	கூடுதல்
1. இளம்பூரணர்	62	17	35	37	43	49	48	99	66	456
2. சேனுவரையர்	61	22	34	37	43	51	48	100	67	463
3. தெய்வச்சிலையார்	60	21	33	36	41	54	47	100	61	453
4. நச்சினுர்க்கினியர்	62	22	35	37	43	51	48	98	67	463
5. கல்லாடர்	62	23	35	37	43	50	10	—	—	—
6. பழையஉரை யாசிரியர்கள்	62	22	33	—	—	—	—	—	—	—

1 எழுத்திகாரம் - இளம்பூரணம்-கு. சுந்தரமூர்த்தி பதிப்பு (1969) பக் XIII-XIV

சொல்லதிகாரப் பகுதிக்கு முதலில் உள்ள நால்வரின் உரைகளே முழுமையாகக் கிடைத்துள்ளன. கல்லாடர் உரைப்பகுதி இடையியலில் 10ஆம் நூற்பா வரையிலும், பழைய உரையாசிரியரின் உரைப்பகுதி வேற்றுமை மயங்கியல் வரையிலும் உள்ளன.

சொல்லதிகாரத்தின் மொத்தப் பாடவேறுபாடுகள் 251ல் உரையாசிரியர்களின் உரைக்குறிப்புக்களால் அறியப்பெறுவன 4. பதிப்பாசிரியர்களின் குறிப்புக்களால் அறியப்பெறுவன 116. 95 வேறுபாடுகள் உரையாசிரியர்கள் கொண்ட பாடங்களில் அமைந்தவை. உரையாசிரியர்கள் வேறுபடும் பாடங்களில் அவர்கள் கொண்ட பாடங்களுக்கு மேலாகவும் பதிப்பாசிரியர்களின் குறிப்புக்களால் 16 இடங்களில் வேறுபாடுகள் அமைந்துள்ளன. ஒன்றுக்கு மேற்பட்ட பாடம் அமைந்த இடங்கள் 20.

பாடங்கள் வேறுபடும் நூற்பாக்கள் 153ல் ஒரு நூற்பாவில் (72) மட்டும் 4 வேறுபாடுகள் இடம் பெற்றுள்ளன. இருநூற்பாக்களில் (160,421) ஒவ்வொன்றிலும் மூன்று வேறுபாடுகள் உள. பதினொரு நூற்பாக்களில் (33, 105, 171, 267, 276, 277, 309, 384, 398, 419, 443) ஒவ்வொன்றிலும் இரண்டிரண்டு வேறுபாடுகள் இருக்கின்றன. எஞ்சிய நூற்பாக்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பாட வேறுபாடு மட்டுமே உள்ளது.

உரையாசிரியர்களால் அமைந்த 95 வேறுபாடுகளில் பிற உரையாசிரியர்களால் கொள்ளப்படாமல் இளம்பூரணரால் மட்டும் தனித்துக் கொள்ளப்பட்ட பாடங்கள் 18; சேனாவரையரால் மட்டும் தனித்துக் கொள்ளப்பட்டவை 5; தெய்வச்சிலையாரால் மட்டும் தனித்துக் கொள்ளப்பட்டுள்ள பாடங்கள் 34. இங்ஙனமே நச்சினார்க்கினியர் 9 பாடங்களையும், கல்லாடர் 2 பாடங்களையும், பழைய உரையாசிரியர் 4 பாடங்களையும், கல்லாடர் 2 பாடங்களையும், தனித்துக் கூறியுள்ளனர்.

இக்குறிப்புக்களால், தனித்துப் பாடங்கொள்வதில் தெய்வச்சிலையார் எண்ணிக்கை நிலையில் முதலிடம் பெறுவதையும், கல்லாடர் இறுதியிடம் பெறுவதையும் அறியலாம்.

தவித்துக்கொள்ளப்படும் பாடங்கள் தவிரப் பிறவற்றில் இளம்பூரணர் கொண்ட பாடங்களைச் சேனாவரையர் 4 இடங்களிலும், தெய்வச்சிலையார் 3 இடங்களிலும், நச்சினார்க்கினியர் 4 இடங்களிலும் கல்லாடர் 1 இடத்திலும் உடன்படுகின்றனர்.

சேனாவரையர் கொண்ட பாடங்களைத் தெய்வச்சிலையார் 5 இடங்களிலும், நச்சினார்க்கினியர் 5 இடங்களிலும் ஏற்றுள்ளனர்.

தெய்வச்சிலையார் கொண்ட பாடங்களில் நச்சினார்க்கினியர் 3 இடங்களையும் பழைய உரைகாரர் 1 இடத்தையும் ஏற்கின்றனர். சேனாவரையரின் பாடங்களையும் தெய்வச்சிலையார் பாடங்களையும் கல்லாடர் எந்த இடத்திலும் கொள்ளவில்லை.

நச்சினார்க்கினியர் கொண்ட பாடங்களில் மூன்றைக் கல்லாடரும் உடன்படுகின்றார். சொல்லதிகாரத்துக்கு உரையாசிரியர்கள் அறுவர் உள்ளமையாலும், உரைகளையொட்டிப் பதிப்புக்களின் எண்ணிக்கை மிகுந்துள்ளமையாலும், வழக்குப் பயிற்சி மிகுதியாகப் பெற்றுள்ளமையாலும், எழுத்ததிகாரத்தைவிடச் சொல்லதிகாரத்தில் பாடங்களின் வேறுபாடுகளும் எண்ணிக்கையில் மிகுந்துள்ளன.

சொல்லதிகார நூற்பாக்களின் மொத்த எண்ணிக்கை 456. இவற்றுள் அமைந்த பாடவேறுபாடுகளின் எண்ணிக்கை 251. வேறுபாடுகள் அமைந்த நூற்பாக்களின் எண்ணிக்கை 153மட்டுமே. எஞ்சிய 303 நூற்பாக்கள் பாட வேறுபாடுகள் இல்லாதவை.

ஒப்புமை நிலையில் கூறப்புக்குழி எழுத்ததிகாரத்தில் இறுதி இயலான குற்றியலுகரப் புணரியலில் பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை மிகுந்திருப்பது போலச் சொல்லதிகாரத்திலும் இறுதி இயலான எச்சவியலில் பாடவேறுபாடுகளின் எண்ணிக்கை மிகுந்துள்ளது என்பது அறியத்தக்க செய்தியாம்.

தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுதி முழுமைக்கும் இளம்பூரணர் உரையும், பொருளதிகாரத்தின் முற்பகுதியான அகம், புறம், களவு, கற்பு, பொருளியல்களுக்கும், செய்யுளியலுக்கும் நச்சினார்க்கினியர் உரையும், பிற்பகுதியாகிய மெய்ப்பாடு, உவமம், செய்யுள், மரபியல்களுக்குப் பேராசிரியர் உரையும் உள்ளன.

உரையாசிரியர்கள் இயல்வாரியாகக் கொண்ட நூற்பாக்களின் எண்ணிக்கை பட்டியலில் தரப்பெற்றுள்ளது.

இயல்	இளம்	நச்சி	பேரா.
அகத்திணையியல்	58	55	—
புறத்திணையியல்	30	36	—
களவியல்	51	50	—
கற்பியல்	53	53	—
பொருளியல்	52	54	—
மெய்ப்பாட்டியல்	27	—	27
உவமவியல்	38	—	37
செய்யுளியல்	235	243	243
மரபியல்	112	—	110
	656		

உரையாசிரியர்கள் கொண்ட நூற்பாக்களின் எண்ணிக்கை பெரும்பாலான இயல்களில் வேறுபடுகிறது. கற்பியல் நூற்பாக்களின் எண்ணிக்கையில் இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் ஒன்று படுகின்றனர். மெய்ப்பாட்டியல் நூற்பாக்களின் எண்ணிக்கையை இளம்பூரணரும் பேராசிரியரும் ஒன்றுகக் கொண்டுள்ளனர். மேலும் செய்யுளியல் நூற்பா எண்ணிக்கையைப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் இருவரும் ஒரே முறையில் கொண்டுள்ளனர். இப்பட்டியலால் அறியப்படும் இச்செய்திகள் நூற்பாவைப் பிரிப்பதிலும் இணைப்பதிலும் உரையாசிரியர்களுக்கு இடையே இருந்த வேறுபாடுகளை விளக்குகிறது.

பொருளாதிகார நூற்பாக்கள் 656ல் பாடவேறுபாடுகள் உள்ள நூற்பாக்களின் எண்ணிக்கை 317. எஞ்சிய 339 நூற்பாக்கள் வேறுபாடில்லாதவை.

பொருளதிகாரத்தில், மொத்தமுள்ள 699 பாடவேறுபாடுகளில் உரையாசிரியர்கள் கொண்ட பாடங்களால் மட்டும் வேறுபடுவன 397; பதிப்புக்களால் அறியப்பெறும் பாடங்கள் 210; உரையாசிரியரின் உரைக்குறிப்பால் தெரியவரும் வேறுபாடுகள் 2;

உரையாசிரியர்களும் பதிப்புக்களும் வேறுபடும் பாடங்கள் 68; ஒன்றுக்கு மேலும் வேறுபடும் பாடங்கள் 22.

தொல்காப்பியத்தின் மூன்று பகுதிகளிலும் உரையாசிரியர்கள் கொண்ட பாடங்களினுல் அமைந்த 531 வேறுபாடுகள் பல்வகைத் தலைப்புக்களில் இக்கட்டுரைக்கண் பகுத்து அமைக்கப்பட்டுள்ளன.

3. பாடவேறுபாடுகளின் பகுப்பு

மூன்று அதிகாரங்களிலும் உரையாசிரியர்கள் கொண்ட பாடங்களால் அறியப்பெறும் மொத்தப் பாட வேறுபாடுகள் 531ம் அவற்றின் வடிவ அமைப்புக்களாலும், அவை எழுந்தமைக்குரியன வாகக் கருதப்பெறும் காரணங்களாலும் ஐந்து தலைப்புக்களில் இங்குப் பகுக்கப்பட்டுள்ளன. அவை 1. எழுத்து வேறுபாடுகள் 2. சொல் வேறுபாடுகள் 3. பொருள் வேறுபாடுகள் 4. இலக்கண வேறுபாடுகள் 5. ஒப்புமை நிலை வேறுபாடுகள் என்பன. இப் பகுப்பில் பல உட்பிரிவுகள் உள. இப்பகுப்பு வரிசையில் அடங்கத் தக்கனவாகக் கருதப்பெறும் வேறுபாடுகள் அந்தந்தத் தலைப்பின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளன. மிகுதியான எண்ணிக்கையில் அமைந்த வேறுபாடுகளில் ஒன்றிரண்டு மட்டும் குறிப்பிடப்பெற்று எஞ்சிய வற்றின் எண்ணிக்கை மட்டும் சுட்டப்பெற்றுள்ளது. இவ்வேறு பாடுகள் அனைத்தையும் பல்வேறு அமைப்புகளுக்கு ஏற்பப் பல பிரிவுகளில் பகுத்துக்காட்டுதலே இக்கட்டுரையின் நோக்கம். பொருள் வேறுபாட்டுடன் அமைந்த வேறுபாடுகளில் சிறந்த பாடமாகக் கொள்ளத்தக்க வேறுபாடுகள் எவை என்பது பற்றிய ஆய்வு பிறிதொரு கட்டுரைக்கண் நிகழ்த்தப் பெற்றுள்ளது. தொல்காப்பிய உரையாசிரியர்களில் காலத்தால் மூத்தவராகவும், தொல்காப்பியம் முழுமைக்கும் உரை கண்ட சிறப்புடையவராகவும் உள்ள இளம் பூரணர்கொண்ட பாடங்களே இக்கட்டுரைக்கண் அடிப்படைப் பாடங்களாகக் கொள்ளப்பட்டுள. அவற்றிலிருந்து பிறர் கொண்ட பாடங்கள் வேறுபடும் இயல்புக் கேற்றவாறு பகுக்கப்பட்டுள்ளன.

4, எழுத்து வேறுபாடுகள்

எழுத்தளவில் நிகழும் மாற்றங்கள் எழுத்து வேறுபாடுகள். ஏடெழுதுவோரின் விரைவு, பிற்கால உரையாசிரியர்களிடம்

அமைந்த பொருள் நோக்கு முதலிய காரணங்களால் பாடங்களில் எழுத்து அளவில் சில மாற்றங்கள் நிகழுகின்றன. இம்மாற்றங்களைப் பின்வரும் தலைப்புக்களில் பிரிக்கலாம்.

1. முன்புள்ள பாடத்தில் புதிதாக ஓர் எழுத்துச் சேர்வதால் அமையும் வேறுபாடு 2 முன்புள்ள பாடத்தில் உள்ள ஓர் எழுத்து விடுபடுவதால் ஏற்படும் வேறுபாடு. 3. ஒரு பாடத்தில் ஓர் எழுத்து நிற்க வேண்டிய இடத்தில் பிறிதோர் எழுத்து நிற்றலால் நிகழும் வேறுபாடு. 4. ஒரு பாடத்தில் அமைந்த இரண்டு எழுத்துக்கள் தம் இயல்பு நிலையை விடுத்து முன்பின்னாக மாறி நிற்றலால் உண்டாய வேறுபாடு. இங்ஙனம் எழுத்து வேறுபாடு என்னும் பகுப்பில் நான்கு உட்பிரிவுகள் உள.

இப்பிரிவுகளில் அடங்கும் வேறுபாடுகளை வரிசை முறையில் காண்போம்.

4. 1. எழுத்துச் சேர்க்கை

தொகை மரபினுள் ''சொல்லிய மருங்கின் உளவென மொழிப'' (எழுத். 160) என்னும் தொடரில் **'சொல்லிய மருங்கின்'** என்பது இளம்பூரணர் பாடம். **'சொல்லியல் மருங்கின்'** என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம்.

''சொல்லிய மருங்கு என்றதனால்...'' என இளம்பூரணர் விளக்கத்திலும் ''சொல்லியல் என்றதனாலே...'' என நச்சினார்க்கினியர் விளக்கத்திலும் அமைந்த தொடர்கள் இருவர் கொண்ட பாடங்களையும் உறுதிப்படுத்துகின்றன. எழுத்ததிகாரத்தில் உள்ள இவ்விரு வேறுபாடுகளும் முன்புள்ள பாடத்தில் ஓர் எழுத்துச் சேர்க்கையின் விளைவால் எழுந்தவை.

சொல்லதிகாரத்தில் வினையியல் நூற்பாவில் ''முன்னுறக் கிளந்த உயர்திணையவ்வே'' (சொல்.205) என்பது இளம்பூரணர் பாடம். கல்லாடர் தவிரப் பிற உரையாசிரியர்களால் இப்பாடம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. **'கிளந்தன'** எனக் கல்லாடர் பாடம் கொள்கிறார். ஓர் எழுத்துச் சேர்க்கையால் கல்லாடரின் பாடம் வேறுபடுகிறது, எனினும் பிற உரையாசிரியர்கள் போலவே, ''முன்னுறச் சொல்லப்பட்ட உயர்திணையன ஆம்'' என இதனை

எச்சமாகக் கொண்டே கல்லாடரும் பொருள் கொள்கின்றார். எனவே **கிளந்த-கிளந்தன** என்பன வடிவ அமைப்பில் வேறுபட்டாலும் பொருள் நிலையில் வேறுபடவில்லை.

"**பேநாம்** உருமென வரூஉங் கிளவி" (சொல். 359) என்னும் தொடர் உரியியல் நூற்பாவில் இளம்பூரணரும் சேனவரையரும் கொண்ட பாடம். நகர முதன் மொழிக்கு முன்னர் மகரம் மறைந்து வரும் என்பது புணர்ச்சி விதியாயினும், நச்சினார்க்கினியர் மகரம் சேர்த்துப் **பேம்நாம்** எனப் பாடங்கொண்டுள்ளார். மன்ற மராஅத்த பேமுதிர் கடவுள் என்ற தொடர்[1] ஒன்றையே தத்தம் பாடத்துக் கேற்ப இளம்பூரணர், சேனவரையர், நச்சினார்க்கினியர் ஆகியோர் காட்டியுள்ளனர். சொல்லதிகாரத்தில் பயின்ற இவ்வேறுபாடுகளால் எழுத்துச் சேர்க்கையால் பாடம் வேறுபட்டுளதே தவிர பொருள் மாற்றமில்லை என அறியலாம்.

பொருளதிகாரத்தில் இளம்பூரணர் பாடங்களில் ஓர் எழுத்துச் சேர்க்கையால் வடிவில் வேறுபட்டுத் தோன்றும் பாடங்கள் உள.

சீர்த்த மரபில் (பொருள்.63) என்பதற்குச் '**சீர்த்தகு** சிறப்பின்' எனப் பாடங்கொண்டார் நச்சினார்க்கினியர். 'கு' என்ற எழுத்துச் சேர்க்கையோடு பொருள் வேறுபாடும் சொல் மாற்றமும் இங்கு அமைந்துள்ளன.

'**ஆங்கண்** நிகழ' (பொருள் .92) என்பதனை '**ஆங்கவண்** நிகழ' என்றும் 'மெய்கொள **அருளி**' (பொருள். 142) என்பதனை 'மெய்கொள **அருளிய**' என்றும், '**பரத்தை** மறுத்தல்' (பொருள்.156) என்பதனைப் '**பரத்தமை** மறுத்தல்' என்றும், 'பாட்டின் **இயல**' (பொருள். 482) என்பதனைப் 'பாட்டின் **இயல்பே**' என்றும், நச்சினார்க்கினியர் பாடங்கொண்டுள்ளார்.

'பாட்டி **என்ப**' (பொருள்.610) என்பதற்குப் 'பாட்டி **என்பது**' என்றும், **துறைக்கிழப்பெயர்** (பொருள். 618) என்பதற்குத் '**துறைக் கிழமைப்பெயர்**' என்றும் வருவன பேராசிரியர் பாடங்கள். பொருளதிகாரத்தில் பயின்ற இந்த எட்டுப் பாட வேறுபாடுகளும் எழுத்துச் சேர்க்கை என்னும் பகுப்பில் அடக்கத்தக்கவை.

---

[1] குறுந், 87

4. 2. எழுத்து விடுபடல்

தொகை மரபில் **'உறழ்பாகுநவும்'** (எழுத்து 152) என்பது இளம் பூரணர்கொண்ட பாடம். நச்சினார்க்கினியர் உரைப்பதிப்பில் **'உறழாகுநவும்'** என்பது பாடமாக உள்ளது. '...உறழாகுநவு மென்னும் பொதுவகையான் முடிக்க' என்ற தொடர் நச்சினார்க் கினியரின் விளக்கப் பகுதியில் உள்ளமையால் அவர் கொண்ட பாடம் 'உறழாகுநவும்' என்பதே என்று உறுதியாகிறது. 'உறழா குநவும்' என்பதற்கு 'உறழ்ந்து முடிவனவும்' என நச்சினார்க் கினியரும், உறழ்ச்சியாவனவும் என இளம்பூரணரும் உரை கூறியுள்ளனர். உறழ்பாகுநவும் என்பதில் உள்ள "ப" என்ற எழுத்து விடுபட்டமையால் **'உறழாகுநவும்'** என்று பாடம் அமைந்தது. இவற்றிடையே பொருள் வேறுபாடு இல்லை என்பதை இருவரது உரைப்பகுதிகளாலும் தெளியலாம். உயிர்மயங்கியலில் 'ஏனவை வரினே மேல்நிலை இயல்பே' (எழுத்-257) எனவரும் நூற்பாவில் **'இயல்பே'** என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். இச்சொல்லில் இறுதியில் அமைந்த எழுத்து விடுபட்டு ஓசை நிறைவுக்கு ஏற்ப **'இயல'** என ஆகி நச்சினார்க்கினியர் உரைப் பதிப்பில் **'இயல'** என்பதே பாடமாகவுள்ளது.

எழுத்ததிகாரத்தில் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் ஆகியோர் கொண்ட பாடங்களில் எழுத்து விடுபடல் என்னும் பிரிவில் பகுக்கத்தக்க நிலையில் அமைவன இவ்வேறுபாடுகள்.

சொல்லதிகார உரியியல் நூற்பாவில் 'பொருள் நிலை **அல்லது**' (சொ. 384) என்று இளம்பூரணரும் தெய்வச் சிலையாரும் பாடங் கொண்டுள்ளனர். 'உரியவெனப்பட்ட பொருளின ஆகாது' என்பது இத்தொடருக்கு இளம்பூரணர் கூறும் உரை. சேனாவரையர் 'பொருள் நிலை **அல்ல**' எனப் பாடங் கொண்டு, 'பொருளேயன்றி' எனப் பொருள் கொள்கிறார். நச்சினார்க்கினியரும் சேனாவரையரைப் பின்பற்றுகிறார். பொருள் நோக்கில் இங்குப் பாடம் மாறுபட்டிருந் தாலும், அமைப்பு நிலையில் ஓர் எழுத்து விடுபட்டமையால் அமை வது இப்பாடம்.

எச்சவியலில் 'பலர் சொல் நடைத்தென' (சொல்.415) என இளம்பூரணர் கொண்ட பாடத்தைச் சேனாவரையரும் நச்சினார்க்

கினியரும் ஏற்கின்றனர். 'பலரைச் சொல்லும் சொன்னடைத்தாக' என்பது இதற்கு இளம்பூரணர் கொண்ட பொருள். தெய்வச் சிலையார் 'பல சொன்னடைத்தென' எனப் பாடங்கொள்வதோடு அதற்கேற்பப் பல சொன்னடைத்தாகி எனப்பொருளும் கொள்கின் றார். பொருள்நிலையில் மாற்றம் பெறும் இவ்வேறுபாட்டை ஓர் எழுத்துவிடுபட்டமையால் நிகழ்ந்த எழுத்து வேறுபாட்டுப் பகுப் பில் அடக்கலாம். சொல்லதிகாரத்தில் இப்பிரிவில் அமைவன இரு வேறுபாடுகள்.

பொருளதிகாரத்தில் இளம்பூரணர் கொண்ட 21 இடங்களில் பிற்கால உரையாசிரியர்கள் பாடங்கொள்ளும்போது ஓர் எழுத்து விடுபட்ட மாறுபாடு உள்ளது. சான்றாக 'வினைவலர் பாங்கினும்' (பொ. 25) என்ற இளம்பூரணர் பாடம் 'வினைவல பாங்கினும்' என்றும், 'சீரியல் மருங்கினும்' (பொ 362) என்ற இளம்பூரணர் பாடம். 'சீரிய மருங்கினும்' எனப் பிற உரையாசிரியர்களால் பாடங் கொள்ளப்பெற்றுள்ளன.

பேராசிரியர், நச்சினார்க்கினியர் கொண்ட பாடங்களில் எழுத்து விடுபடல் என்னும் இப்பிரிவில் அடங்கத்தக்கவை கீழே உள்ளன. இவண் குறிப்பிடப் பெற்ற பாடங்களில் சில பொருள் வேறுபாடு உள்ளவை.

மருங்கினற் கெழுதகை (பொ. 216) என்பதில் 'ற' கர வொற்று விடுபட்டமையால் எஞ்சிய பகுதி '**மருங்கின** கெழுதகை' என்றாகிறது. '**அன்புறுதகுவன** (பொ. 227) என்ற பாடத்திற்கு 'அன்புறு '**தகுந**' என்பது வேறுபாடு. இங்கு 'வ' கரம் விடுபட்ட தோடு நகர-னகர மயக்கமும் இடம் பெற்றுள்ளது.

'**உவமைத்தோற்றம்**' (பொருள்.305) '**உவமைத் தன்மையும்**' (பொ. 307) என்பன 'உவமத்தோற்றம்' 'உவமத் தன்மையும்' என அமைந்திருக்கும் வேறுபாடு எழுத்து விடுபட்டமையால் மட்டுமன்றி இருவகைக்கும் இடையில் அமைந்த ஒலி ஒப்புமையாலும் நிகழ்ந் ததாகக் கருதலாம். இவ்வகையில் பொருளதிகாரத்தில் அமைந்த பாடங்களின் எண்ணிக்கை 21.[1]

---

[1] பொ. நூ. 25, 87, 144, 144, 199, 204, 216, 227, 243, 272, 282, 286, 305, 307, 362, 391, 485, 510, 561, 595, 655.

4. 3. எழுத்து மாற்றம்

எழுத்துக்கள் ஒன்று நிற்கும் இடத்தில் பிறிதொன்று வருவதால் வேறுபடும் பாடங்கள் பொருளதிகாரத்தில் மட்டும் உள.

'நீர்வாழ்சாதியும்' (பொ.588) என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். 'நீர்வாழ் சாதியுள்' என்பது பேராசிரியர் கொண்ட பாடம். இங்குப் பாடத்தின், இறுதியில் அமைந்த எழுத்து, மாற்றம் பெற்றுள்ளதைக் காணலாம். இம்முறையில் அமைந்த மேலும் 5 இடங்கள் உள.[1]

4. 4. எழுத்து முன்பின் இடமாற்றம்

சொற்களில் அமைந்த எழுத்துக்கள் முன்பின்னுக மாறுவதால் நிகழும் வேறுபாட்டுப் பிரிவில் 'பால்வரை கிளவியின்' (சொ. 170) 'பலர் வரை கிளவியின் 'தடற ஊர்ந்த' (சொ. 213) 'தறட ஊர்ந்த' என்று இரு வேறுபாடுகள் சொல்லதிகாரத்தில் உள. எழுத்து, பொருள் ஆகிய அதிகாரங்களில் இப்பிரிவைச் சார்ந்த வேறுபாடுகள் இல.

'பால்வரை கிளவியின்' என்று பாடத்தை இளம்பூரணரோடு, நச்சினுர்க்கினியரும் ஏற்கின்ருர். ஆனுல் சேனுவரையர், தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகியோர் 'பலர்வரை கிளவியின்' எனப் பாடங்கொள்கின்றனர். 'பால்வரை கிளவி' என்பது செய்யும் என்னும் வாய்பாட்டு முற்றுச் சொல்லை உணர்த்துவதாக இளம்பூரணரும், நச்சினுர்க்கினியரும் கொண்டனர். 'பலர்வரை கிளவி' எனப் பாடங் கொண்டுள்ளனர். 'தடற' ஊர்ந்த என்பது இளம்பூரணர் பாடம். பிற உரையாசிரியர் அனைவரும் இதனை ஏற்கவில்லை. 'தறட' என்றே பிறர் அனைவரும் பாடங் கொண்டுள்ளனர். இளம்பூரணர் 'தடற' எனப் பாடங்கொண்டிருப்பினும் உண்டது கூயிற்று, குண்டு கட்டு எனத் தறட வரிசையிலேயே சான்றுகள் காட்டியுள்ளார். எனவே, இளம்பூரணர் கொண்ட பாடமும் 'தறட' ஊர்ந்த என்றே இருத்தல் வேண்டும் எனக் கருத முடிகிறது.

'பால்வரை கிளவி' 'பலர்வரை கிளவி,' 'தடற'-'தறட' என்ற இப்பாடங்களின் வேறுபாடுகள் எழுத்துக்களின் முன்பின் மாற்றத்தால் நிகழ்ந்தவை எனப்பகுக்கத் தக்கனவாம்.

[1] பொ. நூ: 77, 112, 283 294, 335

இங்ஙனம் எழுத்துவகை வேறுபாடுகளாய்ப் பகுக்கத்தக்க நிலையில் நான்கு பிரிவுகளில் அமைந்த மொத்த வேறுபாடுகள் 45 ஆகும். இவற்றுள் எழுத்ததிகாரத்தில் 4ம், சொல்லதிகாரத்தில் 6ம், பொருளதிகாரத்தில் 35ம் உள்ளன.

5. சொல் வேறுபாடுகள்

சொற்களில் நிகழும் மாற்றங்களைச் சொல்வேறுபாடுகள் என்னும் தலைப்பில் பகுக்கலாம். உரையாசிரியர்கள் கொண்ட பொருள் நோக்கும், ஏடெழுதும் விரைவுநிலை போன்ற காரணங்களால் சொல் அளவிலும் மாற்றங்கள் நிகழ்ந்து பாடவேறுபாடுகள் அமைகின்றன.

சொல் வேறுபாடுகளாக அமையும் பாட வேறுபாடுகளில் முன்புள்ள பாடத்தில் புதிய சொல்லைச் சேர்த்தல் 2. பழைய பாடத்தில் உள்ள ஒரு சொல்லை விடுத்துப் புதிய பாடங்கொள்ளல் 3. ஒரு பாடத்தில் அமைந்த சொற்கள் முன்பின்னாக மாறி அமைதல் முதலிய மூன்று பிரிவுகள் அமைந்துள. தொல்காப்பியத்தில் அமைந்த இவ்வேறுபாடுகளை இவ்வரிசை முறையில் நோக்குவோம்.

5. 1. சொற் சேர்க்கை

'**விளியொடு** கொளலே' (சொ. 151) என வரும் பாடம் சொல்லதிகாரத்தில் விளிமரபின் இறுதி நூற்பாவில் அமைந்த தொடர். இளம்பூரணர் கொண்ட இப்பாடத்தையே சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோரும் கொள்கின்றனர். தெய்வச் சிலையார், 'விளியொடு' என்பதில் 'ஒடு' உருபை நீக்கி வேற்றுமை என்னும் சொல்லைக் கூட்டி, "**விளி வேற்றுமை** கொளலே" எனப் பாடங் கொள்கின்றார். இருவகை வேறுபாடுகளும் ஒரே பொருளையே உணர்த்துகின்றன. ஒரு சொற் சேர்க்கையினால் இங்கு வேறுபாடு எழுந்துள்ளது.

சில இடங்களில் கூடுதலாக ஒருசொல் சேர்த்தலாலும் உரையாசிரியர் கொள்ளும் பாடங்கள் வேறுபடுகின்றன. உரியியலில் 'விழுமம்' என்ற சொல்லின் பொருளை "விழுமம் சீர்மையும் இடும்பையும் செய்யும்" (சொ. 347) என வரும் நூற்பா உணர்த்தும்

இளம்பூரணர் 'விழுமம்' என்ற சொல்லுக்குச் சீர்மை, இடும்பை என இருபொருள்கள் உளவெனக் கொண்டார். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் இவ்விரு பொருளுடன் சிறப்பு என்னும் ஒரு பொருளையும் கூட்டிக் கொண்டனர். எனவே 'விழுமஞ் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்' என நூற்பா அமைந்தது. இதில் 'சிறப்பும்' என்ற சொற் சேர்க்கையால் 'செய்யும்' என்ற முற்றுச்சொல் விடுபட்டது.

சேனாவரையர் கூட்டிய புதிய பொருளோடு, அவரால் விடுக்கப் பெற்ற முற்றுச் சொல்லையும் தெய்வச்சிலையார் சேர்த்துப் பாடங் கொண்டார். எனவே 'விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் செய்யும்' என நூற்பா அமைந்தது. இங்ஙனம் புதிய சொற் சேர்க்கையால் பாடங்களில் வேறுபாடும் வளர்ந்தது.

பொருளதிகாரத்தில் கற்பியல் நூற்பாவில் 'பகுதிப் பதினொரு மூன்றும்' (பொ. 144) என்பது இளம்பூரணர் பாடம். கற்பியலில் தலைவனுக்குக் கூற்று நிகழும் இடங்களைத் தொகுத்துக் கூறும் நூற்பாவில் அமைந்த தொடர் இது. பதினொரு மூன்று என்பதை 11×3 எனக் கொண்டு 33 இடங்களில் கூற்று நிகழும் என்று இளம்பூரணர் விளக்குவர்.

நச்சினார்க்கினியர் 'பகுதிமுப் பதினொரு மூன்றும்' எனப் பாடங்கொண்டு $30+3=33$ இடங்களில் கூற்று நிகழும் எனக் கூறுவர். இருவகைப் பாடங்களும் உணர்த்தும் கருத்து ஒன்றே. எனினும் இளம்பூரணர் பாடத்தைவிட நச்சினார்க்கினியர் பாடத்தில் ஒரு சொல் சேர்ந்துள்ளது.

பொருளியல் நூற்பாவில் 'பொருள் பயன் வரினே' (பொ.214) என வருவது இளம்பூரணர் கொண்ட பாடத் தொடர். 'பொருட் பயம் படவரின்' என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம். பயன் வரினே என்பது 'பயம்பட வரின்' என்று சொற்சேர்க்கை பெற்று வந்தது. 'பட' என்ற புதிய சொற் சேர்க்கையால் இளம்பூரணர் பாடத்தில் 'உள்ள ஏகாரம்' நச்சினார்க்கினியர் பாடத்தில் விடுபட்டுள்ளது.

செய்யுளியலில் 'குறிப்பு மொழியே' (பொ. 481) என்பது இளம்பூரணர் பாடம். 'குறிப்பு மொழி யென்ப' எனப் பேராசிரியர்

நச்சினார்க்கினியர் இருவரும் பாடம் கொண்டுள்ளனர். இங்கு மொழியிறுதி ஏகாரம் விடுபட்டு, 'என்ப' என்னும் முற்றுச் சொல்லும் சேர்ந்துள்ளது.

செய்யுளியலில் **'முறையினான்'** (பொ. 486) என வரும் இளம்பூரணர் பாடத் தொடர் **'முறை நெறி வகையின்'** என்று பேராசிரியர், நச்சினார்க்கினியர் பாடங்களில் அமைந்தது. நெறி, வகை, என்ற இருசொற்கள் இங்கு இணைந்துள்ளன. இவற்றின் சேர்க்கையால் இளம்பூரணர் பாடத்தின் இறுதியில் அமைந்த ஆன்' என்னும் சொல் விடுபட்டது.

'சினமென்' (பொ. 536) எனவரும் இளம்பூரணர் பாடத்துக்கு முன்னர் **'வனப்பியல்தானே வகுக்குங்காலை'** என்ற சொற்றொடர் பேராசிரியர் பாடத்தில் அமைந்துள்ளது. எனினும் நச்சினார்க்கினியர் இங்கு இளம்பூரணரையே தழுவிப் பாடங்கூறியுள்ளார்.

இங்குக் கூறப்பட்ட ஐந்தும் சொற்சேர்க்கையாலும், சொற். றொடர்ச் சேர்க்கையாலும் பொருளதிகாரத்தில் அமைந்த பாடங்கள்

5. 2. சொல் விடுபடல்

எழுத்ததிகாரத்தில் மொழிமரபில் ஈரொற்றுடனிலையை விளக்கும் **'மூன்று முன்னொற்று'** (எ. 48) எனவரும் தொடர் இளம்பூரணர் கொண்ட பாடம். ஆனால் நச்சினார்க்கினியர் 'மூன்றும் **ஒற்ற'** என்பதைப் பாடமாகக் கொண்டார். இளம்பூரணர் பாடத்தில் இடையில் அமைந்த 'முன்' என்னும் சொல் நச்சினார்க்கினியர் பாடத்தில் விடுபட்டுள்ளது.

'மூன்று முன்னொற்ற' என்பதற்கு 'யரழஎன்ற மூன்றனுள் ஒன்று முன்னே ஒன்றாய் நிற்க' என இளம்பூரணர் உரை கொள்வர். 'மூன்றும் ஒற்ற' என்பதற்கு 'யரழ என்ற மூன்று புள்ளியும் ஒற்றாய் நிற்க' என நச்சினார்க்கினியர் உரைகொள்வர். உரைகளின் அமைப்பு மாறுபட்டிருந்தாலும் உரைகள் உணர்த்தும் கருத்து ஒன்றே. எனவே இவ்வேறுபாடு பொருள் மாற்றம் தரவில்லை.

பொருளதிகாரத்தில் இளம்பூரணர் கொண்ட பாடங்களில் உள்ள சொற்கள் பிற்கால உரையாசிரியர்கள் கொண்ட பாடங்களி

விடுபட்டுள்ளன. இத்தகைய வேறுபாடுகளின் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது.

இளம்/ பேரா பாடம்	நூற்பா	பேரா/நச்சி பாடம்	விடுபட்டசொல்
ஒருபாலாக உடைமை (இளம்)	256	ஒருபால் உடைமை (நச்சி)	ஆக
நூலெனப்படுவது நுவலுங் காலை (இளம், பேரா)	467	நூலெனப்படுவது (நச்சி)	நுவலுங்காலை
ஒருஉத் தொடை (இளம்)	528	ஓரீஇத் (பேரா, நச்சி)	தொடை
முடுகுவண்ணம் முடிவறியாமல் (இளம்)	534	முடுகுவண்ணம் (பேரா, நச்சி)	முடிவறியாமல்
தொன்மைதானே சொல்லுங் காலை (இளம்)	538	தொன்மைதானே (பேரா, நச்சி)	சொல்லுங்காலை
உரியதோர் நிலைமைக்கு (இளம்)	620	உரியநிலைமைக்கு (பேரா)	ஓர்
பெண்பாலான அப்பெயர்	601	அப்பெயர்	பெண்பாலான

மேலே கண்ட பட்டியலால் பாடங்களில் அமைந்த சொற்கள் சில முழுமையாக விடுபட்டதோடு, சிலவகைப் பாடங்களில் வேறு மாற்றங்களும் நிகழ்ந்துள்ளன என்பதை அறியலாம். 'ஒருஉத் தொடை தொடுக்கும்' (528) என்ற இளம்பூரணர் பாடத்தில் 'தொடை' என்ற சொல்விடுபட்டதோடு 'ஒருஉ' என்ற சொல் 'ஓரீஇ' என மாறி அமைந்துள்ளது.

'உரியதோர் நிலைமைக்கு' (620) என்ற இளம்பூரணர் பாடத்தில் 'ஓர்' என்ற எண்ணுச்சொல் விடுபட்டதுடன் 'உரியது' என்ற ஒருமைச்சொல் 'உரிய' என்ற பன்மைச் சொல்லாகவும் மாற்றமடைந்துள்ளது.

மேலே கூறப்பட்ட ஏழு பொருளதிகார வேறுபாடுகளும் சொல் விடுபடல் என்னும் பிரிவில் அடங்குவன. இப்பிரிவில் சொல்லதிகாரத்தில் அமைந்த வேறுபாடுகள் இல.

5. 3. சொல் முன்பின் இடமாற்றம்

எழுத்துக்கள் முன்பின்னாக மாறி அமைதல் போலவே சில இடங்களில் சொற்களும் முன்பின்னாக மாறி அமைதல் உண்டு.

'துவைத்தலும் சிலைத்தலும் இயம்பலும் இரங்கலும்' (சொ. 352) என வரும் சொல்லதிகார நூற்பாத் தொடரில், '**இயம்பலும் இரங்கலும்**' என அமைந்த சொல் வரிசை இளம்பூரணர் உரையில் உள்ளது. பின்வந்த சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் இச்சொல் வரிசையையே கொண்டனர். ஆனால் தெய்வச்சிலையார் '**இரங்கலும் இயம்பலும்**' என அமைந்த சொல் வரிசையை மாற்றிப் பாடங் கொண்டுள்ளார். பொருள் மாற்றம் இல்லாத இவ்வேறுபாடு சொல் முன்பின் மாற்றம் என்னும் பகுப்பில் அடங்கத் தக்கது. இரண்டு சொற்கள் தத்தம் இயல்பான இடத்தை விடுத்து முன்பின்னாக மாறி நிற்கும் இம்மாற்றம் பொருளதிகாரத்தில் செய்யுளியலில் அமைந்த மூன்று நூற்பாக்களில் உள.

'**தொடைநிலை வகையே**' (பொ. 408) என்ற இளம்பூரணர் பாடம் 'தொடை **வகைநிலையே**' எனப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோரால் கொள்ளப்பட்டுள்ளது. இதில் நிலை, வகை என்று சொற்கள் முன் பின்னாக மாறியுள.

'**பாட்டளவற்றோடு**' (பொ. 461) என்பது இளம்பூரணர் பாடம். இதில் பாட்டு + அளவு + அவற்று + ஓடு எனவரும் சொற்கள் உள. பேராசிரியர் இத் தொடருக்கு '**பாட்டவற்றளவோடு**' (பாட்டு + அவற்று + அளவு + ஓடு) எனப் பாடங்கொண்டுள்ளார் இங்கு 'அளவு', 'அவற்று' என்பன முன்பின்னாக இடம் மாறி நின்றுள்ளன. ஓடு என்ற வேற்றுமை உருபு அவற்று என்பதை விட்டு அளவு என்பதனுடன் சேர்ந்துள்ளது. நச்சினார்க்கினியர் இங்கு இளம்பூரணர் பாடத்தை ஏற்றுள்ளார்.

'பிசி **நிலை வகையே**' (பொ. 478) என்ற இளம்பூரணர் பாடம் 'பிசி **வகைநிலையே**' எனப் பேராசிரியர், நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டுள்ளது. இங்கு நிலை, வகை என்னும் சொற்கள் இடம் மாறி நின்றன. சொல் முன் பின் இடமாற்றம் என்னும் இவ்வகை எழுத்ததிகாரத்தில் இல்லை.

இங்ஙனம் சொல் வேறுபாடு என்னும் பகுப்பில் மூன்று பிரிவுகளில் அமைந்த வேறுபாடுகளின் எண்ணிக்கை 19. இவற்றுள் எழுத்ததிகாரத்தில் அமைந்தவை ஒன்றுமட்டுமே. சொல்லதிகாரத்தில் 3ம் பொருளதிகாரத்தில் 15 ம் உள.

6. பொருள் வேறுபாடுகள்

பொருள் நிலையில் மாற்றம் நிகழ்வன பொருள் வேறுபாடுகள் என்னும் பகுப்பில் அடங்கும். இப் முறையில் ஒரு சொல் நிற்குமிடத்தில் மற்றொரு சொல் பயின்று வரும்போது, அது இரு வகையில் அமைகின்றது. அவை 1 மிகுதியும் பொருள் வேறுபாடின்றி ஏறத்தாழ ஒரே பொருளைத்தரும் வேறு சொல் பயின்று வருதல் 2. மிகுதியும் பொருள் வேறுபாட்டுடன் வேறு பொருளைத் தரும் பிறிதொரு சொல் பயின்று வருதல் என்பன.

கடினமான அரியசொல்லை எளிமைப்படுத்தும் விருப்பத்தாலும் தாம் கருதியபொருள் அமைப்பிற்குத் தக்கவாறு பாடத்தைத் திருத்தும் முயற்சியாலும் முறையே இவ்விரு வகை வேறுபாடுகளும் எழுகின்றன எனலாம்.

6. 1 ஒரு பொருள் - வேறு சொல்

எழுத்ததிகாரத்தில் தொகை மரபு நூற்பாவில் 'இகர ஈற்றுப் பெயர்' (எ. 155) என்னும் தொடர் இளம்பூரணர் கொண்ட பாடம். இதற்கு 'இகரமாகிய இறுதியை உடைய பெயர்' என்று இளம்பூரணர் உரை வரைந்துள்ளார். இளம்பூரணரின் உரைப்பகுதியில் அமைந்த தொடர் 'இறுபெயர்' என்னும் பாடத்தைத் தோற்றுவிக்க, நச்சினார்க்கினியருக்குத் துணையாக அமைந்திருக்கலாம் என்று எண்ணத் தோன்றுகிறது. இளம்பூரணர் கூறும் உரைத்தொடரின் அமைப்பினைப் பின்பற்றி 'இகர இறுபெயர்' என்னும் பாடம் நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டுளது. 'இகர இறுபெயா' என்பதற்கு இகர ஈற்றுப் பெயர் என நச்சினார்க்கினியர் உரை கூறுகின்றார்.

பொதுநிலையில் கூறப்புகின் நச்சினார்க்கினியர் இளம்பூரணரின் உரைத் தொடரை அடிப்படையாகக்கொண்டு தம் பாடத்தைக் கூறினர் என்றும், இளம்பூரணிரின் மூலத் தொடரைத்தன் உரைத்

தொடராகக் கூறினர் என்றும் மொழியலாம். ஈற்றுப்பெயர்-இறுபெயர் என்ற இத்தொடர்கள் சொல்லளவில் வேற்றுவடிவின; ஆயினும் ஒரே பொருளைத் தருவனவே.

உயிர் மயங்கியல் நூற்பாவில் 'லகரம் நகர வொற்றுதலு முரித்தே' (எ. 215) என்னும் தொடரில் 'ஆதலும்' என இளம்பூரணர் கொண்ட பாடத்திற்கு மாற்றாக 'ஆகலும்' என நச்சினார்க்கினியர் கொண்டுள்ளார். ஆதலும்-ஆகலும் என்பன ஒரே பொருளைத் தருவனவே.

'ஆதலும்' என்னும் சொல்லில் உள்ள 'த' என்னும் எழுத்து எழுதுமுறையினாலோ செல்லரிப்பினாலோ 'ஆகலும்' எனத் தோற்றமளிக்க வாய்ப்புண்டு. எனவே தோற்றத்தில் ஒத்து அமையும் இச்சொல் நச்சினார்க்கினியரின் பாடமாகவும் ஆயிற்று எனலாம்.

சொல்லதிகாரத்தில் 'மாரைக்கிளவி உளப்பட மூன்றும்' (சொ. 7) என்பதில் 'உளப்பட மூன்றும்' என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோரும் இளம்பூரணர் பாடத்தையே ஏற்றனர். எனினும் பழைய உரையாசிரியர் 'உட்பட மூன்றும்' எனப் பொருள் வேறுபாடு இல்லாத பாடமொன்றைக்கொண்டுள்ளார்.

'வினைப்படு தொகையின் உம்மை வேண்டும்' (சொ. 3) என்னும் கிளவியாக்க நூற்பாத் தொடர் இளம்பூரணர் கொண்ட பாடம். 'வினைப்படுதொகையின்' என்பதற்குச் சேனாவரையர் 'வினைப்படு தொகுதியின்' எனப் பாடங்கொண்டார். தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடர், பழைய உரையாசிரியர் ஆகியோர் சேனாவரையர் பாடத்தையே ஏற்று மொழிந்தனர். இம்முறையில் மேலும் ஆறு வேறுபாடுகள் உள.[1]

சான்றாக 'இல்லெனமொழிப' (பொ. 14) என்ற இளம்பூரணர் பாடம் நச்சினார்க்கினியரால் 'இன்றென மொழிப' என்று கொள்ளப்

[1] சொ. நூ. 48, 110, 140, 171, 290, 392.

பட்டுள்ளது. இம்முறையில் பொருள் வேறுபாடின்றி அமைந் தனவாகக் கருதத்தக்க பாடங்கள் 67 உள.[1]

வேறுபொருள் — வேறுசொல்

இப்பகுதியில் குறிப்பிடப்பெறும் பாடங்கள் பொருள் நிலையில் மாற்றம் உடையன. பொருள் வேறுபாடுடைய இப்பாடங்களில் பொருத்தமுடைய பாடங்கள் எவை என்பதுபற்றிப் பின்னே ஆராயப் பெறும். எழுத்ததிகாரத்தில் புள்ளி மயங்கியல் நூற்பாவில் மக்க ளென்னும் பெயர் நிலைக் கிளவியும் (எ. 405) என வரும் தொடரில் **'பெயர்நிலைக் கிளவியும்'** என்ற இளம்பூரணர் பாடத்திற்கு மாற்றாக **'பெயர்ச்சொலிறுதி'** என்பதைப் பாடமாக நச்சினார்க்கினியர் கொண்டுள்ளார். கிளவி-இறுதி என வரும் இரு சொற்களும் சொல்லளவில் வேறு வேறு பொருளைக் குறிப்பன ஆயினும் அவற்றால் உணர்த்தப்படும் பொருளில் வேறுபாடு இல்லை. இளம் பூரணர் இத்தொடரின் பொருளைக் கூறுமிடத்து 'மக்கள் என்னும் பெயர்ச் சொல்லின் இறுதி' என விரித்து 'இறுதி' என்ற சொல்லையும் சேர்த்து மொழிவர். இளம்பூரணரின் உரைப்பகுதியில் கண்ட சொல்லமைப்பின் வழியே 'பெயர்ச் சொலிறுதி' என்ற பாடத்தை நச்சினார்க்கினியர் படைத்திருக்க வேண்டும் எனக் கருதலாம்.

குற்றியலுகரப் புணரியல் நூற்பாவில் 'எல்லா இறுதியும் உகர நிறையும்' (எ. 409) என்பது இளம்பூரணர் கொண்ட பாடத் தொடர். **'நிறையும்'** என்பதற்கு நச்சினார்க்கினியர் **'நிலையும்'** எனப் பாடங்கொள்கின்றார். 'அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிகளில் ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் குறுகாது ஒரு மாத்திரையுடன் நிறைய நிற்கும்' என இளம்பூரணர் தாம் கொண்ட

---

[1]பொ. நூ. 14, 24, 61, 68, 75, 76, 77, 106, 109, 117, 121, 134, 144, 144, 144, 145, 148, 148, 148, 149, 156, 175, 185, 191, 199, 201, 247, 253, 262, 279, 296, 302, 311, 314, 335, 357, 372, 378, 378, 430, 431, 437, 458, 460 460, 469, 476, 486 501, 504, 510, 534, 539, 613, 613, 628, 645, 658 ஆகிய 58ம் இவற்றில் இரட்டித்து அமையும் 9 இடங்களும் கூடி 67 இடங்கள்.

பாடத்திற்குப் பொருளுரைப்பர். நச்சினார்க்கினியர், அப்புணர்ச்சி களில் ஆறு ஈற்றுக் குற்றுகரமும் தன் அரை மாத்திரை பெற்று நிற்கும் எனப் பொருள் கொள்வர். பாடத்திற்கு ஏற்ப உரை யாசிரியர்களின் கருத்தும் உரையும் மாறுகின்றன. நச்சினார்க் கினியர் தன் கருத்துக்கேற்ப இங்குப் பாடத்தைத் திருத்திக் கொண்டுள்ளார் எனத் துணியலாம்.

குற்றியலுகரப் புணரியலின் மற்றொரு நூற்பாவில் 'ஒற்றும் **இறுதியும்'** கெடுதல் வேண்டும் (எ. 433) என்பது இளம்பூரணர் கொண்ட பாடத்தொடர். இதற்கு 'ஒற்றும் **உகரமும்** கெடுதல் வேண்டும்' என நச்சினார்க்கினியர் பாடம் கொண்டார்.

இந்நூற்பா பெருந்திசைப் பெயர்களோடு கோணத் திசைப் பெயர்கள் புணருங்கால் ஏற்படும் மாற்றங்களைக் கூறுவது. வடக்கு+கிழக்கு என்பது புணருங்கால வடக்கு என்பதன் இறுதியில் உள்ள 'கு' என்ற எழுத்துக்கெடும். இதனை க்+உ எனப் பிரித்துக்கொண்டு 'க்' என்ற ஒற்றும் 'உ' என்ற இறுதியும் கெடும் என்றார் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் ஒற்றும் உகரமும் எனப் பாடங்கொண்டு இதே கருத்தை மாற்றமின்றிக் கூறுவார். எனவே சொல் வகையால் பொருள் வேறுபாடுடைய இச்சொற்கள் குறிப்பிடும் கருத்து ஒன்றே.

சொல்லதிகாரத்தில் வேற்றுமை மயங்கியல் நூற்பாவில் **'கடிவரை இலவே'** (சொ. 91) என்றும், இடையியல் நூற்பாவில் **'எல்லே விளக்கம்'** (சொ. 264) என்றும், எச்சவியல் நூற்பாவில் **'சினைநிலைக் கிளவியின்'** (சொ. 443) என்றும், இளம்பூரணர் பாடங்கொண்டுள்ளார். இவற்றுக்குக் **'கடிநிலை இலவே'** என்றும், **'எல்லே இரக்கம்'** என்றும், **'திசை நிலைக் கிளவியின்'** என்றும் பிற உரையாசிரியர்கள் சொல்லால் மட்டுமன்றிப் பொருளாலும் மாற்றமுடைய பாடங்களைக் கொண்டுள்ளனர்.

இடையியல் நூற்பாவில் **'கண்ணிய நிலைத்தே'** (சொ. 253) என்றும், உரியியல் நூற்பாவில் **'மென்மையும் செய்யும்'** (சொ. 316) என்றும், இளம்பூரணரும் சேனவரையர் அல்லாத பிற உரையா சிரியர்களும் பாடங்கொண்டிருக்க, சேனாவரையர் மட்டும் முறையே 'கண்ணிய **நிலத்தே'** என்றும், **மென்மையும் ஆகும்'** என்றும்

பொருள் மாறுபாடுடைய பிற சொற்களைப் பாடங்களாகக் கொண்டுள்ளார். இம்முறையில் வேறு பொருள் தரும் வேறு சொற்கள் பயின்ற பாடவேறுபாடுகள் மேலும் 18 உள[1].

பொருளதிகாரத்திலும் ஒரு சொல் நின்ற இடத்தில் வேறு பொருள்தரும் சொல் நிற்றலால் எழும் பிரிவுக்குரிய வேறுபாடுகளும் மிகுதியாகவே உள்ளன. இவற்றை 1. இளம்பூரணரோடு பேராசிரியர் வேறுபடும் இடங்கள் 2. இளம்பூரணரோடு நச்சினார்க்கினியர் வேறுபடும் இடங்கள் 3. இருவரும் இளம்பூரணர் பாடங்களை ஏற்றலும், வேறுபடலுமாய இடங்கள் 4. பிற இடங்கள் என்னும் நான்கு பிரிவுகளில் காணலாம்.

மெய்ப்பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்ற நான்கியல்களுக்கு இளம்பூரணர், பேராசிரியர் உரைகள் உள. செய்யுளியல் நீங்கலாகப் பிற இயல்களில் இளம்பூரணர் கொண்ட பாடங்களிலிருந்து பேராசிரியர் பாடம் வேறுபடும் இடங்களின் மொத்த எண்ணிக்கை 27 ஆகும்[2]. சான்றுகக் **'கெழீஇய** நான்கே' (பொ. 258) என்பதற்கு **'ஊழி'** நான்கே' என்று வேறுபாடு உள்ளது. இளம்பூரணரின் பாடத்திற்குப் பேராசிரியர் கொள்ளும் பாடம் இது.

பொருளதிகாரத்தின் முற்பகுதியான அகம், புறம், களவு, கற்பு, பொருளியல்களுக்கு இளம்பூரணர் உரையும், நச்சினார்க்கினியர் உரையும் உள. செய்யுளியலுக்கு இருவர் உரையோடு பேராசிரியர் உரையும் உண்டு. செய்யுளியல் பகுதியை விடுத்து எஞ்சிய முதல் ஐந்தியல்களில் இளம்பூரணர் கொண்ட பாடங்களிலிருந்து நச்சினார்க்கினியர் வேறுபடும் இடங்கள் 60 ஆகும். சான்றுக **'வைகறை** விடியல்' (பொ. 9) என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். இதற்கு நச்சினார்க்கினியர் **'வைகுறு**விடியல்'

---

[1]சொ. நூ. 86, 93, 160, 171, 209, 236, 276, 318, 398, 398, 402, 413, 419, 419, 421, 422, 426, 445

[2]. பொ. நூ. 254, 258, 268, 268, 282, 292, 308, 309, 546, 576, 588, 620, 628, 630, 631, 633, 633, 639, 645, 645, 645, 653, 656, 656, 656, 656, 656.

என்று பாடங்கொள்கிறார். இம் முறையிலேயே பொருள் வேறுபட்ட நிலையில் 60 இடங்களும் உள[1].

பொருளதிகாரத்தில் இளம்பூரணரோடு பேராசிரியர் வேறுபடும் இடங்கள் 27 மட்டுமே. ஆனால் நச்சினார்க்கினியர் வேறுபடும் இடங்கள் 60 என மிகுதியாக அமைந்துள்ளன. நச்சினார்க்கினியர் இளம்பூரணரிடமிருந்து வேறுபடும் இடங்களில் அமைந்த சில பாடங்கள் குறிப்பிடத்தக்கவை.

'தோன்றலும்' (13), 'கழிதலும்' (17) 'இரங்கலும்' (17) என்ற இளம்பூரணரின் ஒரே அமைப்புடைய பாடங்களில் 'தோன்றினும்', 'கழியினும்', 'இரங்கினும்' என்று நச்சினார்க்கினியரும் ஒரே அமைப்புடைய வேறுபாடுகளைக் கொண்டுள்ளார்.

பிரிந்தோன் குறுகி-பரிந்தோன் குறுகி (44) தொல்லெயிற்று -தொல் லெயிற்கு (60) மாலை நிலையும்-பாலை நிலையும், (77) உறலருங்குரைமையின்-உறலருங்குன்மையின் (144) புதல்வனைத் தேராது-புதல்வனை நேராது (148) விளையும்-விளைவும் 168) என்பன தோற்ற ஒப்புமையால் எழுந்த பாடங்களாகவும் கொள்ளத்தக்க இயல்புடையவை ஆயினும் பொருள் வேறுபடும் சிறப்பு நோக்கி இவை இப்பிரிவின்கண் அடக்கப்பட்டன.

மொழிந்தது கூறி-ஒழிந்தது கூறி (42) கூட்டிய குடிநிலை -கூட்டிய துடிநிலை (62) தாங்கிய பெருமையம்-தாங்கிய எருமையும் (72) பெயர்த்த மனைவி பேஎத்த மனைவி (77) உணர்ப்புவயின்-புணர்ப்புவயின் (148) என வருவனவும் ஒலி ஒப்புமையால் நிகழ்ந்த பாட வேறுபாடுகளாகக் கருதத்தக்க இயல்பு பெற்றிருப்பினும், பொருள் வேறுபாட்டு நோக்கில் இப்பிரிவின்கண் அடக்கிக் கொள்ளப்பட்டன.

---

1. பொ. நூ. 9, 13, 17, 17, 42, 42, 43, 44, 44, 51, 56, 62, 63, 68, 69, 72, 72, 75, 77, 77, 77, 77, 88, 88, 96, 105, 105, 112, 113, 128, 144, 144, 144 144, 145, 148, 148 148, 149, 149, 149, 151, 151, 161, 166, 166, 167, 167, 168, 170, 170, 174, 175, 193. 199, 214, 225, 234, 240.

செய்யுளியலுக்கு இளம்பூரணர், பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகிய மூவர் உரைகளும் உள. வேறுபொருள் தரும் வேறு சொல்லாட்சியில் இளம்பூரணரொடு மற்ற இருவரும் ஒருங்கு மாறுபடும் இடங்கள் 33 உள. சான்றாக, **பொருளவகை** (பொ.310) என்ற பாடத்தை இளம்பூரணர் கொண்டார். ஆனால் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் **'கூற்றுவகை'** எனப் பாடங் கொண்டார். **மாத்திரை வகையும்** (பொ.311) என்ற இளம்பூரணர் பாடம் **மாத்திரை அளவும்** எனப் பேராசிரியரிடத்தும், நச்சினார்க்கினியரிடத்தும் மாறியுள்ளது இம்முறையில் செய்யுளியலில் இளம்பூரணரிடமிருந்து பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் மாறுபட்டு ஒரே பாடங்கொள்ளும் இடங்கள் 33 உள.[1]

செய்யுளியலில் இளம்பூரணர் பாடங்களில் சிலவற்றைப் பேராசிரியர் ஏற்க, நச்சினார்க்கினியர் மட்டும் மாறுபடும் இடங்களும், இளம்பூரணர் பாடங்களில் சிலவற்றை நச்சினார்க்கினியர் ஏற்க, பேராசிரியர் மட்டும் மாறுபடும் இடங்களும், உரையாசிரியர் மூவரும் தனித்தனியே தத்தம் கருத்துக்கேற்பப் பாடம் கொள்ளும் இடங்களும் உள. இவை மூன்று பகுதிகளும் கீழே தொகுத்து மொழியப்பட்டுள.

எண்	பாடம்	நூற்பா எண்	வேறுபாடு
அ.	**இளம். பேரா-நச்சி வேறுபடல்**		
	தான்நடை இன்றே	(329)	**தானைடவின்றே**
	செவியறிவாயுறை	(462)	**புறநிலைவாயுறை**
	புறநிலை என்றிவை	(462)	**செவியறி**வென்றிவை
	இவை முதலாகிய	(488)	**இரு** முதலாகிய
	மொழியப்**படுதல்**	(492)	மொழியப்**படுவது**
	மொழிய	(514)	**அறிய**
	தேர்தல் வேண்டாது	(541)	**ஓதல்** வேண்டாது

[1]பொ. நூ, 310, 311, 332, 347, 349, 353, 366, 368, 368, 385, 390, 395, 401, 401, 401, 407, 425, 433, 433, 433, 440, 457, 462, 468, 475, 480, 482, 487, 491, 505, 517, 540, 547.

ஆ. இளம். பேரா - நச்சி வேறுபடல்

முவைந்து	*(347)*	மூவாறு
என மொழிதல்	*(403)*	என மொழிப
பரிபாடல்லே	*(464)*	புரிபாட்டெல்லே
மென்மையும்	*(479)*	எண்மையும்
எனவிருவீற்றும்	*(499)*	எனவிரு கூற்றும்
தெரிந்தனர் உரை	*(503)*	தெரிந்தனர் உள்ள
இதன் மாறெண்ணும்	*(504)*	இதனுனெண்ணும்

இ. மூவரும் தனித்தனியே பாடம் கொள்ளல்

இறினும் (இளம்)	*(322)*	உரினும் (பேரா), வரினும் (நச்சி)
மூவசை என்ப (இளம்)	*(328)*	மூவசையானே (பேரா) மூவசையான (நச்சி)
உயர்வும் பிறவும் பெறுமே (இளம்)	*(438)*	உயர்பென்றேறவும் பெறுமே (பேரா) உயர்பு ஏறவும் பெறுமே (நச்சி)
திரிபின்றி முடிவது (இளம்)	*(456)*	திரிபின்றி வருவது (பேரா) திரிவின்றி வருவது (நச்சி)
மெய் பெறும் அவையே (இளம்)	*(489)*	மெய் பெறுவகையே (பேரா) மெய் பெற சுவையே (நச்சி)
சீர்புணேந்தியாப்பின் (இளம்)	*(536)*	தாயபனுவலோடு (பேரா) தாயபனுவலின் (நச்சி)
ஆங்கவண் மொழியின் (இளம்)	*(543)*	ஆங்கன மொழுகின் (பேரா) ஆங்ஙனமொழுகின் (நச்சி)
வருவன உளவெனும் (இளம்)	*(544)*	வருவ உளவெனினும் (பேரா) வருபவுள வேனும் (நச்சி)

பொருள் வேறுபாடு என்னும் பகுப்பில் அடங்கும் இரு பிரிவுகளில் அமையும் மொத்தப் பாட வேறுபாடுகள் 235 ஆகும். இவற்றுள் எழுத்ததிகாரத்தில் அமைந்தவை 5 மட்டும். சொல்லதிகாரத்தில் 31ம், பொருளதிகாரத்தில் 199ம் உள.

7. இலக்கண வேறுபாடுகள்

எழுத்து, சொல், பொருள் என்ற பகுப்புக்களைவிட வடிவ அமைப்பிலும், பொருள் நிலையிலும் பெரும்பான்மை மாற்றம் பெற்று இலக்கணச் சார்பு நிலையில் அமைவன இலக்கண வேறுபாடுகள்.

இப்பகுப்பினுள் அடங்கும் பிரிவுகள் பலவாகும். குறில்-நெடில் தொடர்புடையவை, ஒருமை-பன்மை அமைப்பைச் சார்ந்தவை. இனவெழுத்து, வல்லினம் இரட்டித்தல், சுட்டுச்சொல், உடம்படு மெய், அளபெடை, சாரியை, வேற்றுமை உருபு, புணர்ச்சி, தொடர்ப் பிரிப்பு, இடைச்சொல், ஆக்கக்கிளவி, எச்சப் பொருண்மை, சொற் சீரடி, போலி, பகர-வகர மயக்கம், பால்விகுதி, கால இடைநிலை, விகாரம் முதலிய பல இலக்கணக்கூறுகளைச் சார்ந்தனவாய்ப்பகுக்கத் தக்க வகையில் பல வேறுபாடுகள் உள. இவற்றை இவ்வரிசை முறையில் காண்போம்.

7. 1. குறில்-நெடில்

குறிலுக்கும் நெடிலுக்கும் ஏடுகளில் மிகுதியும் தொடர்பு உண்டு. குற்றெழுத்துப் பயின்ற பாடங்களை நெட்டெழுத்தாக மாற்றிக் கொள்ளுதல்; நெட்டெழுத்துப் பயின்ற பாடங்களைக் குற்றெழுத்தாக மாற்றிக் கொள்ளுதல்; நெட்டெழுத்துப் பயின்ற பாடங்களை இரு குறிலாக்கி அமைத்தல் ஆகிய மூன்று உட்பிரிவுகள் இதன் கண் அடங்கும்.

7. 1. 1. குறில்-நெடிலாதல்

எழுத்ததிகாரத்தில் உயிர் மயங்கியலில் ஏகாரவீற்று இடைச் சொற்களுக்கு முடிபுகூறும் நூற்பாவில் **'மாறுகொள் எச்சமும்'** (எ. 276) என்ற தொடர் இளம்பூரணர் கொண்ட பாடமாக உள்ளது. இதில் அமைந்த **'கொள்'** என்னும் சொல்லில் முதலில் அமைந்த குறில் நச்சினார்க்கினியரால் நெடிலாக மாற்றிக்கொள்ளப் பட்டுள்ளது. 'மாறு **கோள்** எச்சமும்' என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம்.

ஏடுகளில் இருந்து பெயர்க்குங்கால் குறிலாகவும் நெடிலாகவும் எழுதுங்கால் இருவகையாகவும் இப்பாடத்தை எழுதலாம். எனினும் இப்பகுதிக்கு **'மாறுபாடு கோடலை யுடைய எச்சப் பொருண்மை'** என்பது இளம்பூரணர் கூறும் உரைத்தொடர். **'மாறுகோடலையுடைய** எச்சப் பொருண்மை' என்பது நச்சினார்க்கினியர் கூறும் உரைத் தொடர். சொல்லதிகாரத்தில்,

> காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
> ஒப்பின் புகழின் பழியின் என்று (சொ. 72)

எனவரும் வேற்றுமையியல் நூற்பாப் பகுதியில் **ஓப்பின், ஒப்பின்** எனவரும் ஒத்தசொற்கள் உள்ளன. இவற்றுள் முதலில் அமைந் ததை நெட்டெழுத்தாகவும் பின்னே உள்ளதைக் குற்றெழுத்தாகவும் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் கொண்டுள்ளனர். பிறஉரை யாசிரியர்கள் முன்னுள்ளதைக் குறிலாகவும் பின்னுள்ளதை நெடிலாகவும் கொண்டுள்ளனர்.

ஒப்புதல், ஓத்தல் என்ற அச்சொற்களின் இரு பொருளும் உரையாசிரியர்களின் பாட வேறுபாட்டால் முன்பின்னாக மாறியுள்ளன.

எனினும், தனித்துக் காணுங்கால் **ஓப்பின்** என்பதற்கு **ஒப்பின்** என்பதும் **ஒப்பின்** என்பதற்கு **ஓப்பின்** என்பதும் வேறுபாடுகளாக அமைந்தன என்பதும் அறியத்தக்கது.

பொருளதிகாரத்தில் புறத்திணையியல் நூற்பாவில் **'கல்கோள்'** (பொ. 63) என்றும், பொருளியல் நூற்பாவில் **'அல்லவாயினும்'** (பொ. 217) என்றும் வரும் இளம்பூரணர் கொண்ட குற்றெழுத்துப் பயின்ற பாடங்களை முறையே **'கால்கோள்' 'அல்லாவாயினும்'** என நச்சினார்க்கினியர் கொண்டுள்ளார்.

மெய்ப்பாட்டியலில் **'உடுத்தலொடு'** (பொ. 258) என்ற இளம் பூரணர் பாடம் **'உடுத்தலோடு'** எனப் பேராசிரியரால் கூறப்பட்டது. செய்யுளியலில் **'சார்பொடு'** (பொ. 487) எனப் பேராசிரியரின் பாடம். **'சார் போடு'** என நச்சினார்க்கினியரால் மொழியப்பட்டது. செய்யுளியலில் **அஃ தன்றென்ப** (பொ. 387) என்ற இளம்பூரணர் பாடம் **'அஃ தான்றென்ப'** எனப் பேராசிரியரால் உரைக்கப்பட்டது

மரபியலில் 'பிணவும்' (பொ. 606)என்ற இளம்பூரணர் பாடம் பேராசிரியரால் 'பிணுவும்' எனப்பட்டது.

7. 1. 2. நெடில் குறிலாதல்

குற்றெழுத்தை நெட்டெழுத்தாக மாற்றிப் பாடங்கொண்டது போல, நெட்டெழுத்தாகக் கொண்ட எழுத்தைக் குற்றெழுத்தாக மாற்றிக்கொண்ட இடமும் உண்டு.

எழுத்ததிகாரத்தில் புள்ளிமயங்கியலில் 'மெல்லெழுத்தியையின் இறுதியோடுறழும் (எ. 343) என்பது இளம்பூரணர் பாடம். இதற்கு 'இறுதியொடுறழும்' என நச்சினார்க்கினியர் பாடங்கொண்ட இடமும் உண்டு.

'மூன்றுருகுவதே ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி'[1] எனத் தொல்காப்பியர் 'ஒடு' என்னும் வேற்றுமை உருபைச் சுட்டுவதால் தொல்காப்பியர் கருத்துக்கியைய இங்கு 'ஓடு' உருபு 'ஒடு' உருவாக்கப்பட்டு நச்சினார்க்கினியரால் பாடங்கொள்ளப்பட்டிருக்கலாம்.

பொருளதிகாரத்தில் களவியலில் 'விளுவலும்' (பொ. 113) என்றும், பொருளியலில், 'ஏனைப்பாற்கண்ணும்' (பொ.218) என்றும் வரும் இளம்பூரணர் பாடங்களைக் குற்றெழுத்துப் பயின்ற நிலையில் 'வினவலும்' 'எனைப்பாற்கண்ணும்' என்ற பாடங்களாக நச்சினார்க்கினியர் கொண்டார்.

செய்யுளியலில் 'வண்ண மோடு' (பொ. 310) உகரமோடு (பொ. 313) 'கிழத்தியோடு' (பொ. 490) என வருவன இளம்பூரணராலும் தொடர்ந்து பேராசிரியராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டவை. இவற்வை 'வண்ணமொடு' 'உகரமொடு' 'கிழத்தியொடு' எனக்கொண்டுள்ளார் நச்சினார்க்கினியர்.

7. 1. 3. நெடில் இருகுறிலாதல்

நெட்டெழுத்து இருகுறிலாதலும், இருகுறில் நெட்டெழுத்தாதலும் இலக்கணமுறை. நேமம்-நியமம் என்றும், பகுதி - பாதி

[1] சொ. நூ 73

என்றும் கூறப்படும் வழக்கு உண்டு. இம்முறையைப் பின்பற்றி பாடங்களும் சில வேறுபட்டு அமைகின்றன. எழுத்ததிகாரத்தில் உயிர்மயங்கியலில் '**வாழிய வென்னும் சேயென் கிளவி**' (எ. 212) என வருவது இளம்பூரணர் கொண்ட பாடம். "**சேயென் கிளவி** என்றதனால்... என வரும் உரைவிளக்கத் தொடர் இளம்பூரணர் கொண்ட இப்பாடத்தை உறுதி செய்கின்றது. 'சேயென் கிளவி' என்பதற்கு செம்மைய என்று உணர்த்தும் சொல் எனப் பொருள் கொள்கின்றார் இளம்பூரணர்.

நச்சினார்க்கினியர் '**சேயென் கிளவி**' என்பதற்குச் '**செயவென் கிளவி**' எனப் பாடங்கொண்டு 'செயவென் எச்சக் கிளவி' என் உரை கூறியுள்ளார்.

வாழிய வென்னும் சேயென் கிளவி என்பதற்குச் சான்று காட்டும் இளம்பூரணர் 'வாழி கொற்றா' என்பதைச் சுட்டுவர். இதில் 'வாழி' என்னும் சொல்லைச் சேய்மைப் பொருள் சுட்டுவது என்று இளம்பூரணர் கூறுவதுபோல் கொள்ளாமல் அதனைச் செய வென்னும் வாய்பாட்டுச் சொல் எனக் குறிப்பிடுவதே பொருத்தம் என்று கருதிச் '**செயவென்கிளவி**' என்ற **வேறுபாட்டை** நச்சினார்க் கினியர் இங்குக்காட்டியிருக்கலாம். இவ்விரு பாடங்களுக்கும் பொருள் வேறுபாடு உண்டு.

முன்நின்ற நெட்டெழுத்துப் பொருள் மாற்றமின்றியும் இரு குறிலாக மாறும் இலக்கண மரபை அடியொற்றிப் பொருளதிகாரச் செய்யுளியலில் 'நாற் **பேரெல்லை**' (பொ. 384) என வரும் இளம் பூரணர் பாடத்தைப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் '**நாற்பெய ரெல்லை**' எனக் கொண்டுள்ளனர்.

நெடில் இருகுறிலாக மாறி அமையும் இவ்வகை வேறுபாடு சொல்லதிகாரத்தில் இல்லை.

7. 2. ஒருமையும் பன்மையும்

ஏடுகளில் **ஒருவற்கு - ஒருவர்க்கு** என்பதுபோல் ஒருமை பன்மை மயக்கம் ஏற்படும் வாய்ப்பு உண்டு. இத்தகைய வேறு-பாடுகள் சிலவற்றிற்கு ஒலி ஒப்புமையும் காரணம். இவற்றிடையே சில இடங்களில் பொருள் வேறுபாடும் உண்டு. இவற்றுள் தம்

கருத்துக்கு ஏற்ற வகையில் அமைந்தவற்றை உரையாசிரியர்கள் தங்கள் பாடமாகவும் கொண்டுள்ளனர்.

7.2. ஒருமை பன்மையாதல்

சொல்லதிகாரத்தில் இம்முறையில் ஒப்பத்தோன்றும் ஒருவற்கும் ஒன்றற்கும் (சொ. 218) என்று வினையியல் நூற்பாத் தொடரில் '**ஒருவற்கு**' என இளம்பூரணர் கொண்ட பாடம், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகியோரால் **ஒருவர்க்கும்** எனக் கொள்ளப்பட்டுள்ளது. கல்லாடர் மட்டும் இளம்பூரணரைப் பின்பற்றினார்.

பெயரியல் நூற்பாத் தொடரான 'ஒன்றற்கும் ஒருவர்க்கும் ஒன்றிய நிலையே' (சொ. 180) என்பதில் இளம்பூரணர் '**ஒருவர்க்கும்** எனக் கொண்ட பன்மைச் சொல் நச்சினார்க்கினியத்திலும், கல்லாடர் உரையிலும் '**ஒருவற்கும்**' என ஒருமைச் சொல்லாகப் பயின்றுள்ளது. சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் இங்கு இளம்பூரணரைப் பின்பற்றியுள்ளனர்.

இடையியல் நூற்பாவில் '**இயற்கைய**' (சொ. 267) எனப் பன்மை முடிபாக, இளம்பூரணரும் அவரைத் தொடர்ந்து சேனாவரையர், தெய்வச்சிலையாரும் பாடம் கொள்ள '**இயற்கைத்து**' என ஒருமை முடிபாக நச்சினார்க்கினியர் பாடங்கொள்ளுவர்.

எச்சவியலில் சொல் அளவல்லது எஞ்சுதல் இலவே (சொ. 435) என்பதில் '**இலவே**' என இளம்பூரணர் கொண்ட பன்மைச் சொற் பாடத்தைச் சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், மூவரும் '**இன்றே**' என ஒருமைச் சொற்பாடமாகக் கொண்டுள்ளனர்.

மேலும் எச்சவியலிலேயே பிறிதொரு நூற்பாத் தொடராக அமைந்த '**ஆகிடன் உடைத்தே**' (சொ. 438) என்ற இளம்பூரணர் பாடத்தைச் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும், நச்சினார்க்கினியரும் **ஆகிடன் உடைய**' என்று கொண்டுள்ளனர்.

இங்ஙனம் உரையாசிரியர்கள் கொண்ட பாடங்களில் அவரவர் கருத்துக்கேற்ப ஒருமையும் பன்மையுமாக மயங்கி வருகின்றன.

பொருளதிகாரத்திலும் இளம்பூரணர் ஒருமையாகக் கொண்ட பாடங்களைப் பன்மையாகப் பின்னுள்ள உரையாசிரியர் கொண்டிருதலால் பாடங்கள் வேறுபட்டுள்ளன.

அகத்திணையியலில் '**உரியதாகும்**' (பொ. 13) என்றும், கற்பியலில், '**காமக்கிழத்தி**' (பொ. 245) என்றும், செய்யுளியலில் '**இல்லாது**' (பொ. 334) 'அம்மைதானே' (பொ. 536) என்றும் மரபியலில் 'அது சொல்லப்படுமே' (பொ. 564) என்றும் வருவன இளம்பூரணர் கொண்ட ஒருமைப்பாடங்கள்.

இவற்றை முறையே '**உரியவாகும்**' '**காமக்கிழத்தியர்**' '**இல்லா**' 'அம்மை **தாமே**' '**அவை** சொல்லப்படுமே' என்று பன்மைப் பாடங்களாகப் பிற உரையாசிரியர் கொண்டுள்ளனர். 'அம்மைதானே' என்ற இளம்பூரணர் பாடத்தையே பேராசிரியரும் ஏற்றுள்ளார் ஒருமை பன்மையாக மாறும் இவ்வகைப்பிரிவு எழுத்ததிகாரத்தில் இல்லை.

7.2.2. பன்மை ஒருமையாதல்

பொருளதிகாரத்தில் புறத்திணையியலில் '**இவர்ந்த மேலோர்**' (பொ. 69) களவியலில் '**உருஅ**' (பொ. 98) **பாங்கர் நிமித்தம்**' (பொ. 101) பொருளியலில் 'வருவன**தாமே**' (பொ. 218) செய்யுளியலில் '**இலவே**' (பொ. 367) '**மரபின**' என்ப (பொ. 439) 'வண்ண**ந்தரமே**' (பொ. 513) என வருவன இளம்பூரணர் கொண்ட பாடங்கள்.

பன்மைத் தன்மையுடையவாய் அமைந்த இப்பாடங்கள் முறையே '**இவர்ந்தோன்**' '**உருஅது**' '**பாங்கன்**' '**வருவகைதானே**' '**இன்றே**' '**மரபினது என்ப**' '**வண்ணந்தானே**' என ஒருமைத் தன்மைச்சொற்களாய்ப் பிற்காலத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

இவற்றுள் புறம், களவு, பொருளியல் வேறுபாடுகள் நச்சினார்க்கினியர் கொண்டவை. செய்யுளியலில் அமையும் மூன்று வேறுபாடுகள் பேராசிரியர், நச்சினார்க்கினியர் இருவரும் கொண்டவை.

எழுத்து, சொல் பகுதிகளில் இவ்வகை வேறுபாடுகள் இல.

7.4. இன எழுத்து மயக்கம்

ஒருமை-பன்மைச் சொற்கள் போல வல்லினம், மெல்லினம் ஆகிய இன எழுத்துக்களும் ஒன்றுக்குப்பதில் பிறிதொன்று மயங்கி வர அதனாலும் பாடங்கள் வேறுபட்டுள்ளன.

சொல்லதிகார எச்சவியலில் 'குறைத்தனவாயினும்' (சொ. 447) எனவரும் வல்லொற்றுப் பாடத்தை இளம்பூரணரும் அவரைப் பின்பற்றிச் சேனாவரையர், நச்சினார்க்கினியரும் கொண்டுள்ளனர். ஆனால் தெய்வச்சிலையார் இதனைக் 'குறைந்தன வாயினும்' என மெல்லொற்றுப் பாடமாகக் கொண்டுள்ளார். வல்லொற்றும், மெல் லொற்றும் பயின்ற இப்பாடத்தில் பிறவினை, தன்வினை என வினைத் தன்மையே மாற்றம் பெறும் நிலையில் பொருள் மாற்றமும் அமைந் துள்ளது.

பொருளதிகாரத்திலும் வல்லினமும் மெல்லினமும் மயங்கி வந்த பாட வேறுபாடுகள் உள. த-ந, க-ங, ற-ன என்பன மயங்கிப் பாட வேறுபாடுகள் அமைந்துள.

புறத்திணையியலில் 'ஒன்றொடு புணர்த்து' (பொ.75) என்றும், உவமையியலில் 'புணர்த்தன' (பொ. 278) என்றும், செய்யுளியலில் 'புணர்த்தும்' (பொ. 320) என்றும் தகர வல்லொற்றுப் பயின்ற இளம்பூரணர் பாடங்கள் முறையே 'ஒன்றொடு புணர்ந்து', 'புணர்ந்தன' 'புணர்ந்தும்' என நகர மெல்லொற்றுப் பாடங்களாக மாறியுள்ளன.

'சிதைந்தாகாது' (பொ. 315) என்ற செய்யுளியல் நூற்பா வில் உள்ள இளம்பூரணர் பாடம் 'சிதைத்தாகாது' என மாறி யிருப்பதில் மெல்லொற்று இன வல்லொற்றாய் மாறியிருத்தல் காணலாம்.

புறத்திணையியலில் 'வழக்கியல்' (பொ. 80) என வரும் இளம பூரணர் பாடம் 'வழங்கியல்' என்றும், செய்யுளியலில் 'அடங்காது' (பொ. 543) என வரும் இளம்பூரணர் பாடம் 'அடக்காது' என்றும் மாறியுள்ளன. இங்கு முறையே க்-ங், ங்-க், என இன எழுத்து மயக்கம் அமைந்துள்ளது.

செய்யுளியல் நூற்பாவில் இளம்பூரணரின், **'செவியுறுத் தன்றே'** (பொ.419) என்பது **செவியுறுத்தற்றே** என நச்சினார்க் கினியரால் கூறப்பட்டுள்ளது.

7. 4. வல்லினம் இரட்டித்தல்:

வல்லின எழுத்துக்கள் இரட்டிக்கும் தன்மையன. இதனால் சில இடங்களில் சொல்லின் வினைத்தன்மையும் பொருள் நிலையும் மாற்றம் பெறும். எழுத்ததிகாரத்தில் புணரியல் முதல் நூற்பாவில் 'அறுநான் **கீறொடு** நெறி நின்றியலும்' (எ. 104) என்பது இளம்பூரணர் பாடம் கொண்ட தொடர். 'அறுநான் **கீற்றொடு** நெறி நின்றியலும்' என்பது நச்சினார்க்கினியர் கொண்ட பாடம். இளம்பூரணர் பாடத்தில் **'கீறொடு'** என அமைந்த சொல் நச்சினார்க்கினியர் பாடத்தில் **'கீற்றொடு'** என வல்லினம் இரட்டித்த நிலையில் அமைந்துள்ளது.

நச்சினார்க்கினியர்கொள்ளும் இப்பாடத்திற்கு இளம்பூரண ரின் உரைவிளக்கப் பகுதியே நிலைக்களமாக அமைந்தது. ஈற்றொடு என்பது விகாரத்தால் தொக்கது என இப்பகுதியில் இளம்பூரணர் விளக்கம் கூறுகிறார். இவ்விளக்கத்தில் பயின்ற 'ஈற்றொடு' என்ற விகாரத்தால் தொகாது அமைந்த சொல்லை நச்சினார்க்கினியர் பாடமாகக் கொண்டுள்ளார். இவ்விரு சொற்களிடையும் பொருள் வேறுபாடில்லை.

பொருளதிகாரத்தில் க், த் என்ற இரு வல்லெழுத்துக்கள் இரட்டித்து வருவனவாக அமைந்துள.

'பின்முறை **ஆகிய**' (பொ. 170) என்ற இளம்பூரணர் பாடம் 'பின்முறை **ஆக்கிய**' என்றும், 'சிறப்பின் **ஆகிய**' (பொ. 239) என்ற இளம்பூரணர் பாடம் 'சிறப்பின் **ஆக்கிய**' என்றும் இரட்டித்து அமைந்ததுள்ளன.

'பெயர்தலின்' (பொ. 44) 'மதியுடம்படுதல்' (பொ. 125) 'வழக்கு வழிப்படுதல்' (பொ.213) என்ற இளம்பூரணர் பாடங்கள் நச்சினார்க்கினியரால் முறையே, 'பெயர்த்தலின்' 'மதியுடம்படுத் தல்' 'வழக்கு வழிபடுத்தல்' எனத் தகர வொற்றுஇரட்டித்த நிலையில் பாடங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. இத்தகைய பாடவகை சொல் லதிகாரப் பகுதியில் அமையவில்லை.

7. 5. சுட்டெழுத்து

அ, இ, உ என்பன சுட்டெழுத்துக்கள். முன்புள்ள பாடங்களில் இல்லாமல் பின்னுள்ள பாடங்களில் சுட்டெழுத்துச் சேர்க்கை, முன்புள்ள சுட்டெழுத்துக்கள் பின்னுள்ள பாடங்களில் விடுபடல், ஒரு சுட்டெழுத்துப் பிறிதொரு சுட்டெழுத்தாக மாறுதல், செய்யுளுக்குரிய திரிபை ஏற்று வருதல் எனச் சுட்டெழுத்துத் தொடர்புடைய பாடங்கள் நான்கு வகையினவாக அமைந்துள.

7. 5. 1. சுட்டெழுத்துச் சேர்க்கை

பொருளதிகாரத்தில் பொருளியல் நூற்பாவில் **'ஏழுவகைய'** (பொ. 204) என்றும், மரபியல் நூற்பாவில் **'முடிய வந்த வழக்கின்'** (பொ. 613) என்றும் வருவன இளம்பூரணர் கொண்ட பாடங்கள்.

'ஏழுவகைய' என்பதற்கு **'அவ்வெழு வகைய'** என நச்சினார்க்கினியர் பாடங்கொண்டுள்ளார். அகரச் சுட்டுச்சேர்க்கையினால் ஏழு எழுவாக, நெடில் குறிலாகியுள்ளது.

'முடியவந்த **வழக்கின்'** என்பதற்கு 'முடியவந்த **அவ்வழக்கு'** எனப் பேராசிரியர் பாடம் கொண்டுள்ளார். வழக்குக்கு முன்னர் அகரச் சுட்டுச் சேர்க்கையால் நீண்ட ஒலியை ஈடுகட்ட 'வழக்கு' என்பதன் பின்னர்ப் பயின்ற 'இன்' உருபு பேராசிரியர் பாடத்தில் விடுபட்டது.

இவை அகரச் சுட்டெழுத்துச் சேர்க்கையால் நிகழும் பாடவேறுபாடுகள்.

7. 5. 2. சுட்டுவிடுபடல்

சுட்டெழுத்துக்களை எழுதாமல் விட்டுவிட நேருங்கால் சுட்டு விடுபட்ட சொல் வேறொரு பாடமாக உருக்கொள்கிறது. சொல்லதிகார எச்சவியலில் **'அம்மூவிடத்தான்** வினையினும் குறிப்பினும்' (சொ. 421) என்னும் நூற்பாத்தொடர் சுட்டெழுத்துடன் இணைந்துள்ளது. இளம்பூரணர் கொண்ட இப்பாடத்தைச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் ஏற்கின்றனர். ஆனால் தெய்வச்சிலையார் சுட்டு விடுபட்ட சொல்லைப் பாடமாகக்கொண்டார். சுட்டெழுத்து விடுபட்டமையால் ஏற்பட்ட ஓசை இழப்பை நிறைவு செய்ய னகர

ஒற்று உயிர்மெய்யாகவும் கொள்ளப்பட்டது. எனவே '**மூவிடத்தான வினையினும் குறிப்பினும்**' என்பது பாடமாக அமைந்தது. எழுத்து பொருள் பகுதிகளில் இவ்வகைப் பாடம் இல்லை.

7. 5. 3. சுட்டெழுத்து மாற்றம்

பொருளதிகாரம் அகத்திணையியலில் 'அவற்றின் நிமித்தம் (பொ. 16) என்ற இளம்பூரணர் பாடம் '**இவற்றின் நிமித்தம்**' என நச்சினார்க்கினியரிடம் மாறுகிறது. 'என்றிச் சிறப்புடை' (பொ. 97) எனக் களவியல் நூற்பாவில் இளம்பூரணர் கொண்ட பாடம், 'என்றச் சிறப்புடைய' என நச்சினார்க்கினியத்தில் மாறியுள்ளது.

'அவையும் உளவே' (பொ.256) என மெய்ப்பாட்டியல் நூற்பாவில் இளம்பூரணர் கொள்ளும் தொடர் 'இவையும் உளவே' எனப் பேராசிரியரால் கொள்ளப்பட்டது.

'**அவையென மொழிப**' (பொ.535) எனச் செய்யுளியல் நூற்பாவில் அமைந்த இளம்பூரணர் பாடம், 'இவையென மொழிப' எனப் பேராசிரியரிடத்தும் நச்சினார்க்கினியரிடத்தும் மாற்றம் அடைந்துள்ளது.

இங்ஙனம் சுட்டெத்துக்களின் மாற்றம் பாடம் வேறுபடக் களமாக அமைந்துள்ளது.

எழுத்து, சொல் பகுதிகளில் இம்மாற்றம் இல்லை.

7. 5. 4. சுட்டுச்சொல்-செய்யுள் திரிபு

உயிர் மயங்கியலில் ஐகார ஈற்று மரப்பெயர்களுக்கு முடிவு கூறும் நூற்பாவில் '**அவை முப்பெயரும்** சேமர இயல' (எ. 286) எனப் பாடங்கொண்டுள்ளார் இளம்பூரணர். நூற்பாவில் முதல் அடி 'விசை மரக் கிளவியும் ஞெமையும் நமையும்' என்றிருப்பதற்கு இயைய '**அவை முப்பெயரும்**' எனத் தொல்காப்பியர் கூறியிருத்தல் வேண்டும் என்பது இளம்பூரணர் கருத்தாகலாம்.

நச்சினார்க்கினியர் 'அவை முப்பெயரும்' என்பதற்கு '**ஆ முப்பெயரும்**' என்று பாடங்கொண்டுள்ளார். முப்பெயரும் என்பது புணர்ச்சியில் அம்முப்பெயரும் என்ருகி. பின்னர் 'நீட வருதல் செய்யுளுள் உரித்தே'[1] என்ற நூற்பா விதிப்படி 'ஆ முப்பெயரும்'

---

[1] எ. நூ. 209

என்றுயது. இவ்விரு சொற்களிடையேயும் பொருள் வேறுபாடில்லை. நூற்பா, செய்யுளமைப்புடனும் சொற்செறிவுடனும் அமைதல் வேண்டும் என்ற கருத்தினுல் இப்பாடம் தோற்றுவிக்கப் பட்டதாகக் கருதலாம்.

7.6. உடம்படு மெய்

தொல்காப்பியர் காலத்தில் உயிரீறு உயிர் முதன்மொழியோடு புணருங்கால் உடம்படு மெய் வருதல் வேண்டும் என்ற வரையறை வலியுறுத்தப்படவில்லை.

> "எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
> உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்"[1]

எனவரும் உடம்படு மெய்பற்றிய நூற்பா இக்கருத்தை விளக்கும். இந்நூற்பாவின் விளக்கத்தில் 'வரையார் என்றதனுல் உடம்படு மெய் கோடல் ஒருதலை அன்றென்பது கொள்ளப்படும்' என இளம்பூரணரும் நச்சினுர்க்கினியரும் கூறும் தொடராலும் இக்கருத்தை உணரலாம்.

நச்சினுர்க்கினியர் உரைப் பதிப்பில் "இத்தொடர்களால் தமிழும் ஒரு காலத்தில் ஆங்கிலத்தைப்போல்புணர்ச்சியின்றி எழுதப்பட்டமை ஊகிக்கப்படும்" எனக் குறிப்புரையாசிரியர் தேவநேயப் பாவாணர் எழுதியுள்ளவையாலும்[2] இக்கருத்து வலுவடைகிறது.

இம்முறையில் உருபியலில் 'ஆ எ ஆகும்' (எ. 189) என்னும் நூற்பாத்தொடர் இளம்பூரணர் கொண்ட பாடமாக உள்ளது. உடம்படு மெய்யின்றி அமைந்த இப்பாடத்தில் அதனைக் கூட்டி 'ஆ எவ்வாகும்' என நச்சினுர்க்கினியர் பாடம் கொண்டுள்ளார்.

உடம்படு மெய்பற்றிய வரையறையின்மையால் இளம்பூரணர் உடம்படு மெய்யற்ற தொடரைப் பாடமாகக் கொண்டார் எனவும், உடம்படு மெய் பற்றிய வரையறை இலக்கண முறையில் வலியுறுத்தப்பெற்ற நன்னூலார் காலத்திற்குப் பின்னவரான நச்சினுர்க்கினியர் உடம்படு மெய்யுடன் கூடிய தொடரைத் தம் பாடமாகக் கொண்டார் எனவும், இங்குக் கொள்ளுதல் பொருத்தமுடையதாக அமையும்.

---

[1] எ நூ. 141

[2] தொ. நச்சி. கழகப்பதிப்பு (1966) ப.94.

இளம்பூரணர் "உடம்படு மெய்யின் உருபு கொளல் வரையார்" என்ற தொல்காப்பிய விதியைப் பின்பற்றி 'ஆஎ ஆகும் என உடம்படு மெய்யின்றியே எழுத்ததிகாரத்தில் பாடம் கொண்டார். இங்குச் சொல்லதிகாரத்தில், இடையியல் நூற்பாவில் '**நன்றீற் றேயும்** அன்றீற்றேயும்' (சொ. 277) எனப்பாடங் கொண்டுள்ளார். இங்கு ஏ என்பதன் பின்னர் யகர உடம்படு மெய்பயின்று வந்துள்ளது. சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் இளம்பூரணர் கொண்ட பாடத்தை அப்படியே ஏற்றுள்ளனர். ஆனால் தெய்வச்சிலையார் 'ஏமுன் இவ்விருமையும்' என்ற நன்னூல் விதிக்கேற்ப[1] ஏ முன்னர் இளம்பூரணர் பயன்படுத்திய யகர உடம்படு மெய்யை விடுத்து வகர உடம்படு மெய்யைக்கொண்டு '**நன்றீற்றேவும்**' '**அன்றீற்றேவும்**' எனக் கூறியுள்ளார்.

பிறிதொரு இடையியல் நூற்பாவில் **ஏவும் குறையும்**' (சொ. 267) என இளம்பூரணரும் தெய்வச்சிலையாரும் வகர உடம்படு மெய்யைக் ஏற்றுப்பாடங்கொள்ள, சேனாவரையரும் நச்சினார்க்கினியரும், '**ஏயும் குறையும்**' என யகர உடம்படு மெய்யை ஏற்றுப் பாடங்கொண்டனர். இங்கும் 'ஏமுன் இவ்விருமையும்' என்ற நன்னூல் நூற்பாவிற்கேற்பப் பாடங்கள் வேறுபடுகின்றன எனக்காண்கிறோம்.

7. 7. அளபெடை

உயிரெழுத்துக்களில் நெடில் ஏழும் அளபெடுக்குங்கால் அவற்றிற்கு இனமாய குறில் எழுத்துக்கள் இணைந்து வரும் உயிரளபெடை என்னும் இப்பிரிவில் 1. அளபெடைக் குறிச்சேர்க்கை 2. அளபெடைக்குறி விடுபடல் என்று இரு உட்பிரிவுகள் உள.

7. 7. 1. அளபெடைக்குறி சேர்தல்

சொல்லதிகாரத்தில் இளம்பூரணரால் அளபெடையின்றிக் கூறப்பட்ட உரியியல் நூற்பாத் தொடர் 'பே நாம் உருமென' (சொ. 359) என்பது. சேனாவரையரும் இளம்பூரணரைப் பின்பற்றி அளபெடைக் குறியின்றியே இப்பாடத்தைக் கொண்டுள்ளார். ஆனால் தெய்வச்சிலையார் இத்தொடரில் அளபெடைக்குறி சேர்த்துப் 'பேஎ நாம் உருமென' எனப்பாடங் கொண்டுள்ளார். அளபெடைக்குறிச் சேர்க்கையால் அமையும் இப்பாடம் எழுத்ததிகாரத்தில் காணப்பெறுதது.

---

[1] நன். நூ. 162

பொருளதிகாரத்தில் செய்யுளியலில் 'அஃதன்றென்ப' (பொ. 387) என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். இது பேராசிரியர் காலத்தில் 'அஃதான்றென்ப' எனக் கொள்ளப்பட்டது. பேராசிரியர் பாடத்தைக் களமாகக்கொண்டு 'அதாஅன்றென்ப' என்ற பாடத்தை நச்சினார்க்கினியர் கொண்டார். பேராசிரியர் பாடத்தில் உள்ள ஆய்தம் விடுபட்டு அளபெடைக்குறி இங்குஇடம் பெற்றுள்ளது.

செய்யுளியலில் 'நேர்ந்துடன் வருமே' (பொ. 523) என்று இளம்பூரணர், பேராசிரியர் ஆகியோர் கொண்ட பாடம் 'நேர்ந்துடன் வருஉம்' என நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டது. இங்கு வருமே என்பதில் ஏ காரம் விடுபட்டு அளபெடைக்குறி சேர்ந்தது.

7.7.2. அளபெடைக்குறி விடுபடல்

எழுத்ததிகாரத்தில் தொகை மரபில், இகரவிற்றுப் பெயர்க்கும் ஐகாரவீற்றுப் பெயர்க்கும் அல்வழி முடிபு கூறும் நூற்பாவில் 'மூவகை நிலைஇய' (எ. 159) எனவரும் தொடர் இளம்பூரணர் பாடத்தில் உள்ளது. இதில் 'நிலைய' என்ற சொல் அளபெடுத்து 'நிலைஇய' என வந்துள்ளது. இளம்பூரணர் தம் உரையிலும், உரைக்குறிப்பிலும் சுட்டுங்கால் 'மூவகை நிலைய' என்றே அளபெடையின்றிக் குறிப்பிட்டுப் பொருளும் விளக்கமும் கூறுவர். அளபெடையின்றிக் காட்டப்பெறும் 'நிலைய' என்பதனையே நச்சினார்க்கினியர் பாடமாகக் கொண்டுள்ளார். இவ்வேறுபாடுகளில் ஓரளவு பொருள் மாற்றமும் உண்டு. சொல்லதிகாரத்தில் வேற்றுமை மயங்கியல் நூற்பாவில் 'தொகாஅ இறுதியான' (சொ. 101) என்றும் பெயரியல் நூற்பாவில் 'ஆடூஉ மகடூஉ' (சொ. 160) என்றும், எச்சவியல் நூற்பாவில் 'வழாஅமை இசைக்கும்' (சொ. 392) என்றும் இளம் பூரணர் அளபெடைக் குறியுடன் பாடங்கொண்டுள்ளார். இளம் பூரணர் கொண்டுள்ள இப்பாடங்களில், முதலாவதைச் சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோரும் இரண்டாவதைத் தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோரும், அப்படியே ஏற்றுள்ளனர்.

முறையே, தெய்வச்சிலையாரும் பழைய உரைகாரரும் 'தொகா இறுதியான' என்றும், சேனாவரையர் 'ஆடூ மகடூஉ' என்றும்,

சேனாவரையர், நச்சினார்க்கினியர் இருவரும் 'வழாமை இசைக்கும்' என்னும் அளபெடைக்குறி இல்லாத பாடங்களைக் கொள்வர்.

இப்பாடங்களில் அமைந்த அளபெடைக்குறி விடுபட்டமையால் இவ்வேறு பாடுகள் எழுந்துள்ளன.

பொருளதிகாரத்தில் 'ஏழாஅலும்' (பொ. 589) என்றும், 'யாடலபெருஅ' (பொ. 609) என்றும் வரும் மரபியல் நூற்பாத் தொடர்களை இளம்பூரணர் அளபெடுப்பனவாகக் கொண்டுள்ளார். இவற்றைப் பேராசிரியர் 'ஏழாலும்' என்றும், 'யாடலபெரு' என்றும் அளபெடைக் குறி இன்றியே பாடங்களாகக் கொண்டுள்ளார்.

7.8. சாரியைகள்

சாரியை எழுத்துச்சாரியை, சொற்சாரியை என இருவகைப் படும். எழுத்ததிகாரத்தில் எழுத்துச் சாரியை தொடர்பான பாட வேறுபாடுகளும், பொருளதிகாரத்தில் சொல்லில் பயின்றுவரும் சாரியை தொடர்பான வேறுபாடுகளும் பயின்றுள. எனவே சாரியை தொடர்பான இவ்வேறுபாடுகளை இருஉட்பிரிவுகள் உடையனவாகக் கொள்ளலாம்.

7.8.1. எழுத்துச் சாரியை

எழுத்துச்சாரியை மாறுவதால் பாடங்கள் எழுந்துள்ளன என்பதற்கு எழுத்ததிகாரத்தில் சில பாடவேறுபாடுகள் சான்றுகளாயுள்ளன.

இளம்பூரணர் உயிர்மெய்க்குறிலுக்குக் 'காரம்' என்னும் எழுத்துச் சாரியையைப் பயன்படுத்த, நச்சினார்க்கினியர் அவை அனைத்துக்கும் 'கரம்' என்னும் சாரியையை உரியதாகக்கொள்கிறார்.

காரமும் கரமுங் கானொடு சிவணி
நேரத் தோன்றும் எழுத்தின் சாரியை [1]

எனக் காரம், கரம், கான் ஆகியவற்றைத் தொல்காப்பியர் எழுத்துச் சாரியைகளாகக் குறிப்பிடுவர்.

1எ. நூ. 135.

'வரன்முறை மூன்றுங் குற்றெழுத் துடைய'[1]

என வரும் நூற்பாவில் மூன்று சாரியைகளுமே குற்றெழுத்துக் களுக்கு உரியன என்றும் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார். எனவே, குற்றெழுத்துக்களுக்கு மூவகைச் சாரியைகளும் உள வென்பது பெறப்படும்

இவற்றுள் காரம் என்ற சாரியையை இளம்பூரணர் கொண் டார். **'டகார மொற்றும்'** (எ. 241) **'றகாரம் ஆகும்'** (எ. 445) 'வகாரம்' (எ. 452) 'வகாரத்து' (எ. 452) **'மகாரம்** ஒற்றும்' (எ. 463) என வருமிடங்களில் காரம் என்னும் சாரியையை இளம் பூரணர் பயன்படுத்தியுள்ளார். நச்சினார்க்கினியர் இவ்விடங்களில் **டகரம், றகரம், வகரம், மகரம்,** எனக் 'கரம்' என்ற சாரியையையே கொண்டுள்ளார்.

எழுத்துச் சாரியை மாற்றத்தால் இப்பாட வேறுபாடுகள் எழுந்துள. இளம்பூரணர் இங்கெல்லாம் காரச் சாரியையைச் பயன் படுத்தியிருப்பினும் கரச் சாரியையை விலக்குதல் அவர் கருத்தன்று என்பதற்கு **'றகரவொற்றுதலும்'** (எ.215)எனவரும் தொடர்சான்றாக உள்ளது. மேலும் காரச் சாரியை ஒன்று மட்டுமே வடமொழியில் உண்டு என்பர் அறிஞர். இதனை, 'வடவெழுத்திற்குக் காரம் என்ற சாரியையே உளது என்பர் அறிஞர்கள். [2] என வரும் தொடராலும் அறியலாம்.

எனவே இளம்பூரணருக்குக் கரச் சாரியையை விலக்குவது கருத்தன்று ஆதலாலும், தமிழில் மட்டுமே பயிலும் கரச் சாரியை யைப் பயன்படுத்துவது சிறப்பு எனக் கருதியமையாலும், நச்சினார்க் கினியர் கரச் சாரியையைக் குற்றெழுத்திற்கு உரியதாகக் கொண் டார் என்றும், அதனால் இப்பாடங்கள் அமைந்தன என்றும் கூறலாம். சாரியை மாற்றத்தால் எழுந்த இவ்வேறுபாடுகளிடையே பொருள் மாற்றமில்லை.

1எ. நூ. 137.

2தொல்காப்பியம், இளம்பூரணம்- கு. சுந்தரமூர்த்தி பதிப்பு - நூ. 135 விளக்கவுரை.

7. 8. 2. செற்சாரியை விடுபடல்

பொருளதிகாரத்தின் கற்பியலில், இளம்பூரணர் 'ஒழுக்கத்துத் தோழிக்கு' (பொ. 145) என அத்துச் சாரியை பயின்ற சொல்லைத் தம் பாடமாகக் கொண்டிருக்க, பின்னே வந்த நச்சினார்க்கினியர் 'ஒழுக்கம் தோழிக்கு' என அத்துச்சாரியை இல்லாத சொல்லைத் தன் பாடமாகக் கொண்டுள்ளார். இது சொற்சாரியை விடுபடுதலால் நிகழும் பாடம்.

7. 9. வேற்றுமையுருபுகள்

வேற்றுமை உருபுகளின் சேர்க்கை, உருபுகள் விடுபடுதல், உருபுகள் மாறிவருதல் ஆகிய மூன்று உட்பிரிவுகளில் வேற்றுமை உருபுகள் தொடர்பான பாடவேறுபாடுகள் அமைகின்றன. முன்னுள்ளோர் விரியாகக் கொண்டவற்றைப் பின்னுள்ளோர் தொகையாகக் கொள்ளுதலாலும், முன்னுள்ளோர் தொகையாகக் கொண்டவற்றைப் பின்னுள்ளோர் விரியாகக் கொள்ளுதலாலும் இத்தகைய வேறுபாடுகள் எழுகின்றன.

7.91. வேற்றுமை உருபுச்சேர்க்கை

எழுத்ததிகாரத்தில் இளம்பூரணர் 'அல் பெயரெண்ணும் ஆயியல்' (எ. 394) என்னும் நூற்பாத் தொடரைத் தம் பாடமாகக் கொண்டுள்ளார். 'அல்பெயர் எண்ணும்' என்பதற்குப் 'பொருட் பெயர் அல்லாத எண்ணுப்பெயர்' என்பது பொருள்.

இளம்பூரணர் கொண்ட பாடத்தில் 'இன்' என்ற வேற்றுமை உருபைச் சேர்த்து 'அல்பெயரெண்ணினும்' என நச்சினார்க் கினியர் பாடங்கொண்டுள்ளார். வேற்றுமை உருபினைச் சேர்த்த மையால் அமையும் இப்பாடத்தில் பொருள் வேறுபாடு இல்லை.

சொல்லதிகாரக் கிளவியாக்கத்தில் 'ஈற்று நின்றிசைக்கும்' (சொ. 10) என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். தெய்வச் சிலையாரும் பழைய உரையாசிரியரும் இம்முறையிலேயே இளம் பூரணரைப் பின்பற்றியுள்ளனர். சேனாவரையர், நச்சினார்க்கினியர்-

கல்லாடர், ஆகியோர் 'ஈற்றின் நின்றிசைக்கும்' என வேற்றுமை உருபை விரித்துப் பாடங்கொண்டுள்ளனர்.

பொருளதிகார அகத்திணையியலில் 'வேந்தன்' (பொ. 34) என்றும், கற்பியலில் 'காமத்து' (பொ. 161) 'உயர்ந்தோர்' (பொ. 169) என்றும், பொருளியலில் 'உவமம் ஒன்றிடத்து' (பொ. 194) என்றும் இளம்பூரணர் கொண்ட பாடங்களுக்குப்பதிலாக **'வேந்தனின்** **'காமத்தின்'** **உயர்ந்தோர்க்கு'** 'உவமயமோடு' ஒன்றிடத்து' (பொ. 194) என நச்சினார்க்கினியர் கொள்ளும் பாடங்களில் முறையே, இன்' 'இன்' 'கு' 'ஒடு' என்ற வேற்றுமை உருபுகள் சேர்ந்து வந்துள்ளன.

மெய்ப்பட்டியலில் **'கையறவுரைத்தல்'** (பொ. 262) என்ற இளம்பூரணர் பாடம், பேராசிரியத்தில் 'கையற**வுரைத்தலொடு'** என ஒடு உருபு பெற்றுப்பயின்றுள்ளது.

செய்யுளியலில் **'முதுசொல்'** (பொ. 384) என்பது 'முதுசொ**லோடு'** என ஒடு உருபு பெற்றும் **'அல்லது'** (பொ. 492) என்பது **'அல்லதை'** என 'ஐ' உருபுபெற்றும் **'உரைப்பது'** (பொ. 508) என்பது **'உரைப்பதை'** என ஐ உருபு பெற்றும் வந்தன.

மேலும் செய்யுளியலிலேயே 'ஞகார முதலா' (பொ. 541) ஒன்பது ஞகாரை முதலா' என 'ஐ' உருபு பெற்றும் 'னகார ஈற்று (பொ. 541) என்பது 'னகாரை ஈற்று' என ஐ உருபு பெற்றும் வந்துள.

இப்பாடங்கள் உருபுச் சேர்க்கையால் வேறுபட்டுள.

7. 9. 2. வேற்றுமை உருபு விடுபடல்

சொல்லதிகாரத்தில் கு, இன் என்ற வேற்றுமை உருபுகளுடன் சேர்த்து இளம்பூரணர் கொண்ட பாடங்கள் பின்னுள்ள உரையாளர்களால் அவையின்றித் தொகையாகக் கொள்ளப்பட்டுள. கிளவியாக்க நூற்பாவில் 'இதனைத்தென அறிந்த **'சினைமுதற் கிளவிக்கு'** (சொ. 33) எனவரும் இளம்பூரணர் பாடத்தைத் தெய்வச்சிலையார் தவிரப் பிற உரையாசிரியர்கள் அனைவரும் ஏற்றுள்ளனர். அவர் **'சினைமுதற் கிளவி'** என உருபில்லாததைப் பாடமாகக் கொண்டு உள்ளார்.

வினையியல் நூற்பாவில் 'சினைவினை **தோன்றின்** சினையொடு முடியா'(சொ 226) என வரும் பாடத்தை இளம்பூரணரும், தெய்வச் சிலையார் தவிரப்பிறநும் கொண்டுள்ளனர். தெய்வச்சிலையார் 'இன்' என்பதனை விடுத்துப்புணர்ச்சியில் சகரவொற்று மிகுந்து வரும் நிலையில் '**தோன்றிச்** சினையொடு' என்ற பாடத்தைக் கொண்டு ள்ளார்.

எச்சவியல் நூற்பாவில் 'செந்தமிழ் சேர்ந்த பன்னிரு **நிலத் தினும்**' (சொ. 394) எனவரும் பாடத்தை இளம்பூரணர் மட்டுமே கொண்டிருக்க எஞ்சியோர்' இன் விடுபட்டமைந்த 'பன்னிரு **நிலத் தும்**' என்ற பாடத்தைக் கொண்டுள்ளனர். இவற்றுள் சில பொருள் வேறுபாட்டுடன் அமைந்தவை. அப்பிரிவு எழுத்ததிகாரத்தில் இல்லாதது.

பொருளதிகாரத்தில் வேற்றுமை உருபு விடுபடுதலால் அமையும் வேறுபாடுகளின் எண்ணிக்கை 7 ஆகும். '**ஒருவனை மண்டிய**' (பொ. 72) என்று புறத்திணையியல் நூற்பாத் தொடரில் இளம்பூரணர் பாடத்தில் 'ஐ' உருபுவிடுபட்டு '**ஒருவன் மண்டிய**' என நச்சினார்க்கினியத்தில் வந்தது. அதே இயலில் '**அவையகத் தானும்**' (பொ. 75) என்ற இளம்பூரணர் பாடத்தில் 'அகம்' என்ற சொல்லுருபு விடுபட்டு '**அவையத்தானும்**' என நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டுள்ளது.

'நாலெட்டு **வகையினும்**' (பொ. 112) என்று களவியல் நூற் பாவில் இளம்பூரணர் கொண்ட பாடத்தினை 'நாலெட்டு '**வகையும்**' என நச்சினார்க்கினியர் 'இன்' விடுத்துக்கொண்டார். பிறிதொரு களவியல் நூற்பாவில் '**ஐயக்கிளவியின்**' (பொ. 115) என்பது இளம் பூரணர் பாடம். அது '**ஐயக்கிளவி**' 'என நச்சினார்க்கினியத்தில் பயின்றது.

பொருளியலில் ,**அல்லதை**' (பொ. 200) என்று இளம்பூரணர் கொண்ட பாடத்தில் ஐ உருபை விடுத்து,'**அல்லது**'என்றும், 'உரிமை '**வேண்டினும்**' (பொ 221) என்று இளம்பூரணர் கொண்ட பாடத்தில் 'இன்' உருபைவிடுத்து 'உரிமை **வேண்டியும்**' என்றும், '**பரத்தையை**' (பொ. 229) என்று இளம்பூரணர் கொண்ட பாடத்தில் ஐ உருபை விடுத்துப் '**பரத்தை**' என்றும் நச்சினார்க்கினியர் கொண்டுள்ளார்.

இவை அனைத்தும் உருபு விடுபடல் என்னும் பிரிவில் அடக்கத்தக்க வேறுபாடுகள்.

7. 9. 3. வேற்றுமை உருபு மாற்றம்

ஒரு வேற்றுமை உருபு நிற்கும் இடத்தில் பிற்கால உரையாசிரியர்கள் வேறு உருபை வைத்துப் பாடங் கொண்டுள்ளனர். இம்முறையில் அமைந்த வேறுபாடுகள் பொருளதிகாரத்தில் 10 உள. சான்றுகத் '**தோலது** பெருக்கமும்' (பொ. 68) என்பது '**தோலின்**' பெருக்கமும்' என மாறி வந்துள்ளது. இங்கு 'அது' என்ற வேற்றுமை உருபிற்குப் பதிலாக 'இன்' என்ற வேற்றுமை உருபு பயின்றுள்ளது. இம்முறையில் பொருளதிகாரத்தில் 10 இடங்களில்[1] வேற்றுமை உருபு மாற்றத்தால் அமைந்த பாடங்கள் இடம் பெற்றுள. எழுத்து, சொல்லதிகாரங்களில் இப்பிரிவில் பாடவேறுபாடுகள் இல. இவ்விடங்களில் அது-இன், ஆல்-இல், இன்-ஆன், ஐ-இன், ஆன்-இன், கண்-கால், இல்-உள், கு-இன், ஆன்-இன், ஒடு-இன் என வரும் உருபுமாற்றங்கள் முறையே நிகழ்ந்துள்ளன.

7-10. புணர்ச்சி

சொற்கள் ஒன்றேடொன்று புணருங்கால் இடையில் ஒற்றுக்கள் மிகுந்து வரும். சில இடங்களில் ஒற்றுக்கள் விடுபட்டமையாலும் பாடவேறுபாடுகள் அமைகின்றன.

> "கூறிய இயற்கைக் குற்றிய லுகரம்
> ஆற னிறுதி அல்வழி யான"[2]

எனவரும் எழுத்ததிகாரக் குற்றியலுகரப் புளரியல் நூற்பாப் பகுதியில் '**இயற்கைக்** குற்றியலுகரம்' என ஒற்றுடன் சேர்த்து இளம்பூரணர் பாடங்கொண்டுள்ளார். ஆறனிறுதி அல்வழி, குற்றியலுகரம், கூறிய இயற்கை என்பதே உரையாசிரியர்கள் பொருள் கொள்ளும் கொண்டு கூட்டுமுறை, இங்கு 'இயற்கை' என்பது இயற்கையையுடையது என்னும் பொருளில் முற்றுச் சொல்லாய் நின்றது. இளம்பூரணர் கொண்ட இம்முறையிலேயே நச்சினர்க்கினியரும் கொண்டு கூட்டிப் பொருள் கொள்கின்றுர். இயற்கை என்பது முற்றுச் சொல்

1. பொ. நூ. 68, 74, 75, 87, 199, 200, 227, 460, 510, 536
2. தொ. எ. நூ. 438

லாய் நிற்றலால் இடையில் ஒற்றுமிகல் கூடாது எனக் கருதி நச்சினார்க்கினியர் ஒற்றில்லாமல் 'கூறிய **இயற்கை குற்றியலுகரம்'** எனப் பாடங்கொண்டுள்ளார் எனலாம்.

புணர்ச்சியில் உரிய இடத்தில் வல்லொற்று மிகுந்து வருதல் இயற்கை. எனினும் ஒரு நூற்பாவில் ஒரு சொல்லை ஆற்றொழுக்காக அடுத்தமைந்த ஒற்றுமிகும் சொல்லோடு கொண்டு கூட்டாமல், ஒற்று மிகாத பிறிதொரு சொல்லுடன் கொண்டு கூட்டி உரை கொள்ளுங் கால், ஒற்றுமிகாமலேயே பாடம் கொள்ளும் இயல்பு நச்சினார்க் கினியரிடம் இங்கு அமைந்துள்ளதைக் காணலாம். சொல்லதிகார எச்சவியல் நூற்பாவில் **'என்றச் சிறப்புடை'** (சொ. 421) என்பது இளம்பூரணரும், நச்சினார்க்கினியர் அல்லாத பிறரும் கொண்ட பாடம். இளம்பூரணர் முதலியோர் நூற்பாவின் கிடக்கை முறை யிலேயே சொற்களைக் கொண்டு கூட்டிப் பொருள் கொண்டுள்ளனர். ஆனால் நச்சினார்க்கினியர் 'என்ற' எனவரும் சொல்லை 'அவ்வா றென்ப முற்றியல் மொழியே' என்னும் நூற்பாவின் இறுதித் தொடருடன் கொண்டு கூட்டிப் பொருள் கொள்வதால் இடையில் ஒற்றுமிகாமல் வரும் **'என்ற சிறப்புடை மரபின்'** என்ற பாடத்தைக் கொண்டுள்ளார். பொருளதிகாரத்தில் புறத்திணையியலில் **'பேஎய் புண்ணோன்''** (பொ, 77) எனவரும் இளம்பூரணர் பாடம் **'பேஎய்ப் புண்ணோர்'** என ஒற்றுடன் நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட் டுள்ளது. புண்ணோன் என்ற ஒருமை 'புண்ணோர்' எனப்பன்மைச் சொல்லாகவும் இங்கு மாற்றம் பெற்றது.

களவியலில் **''உடன்பட்டோர்க்** கடாவல்' (பொ. 112) என வரும் இளம்பூரணர் பாடம் **'உடன்பட்டோர்** கடாவல்' என ஒற்றின்றி நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டுள்ளது.

7. 11. தொடர்ப் பிரிப்பு

''ஒழிந்ததன் நிலையும் ஒழிந்தவற்றியற்றே'' (எ.292) என்பது உயிர்மயங்கியலில் அமைந்த நூற்பா. இந்நூற்பாவில் **'ஒழிந்த வற்றியற்றே'** என இளம்பூரணர் பாடங்கொண்டு **'மேற் சொல்லி** யொழிந்த ஓகாரங்களின் இயல்பிற்றாய் இயல்பாய் முடியும்' எனப்

பொருள் கூறியுள்ளார். இளம்பூரணரின் இவ்வுரையைக் களமாகக் கொண்டு **'மொழிந்தவற்றியற்றே'** என்றே இங்கு நச்சினார்க்கினியர் பாடங்கொண்டுள்ளார்.

''நிலையு மொழிந்தவற்றியற்றே'' என்பதை 'நிலையும் ஒழிந்த வற்றியற்றே' 'நிலையும் மொழிந்தவற்றியற்றே' என இருவகையாலும் பிரிக்கலாம். எனவே இளம்பூரணர் உரைவிளக்கமும், தொடரின் பிரிப்புநிலையுங்கூடி இவ்வேறுபாட்டைத் தோற்றுவித்தன.

நச்சினார்க்கினியர் ''மொழிந்தவற்றியற்யே'' என்பதற்கேற்ப **''முற்கூறிய ஓகாரங்களின்** இயல்பிற்றாய் இயல்பாய் முடியும்'' எனப்பொருள் கூறியுள்ளார். இவ்வேறுபாடுகளிடையே மிகுதியும் பொருள் வேறுபாடு இல்லை.

7. 12. இடைச்சொற்கள்

இடைச்சொற்கள் பல. இவற்றிற் குரிய இலக்கணங்களை விரித்துக் கூறும் முறையில் சொல்லதிகாரத்தில் இடையியல் என ஓரியல் தொல்காப்பியரால் அமைக்கப்பட்டுள்ளது.

இடைச்சொற்கள் பலவும் சேர்ந்துவருதல், விடுபடுதல், மாறிவருதல் என்ற மூவகை நிலைகளிலும் அமைவதாலும் சில இடங்களில் பின்னுள்ள சொல்லோடு இணைந்த இடைச்சொல் அதனை விடுத்து முன்னுள்ள சொல்லொடு இணைந்து வரலானும், மற்றும் சில இடங்களில் முன்புள்ள இடைச்சொல் விடுபட்டு அவ்விடங்களில் வேற்றுமை உருபு இடம் பெற்று வருவதாலும் பாட வேறுபாடுகள் எழுந்துள. இடைச்சொற்கள் தொடர்பாக வரும்பாட வேறுபாடுகள் இந்த உட்பிரிவுகளில் அடங்குவன.

7. 12. 1. இடைச்சொல் சேர்க்கை

சொல்லதிகாரத்தில் வேற்றுமையியலில் **'கொள்ளும் அதுவே'** (சொ. 74) **உரியியலில் எய்யாமை அறியாமை** (சொ. 336) என்றும் **அவற்றொடு கொளலே** (சொ. 384) என்றும் வருபவை இளம்பூரணர் பாடங்கள்.

முதல் பாடத்தைப் பழைய உரையாசிரியர் தவிரப் பிறரும், மூன்றும் பாடத்தை இளம்பூரணரோடு நச்சினார்க்கினியரும் ஏற்றுள்

ளனர். இரண்டாம்பாடத்தை இளம்பூரணர்தவிரப் பிறர் கொள்ள வில்லை.

பழைய உரையாசிரியர் **'மற்று'** என்னும் இடைச்சொல் சேர்த்துக்**'கொள்ளுமற்றதுவே'** என முதல் பாடத்தைக் கொண்டார். சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் மூவரும் **'எய்யாமை அறியாமை'** என்பதில் இரு சொல்லிடத்தும் ஏகாரம் சேர்த்து **'எய்யாமையே அறியாமையே'** என இரண்டாம் பாடத்தைச் சுட்டியுள்ளனர். சேனாவரையர், தெய்வச்சிலையார் ஆகியோர் அவற்றொடு என்பதுடன் உம்மை சேர்த்து **'அவற்றொடுங் கொளலே'** எனக்கூறியுள்ளனர். இடைச்சொற்களின் சேர்க்கை இங்குப் பாடங் களை வேறுபடுத்தியுள்ளது. எழுத்ததிகாரத்தில் இப்பிரிவு இல்லை.

இடைச்சொல் பின்னே வந்த உரையாசிரியர் பாடங்களில் சேர்ந்து அமைந்தமையால் பொருளதிகாரத்தில் 6 இடங்களில் பாடங்கள் வேறுபட்டுள்ளன என அறியலாம். **'கிழவோட் குரித்தே'** (பொ. 159) என்பது உம் பெற்றுக் **'கிழவோட்குமுரித்தே'** என வருகிறது. இம்முறையிலேயே மேலும் 5 இடங்களில்[1] உம்மை பெற்று வந்தமையால் பாடங்கள் மாறியுள.

7. 12. 2. இடைச்சொல் விடுபடல்

எழுத்ததிகாரத்தில் இளம்பூரணர் **'உம்'** என்ற இடைச்சொல் சேர்த்துப் பாடங்கொண்ட நான்கிடங்களில் நச்சினார்க்கினியர் உம்மையை விடுத்துப்பாடங்கொள்கிறார். **'இரண்டென் எண்ணிற்கும்'** (எ. 440) **'நமவருங்காலை'** (எ. 451) **'வரும் வழி'** (எ. 452) **'யாவரும்காலையும்'** (எ. 479) என்பன இளம்பூரணர் கொண்ட பாடங்கள். இவற்றுக்கு, **'இரண்டென் எண்ணிற்கு'**, **'நமவருகாலை'** **'வருவழி'**, **'யாவரு காலை'** என நச்சினார்க்கினியர் பாடங்கொள்கிறார்

இளம்பூரணருக்கும் நச்சினார்க்கினியருக்கும் உம்மை பற்றிய இப்பாட வேறுபாடுகள் அனைத்தும் குற்றியலுகரப் புணரியல் என்னும் இறுதிப் பகுதியில் மட்டுமே அமைந்துள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கதாம்.

---

1 பொ. நூ. 192, 213, 319, 500, 651

இளம்பூரணர் இடைச்சொல்லோடு சேர்த்துப் பாடமாகக் கொண்டவற்றுள் இடைச்சொற்களை விடுத்துப் பிறர் கூறியுள்ளமையால் அமைந்த சொல்லதிகாரப் பாடங்கள் கீழேயுள்ள பட்டியலில் காட்டப்பெற்றுள.

இளம். பாடம்	நூற்பா	ஏற்போர்	வேறுபாடு	வேறுபடுவோர்
தொகைவயின் பிரிந்தே	78	கல், ப. உரை	தொகைவயின் பிரிந்து	சேனா, தெய்வ, நச்சி
அவ்வொடும்	104	கல், ப. உரை	அவ்வொடு	சேனா, தெய்வ, நச்சி
அகரமும் ஆகும்	128	——	அகரம் ஆகும்	சேனா, தெய்வ நச்சி, கல்
வருங்காலையும்	276	சேனா, தெய்வ.	வருகாலையும்	நச்சி.
செய்யுமென் கிளவி	230	சேனா, தெய்வ. நச்சி	செய்யும்கிளவி	தெய்வ.
சுவையினென்று	410	சேனா, நச்சி.	சுவையின்	தெய்வ

இப்பட்டியலால் ஏ, உம், என்று, எனவரும் இடைச்சொற்கள் பிற்கால உரையாசிரியர்கள் பாடங்களில் விடுபட்டுள்ளன என்பதையும் 'செய்யுமென்றகிளவி' என்பது 'செய்யுமென் கிளவி' எனத் தொக்கு நின்றது என்பதையும், என்று—என்ற இடைச்சொல் வரும் ஈரிடங்களிலும் தெய்வச்சிலையார் அதனை விடுத்துப் பாடங் கொண்டுள்ளார் என்பதையும் அறியலாம்.

பொருளதிகாரத்தில் இடைச்சொற்கள் விடுபட்டு அமையும் வேறுபாடுகளைப் பின்வரும் பட்டியலில் அறியலாம்.

பாடம்	நூற்பா வேறுபாடு	விடுபட்டஇடைச் சொல்
புறத்தும் புரைபட (இளம்)	105 புறத்துப்புரைபட (நச்சி)	உம்
பெண்ணொடும் புணரா (இளம்)	173 பெண்ணொடு புணரார் (நச்சி)	உம்
கிழக்கிடும் பொருளோடு (இளம்)	276 கிழக்கிடு பொருளோடு (பேரா)	உ
உயர்பென்றேவும் பெறுமே (பேரா)	438 உயர்பு ஏறவும் பெறுமே (நச்சி)	என்று
நெடுவெண்பாட்டே (இளம், பேரா)	460 நெடுவெண்பாட்டு (நச்சி)	ஏ
ஒளியுமுடைமையும் (இளம், பேரா)	479 ஒளியுடைமையும் (நச்சி)	உம்

உம், ஏ, என்று எனவரும் இடைச்சொற்களைப் பிற்கால உரையாசிரியர்கள் விடுத்தமையால் இப்பாடங்கள் வேறுபட்டுள்ளன.

7.12.3. இடைச்சொல் மாற்றம்

"தத்தம் குறிப்பின் பொருள் செய்குந"[1] எனத் தொல்காப்பியர் சுட்டும் இடைச்சொற்கள் ஒன்று நிற்கும் இடத்தில் பிறிதொன்று பயின்று வரலால் பாட வேறுபாடுகள் எழுந்துள.

எழுத்ததிகாரத்தில் புள்ளி மயங்கியல் நூற்பாவில் 'அன்கெடுவழியே' (எ. 351) என்னும் தொடர் இளம்பூரணர் கொண்ட பாடம். இதன் இறுதியில் பயின்ற 'ஏ' என்னும் இடைச் சொல்லுக்கு மாற்றாக 'உம்' என்னும் இடைச்சொல் பெய்து 'அன்கெடு வழியும் என நச்சினார்க்கினியர் பாடங்கொண்டுள்ளார்

1 சொ. நூ. 245

இளம்பூரணர் **'அன்கெடுவழியே'** எனவரும் பாடத்தில் 'ஏ' என்பதை அசையாகக் கொண்டார். ஆனால் நச்சினார்க்கினியர் **'அன்கெடு வழியும்'** எனப் பாடங்கொண்டு இங்குள்ள உம்மையைப் பிறிதொரு சொல்லோடு கூட்டிப்பொருள் கொள்கின்றார். 'ஆன என்பதனை மக்களோடும் உம்மையை மருங்கினோடும் கூட்டுக' எனவரும் நச்சினார்க்கினியர் விளக்கத் தொடரால் இதனை அறியலாம்.

இளம்பூரணர் கருத்துப்படி 'ஏ' என்பது அசையாதலாலும், நச்சினார்க்கினியர் கருத்துப்படி 'உம்' என்பது பிறிதொரு சொல்லோடு கூட்டிப் பொருள் கொள்ளப்படுதலாலும், 'அன்கெடு வழி' என்பதே எஞ்சியது. எனவே வடிவால் மாறுபாடு இருப்பினும் இங்குப் பொருள்மாற்றம் இல்லை என அறியலாம்.

சொல்லதிகார உரியியலில் "கழதழ்வும் துனைவும் விரைவின் பொருள" (சொ. 309) எனவரும் நூற்பாவில் 'பொருள' என்பது இளம்பூரணர் பாடம். 'அ' என்பதற்குப்பதில் 'ஏ' என்பதைச் சேர்த்துத் தெய்வச்சிலையார் 'பொருளே' எனப்பாடம் கொண்டுள்ளார். சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் இளம்பூரணர் கொண்ட பாடத்தையே தங்கள் பாடங்களாகவும் கொண்டுள்ளனர்

பொருளதிகாரத்தில் மெய்ப்பாட்டியலில் 'விளையாட்டென' (பொ. 255) என இளம்பூரணர் கொண்ட பாடத்துக்கு 'விளையாட்டென்று' எனப் பேராசிரியரால் பாடம் கொள்ளப்பட்டுள்ளது. இங்கு 'என' என்னும் இடைச்சொல் 'என்று' என மாறியுள்ளது.

செய்யுளியலில் 'பதினேழ் நிலத்தும்' (பொ. 357) என இளம்பூரணர் கொண்ட பாடத்தைப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் 'பதினேழ் நிலத்த' எனக் கொண்டனர். இங்கு 'உம்' என்பது 'அ' என மாறியது.

செய்யுளியல் பிறிதொரு நூற்பாவில் **'என அவையுமன்ன'** (பொ. 416) என்பது இளம்பூரணரும் பேராசிரியரும் கொண்ட பாடம். இதனை நச்சினார்க்கினியர் **'என்றவையுமன்ன'** எனக் கொண்டார். இதில் 'என' என்பது 'என்று' என மாறியது.

மரபியலில் 'குலையே' (பொ. 632) என்ற இளம்பூரணர் பாடத்தைக் 'குலையென' எனப் பேராசிரியர் கொள்வதில் 'ஏ' என்பது 'என' என்று மாறியுள்ள மாற்றத்தைக் காணலாம்.

7. 12. 4. இடைச்சொல் - இடமாற்றம்

மரபியலில் 'குரங்கு குட்டியும்' (பொ.557) என இளம்பூரணர் பாடம் கொண்டார். இதில் பின்னுள்ள சொல்லில் 'உம்' என்ற இடைச்சொல் சேர்ந்துள்ளது. ஆனால் பேராசிரியர் பாடத்தில் பின்னுள்ள சொல்லில் இணைந்த இடைச்சொல் முன்னுள்ள சொல்லோடு இணைந்து இடம் மாறி 'குரங்கும் குட்டி' என நிற்கக் காண்கிறோம். இத்தகைய மாற்றம் எழுத்து, சொல் பகுதிகளில் இல்லை.

7. 12. 5. இடைச்சொல் விடுபட்டு வேற்றுமை உருபுவரல்

சிலவிடங்களில் இளம்பூரணர் பாடங்களில் அமைந்த இடைச்சொற்களைப்பிற்கால உரையாசிரியர்கள் வேற்றுமை உருபுகளாக மாற்றிப் பாடங்கொண்டுள்ளனர். சொல்லதிகாரத்தின் கிளவியாக்க நூற்பாவில் 'எண்ணுங்காலும்'' (சொ. 47) என்றும், பெயரியல் நூற்பாவில் 'எண்ணுக்குறிப்பெயரும்' (சொ. 165) என்றும் வருவன இளம்பூரணர் பாடங்கள். இவற்றில் இறுதியில் 'உம்' என்ற இடைச்சொல் பயின்றுள்ளது. தெய்வச்சிலையார் தவிரப் பிற உரையாசிரியர்கள் அனைவரும் இளம்பூரணர் பாடத்தையே தங்கள் பாடமாகவும் ஏற்றுள்ளனர். ஆனால் தெய்வச்சிலையார் 'எண்ணுங்காலை' என்றும், 'எண்ணுக்குறிப் பெயரோடு' என்றும் இடைச்சொல் பயின்ற இடங்களை வேற்றுமை உருபுகளாக மாற்றி நிறைத்துப் பாடங்கொண்டுள்ளார்.

பொருளதிகாரத்தில் செய்யுளியலில் 'இடைநிலைப்பாட்டே தரவு' (பொ. 437) என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். நச்சினார்க்கினியரும் இளம்பூரணரைப் பின்பற்றிப் பாடங்கொண்டார். ஆனால், பேராசிரியர் 'இடைநிலைப் பாட்டொடு தரவு' என்பதைக் பாடமாகக் கொண்டார். இங்கு இடைச்சொல் விடுபட்டு 'ஒடு' உருபு வந்துள்ளது.

இடைச்சொற்களைக் களமாகக் கொண்டு வேறுபட்டு அமைந்த பாடங்களின் மொத்த எண்ணிக்கை 35 ஆகும்.

7. 13. ஆக்கக் கிளவி

"செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்"[1] என்பது தொல்காப்பிய நூற்பா. செயற்கையினுகிய பொருள்களையெல்லாம் ஆக்கம் கொடுத்துச் சொல்லுக என்பது இந்நூற்பாப் பொருள். இம் முறையில் 'யாணுக்கவினும்' (சொ. 375) என ஆக்கக் கிளவியாகிய 'ஆம்' என்பதனைப் பெற்றுவரும் சொல்லதிகார உரியியல் நூற் பாவில் 'கவினும்' எனவரும் பாடத்தை இளம்பூரணரும் அவரைப் பின்பற்றிச் சேனுவரையர் தெய்வச்சிலையாரும் கொண்டுள்ளனர்.

இதனை 'யாணுக்கவின் ஆகும்' என்று கொள்வர் நச்சினுர்க் கினியர். 'ஆம்' என இடைக்குறைந்து தொகுத்து நின்ற ஆக்கக் கிளவி, இங்கு 'ஆகும்' என இயல்பாய் விரிந்து நிற்றல் காணலாம். பொருள் மாற்றம் இல்லாவிடினும் இடைக் குறைந்து தொகுத்து நின்ற சொல், இங்கு இயல்பாய் நிற்றலால் பாடம் வேறுபட்டுள்ளது. இவ்வகை வேறுபாடு பிற அதிகாரங்களில் இல்லை.

7. 14. எதிர்மறை எச்சப்பொருண்மைச் சொற்கள்

எதிர்மறை எச்சப் பொருண்மையுடைய பன்மைச் சொல் பாடவேறு பாட்டால் எதிர்மறை எச்சப்பொருண்மையுடைய ஒருமைச் சொல்லாக மாறியமைந்துள்ளது.

எழுத்ததிகாரத்தில் குற்றியலுகரப் புணரியல் நூற்பாவில் 'அளவும் நிறையும் ஆயியல் திரியா' (எ. 474) என்பது இளம் பூரணர் கொண்ட பாடம். நச்சினுர்க்கினியர் 'ஆயியல் திரியாது' எனப் பாடங்கொண்டார். 'திரியா' 'திரியாது' என்ற இரண்டும் எதிர்மறை வினைஎச்சங்கள். இளம்பூரணர் இதற்குப் பொருள் கொள் ளுங்கால் இதனை எச்சப் பொருண்மையுடையதாகக் கொண்டு "அளவுப்பெயரும் நிறைப்பெயரும் மேற்கூறிய இயல்பில் திரியாதே நின்று இனவொற்று மிக்குமுடியும்" என்று உரை கூறுவர். இளம் பூரணரைப் பின்பற்றி நச்சினுர்க்கினியரும் தான் கொண்ட பாடத் தையும் எச்சப் பொருண்மையதாகவே அமைத்து உரை

1. சொ. நூ. 20.

வரைகின்றர். 'அளவும் நிறையும் ஆயியல் திரியாது' எனத் தாம் கொண்ட பாடத்திற்கு "அளவுப் பெயரும் நிறைப் பெயரும் புணருமிடத்து முற்கூறிய இயல்பில் திரியாது இன ஒற்றுமிக்கு முடியும்" என்பது நச்சினர்க்கினியர் உரை.

எச்சப்பொருண்மை தரும் இச் சொல்லை இளம்பூரணர் பன்மைச் சொல்லாகவும், நச்சினர்க்கினியர் ஒருமைச் சொல்லாகவும் கொண்டுள்ளனர். இவை மிகுதியும் பொருள் மாற்றம் உடையன அல்ல.

7. 15. சொற்சீரடி

நூற்பாக்களிலும் செய்யுளிலும் சொற்சீரடிப் பயிற்சி தவிர்க்க இயலாதது. சொற்சீரடி சேர்க்கப்படுதல், விடுபடுதல், மாற்றம் என்ற மூவகையில் பாடங்கள் வேறுபடுகின்றன என்பதைத் தொல்காப்பியத்தில் காணலாம்.

7. 15. 1. சொற்சீரடி சேர்க்கை

சொல்லதிகாரத்தில் விளி மரபில் 'அன்னென் இறுதி ஆவாகும்மே' (சொ. 127) என்று இளம்பூரணர் கொண்ட பாடத்துடன் சொற்சீரடி சேர்த்து,

அவற்றுள்
அன்னென் இறுதி ஆவாகும்மே

என்ற வடிவில் சேனவரையர், தெய்வச்சிலையார், நச்சினர்க்கினியர் கல்லாடர் ஆகியோர் கூறியுள்ளனர்.

முந்தைய நூற்பாக்களோடு கருத்து வகையால் இயைபு ஏற்படுத்தும் நோக்கில், தொடர்ச்சிக்காக இச்சொற்சீரடிச் சேர்க்கை பிற்காலத்தில் நிகழ்ந்திருக்கலாம். எழுத்ததிகாரம், பொருளதிகாரங்களில் இவ்வகை வேறுபாடு இல்லை.

7. 15. 2. சொற்சீரடி விடுபடல்

சொல்லதிகாரம் வேற்றுமை மயங்கியலில் 'அவற்றுள், அ எனப் பிறத்தல்' (சொ. 105) என்றும், வினையியலில் அவைதாம்

அம் ஆம் (சொ. 199) என்றும், உரியியலில் அவைதாம், உறுதவ …… (சொ. 294) என்றும், எச்சவியலில் அவைதாம், தத்தம்…… (சொ. 434) என்றும் இளம்பூரணர் உரையில் சொற்சீரடிகளுடன் அமைந்த பாடங்கள் பிற்காலத்தில் சில உரையாசிரியர்களால் விடுக்கப்பட்டமையால் பாடவேறுபாடுகள் எழுந்துள்ளன.

வேற்றுமை மயங்கியல் நூற்பாவில் சொற்சீரடியுடன் அமைந்த பாடத்தை இளம்பூரணருக்குப் பின் கல்லாடரும் பழைய உரையாசிரியரும் ஏற்றுள்ளனர். சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகியோர் 'அ எனப் பிறத்தல் …… எனச் சொற்சீரடி இல்லாத தொடரைப் பாடமாகக் கொண்டனர்.

வினையியல், உரியியல் - நூற்பாக்களில் சொற்சீரடி இல்லாமல் தெய்வச் சிலையார் ஒருவர் மட்டும் பாடங்கொண்டுள்ளார். எச்சவியல் நூற்பாவில் நச்சினார்க்கினியர் ஒருவர் மட்டும் சொற்சீரடியின்றிப் பாடங்கொண்டுள்ளார். எழுத்ததிகாரத்தில் இவ்வகை மாற்றமில்லை.

பொருளதிகாரத்தின் செய்யுளியலில் 'அவற்றுள் ஒத்தாழிசைக்கலி' (பொ. 436) என்பது இளம்பூரணரும், அவருக்குப் பின்னர் வந்த பேராசிரியரும் கொண்ட பாடம். இதனுள் பயின்ற அவற்றுள் என்ற சொற்சீரடியை விடுத்து 'ஒத்தாழிசைக்கலி' என்று மட்டும் நச்சினார்க்கினியர் பாடம் கொண்டுள்ளார். சொற்சீரடி விடுதலால் பாடம் வேறுபடுதலை இங்குக் காணலாம்.

7. 15. 3. சொற்சீரடி மாற்றம்

சொல்லதிகார விளிமரபினுள் உயர்திணையில் விளியேற்கும் உயிரீறுகளைக் கூறும் நூற்பாவில் 'அவைதாம்' இ, உ, ஐ, ஓ என்னு மிறுதி …… (சொ. 117) என இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் ,அவைதாம்' என்ற சொற்சீரடியைப் பாடமாக கொண்டுள்ளனர். ஆனால் தெய்வச் சிலையார் இச் சொற்சீரடிக்குப் பதிலாக 'அவற்றுள்' என்பதைச் சொற்சீரடியாகப் பயன்படுத்தியுள்ளார்.

இங்ஙனம் சொற்சீரடிகள் மாறிவரும் பயிற்சியைப் பொறுத்தும் பாடங்கள் வேறுபட்டுள. சொற்சீரடியுடன் தொடர்புடையனவாய் அமைந்த மொத்த வேறுபாடுகளின் எண்ணிக்கை 7.

7. 16· போலி

பொருள் வேறுபடாத நிலையில் சொல்லின் முதல், இடை, கடை ஆகிய மூவிடங்களிலும் ஓரெழுத்திற்குப் பதில் மற்றோர் எழுத்து நிற்பது போலி எனப்படும்.

மகர னகர ஒற்றுக்கள் போலியாய் அமைதல் மரபு. ஓர் எழுத்து நிற்குமிடத்தில் பிறிதோர் எழுத்துப் பயின்று வந்தாலும், போலியால் பொருள் வேறுபடுதல் இல்லை. எனினும் போலியாக எழுத்துக்கள் மாற்றம் பெறுதலால் பாடங்கள் வடிவ மாறுபாடு அடைகின்றன.

வினையியலில் 'அவ்விடன் அறிதல்' (சொ. 233) என்று இளம்பூரணர் கொண்ட பாடத்தைச் சேனாவரையர், நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் ஏற்றுள்ளனர். ஆனால் தெய்வச் சிலையார், 'அவ்விடம் அறிதல்' என னகர ஒற்றுக்குப் பதிலாக மகர ஒற்றைக் கொண்டுள்ளார். இது சொல்லதிகாரத்தில் போலியால் அமைந்த வேறுபாடு என்னும் பகுப்பிற்கு உரியது. பொருளதிகாரத்தில் 'நிலமென' (பொ. 50) 'வரைவுடம்படுதலும்' (பொ. 105) 'அகம் மலியூடல்' (பொ. 157) 'பொருட்பயன்வரினே' (பொ. 214) 'பயனிலவே' (பொ. 493) என வரும் ஐந்தும் இளம்பூரணர் கொண்ட பாடங்கள். 'நிலனென' 'வரைவுடன் படுதலும்', 'அகன்மலியூடல் 'பொருட்பயம்பட வரினே' பயமிலவே' என்று நச்சினார்க்கினியர் கொண்ட பாடங்களில் அனைத்து இடங்களிலும் மகர, னகரங்கள் மயங்கியுள.

7. 17. பகர—வகர மயக்கம்

இரு வேறு எழுத்துக்களால் முடியும் இரு சொற்கள் பொருள் மாற்றமின்றி நிற்றல் உண்டு. இதனை மயக்கம் என்றும், போலி என்றும் பெயர் கொடுத்துக் கூறுவர். பகர வகரங்கள் மயங்கி நிற்றல் தனித்துக் காணும் சிறப்புடையன. அளபு—அளவு—உருபு உருவு என்பன பு. வு என இருவேறு எழுத்துக்களால் முடிபு பெற்றாலும் பொருள் மாற்றமின்றி நிற்கின்றன. எழுத்ததிகாரத்தில் ப, வ என்ற இரு எழுத்துக்களும் மயங்கி வருதலால் அளபு—அளவு, உருபு—உருவு என்ற இரு வேறுபாடுகள் எழுந்துள்ளன.

எழுத்ததிகாரத்தில் பகர உகர வீற்றுச் சொற்களான அளபு, உருபு என்பவற்றையே அனைத்து இடங்களிலும் இளம்பூரணர் தம் பாடமாகக் கொண்டுள்ளார். 'மெய்யின் அளபே' (எ.11) 'அரையளபு' (எ 13) 'அளபு நுவன்றிசினே' (எ. 103) 'அளபாகும்' (எ.122) 'அளபொடு' (எ.480) என வருவன இளம்பூரணர் கொண்ட பாடங்கள். இவ்விடங்களிலெல்லாம் வகர உகரச் சொல்லான "அளவு" என்பதை நச்சினார்க்கினியர் தம் பாடங்களாகக் கூறுகின்றார்.

புணரியல் நூற்பாவில் 'உருபுகொளல் வரையார்' (எ. 141) என்றும், தொகைமரபு நூற்பாவில் 'தன்னுருபிரட்டலும்' (எ.161) என்றும் உருபு என்னும் சொல்லைப் பாடமாக இளம்பூரணர் கொண்டுள்ளார். 'உருபு' எனப் பாடங்கொண்ட இந்த இரு இடங்களிலும் இளம்பூரணர் 'உருபு' என்பதற்கு 'வடிவு' என்பதைப் பொருளாகக் கூறுகின்றார்.

'உருபு' என்ற சொல்லுக்கும் 'உருவு' என்ற சொல்லுக்கும் பொருள்வேறுபாடு இல்லை என்பதும் இளம்பூரணர் கருத்தாக அறிகின்றோம். இளம்பூரணர் நூன்மரபு நூற்பாவில் 'உருவு திரிந்துயிர்த்தலும்' (எ.17) எனப் பாடங்கொண்டு அங்கும் உருவு என்பதற்கு வடிவு என்றே பொருள் கொண்டிருப்பதால் இதனை அறியலாம். மேலும் இதனால் உருபு—உருவு என்ற இரு சொற்களுமே இருவேறிடங்களில் இளம்பூரணரால் பாடங்களாக ஆளப்பட்டுள்ளன என்பதையும், இவற்றுள் பெரும்பான்மையாக ஆளப்பட்ட பாடம் 'உருபு' என்னும் சொல்லே என்பதையும் அறியலாம்.

நச்சினார்க்கினியர் புணரியல் நூற்பாத் தொடருக்கு 'உருவு கொளல் வரையார்' என்றும், தொகை மரபு நூற்பாத் தொடருக்குத் 'தன்னுரு இரட்டலும்' என்றும் பாடங் கொண்டுள்ளார்.

உரையாசிரியர்கள் பகர வகர எழுத்து மயக்கத்தால் பிற இப்பாடங்களை அவரவர் கருத்திற்கேற்பக் கொண்டுள்ளனர் என்பதனை இதனால் அறியலாம். இப்பாடங்களிடையே பொருள் வேறுபாடில்லை.

எழுத்ததிகாரத்தில் பகர வகர மயக்கத்தால் அளபு, உருபு' என்ற சொற்கள் மயங்கி வந்தமையால் பாடவேறுபாடுகள் அமைந்ததுபோலச் சொல்லதிகாரத்திலும் அளவு, உருபு, என்ற சொற்களில் பகர வகரங்கள் மயங்கி வேறுபாடுகள் அமைந்துள்ளன. மேலும் 'பிரிபு' 'உயர்பு' 'கவர்பு' என்ற பெயர்ச்சொற்களிலும், படுப-படுவ என வினைச்சொல்லிலும் பகர வகர மயக்கம் தொடர்ந்துள்ளது.

சொல்லதிகாரம் விளிமரபில் விளியேற்கும் பெயர்கள் சேய்மையில் அளபிறந்து ஒலிப்பதைக் கூறும் நூற்பாவில் 'எல்லாப் பெயரும் அளபிறந்தனவே' (சொ.149) என இளம்பூரணர் 'அளபு' என்ற சொல்லையே எழுத்ததிகாரத்தில் கொண்டது போல இங்கும் பாடமாகக் கொண்டுள்ளார். எழுத்ததிகாரத்தில் 'அளவு' என்று இளம்பூரணர் கொண்ட பாடங்களுக்கெல்லாம் 'அளபு' என்பதைப் பாடமாகக் கொண்ட நச்சினார்க்கினியர், சொல்லதிகாரத்தில் இளம்பூரணரைப் பின்பற்றி, 'அளபு' என்பதையே தமது பாடமாகவும் கொண்டுள்ளார் என்பது அறியத்தக்கது. சேனாவரையர் கல்லாடர் ஆகியோரும் 'அளபு' என்பதையே பாடமாகக் கொண்டனர். தெய்வச்சிலையார் மட்டும் அனைவருக்கும் மாறாக 'அளவு' என்பதை இங்குப் பாடமாகக் கொண்டார்.

பகர வகர மயக்கத்தால் சொல்லதிகாரத்தில் நிகழும் பிறபாடங்களும், அவற்றைக் கொண்ட உரையாசிரியர்களும், பாடங்கள் பயிலும் நூற்பாக்களின் எண்ணிக்கையும் கீழே சுட்டப்பட்டுள்ளன.

பாடம்	உரையாசிரியர்கள்	நூற்பா எண்
உருபு-உருவு		
1. உருவென மொழியினும்	இளம்,நச்சி,கல்,ப.உரை	சொ· 24
உருபென மொழியினும்	சேனா, தெய்வ.	
2. அம்மூ உருபின	இளம்,சேனா,தெய்வ,கல்,ப,உரை	
அம்மூ உருவின	நச்சி	சொ. 157

ரிபு-பிரிவு

3. பிரிவு வேறுபடூஉம்	இளம்	
பிரிபு வேறுபடூஉம்	நச்சி, கல்.	
திரிபு வேறுபடூஉம்	சேனா, தெய்வ.	சொ. 217

உயர்பு-உயர்வு

4. உயர்பாகும்	இளம், சேனா, தெய்வ.	
உயர்வாகும்	நச்சி.	சொ. 295

கவர்பு-கவர்வு

5. கவர்வு	இளம், சேனா, நச்சி.	
கவர்பு	தெய்வ.	சொ. 356

படுப-படுவ

6. இடையெனப்படுப	இளம், நச்சி, கல்	
இடையெனப்படுவ	சேனா, தெய்வ.	சொ. 244

பொருளதிகாரத்தில் சார்பு, இழிபு, திரிபு, உயர்வு, வருப எனவரும் சொற்களின் இறுதியில் வகர, உகர எழுத்துக்கள் மயங்கி வருதலால் பாடங்கள் அமைந்துள.

பகர, வகர மயக்கத்தால் பொருளதிகாரத்தில் நிகழும் வேறு பாடுகள் கீழே தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

பாடம்	நூற்பா எண்	வேறுபாடு
சார்பு - சார்வு		
1. சார்பும் (இளம்)	43	சார்வும் (நச்சி)
2. சார்வொடு (இளம்)	487	சார்பொடு (பேரா) சார்போடு (நச்சி)

இழிபு - இழிவு

3.	இழிவே (இளம்)	91	இழிபே (நச்சி)
4.	இழிபடிக்கெல்லே (இளம் பேரா)	464	இழிவடிக்கெல்லே(நச்சி)

திரிபு - திரிவு

5.	திரிபின்றி (இளம், பேரா)	456	திரிவின்றி (நச்சி)
6.	திரிபின்றிமுடித்தல் (இளம்)	544	திரிவின்றி முடித்தல் (பேரா, நச்சி)

உயர்பு-உயர்வு

7.	உயர்படியாக (இளம், பேரா)	464	உயர்வடியாக (நச்சி)

வருப-வருவ

8.	வருவ உளவெனினும் (பேரா)	544	வருபவுளவேனும் (நச்சி)

இவற்றுள் உயர்பு-உயர்வு என்ற ஒன்று மட்டும் சொல்லதிகாரத்திலும் பயின்றது. அங்கு அமைந்தது போலவே உயர்பு என இளம்பூரணரும், உயர்வு என நச்சினர்க்கினியரும் இங்கும் கொண்டுள்ளனர். பேராசிரியர் இளம்பூரணரைப் பின்பற்றுகிருர். எஞ்சியவை பொருளதிகாரத்தில் பயின்ற புதிய பகர வகர மயக்கங்கள். தொல்காப்பியத்தில் பகர வகர மயக்கத்தால் நிகழ்ந்த பாடவேறுபாடுகளாக அமைந்தவை 24 ஆகும்.

7. 18. பால் மாற்றம்

பொருளதிகாரத்தில் மட்டும் அமைந்த இலக்கண வேறுபாடுகளும் சில உள. அவற்றுள் பால்மாற்றம் என்பது ஒன்று, இளம்பூரணர் ஆண்பால் சொற்களாகக் கொண்டவற்றைப் பெண்பால் சொற்களாகவும், பெண்பால் சொற்களாகக் கொண்டவற்றை ஆண்பால் சொற்களாகவும் பிறர் மாற்றிக் கொண்டுள்ளனர்.

களவியலில், 'கிழவோன்', (பொ. 105) என்று இளம்பூரணர் கொண்ட பாடத்தை நச்சிஞர்க்கினியர் 'கிழவோள் எனக்

கொள்கிறார். இதில் னகர ணகர ஒலிமயக்கத்தால் கிழவோன் கிழவோண் என ஆகிப் பின்னர் கிழவோள் என மாறியிருக்கலாம் எனக் கருதலாம்.

களவியலில் இளம்பூரணர் பாடங்களாகிய 'அவள்'(பொ.112) என்பது 'அவன்' என்றும், 'முயற்சிபெருள்' (பொ. 126) என்பது 'முயற்சிபெருன்' என்றும், பொருளியலில், 'அவள் வயின்' (பொ. 202) என்பது 'அவன் வயின்' என்றும் நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டுள்ளன. பெண்பாலாக அமைந்தவை இங்கு ஆண் பாலாக மாற்ற மடைந்துள்ளன.

7.19. பால் விகுதி மாற்றம்

ஒரே பாலுக்குரிய விகுதிகளில் ஒன்றுக்குப் பதிலாகப் பிறி தொன்று அமைவதாலும் பொருளதிகாரத்தில் பாடங்கள் வேறுபடுகின்றன.

புறத்திணையியலில் 'சேர்த்திக்கொண்டான்' (பொ. 77) என்றும், களவியலில் 'எனப்படுவாள்' (பொ·122) என்றும், 'கிழவற்கில்லை' (பொ. 133) என்றும் வரும் இளம்பூரணர் பாடங்கள் முறையே 'சேர்த்திக் கொண்டோன்' 'எனப்படுவோள்' 'கிழவோற் கில்லை' என நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டுள்ளன. பொதுவாக இளம்பூரணர் ஆண், ஆள் எனக் கொண்ட விகுதிகளை நச்சினார்க்கினியர் ஓன், ஓள் எனக் கொண்டார் என்பது இங்கு அமைந்த பொது அமைப்பு.

7.20. கால இடைநிலை மாற்றம்

பொருளதிகாரத்தில் மட்டும் பயின்ற பிறிதொருவகை வேறு பாடு கால இடைநிலை மாற்றம் என்பது. செய்யுளியலில், 'தொடையுணர்ந்தோரே' (பொ.375) எனவரும் இளம்பூரணர் பாடத்தைத் 'தொடையுணர்வோரே' எனப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும் கொண்டுள்ளனர். இங்குக் காலம் காட்டும் இடைநிலை மாற்றம் பெறுகிறது.

7. 21. விகாரம்

பொருளதிகாரத்தில் தொகுத்தல் விரித்தல் விகாரங்களும் பாடவேறுபாடு எழக் களமாக அமைந்துள்ளன. செய்யுளியலில் 'என்னுது' (பொ. 509) எனவரும் முழுச் சொல்லில் இடைக்குறைவு நேர்ந்து 'எனுது' என வேறுபட்டுள்ளது. 'என்னுது' என்பது இளம்பூரணர், நச்சினர்க்கினியர் கொண்ட பாடம். 'எனுது' என்பது பேராசிரியர் கொண்ட பாடம்.

மரபியலில் 'குணச்சொலும்' (பொ.620) எனவரும் தொகுத்தல் விகாரச் சொல்லை இளம்பூரணர் பாடமாகக் கொண்டார். 'குணச்சொல்லும்' என விரித்து முழுச் சொல்லாகப் பேராசிரிய பாடங்கொண்டார்.

7. 22. வினைஎச்சம் பெயரெச்சமாதல்

வினை எச்சச் சொற்கள் பெயரெச்சங்களாக மாறி அமைதலும் பொருளதிகாரத்தில் பயின்ற சிறப்புவகை. அகத்திணையியலில் 'சிவணி' (பொ.29) என்றும், களவியலில் 'மயங்கி' (பொ.105) என்றும், கற்பியலில் 'புல்லி' (பொ.144) என்றும் வரும் இளம்பூரணர் பாடங்கள் வினை எச்சங்களாக உள. இவை முறையே 'சிவணிய' என்றும், 'மயங்கி' என்றும், 'புல்லிய' என்றும் நச்சினர்க்கினியத்தில் பெயரெச்சங்களாக மாறி நின்று பொருள் வேறுபட்டுள்ளன.

இலக்கண வேறுபாடு என்னும் பெரும் பகுப்பில் அமைந்த மொத்தப் பிரிவுகளின் எண்ணிக்கை 22 ஆகும். இப்பிரிவுகளில் அடங்கிய மொத்தப் பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை 198 ஆகும். இவற்றுள் எழுத்ததிகாரத்தில் அமைந்தவை 28ம் சொல்லதிகாரத்தில் அமைந்தவை 48ம் பொருளதிகாரத்தில் அமைந்தவை 122-ம் ஆகும்.

8. ஒப்புமைநிலை வேறுபாடுகள்

ஏடுகளில் எழுத்துக்களிடையே அமைந்த தோற்ற ஒப்புமையாலும், ஏட்டுப் பாடங்களை உச்சரிக்குங்கால் ஏற்படும் ஒலி

ஒப்புமையாலும், எழுத்துக்களிடையே ஏற்படும் ஒலிமயக்கங்களாலும் பாடங்கள் வேறுபடுதல் இயல்பு. இம்முறையில் பகுக்கத்தக்கனவாக அமைந்த வேறுபாடுகள் இவண் சுட்டப்பெற்றுள.

8.1. தோற்ற ஒப்புமை

'இசைக்குமன் சொல்லே' (சொ.1) என்பது சொல்லதிகார முதல் நூற்பாத் தொடரில் இளம்பூரணர் கொண்ட பாடம். நச்சினார்க்கினியரும் இப்பாடத்தையே ஏற்றார். பிறர் இசைக்கு மன சொல்லே எனப்பாடங்கொண்டனர்.

'இல்லென மொழிப' (சொ. 105) என்பது இளம்பூரணரும், பழைய உரையாசிரியர் தவிரப் பிற உரையாசிரியர்களும் கொண்ட பாடம். பழைய உரையாசிரியர் இதனை இலவென மொழிப எனக் கொண்டுள்ளார்.

'பல் பொருட்கு' (சொ. 292) என இளம்பூரணர் கொண்ட பாடத்தைச் சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகியோர் 'பல பொருட்கு' என்று கொள்வர். இங்ஙனமே 'ஏற்றம்' (சொ. 331) என இளம்பூரணர் சேனாவரையர், தெய்வச்சிலையார் ஆகியோர் பாடங்கொண்டிருக்க நச்சினார்க்கினியர் 'எற்றம்' எனக் கூறிவேறுபடுகிறார். பிறிதொரு இடத்தில் 'பலபெயர்' (சொ.411) என இளம்பூரணர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர் ஆகியோர் கொண்ட பாடத்தைப் 'பல் பெயர்' எனக்கூறிச் சேனாவரையர் வேறுபடுகின்றார்.

இசைக்குமன்-இசைக்குமன, இல்லென-இலவென, பல்பொருட்-பல பொருட்கு, ஏற்றம்-எற்றம், பலபெயர்-பல்பெயர் எனவரும் இப்பாடவேறுபாடுகள் உரையாசிரியர்கள் கருத்துக்கியையக் கொள்ளப்பட்டனவாயினும் ஏடுகளில் இப்பாடங்களிடையே தோற்ற ஒப்புமை உள்ளது என்பது உணரத்தக்கதாகும். மெய்யெழுத்துக்கட்குப் புள்ளியின்மை, ல-வ எழுத்துக்களின் ஒப்புமைத் தோற்றம் சில குறில்-நெடில் வேறு பாடின்மை முதலிய ஏடெழுது முறைகளை உளங்கொண்டு பார்த்தால், இவ்வேறுபாடுகள் தோற்ற ஒப்புமை காரணமாக ஏடுகளில் பிறந்து உரையாசிரியர்களுக்குப் பாடங்களாயின என உணரலாம். எனவே தோற்ற ஒப்புமை என்னும் பகுப்பில் இவை அடக்குதற்கு உரியன. எழுத்ததிகாரத்தில் இவ்வகை வேறுபாடுகள் இல.

ஏடு எழுதுவோரின் எழுது முறையாலும், சில வேளைகளில் ஏடுகளில் எழுத்துப் பகுதிகளைச் செல்லரித்துவிடலாலும், ஓர் எழுத்துப் பிறிதொரு எழுத்தாகத் தோற்றங்காட்ட, அதனைப் பிறழ உணர்ந்த நிலையில் புதிய பாடம் உருவாகும். இம்முறையில் அமைந்தனவாகப் பகுக்கத்தக்க வேறுபாடுகள் சிலவும் உள. அவை கீழே சுட்டப் பெற்றுள.

இளம்-பாடம்	நூற்பா எண்	வேறுபடும் பாடங்கள்	வேறுபடும் உரையாசிரியர்
பின்வாவென்றலும்	(112)	பின்வரவென்றலும்	நச்சி.
நீவாவென்றலும்	(207)	நிவரவென்றலும்	நச்சி.
சீர்நிலை பெறவே	(335)	சீர்நிலை பெறலே	நச்சி. பேரா
ஏற்றலங்கடையே	(346)	ஒற்றலங்கடையே	பேரா. நச்சி.
செம்பொருளாயின	(430)	செம்பொருளாயின்	பேரா. நச்சி.
ஆங்கென	(440)	ஆங்கென்	பேரா. நச்சி.
உணர்த்தல்	(511)	உரைத்தல்	நச்சி.

உயிர் மெய் நெடில் குறி (ா) கைய 'ர' என்றும் 'னகர' மெய்யை உயிர் மெய்யாகவும், ணகரத்தை உயிர்மெய் ஐகாரக் குறியாகவும், (ை) வகரத்தை லகரமாகவும் கொள்ளும் ஒப்புமை நிலையில் பொருளதிகாரத்தில் இப்பாட வேறுபாடுகள் எழுந்துள்ளன.

8. 2. ஒலி ஒப்புமை

ஏடுகளை ஒருவர் படிக்க, மற்றவர்கள் அதனைப் படியெடுத்தல் ஏடுகள் பரவிய ஒருமுறை. ஏடு படிப்போர் நாவின் ஒலிப்பு நிலைப்பிறழ்ச்சியால் ஓர் எழுத்தொலியைப் பிறிதோர் ஒலியாக ஒலித்தலும், ஏடு படிப்பதைக் கேட்போர் செவியின் கேட்பு நிலைப் பிறழ்ச்சியால் ஓர் எழுத்தொலியைப் பிறிதோர் ஒலியாகக் கேட்டலும் இயல்பு, இக்காரணத்தால் பிறந்தனவாகக் கருதத்தக்க பாடவேறுபாடுகள் இத்தலைப்பில் பகுத்தற்குரியன.

இளம் / பேரா. பாடம்		நூற்பா எண்	வேறுபாடு	பேறுபாடு கொண்ட உரையாசிரியர்
காதல் கைம்மிக	(இளம்)	113	காதல்கைமிக	நச்சி.
அடிநிலைகாறும்	(இளம்)	409	அடிநிறைகாறும்	நச்சி.
முற்றடியின்றி	(இளம்)	428	முட்டடியின்றி	பேரா.
தொடைநிலை பெறுமே	(இளம்)	512	தொடர்நிலை பெறுமே	பேரா. நச்சி.
ஆங்கனமொழிகின்	(பேரா)	543	ஆங்ஙன மொழுகின்	நச்சி.

ஒலி ஒப்புமை நிலையில் பொருளதிகாரத்தில் நிகழும் இம்மாற்றங்களின் எண்ணிக்கை 5.

8. 3. ஒலிமயக்கம்

தகர நகர ஒலிகளும், ணகர னகர ஒலிகளும் னகர நகர ஒலிகளும், ரகரறகர ஒலிகளும், ளகர ழகர ஒலிகளும், ககர ஙகர ஒலிகளும்ஒலிப்பு நிலையில் மயங்கி நிற்றல் இயற்கை. இத்தகைய ஒலிமயக்கத்தால் நிகழும் பாடங்களும் ஒப்புமை நிலையில் கருதத்தக்கனவே.

'அவணுறு' (பொ. 207) என்று பொருளியலில் அமைந்த இளம்பூரணர் பாடம் 'அவனுறு' என நச்சினார்க்கினியரிடத்தில் வேறுபடுகிறது. 'தன்னிலை' (பொ. 98) என இளம்பூரணர் களவியல் நூற்பாவில் கொண்ட பாடம் 'தந்நிலை' என நச்சினார்க்கினியரிடத்தில் அமைந்தது.

கற்பியலில் 'புகர்ச்சியும்' (பொ. 143) 'ஏந்தலும்' (பொ. 166) என்ற இளம்பூரணர் பாடங்கள் 'புகற்சியும்' 'எற்றலும்' என நச்சினார்க்கினியரால் கொள்ளப்பட்டன.

பொருளியலில் வரும் 'வேட்கைக் கிளவியின்' (பொ. 205) என்ற இளம்பூரணர் பாடம், 'வேட்கைக் கிழவியின்' என்று நச்சி

ஞர்க்கினியத்தில் வேறுபடுகிறது. இதுபோல, மெய்ப்பாட்டியலில் வரும் 'அறனழிந்துரைத்தல்' (பொ. 265) என்ற இளம்பூரணர் பாடம் 'அறனளித்துரைத்தல்' எனப் பேராசிரியத்தில் வேறுபடு கிறது. இதில் ழகர ளகர ஒலிமயக்கத்தொடு தகர நகர இன எழுத்து மயக்கமும் சேர்ந்துள்ளது.

செய்யுளியலில் 'ஆங்கனம்' (பொ. 514) எனப் பேராசிரியர் கொண்ட பாடம் 'ஆங்ஙனம்' என நச்சினார்க்கினியரால் கொள்ளப் பட்டுள்ளதும் ஒலிமயக்கத்தால் அமைவதாகக் கருதத்தக்க பாட வேறுபாடே. எழுத்ததிகாரத்திலும் சொல்லதிகாரத்திலும் இத் தகைய வேறுபாடுகள் இல்லை.

ஒப்புமைநிலையில் தொல்காப்பியத்தில் அமைந்த வேறுபாடு கள் மூன்று பிரிவுகளில் மொத்தம் 24. இவற்றுள் சொல்லதிகாரத் தில் அமைந்தவை 5. எஞ்சிய அனைத்தும் பொருளதிகாரத்தில் அமைந்த வேறுபாடுகள்.

தொல்காப்பியத்தில் மூன்று அதிகாரங்களிலும் உரையாசிரி யர்கள் வேறு டும் 531 வேறுபாடுகளும் இக்கட்டுரைக்கண் ஐந்து பெரும்பகுப்பினுள் அடக்கி மொழியப்பட்டுள. பகுப்புக்கள், அவற்றின் பிரிவுகள், ஒவ்வொரு பிரிவின் கீழும் அதிகாரந்தோறும் அமைந்த வேறுபாடுகள் ஆகியன கீழே தொகுத்துப் பட்டியலில் காட்டப் பெற்றுள்ளன.

எண். பகுப்பு / பிரிவு	எழுத்ததி காரத்தில் அமைந் தவை	சொல்ல திகாரத்தில் அமைந் தவை	பொருள் அதிகாரத்தில் அமைந் தவை	மொத்தம்
1. எழுத்துவேறுபாடுகள்				
1. எழுத்துச் சேர்க்கை	2	2	8	12
2. எழுத்துவிடு படல்	2	2	21	25

3. எழுத்து மாற்றம்	—	—	6	6	45
4. எழுத்து முன்பின் இட மாற்றம்	—	2	—	2	

2. சொல்வேறுபாடுகள்

1. சொற்சேர்க்கை	—	2	5	7	19
2. சொல்விடுபடல்	1	—	7	8	
3. சொல் முன்பின் இடமாற்றம்	—	1	3	4	

3. பொருள் வேறுபாடுகள்

1. ஒருபொருள் வேறுசொல்	2	8	67	77	245
2. வேறுபொருள் வேறுசொல்	3	23	142	168	

4. இலக்கண வேறுபாடுகள்

குறில் - நெடில்

அ. குறில்-நெடிலாதல்	1	2	6	9	17
ஆ. நெடில்-குறிலாதல்	1	—	5	6	
இ. நெடில்-இருகுறிலாதல்	1	—	1	2	

2. ஒருமை - பன்மை

அ. ஒருமை - பன்மை ஆதல்	—	5	5	10	31
ஆ. பன்மை - ஒருமை ஆதல்	—	—	7	7	
3. இனவெழுத்து	—	1	7	8	
4. வல்லினம் இரட்டித்தல்	1		5	6	

5. சுட்டெழுத்து

அ) சேர்க்கை	—	—	2	2	
ஆ) விடுபடல்	—	1	—	1	
இ) மாற்றம்	—	—	4	4	
ஈ) செய்யுள் திரிபு	1	—	—	1	
6. உடம்படு மெய்	1	2	—	3}	3
7. அளபெடை					
அ) சேர்க்கை	—	1	2	3	9
ஆ) விடுபடல்	1	3	2	6	
8. சாரியை					
அ) எழுத்துச் சாரியை	5	—	—	5	6
ஆ) சொற்சாரியை	—	—	1	1	
9. வேற்றுமை உருபுகள்					
அ) சேர்க்கை	1	1	10	12	36
ஆ) விடுபடல்	—	3	7	10	
இ) மாற்றம்	—	—	10	10	
10. புணர்ச்சி	1	1	2	4}	4
11. தொடர்ப்பிரிப்பு	1	—	—	1}	1
12. இடைச் சொற்கள்					
ஆ) சேர்க்கை	—	3	6	9	
ஆ) விடுபடல்	4	6	6	16	
இ) மாற்றம்	1	1	4	6	35
ஈ) இடம் மாற்றம்	—	—	1	1	
உ) வேற்றுமை உருபுவரல்	—	2	1	3	
13) ஆக்கக் கிளவி	—	1	—	1}	1
14. எதிர்மறை எச்சப் பொருண்மைச் சொற்கள்	1	—	—	1}	1
15. சொற்சீரடி					
அ) சேர்க்கை	—	1	—	1	
ஆ) விடுபடல்	—	4	1	5	7
இ) மாற்றம்	—	1	—	1	

16. போலி	—	1	5	6}	6
17. பகர - வகர மயக்கம்	7	8	9	24}	24
18. பால் மாற்றம்	—	—	4	4}	4
19. பால் விகுதி மாற்றம்	—	—	3	3}	3
20. கால இடைநிலை மாற்றம்	—	—	1	1}	1
21. விகாரம்	—	—	2	2}	2
22. வினைஎச்சம் பெயரெச்சம் ஆதல்	—	—	3	3}	3
5. ஒப்புமைநிலை வேறுபாடுகள்					
1) தோற்ற ஒப்புமை	—	5	7	12	24
2) ஒலி ஒப்புமை	—	—	5	5	
3) ஒலி மயக்கம்	—	—	7	7	
	38	93	400	531}	

தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களிலும் அமைந்த பாடம் வேறுபடும் 542 நூற்பாக்களில் 894 இடங்களில் உள்ள 1040 வேறுபாடுகளையும் முழுமையான கண்ணோட்டத்தில் பகுப்பாய்வு செய்யும் பணியின் ஒரு பகுதி இது. உரையாசிரியர்கள் தமக்குள் வேறுபடும் 531 இடங்கள் இக்கட்டுரைக்கண் பகுத்து அமைக்கப்பட்டுள்ளன.

பாட வேறுபாடுகளின் அமைப்பு நிலையை அடிப்படையாகக் கொண்டும் அவற்றின் வடிவ நிலையில் நிகழ்ந்த மாறுபாட்டை அடிப்படையாகக் கொண்டும் இவ்வேறுபாடுகள் ஐந்து பெரும் பிரிவுகளில் அடங்கிய 34 உட்பிரிவுகளில் இக்கட்டுரையில் பகுத்துக் கூறப்பட்டுள்ளன. இப்பகுப்பு நிலையினால் பொருள் வேறுபாடு என்னும் பகுப்பில் அடங்கும் பாட வேறுபாடுகளின் எண்ணிக்கையும், இலக்கண வேறுபாடுகள் என்னும் பகுப்பில் அடங்கிய உட்பிரிவுகளில் எண்ணிக்கையும் மிகுதியான அளவில் உள்ளதை அறியலாம்.

3. தொல்காப்பியப் பதிப்புக்களும் பாடவேறுபாடுகளும்

தொல்காப்பியத்தின் மூலமும் உரையும் பல பதிப்புக்களாகத் தொகுப்பாகவும், தனித்தனியாகவும் வெளிவந்துள்ளன. பல்வேறு ஆண்டுகளில், பல்வேறு நிலைகளில் அவ்வப்போது வெளிவந்த பதிப்புக்களில் அமைந்த மூலபாடங்கள், அவற்றின் வேறுபாடுகள் குறித்து ஆய்தல் பாடவேறுபாட்டு நோக்கில் இன்றியமையாத பணி.

பதிப்பாசிரியர்கள், மூலமாகக் கொண்ட ஏடு அல்லது பதிப்பில் காணப்பெறும் பாடங்களைத் தங்கள் பதிப்பிலும் மூல பாடங்களாகக் கொண்டிருப்பர். அல்லது பொருளுணர்ச்சியின் அடிப்படையில் சில பாடங்களைத் தாங்களே திருத்தியும் புதுக்கியும் வெளியிட்டிருப்பர். ஒரே உரையை வெளியிட்ட பல பதிப்புக்களில், அவரவர் கொண்ட மூல ஏடுகளுக்குத்தகப் பாடங்களும் வேறுபட்டு அமைதல் இயற்கையே.

பதிப்புக்களில் அமைந்த பாடங்கள், அவற்றின் வேறுபாடுகள், அவற்றின் வளர்ச்சி நிலை, பாடங்களைத்திருத்துவதிலும் வேறுபடுத்துவதிலும் பதிப்பாசிரியர்கள் கொண்ட பங்கு ஆகியன இப்பகுதியின் ஆய் பொருள்கள்.

1. பதிப்புக்கள்

தொல்காப்பியப் பதிப்புக்கள் 1849 ஆம் ஆண்டு முதல் இன்று வரை ஏறத்தாழ 130 ஆண்டுகால வரலாற்று நோக்குக்கு உரியன.

தொல்காப்பியப் பதிப்புக்களை ஆறு வகையினவாகப் பிரித்து ஆய்தல் பொருந்தும். தொல்காப்பிய நூற்பாக்களின் மூலம் மட்டுமே கொண்ட மூலப் பதிப்புக்கள் ஒருவகை. அதிகார வாரியாக உரையாசிரியர்களின் உரைகளோடு வெளியிடப் பெற்ற உரைப்பதிப்புக்கள் இரண்டாம் வகை. தொல்காப்பியப் பொருண்மையைக் களமாகக் கொண்டு எழுதப்பெறும் ஆய்வுரைகளிலும், ஆய்வு நூல்களிலும் ஆங்காங்கே தொல்காப்பிய நூற்பாக்களை மேற்கோள்களாகப் பெற்ற ஆய்வுப் பதிப்புக்கள் மூன்றும் வகை. மேற்கொள் நிலையில் தொல்காப்பிய நூற்பாக்கள் சுட்டப்பெற்ற தனித்தனி ஆய்வுக் கட்டுரை

களும் மூன்றும் வகைக்குள் அடக்கிக் கொள்ளுதற்குரியன. தொல்காப்பியத்துடன் நன்னூல் மற்றும் பிற இலக்கண நூல்களை ஒப்பிட்டு ஆய்வு நிகழ்த்தப்பெறும் **ஒப்பாய்வுப்பதிப்புக்கள்**, வேறுபட்ட பல்வேறு உரைகளைத் தொகுத்து அமையும் **உரைவளப்பதிப்புக்கள்**, தெளிவுரை, விளக்கவுரை, குறிப்புரை என்று தொல்காப்பிய நூற்பாக்களுக்குப் புதுமுறையில் விளக்கம் கூறுவனவாக அமைந்த **புத்துரைப் பதிப்புக்கள்** ஆகியன எஞ்சிய பிற மூன்று வகைகள்.

இவண் சுட்டப்பெற்ற அடிப்படையில் கடந்த 130 ஆண்டுகளாக வெளியிடப்பெற்ற தொல்காப்பியப் பதிப்புக்கள் வகைவாரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

1.1. மூலப் பதிப்புக்கள்

தொல்காப்பிய நூற்பாக்களின் மூலம் மட்டும் தொகுத்து வெளியிடப் பெற்ற மூலப் பதிப்புக்கள் பல உள. 1858 ஆம் ஆண்டு முதல் தொல்காப்பிய மூலப் பதிப்புக்கள் பல்வேறு ஆண்டுகளில் பல்வேறு பதிப்பாசிரியர்களால் வெளியிடப்பெற்றுள்ளன.

பதிப்பாசிரியர்	பதிப்பகம்/பதிப்பாளர்	முதலில் பதிப்பிக்கப் பெற்ற ஆண்டு
எஸ். சாமுவேல் பிள்ளை (தொ. நன்)	—	1858
பு. சி. புன்னைவனநாதன்	மதுரை	1922
கா. நமச்சிவாய முதலியார் (எ. சொ)	வி. குமாரசாமிநாயுடு	1922
,, ,, (பொ)	,, ,,	1924
தி. சு. பாலசுந்தரம்	கழகம்	1943
மே. வி. வேணுகோபாலப்பிள்ளை வி. மு. சுப்பிரமணியம் மு. சண்முகம்பிள்ளை	மர்ரே	1960
க. ப. அறவாணன்	தமிழ்க்கோட்டம், சென்னை	1975

இவற்றில் முதலிரு பதிப்புக்கள் பாட வேறுபாட்டு நோக்கில் துணை புரிவனவல்ல. கா. நமச்சிவாய முதலியாரின் தொல்காப்பியம்-எழுத்து, சொல், தொல்காப்பியம் - பொருளதிகாரம் ஆகிய இரு நூல்களிலும் அடிக்குறிப்புக்களில் சில பாடவேறுபாடுகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. இப்பதிப்பில் எழுத்து. சொல்லதிகாரங்களின் மூலபாடங்கள் இளம்பூரணத்தை அடியொற்றியும் அமைந்-துள்ளன[1].

தி. சு. பாலசுந்தரனார் (இளவழகனார்) பதிப்பாசிரியராக அமைந்த கழக மூலப் பதிப்பு நச்சினார்க்கினியரும், பேராசிரியரும் கொண்ட மூல பாடங்களைக் கொண்டு பதிப்பிக்கப் பெற்றுள்ளது இளம்பூரணர் கொண்ட பாடங்களின் வேறுபாடுகள் 8 இடங்களில் மட்டும் அடிக்குறிப்புக்களாக இப்பதிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ளன

மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை, வி. மு. சுப்பிரமணியம், மு. சண்முகம் பிள்ளை ஆகியோரைப் பதிப்பாசிரியர்களாகக் கொண்டு வெளிவந்த மர்ரே பதிப்பகத்தின் மூலப் பதிப்பு, பாட வேறுபாட்டு நோக்கில் பெரிதும் பயன்தரும் பதிப்பாகும். எந்த உரையாசிரியரையும்சார்ந்து 'மூலபாடங்கொள்ளாமல், யார்கொண்ட மூலபாடம் பொருள் தெளிவுக்குப் பயன்படுகிறதோ அதனை இப் பதிப்பின் மூலபாடமாகப் பதிப்பாசிரியர்கள் கொண்டுள்ளனர் என் பதும், தங்கட்குக் கிடைத்த பிற அனைத்து வேறுபாடுகளும் நூலின் இறுதியில் பிற்சேர்க்கையாகத் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன என்பதும் இப்பதிப்பின் சிறப்புக்கூறுகள்.[2]

மர்ரே பதிப்பின் பிற்சேர்க்கையில் பாட வேறுபாடுகள் என்ற தலைப்பில் எழுத்ததிகாரத்தில் 30 வேறுபாடுகளும், சொல் லதிகாரத்தில் 74 வேறுபாடுகளும், பொருளதிகாரத்தில் 483 வேறு பாடுகளும் தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. இத்தொகுப்பில், மூல பாடங்களுக்குப் பதிப்புக்களிலும் ஏடுகளிலும் 1963ஆம் ஆண்டு வரை கிடைத்த அனைத்து வேறுபாடுகளும் ஒரு சேரத் தொகுக் கப்பெற்றிருப்பது பாட வேறுபட்டு ஆய்வில் சிறப்பாகப் பயன்

1. தொ. பொ. நமச்சிவாய முதலியார் (1924) பதிப்பு, முன்னுரை

2. தொ. மர்ரே (1960) - பதிப்புரை

படத்தக்க பணியாகும். 'மூலப் பதிப்புக்களிலும் உரைப்பதிப்புக் களிலும் பாட வேறுபாடுகள் சுட்டப்படுவது உண்மையாயினும் 1960இல் வெளிவந்த மர்ரே மூலப்பதிப்பின் பாடபேதங்கள் அனைத்தும் (பெரும்பாலான) எழுத்து, சொல், பொருள் மூன்றுக் கும் ஒருங்கே தொகுத்திருப்பது தொல்காப்பிய வளர்ச்சியில் ஒருமைல்கல்லாகும்.'' என்று[1] இப்பாட வேறுபாட்டுத் தொகுப்புப் பணி பாராட்டப் பெறும்.

தொல்காப்பியக் களஞ்சியம் என்ற நூலின் பதிப்பாசிரியர் க. ப. அறவாணன், இந்நூலின் இறுதியில் பாட வேறுபாடுகள் என்ற தலைப்பில், வேறுபாடுகளின் தொகுப்பினை அளித்துள்ளார். இது மர்ரே பதிப்பைப் பின்பற்றி அமைந்துள்ளது.

1. 2. உரைப் பதிப்புக்கள்

தொல்காப்பிய எழுத்ததிகாரத்துக்கு இளம்பூரணர், நச்சினார்க் கினியர் ஆகிய இருவர் உரைகள் உள. சொல்லதிகாரத்துக்கு இளம்பூரணர், சேனாவரையர், தெய்வச்சிலையார், நச்சினார்க்கினியர், கல்லாடர், பெயர் அறியப் பெறாத பழைய உரைகாரர் ஆகியோரின் உரைகள் உள. பொருளதிகாரம் முழுமைக்கும் இளம்பூரணர் உரை உள்ளது. அகம், புறம், களவு, கற்பு, பொருள், செய்யுளியல் என்ற ஆறு இயல்களுக்கு நச்சினார்க்கினியர் உரையும், மெய்ப்பாடு உவமம், செய்யுளியல், மரபியல் என்ற நான்கு இயல்களுக்குப் பேராசிரியர் உரையும் உள. உரையாசிரியர்கள் கொண்ட தொல் காப்பிய மூலபாடங்கள் அந்தந்த உரைப்பதிப்பில் இடம் பெறும். அதிகார வாரியாக வெளிவந்த உரைப் பதிப்புக்களும், பாட வேறு பாட்டு ஆய்வு நோக்கில் அப்பதிப்புக்களின் சிறப்புக்களும் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

---

1. தொல்காப்பியச் சிந்தனைகள்-தொல்காப்பியப் பதிப்புக்கள். ச. மெய்யப்பன், ப. 48.

1. 2. 1. எழுத்து-இளம்பூரணம்

எழுத்ததிகாரம் - இளம்பூரணர் உரைக்குரிய பதிப்புக்கள் நான்கு, அவை கீழே பட்டியலில் தரப்பட்டுள்ளன.

பதிப்பாசிரியர்	பதிப்பகம்/பதிப்பாளர்	ஆண்டு
சுப்பராயச் செட்டியார்	பூவிருந்தவல்லி கன்னியப்ப முதலியார்	1868
வ. உ. சிதம்பரம்பிள்ளை	அ த் நியர் அச்சகம், அம்பாசமுத்திரம்	1928
தேவநேயப் பாவாணர்	கழகம்	1955
கு. சுந்தரமூர்த்தி		1969

இவற்றுள், சுப்பராயச்செட்டியாரின் முதற் பதிப்பு செம்மை பெறாத பதிப்பு; பாடவேறுபாடுகள் இடம் பெறாதது.[1]

வ. உ. சிதம்பரம்பிள்ளையின் பதிப்பு ஓரளவு செம்மைசான்றது. பாடவேறுபாடுகளும், உரை வேறுபாடுகளும் சில இடங்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. 1941ல் தூத்துக்குடி விக்டோரியா அச்சகத்தில் இதன் மறுபதிப்பு எவ்வித மாற்றமுமின்றி வெளியிடப்பட்டுள்ளது;

கழகத்தின் சார்பில் 1955ல் வெளிவந்த இளம்பூரணப் பதிப்பில் அடிக்குறிப்பில் சில பாடவேறுபாடுகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. 1969ல் கு. சுந்தரமூர்த்தியைப் பதிப்பாசிரியராகக் கொண்டு வெளிவந்த பதிப்பும் அடிக்குறிப்பில் பாட வேறுபாடுகளைப் பெற்றுள்ளது. மேலும் பதிப்பாசிரியரின் ஆராய்ச்சி முன்னுரைப் பகுதியில் பாட வேறுபாடுகள் என்ற பிரிவில் இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் வேறுபடும் இடங்களாக 35 இடங்கள் தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

1. தொ. எ. இளம். கு. சுந்தரமூர்த்தி, பதிப்புரை. ப. 6

1. 2. 2. எழுத்து - நச்சினார்க்கினியர்

எழுத்ததிகாரத்துக்குரிய நச்சினார்க்கினியர் உரையின் பதிப்புக்கள் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

பதிப்பாசிரியர்	பதிப்பகம்/பதிப்பாளர்	ஆண்டு
மழவை மகாலிங்க ஐயர்	—	1849
சி. வை. தாமோதரம்பிள்ளை	—	1901
த. கனகசுந்தரம்பிள்ளை	கழகம்	1923
சி. கணேசையர்	நா. பொன்னையா	1937
தேவநேயப் பாவாணர்	கழகம்	1944
கு. சுந்தரமூர்த்தி	—	1965
—	சரசுவதிமகால், தஞ்சை	1967

எழுத்ததிகாரம் இளம்பூரணப் பதிப்பைவிட நச்சினார்க்கினியத்துக்குப் பதிப்புக்கள் மிகுந்துள்ளதைப் பட்டியலால் அறியலாம்.

தொல்காப்பியப் பதிப்புக்களிலேயே முதல் முதலாக வெளிவந்த சிறப்பு மழவை மகாலிங்க ஐயரின் எழுத்து-நச்சினார்க்கினியப் பதிப்புக்கு உரியது. இப்பதிப்பு கிடைத்தற்கரியது.

சி. வை. தாமோதரம் பிள்ளையின் பதிப்பு, பல ஏடுகளைப் பார்த்துத்திருத்தம் செய்து வெளியிடப் பெற்ற பதிப்பாகும். ஆங்காங்கே பாட வேறுபாடுகள் சில குறிப்பிடப்பட்டுள்ளன. த. கனகசுந்தரம்பிள்ளையைப் பதிப்பாசிரியராகக் கொண்ட கழகப் பதிப்பில் ஒரே இடத்தில் மட்டுமே அடிக்குறிப்பில் ஒரு வேறுபாடு சுட்டப் பெற்றுள்ளது. இது 1933ல் இரண்டாம் பதிப்பாக வெளிவந்தது.

பாடவேறுபாட்டுப் பணியில் சி. கணேசையரின் பதிப்பு, சிறப்பாகக் குறிப்பிடத் தக்கது. "இவர்தம் பதிப்பினைப் பாட நுண் பதிப்பு எனப் பகரலாம். இவருக்கு முன்னர் பல பதிப்புக்கள் வெளிவந்தமையாலும், தொல்காப்பியம் செவ்விய வடிவம் பெற்றமையாலும் ஐயர் அவர்கள் முயற்சி பொற்குடத்திற்குப் பொட்டிட்டதுபோல விளங்கிற்று" என இவரது பணி பாராட்டப்பெறுகின்றது.[1]

[1] தொல்காப்பியச்சிந்தனைகள் - தொல்காப்பியப் பதிப்புக்கள், ச. மெய்யப்பன், ப. 48.

தேவநேயப் பாவாணரைப் பதிப்பாசிரியராகக் கொண்ட கழகப் பதிப்பு 1944ல் முதற் பதிப்பாக வெளிவந்தது. தொடர்ந்து பல மறு பதிப்புக்கள் வெளியிடப் பெற்றுள்ளன. இதில் அடிக்குறிப்பில் பாட வேறுபாடுகள் சுட்டப்பட்டுள.

கு. சுந்தரமூர்த்தியின் பதிப்பில் இளம்பூரணர் கொண்ட வேறுபட்ட பாடங்கள் நூலின் அடிக்குறிப்பில் குறிப்பிடப் பெற்றுள்ளன. சரசுவதி மகால் வெளியீடு பாடவேறுபாட்டு நோக்கில் மிகுதியும் துணைபுரிவதன்று.

1. 2. 3. சொல்-இளம்பூரணம்

சொல்லதிகாரத்திற்குரிய இளம்பூரணர் உரைக்கு வெளிவந்த பதிப்பு ஒன்றுமட்டுமே.

கு. சுந்தரமூர்த்தியைப் பதிப்பாசிரியராகக் கொண்டு மறு பதிப்புக்கள் சிலவும் வெளிவந்துள. கழகம் இந்நூலை 1963ல் முதன் முதலில் வெளியிட்டுள்ளது.

கு. சுந்தரமூர்த்தியின் பதிப்பின் அடிக்குறிப்பில் சில பாட வேறுபாடுகள் குறிப்பிடப் பெற்றுள்ளன.

1. 2. 4. சொல்-சேனாவரையம்

சொல்லதிகாரத்தின் சேனாவரையர் உரை மிகுதியும் வழக்குப் பயிற்சி உடையது. ஆதலால் மிகுதியான எண்ணிக்கையில் இதற்குப் பதிப்புக்களும் வெளிவந்துள்ளன.

பதிப்பாசிரியர்	பதிப்பகம்/பதிப்பாளர்	ஆண்டு
இராசகோபால்பிள்ளை	பு. கந்தசாமி முதலியார்	1868
ஆறுமுகநாவலர்	சி. வை. தாமோதரம்பிள்ளை	1886
கந்தசாமியார்	கழகம்	1923
சி. கணேசையர்	நா. பொன்னையா	1938
பவானந்தம்பிள்ளை	—	1941
—	தனலெட்சுமி புக்டிப்போ	1955
கு. சுந்தரமூர்த்தி	—	1965

இவற்றுள், இராசகோபால் பிள்ளையின் பதிப்பு பாடவேறுபாட்டு ஆய்வுக்குப் பயனற்றது. எனினும் ஏட்டிலிருந்து அச்சுக்கு வந்த பெருமை இப்பதிப்புக்கு உரியதாகும்.

ஆறுமுக நாவலரைப் பதிப்பாசிரியராகவும், சி. வை. தாமோதரம்பிள்ளையைப் பதிப்பாளராகவும் கொண்டது ஒரே பதிப்பு "தமிழ் நூல் பதிப்பு வரலாற்றில் 19ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் சிறப்புடன் விளங்கியவர் ஆறுமுகநாவலர் அவர்கள். தொல். சொல். சேனுவரையத்தைச் சி. வை. தா. அவர்களைக் கொண்டு 1892இல் சிறந்த முறையில் வெளியிட்டுள்ளார்கள். பிழையற்ற பதிப்பு என்பது அப்பதிப்பின் தனிச்சிறப்பு" என இப்பதிப்புப் பாராட்டப் பெறுகின்றது.[1]

கழகத்தின் சார்பில் கந்தசாமியாரைப் பதிப்பாசிரியராகக் கொண்ட சேனுவரையப் பதிப்பில், அடிக்குறிப்பில் பாட வேறுபாட்டுக் குறிப்புக்கள் உள. பின்னர் இப்பதிப்பு, தேவநேயப் பாவாணரின் குறிப்புரை, ஆ. பூவராகம் பிள்ளையின் விளக்கவுரை ஆகியவற்றோடு பல முறை மறுபதிப்புக்களாக வெளியிடப் பெற்றுள்ளது. அவற்றிலும் சில பாடவேறுபாடுகள் அடிக்குறிப்புக்களாக உள.

கணேசையரின் பதிப்பிலும் இன்றியமையாத பாட வேறுபாடுகள் அடிக் குறிப்பில் இடம் பெற்றுள்ளன. பவானந்தம் பிள்ளை பதிப்பு, தனலட்சுமி புக் டிப்போ பதிப்பு ஆகியன பாட வேறுபாட்டுநோக்கில் பயன்படுவன அல்ல.

கு. சுந்தரமூர்த்தியின் பதிப்பில் அடிக்குறிப்புக்களில் பல இடங்களில் பாடவேறுபாடுகள் சுட்டப்பெற்றுள்ளன. மேலும் தன் ஆராய்ச்சி முன்னுரையில் 'பாட பேதமும் நூற்பா அமைப்பும்' என்ற பகுதியில் "சொல்லதிகார உரையாசிரியர்கள் அறுவரில் சேனுவரையர் மட்டும் தனித்துப் பாடம் கொள்கின்ற இடம் ஒன்றேயாகும்." எனப் பாட வேறுபாட்டு நோக்கில் துல்லியமான குறிப்பையும் தருகின்றார் பதிப்பாசிரியர்.

1 தொல்காப்பியச் சிந்தனைகள்-தொல்காப்பியப் பதிப்புக்கள், ச. மெய்யப்பன், ப. 44.

1. 2. 5. தெய்வச்சிலையார்

தெய்வச்சிலையாரின் சொல்லதிகார உரைக்கு இருபதிப்புக்கள் உள.

பதிப்பாசிரியர்	பதிப்பகம்/பதிப்பாளர்	ஆண்டு
ஆர். வேங்கடாசலம்	கரந்தைத் தமிழ்ச் சங்கம்	1929
கு. சுந்தரமூர்த்தி	கழகம்	1963

கரந்தைத் தமிழ்ச்சங்கப் பதிப்பில் சில இடங்களில் பாடவேறுபாடுகள் அடிக்குறிப்பில் சுட்டப்பெற்றுள்ளன. மூல ஏட்டில் பிழையான பாடங்கள் இருப்பினும் பிழையென அறிந்தே அச்சில் வெளிப்படுத்த வேண்டும் என்ற நோக்கோடு இப்பதிப்பு ஒரு சில இடங்களில் பிழையான பாடங்களோடும் வெளியிடப்பட்டுள்ளது. பின்னர் செம்மையான ஏடு கிடைத்து அதன் மூலம் திருத்தம் பெற்ற பகுதிகள், நூலின் பிற்சேர்க்கையாக இணைக்கப்பட்டுள்ளன. இம்முறையில் தெய்வச்சிலையார் கொண்ட மூல பாடங்கள் திருத்தம் பெற்றுள்ளன. கு. சுந்தரமூர்த்தியின் கழகப் பதிப்பு, பிற பதிப்புக்களைப் போல அடிக்குறிப்பில் பாடவேறுபாடுகளைப் பெற்றுள்ளது.

1. 2. 6. சொல்-நச்சினார்க்கினியம்

சொல்லதிகாரம் நச்சினார்க்கினியத்துக்கு உள்ள பதிப்புக்கள் ஐந்து. அவை கீழே குறிப்பிடப் பட்டுள்ளன.

பதிப்பாசிரியர்	பதிப்பகம்/பதிப்பாளர்	ஆண்டு
மழவை மகாலிங்க ஐயர்	—	185
சி. வை. தாமோதரம்பிள்ளை	—	1892
மே. வீ. வேணுகோபாலப்பிள்ளை	பவானந்தர் கழகம்	1941
கு. சுந்தரமூர்த்தி	கழகம்	1962
இராம. கோவிந்தசாமிப்பிள்ளை	சரசுவதிமகால், தஞ்சை	1962

மழவை மகாலிங்க ஐயரின் சொல்-நச்சினுக்கினியப் பதிப்பு, சொல் நச்சினுர்க்கினியருரைக்கு முதலில் வெளிவந்த பதிப்பு; கிடைத்தற்கரியது.

சி. வை. தாமோதரம்பிள்ளை பதிப்பில் ஒரு சில பாட வேறு பாடுகள் மட்டும் அடிக்குறிப்பில் இடம் பெற்றுள்ளன. பவானந்தர் கழகப் பதிப்பில் இடம் பெற்ற பாட வேறுபாடுகளும் ஒரு சிலவே. கழகப் பதிப்பில் கு. சுந்தரமூர்த்தியின் ஆராய்ச்சி முன்னுரைப் பகுதியில் நச்சினுர்க்கினியர் கொண்ட இரு பாடங்கள் பொருத்த மாக அமைந்த சிறப்பு விளக்கப்பட்டுள்ளது. அடிக்குறிப்பிலும் பாடவேறுபாடுகள் இடம் பெற்றுள்ளன. சரசுவதிமகால் பதிப்பிலும் சில வேறுபாடுகள் சுட்டப்பெற்றுள்ளன.

1. 2. 7. சொல்-கல்லாடம்

கல்லாடனுரின் சொல்லதிகார உரை அண்மைக் காலத்தில் தான் வெளியிடப்பெற்றது. கீழே குறிப்பிட்டுள்ள இரு பதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

பதிப்பாசிரியர்	பதிப்பகம்/பதிப்பாளர்	ஆண்டு
கு. சுந்தரமூர்த்தி	கழகம்	1964
தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர்	தமிழ்நாடு அரசு	1971

கழகப் பதிப்பு, அடிக்குறிப்பில் பாடவேறுபாடுகளைப் பெற்றுள்ளது. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுரின் கல்லாடப் பதிப்பில் ஏடுகளில் கண்ட பிழைப்பாடங்கள் அனைத்தும் ஆங்காங்கே அடிக் குறிப்பில் விரிவாகச் சுட்டப்பெற்றுள்ளன. கல்லாடனுர் கொண்ட மூல பாடங்களில் மட்டும் 104 வேறுபாடுகள் இப்பதிப்பில் சுட்டப் பெற்றுள்ளன என்பது அறியத்தக்கது. மேலும் பிற பதிப்புக்களின் அடிக்குறிப்பில் பிற உரையாசிரியர் கொண்ட பாடங்களும் பிற ஏடுகளில் காணப்பெறும் பாடங்களும் குறிக்கப்படுதல் மரபு. ஆனல் கல்லாடர் உரைப்பதிப்புக்காகக் கொள்ளப்பட்ட கல்லாடர் உரையின் பல்வேறு மூல ஏடுகளில் மட்டுமே இந்த 104 வேறு பாடுகள் உள்ளதாகக் காட்டப் பெற்றிருப்பது இப்பதிப்பில் குறிப்பிடத்தக்க வேறுபாடாகும்.

சொல்லதிகாரத்தில் இடையியலில் 10ஆம் நூற்பா வரையி லுமே கல்லாடர் உரை உள்ளது.

1. 2. 8 சொல்-பழைய உரை

தொல்காப்பியச் சொல்லதிகாரத்துக்கு அமைந்த பழைய உரை தனிப்பதிப்பாக வெளியிடப் பெறவில்லை; கல்லாடர் உரைப் பதிப்புடன் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. வேற்றுமை மயங்கியல் 33ஆம் நூற்பா வரையிலுமே அமைந்தது பழைய உரை.

பதிப்பாசிரியர்	பதிப்பகம்/பதிப்பாளர்	ஆண்டு
கு. சுந்தரமூர்த்தி	கழகம்	1964
தெ. பொ. மீனாட்சிசுந்தரனார்	தமிழ்நாடு அரசு	1971

இரு பதிப்புக்களிலும் பிறவற்றைப் போல அடிக்குறிப்பில் பாட வேறுபாடுகள் அமைந்துள்ளன.

1. 2. 9. பொருள்-இளம்பூரணம்

பொருளதிகாரம் இளம்பூரணத்துக்கு வெளியான பதிப்புக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

பதிப்பாசிரியர்	பதிப்பகம்/பதிப்பாளர்	ஆண்டு
வ. உ, சிதம்பரம்பிள்ளை (1, 2 இயல்)	——	1928
,, ,, (3, 5 இயல்)	——	1933
வ. உ. சிதம்பரம் பிள்ளை (6-9 இயல்)	——	1935
	கழகம்	1953

வ. உ. சி. பதிப்பு, கழகப் பதிப்பு, ஆகியனவற்றில் அடிக் குறிப்பில் சில பாடவேறுபாடுகள் சுட்டப்பெற்றுள.

1. 2. 10. பொருள்-நச்சினார்க்கினியர்

பொருளதிகாரம் நச்சினார்க்கினியத்துக்கு மிகுதியாக உரைப் பதிப்புக்கள் வெளிவந்துள்ளன.

பதிப்பாசிரியர்		பதிப்பகம்/பதிப்பாளர்	ஆண்டு
தாமோதரம்பிள்ளை	1-5 இயல்	——	1885
எஸ். பவானந்தம் பிள்ளை	1-5 இயல்	——	1916
ரா. ராகவையங்கார் வையாபுரிப்பிள்ளை,	செய்யுளியல்,	மதுரைத் தமிழ்ச் சங்கம்	1917
ம. நா. சோமசுந்தரம் பிள்ளை	1-5 இயல்	எஸ். கனகசபாபதிப் பிள்ளை	1934
——	1-2 இயல்	கழகம்	1947
சி. கணேசையர்	1-5 இயல்	——	1948
——	3-5 இயல்	கழகம்	1950
கு. சுந்தரமூர்த்தி	செய்யுளியல்	கழகம்	1965

தாமோதரம்பிள்ளையின் பதிப்பு, ஏட்டிலிருந்து பெயர்த்து வெளியிடப்பெற்ற சிறப்புக்குரிய முதற் பதிப்பு. அதனைத் தொடர்ந்து எஸ். பவானந்தம்பிள்ளை, பொருள்-நச்சினார்க்கினியத்தைப் பதிப்பித்துள்ளார். இவ்விரு பதிப்புக்களும் கிடைத்தற்கரியன.

எஸ். வையாபுரிப் பிள்ளையால் பரிசோதிக்கப்பட்டு, ம. நா சோமசுந்தரம் பிள்ளையால் திருத்தங்கள் செய்யப்பட்டு, திரிசிரபுரம் எஸ். கனகசபாபதிப்பிள்ளையால் 1934ல் வெளியிடப் பெற்ற பதிப்பில் அடிக்குறிப்பில் ஒரு சில பாடவேறுபாடுகள் குறிப்பிடப் பெற்றுள்ளன.

பின்னர் கழகவழியே 1947, 1950 ஆம் ஆண்டுகளில் வெளியான இரு பதிப்புக்களிலும், 1948ல் வெளியான கணேசையரின் பதிப்பிலும் அடிக்குறிப்புக்களாக இன்றியமையாத பாடவேறுபாடுகள் சுட்டப்பெற்றுன. இவை அனைத்தும் செய்யுளியல் நீங்கலாக வந்த பதிப்புக்கள்.

செய்யுளியல் - நச்சினார்க்கினியப் பதிப்பு முதலில் மதுரைத் தமிழ்ச் சங்கப்பதிப்பாக ரா. ராகவஐயங்காரால் வெளியிடப்பெற்றது. இதில் ஒரு சில இன்றியமையாத வேறுபாடுகள் மட்டும் அடிக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. 1965ல் கு. சுந்தரமூர்த்தியைப் பதிப்பாசிரியராகக் கொண்டு கழக வழி வெளிவந்த பதிப்பில் அடிக் குறிப்பில் பெரும்பாலான பாட வேறுபாடுகள் குறிப்பிடப் பெற்றுள் ளன. மேலும் ஆராய்ச்சி முன்னுரைப் பகுதியில் செய்யுளியலில் மட்டும் 112 இடங்களில் உரையாசிரியர்கள் ஒருவர் ஒருவரோடு மாறு பட்டுரைக்கும் பாட வேறுபாடுகள் உள என்ற குறிப்பும், பிற உரையாசிரியர் இருவரோடும் நச்சினார்க்கினியர் வேறுபட உரைக்கும் பாட வேறுபாடுகள் என்ற தலைப்பில் 30 வேறுபாடு களும் பட்டியலிட்டுக் காட்டப் பெற்றுள்ளன.

1. 2. 11 பொருள் - பேராசிரியம்

பொருளதிகாரம் - பேராசிரியத்துக்கு வெளியான பதிப்புக்கள் ஐந்து.

பதிப்பாசிரியர்	பதிப்பகம்/பதிப்பாளர்	ஆண்டு
தாமோதரம்பிள்ளை 6-9 இயல்	—	1885
எஸ். பவானந்தம்பிள்ளை 6-9 இயல்	—	1917
வே. துரைசாமி ஐயர் 6-9 இயல்	எஸ். கனகசபாபதிப்பிள்ளை	1935
சி. கணேசையர் 6-9 இயல்	—	1943
6-9 இயல்	கழகம்	1951

இவற்றுள் முதலிரு பதிப்புக்கள் கிடைத்தற்கரியன. எஸ். கனகசபா பதிப்பிள்ளை, சி. கணேசையர் ஆகியோர் பதிப்புக்களில் அடிக்குறிப்பில் இன்றியமையாத பாடவேறுபாடுகள் ஒரு சில குறிப் பிடப் பெற்றுள்ளன. கழகப் பதிப்பில் அடிக்குறிப்பில் ஓரளவு மிகுதியாகப் பாட வேறுபாடுகள் உள.

தொல்காப்பியத்துக்கு வெளியான உரைப் பதிப்புக்களான இவற்றின் பயன்பாடு இங்கே குறிப்பிடப் பெற்றது.

1. 3 ஆய்வுப் பதிப்புக்கள்

தொல்காப்பியப் பொருண்மையில் பல்வேறு நிலைகளை அடிப் படையாகக் கொண்டு ஆய்வு நுல்களாகவும், ஆய்வு உரைகளா கவும், ஆய்வுக் கட்டுரைகளாகவும் அமைந்தவை பல.

தொல்காப்பியம் பற்றித் தமிழில் 40ம், ஆங்கிலத்தில் 10ம் இதுவரை ஆய்வு நூல்கள் வெளியாகியுள்ளன. தொல்காப்பியப் பொருளை மையமாகக் கொண்டு நிகழ்த்தப்பட்டு வெளிவந்த ஆய்வு ரைகளின் எண்ணிக்கை 10. தொல்காப்பியம் பற்றி இதுவரை தமிழில் 270ம் ஆங்கிலத்தில் 95ம் ஆய்வுக் கட்டுரைகள் வெளி யாகியுள்ளன. [1]

தொல்காப்பியப் பொருண்மை அடிப்படையாகக் கொண்டு ஆய்வு நிகழ்த்தப் பட்டவற்றுள் தொல்காப்பிய நூற்பாக்கள் பல ஆங்காங்கே மேற் கோள்களாகச் சுட்டப்பெற்றுள்ளன. மேற்கோள் காட்டப்பெறும் நூற்பாக்கள் அனைத்தும் யாரேனும் ஓர் உரையாசி ரியர் கொண்ட பாடங்களைத் தழுவியே பெரும்பாலும் அமைந்துள. எனவே இவை பாடவேறுபாட்டு ஆய்வில் மிகுதியும் துணைபுரிவன அல்ல.

1. 4. ஒப்பாய்வுப் பதிப்புக்கள்

பழமை சான்ற தொல்காப்பிய நூற்பாக்களையும் அவற்றோடு எழுத்து சொல், பொருள், யாப்பு, அணி என்ற ஐவகைக் கோணங் களில் கருத்துத் தொடர்புடைய பிற இலக்கன நூற்பாக்களையும் இணைத்து ஒப்பாய்வு நிலையில் பதிப்பிக்கப்பெற்றவை ஒப்பாய்வுப் பதிப்புக்களாகும். தொல்காப்பியம் தொடர்பான ஒப்பாய்வுப் பதிப்புக்கள் இங்கே தரப்பட்டுள்ளன.

பதிப்பு	பதிப்பாசிரியர்/பதிப்பகம்	ஆண்டு
தொல்காப்பியம்-நன்னூல்-பதிப்பு	சாமுவேல் பிள்ளை	1858
தொல்காப்பியம்-நன்னூல்-ஒப்பியல்-எழுத்து	க. வெள்ளைவாரணன்	1962

[1] தொல்காப்பியக் களஞ்சியம், க. ப. அறவாணன், பக 124-126.

தொல்காப்பியம்-நன்னூல்-ஒப்பியல்-சொல்		1971
தொல்காப்பியம்-நன்னூல்	டாக்டர் ரா. சீனிவாசன்	1972
இலக்கணத் தொகை-எழுத்து	டாக்டர் ச. வே. சுப்பிரமணியன்	1967
இலக்கணத் தொகை-சொல்	,,	1971
இலக்கணத் தொகை-யாப்பு	,,	1978

இப்பதிப்புக்கள் பாட வேறுபாட்டு ஆய்வுக்கு ஓரளவு துணை புரியவில்லை. உரையாசிரியர்களின் மூலங்களே இப்பதிப்புக்களில் ஆளப்பட்டிருப்பினும் அடிக்குறிப்புக்களாகச் சிலவும், கருத்தை நிறுவும் நோக்கில் குறிப்பிடப் பெற்றனவாகச் சிலவும் பாட வேறுபாடுகள் உள.

1. 5. உரைவளப் பதிப்புக்கள்

தொல்காப்பியப் பகுதிகளுக்குப் பல்வேறு உரையாசிரியர்களின் உரைகளை ஒரு சேரத் தொகுத்து வெளியிடப் பெற்றவை உரைவளப் பதிப்புக்கள்.

பதிப்பு	பதிப்பாசிரியர்/பதிப்பகம்	ஆண்டு
சொல்லதிகார உரைக் கோவை	ஆபிரகாம் அருளப்பன் டாக்டர். வி. ஐ. சுப்பிரமணியம்	1971
உரைவளம் தொல்காப்பியம் பொருளதிகாரம் (அகத்திணையியல்)	மு. அருணாசலம் பிள்ளை	1974

இப்பதிப்புக்களிலும் உரையாசிரியர்கள் கொண்ட மூல பாடங்களின் வேறுபாடுகள், பிற வேறுபாடுகள் ஆகியன குறிப்பிடப் பெற்றுள்ளன.

1. 6. புத்துரைப் பதிப்புக்கள்

தொல்காப்பியத்துக்குப் பழமையாக அமைந்த உரைகளுக்கு மேலும் 20ஆம் நூற்றுண்டின் புதிய நோக்கில் உரைகள் பல எழுந்துள்ளன; அமைப்பு வகையாலும், கருத்து வகையாலும் பலமாறுபாடுகளுடன் இவை அமைந்தன.

பதிப்பு	பதிப்பாசிரியர்	ஆண்டு
சொல்லதிகாரம்-குறிப்புரை	பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரி	1930
எழுத்ததிகாரம்-குறிப்புரை	,, ,,	1937
பொருட்படலம்-புறத்திணையியல் (புத்துரை)	டாக்டர். சோமசுந்தர பாரதியார்	1942
பொருட்படலம்-அகத்திணையியல் (புத்துரை)	,, ,,	1942
பொருட்படலம்-மெய்ப்பாட்டியல் (புத்துரை)	,, ,,	1945
தொல்காப்பியம்-எளியவுரை	புலியூர்க்கேசிகன்	1961
தொல்காப்பியம்-யாப்பு-உறுப்பு-புதியவுரை	ஆபிரகாம் அருளப்பன்	1968
தொல்காப்பியம்-பொருளதிகாரம்	புலவர் குழந்தை	1968

குறிப்புரை, புத்துரை, புதியஉரை, எளியஉரை என்ற பெயர்களால் வெளியான இவ்வுரைப் பதிப்புக்களில் புதிய உரையாசிரியர்கள் தங்கள் கருத்துக்கு ஏற்பச் சில பாடங்களைத் திருத்தம் செய்து வழங்கியுள்ளனர். புதிய நோக்கில் உரைதரும் நோக்குக்கேற்பச் சில பாடங்கள் திருத்தப் பெற்றுள்ளன. பாடவேறுபாட்டு நோக்கில் இப்பதிப்புக்களின் பயன்பாடு ஓரளவு குறிப்பிடத் தக்கதேயாகும்.

2. பதிப்புக்களில் பாட வேறுபாடுகள்

மேலே குறிப்பிடப்பெற்ற அறுவகைப் பதிப்புக்களிலும் அமைந்த பாட வேறுபாடுகளில் இங்கு ஆய்வு நிகழ்த்தப் பெறுகிறது. பதிப்பாசிரியர்கள் தாம் புதியனவாக அறிந்து எழுதிய பாடங்கள், பிற உரையாசிரியர்கள் கொண்டனவாகக் கருதி மாறுபடக் கூறும் பாடங்கள், தமக்கு முந்திய பதிப்புக்களில் அமைந்தனவாகக் கூறும் பாடங்கள், ஏடுகளில் அமைந்தனவாகக் குறிப்பிடப் பெறும் பாடங்கள் ஆகியன இக்கட்டுரைக்கண் ஆராயப் பெறுகின்றன.

3. எழுத்ததிகாரத்தில் வேறுபாடுகள்

தொல்காப்பிய எழுத்ததிகாரப் பகுதியில் பதிப்புக்களால் மட்டும் புதியனவாக அறியப்பெறும் பாடவேறுபாட்டு இடங்களின் எண்ணிக்கை 45. இவற்றுள் உரையாசிரியர்கள் இருவரும் ஒரே பாடம் கொள்ள, பதிப்புக்களில் மட்டும் புதிதாகப் பாடம் வேறுபடும் இடங்கள் 41. உரையாசிரியர்களும் தாம் கொண்ட பாடங்களில் வேறுபட அவற்றுக்கு மேலும் பதிப்புக்களில் புதியனவாக வேறுபடும் இடங்கள் 4. 45 இடங்களிலும் மொத்தம் அமைந்த வேறுபாடுகளின் எண்ணிக்கை 48. 3.இடங்களில் இரண்டிரண்டு வேறுபாடுகளும், 42 இடங்களில் ஒரே வேறுபாடுமாக இவை உள.

மேலே குறிப்பிடப் பெற்ற 45 இடங்களில் அமைந்த 48 வேறுபாடுகளையும் பதிப்பு வாரியாக ஆய்ந்து பகுத்தலும், அவற்றில் சிலவற்றிற்குப் பொருந்திய பாடங்கள் எவை என நிறுவுதலும் பொருத்தமுடையவாகும்.

3. 1. கழகப் பதிப்பில் வேறுபாடுகள்

கழகப் பதிப்பில் முதன்முதலாகப் பயின்ற நான்கு பாட வேறுபாடுகளில் பொருந்திய பாடங்கள் எவை என இப்பகுதிக்கண் ஆராயப்பெற்றுள்ளது.

3. 1. 1. எகரம்-ஒகரம்

"அகர இகரம் ஐகாரமாகும்" (எ. 54) என்ற நூற்பாவில் **'ஐகாரமாகும்'** என்பதற்கு **'எகரமாகும்'** என்றும் "அகர உகரம்

ஔகாரமாகும்'' (எ. 55) என்ற நூற்பாவில் 'ஔகாரமாகும்' என்பதற்கு 'ஒகரமாகும்' என்றும் கழக மூலப்பதிப்பில் (1943) பாட வேறுபாடுகள் அடிக்குறிப்பில் காட்டப்பெற்றுள்ளன. இவை பொருந்தாத பாடங்கள்.

அகரமும் இகரமும் கூடி 'ஐகாரம்' என்றும், அகரமும் உகரமும் கூடி 'ஔகாரம்' என்றும் போலியாக ஒலிக்கும் என்பது இந் நூற்பாக்கருத்து. இந்நூற்பாக் கருத்தினால் தொல்காப்பியர் காலத்தில் 'ஐ' 'ஔ' என்பன கூட்டொலிகளாக விளங்கின என அறியலாம்.[1] நன்னூலார் காலத்தில் தொல்காப்பியர் கூறிய இக்கூட்டொலிக் கொள்கை மேலும் நுட்பமாக உரைக்கப்பட்டுள்ளது அகரக் கூறும் இகரக்கூறும் யகரக் கூறும் கலந்து ஐகாரமாகவும், அகரக்கூறும் உகரக்கூறும், வகரக்கூறும் கலந்து ஔகாரமாகவும் ஒலிக்கும் என்பர் நன்னூலார்[2]. சிவஞான முனிவரும் இந்நூற்பா. கூட்டொலிகளை உணர்த்துவது என்றும் கருத்து உடையவரே.[3] இதனை நூன் மரபில் வைக்காமல் மொழி மரபில் வைத்துள்ளமையால் ஐகாரத்திற்கு அ இ என்பதும் ஔகாரத்திற்கு அ உ என்பது போலியாக வரும் என்றே நூற்பா உணர்த்துவதாகக் கூறுவர் வேங்கடராஜுலு ரெட்டியார்.[4] கூட்டெழுத்துக்கள் அல்லது போலி எழுத்துக்கள் என எம் முறையில் கொண்டாலும் 'ஐகாரமாகும்', 'ஔகாரமாகும் என வருவனவே பொருந்திய பாடங்கள்.

---

1. S. 54 States that a+i becomes ai and S. 55 states that a+u is au. That means that ai and au were pronounced as dipthongs during Tolkappiars time-Naccinarkkaniars conception of phonology-S. V. Shanmugam P.74

2. அம்முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐயொத் திசைக்கும் அவ்வோ
டுவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன—நன்நூ, 125

3. அகரக் கூறும் இகரக்கூறும் தம்முளொத்து எகரமொலிக்கும் அகரக்கூறும் உகரக்கூறும் தம்முளொத்து ஒகரமொலிக்குமெனக்கொள்க.—நன். நூ. 125-சிவஞானமுனிவர் விளக்கம்.

4. எழுத்ததிகார ஆராய்ச்சி, வே. வேங்கடராஜிலு ரெட்டியார் .ப 59

3. 1. 2. அ ஐ ஔ எனும் மூன்று

சகரம் எந்த எழுத்துக்களோடு மொழி முதலில் வரும் என்பதை,

"சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
அ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே[1]

எனவரும் நூற்பா உணர்த்துகிறது. ச, சை, சௌ என்ற மூன்றும் அல்லாத பிற 9 சகர உயிர் மெய்யும் மொழி முதலாக வரும் என்பது இந்நூற்பாக்கருத்து. **'அ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே'** என்பதற்கு **'அவை ஔ எனும் ஒன்றலங்கடையே'** என்ற பாடம் கழக மூலப் பதிப்பில் முதல் முதலாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. இது அறிஞர்களின் ஆராய்ச்சிக்கும் விவாதத்துக்கும் உரிய பாட வேறு பாடாக விளங்குகின்றது.

'ச' என்ற எழுத்து மொழி முதலில் வரும் என்னும் கருத்துடையவர்கள் **'அவை ஔ எனும் ஒன்றலங் கடையே'** என்ற பாடமே சிறந்தது என்பர். வராது என்போர் நூற்பாப் பாடமே சிறந்தது என்பர்.

இலக்கண விளக்கம், சகரம் ஐகாரத்தோடும், ஔகாரத்தோடும் மட்டும் வராது என்பதை ஐ ஔ வலவொடு சகாரமும்[2] எனக் கூறுகிறது. நன்னுலார், பிரயோக விவேக நூலார் ஆகியோர் சகரம் எல்லா எழுத்தொடும் கூடி மொழி முதலாக வரும் எள்பர்.

நன்னூலார் சகரம் எல்லா எழுத்தொடும் கூடிவரும் என்று கூறியது தொல்காப்பியர் கருத்துக்கு மாறுக இருப்பினும், தொல்காப்பியர் காலத்தில் இத்தகைய சொற்கள் தமிழில் பயிலாமையே தொல்காப்பியர் அங்ஙனம் விதி செய்தற்குரிய காரணம் என்பர் சிவஞானமுனிவர்.[3]

1. தொ. எ. நூ. 62.
2. இல. விள. நூ. 27.
3. இனி, "சகரக்கிளவியும் அவற்றோரற்றே, அ ஐ ஔ எனும் மூன்றலங்கடையே" என்பது முதலாக இன்னோரன்ன சில எழுத்துக்களை மொழிக்கு முதலாகாவென ஆசிரியர் தொல்காப்பியர்விலக்கினராலோவெனின் இவ் வடமொழிகளும் திசைச்சொற்களும் அக்காலத்து இவ்வாறு தமிழின்கட் பயின்று வாராமை பற்றியென்க நன். நூ. 106 சிவஞானமுனிவர் விளக்கம்.

சங்க இலக்கியங்களில் சகரம் முதன் மொழியாகப் பயின்று வரும் 54 சொற்களை எடுத்துக் காட்டி

சரி சமழ்ப்புச் சட்டி சருகு சவடி
சளி சகடு சட்டை சவலி-சவி சரடு
சந்து சதங்கை சழக்காதி ஈரிடத்தும்
வந்தனவாற் சம்முதனும் வை

எனச் சகர முதன் மொழி பயின்ற மயிலைநாதரின் மேற்கோள் நூற்பாவையும் சுட்டி,[1] ''முழு முதல் அரணமும் வருபகை பேணார்'' ஆரெயிலும் அமைத்துக் கொண்ட தொல்காப்பியர்காலத் தமிழர் சட்டி செய்யத் தெரியாதிருந்தனர் என்பது பெருநகைப்புக்கிட மானதாகும்'' என்றுக் கூறி, 'அவை ஔ எனும் ஒன்றலங்கடையே' என்ற பாடமே பொருந்தும் எனக் கூறுவர் தேவ நேயப் பாவாணர்.[2]

இவ் இரு பாடங்களில் எந்தப் பாடம் ஏற்புடையது எனக் காண்போம். ச, சை, சௌ ஆகிய மூன்று எழுத்துக்கள் மொழி முதலில் வராது என்பது புதிய வேறுபாட்டின்படி கிடைக்கும் கருத்து- அங்ஙனம் கொண்டால் ச, சை, ஆகியஇரு எழுத்துக்களும் மொழி முதலில் பயின்று வரும் இலக்கியத் தமிழ்ச் சொற்களை இதற்கு எடுத்துக்காட்டுகளாகக் காட்டவேண்டும். பாவாணரும், பிறரும் சகர முதன் மொழிச் சொற்களை மட்டுமே காட்டுகின்றனர். 'சை' மொழி முதற் சொற்கள் காட்டப்படவில்லை. மேலும் சகர முதன் மொழிச் சொற்களை எல்லாம் சிவஞான முனிவர் கருத்துப்

1. நன். மயிலை உரைமேற்கோள்.

2. தொ. எ. ந. கழகப்பதிப்பு (1955) நூ. 62. அடிக்குறிப்பு.

படி வடசொற்களாகவும், திசைச்சொற்களாகவும் கொள்ள இயலும். அவற்றைத் தூய தமிழ்ச் சொற்களாகவே ஏற்பதில் கருத்து வேறு பாடு உண்டு. எனவே ச, சை, சௌ என்ற கருத்தை உணர்த்தும் **'அ, ஐ, ஔ எனும் மூன்றலங்கடையே'** என்ற பாடமே பொருத்த முடையதாகக் கொள்ளலாம். தொல்காப்பியர் தம் காலத்திருந்த மொழிவழக்கைக் கருத்திற் கொண்டே நூற்பா செய்தார் என்று கொள்ளலாம்.

பிற்காலத்தில் "எங்கும் தமிழ் எதிலுந்தமிழ்" என்ற தமிழ் இயக்க வளர்ச்சிக் காலத்தில் இத்தகையபாடவேறுபாடுகள் எழுந் திருக்கலாம்.

3. 1. 3. யகர வரிசை

மொழி முதல் எழுத்துக்கள் பற்றிய பகுதியில் யகர வரிசை யில் 'யா' என்ற ஓர் எழுத்து மட்டுமே மொழி முதலில் வரும் என்ற கருத்தை "ஆ வோடல்லது யகர முதலாது"[1] என வரும் நூற்பா உணர்த்தும்.

கழக மூலப் பதிப்பில் இந்நூற்பா

"அஆ உஊ ஒ ஔ
ஆறோ டல்லது யகர முதலாது"

என்று வடிவ வேறுபாட்டுடனும் உள்ளது. இதன்படி, ய, யா, யு, யூ யோ, யௌ என்பன யகர வரிசையில் மொழி முதலில் வரும் என்பது கருத்தாகும். பிற்கால இலக்கண நூல்களின் தாக்கத்தால் விளைந்த பாட வேறுபாடாக இதனைக் கருத முடிகிறது.

"அ ஆ உ ஊ ஒ ஔ யம் முதல்"[2] என்பது நன்னூல் நூற்பா. நன்னூல் நூற்பாக் கருத்தும், வடிவ வேறுபாட்டு நூற்பாக்கருத்தும் ஒன்றாகவே அமைந்துள்ளதைக் காணலாம். எனவே நன்னூல் பயிற்சிக்குப் பின்னர் இப்பாட வேறுபாடு எழுந் திருத்தல் வேண்டும்

---

1 தொ. எ. நூ. 65

2 நன். நூ. 104

தொல்காப்பியர் கால மொழியியல்பை, உரையாசிரியர்கள் கொண்ட பாட வேறுபாடுகளே சுட்டுகின்றன. பிற்கால இலக்கண நூல்களின் தாக்கம் பெற்ற கருத்துக்களை விளக்கும் பாடவேறு பாடுகள் தொல்காப்பிய மூல பாடங்களாக இருக்க இயலாது என்பது அங்கை நெல்லி. ''இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கூறுமாறு போல யகரம் ஆகாரத்தோடு கூடிவரும் சொற்களே தமிழ்ச்சொற்-ளன்றி ஏனைய எழுத்துக்களுடன் வரும் சொற்கள் தமிழ்ச்சொற்கள் அல்ல. ஆதலின், அவற்றை ஆசிரியர் கூருதொழிந்தார் எனக் கூறுதலே அமைவுடைத்தாகும்'' எனப் பதிப்பாசிரியர் சுந்தரமூர்த்தியும் உரையாசிரியர்கள் கொண்ட பாடமே ஏற்புடையது என்பதைத் தன் கருத்தாக மொழிவர்.[1]

மேலே காட்டப்பெற்றவை, கழக மூலப்பதிப்பில்தான் பாட வேறுபாடுகளாக முதன் முதலில் கட்டப்பெற்றுள்ளன.

3. 2. மர்ரே பதிப்பில் வேறுபாடுகள்

எழுத்திகாரத்தைப் பொறுத்தவரை மர்ரே பதிப்பின் மூல பாடங்கள் அனைத்தும் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் கொண்ட பாடங்களே. பிற் சேர்க்கையில் எழுத்ததிகாரத்தில் பாடம் வேறு படும் 30 இடங்களில் 30 வேறுபாடுகள் பட்டியலாகக் குறிப்பிடப் பெற்றுள்ளன. இவற்றில் 8 இடங்களில் மட்டுமே இதுவரை பயின்று வாராத பாடங்கள் உள. இவை பொருள் வேறு படுத்தும் பாடங்கள் அல்ல.

'ஏனை மூன்றே' (எ. 12) என்பதற்கு **'ஏனைய மூன்றே'** என்றும் **'மென்மையாக'** (எ. 224) என்பதற்கு **'மெய்ம்மையாகிய'** என்றும் அமைந்த வேறுபாடுகளில் ஏனை - ஏனைய - ஆக - ஆகிய என்ற விரித்தல் விகாரம் அமைந்துள்ளது. தோற்ற ஒப்புமையில் அமைந்த ஒரே பொருளைத்தரும் இருவேறு சொற்களும் இவண் வேறுபாடு களாயுள.

1தொ. எ. இளம். நூ 65. கு. சுந்தரமூர்த்தி பதிப்பு (1969) ப. 58

"சாரியை உள்வழிச் சாரியை கெடுதலும்
சாரியை உள்வழித் தன்னுருபு நிலையலும்" (எ. 158)

என வரும் நூற்பாப்பகுதியில் உள்வழி என ஈரிடத்தும் வருவனவற்றிற்கு 'உளவழி' என ஈரிடத்தும் பாடங்கள் உள, தோற்ற ஒப்புமையால் அமைந்த இவை பொருள்வேறுபாடு இல்லாதவை.

ஏடு பெயர்த்து எழுதுவோர் தொடர்ச்சி இயைபு நோக்கிச் சில இடங்களில்தாமே சொற்சீரடியைச் சேர்த்து எழுதுவர். அம்முறையில்,

"தத்தந் திரிபே சிறியவென்ப" (எ. 88)
"நிறுத்த சொல்லும் ...— புணர்நிலைக்குரிய" (எ. 111)

எனவரும் நூற்பாக்களில் முறையே 'அவைதாம்' "அவற்றுள்" என வரும் சொற்சீரடிகள் சேர்க்கப் பட்டமையால் 'அவைதாம் தத்தந்திரிபே' என்றும், 'அவற்றுள் நிறுத்த சொல்லும்...' என வரும் இரு பொருள் வேறுபாடற்ற பாடங்கள் அமைந்துள்ளன.

ஏடெழுதும் விரைவில் சொற்கள் முன்பின்னாக மாறி அமைதல் இயற்கை. முன்னுள்ள சொல் பின்னாகவும் பின்னுள்ள சொல் முன்னாகவும் இடம் பெயர்ந்து ஒலிக்கும் முறை பாட வேறுபாடுகளை எழுப்பவும் களமாகிறது.

'வல்லெழுத்தியையின்' (எ. 358) என்னும் தொடர் 'இயையின் வல்லெழுத்து' என இடம் மாறிப் பாடவேறுபாடாகி யுள்ளது.

ஒருவன் ஏடு படிக்க, ஒருவன் எழுதுங்கால், ஒலி ஒப்புமையால் சொற்களில் பிறழ்ச்சி ஏற்பட்டுப் பாடம் அமைகிறது. இம்முறையில் ஆசிரியர்க்க (எ. 390) என்பதற்கு 'ஆசிரியற்க' என்ற பாடம் இப்பதிப்பில் உள்ளது.

இவை மர்ரேபதிப்பின் பிற்சேர்க்கையில் இடம் பெற்ற பொருள் வேறுபாடற்ற பாட வேறுபாடுகள்.

3. 3. கன்னியப்ப முதலியார் பதிப்புப் பாடம்

எழுத்து இளம்பூரணத்துக்குக் கன்னியப்ப முதலியாரின் பதிப்பே முதலாவதாகும். கி. பி. 1868ல் அச்சான நூல் இது. இந்நூலில் 3 பாடவேறுபாடுகள் முதன் முதலில் குறிப்பிடப் பட்டுள்ளன. எனினும் அவை மூன்றும் பொருள் வேறுபடுத்தும் சிறப்புடையன அல்ல.

"அவற்றுவழி மருங்கிற் சாரியை வருமே" (எ.119) என்னும் நூற்பாவில் **'அவற்றுவழி'** என்பதற்கு **'அவற்றுள்வழி'** என்றும், "ஐகார ஔகாரங்கானெடுந் தோன்று (எ. 138) என்னும் நூற்பாவில் **'கானெடும்'** என்பதற்குக் **'கானெடு'** என்றும் 'ஆவயின் ஒற்றிடை மிகுதல்' (எ. 476) என்ற நூற்பாப் பகுதியில் **'ஆவயின்'** என்பதற்கு **'ஆயின்'** என்றும் வேறுபாடுகள் உள்ளன. கன்னியப்ப முதலியார் பதிப்பில் அமைந்த இவ்வேறுபாடுகள் இளம்பூரணரின் சில பாடங்களாகவே பிற்காலத்தில் குறிப்பிடப்பட்டன என்பது அறியத்தக்கது.

வ. உ. சிதம்பரம்பிள்ளை பதிப்பில் இளம்பூரண உரை ஏடுகள் மேலும் கிடைத்தமையால் இப்பாடங்கள் திருத்தம் பெற்றன. மூலபாடங்களாக ஒரு பதிப்பில் பிழையான பாடங்கள் குறிப்பிடப் பெற்றிருப்பினும், பிற்காலப் பதிப்புக்களால் பாடங்கள் திருத்தம் பெற்றமைக்கு இது சான்றாக உள்ளது. வ. உ. சிதம்பரம்பிள்ளையால் திருத்தம் பெற்ற இப்பாடங்கள் பிற்கால இளம் பூரணப் பதிப்புக் களில் தொடர்ந்து பின்பற்றப் பட்டன.

3. 4. வ. உ. சிதம்பரம்பிள்ளை பதிப்புப் பாட வேறுபாடுகள்

1928ல் வெளியான வ. உ. சிதம்பரம் பிள்ளையின் இளம் பூரணர் பதிப்பு திருத்தம் பெற்ற பாடங்களோடு மட்டுமன்றிப் புதிய பாடங்களையும் தந்துள்ளது. எழுத்ததிகார இளம்பூரணப் பதிப்பில் இம்முறையில் எட்டுப் புதிய பாடங்கள் இடம் பெற்றுள்ளன.

3. 4. 1. மெய்மயங்குடனிலை

தனி மெய்மயக்கத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்தும்

"அம்மூவாறும் வழக்கியல் மருங்கின்
மெய்ம்மயங் குடனிலை தெரியும் காலை" (எ. 22)

என்ற நூற்பாவில் 'மெய்ம்மயங்குடனிலே' என்பதற்கு 'மெய்மயக் குடனிலே' என்பதே இளம்பூரணர் பாடம் என வ. உ. சிதம்பரம் பிள்ளை பதிப்பில் தவருக உள்ளது என்றும், பின்னர் வந்த பதிப் புக்களில் கன்னியப்ப முதலியார் பதிப்பை யொட்டி 'மெய்மயங் குடனிலே' என்ற பாடமே இளம்பூரணர் பாடமாகக் கொள்ளப்பட்டது. பிந்திய பதிப்புக்கள் பிழையாக பாடம் தந்தாலும் முந்திய பதிப் புக்கள் தந்த திருத்தப் பாடங்களையே பிற்காலத்தில் வந்த பதிப் பாசிரியர்கள் ஏற்றனர் என்பதற்கு இது சான்று.

தொல்காப்பியர் கூறும் இந்நூற் பாக்கருத்தை அடியொற்றி

"கசதப ஒழிந்த ஈரேழன் கூட்டம்
மெய்ம் மயக் குடனிலே [1]

எனவரும் நன்நூல் நூற்பா அமைந்தது. நன்னுல் நூற்பாவில் 'மெய்ம்மயக்குடனிலே' என்ற பாடம் இடம் பெற்றுள்ளதால், இதன் தாக்கம் தொல்காப்பிய நூற்பாவிலும் படிந்தது எனலாம். எனவே 'மெய்மயங்குடனிலே' என்பதற்கு 'மெ்ய்மயக்குடனிலே'' என்ற பாடம் அமைந்தது. எழுத்துக்கள் ஒன்ருேடொன்று மயங்கி வருதல் பற்றியே நூற்பா கூறுகிறது. எழுத்துக்கள் பிற எழுத்துக் களை மயக்கி வரும் இயல்புடையன அல்ல. எனவே 'மெய்மயங் குடனிலே' என்ற பாடமே பொருத்த முடையதாகும்.

'மெய்மயக்குடனிலே' என்று வ. உ. சிதம்பரம்பிள்ளை பதிப்பில் (1928) கண்ட இப்பாடம் கழக மூலப்பதிப்பு (1943) மர்ரே மூலப் பதிப்பு (1960) தொல்காப்பியக் களஞ்சிய மூலப் பதிப்பு (1975) ஆகியவற்றிலும் பிற்காலத்தில் மூலபாடமாகக் கொள்ளப்பட்டது.

'மெய்மயங்குடனிலே' என்பதே பொருந்திய பாடம் என்பதை யும், அச்சொல் தரும் பொருண்மைகளையும் வேங்கடராஜுலு ரெட்டியார் விரிவாக விளக்கியுள்ளார். [2]

---

[1] நன். எ. நூ. 110.

[2] மெய்மயங்குடனிலை என்பது மெய்மயங்குவதாகிய உடனிலை என்று பொருள்படும், உடனிலை - கிம்யோகம். இனி மெய்மயங்கு என்பது வேற்று நிலை மெய் மயக்கத்தையும் உடனிலை என்பது உடனிலை மெய்மயக்கத்தையும் குறிப்பது என்றும் கொள்ளலாம் தொல்காப்பிய எழுத் ததிகார ஆராய்ச்சி-வேங்கடராஜிலுரெட்டியார்.

3. 4. 2. போலி

அகரத்தின் பின்னர் இகரம் இன்றி யகரப் புள்ளியும் ஐ என்பதற்குப் போலியாக வரும் என்ற கருத்தை

"அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"[1]

என்ற நூற்பாவில் தொல்காப்பியர் கூறுவர். "அகர இகரம் ஐகாரமாகும்" (54) என்றும்' "அகர உகரம் ஔகாரமாகும்" (55) என்றும் இதற்கு முன்னர் நூற்பாக்கள் உள்ளமையால் அகரத்தின் பின்னர் உகரமேயன்றி வகரமும் ஔ என்பதற்குப் போலியாக வரும் என்ற கருத்தும் இந்த நூற்பாவிலோ இதனைத் தொடர்ந்தோ தொல்காப்பியரால் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும் எனக் கருதுவர். இக்கருத்து இடம்பெற வேண்டிய இன்றியமையாமையை உணர்ந்து இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் தத்தம் உரையில் விதப்புக்கிளவியாக இக்கருத்தைப் பெற வைத்துள்ளனர்.

வ. உ. சிதம்பரம்பிள்ளை தன் பதிப்பில் இந் நூற்பா

"அகரத்திம்பர் யவகரப்புபுள்ளியும்
ஐயென நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" (எ. 56)

என்றிருத்தல் வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளது அறியத்தக்கதாகும்

மேலும் "காலப்பழமையில் ஏடு பெயர்த்து எழுதினோர் 'யவகரப்புள்ளி' யும் என்பதனை 'யகரப் புள்ளி' எனவும் 'ஐயென நெடுஞ்சினை' என்பதனை ஐ எனெடுஞ்சினை எனவும் பிழையாக எழுதினர் போலும். அப்பிழைப் பாடத்தைப் பிழையற்ற பாடமெனக் கருதி உரையாசிரியர் அதற்குத் தக்கவாறு உரையெழுதிச் சென்றனர் போலும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.[2]

1. தொ. எ. நூ. 56.

2. தொ. எ. இ. வ. உ. சிதம்பரம்பிள்ளை பதிப்பு (1928) ப. 23

வ.உ.சிதம்பரம்பிள்ளையின் விளக்கப்பகுதியில், ஏடுபெயர்த்து எழுதுங்கால் பாடங்கள் விடுபட்டிருக்கலாம் என்று குறிப்பிடுவது ஏற்கத்தக்கதே. எனினும் அனைத்து ஏடுகளிலும் குறிப்பிட்ட இந்த இரு இடங்கள் மட்டுமே விடுபட்டன என்று கொள்வது பொருத்த மாகத் தெரியவில்லை.

பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் தனது குறிப்புரையில்,
அகரத்திம்பர் வகரப்புள்ளியும்
ஔவெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்

என்ற சூத்திரம், மயக்கதால், ஏடெழுதுவோரால் விடப்பட்டது என்பது என் கொள்கை'' எனக் குறிப்பிட்டுள்ளார்[1].

பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியாரின் கருத்து மொழியமைப்பு நோக்கில் பொருந்துவதன்று என வேங்கடராஜுலு ரெட்டியார் மறுத்துரைத்துள்ளார்[2]

எனவே வ.உ. சிதம்பரம்பிள்ளையின் கருத்துப்படி 'நூற்பா சிதைந்துள்ளது' என்றும், பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார், கருத்துப்படி 'நூற்பாவிடுபட்டது' என்றும், கொள்ள வேண்டும். இம்முறைகளில் கொண்டால், விதப்புக் கிளவியால் கருத்துக்களைப் பெறவைக்கும் உரையாசிரியர்களின் உரிமை பறிக்கப்படும் குற்றம் தங்கும். மேலும் தொல்காப்பியர் செறிவாா நூற்பிக்கும் சிறப்புடைய வர் என்ற சீரும் சிதையும். எனவே உரையாசிரியர்கள் கொண்ட வாறு கொள்வதே ஏற்புடையதாகும்.

1தொ. எ.பி.சா. சுப்பிரமணியசாஸ்திரி, குறிப்புரை(1937)ப.69

2 மொழியின் இடையிலும் இறுதியிலும் நிற்கும் ஐகாரத்திற்கு 'அய்' என்பது வரும் என்றவாறாகும். இதனல் ''அகரத்திம்பர் வகரப்புள்ளியும் ஔவென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்' என்று சூத்திரம் செய்யாத தன் காரணமும் புலனாகும். என்னை யெனின் ஔகாரம் மொழியின் இடையிலும் கடையிலும் நிற்பதன்மையின் அஃது 'அவ்' என்றாதல் இல்லை,—தொல் காப்பிய எழுத்ததிகார ஆராய்ச்சி வேங்கடராஜுலு ரெட்டியார் ப.60

3. 4. 3. பிறபாடல்கள்

வ.உ.சிதம்பரம்பிள்ளையின் பதிப்பில் கண்ட பிற பாட வேறு பாடுகள் பொருட் சிறப்பில்லாதவை. '**போல்** மொழிவயின்' (எ. 51) என்பதற்குப் '**போலும்** மொழிவயின்' என்றும், '**னகாரை** முன்னர்' (எ. 52) என்பதற்கு '**னகார** முன்னர்' என்றும், 'என் மனூர் **புலவர்**' (எ. 147) என்பதற்கு 'என்மனூர் **ஆசிரியர்**' என் றும் '**இன்னென்** சாரியை' (எ. 476) என்பதற்கு '**இன்னும்** சாரியை' என்றும் '**ஆவயின்**' (எ. 476) என்பதற்கு '**ஆனவயின்**' என்றும் பாட வேறுபாடுகள் குறிப்பிடப் பெற்றுள்ளன. இவற்றல் பொருள் மாற்றம் நிகழ்தலில்லை.

3. 5. கு. சுந்தரமூர்த்தி பதிப்பு வேறுபாடுகள்

கு. சுந்தரமூர்த்தி, எழுத்து - இளம்பூரணம், நச்சினூர்க்கினி யம் ஆகிய இரண்டையும் பதிப்பித்துள்ளார். இவர் பதிப்பில் இதுவரை அறியப்பெருத ஒரு பாட வேறுபாடு இடம் பெற்றுள்ளது.

'ஆஎ ஆகும்' (எ. 189) என்பது இளம்பூரணர் பாடம். 'ஆ எவ்வாகும்' என்பது நச்சினூர்க்கினியர் பாடம். இவற்றுக்கு மேலும் 'ஆ எய்யாகும்' என்ற ஒரு பாடத்தை இருபதிப்பிலும் கு. சுந்தர மூர்த்தி குறிப்பிட்டுள்ளார்.

நிலைமொழி இறுதியிலும் வருமொழி முதலிலும் உயிர்வரின் இடையில் 'ய்' அல்லது 'வ்' என உடம்படு மெய்தோன்றும் என்பது பொதுவிதி. தொல்காப்பியர் காலத்தில் உடம்படு மெய் வருதல் உண்டு; எனினும் அது வரையறுக் கப்பட்டவிதியாகப் போற்றுப்படவில்லை. இதனை,

> ''எல்லா மொழிக்கும் உயிர் வரு வழியே
> உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்'' [1]

என்ற நூற்பாவால் தொல்காப்பியர் விளக்குவர். நன்னூலார்,

> ''இஈஐ வழி யவ்வும் ஏனை
> உயிர்வழி வவ்வும் ஏமுன் இவ் விருமையும்
> உயிர்வரின் உடம்படு மெய்யென்ருகும்'' [2]

---

[1] தொ. எ. நூ. 141.
[2] நன். எ. நூ. 162

என்ற நூற்பாவால் இதனை மேலும் வரையறை செய்து இன்ன உயிரீற்றுக்குப்பின் இன்ன மெய்வரும் எனவிதந்தோதினர். எனினும் நன்னூல் உரைகாரர் ''எகர ஈறுவரின் எகர ஈறு ஒழியக் கொள்க'' என்றார்.[1] உயிரீறாக எகரம் வருமாயின் உடம்படு மெய்யின்றி வரும் என்பது இதன் கருத்து. இம்முறையில் உடம்படு மெய்யின்றி இளம்பூரணர் பாடம் கொண்டார். நன்னூல் கருத்தாகிய ''ஏனை உயிர்வழி வவ்வும்'' என்ற விதியைப் பொதுவானதாக, எகரத்துக்கும் உரியதாகக் கொண்டு ஆ எவ்வாகும் என வகர உடம்படுமெய் பயின்ற பாடத்தை நச்சினார்க்கினியர் கொண்டார். 'ஏ முன் இவ்விருமையும்' என்ற நன்னூல் விதியை எகரத்துக்கும் உரியதாகப் பிறழக் கொண்ட நிலையில் யகர உடம்படு மெய் சேர்த்து 'ஆஎய்யாகும்'. என்ற பாடம் தோன்றி யிருக்கலாம் என்று கருத முடிகிறது. பொருள் வேற்றுமைக்கு உரிய தன்று இப்பாடம்

3. 6. வேங்கடராஜுலு ரெட்டியார் கூறும் பாடங்கள்

வே. வேங்கடராஜுலு ரெட்டியாரின் எழுத்ததிகார ஆராய்ச்சி நூலில் அவர் கொண்ட மூல நூற்பாக்களில், வடிவங்களில் சில மாறுபாடுகளைக் காண்கிறோம். மாறுபட்ட இவ்வடிவங்களை இவரே தம் நூலில் முதன் முதலாகக் குறிப்பிட்டுள்ளார். இவை பதிப்பில் நேர்ந்த அச்சுப்பிழைப் பாடங்களாகக் கொள்ளுதற்கு உரியன அல்ல. அவர் தாமே இப்பாடங்களை அமைத்திருத்தல் வேண்டும் எனக் கருத முடிகிறது.

'அகரமோடுயிர்த்தலும்' (எ. 17) 'ஏனைஉயிரோடு' (எ. 17) என வரும் பாடங்களுக்கு 'அகர மொடுயிர்த்தலும்' 'ஏனை உயிரொடு' என நெடிலை நீக்கிக் குறிலைப் பயன்படுத்துவதால் வேறுபாடுகள் எழுந்துள்ளன.

மஃகான் புள்ளி முன் (எ. 28) என்பதற்கு முன், சொற்சீரடி சேர்த்தமையால் 'அவற்றுள் மஃகான் புள்ளி முன்' என்று வேறுபாடு அமைந்தது. 'அவற்றுள் நிறுத்த சொல்லின்' (எ. 109) எனவும், 'அவற்றுள் இன்னின்' (எ. 121) எனவும் வருவனவற்றுள் சொற்சீரடியை நீக்கியமையால் 'நிறுத்த சொல்லின்' 'இன்னின்' என்றும் பாடவேறுபாடுகள் அமைந்தன.

1. ந. எ. நூ. 162. சங்கரநமச்சிவாயர் உரை.

'மூன்றும் விஞு' (எ. 32) என்றவிடத்தில் மூன்றும் 'விஞுஅ' என அளபெடைக் குறி சேர்த்தமையாலும் 'முறை தொகூஉம்' (எ. 351) என்ற விடத்தில் 'முறை தொகும்' என அளபெடைக் குறி விடுத்தமையாலும் பாடங்கள் வேறுபட்டுள்ளன.

'அளவிற் கோடலின்' (எ. 50) என்பதற்கு 'அளபிற் கோடலின்' என்றும், நான்கன் ஒற்றே' (எ. 467) என்பதற்கு 'நான்கன் மெய்யே' என்றும் வரும் வேறுபாடுகள் ஓரர் பொருள் தரும் பிற சொற்களால் அமைந்தவை.

இவண் குறிப்பிட்ட பாட வேறுபாடுகளால் பொருள் மாற்றம் நிகழவில்லை. எனினும் இளம்பூரணர், நச்சினர்க்கினியர் இருவருமே உடன்பட்டு ஒன்ருக ஏற்ற இப்பாடங்களில் முதன் முதலாக இப் பதிப்பில் புதியனவாக வேறுபாடுகளைக் காட்டியுள்ளார் வேங்கட ராஜுலு ரெட்டியார்.

3. 7. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் கூறும் பாடங்கள்

பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியாரின் தொல்காப்பியம் எழுத்ததிகாரக் குறிப்புரையில் இதுவரை அறியப்பெருத சில பாடங்கள் உள.

"அகர முதல் னகர விறுவாய் முப்பஃதென்ப" (எ.1) என்பது நூற்பாவில் பயின்ற தொடர். ஆனுல் குறிப்புரையாசிரியர் இதனை எடுத்தாளும் போது 'முப்பதென்ப' – என்று வேறுபட்ட பாடத்தைக் குறிப்பிடுகின்ருர். நூற்பாப் பாடம் 'முப்பஃதென்ப' என்றிருப்பதை 'முப்பதென்ப' என விளக்கப் பகுதியில் ஆண்டுள்ளமையால் இங்குப் பாடம் வேறுபடுகிறது.

"பஃதென்கிளவி ஆய்த பகரங்கெட" (எ. 445) என்பதில் 'பஃதென்கிளவி' என்பதற்கு, 'பத்தென்கிளவி' என்று இப்பதிப்பில் பாடம் உள்ளது. எழுத்து நச்சினர்க்கினியத்தின் முதற் பதிப்பான மழவை மகாலிங்கையர் பதிப்பில் (1849) பத்தென் கிளவி என்றே பாடம் இருந்ததாகவும், பின்னர்த் தாமோதரம்பிள்ளை பதிப்பிலும், கழகப் பதிப்பிலும், இது பஃதென்கிளவி எனத் திருத்தம் பெற்றதாகவும் அறிகிருேம். மகாலிங்கையர் பதிப்புப் பாடத்தைப் பின்

பற்றிச் சுப்பிரமணிய சாஸ்திரியாரும் பஃதென்கிளவி - எனப் பாடம் கொள்கின்றனர்.

'அளபிற் கோடல்' (எ. 102) என்பதற்கு 'அளவிற்கோடல்' என்ற பாடம் இந்நூலில் உள்ளது. அளபு-அளவு என உரையாசிரியர்கள் இருவரும் பிற இடங்களில் பாடங் கூறுவதில் வேறுபடுவர். ஆனால் இங்கு இருவரும் அளபு என்று ஒரே பாடத்தைக் கொண்டனர். குறிப்புரையாசிரியரோ அளவு எனப் பாடங் கொண்டு இங்கு வேறுபடுகின்றனர்.

'நிறையின் கிளவியும் (எ. 446) என்பதற்கு இப்பதிப்பில் நிறையென் கிளவியும்'' என்ற பாடம் அமைந்துள்ளது. இவை ஒரே பொருளைத் தரும் வேறு சொற்களால் அமைந்தனவே தவிரப் பொருளை வேறுபடுத்துவன அல்ல.

'மெய்ந்நிலை' (எ. 30) என்பதற்கு 'மெய்நிலை' என ஓர் எழுத்து விடுபட்ட பாடத்தை இளம்பூரணர் கொண்டார் என்ற குறிப்பை இந்நூலில் காண்கின்றோம். எனினும் பிற்கால இளம்பூரணர் பதிப்புக்களில் 'மெய்ந்நிலை' என்றே திருத்தமான பாடம் இடம் பெற்றுள்ளது.

'எண்ணின் இறுதி அன்னொடு சிவணும்' (எ. 199) என்பது 'எண்ணின் இறுதி அன்னொடுஞ் சிவணும் என்றிருப்பின் நலம் எனக் இக்குறிப்புரையாசிரியர் குறிப்பிடுவதால் ஒரு பாடமும், 'மக்களென்னும் பெயர்நிலைக் கிளவியும்' (எ. 405) என்பதற்கு 'மக்களென்னும் பெயர்நிலைக் கிளவி' என்று இப்பதிப்பில் உள்ளமையால் ஒரு பாடமும் முறையே உம்மைச் சேர்க்கையாலும், நீக்கத்தாலும் அமைந்துள்ளன.

ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும் (எ.272) என்பதில் ஆடூஉ 'மகடூஉ' என்றிருப்பதற்கு 'ஆடூ' 'மகடூ' என்றிருப்பதே பொருத்தமுடையதாகும் என்பது குறிப்புரையாசிரியரின் கருத்து. 'ஆடூ' மகடூ' என்பனவே பாடமாக இருத்தல் வேண்டும் என்பதற்குக் கீழ்வரும் காரணங்களையும் உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

1. ஊகார ஈற்றுச்சொற்களுக்கு விதிகூறும் பகுதியில் இந்நூற்பா அமைந்துள்ளது. 2. ஆடூ, மகடூ என்ற பாடங்களே சொல்

லதிகாரத்தில் சேனுவரையரால் கொள்ளப்பட்டன. 3. ஆடூஉ மகடூஉ என்பன தொல்காப்பியர் கருத்துப்படி உகர ஈறுகளேயன்றி ஊகார ஈறுகள் ஆகா. 4. இவை குற்றெழுத்தின் பின்னர் ஊகாரத்தைக் கொண்ட ஈரெழுத்தொரு மொழிகள் அல்ல. எனவே குற்றெழுத்திம்பரும் (எ. 268) என்ற நூற்பாக்கருத்துப்படி உகரம் பெற்றன என்று கொள்ள இயலாது.

இக்காரணங்களால் **ஆடூ, மகடூஉ** என்பனவே பாடமாக இருத்தல் வேண்டும் எனத் தம் கருத்தை விளக்கியுள்ளார் ஆசிரியர். ஒருபாடத்தை உறுதி செய்வதில் பதிப்பாசிரியர்களுக்கு இருந்த ஆழ்ந்த ஈடுபாடு இதனுல் புலனுகின்றது. இப்படியிருத்தல் வேண்டும் எனத் தம் கருத்தை உணர்த்துவது நோக்கமே தவிர, தம் கருத்துக்கிசைந்தவாறு மூலபாடத்தைத் திருத்தம் செய்தல் இல்லை என்ற பதிப்பு நெறியையும் இக்குறிப்புரையாசிரியரிடத்தில் ண்கின்ருேம்.

இம்முறையில் இக்குறிப்புரைப் பதிப்பால் அறியப்பெறும் பாடங்களின் எண்ணிக்கை பத்து.

3. 8. கா. நமச்சிவாய முதலியார் பதிப்புப் பாடம்

கா. நமச்சிவாய முதலியார் பதிப்பில்

அவ்வழி

பன்னீருயிரும் தந்நிலை திரியா (எ. 84) என்பதில் 'அவ்வழி' என்பது மூலபாடம். 'அவ்வழிப்' என ஒற்றுச் சேர்ந்த பாடத்தையே இளம்பூரணரும் நச்சினர்க்கினியரும் கொண்டுள்ளனர். இவ்வேறுபாட்டினுல் பொருள் வேறுபாடு எதுவும் இல்லை.

4. சொல்லதிகாரத்தில் வேறுபாடுகள்

சொல்லதிகாரத்தில் பதிப்புக்களில் காணப்பெறும் பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை மிகுதி. பதிப்புக்களில் இதுவரை அறியப் பெருதனவாக அமைந்த பாடங்களின் எண்ணிக்கை 116. உரையாசிரியர்கள் தமக்குள் பாடங்கொள்வதில் வேறுபடும் இடங்களில் பதிப்புக்களிலும் 16 இடங்களில் பாடங்கள் வேறுபட்டுள்ளன. எனவே பதிப்புக்களில் பாடம் வேறுபடும் இடங்களின் மொத்த

எண்ணிக்கை 132. இந்த இடங்களில் காணப்பெறும் மொத்தப் பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை 147. 121 இடங்களில் ஒவ்வோர் வேறுபாடுகளும் 10 இடங்களில் இரண்டிரண்டு வேறுபாடுகளும் அமைந்துள.

சொல்லதிகாரப் பதிப்புக்களில் அமையும் பாட வேறுபாடுகளைப் பதிப்புவாரியாகக் காண்போம்.

4. 1. மர்ரே பதிப்பு மூல பாடங்கள்

மர்ரே பதிப்பில் மூலத்தில் அமைந்த இருவேறுபாடுகள் புணர்ச்சியைப் பிரிப்பதால் அமைபவை: பொருள் வேறுபாடு அற்றவை.

'ஈற்று நின்றிசைக்கும்' (சொ. 10) என்ற இளம்பூரணர் பாடத்துக்கு **ஈற்றில்** நின்றிசைக்கும் என்பதும் பாடம். **ஈற்றில்** நின்றிசைக்கும் என்பது மர்ரே பதிப்பின் மூலபாடம்.

இரட்டுப் பிரிந்திசையா (சொ. 48) என்ற இளம்பூரணர் பாடத்துக்கு **இரட்டிற்** பிரிந்திசையா என்பதும் பாடம். மர்ரே பதிப்பில் **இரட்டின்** பிரித்திசையா என அமைந்துள்ளது.

4. 2. மர்ரே - பிற்சேர்க்கைப் பாடம்

மர்ரே பிற்சேர்க்கையில் புதியனவாக அமைந்தவை ஏழு வேறுபாடுகள். புதிய பாடங்கள் கீழே பட்டியலில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

உரையாசிரியர்களின் பாடம்	பதிப்புப் பாடம்	மாற்றம்
பெயரும் (இளம், சேனா, நச்சி, கல்) **பெயரோடு** (தெய்வ)	**பெயரொடு**	நெடில்-குறில்
கதழ்வும் துணைவும் (இளம், பேரா, தெய்வ, நச்சி)	கதழ்வும் துணையும்	உடம்படுமெய் மாற்றம்
நேர்பும் (இளம், சேனா, தெய்வ, நச்சி	நேர்வும்	ப-வ வேறுபாடு

துயவென்கிளவி (இளம், சேனு, தெய்வ நச்சி)	துய்வென்கிளவி	தோற்ற ஒற்றுமை
முனைவு முனிவு (இளம், சேனு, தெய்வ, நச்சி)	முனைமுனிவு	எழுத்துவிடு படல்
அம்மூவிடத்தான் (இளம், சேனு, நச்சி)		
மூவிடத்தான (தெய்வ)	மூவிடத்தான்	தோற்ற ஒப்புமை
ஆஅகுநவும் (இளம், சேனு, தெய்வ, நச்சி)	ஆகுநவும்	அளபெடைக் குறி விடுபடல்

மர்ரே பதிப்பில் பிற்சேர்க்கையில் காணப்படும் இப்பாடங்கள் ஏடெழுதுவோரால் நிகழ்ந்தவை. இப்பாடங்களில் பொருள் மாற்றம் இல்லை.

4. 3. மயிலைநாதர் பாடம்

அவற்றுள், செய்கென் கிளவி வினையொடு முடியினும் அவ் வியல் திரியா தென்மனார் புலவர் (சொ. 201) எனவரும் நூற்பாவில் உரையாசிரியர்கள் அனைவரும் 'திரியாது' என்று ஒரு முகமாக ஒரே பாடங்கொண்டுள்ளனர். ஆனல் இந்நூற்பாவை நன்னூல் உரையில்[1] மேற்கோள் காட்டும் மயிலைநாதர் **'திரியா என்மனர் புலவர்'** எனப் பாடங்கொண்டுள்ளார்.

இந்நூற்பாவில் செய்கென் கிளவி என்ற ஒருமைச் சொல்லே எழுவாயாக இருத்தலால் **'திரியாது'** என உரையாசிரியர்கள் கொண்ட ஒருமை வினை முடிபே பொருந்திய பாடமாக அமையத் தக்கதாகும்.

4. 4. சி. வை. தாமோதரம்பிள்ளை பதிப்புப் பாடம்

தாமோதரம்பிள்ளை பதிப்பில் சொல்லதிகார மூலபாடத்தில் மூன்று இடங்களில் வேறுபாடுகள் முதன் முதலாகக் குறிப்பிடப் பட்டுள்ளன.

''பொருண்மை சுட்டல் வியங்கொள வருதல்'' (சொ.67) என்ற நூற்பாப் பகுதியில் 'வியங்கொள வருதல்' என்பது **'வியங் கோள்வருதல்** என வந்தது. இப்பாடம் பொருள் வேற்றுமை செய்வதன்று.

1 நன், மயிலை- நூ. 332.

'எல்லே விளக்கம்' (சொ. 264) என்னும் தொல்காப்பிய நூற்பாவின் பாட வேறுபாடு மிகுதியும் அறிஞர்களின் கருத்து வேறு பாட்டுக்குரியது. **'விளக்கம்'** என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். **'இலக்கம்'** - என்பதைச் சேனாவரையர், தெய்வச் சிலையார், நச்சினார்க்கினியர் ஆகியோர் கொண்டனர். தாமோதரம்பிள்ளை பதிப்பில் 'எல்லே **இரக்கம்'** என்ற பாடவேறுபாடு குறிப்பிடப் பெற்றுள்ளது.

'எல்லே இரக்கம்' என்ற இப்பாடத்தை அரசஞ் சண்முகனார் ஆராய்ந்து கண்டார் என்றும், இருப்பை-இறுப்பை என்றுதல் போல **'எல்லே இரக்கம்'** என்பது **'எல்லே இலக்கம்'** என்றுயிற்று என்றும், திருநாவுக்கரசர், ஆண்டாள் பாடல்களில்[1] எல்லே என்பது இரங்கற்பொருளில் வந்துள்ளது. என்றும் க. வெள்ளைவாரணனார் கூறுவது[2] இவண் அறியத்தகும் செய்தியாகும். இவற்றுள் பொருந்திய பாடம் எது எனத் தொல்காப்பிய மூலபாட ஆய்வு என்னும் பகுதியில் விளக்கப்பெறும்.

இனி, 'ஏவும் குறையும்' (சொ. 267) என வரும் இளம் பூரணர் பாடத்தைத் தெய்வச்சிலையாரும் கொண்டிருப்ப, **'ஏயுங்** குறையும்' எனச் சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் பாடங் கொண்டுள்ளனர். இதற்கு **'ஓவும் குறையும்'** என்ற வேறுபாடு தாமோதரம்பிள்ளை பதிப்பில் காணப்படுவது அறியத்தக்கது. ஏ-ஓ தோற்ற ஒப்புமையால் இவ்வேறுபாடு விளைந்திருக்கலாம் எனக் கருது வது பிழையாகாது.

4. 4. 5. கரந்தைப் பதிப்புப் பாடம்

கரந்தைத் தமிழ்ச் சங்கம் வெளியிட்ட தெய்வச்சிலையார்பதிப்பில் ''அம்முக்கிளவியும் சினைவினை தோன்றின் சினையொடு முடியா'' (சொ.226) எனவரும் நூற்பாப்பகுதியில்**''தோன்றின்''** என்பதற்குத் **தோன்றில்**-எனையுரைப் பாடம்'' என்று அடிக்குறிப்பு அமைந்-துள்ளது. 'தோன்றின்-தோன்றில்' என்ற உருபு மாற்றம் இங்கு ஒரு வேறுபாட்டைத் தோற்றியுள்ளது. இதில் பொருள் மாற்றம் இல்லை.

---

1 தே. 6, 45-3, பாவை : 15;

2 தொல்காப்பியச் சிந்தனைகள், தொல்காப்பியத்தில் சில நூற்பாக் களின் பொருள்விளக்கம், க. வெள்ளைவாரணம், பக் 262-263.

4.6. கு. சுந்தரமூர்த்தி பதிப்புப் பாடம்

கு. சுந்தரமூர்த்தியின் சேனுவரையப் பதிப்பில் வேறுபதிப்புக்களில் இடம் பெருத நான்கு பாடங்கள் இடம் பெற்றுள்ளன.

"இரட்டைக் கிளவி இரட்டுப் பிரிந்திசையா" (சொ. 48) என்ற நூற்பாவில் இளம்பூரணர் 'இரட்டுப் பிரிந்திசையா' எனப் பாடங் கொண்டார். பிறர் 'இரட்டில் பிரிந்திசையா' என்றனர். கு. சுந்தரமூர்த்தியின் சேனுவரையப்பதிப்பில் (1979) 'இரட்டைப் 'பிரிந்திசையா' எனப் பாடங் கொள்வர் இளம்பூரணர்'' என்ற தவருன அடிக்குறிப்பைக் காண்கிருேம். கு. சுந்தரமூர்த்தி விளக்கம் எழுதிப் பதிப்பித்த இளம்பூரணர் உரைப்பதிப்பிலேயே 'இரட்டுப் பிரிந்திசையா' என்ற இளம்பூரணர் பாடம் தெளிவாக உள்ளது. ஆனுல் அவரின் சேனுவரையப் பதிப்பின் அடிக்குறிப்பு, இம் முறையில் ஒரு பாடத்தை இளம்பூரணர் பெயரால் எழுப்பியுள்ளது. கு. சுந்தரமூர்த்தியின் சேனுவரைய முதல் பதிப்பில் (1966) இரட்டுப் பிரிந்திசையா' எனச்சரியாக அடிக்குறிப்பு அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

சொல் நச்சினுர்க்கினியக் கழகப் பதிப்பில் 'பழியின் என்ரு' (சொ. 72) என்பதற்குப் 'பழிப்பின் என்ரு' என்ருெரு வேறுபாடு அமைந்துள்ளது. இவ்வேறுபாடு அவரது இளம்பூரணம், சேனுவரையம், கல்லாடம், பழைய உரைப்பதிப்புகள் ஆகிய எதனுள்ளும் குறிப்பிடப் பெறவில்லை என்பது அறியத்தக்கது. இது பொருளை வேறுபடுத்தவில்லை.

கு. சுந்தரமூர்த்தியின் சேனுவரையம், கல்லாடம், பதிப்புக்களில் 'சொல்லெனப் படுப' (சொ. 155) என்பதற்கு, 'சொல்லெனப்படுவ' -என்ற வேறுபாடு குறிப்பிடப் பெற்றுள்ளது. எழுத்தெனப்படுப - எழுத்தெனப்படுவ என எழுத்ததிகார முதல் நூற்பாவில் அமைந்த வேறுபாட்டின் தாக்கம் இது எனலாம்.

4.7. பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் கூறும் பாடங்கள்

பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியாரின் சொல்லதிகாரக் குறிப்புரையில் மூன்று இடங்களில் இதுவரை காணப்பெருத பாட வேறுபாடுகளைக் காண்கிருேம்.

வேற்றுமை மயங்கியலில் உள்ள ஒரு நூற்பா
"ஏனையுருபும் அன்னமரபின.
மானம் இலவே சொல்முறையான" (சொ. 107)

என்று அமைந்துள்ளது. 'மானம் இலவே' என்றே அனைத்து உரையாசிரியர்களும் பாடங்கொண்டு அச்சொற்குக் குற்றம் என்றும் பொருள் கொண்டுள்ளனர்.

'மானம்' என்பதற்குப் 'பிரமானம்' என்பது பொருளே தவிர, 'குற்றம்' என்ற பொருள் இல்லை என்றும், 'ஹானம்'-என்ற வட சொல்லின் திரிபாகிய 'ஆனம்'-என்ற சொல்லுக்கே குற்றம் என்று பொருள் உண்டு என்றும்- நிகண்டுகளில் மானம் என்பதற்குக் குற்றம் என்று பொருளிருந்தாலும் அது வடமொழிச் சொற்களின் சந்தியைத் தவறுகப் பிரித்து வழங்கிய சொல்லாகலாம் என்றும் காரணங்கள் கூறி, இங்கு 'ஆனம்'-என்பதே பொருந்திய பாடம் எனக் கூறுவர் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார். 'ஆனம்' என்ற பாடம் பொருத்தமில்லை என்பது மூலபாட ஆய்வு என்னும் கட்டுரையில் விளக்கப்பட்டுள்ளது.

பெயரியலில் அமைந்த மற்றொரு நூற்பா
"தன்னுளுறுத்த பன்மைக் கல்லது
உயர்திணை மருங்கின் ஆக்கமில்லை" (சொ. 184)

என்று அமைந்துள்ளது. இந்நூற்பாவிற்கு இளம்பூரணர் உரை இல்லை. எனினும் இதுபற்றிய சேனவரையர் விளக்கப் பகுதியால்[1] நூற்பாவின் வடிவம்

"தன்னுளுறுத்த பன்மைக் காங்கால்
உயர்திணை மருங்கி னல்ல தாகாது"

என்றே இளம்பூரணத்தில் இருக்க வேண்டும் எனக் கூறுவர் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார். அங்ஙனம் கொண்டால் பன் மைக்கல்லது-என்பதற்குப் பன்மைக் காங்கால் என்றும்-ஆக்கமில்லை என்பதற்கு அல்லதாகாது என்றும் பாடவேறுபாடுகள் அமைகின்றன. பதிப்பாசிரியர் கு. சுந்தரமூர்த்தி இளம்பூரணர் கொண்ட நூற்பாவின் வடிவம் மாறுபட்டிருக்க வேண்டும் என்ற கருத்தினர் அல்லர்.

[1] தொ. சொ-சேன. நூ. 187 விளக்கம்.

எனினும், இளம்பூரணர் உரை சேனாவரையர் கூறியாங்கு அமைய வேண்டும் என்று கூறுவர்.

4. 8. இலக்கணத் தொகை - சொல்: பதிப்புப் பாடம்

டாக்டர் ச. வே. சுப்பிரமணியத்தின் இலக்கணத் தொகை-சால் பதிப்பில் பிறபதிப்புக்களில் இல்லாத பதினைந்து பாடங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

உரையாசிரியர் பாடம்	பதிப்புப் பாடம்	மாற்றம்
மாரைக்கிளவி	மாரைக்கிளவியும்	உம்-சேர்க்கை
குன்றிய லுகரத்து	குன்றயலுகரத்து	அச்சுப்பிழை
வினைவேறுபடூஉம்	அவற்றுள் வினைவேறு படூஉம்	சொற்சீரடி சேர்க்கை
னளரவென் இறுதியும்	னரளவென் இறுதியும்	எழுத்து இட மாற்றம்
குறிப்பின் தோன்றலும்	குறிப்பில் தோன்றலும்	வேற்றுமை உருபு மாற்றம்
மருங்கின் தோன்றலும்	மருங்கில் தோன்றும்	,,
திரிபு	திரிவு	ப-வ மயக்கம்
உணர்த்தற்கு	உணர்த்துதற்கு	எழுத்துச் சேர்க்கை
இயற்கைய	இயற்கைத்து	பன்மை-ஒருமை
நிலையினும்	நிலைஇதும்	ஒலி ஒப்புமை
உணர்த்தற்கும்	உணர்தற்கும்	எழுத்து விடு படல்

மரபின	மரபில்	வேற்றுமை உருபு மாற்றம்
எண்ணின்பெயரோடு	எண்ணியற் பெயரோடு	ஒருபொருள் வேறுசொல்
இருமொழி மேலும்	இருமொழி நிலையலும்	வேறுபொருள் வேறு சொல்
அவற்றவற்றியலான்	அவற்றவற்றியல்பான்	ஒருபொருள் வேறு சொல்

இங்குக் காட்டப்பெற்ற வேறுபாடுகள் பொருள் மாற்றமில்லா நிலையில் பல்வேறு சூழல்களால் உருவம் மாறுபட்டுப் பாட வேறு பாடுகளாயவை. ஒன்று மட்டுமே பொருள் மாற்றம் தரும் நிலையில் வேறுபட்டுள்ளது. (இருமொழி மேலும்-இருமொழி நிலையலும்) இப்பதிப்பு வேறுபடும் பதினைந்து இடங்களிலும் உரையாசிரியர்கள் அனைவரும் ஒரேபாடத்தைக் கொண்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

4, 9. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பதிப்புப் பாடம்

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரத்தின் தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-கல்லாடர் உரைநூல் பாடவேறுபாட்டு ஆய்வில் முக்கியமான ஒரு பதிப்பாகும்.

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரம் இப்பதிப்பில் தொல் காப்பியச் சொல்லதிகாரத்துக்குரிய கல்லாடர் உரை, பழைய உரை ஆகியவற்றை ஒரே நூலாகப் பதிப்பித்துள்ளார். இப்பதிப்புக்கு அவருக்குக் கிடைத்த ஏடுகள், அச்சு நூல்கள், கையெழுத்துப் பிரதிகளின் எண்ணிக்கை-11. இவற்றுள் காணப்பெறும் அனைத்து வேறுபாடுகளும் இப்பதிப்பில் இடம் பெற்றுள்ளன.

‘உளறல்கள் என்று தோன்றும் பாட பேதங்களையும் இப் பதிப்பில் கொடுக்க நான் பின் வாங்கவில்லை. இன்றுள்ள நிலையில் பின்னெழக்கூடிய ஆராய்ச்சிக்கு இவற்றில் எவை ஒரு பயனும் தராது போய்விடும் என்று அறுதியிட்டுக் கூற முடியாதது ஒரு

காரணம். ஷேக்ஸ்பியருடைய நூல்களை அச்சிட்டோர் முன்னோர் உளறல்கள் என்று கொண்ட பாடங்களையும் இப்போது பொருளாழம் உள்ளவையெனக் கொண்டு பதிப்பிக்கக் காண்கிறோம். பிழைபட்ட பாடங்களேயானாலும் அவற்றின் வழியே பெயர்த்து எழுத வந்தவர்கள் தமிழை உச்சரித்த வழக்கத்தையும், அவர்கள் காலத்தில் வழங்கிய கையெழுத்து முறைகளையும் அறிய முடிகின்றது என்பது இரண்டாவது காரணம்". இங்ஙனம் தன் பதிப்பில் பிழையெனக் கருதிய வேறுபாடுகளையும் சுட்டியுள்ளமைக்கு அவர் இரு காரணங்கள் குறிப்பிட்டுள்ளார்[1]. இம்முறையில் கல்லாடர் மூல பாடத்திலும் பழைய உரைகாரரின் மூலபாடத்திலும் அமைந்த பாடவேறுபாடுகளின் மொத்த எண்ணிக்கை 104. இவற்றுள் பொருள் வேறுபாடுடையன சிலவே. அவை பற்றிய ஆய்வினை மூலபாட ஆய்வியல் என்ற பகுதியில் காணலாம்.

4.10. கா. நமச்சிவாய முதலியார் பதிப்புப் பாடம்

கா. நமச்சிவாய முதலியாரின் பதிப்பில் (1922) சொல்லதிகாரத்தில் குறிப்பிடப் பெறும் மொத்தப் பாடங்கள் 16ல் முதன் முதலாக இப்பதிப்பினால் அறியப்பெறும் பாடங்களின் எண்ணிக்கை 7. இப்பாடங்கள் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

உரையாசிரியர்கள் பாடம்	பதிப்புப் பாடம்	மாற்றம்
தெரிந்த கிளவி ஆதலும்	தெரிந்த கிளவி ஆகலும்	தக-ஒப்புமை
ஒருவினை கிளவார்	ஒருவினைக்கிளவார்	ஒற்று மிகல்
பின்சார் அயல்	பின்சார் பயல்	எழுத்துமாற்றம்
தேவகை எனஅ	தேம்வகை எனஅ	எழுத்துச் சேர்க்கை
பிரிந்தே (இளம்,கல்,ப.உரை)		
பிரிந்து (சேன,தெய்வ,நச்சி)	பிரித்தே	ந-த இன ஒப்புமை
காலமும் கருவியும்	காலையும் கருவியும்	சொல்மாற்றம்
வினையும் உளப்பட	வினையும் உளப்பட்ட	வல்லினம் இரட்டித்தல்

1 தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-கல்லாடனார் விருத்தி— டாக்டர். தெ. பொ. மீனாட்சி சுந்தரம், ப. 67

இங்குக் குறிப்பிடப்பெற்ற பாடங்களில் பொருள் வேறுபாடு தரும் ஓரிரு பாடங்கள் பின்னே ஆய்வு செய்யப்பட்டுள.

சொல்லதிகாரப் பகுதியில் பதிப்புக்களால் அறியப்படும் பெரும்பாலான பாடங்கள் மிகுதியும் பொருள்வேறுபாடு செய்யாதவை.

5. பொருளதிகாரத்தில் வேறுபாடுகள்

எழுத்து, சொல் பகுதிகளைவிடப் பொருளதிகாரப்பகுதி நூற்பாக்கள் மிகுந்தது; வழக்குப் பயிற்சி மிக்கது; எனவே பாட வேறுபாடுகளும் பதிப்புக்களில் அதிகமாக இருத்தல் இயற்கையே.

பொருளதிகார நூற்பாக்கள் 317ல் வேறுபாடுகள் அமைந்துள இவற்றுள் பதிப்புக்களில் மட்டுமே வேறுபடும் இடங்களின் எண்ணிக்கை 210. இவற்றுக்கு மேலும் உரையாசிரியர்கள் பாடங் கொள்வதில் வேறுபடும் இடங்கள் 63ல் பதிப்புக்களும், பாட வேறுபாடுகளைக் குறிப்பிட்டுள்ளன. மொத்தத்தில் பதிப்புக்களில் 278 இடங்களில் 298 வேறுபாடுகள் அமைந்துள்ளன. இவற்றில் 255 இடங்களில் ஒவ்வொரு வேறுபாடும் 20 இடங்களில் இரண்டிரண்டு வேறுபாடுகளும், ஓர் இடத்தில் 3 வேறுபாடுகளும் பதிப்புக்களில் உள. இவ்வேறுபாடுகள் அமைந்த மொத்தப் பதிப்புக்களின் எண்ணிக்கை ஏழு.

பொருளதிகார வேறுபாடுகளைப் பதிப்பு வாரியாகக் காண்போம்.

5. 1. கழகப் பதிப்புப் பாடங்கள்

கழகத்தின் தொல்காப்பிய மூலப்பதிப்பிலும் உரைப்பதிப்புக்களிலும் பிற பதிப்புக்களில் அறியப்பெறுதனவாக அமைந்த பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை 61 ஆகும்.

எழுத்துக்கள் விடுபடுதலால், 'மறைந்தவை உரைத்தல்'(பொ. 268) என்பதற்கு 'மறைந்தவை உரைத்த' என்றும் 'இயற்கை புல்லிய' (பொ. 507) என்பதற்கு 'இயற்புல்லிய'-என்றும் வேறுபாடுகள் எழுந்துள.

எழுத்துச் சேர்க்கையால் **'தலைவரு' பொருளான்'** (பொ.507) என்பதற்குத் **'தலைவரும் பொருளான்'** என்றும், எழுத்து மாற்றத்தால் **'முடியநாட்டல்'** (பொ. 383) என்பதற்கு **'முடிய நாட்டில்'**- என்றும் வேறுபாடுகள் உள.

'மறியுமென்று' (பொ. 545) என்பது சொல் விடுபட்டமையால் **'மறியும்'** என வேறுபாடாயிற்று.

ஒரு பொருளைத் தரும் வேறுசொற்களின் பயிற்சியால் 'தலைமகள்' (77) 'சிறுவன்' (77) முதலிய பாடங்கள் எழுந்தன. வேறு பொருளைத்தரும் வேறு சொற்கள் பயின்றமையால் 'இவட் பெறும் என்றே' (347) உயர் பென்றறையவும் பெறுமே' (438) போன்ற பாடங்கள் அமைந்தன.

தோற்ற ஒப்புமையால் வேறுபாடுகள் எழுந்தமைக்கு **மாக்களி** ஞறிடமாக்கள் இன்றிய (116) **நீவா வென்றலும் - நீவர வென்றலும்** (207) என்பன போன்ற பல சான்றுகள் உள.

மின்னகை-**இன்னகை** (77) **மாய்ந்தபூசல்-ஆய்ந்த பூசல்** (77) **ஆயிடைப்** பெய்ந்நீர்-வாயுடைப் பெய்ந்நீர் (116) போன்ற வேறுபாடுகள் ஒலி ஒப்புமையால் எழுந்தவை எனலாம்.

இளிவும் - இழிவும் (44) உள்ளுறை - உள்ளுரை (49) இயையுமன் - இசையுமன் (193) புணர்த்தும்-புணர்ந்தும் (194) ஆகியன முறையே ள-ழ, ற-ர, ய-ச, த-ந, எழுத்து மயக்கத்தால் உருவாய வேறுபாடுகள்.

வேற்றுமை உருபு விடுபட்டமையால் **வேண்டினும்-வேண்டியும்** (112) என்றும், ஏகாரம் விடுபட்டமையால் இடைநிலைப்பாட்டே தரவு-இடைநிலைப்பாட்**டுத்**தரவு (437) என்றும், உம்மை விடுபட்டமையால் மிகுதலும்-**மிகுதல்** (347) என்றும், வல்லினம் இரட்டித்தமையால் **ஆறின** தருமையும்-**ஆற்றின** தருமையும் (134) என்றும், குறிலை நெடிலாக்கியமையால் **நெஞ்சமொடு நெஞ்சமோடு** (43) என்றும் பல்வேறு நிலைகளில் இப்பதிப்புக்களில் பாட வேறுபாடுகள் மலிந்தன. இவற்றுள் பொருள் மாற்றத்திற்குரிய வேறுபாடுகள் சில உண்டு.

5. 2. மர்ரே பதிப்பு மூல பாடங்கள்

மர்ரே பதிப்பில் மூலமாய் அமைந்த பகுதியில் பிற பதிப்புக்களில் இடம் பெறாத 27 பாடங்கள் முதன் முதலாய் அறியப் படுகின்றன.

இல்லென (பொ. 14) இலவென, **நனியழல்**, (77) **நணி** யழல், னகாரை ஈற்று (541) - ளகாரை ஈற்று, **பல்வகையானும்** (646) - **பலவகையானும்** எனவரும் வேறுபாடுகள் எழுத்துக்களின் தோற்ற ஒப்புமையால் விளைந்தனவாம்.

'கண்டோர்ச்சுட்டி' (42) என்பதற்குக் **'கண்டோர்** சுட்டி' என்றும், **'உடன் பட்டோர்க்** கடாவல்' (112) என்பதற்கு **'உடன் பட்டோற்** கடாவல்' என்றும் வருவன எழுத்துக்களின் ஒலி ஒப்புமையால் பிறந்த வேறுபாடுகளாகக் கருதத்தக்கவை.

ஏறத்தாழ ஒரே பொருளைத் தரும் வேறு சொற்கள் அமைவதாலும் பாடங்கள் வேறுபடுவ துண்டு என்பதற்கு **'பரத்தைமை'** (229) **'பரத்தமை'** என்றும் **'அவ்வமாக்களும்'** (510) **'அவ்வம் மாக்களும்'** என்றும் **'ஆங்கென'** (514) **'ஆங்குவென'** என்றும் வரும் வேறுபாடுகள் சான்றுகளாயுள.

முற்றிலும் வேறுபொருள் வேறு சொற்கள் அமைவதாலும் பாடங்கள் வேறுபடும். **'இறந்ததுநினைய'** (170) என்பதற்கு 'இறந்தது **நிலைஇ'** என்றும் **'தன்னையழிதலும்'** (207) என்பதற்குத் 'தன்னை**யறிதலும்'** என்றும், **'பழமை** மேற்றே' (538) என்பதற்கு **'யாப்பின்** மேற்றே' என்றும் **'அப்பரும்'** (546) என்னபதற்கு **'உம்பலும்'** என்றும் வருவன இதற்குக் காட்டுக்களாய் உள்ளன.

'பரிவு நீக்கிய' (144) என்பதற்குப் **'பரிவில்** நீக்கிய' என வருவது வேற்றுமை உருபு சேர்க்கைக்கும், **'களவினிற்** கிளவிக்கு' (490) என்பதற்குக் **'களவின்** கிளவிக்கு' என வருவது வேற்றுமை உருபு விடுபட்டமைக்கும், **'மரபில்'** (63) என்பதற்கு **'மரபின்'** என்றும், 'ஆங்செழு **வகையால்'** (74) என்பதற்கு 'ஆங்கெழு **வகையான்'** என்றும் வருவன வேற்றுமை உருபு மாற்றத்திற்கும் எடுத்துக்காட்டுக்களாய் அமைந்து, இக்காரணங்களாலும் பாட வேறுபாடுகள் எழும் என்பதை உணர்த்துகின்றன.

நெடில் குறிலானமையாலும் (656) உம்-இடைச்சொல் சேர்க்கையாலும் (68) வல்லொற்றுவிடுபடுதலாலும் (144) எழுத்து விடுபடுதலாலும் (183) ளகர ழகர வேறுபாடின்மையாலும் (205) பாடங்கள் வேறுபட்டு அமைந்தனவும் இப்பதிப்பில் உள.

பெரும்பாலான பதிப்புக்கள் யாரேனும் ஓர் உரையாசிரியரைச் சார்ந்தே மூல பாடங்களைக் கொண்டிருக்க, எந்த உரையாசிரியரையும் சாராது, பொருளுணர்ச்சியையே முதன்மையாகக் கொண்டு, உரையாசிரியர்களால் ஆளப்படவில்லை யென்றாலும் ஏடுகளில் அமைந்த பாடங்களும் பதிப்பின் மூல பாடங்களாய்க் கொண்டிருப்பது இப்பதிப்புக்குரிய தனிச்சிறப்பாகும்.

5. 3. மர்ரே - பிற்சேர்க்கைப் பாடங்கள்

மர்ரே பதிப்பின் பிற்சேர்க்கையில் ஏடுகளாலும் பதிப்புக்களாலும் அறியப்பெறும் பாடங்கள் அனைத்தும் ஒருசேரத் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஏறத்தாழ 480 வேறுபாடுகள் இப்பட்டியலில் சுட்டப்பெற்றிருப்பினும் 178 மட்டுமே இப்பதிப்புப் பிற்சேர்க்கையால் புதியனவாக அறியப்பெறும் பாடங்கள்.

பிற்சேர்க்கையில் கண்ட பாடங்கள் பல்வேறு களங்களை அடிப்படையாகக் கொண்டு எழுத்துள்ளன. எழுத்துச் சேர்க்கையால் அமைந்த வேறுபாடுகளுக்குத் தொகைஇ' (பொ. 20) - 'தொகைஇய' 'அன்னபிறவும்' (39) - 'அன்னவை பிறவும்' என்பன சான்றுகள். எழுத்து விடுபட்டமையாலும் பாடங்கள் வேறுபடுதல் உண்டு என்பதற்கு மயங்கிய (131) - மயங்கி என்பதும், எழுத்து மாறியமைவதால் பாடங்கள் வேறுபடுதல் உண்டு என்பதற்கு இறுவதை (51) உறுவதை என்பதும் உதாரணங்களாக உள.

ஒரே பொருளை வேறு சொற்களால் கூறுவதால் பாடங்கள் வேறுபடும். 'எழுமூன்று' துறைத்தே' (63) - என்பதற்கு 'மூவேழ், துறைத்தே' எனப் பாடம் அமைந்திருப்பது இதற்குக் காட்டாகும். 'அனைநெறி மரபிற்று (66) என்பதற்குப் 'பன்னெறி மரபிற்று' என வரும் வேறுபாடும், வேறுபொருள் தரும்வேறு சொற்களாலும் பாட வேறுபாடு அமைதல் உண்டு என்பதைக் காட்டுகிறது,

'திணைநிலைப்பெயரே' (22) என்பதற்குத் 'திணைநிலப் பெயரே என்றும், 'நடுதல்' (68) என்பதற்கு 'நடுகல்' என்றும் வருவன முறையே ஒலி ஒப்புமையாலும் ஏடுகள் அரித்தநிலையில் ஏற்படும் தோற்ற ஒப்புமையாலும், பாடங்கள் வருதல் உண்டு என்பதை விளக்குகின்றன.

'இவர்தலும்' (68) என்பதில் உம்மை விடுபட்டமையால் 'இவர்தல்' என்பது வேறுபாடாயிற்று. 'அன்றி' (69) என்பதுடன் உம்மை சேர்த்தமையால் 'அன்றியும்' என்பது பாடமாயிற்று.

'கணவனை' (77) என்பதில் வேற்றுமை உருபு விடுபட்டமையால் 'கணவன்' என்று பாடம் எழுந்ததையும் 'என்றிச்சிறப்புடைய' (97)என்பதில் சுட்டெழுத்து மாற்றம் நிகழ்ந்தமையால் 'என்ற சிறப்புடை' என்ற பாடம் எழுந்ததையும், 'பெயர்த்தமனைவி' (77) என்பதில் இரு குறில் நெடிலாகும் மரபுப்படி 'பேர்த்தமனைவி' என்ற பாடம் எழுந்ததையும் காண்கின்றோம். பொருள் மாற்றம் செய்யும் வேறுபாடுகளின் பொருத்தம் பின்னே மூலபாட ஆய்வியல் பகுதியில் நிகழ்த்தப்பட்டுள்ளது.

5. 4. கா. சுப்பிரமணியபிள்ளை கூறும் பாடம்

பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து (1939) என்பது கா. சுப்பிரமணியபிள்ளையின் நூல். தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்திகளை சுருங்கிய நிலையில் செறிவுடன் ஆராய்ந்து உரைக்கப்பட்டது இந்நூல். "மாயோன் மேயகாடுறை உலகமும்" (பொ. 5) என்ற நூற்பாவில் 'மாயோன்' என்பதே இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கொண்ட பாடம். 'மாயோன்' என்பதற்கு இளம்பூரணர் மாயவன் என்று விளக்கம் கூறினார். நச்சினார்க்கினியர் கடல் வண்ணன் என்று விளக்கம் கூறினார். பின்னர் வந்த எந்தப் பதிப்பும் மாயோன் என்ற சொல்லுக்குப் பாடவேறுபாடு எதனையும் குறிப்பிடவில்லை.

கா. சுப்பிரமணியபிள்ளை தனது நூலில் 'மாயோள்' என்பதே இதற்குப் பொருந்திய பாடம் எனக் குறிப்பிட்டுள்ளார். காட்டிற்குத் தெய்வம் மாயோன் என்று பிற்காலத்தார் கருதினும் மாயோளாகிய கருநிறமுடைய அம்மையையே சிறப்பாகக்கொள்ள வேண்டும்.

'மாயோள் மேயக் காடுறையுலகமும்' என்ற பாடமே சிறந்தது எனக் குறிப்பிட்டுள்ளார்[1].

நாட்டுப்புறங்களிலும் காடுகளிலும் பெருவழக்காக வழிபடப் படுந் தெய்வம் சக்தியின் வேக வடிவமாகிய காளியே என்றும், பிற்காலத்தே மரபொற்றுமை பற்றிக் கோவலர் மாயோன் வழி பாட்டைக் கைக்கொண்டனர் என்றும், மாயோனும் மாயோளும் உடன்பிறந்தார் என்னும் கொள்கையும் இக்கருத்தை அரண் செய் கிறது என்றும் தன் நூலில் அவர் விளக்கம் கூறியுள்ளார்.

இப்பாடத்துக்கு எந்தவொரு ஏட்டிலும் சான்றில்லை என்ப தாலும் தத்தம் கருத்துக்குத்தக மூலபாடத்தைத் திருத்தம் செய்வது தொல்காப்பியருக்குப் பெருமை சேர்க்காது ஆதலாலும், 'மாயோன்' என உரையாசிரியர் கொண்ட பாடமே இங்குத் தகவுடையது எனலாம்.

5. 5. புலவர் குழந்தை கூறும் பாடங்கள்

புலவர் குழந்தை தன் பதிப்பில் தொல்காப்பிய மூல்பாடங் களுக்குச் சில இடங்களில்புதிய வேறுபாடுகளைக் காட்டுவது மட்டு மன்றித் தொல்காப்பிய அமைப்பு முறையில் பெரிய மாற்றங்களையும் அமைத்துள்ளார்.

தொல்காப்பிய நூற்பாக்கள் பல, இடம் மாறியும் மிகச் சேய்மை நிலையிலும் உள்ளன என்பது புலவர் குழந்தை கருத்து. புதிய உரை, புதிய அமைப்பு, நூற்பாக்களின் புதிய வைப்பு முறை முதலாயவை இப்பதிப்பில் குறிப்பிடத்தக்கவை.

பொருள்திகாரம் முதற்பகுதி என்ற இப்பதிப்பில் அகத்திணை யியல், பொருளியல், களவியல், கற்பியல், மெய்ப்பாட்டியல், புறத்திணையியல் என ஆறு இயல்கள் இவ்வரிசை முறையிலேயே அமைந்துள்ளன. பழைய மரபுப்படி ஓர் இயலில் அமைந்த நூற் பாக்கள் சில பிறிதொரு இயலில் இப்புதிய பதிப்பில் சேர்க்கப்பட் டுள்ளன.

---

[1]பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து, கா. சுப்பிரமணியபிள்ளை ப. 21.

நூலின் அமைப்பு நிலையை விடுத்து, பாடவேறுபாட்டு நோக்கில் மட்டும் காண்போம்.

'ஏந்துபுகழ்' (63) என்பதற்கு **'ஏய்ந்து புகழ்'** என்றும்' **'அவையகத்தானும்'** (75) என்பதற்கு **'அவையத்தானும்'** என்றும், **'முதலது'** (85) என்பதற்கு **'முதலான'** என்றும் **'நல்யாழ்த்துணைமையோர்** (89) என்பதற்கு' **நல்லியாழ்த்துணைமையோர்'** என்றும் **'இன்னவை'** (98) என்பதற்கு **'அன்னவை'** என்றும் **'வழுவின்று'** (109) என்பதற்கு **'வழுவின்றி** என்றும் வருவன சில வேறுபாடுகள்.

'அழிவு தலைவந்த' (109) 'அறிவு தலைவந்த' 'வாவென்றலும் (112) 'வருகென்றலும்' உள்பட்டோர் கடாவல் (112) 'உடன் பட்டோற் கடாவல் 'அழிதலை வரினும்' (113) 'அறிவுதலை வரினும்' 'உணர்வுடம்படினே' (114) 'போக்குடன் கிளப்பின்', 'அவர்கட் படுமே' (169) 'இவர்கட்படுமே' என்பன மற்றும் சில குறிப்பிடத் தக்க வேறுபாடுகள்.

பதிப்பாசிரியர், மூலபாடங்களைத் திருத்துவதற்கு அடிப்படையாக ஏதும் மூல ஏடுகளை அடிப்படையாகக் கொண்டாரா என்று குறிப்பிடவில்லை. எனினும் இதுவரை கிடைக்கப் பெருத பல்வேறு பாடுகள் இப்பதிப்பில் கிடைக்கின்றன என்பது குறிப்பிடத்தக்க தாகும். சில இடங்களில் பதிப்பாசிரியர் தன் கருத்துக்குத்தக, தனக்குச்சரியென்று பட்டதை வைத்து மூலபாடங்களைத் தன்னிச்சையாகத் திரித்துக் கொண்டுள்ளார் என்றும் தோன்றுகிறது.

புலவர் குழந்தையின் பதிப்பில் புதிய பாடங்களாகக் கிடைக்கும் வேறுபாடுகளின் மொத்த எண்ணிக்கை 27 ஆகும்.

5. 6. நாவலர் சோமசுந்தர பாரதியார் பதிப்புப் பாடம்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அகத்திணை இயலுக்குப் புத்துரை தந்த டாக்டர் நாவலர் சோமசுந்தர பாரதியார் தன் பதிப்பில் உரையாசிரியர்கள் கூருத ஒரு பாடத்தைக் கொண்டுள்ளார்.

''வைகறை விடியல் மருதம்'' (பொ. 9) என்ற நூற்பாவில் **'வைகறைவிடியல்'** என வருவது இளம்பூரணர் பாடம். இதற்கு

'வைகுறுவிடியல்' எனப்பாடங் கொண்டார் நச்சினார்க்கினியர். நாவலர் பாரதியார் நூற்பாவில் மூலத்தில் **'வைகுறுவிடியல் மருதம்** எனக் கொண்டாலும் குறிப்பில் **'வைகுறிளவேனில் மருதம்'** என்ற பாடத்தையும் குறிப்பிட்டுள்ளார்.

'வைகுறிளவேனில் மருதம்' எனும் பாடம் மருதத்திணைக்குப் பொழுதும் பருவமும் வழுவாதுரைக்கும் சிறப்புடைத்து எனவும் நாவலர் இப்பாடத்தைப் பாராட்டிக் கூறுவர்.

தொல்காப்பிய-அகத்திணையியல் - உரைவளப் பதிப்பாசிரியர் மு. அருணாசலம்பிள்ளை இப்புதிய பாடம் சிறப்புடையதென்றாலும் சிறுபொழுது ஆறு என்னும் கொள்கையோடு இது மாறுபடுமாதலால் பொருந்தாது எனக் கூறுவர்[1].

நாவலர் கூறும் பாடம் பொருள் நிலையில் சிறப்புடையதாயினும், தொல்காப்பியரின் இலக்கணக் கொள்கையோடு முரணுவதால் பொருத்தமன்று என்பது இதனால் புலனாகும். மேலும் நாவலரே இதனை மூலபாடமாகக் கொள்ளாமையும் இக்கருத்துக்குத் துணை செய்கிறது.

5. 7. மு. அருணாசலம்பிள்ளை பதிப்புப்பாடம்

மு. அருணாசலம்பிள்ளையின் தொல்காப்பியம்-அகத்திணையியல் உரை வளப்பதிப்பில் பிறவற்றில் இல்லாத சில வேறுபாடுகள் அமைந்துள்ளன.

இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இருவரும் கொண்ட 'இருவகைப்பிரிவும்' (பொ. 13) என்பதை 'இருவகை பிரிவும்' என்றும் 'உரைத்திறநாட்டம்' (பொ. 44) என்பதை 'உரைத்திய நாட்டம்' என்றும் இப்பதிப்புத் தவறாகக் குறிப்பிட்டுள்ளது. மேலும் 'நீக்கலின் வந்த', 'கண்டோச்சுட்டி' (பொ. 42) என இளம்பூரணர் கொண்ட பாடங்களும் 'நீக்கலினாகிய' 'கண்டோற்சுட்டி' எனத் தவறாகச்சுட்டப் பெற்றுள்ளன (பொ. 392) இவை தவிர புதியனவாகக் கூறப்பெற்ற பாடவேறுபாடுகள் எவையும் இப்பதிப்பில் இல்லை.

---

[1] தொல்காப்பியம்-அகத்திணையியல்-உரைவளம். மு. அருணாசலம் பிள்ளை, ப. 102.

தொல்காப்பியத்தின் மூன்று அதிகாரங்களுக்கும் அமைந்த பல்வேறு பதிப்புக்களில் காணப்பெறும் பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை கீழே பட்டியலில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

எண். பதிப்பு	எழுத்து	சொல்	பொருள்
1. கழகம்	4	—	61
2. மர்ரே-மூலம்	8	2	27
3. மர்ரே-பிற்சேர்க்கை	—	7	178
4. கன்னியப்ப முதலியார் பதிப்பு	3	—	—
5. வ. உ. சிதம்பரம்பிள்ளை பதிப்பு	7	—	—
6. கு. சுந்தரமூர்த்தி பதிப்பு	1	4	—
7. வேங்கடராஜுலு ரெட்டியார் பதிப்பு	9	—	—
8. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி நூல்	10	3	—
9. கா. நமச்சிவாய முதலியார் பதிப்பு	1	7	—
10. மயிலைநாதர் உரை	—	1	—
11. தாமோதரம்பிள்ளை பதிப்பு	—	3	—
12. கரந்தைப் பதிப்பு	—	1	—
13. இலக்கணத்தொகை-சொல்-பதிப்பு	—	15	—
14. தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பதிப்பு	—	104	—
15. கா. சு. பிள்ளை நூல்	—	—	1
16. புலவர் குழந்தை பதிப்பு	—	—	27
17. டாக்டர் சோமசுந்தர பாரதியார் பதிப்பு	—	—	1
18. மு. அருணாசலம்பிள்ளை உரைவளப் பதிப்பு	—	—	3
19. அச்சுப்பிழை	5	—	—
	48	147	298

பொருள், சொல், எழுத்து என்ற இறங்குவரிசையில் பதிப்புகளால் அறியப்பெறும் பாட வேறுபாடுகள் அமைந்துள.

எழுத்ததிகாரம் தொடர்பான எட்டுப் பதிப்புக்களில் மொத்தம் 45 இடங்களில் 48 வேறுபாடுகள் அமைந்தன. சொல்லதிகாரம் பற்றிய பத்துப் பதிப்புக்களில் மொத்தம் 132 இடங்களில் 147 பாட வேறுபாடுகள் உள. பொருளதிகாரம் பற்றிய 7 பதிப்புக்களில் 278 இடங்களில் 298 பாட வேறுபாடுகள் இடம் பெற்றுள்ளன. மொத்தத்தில் தொல்காப்பியம் முழுமையும் 455 இடங்களில் மொத்தம் 493 பாட வேறுபாடுகள் பதிப்புக்களால் அறியப்பெற்றுள்ளன. பாடவேறுபாட்டுப் பணியில் பதிப்புக்களின் பெரும் பங்கு இதனால் புலனாகும்.

பதிப்புக்கள் பலவாக இருப்பினும் காலவரிசை அடிப்படையில் எந்தெந்தப் பாடங்கள் எந்தெந்தப் பதிப்புக்களில் முதலாவதாகக் காணப்படுகின்றனவோ அவை மட்டுமே இங்குக் கொள்ளப் பட்டுள்ளன.

4. தொல்காப்பிய உரைகளில் பாட வேறுபாடுகள்

உரையாசிரியர்கள் தங்கள் கருத்துக்கு இசைந்தவற்றை மூல பாடமாகக் கொண்டுள்ளனர். அத்துடன் மட்டுமன்றித் தத்தம் உரைகளில் மூலபாடத்தைப் போற்றும் வகையில் பல பணிகளும் செய்துள்ளனர். சில இடங்களில் உரையாசிரியர்கள் பிறர் பாடத்தையும் தம்முரையில் சுட்டிச் சென்றுள்ளனர்.

உரையாசிரியர்களின் உரைக்குறிப்புக்களிலும், உரை விளக்கங்களிலும் பாட வேறுபாட்டு ஆய்வுக்குப் பயன்படத்தக்க குறிப்புக்கள் உள்ளன. இவற்றை ஆய்தல் இன்றியமையாதது.

1. உரையாசிரியர்களின் கால வரிசை

தொல்காப்பிய உரையாசிரியர்கள் கி. பி. 12 ஆம் நூற்றுண்டு முதல் கி. பி. 15 ஆம் நூற்றுண்டு வரை வாழ்ந்தவர்கள். இவர்கள் வாழ்ந்த காலத்தை வரிசைப்படுத்திக் கொள்ளுதல் இந்த ஆராய்ச்சிக்கு இன்றியமையாதது.

உரையாசிரியர்களில் காலத்தால் மூத்து விளங்கும் பெருமை இளம்பூரணருக்கு உரியது. முதன் முதலாகத் தொல்காப்பியம் முழுமைக்கும் உரைவகுத்த சிறப்பு நோக்கி இவரை உரையாசிரியர் என்ற சிறப்புப் பெயரால் குறித்தல் தமிழ் வழக்காகும்.

இளம்பூரணரின் காலம் கி. பி. 11 ஆம் நூற்றுண்டு எனவும்[1] கி. பி. 12 ஆம் நூற்றுண்டு எனவும்[2] இருவேறு வகையாகக் கூறப்பட்டாலும் இவர் காலம் கி. பி. 12 ஆம் நூற்றுண்டு என்பதே பலருக்கும் ஒப்பமுடிந்த கருத்து.

இளம்பூரணருக்குப் பின்னர் காலவரிசையில் அடுத்து வருபவர் பேராசிரியர். இவர் கி. பி. 12 ஆம் நூற்றுண்டுக்குப் பிற்பட்டவர் எனக் கூறுவர்[3]. எனினும் கி. பி. 13 ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படும் கருத்து.

---

1. உரையாசிரியர்கள்-மு. வை. அரவிந்தன், ப. 146
2. தொ. எ. இளம்-கு. சுந்தரமூர்த்தி (1969) ஆராய்ச்சி முன்னுரை, ப. 12
3. உரையாசிரியர்கள்-மு. வை. அரவிந்தன், ப. 200

பேராசிரியரை அடுத்துக் காலவரிசையில் மூன்ருவதாக விளங்குபவர் சேனுவரையர். மாறவர்மன் குலசேகரன் காலத்தில் (கி. பி. 1268-1311) இவர் வாழ்ந்தார் எனக் கல்வெட்டுக்களால் அறியப்பெறுதலால், இவர் காலம் கி. பி. 13 ஆம் நூற்ருண்டின் பிற்பகுதி எனத் துணியப்படுகிறது. கி. பி. 1280 ல் சேனுவரையர் உயிர்நீத்தார் என்றும் கல்வெட்டின் துணைகொண்டு கணக்கிட்டுரைப்பர்.[1]

மூவருக்குப் பின் நான்காமவராகக் கருதத்தக்கவர் தெய்வச்சிலையார். உரையாசிரியர் தெய்வச்சிலையார் மாறவர்மன் குலசேகரன் காலத்தில் (1268-1311) திருநெல்வேலிப் பகுதியில் சேனுவரையருக்குப் பின்னர் வாழ்ந்தவர் ஆகலாம் என்று கருதப்படுவதால்[2] இவர் காலம் கி.பி.14ஆம் நூற்ருண்டின் தொடக்கமாக இருத்தல் வேண்டும் எனக் கருதலாம்.

காலவரிசையில் தெய்வச்சிலையாரை அடுத்து நச்சினுர்க்கினியர் வருகின்ருர். இவர் கி.பி.14ஆம் நூற்ருண்டின் முற்பகுதியினர் என்றும்[3] பிற்பகுதியினர் என்றும்[4] இருவேறு கருத்துக்கள் கூறப்படுகின்றன. எனினும் நச்சினுர்க்கினியர் காலம் 14ஆம் நூற்ருண்டின் முற்பகுதி என்பதே பெரும்பாலோர் ஏற்கும் கருத்து.

நச்சினுர்க்கினியருக்குப் பின்னரே வரிசை முறையில் கல்லாடரும் பழைய உரையாசிரியரும் வருகின்றனர். கல்லாடர் உரையில் இளம்பூரணர், நச்சினுர்க்கினியர்கருத்துக்களும், பழைய உரைகாரர் உரையில் இளம்பூரணர் சேனுவரையர், நச்சினுர்க்கிணியர்

1 தொ. எ நச்சி. கு. சுந்தரமூர்த்தி (1969)—ஆராய்ச்சி முன்னுரை, ப. 18

2 உரையாசிரியர்கள்—மு. வை. அரவிந்தன், ப. 212

3 தொ. எ நச்சி—கு, சுந்தரமூர்த்தி (1969) ஆராய்ச்சி முன்னுரை ப. 18

4 உரையாசிரியர்கள்...மு.வை. அரவிந்தன், ப. 228,

கருத்துக்களும் காணப்படுகின்றன, கல்லாடரின் காலம் கி.பி.14 அல்லது 15ஆம் நூற்றுண்டு என்பர் கு.சுந்தரமூர்த்தி[1]. கி.பி. அல்லது 16ஆம் நூற்றுண்டாகலாம் என்பர் மு.வை. அரவிந்தன்[2]. எனினும் கல்லாடர் காலம் கி.பி.15ஆம் நூற்றுண்டின் முற்பகுதி எனத் துணியலாம். பழைய உரைகாரர் காலம் கி.பி. 14ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி என்ற கருத்து வழங்கினுலும்[1] கி.பி. 15ஆம் நூற்றுண்டின் பிற்பகுதி என்பது பொருத்தமாக இருக்கும்.

இம்முறையில் காலவரிசையைப் பகுத்துக் கொள்வதால் உரைகளில் இடம் பெறும் பாடவேறுபாடுகள் பற்றிய கருத்துக்களை வரலாற்று நோக்கில் கணிக்க இயலும். எந்தப் பாடம் முந்தியது, எந்தப் பாடம் பிந்தியது என்ற வகையில் பாட வேறுபாடுகளின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் அறிய இக்காலவரிசை முறை பெரிதும் துணைசெய்யும்.

2. உரையில் பாடங்களைப் பேணுதல் :

உரையாசிரியர்கள் உரை கூறும் நெறியால் பாடங்களை நிலைப்படுத்திப் போற்றியுள்ளனர். சான்ருக,

தொல்காப்பிய எழுத்ததிகார உரையாசிரியர் இளம்பூரணர் தன் உரைக் குறிப்புக்களிலும் விளக்கங்களிலும் எந்தெந்த வகையில் பாடங்களை ஆராய்ந்து நிலைப்படுத்தியுள்ளார் எனக் காண்போம்.

2. 1. கண்ணழித்துப் பொருளுரைத்தல்

இளம்பூரணர், நூற்பாக்களுக்குப் பொருளுரைக்குங்கால் நூற்பாவில் அமைந்த சொற்களைக் கண்ணழித்துப் பொருளுரைக்கின்ருர். சான்ருக,

---

1. தொ. சொ. கல்—கு. சுந்தரமூர்த்தி (1964) ஆராய்ச்சி முன்னுரை. ப. 14

2. உரையாசிரியர்கள்...மு.வை. அரவிந்தன். ப. 220.

"மெய்யின் அளபே அரையென மொழிப" (எ. 11)
என்ற நூற்பாவிற்கு,

"(இ.ள்) மெய்யின் அளபு-மெய்யது மாத்திரையினை
அரையென மொழிப"-(ஒரோவொன்று)
அரைமாத்திரையுடைய வென்று சொல்லுவர்
எ-று"

எனச்சொல் பிரித்து உரை கூறியுள்ளார். இங்ஙனம் பிரித்துப் பொருளுரைக்கும் முறையால், இளம்பூரணர் கருதும் தொல்காப்பியரின் மூல பாடங்களை உரைப் பகுதியால் உறுதி செய்து கொள்ள வாய்ப்பு ஏற்படுகிறது. இளம்பூரணர் கொண்ட பாடம் 'அளபா' 'அளவா' என்பது போன்ற ஐயங்கள் இச்சொற்பிரிப்பு முறையால் களையப்படுகின்றன.

2. 2. விதப்புக்கிளவிகள் கூறுதல்

உரை விளக்கங்கள் கூறுங்கால் நூற்பாவில் பயின்ற பாடங்களை விதப்புக் கிளவிகளாக்கிக் கருத்து விளக்கம் செய்யும் முறையும் இளம்பூரணரின் உரைகூறும் உத்தி. சான்றாக,

"ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங்காலை மொழிவயி னான" (எ. 57)

எனவரும் நூற்பாவின் விளக்கத்தில் "தேருங்காலை என்றதனான்-முதற்கண் சுருங்காதென்பது கொள்க". "இடன்-என்றதனான் இக்குறுக்கம் சிறுபான்மை யென்பது கொள்க" என எழுதுகின்றார். இதனால் 'தேருங்காலை' 'இடன்' எனவரும் மூல பாடங்கள் மாற்றத்துக் கிடமின்றி உறுதி செய்யப்படுகின்றன. 'தேருங்காலை' என்ற பாடம் 'ஒருங்காலை' என்றோ 'ஆயுங்காலை' என்றோ மாற்றம் பெற வழியில்லை. விதப்புக் கிளவிகளாக்கி விளக்கம் கூறும் முறையால் மூல பாடங்கள் பேணப்படுவதற்கு இது சான்று.

2. 3. தொடர்விளக்கம் கூறுதல்

உரைவிளக்கத்தின் போது, நூற்பாவில் பயின்ற அரிய தொடர்களுக்கு விளக்கம் கூறுதலும் இளம்பூரணர் உரையில் கண்ட பிறிதொருமுறை.

“புள்ளியில்லாஎல்லா மெய்யும்” (எ. 17) எனத் தொடங்கும் நூற்பாவில் “உருவு திரிந் துயிர்த்தல்” என்ற தொடர்பயின் றுள்ளது. இளம்பூரணர் “உருவு திரிந்துயிர்த்தலும் மேலும் கீழும் விலங்கு பெறுவன விலங்கு பெற்று உயிர்த்தலும், கோடுபெறுவன கோடுபெற்று உயிர்த்தலும், புள்ளி பெறுவன புள்ளி பெற்றுயிர்த் தலும் எனக் கொள்க” என விளக்கம் எழுதியுள்ளார். ‘உருவு திரிந்துயிர்த்தல்’ என்ற அரியதொடருக்கு விளக்கம் கூறும் இவ் வுத்தியாலும் மூலபாடம் போற்றப்படும் சிறப்பைக் காணலாம்.

2. 4. இலக்கண விளக்கம் தருதல்

உரைவிளக்கத்தின் இறுதியில் பாடங்களாகப் பயின்ற சொற்களுக்கு அல்லது தொடர்களுக்கு இலக்கன விளக்கம் தரப்படுதலும் உண்டு. “அளபிறந்துயிர்த்தலும்” (33) எனத் தொடங்கும் நூற்பாவில் ‘நரம்பின் மறைய’ என்பதில் ‘மறைய’ என்ற சொல்லுக்கு “மறையும் என்பதன் உம்மை விகாரத்தால் தொக்கது; அகரம் செய்யுள் விகாரம்” என இலக்கன விளக்கம் கூறுகிறார் இளம்பூரணர். இவ்விளக்கத்தால் மறையும் > மறை (யும்) > மறை + அ > மறைய என்று மூல பாடம் அமைந்ததைத் தெளிவாக உணர முடிகிறது. மேலும் அப்பாடம் மறக்க இயலாத நிலையில் நெஞ்சிலும் பதிகிறது. சொல்லுக்கு இலக்கன விளக்கம் தரப்படும் உரை உத்தியாலும் மூலபாடங்கள் போற்றப்படுகின்றன.

உரையாசிரியர்கள் பின்பற்றிய உத்தி முறைகள் பலவற்றாலும் நூற்பாவின் மூல பாடங்கள் உரைகள் பேணப்பட்டன என்று இவற்றால் அறியலாம்.

3. பாடங்கள் உருவாகும் சில களங்கள்

உரை கூறுவதிலும், விளக்கம் கூறுவதிலும். உரையாசிரியர்கள் வேறுசில உத்தி முறைகளையும் கடைப்பிடிக்கின்றனர். அம்முறைகள், பிற்காலத்தில் பாடங்களில் வேறுபாடு தோன்றும் களங்களாக அமையவும் வாய்ப்புண்டு.

விளக்கம் கூறுதற்காக, நூற்பாவில் பயின்ற சொல்லை உரையாசிரியர் மீண்டும் எடுத்து மொழியுங்கால் அதன் முழு

வடிவையும் கூருமல் அச்சொல்லில் அமைந்த அசையை விடுத்தும், வேற்றுமை உருபை விடுத்தும், விகுதியை மாற்றியும், சொற்களை மட்டும் சுட்டுதலும் உரையாசிரியர்கள் பின்பற்றும் உரைகூறும் முறை.

இவற்றிற்குச் சான்றுகள் கீழே காட்டப்பட்டுள்ள. இளம்பூரனர் "அவற்றுள் இகர ஈற்றுப்பெயர் திரிபிடனுடைத்தே" (எ.15) என்ற நூற்பாவின் விளக்கத்தில் "இடனுடைத்து—என்பதனுன்-...என்று" 'ஏ' என்னும் ஈற்றசையை விடுத்துக் கூறியுள்ளார்.

"சுட்டு முதலாகிய...(எ.160) எனத் தொடங்கும் நூற்பாவில் 'சொல்லிய மருங்கின்' என வரும் தொடரை விளக்கத்தில் கூறுங்கால் "சொல்லிய மருங்கு என்றதனுல்..." என்று 'இன்' என்னும் வேற்றுமை உருபை விடுத்துக் கூறியுள்ளார்.

"வேற்றுமையல்வழி" ... (எ.159) என்ற நூற்பாவில் பயிலும் 'நிலேயே' என்ற சொல்லே விளக்கத்தில் கூறுங்கால், "பெயர்க்கிளவி மூவகை நிலேய — எனவே...என்று அளபெடைக் குறியை விடுத்துக் கூறியுள்ளார்.

உரைநெறியும், உத்தியும் அறியாத நிலேயில், இவ்விடங்களில் 'திரிபிடனுடைத்தே' என்பதற்குத் 'திரிபிடனுடைத்து' என்றும், 'சொல்லிய மருங்கின்' என்பதற்குச் 'சொல்லிய மருங்கு' என்றும், 'நிலேயே' என்பதற்கு 'நிலேயை' என்றும் பாடவேறுபாடுகள் எழுவதற்கு இத்தகைய இடங்கள் களமாக உள்ளன என்று கருதலாம். அத்தகைய வேறுபாடுகள் இன்றுவரை எழவில்லே எனினும் எதிர் காலத்திம் தோன்ற வாய்ப்புண்டு என்று கருதலாம்.

இப்பகுதிகள் எழுத்ததிகாரம்—இளம்பூரணத்திலிருந்து சான்றுக்காகக் கூறப்பட்டவை. இம்முறையில் எழுத்ததிகாரம் — இளம்பூரணத்தில் மட்டுமன்றித் தொல்காப்பியத்தின் அனேத்துப் பகுதிகளிலும் அனேத்து உரைகளிலும் இதனைப் போன்ற இடங்களும் இங்குக் காட்டப் பெற்ற உத்திமுறைகளேயன்றி வேறு சில உத்திமுறை பயின்ற இடங்களும் ஏராளமாகவுள. உரையாசிரியர்கள் பின்பற்றிய இவ்வுதித்முறைகளால் மூல பாடங்கள் எவ்வாறு போற்றப்பட்டு நிலேப்படுத்தப்பெற்றன என்பதை இதனுல் அறியலாம்.

4. எழுத்ததிகார உரையில் பாடங்கள்

எழுத்ததிகார உரையில் உரையாசிரியர்களின் குறிப்புக்களால் அறியப் பெறுவன மூன்று பாடங்கள். அவற்றை இங்குக் காண்போம்.

4. 1. படுவ-படுப

தொல்காப்பிய எழுத்ததிகாரத்தின் முதல் நூற்பா

''எழுத்தெனப்படுப
அகரமுத னகர விறுவாய்
முப்பஃதென்ப
சார்ந்துவரன் மரபின் மூன்றலங் கடையே'' (எ.1)

என்பது. இது எழுத்துக்களது பெயரும் முறையும் தொகையும் உணர்த்துவது.

இந்நூற்பாவின் விளக்கத்தில் **செய்யுளின்பம் நோக்க வகரம் நீக்கிப் பகரம் இடப்பட்டது''** என இளம்பூரணர் குறிப்பிட்டுள்ளார்.[1] இதனல் எழுத்தெனப்படுப-என்பதில் படுவ என்ற சொல்லே இருத்தல் வேண்டும் என்றும் படுவ-என்பதில் இறுதியில் உள்ள வகரத்தை நீக்கிப் பகரம் இடப்பட்டது என்றும் இங்ஙனம் எழுத்து மாற்றியமைக்குச் செய்யுளின் இன்னேசை நோக்கமே காரணம் என்றும் குறிப்பிட்டுள்ளார் இளம்பூரணர்.

நச்சினர்க்கினியர் தன் உரை விளக்கத்தில் இதனை மேலும் தெளிவுபட வரைந்துள்ளார்.

படுப-படுவ, படுப-என்பது படுத்தலோசையால் தொழிற் பெயராகக் கூறப்படும். பகரமும் வகரமும் ஈண்டு நிற்றற்குத் தம் முன் ஒத்த உரிமையவேனும் எழுத்தெனப்படுப எனத் தூக்கற்று நிற்கும் சொற்சீரடிக்குப் படுப என்பது இன்னேசைத்தாய் நிற்றலின் ஈண்டுப் படுப என்றே பாடம் ஓதுக. இஃது அன்பெருத அகர வீற்றுப் பலவறிசொல் என்பது நச்சினர்க்கினியர் உரைவிளக்கம்.[2]

---

1 தொ. எ. இளம். நூ. 1. உரைவிளக்கம்
2 தொ. எ. நச்சி. நூ. 1. உரைவிளக்கம்.

நச்சினார்க்கினியர் கருத்துப்படி இங்கு 'எழுத்தெனப்படுப' 'எழுத்தெனப்படுவ' என்ற இரண்டு பாடங்களும் இடம் பெறத் தக்கனவே என்பதும், ஓசையற்று இருப்பதைப் போக்கி, இன்னோசை பெற 'படுப' எனக் கூறப்பட்டது என்றும், இது அன் பெறாத அகர வீற்றுப் பலவறி சொல் என்பதும் விளக்கப்பட்டுள.

இளம்பூரணர், நச்சினார்கினியர் உரைக்குறிப்புக்களால் எழுத்தெனப் படுப என்பதற்கு எழுத்தெனப்படுவ என்ற பாட வேறுபாடும் உண்டு என அறிகிறோம். பாடங்களை வேறுபடுத்தி உரைக்கும் நிலை இளம்பூரணர் காலத்தை விட நச்சினார்க்கினியர் காலத்தில் மிகுதியும் இருந்தது எனவும் தெரிகிறது. எனவேதான் நச்சினார்க்கினியர் ''ஈண்டுப் படுப என்றே பாடம் ஓதுக என விதி கூறும் முறையில் உரைத்துள்ளார்.

தொல்காப்பியர் உயர்திணைப் பலர்பால் ஈறாகப் 'பகர விறுதி' யையும்[1] அஃறிணை ப் பலவறிசொல் ஈறாக 'அகரத்தை'யும்[2] கூறுவர். 'என்ப' (எ. 3, 4) 'மொழிப' (எ. 8,9) என வருவன உயர் திணைப் பலர் பால் சொற்கள், பகர இறுதி பயின்றவை. ஆனால் 'படுப' என்பது 'படுவ' என்னும் சொல்லின் திரிபு. படுவ என்பது படுவன என்ற சொல்லின் குறுக்கம். படுவன-என்பது அன் பெறாமல் படுவ என்றாகிப் பின் செய்யுள் இன்னோசைக்காகப் 'படுப' என்றாயிற்று என்று உரையாசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் அளவு-அளபு (எ. 103) உருவு-உருபு (எ. 14') திரிவு-திரிபு (சொ. 169) பிரிவு-பிரிபு (சொ. 217) என்பன போலப் பெயர்ச் சொற்களில் வகரம், பகரம் மாறி நிற்றல் தொல்காப்பியர் கால மொழி வழக்கமாய் இருத்தல் போல, படுவ-படுப என வினைச்சொல்லிலும் இம்மாற்றம் நிகழ்வதாகக் கொள்ளலம்.

பொருள் நிலையில் மாற்றமின்றி அமைந்த இவ்வேறுபாடு, இன்னோசைக்காகப் பாடம் மாறியமைதல் உண்டு என்பதை உணர்த்துவதோடு, நூலாசிரியன் ஆண்ட மூல பாடமாய் அமைந்த ஒன்றை உரையாசிரியர்கள் எத்துணை முயற்சியோடு போற்றியுள்ளனர் என்பதையும் புலனாக்குகிறது.

---

1 தொ. சொ. நூ. 7
2 தொ. சொ. நூ. 9

4. 2. குற்றியலுகரத்தின்னே சாரியை

"குற்றியலுகரக் கின்னே சாரியை" (எ. 168) எனவரும் நூற்பாவில் நச்சினார்க்கினியரின் உரைக்குறிப்பால் ஒருபாடம் அறியப்படுகின்றது.

குற்றுகர வீற்று அளவுப் பெயர்கள் குறை-என்ற சொல் லோடு புணரும் வழி 'இன்' என்ற சாரியை பெறும் என்பது இந்நூற்பாக் கருத்து. உழக்கு + இன் + குறை > உழக்கின் குறை எனவரும். இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இருவரும் இந்நூற் பாக்கருத்தில் மாறுபடவில்லை.

நூற்பாவின் உரைக்குறிப்பில் "குற்றியலுகரக்கு-இதற்கு அத்து விதித்து முடிக்க; குற்றிலுகரத்தின்னே-என்பதும் பாடம்" என நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்.

நச்சினார்க்கினியர் காலத்தில் தொல்காப்பிய மூலபாடங் களுக்கு வேறுபாடுகள் எழுந்து வழங்கின என்ற குறிப்பை நச்சினார்க் கினியரின் இக்கூற்றால் அறியலாம்.

"அவை தாம்
இன்னே வற்றே அத்தே அம்மே
ஒன்னே ஆனே அக்கே இக்கே
அன்னென் கிளவி உளப்படப் பிறவும்
அன்ன என்ப சாரியை மொழியே"[1]

எனவரும் நூற்பா சாரியைகளை உணர்த்துவது. இதில் அத்து, அக்கு என்ற இரு சாரியைகளும் குறிப்பிடப் பெற்றுள. குற்றிய லுகரம் என்ற சொல்லின் பின் 'அக்கு' என்பது சாரியையாகப் பயின்றமையால் 'குற்றியலுகரக்கு' என்ற பாடம் அமைந்தது. 'அக்கு' என்பதற்குப் பதில் 'அத்து' என்பது சாரியையாக வருங் கால் குற்றியலுகரத்து எனவும் பாடம் அமையும். தொல்காப்பியர் அத்து, அக்கு என்ற இரு சாரியைகளையும் வரையறையின்றி வழங்கும் பயிற்சியினால் இங்குக் 'குற்றியலுகரத்து' 'குற்றியலுகரக்கு' என்ற பாடங்கள் தோன்றியுள எனலாம். உரையாசிரியர் நச்சினார்க்

---

1. தொ. சொ. நூ. 120.

கினியரால் குறிப்பிடப்படும் இப்பாடம் பொருள் வேற்றுமை செய்யவில்லை.

4. 3. ஆயியல் திரியா

இனி, எழுத்ததிகாரத்தில் பிறிதொரு பாட வேறுபாடும் நச்சினார்க்கினியரின் உரையில் குறிப்பிடப்பட்டிருப்பது அறியத் தக்கது.

"அளவும் நிறையும் ஆயியல் திரியா" (எ. 477) என்பது குற்றியலுகரப் புணரியலில் அமைந்த ஒரு நூற்பா.

'ஒரு பஃது', 'இரு பஃது' ஆகியவற்றின்பின் அளவுப் பெயரும், நிறைப்பெயரும் வந்தால் அவை முற்கூறிய இயல்பில் திரியாது' என்பது நூற்பாக் கருத்து. அஃதாவது ஆயிரம் என்ற சொல்லோடு புணருங்கால் இன் சாரியையைப் பெற்றதுபோல இங்கும் இன் சாரியை பெற்று முடியும் என்பது இந்நூற்பாவால் உணர்த்தப்படும் மாட்டேற்றுச் செய்தி.

இந்நூற்பாவின் விளக்கத்தில் "அளவும் நிறையும் அதனோ ரன்ன-என்று பாடம் ஓதுவார். முன்னர்ச் சூத்திரத்து "ஆவயின்" என்றதனானும், அதன் முன்னர்ச் சூத்திரத்து 'நின்ற' என்றதனானும் இவற்றை முடிப்பர்" என்று நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார்.

'ஆயியல் திரியா' என்பதற்கு உரிய வேறுபாடாக 'அதனோ ரன்ன' எனவரும் பாடம் இங்குச் சுட்டப்பெற்றது. இரு பாடங்களும் மாட்டேறு கூறுவனவே. தொல்காப்பியர் முன்னர்க் கூறிய நூற் பாக்களில் எந்த நூற்பாவின் கருத்து இம்மாட்டேற்றால் தழுவப் படுகிறது என்பதை விளக்குவதில் எழுந்த வேறுபாடே இப்பாட வேறுபாட்டுக்குக் காரணம். இரு பாடங்களாலும் சுட்டப்படும் கருத்தில் மாற்றம் இல்லை.

நச்சினார்க்கினியரின் உரையில் காணப்படும் பாடவேறுபாடு பற்றிய இவ்விளக்கத் தொடர் எழுத்ததிகாரம் நச்சினார்க்கினியத்தின் தாமோதரம் பிள்ளை பதிப்பிலும், கழகப் பதிப்பிலும் காணப்படுவதும், எழுத்ததிகாரம்—நச்சினார்க்கினியத்தின் மகாலிங்கையர் பதிப்பில் இல்லை என்பதும் அறியத்தக்கது. இப்பாடத்தொடர் ஏடுபடித்தோரால் பிற்காலத்தில் சேர்க்கப்பட்டதாகக் கருதுவதற்கும் வாய்ப்பு உண்டு.

5. சொல்லதிகார உரையில் பாடங்கள்

சொல்லதிகார உரைகளில் உரையாசிரியர்களின் குறிப்பால் அறியப் பெறும் பாடவேறுபாடுகளின் எண்ணிக்கை நான்கு. அவற்றை இங்குக் காண்போம்.

5.1. ஒரூஉ வினை

கிளவியாக்கத்தில், ''வேறு வினைப்பொதுச் சொல் **'ஒருவினை கிளவார்'** (சொ. இ. 46) என்ற நூற்பா மரபு வழுக்காத்தலை உணர்த்துகின்றது. இதற்குரிய விளக்கத்தில் இளம்பூரணர், ''இனி **'ஒருவும் வினை'** என்பது 'ஒரூஉ வினை' என்றுமாயிற்று என்றலும் ஒன்று; ஒருவுதல் என்பது நீங்குதல்'' எனக் குறிப்பிடுகின்றார்.

''வேறு வேறு வினையையுடையவாய் நின்ற சொற்களை ஒருவினையாற் சொல்லற்க, பொதுவினையாற்கூறுக' என்பது நூற்பாக் கருத்து. இக்கருத்தின்படி ஒருவினை என்பது 'ஒருவினைச் சொல்' என எண்ணுத்தன்மை உடையதாக விளங்குதல் அறியலாம். இளம்பூரணர் 'ஒருவுதல்' என்ற தொழிற் பெயரைச் சார்ந்த 'ஒரூஉ வினை' எனப் பிறந்த வினைத்தொகையைப் பாடவேறு-பாடாகக் கூறுதலும் உண்டு எனக் குறிப்பிட்டுள்ளார். ஒருவினை-ஒரூஉவினை என்பன மிகுதியும் பொருள் மாற்றம் செய்யாவிடினும் ஓரளவு பொருள்வேறுபாடுடைய சொற்களே. இளம்பூரணரே இவ் வேறுபாட்டைக் குறிப்பிட்டிருத்தலால் இது பழமையும் பயிற்சியும் உடைய வேறுபாடு என்பது புலனாகும். பின்வந்த உரையாசிரியர் எவரும் 'ஒருவினை' என்ற இந்த வேறுபாட்டைத் தம மூலபாட மாகக் கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் இளம் பூரணர் தவிரப் பிற உரையாசிரியர் எவரும் 'ஒருவினை' என்ற ஒரு பாடவேறுபாடு இருப்பதாகவும் சுட்டவில்லை, என்பதும் அறியத் தக்கது.

"ஒருவினை என்றதற்குப் பிரதியாக ஒருஉவினை-என்ற பாட பேதம் உளது என்று உரையாசிரியர் உரையால் வெளியாகின்றது" எனப் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார், பாடவேறுபாடு உள்ளது என்ற குறிப்பை மட்டும் உரைத்துள்ளார்.[1]

பதிப்பாசிரியர் கு. சுந்தரமூர்த்தி 'இதுவும் சிறந்த பாடமே யாம்' என்ற கருத்துடையவர். இதனை,

"இனி, வேறுவினைப் பொதுச் சொல் ஒருஉ வினை கிளவார் எனப் பாடங்கொண்டு ஒருவும் வினை என்பது ஒருஉ வினையாயிற்று என்றும், ஒருஉதல்-நீங்குதல் என்றும் கூறினர் இளம்பூரணர். எனவே வெவ்வேறு வினைகளையுடைய பொதுச் சொல்லை அப்பொது வினின்றும் நீங்கி ஒன்றற்கே உரியதாய சிறப்புவினை கொடுத்து முடித்தல் வழுவாம் என அறியலாம். இப்பாடம் பிறர் உரையில் காணாதது; இதுவும் சிறந்த பாடமேயாம்" எனவரும் விளக்கத்தால் அறியலாம்.[2]

பொருள் வேறுபாடுடைய இவ்விரு பாடங்களுமே சிறப் புடையன. எனினும் பிற உரையாசிரியர் 'ஒருஉவினை' என்ற பாடத்தைப் போற்றவில்லை. இளம்பூரணர் தன் காலத்தில் வழங்கிய வேற்றுப் பாடத்தை இவண் குறிப்பிட்டார் என்றும், அதுவும் பொருள்நிலையில் ஓரளவு சிறப்புடைய வேறுபட்ட பாடமேயாம் என்றும் இதனால் அறியலாம்.

5. 2. ஈங்கெனவரூஉம்

வேற்றுமையியலில் "மூன்றுகுவதே ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" (சொ. 73) எனத் தொடங்கும் நூற்பாவின் இறுதிப் பகுதி,

இன்னான் ஏது ஈங்கென வரூஉம்'
அன்னபிறவும் அதன்பால என்மனார்

என அமைந்துள்ளது. இதனுள் 'ஈங்கெனவரூஉம்' என்ற பாடத்தையே அனைத்து உரையாசிரியர்களும் கொண்டுள்ளனர்.

---

1 தொ. எ. பி. சா. சுப்பிரமணியசாஸ்திரி-குறிப்புரை, ப. 361
2 தொ. சொ. பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, குறிப்புரை ப. 158
3 தொ. சொ. இளம்-கு. சுந்தரமூர்த்தி-விளக்கவுரை, ப. 266.

எனினும், சேனாவரையர் தன் உரை விளக்கத்தில் ''ஈங்ஙன' மென்று பாடம் ஓதுவாருமுளர் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனால் 'ஈங்கெனவரூஉம்' என்ற தொடருக்கு 'ஈங்ஙனம் வரூஉம்' என்பது வேறுபாடாக விளங்கியது அறியலாம். இளம்பூரணர் இந்த வேறுபாட்டைச் சுட்டவில்லை. எனவே இளம்பூரணர் காலத்துக்குப் பின்னரே ஏறத்தாழச் சேனாவரையா காலமாகிய கி. பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இப்பாடவேறுபாடு தோன்றியிருத்தல் வேண்டும்.

பதிப்பாசிரியர் கு. சுந்தரமூர்த்தி 'இவ்வாறு பாடம் ஓதுவார் யாரெனத் தெரிந்திலது' என்று இவ்வேறுபாட்டுக்கு அடிக்குறிப்பு வரைந்துள்ளார்.

'ஈங்கென வரூஉம்' என்பது பாடமாயின் ஈங்கு+என+ வரூஉம் எனப் பிரிப்பு நிலை அமையும். 'ஈங்ஙனம் வரூஉம்' என்பது பாடமாயின் இங்ஙனம்+வரூஉம் எனப் பிரிப்பு நிலை அமையும். முதல் பாடத்தையும் பிரிப்பு நிலையையும் அனைத்து உரையாசிரியர்களும் போற்றியுள்ளனர். 'ஈங்ஙனம் வரூஉம்' என்ற பாடம் பிற உரையாசிரியர்களால் சுட்டும் நிலையிலும் கூடப் போற்றப்படவில்லை என்பது அறியத்தக்கது. எனவே இவ்வேறுபாட்டின் பொருட் சிறப்பின்மையும் உணரப்படும்

தொல்காப்பிய மூலபாடங்கள் உரையாசிரியர் காலங்களில் வேறுபாட்டுடன் வழங்கப் பெற்ற உண்மையையும் சேனாவரையரின் உரைக்குறிப்பு நமக்குப் புலனாக்குகிறது.

5. 3. பெண்டென்கிளவி

பெயரியல் நூற்பாவில் ''அவை முதலாகிய பெண்டென் கிளவியும்'' (சொ.160) என்ற தொடர் அமைந்துள்ளது. இதற்கு உதாரணங்களாக ''அப்பெண்டு, இப்பெண்டு, உப்பெண்டு'' என்பனவற்றை இளம்பூரணர்காட்டியுள்ளார். இவை பாலறிவந்த உயர்திணைப் பெயருக்கு உரிய உதாரணங்கள்.

சேனாவரையர் இத்தொடருக்குப் புதிய பாடம் ஒன்றைக் குறிப்பிட்டுள்ளார். ''அவை முதலாகிய பெண்டென் கிளவி-இக்காலத்து விழுந்தன போலும். **'பெண்டன்'** கிளவியென்று பாடமோதி அவை

யாவன அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி, என்பாருமுனர்'' என்பது சேனவரையரின் உரைவிளக்கத்தில் இடம் பெறும் குறிப்பு.

இளம்பூரணர் அவை முதலாகிய பெண்டென் கிளவி என்பதற்குக் காட்டிய உதாரணங்கள் சேனவரையருக்குப் பொருத்தமாகத் தெரியவில்லை என்பதும், இதற்குரிய உதாரணங்கள் வழக்கிழந்தன என்று கொள்வதே சேனவரையர் கருத்தென்பதும் இக்குறிப்பால் அறியப் பெறும் செய்தி. மேலும் ''பெண்டென் கிளவி'' என்பதற்குப் 'பெண்டன் கிளவி' என ஒரு வேறுபாடு சேனவரையர் காலத்தில் வழங்கியது; இப்புதிய பாடத்தைக் கொள்வார் அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி என்பனவற்றை இதற்கு உதாரணங்களாகக் காட்டினர் என்பதையும் இதனால் உணரலாம்.

இளம்பூரணர் இவ்வேறுபாட்டைச் சுட்டாமல் சேனவரையரே இதனைக் கூறியுள்ளமையால், சேனவரையர் காலத்திற்றான் இப்பாடம் எழுந்து வழங்கியிருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது.

தெய்வச்சிலையார் ''அவை முதலாகிய பெண்டென் கிளவி'' என்பது சுட்டெழுத்தை முதலாக உடையவாகிப் பெண்மை உணர வரும் சொல்; அத்தன்மையன், அத்தன்மையான், அன்னாள், அனையாள் என்பன'' என்று இங்கு விளக்கம் கூறுவர். மூலபாடம் மாற்றமின்றிக் கொள்ளப்பட்டிருப்பினும் உதாரணங்கள் இங்கு மாற்றம் பெற்றுள்ளன. மேலும் சேனவரையர் கூறிய வேறுபாடு பற்றிய குறிப்பு இவர் விளக்கத்தில் இடம் பெறாமையால், இவர் காலத்தில் அப்பாடவேறுபாடு மிகுதியும் போற்றப்படவில்லை என்றோ, அல்லது பொருட் சிறப்பின்மையால் தெய்வச்சிலையாரால் இப்பாடம் விடுக்கப்பெற்றது என்றோ கொள்ள இயலும்.

நச்சினார்க்கினியர் சேனவரையரைப் பின்பற்றி, இப்பாட வேறுபாட்டு ஆராய்ச்சியில் மேலும் நுட்பமாகச் செல்லுகின்றார். 'பெண்டன் கிளவி-என்ற பாடம் ஓதி, அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி என்பாரும் உளர் ''எனச் சேனவரையரைப் பின்பற்றி, இவ்வேறுபாட்டையும் உதாரணங்களையும் கூறியுள்ளார். சேனவரையர் காலத்தில் தோன்றிய இப்பாட வேறுபாடுகளும் உதாரணங்களும், நச்சினார்க்கினியர் காலத்திலும் நீட்டித்தன என்பது இதனால் புலனாகின்றது.

"ஊரார் பெண்டென மொழிப" என்றும்[1]
"என்னை நின் பெண்டெனப் பிறர்கூறும் பழிமாறப்பெறு கற்பின்" என்றும்[2] வரும் இலக்கியப்பகுதிகளை மேற்கோள் காட்டி 'பெண்டு' என்பதே பாடம் என்றும் நச்சினார்க்கினியர் நிறுவி விளக்கம் கூறியுள்ளார்.

கல்லாடர் அவ்வாட்டி, இவ்வாட்டி, உவ்வாட்டி, என்பனவற்றை இதற்கு உதாரணங்களாகக் காட்டினாலும் சேனாவரையர் நச்சினார்க்கினியர் கூறியாங்கு 'பெண்டென் கிளவி' என இவர் பாடங் கொள்ளாதது குறிப்பிடத்தக்கது.

பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் உரையாசிரியர்கள் கருத்துக்களைச்சுட்டி **'பெண்டென் கிளவி'** என்பதும் பொருந்திய பாடம் என்று விளக்குவர்.

வேறுபாடுகளைச் சுட்டுவதிலும் மூலபாடத்தை வரையறுப்பதிலும் உரையாசிரியர்களின் முயற்சி, முனைப்பு ஆகியவற்றை இக்குறிப்புக்களால் அறியலாம்.

5. 4. அதிழ்வு - அதிர்வு

உரியியலில் "அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்" (சொ 310) என்ற நூற்பா உள்ளது. அதிர்வு, விதிர்ப்பு, என்ற சொற்கள் குறிப்பாக நடுக்கம் என்ற பொருளை உணர்த்துவன என்பதை இந்நூற்பா குறிப்பிடுகின்றது.

இந்நூற்பாவின் விளக்கத்தில் "அதிழ்வென்று பாடமோதி அதிழ்கண்முரசம்-என்று உதாரணங்காட்டுவாருமுளர்" என்று சேனாவரையர் வரைத்துள்ளார். எனவே **அதிர்வும்** என்பதற்கு **அதிழ்வும்** என்பது சேனாவரையர் காலத்தில் வேறுபாடாக வழங்கியது என அறியலாம்.

'அதிர்கண்முரசம்' என இளம்பூரணரும் **'அதிரவருவதோர் நோய்'** எனச் சேனாவரையர், நச்சினார்க்கினியர், தெய்வச்சிலையாரும்' 'அதிர்வு' என்னும் சொல் நடுக்கப் பொருளில் பயின்று வருவதற்கு உதாரணம் காட்டுவர்.

---

[1] ஐங், 113
[2] கலி. 77 : 10-11

'அதிர்வு' என்பதற்கு 'அதிழ்வு' என வேறுபாடு கூறுவார் கூறும் உதாரணம் 'அதிழ்கண் முரசம்' என்பது, இளம்பூரணர் காட்டும் உதாரணத்தை ஒட்டியே இவ்வுதாரணமும் அமைந்திருப்பதைக் காண, இளம்பூரணர் காட்டும் உதாரணத் தொடரினைப் பிறழ உணர்ந்தமையாலோ அல்லது தோற்ற ஒப்புமையில் மயங்கியமையாலோ, இப்பாட வேறுபாடு எழுந்திருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது, எனினும் 'அதிழ்வு' என்னும் வேறுபாட்டின் பொருட் சிறப்பின்மையால் இது பிற்காலத்தில் உரையாசிரியர்களால் போற்றபடவில்லை.

சொல்லதிகார உரைகளில் அமைந்த வேறுபாடுகளில் இளம்பூரணரால் ஒன்றும் சேனவரையரால் இரண்டும் சேனவரையர் நச்சினார்க்கினியரால் ஒன்றும் சுட்டப்பட்டுள்ளன.

6. பொருளதிகார உரையில் பாடங்கள்

பொருளதிகாரப் பகுதியில் உரையில் வரும் குறிப்புக்களால் அறியப் பெறும் பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை இரண்டாகும்

6. 1. கிழவோன்

ஒன்றுத் தமரினும்......(பொ. 44) எனத் தொடங்கும் அகத்திணையியல் நூற்பாவில் 'உரைத்திறநாட்டம் கிழவோன் மேன' என இறுதியடி அமைந்துள்ளது. இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இருவரும் இதனையே நூற்பாவின் இறுதியடியாகக் கொண்டு பொருள் கூறியுள்ளனர்.

"உரைத்திறநாட்டம் கிழவோன்மேன-என்பது, இவ்விவ் விடங்கள் பற்றி உரையாடுங் குறிப்புத் தலைமகன் மேலன என்றவாறு"-என இளம்பூரணரும்,

"உரைத்திறநாட்டம் கிழவோன்மேன-முற்கூறிய இடங்களில் கூற்று நிகழுங் கூறுபாட்டை நிலைநிறுத்துதல் தலைமகனிடத்தவாம்" என நச்சினார்க்கினியரும் விளக்கமும் உரையும் கூறியுள்ளமையால், அவர்கள் இருவரும் கொண்ட பாடம் தெளிவாகிறது.

எனினும் நூற்பாவின் இறுதியில், "உரைத்திறநாட்டம் உளவாம் கிழவோற்கு-என்பதை ஏனைய பகுதிக்கும் ஒட்டுக"

என்ற தொடர் ஒன்று இளம்பூரணத்தில் இடம் பெற்றுள்ளதைக் காண்கிறேம். 'உரைத்திறநாட்டம் கிழவோன்மேன' என்ற தொடர் 'உரைத்திறநாட்டம் உளவாம் கிழவோற்கு' என இங்கு அமைந்துள்ளது. நூற்பாவின் இறுதியடி, பாடவேறுபாடு பெற்றிருப்பதை இங்குக் காண்கிறேம். எனினும் நூற்பாவின் இறுதி 'உரைத்திற நாட்டம் கிழவோன் மேன' என்றே இருப்பதால் உரையாசிரியர் கூற்றுக வரும் இத்தொடர் பிழைபட்டிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

உரைத்திறநாட்டம் கிழவோன் மேன என்ற தொடரே இளம் பூரணர் உரையில், உரைத்திறநாட்டம் உளவாம் கிழவோற்கு - எனப் பிழையாக அமைந்துள்ளது என்ற கருத்துக்கு அகத்திணையியல் உரைவளப் பதிப்புக் குறிப்பும் அரண் செய்கிறது. இத்தொடருக்கு உரிய அடிக்குறிப்பில் ''உரைத்திற நாட்டம் உளவாங் கிழவோற்கு என்பது உரைத்திறநாட்டம் கிழவோன் மேன-என்றிருக்கலாம்' என்ற குறிப்பு இப்பதிப்பில் உள்ளது.

எனவே இளம்பூரணத்தில் அமைந்த விளக்கத் தொடர் பிழைபட்டிருத்தல் வேண்டும் என்பது நன்கு புலனுகிறது. இளம் பூரணர் உரையை ஏடு பெயர்த்து எழுதியோர் இப்பிழைத்தொடரைப் பிறழ்ந்து எழுதியிருக்கலாம். அதனையே மூல ஏடாகக் கொண்டு இளம்பூரணர் உரை, படி எடுக்கப் பெற்றுப் பரவி இருக் கலாம். இதனுல், பிழைப்பாடம் கொண்ட தொடர் பதிப்புக்களிலும் இடம் பெற்றிருக்கலாம். இத்தொடர் பிழைபட்டிருத்தல் வேண்டும் என்ற குறிப்பை அகத்திணையியல் உரைவளப் பதிப்பே முதன் முதலில் குறிப்பிட்டுள்ளது.

6.2 கிழவோட்குவமை

பொருளதிகாரர் உவமையியலில், ''கிழவோட் குவமை ஈரிடத் துரித்தே'' (பொ. 302) என்ற நூற்பா தலைமகள் உவமை கூறுமிடத்தை உணர்த்துகின்றது. இளம்பூரணர் 'கிழவோட்குவமை' என்றும், பேராசிரியர் கிழவோட்குவமம் என்றும் இங்கு வேறுபடு கின்றனர். எனினும் 'ஈரிடத்துரித்தே' என்ற பாடத்தில் இருவரும் வேறுபடவில்லை.

இந்நூற்பாவின் உரைவிளக்கத்தில் ''இனிக் கிழவோட் குவமம் பிரிவிடத்துரித்து'' என்பது பாடமாக உரைப்பாருமுளர். யாதானுமொரு நிலத்தாயினும் பிரிந்திருந்த விடத்து உள்ளுறை யுவமங்கூறப்பெறுங் கிழத்தி என்பது இதன் கருத்து. பெருந்தண் வாடையின் முந்து வந்தோனென்பது பிரிவன்ருகலின் ஈரிடம் என்ற லே வலிதென்பது'' எனப் பேராசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியரின் குறிப்பால் 'ஈரிடத்துரித்தே' என்பதற்குப் 'பிரிவிடத்துரித்து' என்ற பாடம் அவர் காலத்தில் வழங்கியது என்பது அறியப்படும். இளம்பூரணர் உரை விளக்கத்தில் இப்பாட வேறுபாடு பற்றிய குறிப்பு இல்லாமையால் இவ்வேறுபாடு பேராசிரி யரின் காலத்தையொட்டித் தோன்றி வழங்கியது என உணரலாம்.

பாடம் வேறுபட்டு வழங்கினும் எது மூலபாடம் என வரையறுப்பதில் உரையாசிரியர்களுக்கிருந்த ஈடுபாட்டைப் பேராசிரி யரின் விளக்கம் புலப்படுத்துகிறது. 'பிரிவிடத்துரித்து' என்ற பாடம் பொருந்தாது என்பதையும், ஈடரித்துரித்தே' என்ற பாடமே பொருந்தும் என்பதையும் பேராசிரியர் தம் உரைவிளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

பொருளதிகாரத்தில் உரைக்குறிப்புக்களால் அறியப்பெறும் பாடவேறுபாடுகள் இவை இரண்டு.

7. உரைக்குறிப்புப் பாடங்கள் - தொகுப்பு

தொல்காப்பியம் முழுமையும் உரைகளில் அமைந்த பாட வேறுபாடுகள் இங்குப் பட்டியலில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. இவற்றுள் பொருள் வேறுபாடு உள்ளவை ''தொல்காப்பிய மூல பாட ஆய்வு'' என்ற கட்டுரைக்கண் ஆயப்பெறும்.

பாடம்	வேறுபாடு	வேறுபாடு கூறும் உரையாசிரியர்கள்
அ. எழுத்ததிகாரம்		
1. எழுத்தெனப்படுப	எழுத்தெனப்படுவ	இளம், நச்சி
2. குற்றியலுகரக் [illegible] கின்னே	குற்றியலுகரத் தின்னே	நச்சி
[illegible]ல் திரியா	அதனோரன்ன	நச்சி

ஆ. சொல்லதிகாரம்

4. ஒருவினை	ஒரூஉவினை	இளம்
5. ஈங்கெனவரூஉம்	ஈங்ஙனம் வரூஉம்	சேனா
6. பெண்மென் கிளவியும்	பெண்டன்கிளவியும்	(சேனா, நச்சி)
7. அதிர்வும்	அதிழ்வும்	சேனா

இ. பொருளதிகாரம்

8. கிழவோன்மேன	உளவாம் கிழவோற்கு	இளம்
9. ஈரிடத்துரித்தே	பிரிவிடத்துரித்து	பேரா

தொல்காப்பியம் முழுமைக்கும் அமைந்த பல்வேறு உரைகளில் பாடவேறுபாடுகளாகக் குறிக்கப் பெற்றவை இவை ஒன்பது மட்டுமே.

உரையாசிரியர்கள் காலம் வரையிலும் மூலபாடங்கள் மிகுதியும் திரிந்து வேறுபட்டு வழங்கவில்லை என்பதை, உரைகளில் அமைந்த வேறுபாடுகளின் குறைந்த எண்ணிக்கை நமக்கு உணர்த்துகிறது. பொருள் நிலையால் திரிந்து வழங்கியவற்றைத் தம் உரைகளில் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

உரையாசிரியர்களின் காலத்துக்குப் பின்னர் அவர்கள் உரைகளைப் படிஎடுத்து ஏடுகளில் எழுதும்போது ஏடு எழுதுவோர் பிறழ்ச்சியாலும் குறைகளாலும் மூலத்திலும் உரைகளிலும் பாடங்கள் மிகுதியாயின.

உரையாசிரியர்கள் குறிப்புக்கள், மூலபாடங்களைப் போற்றுவதில் அவர்கட்கிருந்த ஈடுபாட்டைப் புலப்படுத்துவதோடு, பாடம் போற்றும் பண்பை வளர்க்க வேண்டிய இன்றியமையாமையையும் உணர்த்துகின்றன.

5. தொல்காப்பிய மூல பாட ஆய்வு

தொல்காப்பிய நூற்பாக்களின் இன்றைய மூலவடிவம் தொல்காப்பியர் எழுதியபடியே அமைந்துள்ளதா என்ற ஆய்வுக் கண்ணோட்டம் ஆராய்ச்சி வளர்ச்சியில் தவிர்க்க இயலாதது.

தொல்காப்பிய நூற்பாக்களின் மூலவடிவம் சிதைந்தும், மாறுபட்டும் வேறுபட்டும் வழங்குவதாகக் கருதுவதற்கு உரிய காரணங்கள் உள. தொல்காப்பியம் தோன்றிப் பல நூற்றுண்டுகள் கழிந்து விட்டமையால் பயிற்சியின் காரணமாகச் சில திருத்தங்கள் ஏற்பட்டிருக்கலாம். பல நூற்றுண்டுகளுக்குப் பின்னர் உரையாசிரியர்கள் உரைகண்டமையால், அவரவர் கருத்துகளுக்குத் தக மூல பாடங்கள் மாற்றப்பட்டிருக்கலாம். பனை ஓலைகளில் எழுதும் பழக்கத்தின் காரணமாகப் படி எடுப்பாரின் பிறழ்ச்சியால் பல மூல வடிவங்கள் திருத்தப்பட்டிருக்கலாம். எனவே, தொல்காப்பிய நூற்பாக்களின் மூல வடிவங்களை ஆய்ந்தறிதல் இன்றியமையாததாகும்.

1. தொல்காப்பியர் காலம்

தொல்காப்பிய நூற்பாக்களின் காலப்பழமையைக் கருத்தில் கொண்டால், நூற்பாக்களின் மூல வடிவம் இன்ன வகையில் இருந்திருத்தல் வேண்டும் என்று உய்த்தறிய வேண்டிய உணர்வின் இன்றியமையாமை புலப்படும். தொல்காப்பியர், மகாபாரத காலமாகிய கி. மு. 1500க்கு முற்பட்டவர் என்றும், களவியலுரைக் கணக்கின்படி இடைச்சங்கத்தின் காலம் கி. மு. 5320 என்பதால் தொல்காப்பியர் காலமும் இதுவே யாதல் வேண்டும் என்றும் கூறுவர் க. வெள்ளைவாரணம்[1]. தொல்காப்பியர் கி. பி. 4 அல்லது 5-ஆம் நூற்றுண்டில் வாழ்ந்தவரெனக் கொள்ளுதலே பொருந்தும் என்பது வையாபுரிப்பிள்ளை கருத்து[2]. தொல்காப்பியர் காலத்தைக் கணிப்பதில் இன்றைய ஆராய்ச்சி உலகில் இந்த இருபெரும் கால

---

[1] தமிழ் இலக்கிய வரலாறு –தொல்காப்பியம். க. வெள்ளைவாரணம் பக் 126 - 127

[2] தமிழ்ச்சுடர்மணிகள் - எஸ். வையாபுரிப்பிள்ளை. ப. 39.

எல்லைக் கோடுகள் வரையறுக்கப்பட்டுள்ளன[1] இடைப்பட்ட நிலை பில் பல்வேறு காலங்களைத் தொல்காப்பியத்துக்கு உரியதாக்கி அறிஞர் பலவகையில் மொழிவர். பொதுநிலையில் தொல்காப்பியம் முதற் சங்க காலத்துக்கு உரியது எனக் கொள்ளுதல் பொருந் துவதாகும்.

இன்றைக்குப் பன்னூறு ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய தொல்காப்பியம், பலரால் பல்வேறு காலங்களில் பல்வேறு சூழல் களில் படிஎடுக்கப்பெற்றுப் பயிலப்பட்டு வந்தது. சென்ற நூற்றாண்டில் தான் முதன் முதலாக இது அச்சில் வெளிவந்தது. அச்சேறிய பின்னரும் பதிப்புக்கள் தோறும் மூலபாடங்களின் சில வடிவங்கள் செம்மைப் படுத்தப் பெற்றுள்ளன. பதிப்புக்களில் ஏற் பட்ட அச்சுப்பிழைகளும் பாடவேறுபாடுகளைப் பெருக்குவதில் குறிப் பிடத்தக்க அளவுக்குப் பங்கு பெற்றுள்ளன.

2. தொல்காப்பியத்தில் விடுபாடும் - இடைச்செருகலும்

இன்று வழக்கில் இருந்து வரும் தொல்காப்பிய நூற்பாக்கள் அனைத்தும் தொல்காப்பியர் எழுதிய வரிசையிலும் அமைப்பிலும் உள்ளன என்று கருத முடியாது. தொல்காப்பிய நூற்பாக்கள் சில விடுபட்டிருக்கலாம் என்றும் புதியனவாகச் சில இடையில் செருகப் பட்டிருக்கலாம் என்றும் கருத இடம் உள்ளது.

2. 1. விடுபடுதல்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தில், பிரிவின்கண் கூற்று நிகழும் இடங்களைக் கூறும் நூற்பாக்கள் உள்ளன. இதுபோலவே, தலைவிக்குக் கூற்று நிகழும் இடங்களைக் கூறும் நூற்பா ஒன்றும் இங்கு இடம் பெற்றிருக்க வேண்டும். அங்ஙனம் இடம் பெறுமை யால், ''எஞ்சியோர்க்கும் எஞ்சுதல் இலவே''[2] என வரும் நூற்

[1] At the outset, we have to regard that there are two extreme views, one of which pushes for the Tolkappyam to 5000 B. C or even before and the other drags it down to 500 A. D. — தொல்காப்பியச் சிந்தனைகள் - 1978. A Historicall pers pective - Dr. S. N. Kandasamy P.9.

[2] தொ. பொ. நூ. 45

பாவினுல் தலைவிக்குக் கூற்று நிகழும் இடங்களை உரையாசிரியர்கள் தொகுத்துக் கூறியுள்ளனர்.

தலைவி கூற்றுக்களைத் தொகுத்துக் கூறும் நூற்பா ஒன்று தொல்காப்பியரால் எழுதப்பட்டிருக்க வேண்டும் என்றும், ஏடு பெயர்த்து எழுதியோர் அந்நூற்பாவை விடுத்து எழுதியிருக்க வேண்டும் என்றும் இளம்பூரணர் கருதுவர். "தலைமகள் கூற்று தனித்துக் கூறல் வேண்டும், இவரோடு ஒரு நிகரண்மையின், எனின் ஒக்கும். தலைமகள் கூற்று உணர்த்திய சூத்திரம் காலப்பழமையால், பெயர்த்தெழுதுவார் விழ எழுதினர் போலும்[1] என்பது இளம்பூரணர் கூற்று.

இளம்பூரணர் கருத்துப்படி, தலைவி கூற்றினைத் தொகுத்துக் கூறும் நூற்பா ஒன்று இருந்து விடுபட்டிருக்க வேண்டும் எனத் தெரிகிறது. பிரிவின்கண் தலைவிக்குச் சிலவிடங்களில் மட்டுமே கூற்று நிகழுமாதலால் இங்குத் தலைவி கூற்றுக்களைத் தொகுத்துணர்த்தும் நூற்பா இருத்தல் வேண்டாம் என்ற கருத்தும் உண்டு[2]

எழுத்ததிகாரத்தில் வரும் போலி பற்றிய நூற்பா
"அகரத்திம்பர் யகரப்புள்ளியும்
ஐயென் னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"[3]
என்று அமைந்துள்ளது. இதன் பின்னர்,
"அகரத்திம்பர் வகரப்புள்ளியும்
ஔவென் னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

---

[1] தொ. பொ. நூ. 45-உரைவிளக்கம்.

[2] தோழியுடன் போக்குணர்த்தியவழி அதனை மறுத்தலும், பின்னர்ப் போக்கிற்கு உடன்படுதலும், இடைச்சுரத்தினின்று மீண்டுவருங்கால் தாய்க்கும் தன்னாயத்தார்க்கும் தன் வருகையைக் கூறுமாறு சொல்லி விடுதலும் ஆகிய சில இடங்களே, உடன் போக்கில் தலைமகள் கூற்று நிகழ்த்தும் இடங்களாதலின் தலைவிக்கு முதன்மை தோன்றத் தனியே நூற்பாக் கூறினாரல்லர்-தொல்காப்பியப் பொருளதிகாரம் — அகத்திணையியல் உரைவளம் மு. அருணாசலம்பிள்ளை, ப. 492

[3] தொ. எ. நூ. 55

என்ற நூற்பா இருந்திருக்க வேண்டும் என்றும், அது மயக்கத்தால் ஏடெழுது வோரால் விடப்பட்டது என்றும் பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் கூறியுள்ளார்[1]. இவர் கருத்துப்படியும் தொல்காப்பிய நூற்பாக்கள் சில விடுபட்டிருக்கலாம் என்ற கருத்து உறுதியா கின்றது. இந்நூற்பா,

"அகரத் திம்பர் யவகரப் புள்ளியும்
ஐயௌ நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என்ற வடிவில் இருந்திருக்க வேண்டும் என்றும், காலப் பழமை யில் இப்பாடங்கள் பிழையாக எழுதப்பட்டிருக்க வேண்டும் என் றும் பதிப்பாசிரியர் வ. உ. சிதம்பரம்பிள்ளை கருதுகின்றார்.[2]

எனவே, இளம்பூரணர், பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் ஆகியோர் கருத்துப்படி தொல்காப்பிய நூற்பாக்கள் சில காலப் பழமையில் ஏடெழுதியோரால் விடுபட்டிருக்கலாம் என்று அறிய முடிகிறது. தொல்காப்பிய நூற்பாக்களின் மூல வடிவங்கள் பற்றிய சிந்தனை இளம்பூரணர் காலமாகிய கி. பி. 12ஆம் நூற்றாண்டிலேயே ஏற்பட்டிருந்தது என்பதையும் இதனால் அறிகிறோம்.

2. 2. இடைச்செருகல்

தொல்காப்பியத்தில், பிற்காலத்தில் இடைச்செருகல்களும் இடம் பெற்றுள்ளன என்ற கருத்தும் உண்டு. அந்நூலில் இடைச் செருகல்களாக ஒன்றோ பலவோ நூற்பாக்கள் உள்ளன என்பதில் கருத்தொற்றுமை இருப்பதாகவே தோன்றுகின்றது. எந்த எந்த நூற்பாக்கள் இடைச்செருகல் என்று கூறும்போது ஒருவர் கூறுகின்ற நூற்பாக்களையே மற்றவர்களும் கூறுவார்கள் என்பதற்கில்லை" என்ற கருத்துத் தொல்காப்பியத்தில் இடைச்செருகல் உண்டு என்பதை வலியுறுத்துகிறது.[3]

தொல்காப்பியத்தில் அமைந்த இடைச்செருகல்கள், சேர்க் கைகள், விடுபாடுகள், வேறுபாடுகள் முதலியவற்றால் தொல்காப்

[1] தொ. எ. குறிப்புரை - பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி—ப. 69.

[2] தொ. எ இளம். வ. உ. சிதம்பரம்பிள்ளை பதிப்பு- ப. 23

[3] தொல்காப்பியச் சிந்தனைகள் — தொல்காப்பியர் காலம் சுப. இராமநாதன், ப. 1

பியரின் காலம் பற்றிய கொள்கை பலவகையாக வேறுபடுத்திக் கூறப்படுகின்றது என்ற கருத்தும் உண்டு [1]

தொல்காப்பிய மரபியலில் 71ஆம் நூற்பா முதல் 85ஆம் நூற்பா வரையுள்ள பதினைந்து நூற்பாக்கள் இடைச்செருகலாகப் பின்வந்தோரால் நுழைக்கப்பட்டவை என்பதை "ஒன்றற்கொன்று நீங்காத தொடர்புடையனவாய் அமைந்த இச்சூத்திரங்களிடையே 'நூலே கரகம் என்பது முதல் அந்தணாளர்க்கு அரசு வரைவின்றே'' என்பது முடியவுள்ள பதினைந்து சூத்திரங்களும் சிறிதும் தொடர் பற்ற நிலையில் பின்வந்த ஒருவரால் நுழைக்கப்பட்ட இடைச்செருகலாம். இவை தொல்காப்பியனாரால் இயற்றப்பட்டன அல்ல என்பது சிறிது நூற்பயிற்சி உடையார்க்குத் தெளிவாகத் தோன்றும்'' என வரும் பகுதியில் க. வெள்ளைவாரணனார் விளக்குவர்.[2] இந்நூற் பாக்களுக்கு இளம்பூரணர், பேராசிரியர் உரைகளும் உள்ளமையால் தொல்காப்பியத்தில் நிகழ்ந்த இந்த இடைச்செருகல் இளம்பூரணரின் காலமாகிய கி. பி. 12-ஆம் நூற்றாண்டுக்கும் முந்தியதாக இருத்தல் வேண்டும் என்பது புலனாகும்.

எனவே அமைப்பு நிலையிலும், நூற்பா வரிசை முறையிலும், தொல்காப்பியர் எழுதியபடியே தொல்காப்பியம் இன்று அமைந்துள்ளது என்ற கருத்து இன்றைய ஆராய்ச்சி வளர்ச்சியில் பெரிதும் ஆய்வுக்குரியது என்பது அங்கை நெல்லி.

தொல்காப்பிய நூற்பாக்களின் மூல வடிவும் அமைப்பும் சிதைவுபட்டமையால்தான் உரையாசிரியர்கள் அவரவர் கருத்துக் களுக்கேற்பப் பாடங்களைக் கொண்டுள்ளனர். உரையாசிரியர்கள் நூற்பாக்களுக்கு உரை எழுதுவதோடு, நூற்பாக்களின் மூல வடி

---

[1] The life and times of the auther of such a great and immortal masterpice of the Tamil genius are often unsettled, as the treatise poses many problems of inter polations, addi tions, omissions readings etc. to the researchers who have never converged in the opinions. instead they stoudly claimed there indivitual findings to the conclusive and genuine தொல்காப்பியச் சிந்தனைகள் — A Historical prospective Dr. S. N. Kandasamy P8.

[2] தமிழ் இலக்கிய வரலாறு - தொல்காப்பியம் - க. வெள்ளை வாரணம், ப. 16

வங்கள் இவையே என அவர்கள் ஆராய்க்சி நிகழ்த்தும் நிலையும் ஏற்பட்டது.

3. மூலபாட ஆய்வு

தொல்காப்பிய நூற்பாக்களின் மூல பாடங்கள் எவை என்ற ஆராய்ச்சி இவ்வியலில் எழுத்து, சொல், பொருள் என்ற அதிகார வரிசையில் பெரும்பாலும் நிகழ்த்தப்பெற்றுள்ளது. ஒரு பாடத்தோடு தொடர்புடையனவாய் பிற அதிகாரங்களிலும் இயல்களிலும் உள்ள பாடங்கள் ஒருசேரத் தொகுத்து உரைக்கப்பட்டுள்ளன.

மூன்று அதிகாரங்களிலும் இயல்வாரியாக வேறுபாடு அமைந்த நூற்பாக்களின் எண்ணிக்கை, வேறுபடும் இடங்கள், வேறுபாடுகள், இவ்வேறுபாடுகளில் பொருள் வேறுபாட்டுக் கோணத்தில் ஆயத் தக்கவை ஆகிய விவரங்கள் கீழே பட்டியலில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

இயல்	மொத்த நூற்பா	வேறுபாடு உள்ள நூற்பா	வேறுபாடு இல்லாத நூற்பா	வேறுபடும் இடம்	வேறுபாடு எண்ணிக்கை	பொருள் வேறுபடுவன
எழுத்ததிகாரம்						
நூன்மரபு	33	9	24	11	18	3
மொழிமரபு	49	10	39	12	13	9
பிறப்பியல்	21	5	16	5	5	2
புணரியல்	40	8	32	8	9	2
தொகை மரபு	30	8	22	9	10	2
உருபியல்	30	2	28	2	2	—
உயிர்மயங்கியல்	93	9	84	10	12	2
புள்ளிமயங்கியல்	110	6	104	7	7	—
குற்றியலுகரப் புணரியல்	77	15	62	19	19	2
	483	72	411	83	[illegible]	22

சொல்லதிகாரம்

கிளவியாக்கம்	62	26	36	33	43	4
வேற்றுமையியல்	17	10	7	31	34	2
வேற்றுமை மயங்கியல்	35	19	16	28	34	3
விளிமரபு	37	12	25	13	14	3
பெயரியல்	43	13	30	20	22	3
வினையியல்	49	22	27	29	33	2
இடையியல்	48	12	36	15	18	2
உரியியல்	99	20	79	23	25	3
எச்சவியல்	66	19	47	26	28	4
	456	153	303	218	251	26

பொருளதிகாரம்

அகத்திணையியல்	58	22	36	38	44	8
புறத்திணையியல்	30	15	15	55	62	7
களவியல்	51	27	24	54	60	10
கற்பியல்	53	22	31	67	78	11
பொருளியல்	52	28	24	49	58	5
மெய்ப்பாட்டியல்	27	11	16	19	20	—
உவமையியல்	38	16	22	18	18	2
செய்யுளியல்	235	134	101	216	273	26
மரபியல்		42	70	77	86	14
	656	317	339	593	699	83

பொருள் வேறுபடும் பாடங்கள் கீழே வரிசையாக ஆராயப்பட்டுச் சிறந்த மூல பாடங்கள் இவை என நிறுவப்பட்டுள்ளன.

4. அளபு-அளவு

எழுத்ததிகார நூன் மரபில் பொருள் வேறுபாடுடைய மூன்று இடங்களில் வரும் பாடங்களில் **'அளபே'** (எ. 11) **'அரையளபு'** (எ. 13) என இளம்பூரணர் கொண்ட பாடங்களுக்கு முறையே **'அளவே'** **'அரையளவு'** என நச்சினார்க்கினியர் கொண்ட பாடங்கள் இரண்டு உள.

இளம்பூரணர், **'அளபு'** என்ற சொல்லையும், நச்சினார்க்கினியர் 'அளவு' என்ற சொல்லையும் பாடமாகக் கொண்ட இடங்கள் எழுத்ததிகாரத்தில் இவ்விரண்டேயன்றி இன்னும் சில உள.

"மெய்நெறி வளியிசை **அளபு** நுவன் றிசினே" (எ. 103)
"**அளபாகு** மொழிமுதல் நிலைஇய உயிர்மிசை" (எ. 122)
"மகர **அளபொடு** நிகரலு முரித்தே" (எ. 480)

எனவரும் இடங்களில் **'அளபு'** என்றே இளம்பூரணர் பாடங்கொள்ள இவ்விடங்களிளெல்லாம் நச்சினார்க்கினியர் **'அளவு'** என்றே பாடங் கொள்கின்றார்.

இளம்பூரணர், "குறுமையும் நெடுமையும் அளவிற் கோடலின்" (எ.50) எனவரும் இடத்தில் 'அளபு' எனக் கொள் ளாது 'அளவு' என மாறியும் பாடங்கொண்டுள்ளார்.

எனவே இளம்பூரணர் 'அளபு' 'அளவு' என்ற இரண்டையும் பாடங்கொண்டுள்ளார் என அறியலாம்.

நச்சினார்க்கினியத்திலும் ஒரே நூற்பாவில் 'அளபு' 'அளவு' என்ற இரு சொற்களுமே பயின்றுள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கது. "அளபிற்கோடல் அந்தணர் மறைத்தே' என்றும், 'மெய்தெரி வளியிசை அளவு நுவன்றிசினே' என்றும் ஒரே நூற்பாவில் (எ. 103) இரு சொற்களும் பயின்றுள்ளன. எனவே நச்சினார்க்கினியரும் 'அள்வு' 'அளபு' என்ற இரண்டையும் பாடம் கொண்டுள்ளார் எனவும் அறியலாம்.

முடிபு-முடிவு என்றும், திரிபு-திரிவு என்றும் ஒரே பொருள் தரும் இருவகைச் சொற்கள் போல அளபு-அளவு என்பனவும்

ஒரே பொருள் தரும் இருவகைச் சொற்களாக உளவா, அன்றிப் பொருள் வேறுபாடுள்ள இருவேறு சொற்களாக உளவா என்பதை இங்குத் துணிய வேண்டும். இரு சொற்களும் பொருள் வேறுபாடுடையனவாகவே உள.

அளபு - அளவு எனவரும் சொற்களுக்குரிய பொருள்களாக ஒரு சில இடங்களில் (எ. 11, 13, 103) மாத்திரை என்றும், ஒரு சில இடங்களில் (எ. 122, 480) அளவைப் பெயர் என்றும் வேறுபட்ட பொருள்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

நச்சினார்க்கினியர், 'அளபு' என்பதற்கும் 'அளவு' என்பதற்கும் பொருள் வேறுபாடுண்டு என்னும் கருத்தினர். இதனை, 'அளபு' - என்று மாத்திரையாகக் கூறுது. அளவு - எனச் சூத்திரஞ் செய்தமையால் அளவு, தொழின் மேல் நின்றது [1] எனக் கூறியுள்ள பகுதியால் அறியலாம்.

"மாத்திரை அளவும் எழுத்தியல் வகையும்" (சொ. 2) என வரும்போது மாத்திரை, அளவு எனவரும் சொற்கள் பொருள் நிலையில் வேறுபடுத்தி ஆளப்பட்டுள்ளன.

மேலே கண்ட குறிப்புக்களால் 'மாத்திரை' எனப் பொருள் பயிலும் இடங்களில் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இருவரும் 'அளபு' எனப் பாடங் கொண்டனர் எனவும், அளத்தல் தொழிலையுடைய பெயர்ச் சொற்களைச் சுட்டி வருங்கால் 'அளவு' எனப் பாடங்கொண்டனர் எனவும் கொள்ளல் பொருந்துவதாகும்.

அளபு எடுத்தல் என்பது மாத்திரையின் மிக்கொலித்தல் என்ற பொருளில் அளபெடை' என வழங்குவதும் இங்கு அறியத் தக்கது.

பிற்கால ஏடுகளிலும், பதிப்புக்களிலும் இவ்விரு சொற்களும் பொருள் வேறுபாடு அறியாத நிலையில் மயங்கி ஆளப்பட்டுள.

நூன் மரபில் 'அளவே' (எ. 11) 'அரையளவு' (எ. 13) எனவரும் இளம்பூரணர் பாடங்கள் சிறப்புடையன என்பதும், நச்சி

1 தொ. எ. நச்சி. நூ. 50 விளக்கம்

ஞர்க்கினியருக்கும் இப்பாடங்களே கருத்தாக இருத்தல் வேண்டும் என்றும் இதனால் அறியலாம்.

மொழி மரபில் "குறுமையும் நெடுமையும் அளவிற் கோட லின்" (எ. 50) எனவரும் நூற்பாத் தொடரில் 'அளவிற் கோட லின்" என்பதே இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் கொள் நம் பாடம். 'அளவிற்கோடலின்' என்பதற்குச் செவி கருவியாக அளக் கின்ற அளவுத் தொழிலாலே செய்யுட்குக் கொள்ளப்படுதலின் என்பது பொருள். அளவைத் தொழில் இங்குப் பொருளாகச்சுட்டப் படுதலால் உரையாசிரியர்கள் கொண்ட 'அளவிற் கோடலின்' என்ற பாடமே சிறப்புடையதாகும். வேங்கடராஜுலு ரெட்டியாரின் எழுத்ததிகார ஆராய்ச்சி நூலால் அறியப்பெறும் 'அளபிற்கோடலின்' என்ற பாடம் இங்குப் பொருந்தாது.

பிறப்பியலின் இறுதியில் புறனடை உணர்த்துவனவாக இரு நூற்பாக்கள் உள. நச்சினார்க்கினியர் இவ்விரண்டையும் இணைத்து ஒரே நூற்பாவாகக் கொள்வர். இவற்றுள் அளபு—அளவு பற்றிய பாட வேறுபாடுகள் இரண்டு உள.

'அளவிற்கோடல்' (எ. 102) எனவரும் பாடம் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இருவரும் உடன்பட்டது. 'அளபு நுவன்றிசினே' (எ. 103) என்ற இளம்பூரணர் பாடத்துக்கு 'அளபு நுவன்றிசினே' என நச்சினார்க்கினியர் கொண்டுள்ளதாகப் பதிப்பில் உள்ளது. இரு இடத்திலும் 'மாத்திரை' என்ற பொருளையே உரையாசிரியர் இருவரும் குறிப்பிட்டுள்ளனர். எனவே முன் கூறப்பட்ட கருத்துக் கேற்ப இங்கு ஈரிடத்திலும் (102, 103) 'அளவு' என்ற பாடத் தையே இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கொண்டிருத்தல் வேண்டும் எனத் துணியலாம். எனவே 'அளவிற்கோடல்' (எ. 102) என்பது "அளபிற் கோடல்" என்றும் 'அளவு நுவன்றிசினே' (எ. 103) என்பது 'அளபு நுவன்றிசினே' என்றும் திருத்தம் பெறல் வேண்டும்.

புணரியலில் இன் சாரியையின் இறுதி திரிந்து வருவதை உணர்த்தும் நூற்பாவில் "அளபாகு மொழி முதல்..." (எ. 122) எனப் பயின்று வரும் தொடரில் 'அளபு' எனப் பாடங்கொண்டுள் ளார் இளம்பூரணர். நச்சினார்க்கினியர் 'அளவு' எனப் பாடங் கொள்வர்.

'அளபாகுமொழி' என்பதற்கு அளவுப் பெயராக வரும் மொழி என்பது பொருள். இது அளவுப் பெயரைச் சுட்டி வருதலால் **'அளவு'** என்னும் பாடமே இங்கு ஏற்புடையதாகும். நச்சினார்க்கினியர் கொண்டுள்ளது போல, இளம்பூரணர் பாடமும் **'அளவாகு** மொழி முதல்...' என்ற திருத்தம் பெறத் தக்கதாகும்.

குற்றியலுகரப்புணரியலில் இரண்டு முதல் ஒன்பது வரையுள்ள சொற்கள் அளவுப் பெயராகிய மா என்பதோடு புணரும் கருத்தை விளக்கும் நூற்பாவில் 'மகர **அளபொடு** நிகரலு முரித்தே' (எ. 480) என வருவது இளம்பூரணர் பாடம். இதற்கு 'மகர **அளவொடு** நிகரலுமுரித்தே' என நச்சினார்க்கினியர் பாடங் கொண்டார்.

அளவுப் பெயரைக் குறிப்பதாக இச்சொல் பயின்றிருப்பதால் 'மகர **அளவொடு** நிகரலுமுரித்தே' என நச்சினார்க்கினியர் பாடமே பொருந்துவதாகும். அம்முறையில் இளம்பூரணர் பாடமும் திருத்தம் பெறத்தக்கது.

சொல்லதிகாரத்தில் விளியேற்கும் பெயர்கள் சேய்மையில் அளபிறந்து ஒலித்தலைப் பற்றிக் கூறும் நூற்பாவில் (சொ. 149) **அளபிறந்**தனவே' என்ற பாடம் உள்ளது. தெய்வச்சிலையார் தவிர பிற அனைத்து உரையாசிரியர்களும் இப்பாடமே கொண்டனர். தெய்வச்சிலையார் **'அளவிறந்தனவே'** எனப்பாடம் கொண்டார்.

மாத்திரை இறந்து ஒலித்தல் பற்றியே இங்கு குறிப்பிடப் பெறுதலால் **'அளபிறந்தனவே'** என்ற பாடமே பொருத்தமாகும். தெய்வச்சிலையாரும் இம்முறையிலேயே கொண்டிருக்க வேண்டும். எனினும் தெய்வச்சிலையார் உரையின் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு **'அளவிறந்தனவே'** என்ற பாடத்தையே தெய்வச்சிலையார் பாடமாகப் பதிப்பித்துள்ளது. இது **'அளபிறந்தனவே'** எனத் திருத்தம் பெறத்தக்கதாகும்.

இக்குறிப்புக்களால் உரையாசிரியர்கள் அளவு, அளபு எனப் பாடங் கொண்ட இடங்கள் சிலவற்றில் பிறழ்ச்சி ஏற்பட்டுள்ளது என்று அறிகிறோம். 'மாத்திரை' என்று பொருள்பயிலும் இடங்களிளெல்லாம் **'அளபு'** என்ற பாடத்தையும், அளத்தல் தொழிலை

யுடைய பெயர்ச் சொற்களைச் சுட்டிவருங்கால் '**அளவு**' என்ற பாடத்தையும் உரையாசிரியர்கள் கொண்டிருத்தல் வேண்டும் எனப் புலனுவதால் இச்சொற்கள் பயிலும் இடங்களிலெல்லாம் பொரு ளுணர்ச்சியோடு தக்கவாறு அவற்றைத் திருத்தியமைத்தல் வேண் டும் என்பது இப்பகுதியில் சுட்டப்பெறும் கருத்தாகும்.

அளபு-அளவு என்பது போல், உருவு-உருபு என வருவதும் பொருள் நிலையில் தெளிவுடன் ஆள வேண்டிய பாடவேறுபாடு. புணரியலில் உடம்படு மெய் பற்றிய நூற்பாவில் (எ. 141) "உடம் படு மெய்யின் உருபு கொளல் வரையார்" என்ற தொடர் அமைந் துள்ளது. இதில் '**உருபு**' என்னும் சொல் இளம்பூரணர் பாடமாகப் பயின்றுள்ளது. நச்சினார்க்கினியர் '**உருவு**' என்று பாடங் கொண்டு ள்ளார்.

'**உருபு**' என்ற சொல்லுக்கும் '**உருவு**' என்ற சொல்லுக்கும் பொருள் வேறுபாடு உண்டு என்பது தொல்காப்பியத்தாலேயே உணரப்படும்.

"கூறிய முறையின் உருபுநிலை திரியாது" (சொ.70) "ஆறன் உருபினும் நான்கன் உருபினும்" (எ. 162) என்று வருங்கால் '**உருபு**' என்பது வேற்றுமை உருபு என்பதைச் சுட்டுகிறது. உருவு என்பது வடிவம் என்னும் பொருளைத் தருவது" உருவெனமொழி யினும் (சொ. 24) எனவரும் நூற்பாவால் இதனை அறியலாம். எனவே 'உருபு' உருவு' என்பன பொருள் வேறுபாடுடைய சொற் கள்.

இம்முறையில் 'வடிவு' என்னும் பொருள் பயின்ற இடத்தில் உருவு' என்றும், வேற்றுமை உருபு, உவம உருபு என்பன வற்றைச் சுட்டுமிடத்து 'உருபு' என்றும் பயின்று வருதலே தொல் காப்பியர் காலப் பொருண்மை வழக்கிற்கு உரியதாகும். உரு, உருவு உருவம் என்பன ஒரு பொருட் கிளவிகள்.

மேலே கண்ட உடம்படு மெய்பற்றிய நூற்பாவில் இளம் பூரணர் உருபு என்பதற்கும் நச்சினார்க்கினியர் 'உருவு' என்பதற்கும் வடிவு' என்றே பொருள் கொண்டுள்ளனர். 'வடிவு' என்னும் பொருளுக்குரியதாக '**உருவு**' என்பதையே இங்குப் பாடங்கொள்வது பொருட்டெளிவுக்குத் துணைபுரியும். நச்சினார்க்கினியர் கொண்

'உருவு' என்னும் பாடமே பொருட்டெளிவுடையது. ஆதலால் இளம்பூரணர் கொண்ட பாடமும் இதுபோல 'உருவு' எனத்திருத்தம்பெறத் தக்கதாகும். இளம்பூரணரே 'உருவு' என்னும் சொல்லை 'வடிவு' என்னும் பொருளில் ஆண்டுள்ளமையால் (சொ. 24), அவர்க்கு இது உடன்படான கருத்தேயாகும் எனக் கொள்ளலாம்.

பதிப்பாசிரியர் கு. சுந்தரமூர்த்தி 'உருவு' என்ற பாடமே இங்குச் சிறப்புடையது என்பதை "14 1ஆம் நூற்பாவில் உருபு எனப் பாடங் கொள்வதிலும் உருவு என்ற பாடமே சிறப்புடைத்தாகும்" என்று குறிப்பிட்டுள்ளதும்[1] அறியத்தக்கதாகும்.

தொகை மரபில் "குறியதன் முன்னர்த் தன்னுரு பிரட்டலும்" என்று இளம்பூரணரும், 'குறியதன் முன்னர்த் தன்னுரு இரட்டலும்' என்று நச்சினார்க்கினியரும் பாடங்கொண்ட நூற்பா (எ.161) உள்ளது.

'உருபிரட்டல்' என்ற இளம்பூரணர் பாடத்திற்கும் 'உரு இரட்டல்' என்ற நச்சினார்க்கினியர் பாடத்திற்கும் 'வடிவு இரட்டுதல்' என்பதே பொருள், 'வடிவம்' என்பதை உரு, உருவு, உருவம் என்ற சொற்களே உணர்த்துமேயன்றி 'உருபு' என்பது உணர்த்தாது. எனவே இங்கு நச்சினார்க்கினியர் கொண்டவாறு ன்னுரு இரட்டலும்' என்பதே பொருந்திய பாடம். இம்முறையில் இளம்பூரணர் பாடமும் திருத்தம் பெற வேண்டும். மேலும் 'தன்னுருவிரட்டலும்' என்ற தொடர் 'தன்னுரு பிரட்டலும்' எனத் தோற்ற ஒப்புமையால் பிறழ்ந்திருக்கலாம் என்று கருதவும் இடமுள்ளது. எனவே 'தன்னுரு இரட்டலும்' என்று இளம்பூரணர் பாடம் திருத்தம் பெற வேண்டும் என்ற கருத்து மேலும் வலிவு பெறகிறது.

கிளவியாக்கத்தில் "உருவென மொழியினும்......" (சொ.24) எனவரும் நூற்பாத் தொடரில் இளம்பூரணர்கொண்ட 'உருவென' என்பதற்குச் சேனாவரையரும் தெய்வச்சிலையாரும் 'உருபென' எனப் பாடங்கொண்டுள்ளனர்.

இந்நூற்பாவில் 'உருவு' என்னும் சொல் 'வடிவம்' என்பதைக் குறித்து வழங்குகிறது. எனவே இளம்பூரணர் கொண்ட

[1]தொ. எ. இளம் - கு. சுந்தரமூர்த்தி (1969) ஆராய்ச்சி முன்னுரை, ப. 14

'உருவு' என்பதே சிறந்த பாடமாகும். நச்சினார்க்கினியர், கல்லாடர், பழைய உரைகாரர் ஆகியோரும் இளம்பூரணரைப் பின்பற்றி உருவு' என்பதையே பாடமாகக் கொண்டுள்ளனர். 'வடிவம்' என்ற பொருளைப் பயக்கும் இடங்களிலெல்லாம் உருவு என்பதே பாடமாகக் கொள்ளப்பட வேண்டும் என முன்னர் விளக்கப் பெற்ற கருத்து ஈண்டு நினைவு கூரத்தக்கது.

உருவு என்ற பாடமே சிறப்புடையது என்பதை நச்சினார்க்கினியர் பின் வரும் தன் விளக்கத்தில் எடுத்து மொழிந்துள்ளார்.

"உருபு-எனப்பகர உகரமாகப்பாடம் ஓதில், அது வேற்றுமை உரு பிற்கும் உவம உருபிற்கும் பெயராய், வடிவை உணர்த்தாது என்று உணர்க. "அதுவென் உருபு கெட" (சொ. 90) எனவும் "உருபினும் பொருளினும் மெய் தடுமாறி" (சொ. 97) எனவும், "உருபு தொடர்ந்தடுக்கிய" (சொ. 98, எனவும், "உருபு தொக வருதலும்" (சொ. 100) எனவும், "மெய்யுருபு தொகா (சொ.101) எனவும், "யாதன் உருபின்" (சொ. 102) எனவும் பிறண்டும் வேற்றுமைக்கு உருபு என்ற சூத்திரஞ் செய்தவாறு காண்க. அன்றியும் சான்றோர் செய்யுட்களிலும் 'உருவு கிளர் ஒளிவினை' எனவும் 'ஞாயிற்றுருவு கிளர் வண்ணங் கொண்ட [1] எனவும் 'உருவக்குதிரை' [2] எனவும், வேண்டுருவங் கொண்டதோர் கூற்றங் கொள்[3] எனவும் பிறண்டுங் கூறுமாற்றான் உணர்க என்பது நச்சினார்க்கினியர் விளக்கம். [4] இலக்கணச் சான்றுகளையும் இலக்கியச் சான்றுகளையும் மேற் கோள் காட்டி ஒருபாடத்தை நிறுவுவதில் உரையாசிரியர்களுக்கிருந்த ஈடுபாடும் முனைப்பும் இதனால் புலனாகும்

பெயரியலில் பெயர்ச்சொல்லில் பாகுபாடு கூறும் நூற்பாவில் 'அம்மூவுருபின தோன்றல் ஆறே' (சொ. 157) என்ற தொடர் உள்ளது. அம்மூவுருவின என்ற பாடத்தை நச்சினார்க்கினியர் தவிரப் பிற உரையாசிரியர்கள் ஏற்றுக் கொண்டுள்ளனர். நச்சினார்க்கினியர் **அம்மூவுருவின** என்று பாடங்கொள்கின்றார்.

---

[1] பதிற் 52: 29-30

[2] அகம் 1 : 2

[3] கலி 53 : 9

[4] தொ. எ. நச்சி, நூ. 24 விளக்கம்

இதற்கு உயர்திணைக்குரிமையுடையவை அஃறிணைக்கு உரிமையுடையவை. இருதிணைக்கும் உரிமையுடையவை என அம்மூன்று வகை வேறுபாட்டுடன் தோன்றும் என்பது பொருள். இவ்விளக்கத்தைக் காணுங்கால் அம்மூன்று வகை வடிவு வேறுபாட்டால் தோன்றும் என்பதே கருத்தாக அறியப்படும். வடிவம் என்ற பொருள் அமைதலால் **'அம்மூவுருவின'** என நச்சினார்க்கினியர் கொண்ட பாடமே சிறப்புடையது.

'அம்மூவுருவின' என்பது நச்சினார்கினியர் பாடம். அதுவே சிறப்புடைத்து எனப் பதிப்பாசிரியர் கு. சுந்தரமூர்த்தி குறிப்பிட்டுள்ளதும் அறியதக்கது[1].

பெயரியலில் பெயர்ச்சொல்லின் பாகுபாடு கூறும் அந்நூற்பாவில் (சொ. 157) **'அம்மூவுருபின'** என்றும் **'அப்மூவுருவின'** என்றும் பாடவேறுபாடுகள் அமைந்தது போல, வினையியலில் வினைச்சொல்லின் பாகுபாடு கூறும் நூற்பாவிலும் (சொ. 198) **'அம்மூவுருபின'** **'அம்மூவுருவின'** என்ற பாடவேறுபாடுகள் உள்ளன. நச்சினார்க்கினியர் பெயரியல் நூற்பாவில் **'அம்மூவுருவின'** எனப் பாடங் கொண்டார். இங்குக் கல்லாடர் **'அம்மூருபின'** எனப் பாடங் கொள்கின்றார். **'அம்மூருவின'** என்ற பாடமே சிறந்தது என்பதற்கு முன்னர்க் கூறிய விளக்கங்கள் இங்கும் பொருந்துவனவாகும்.

நச்சினார்க்கினியர் அங்கு **'அம்மூருவின'** என்றும் இங்கு **'அம்மூவுருபின'** என்றும் கொண்டதாகவும், கல்லாடர் அங்கு **'அம்மூவுருபின'** என்றும் இங்கு **'அம்மூருவின'** என்றும் பாடம் கொண்டதாகப் பதிப்புக்களில் அமைந்திருப்பதைக் காணலாம். எனவே இவ்வகைப் பாடம் கொண்ட முறையில் பிழையிருப்பது புலனாகும். வடிவம் என்ற பொருள் பயிலும் இடத்திலெல்லாம் **'உருவு'** என்ற பாடத்தையே உரையாசிரியர்கள் கொண்டிருத்தல் வேண்டும் என்பதும் அதற்குத் தக்கவகையில் இப்பாடங்கள் தொல்காப்பிய மூலத்தில் திருத்தம் பெற வேண்டும் என்பதும், இங்கு நினைவுகொள்ளத் தக்க கருத்துக்கள்.

[1] தொ. சொ. நச்சி. கு. சுந்தரமூர்த்தி—கழகம் (1963) ப. 85

6. பிரிவு-திரிவு

அளபு-அளவு, உருபு-உருவு, என்பன போன்று பிரிவு-பிரிபு, திரிவு-திரிபு எனவரும் பாடங்களும் பகர வகர மயக்கத்தால் பொருள் வேறுபட்டு நிற்கும் பாடங்கள்.

விரவு வினையில் பெயரும், முறையும், தொகையும் உணர்த்தும் வினையியல் நூற்பாவில் (சொ.217) பிரிவு வேறுபடூஉஞ் செய்தியவாகி' என்ற தொடர் அமைந்துள்ளது. இளபூரணர் '**பிரிவு வேறுபடூஉம்**' என்று பாடம் கொண்டார். சேனாவரையர் தெய்வச் சிலையார் இருவரும் '**திரிபு வேறுபடூஉம்**' என்று பாடம் கொண்டனர். உருவு-உருபு என்றும் அளவு-அளபு என்றும் பகர வகரங்கள் திரிந்து பாடங்கள் பயின்றமை போலப் '**பிரிவு**' என்ற இளம்பூரணர் பாடம் திரிந்து 'பிரிபு' என்றாக அதனை நச்சினார்க்கினியரும், கல்லாடரும் கொண்டிருப்பதையும் காண்கிறோம். இதே முறையில் '**திரிபு**' என்ற சேனாவரையர் பாடத்துக்கு ஏற்பத் '**திரிவு**' என்ற பாடமும் உருவாகியிருப்பதைக் கு.சுந்தரமூர்த்தியின் பதிப்பில் காண்கிறோம்.

பிரிவு-பிரிபு, திரிவு-திரிபு என்ற பாடங்கள் இருப்பினும் பொருள் வேறுபாட்டு நிலையில் பிரிவு-திரிபு என்பனவே இங்குக் காணத்தக்கவை,

'பிரிவு வேறுபடூஉஞ் செய்தியவாகி' என்பதற்கு 'உயர்திணைக் கண்வரின் உயர்திணைக்கே உரிய என்றும், அஃறிணைக்கே உரிய என்றும் பிரித்துச் செய்யப்படும் என்றவாறு' என இளம்பூரணர் விளக்கம் கூறுவர்.

இக்கருத்தையே சேனாவரையரும் கூறுவர். 'திரிபு வேறு படூஉஞ் செய்தியவாகி- எனவே வேறு வேறு உணர்த்தினல்லது ஒரு சொற் சொல்லுதற்கண் இருதிணையும் உணர்த்தாமை பெறுதும்' என்பது சேனாவரையர் விளக்கம்.

விளக்கப்படும் கருத்துக்கு ஏற்ற வகையில் அமைவது 'பிரிவு' என்னும் இளம்பூரணர் பாடமே. பிற பாடங்கள் பொருந்தாதவை என உணரலாம்.

இளம்பூரணர் கொண்ட பாடமே சிறப்புடைத்தாம் எனப் பதிப்பாசிரியர் கு. சுந்தரமூர்த்தி கூறுவதும் அறியத்தக்கதாம்[1]

7. மெய்மயங்குடனிலை-மெய்மயக்குடனிலை

தனி மெய் மயக்கத்திற்குப் பெயரும் முறையும் தொகையும் உணர்த்தும் நூன்மரபு நூற்பாவில் ''மெய்மயங்குடனிலை'' (எ. 22) எனவரும் தொடருக்கு 'மெய்மயக்குடனிலை' என்ற பாடம் வ.உ. சிதம்பரம்பிள்ளை பதிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. வல்லின மெல்லினம் மயங்கி வந்தமையால் இப்பாடம் வேறுபட்டிருப்பதாகக் கொண்டாலும் இரு சொற்களுக்கும் இடையில் பொருள் வேறுபாடு உண்டு என்பது அறியத்தக்கதாகும். மெய்யெழுத்துக்கள் ஒன்றோ டொன்று கலந்து வருதல் மெய்மயங்கி வருதல் எனப்படும். மெய்மயக்கம் என இதனைக் குறிப்பிடுதல் பிழை இல்லை. எனினும் மயங்குத லுக்கும், மயக்குதலுக்கும் வினைத்தன்மை வேறுபாடு உண்டு. எனவே இவை பொருள் வேறுபாடுடைய பாடங்களாகக் கருதப்பட்டன.

வ.உ. சிதம்பரம்பிள்ளை பதிப்பில் 'மெய்மயக்குடனிலை' என்பது இளம்பூரணர் கொண்ட மூல பாடமாகவே மூலத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. பின்னர் வந்த இளம்பூரணப் பதிப்புக்களில் 'மெய் மயங்குடனிலை' என இப்பாடம் திருத்தப்பெற்றுள்ளது. ''மெய்மயங்கு-மெய்ம்மயக்கம் என்றும்'' எனவரும் இளம்பூரணர் உரையில் 'மெய்மயக்கம் என ஆளப்பட்டிருத்தலால் மூல பாடமும் அப்படி இருக்கவேண்டும் என்று கருதி 'மெய்மயக்குடனிலை' எனத் திருத்திப் பதிப்பிக்கப்பட்டிருக்கலாம் என ஊகிக்க முடிகிறது. 'மெய்மயங் குடனிலை' என்பதே பொருட்சிறப்புடைய பாடம்.

8. முன்னொற்று

ஈரொற்றுடனிலையை உணர்த்தும் மொழிமரபு நூற்பாவில் (எ. 43) யரழ என்னும் மூன்று முன்னொற்ற என இளம்பூரணரும் யரழ என்னும் மூன்றும் ஒற்ற' என நச்சினார்க்கினியரும் பாடங்கொண்டுள்ளனர். இளம்பூரணர் பாடம் 'ய், ர், ழ்' என்ற ஒற்றுக்கள் குறிற் கீழும் நெடிற் கீழும் முதலில் ஒற்றாய் நிற்கும் என்று மூன்று ஒற்றுக்களும் நிற்கும் இடத்தை உணர்த்தித் தெளிவுடன் உள்ளது. நச்சினார்க்கினியர் கொண்ட பாடத்தில் ஒற்றுக்கள் நிற்கும் இடம் தெளிவு படுத்தப் பெறவில்லை. எனவே பொருட்டெளி

[1] தொ. எ. இளம்-கு. சுந்தரமூர்த்தி-கழகம் (1963) ப. 111

வுடைமை நோக்கி இளம்பூரணர் பாடத்தை இங்குச் சிறந்தது எனக் கொள்ளலாம்.

9. எகர-ஒகரமாகும்

மொழி மரபில் "அகர இகரம் ஐகாரமாகும்" (எ. 54) என்பதற்கு "அகர இகரம் எகாரமாகும்" என்றும் "அகர உகரம் ஔகாரமாகும்" (எ. 55) என்பதற்கு "அகர உகரம் ஒகரமாகும்" என்றும் வரும் வேறுபாடுகள் பதிப்பு வேறுபாடுகளாய்க் குறிப்பிடப் பெற்றுள்ளன.

அகரமும் இகரமும் ஐகாரத்திற்கும், அகரமும் உகரமும் ஔகாரத்திற்கும் போலியாக வரும் என்பது இந்நூற்பாக்களின் கருத்து. வேறுபட்ட பாடங்களின்படி கொண்டால் அகரமும் இகரமும் எகாரத்திற்கும், அகரமும் உகரமும் ஒகரத்திற்கும் போலியாக வரும் என்பது கருத்தாகும்.

ஐவனம்-அஇவனம் என்றும், ஔவை-அஉவை என்றும் வருவதே வழக்கு. மேலும் ஒலிப்பு முறையாலும் அ,இ-ஐகாரத்தையும் அ,உ-ஔகாரத்தையும் ஒத்துள்ளனவே தவிர அவை முறையே எகரத்தையும் ஒகரத்தையும் ஒத்து அமையவில்லை பிராகிருதம், தெலுங்கு, கன்னட மொழிகளிலும் சொற்களிலுள்ள ஐகார ஔகாரங்களுக்கு முறையே அஇ அஉ என்பன வரும் என்பதைச்சான்றுகளோடு விளக்குவர்[1]. அனைத்துக்கும் மேலாக, கழக மூலப்பதிப்பில் கண்ட இவ்வேறுபாடுகளின் சிறப்பின்மை நோக்கி, பிற்காலப் பதிப்புக்கள் எவையும் இவ்வேறுபாடுகளைச் சுட்டவில்லை.

உரையாசிரியர்கள் கொண்டவாறு ஐகாரமாகும், ஔகாரமாகும் எனவரும் பாடங்களே சிறப்புடையன.

10. யகரப்புள்ளி-ஐயென் நெடுஞ்சினை

மொழிமரபில் மேலே கண்ட இரு நூற்பாக்களைத் தொடர்ந்து அகரமும் யகரப்புள்ளியும் ஐகாரத்துக்குப் போலியாக வரும் என்ற கருத்தை,

---

1 தொல்காப்பியம்-எழுத்ததிகார ஆராய்ச்சி-வேங்கடராஜுலு ரெட்டியார் பக் 57–59.

"அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" (எ. 56)

என்ற நூற்பா விளங்குகின்றது. இதில் 'யகரப்புள்ளியும்' 'ஐயென் நெடுஞ்சினை' எனவரும் தொடர்கள் இளம்பூரணர், நச்சினார்க்கினியர் இருவராலும் ஏற்கப்பட்ட பாடங்கள்.

"அகர இகரம் ஐகாரமாகும்" என்ற நூற்பாவை அடுத்து "அகர உகரம் ஔகாரமாகும்" என்ற நூற்பா அமைந்தது போல "அகரத்து இம்பர் யகரப் புள்ளியும்" என்ற நூற்பாவை அடுத்து

"அகரத் திம்பர் வகரப் புள்ளியும்
ஔவென் னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என ஒரு நூற்பா இடம் பெற்றிருத்தல் வேண்டும் எனக் கருதுவர்.[1] அகரமும் வகரப் புள்ளியும் ஔகாரத்திற்குப் போலியாக வரும் என்ற கருத்தை இந்நூற்பா விளக்கும்.

பதிப்பாசிரியர் வ. உ. சிதம்பரனார் இக்கருத்தை விளக்க, தொல்காப்பிய நூற்பாவின் அமைப்பு மாறியிருத்தல் வேண்டும் எனவும் கூறுவார்.

"அகரத் திம்பர் யவகரப் புள்ளியும்
ஐயௌ நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

என்பது அவர் காட்டும் நூற்பாவின் மாறுபட்ட அமைப்பு. இங்கு 'யகரப்புள்ளியும்' என்பதற்கு 'யவகரப்புள்ளியும்' என்றும்' 'ஐயென் னெடுஞ்சினை' என்பதற்கு "ஐயௌநெடுஞ்சினை' என்றும் வேறு பாடுகள் அமைந்துள்ளதைக் காணலாம்.

நூற்பாவின் வடிவத்தை மாற்றி அதன் மூலம் வ.உ. சிதம்பரம்பிள்ளை விளக்க விழையும்கருத்தை, இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் 'மெய்பெறத் தோன்றும்' என்றும், 'மெய்பெற' என்றும் வரும் விதப்புக் கிளவிகளை முறையேகூறிப் பெற வைத்துள்ளனர்.

---

[1] தொல்காப்பியம் எழுத்ததிகாரம் குறிப்புரை-பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, ப. 69

தொல்காப்பியரின் கருத்தை விதப்புக் கிளவியால் பெற வைத்தல் உரையாசிரியர்கள் பின்பற்றும். ஒருவகை உத்திமுறை. ஆதலால் வ. உ. சிதம்பரம்பிள்ளை காட்டியபடி நூற்பா அமைப்பை மாற்ற வேண்டியதும், அதில் பாடவேறுபாடுகளைக் கொள்ளுவதும் தேவையில்லை. எனவே உரையாசிரியர்கள் கொண்டவாறே நூற்பா அமைப்பு இருக்கலாம்.

11. அஐஔ-மூன்றலங்கடை

மொழிமுதல் எழுத்துக்களைக்கூறும் நூற்பா வரிசையில் சகரம் எந்த எழுத்துக்களோடு கூடி மொழி முதலில் வரும் என்பதை,

> "சகரக் கிளவியும் அவற்றோ ரற்றே
> அஐஔ எனும் மூன்றலங்கடையே" (எ. 62)

என்ற நூற்பா உணர்த்தும். சகரம், அ, ஐ, ஔ என்ற மூன்றெழுத் தோடுங் கூடி மொழி முதலில் வரும் என்பதும் நூற்பாக் கருத்து. 'அ ஐ ஔ எனும் மூன்ற லங்கடையே, என்பதற்கு 'அவை ஔ எனும் ஒன்றலங்கடையே' என்ற தொடர் பாடவேறுபாடாகக் கழக மூலப்பதிப்பிலும், தொடர்ந்து கழகம் பாவாணர் எழுத்து-நச்சினார்க்கினியத்திலும் குறிப்பிடப் பெற்றுள்ளது.

பாவாணர் தன் பதிப்பில் மொழி முதலில் பயின்றுவரும் 54 சொற்களைச் சுட்டியும்[1] மயிலைநாதர் மேற்கோளைக் காட்டியும், "அவை ஔ, எனும் ஒன்றலங்கடையே" என்ற பாடமே பொருந் தும் என்பர். பதிப்பாசிரியர் கு. சுந்தரமூர்த்தி இவ்விதி பற்றிய கருத்து இன்னும் ஆராய்வதற்குரியதாகவே இருக்கிறது என்பர்[2].

தொல்காப்பியத்திற்குப் பின்னர் வந்த நன்னூல், நேமிநாதம், பிரயோக விவேகம் ஆகியன 'ச, சை, சௌ', என்ற மூன்றும் மொழி முதலில் வரும் என்றே கூறியுள்ளன.

சகரம் மொழி முதலில் பயின்று வருவதற்குச் சான்றுகள் உள்ளனவே தவிர 'சை, சௌ' ஆகியன மொழி முதலில் பயின்ற

1தொ. எ. நச்சி. தேவ நேயப்பாவாணர்,-கழகம் (1955) பக் 53-54.
2தொ. எ. நச்சி. கு. சுந்தரமூர்த்தி (1967) ப. 73

மைக்குரிய சான்றுகள் இல. காட்டப்படும் சொற்களில் பல வட சொற்களாகவே அமைந்துள்ளன. எனவே தொல்காப்பியர் தன் கால மொழி வழக்கிற்கு ஏற்ப இலக்கணம் செய்துள்ளார் எனக் கொண்டு 'அ ஐ ஒள எனும் மூன்றலங்கடையே' என்ற பாடத்தையே பொருந்துவதாகக் கொள்ளலாம்.

12. ஆவோடல்லது

"மொழிமரபில் ஆவோடல்லது யகர முதலாது" (எ. 65) என்ற நூற்பா யா என்ற ஓர் எழுத்து மட்டுமே யகர வரிசையில் மொழி முதலில் வரும் என்பதை உணர்த்துகிறது. இதற்கு "அ ஆ உ ஊ ஓ ஔ ஆறோடல்லது யகர முதலாது" என நூற்பா வடிவம் அமைந்திருப்பதாகக் கழக மூலப் பதிப்புக் குறிப்பிடுகிறது. இதன்படி ய, யா, யு, யூ, யோ, யௌ-என்பன மொழி முதலில் வரும் என்பது கருத்தாகும்.

"யவனர் என்றாற் போல்வன விலக்கினவும் வருமாலெனின் அவை ஆரியச் சிதைவென்று மறுக்க" என இளம்பூரணரும்[1] "யவனர், யுத்தி, யூபம், யௌவனம் என்பன வடசொல்லென மறுக்க" என நச்சினார்க்கினியரும்[2] பிற எழுத்துக்களோடு கூடி வரும் யகரமொழி முதற் சொற்களைத் தமிழ் சொற்கள் அல்ல என மறுத்துள்ளனர்.

பிற்கால இலக்கண வளர்ச்சிக்கேற்ப நேமிநாதர் 'யகரம் ஆ ஊ ஓ ஆகிய மூன்றோடும் கூடி மொழி முதலில் வரும்' என்றும், நன்னூலார் 'அ ஆ உ ஊ ஓ ஔ ஆகிய ஆறோடும் கூடி மொழி முதலில் வரும்' என்றும் கூறியுள்ளனர்.

தொல்காப்பியர் தன்கால மொழி வழக்குக்கே இலக்கணம் கூறியுள்ளார். ஆதலால் இங்கு அமைந்த பாட வேறுபாடு, அவர் கால மொழி வழக்குக்கு அமைவுடையதாக இல்லை. எனவே இவ் வேறுபாடு பொருந்தாது.

3. சொல்லிய மருங்கு

இகரத்தையும் ஐகாரத்தையும் இறுதியில் பெற்ற சுட்டுச் சொற்களும் வினைச் சொற்களும் வல்லெழுத்து மிகுந்தும் உறழ்ச்சி

---

[1] தொ. எ. இளம். நூ. 65 விளக்கம்

[2] தொ. எ. நச்சி. நூ. 65 விளக்கம்.

யாகவும் முடியும் என்பதை விளக்கும் தொகை மரபு நூற்பாவில் (எ.160) **'சொல்லிய மருங்கின்'** என்பதை **இளம்பூரணரும்** **'சொல்லியல் மருங்கின்'** என்பதை **நச்சினார்க்கினியரும்** பாடமாகக் கொண்டுள்ளனர்.

ஓர் எழுத்துச் சேர்க்கையால் இப்பாடம் பிறந்தது எனக் கருதினலும், வேற்றுமை செய்யும் நிலையில் இச்சொல்லுக்குப் பொருள் கொள்ளப்பட்டுள்ளமையால், இயல்புடைமையால் இஃது ஆராயத்தக்கதாயிற்று.

> "வல்லெழுத்து மிகுநவும் உறழாகுநவும்
> சொல்லிய மருங்கின் உளவெனமொழிப"

என்பது இளம்பூரணர் கொண்ட பாடத்தின் படி அமைந்த நூற்பாவின் இறுதிப்பகுதி. சொல்லிய மருங்கின் வல்லெழுத்து மிகுநவும் உறழாகுநவும் உளவென மொழிப எனக் கொண்டு கூட்டி மேற் கொள்ளப்பட்ட மூவகைப் புணர்ச்சி இலக்கணங்களில், இயல்பு என்பதனை நீக்கி வல்லெழுத்து மிகுதல், உறழ்ந்து முடிதல் என்ற இரண்டு மட்டும் இங்கு உரியன என்பது அவர் கொண்ட பொருள்

"சொல்-சொல்லப்பட்ட மூன்றில், இயல்மருங்கின்-இயல்பு என்பதை நீக்கி" எனப் பிரித்து நச்சினார்க்கினியர் பொருள் கொண்டுள்ளார். முதலில் மூன்றைச் சுட்டி அடுத்த நூற்பாவில் இரண்டைச் சுட்டியமையால் எஞ்சிய ஒன்று நீக்கப்பட்டது என்னும் கருத்து இயல்பாகவே கிட்டும். எனினும் அவர் கொண்ட பாடத்தால் இக்கருத்தை விளக்க அவர் மிகவும் இடர்ப்பட்டுள்ளார்.

பொருள்கொள்வதில் அமையும் தெளிவுடைமையால் இளம் பூரணர் கொண்ட **'சொல்லியமருங்கு'** என்ற பாடமே பொருந்தும்.

44. சேயென் கிளவி-செயவென்கிளவி

உயிர் மயங்கியலில் வாழிய என்னும் சொல்லில் இறுதியிலுள்ள யகர ஒற்றும் அகரமும் கெட்டு 'வாழி கொற்ற' எனவரும் என்பதை.

> "வாழிய வென்னும் சேயென்கிளவி
> இறுதி யகரம் கெடுதலும் உரித்தே" (எ.212)

எனவரும் நூற்பா உணர்த்துகிறது. இதில் **வாழிய என்னும் சேயென்கிளவி'** என்றுபாடங்கொண்டு "வாழிய என்று சேய்மைக் காலத்தை உணர்த்தும் சொல்" எனப் பொருள் குறிப்பிட்டார் இளம்பூரணர். ஆனால் நச்சினார்க்கினியர் **வாழிய என்னும் செயவென் கிளவி** எனப் பாடங்கொண்டு "வாழிய என்ற செயவென் வாய்பாட்டுச் சொல்" எனப் பொருள் கொண்டார். இதில் நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் பொருந்தாது.

'வாழிய கொற்கு' என்பதில் 'வாழிய' என்னும் சொல்லை நச்சினார்க்கினியர் உரையில் செயவெனெச்சம் என்று குறிப்பிட்டிருப்பது பிழையாக அமைந்துள்ளது. ஏன் எனில் 'வாழிய' என்பது 'செய்யிய' என்னும் வாய்பாட்டுக் கிளவியே தவிர, செயவென்கிளவி அன்று. இதனை வேங்கடராஜுலு ரெட்டியார் "வாழிய கொற்கு" என்னும் உதாரணத்தில் வாழிய என்னும் சொல் செயவெனெச்சமாதலின்மையின், நச்சினார்க் கினியத்தில் பிழைபட்டிருத்தல் வேண்டும் எனத்தோன்றுகிறது" எனக் குறிப்பிடுவர்[1].

மகாலிங்கையார் பதிப்பிலும் நச்சினார்க்கினியர் பாடமாகச் 'சேயென்கிளவி' என்பதே உள்ளது. பிற்காலப் பதிப்புக்களில் இப்பாடம் 'செயவென்கிளவி' எனப் பிழையாக இடம் பெற்றுள்ளது. அதற்கு ஏற்றவகையில் நச்சினார்க்கினியரின் உரைத் தொடரும் நீட்டப்பட்டது. "வாழுங்காலம் நெடுங்காலமாகுக என்னும் பொருளைத் தரும் வாழிய வென்று சொல்லப்படும் செயவெனெச்சக் கிளவி" என்று நச்சினார்க்கினியர் உரைத்தொடர் அமைந்துள்ளது. மூலத்தில் இல்லாத நிலையில் உரையின் முற்பகுதி இடம் பெற்றது. இக்காரணத்தைக் குறிப்பிட்டு 'செயவென்கிளவி' என்ற பாடமிருப்பின் 'வாழுங்காலம் நெடுங்காலமாகுக என்னும் பொருளைத் தரும்' என உரையில் கூறுதற்கு இடமில்லை. ஆகலின் **'சேயென்கிளவி'** என்ற பாடமே பொருந்தும்" எனக் குறிப்பிடுவர் பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார்.[2]

---

[1] தொல்காப்பியம் - எழுத்ததிகார ஆராய்ச்சி, வேங்கடராஜுலு ரெட்டியார், ப. 185

[2] தொல்காப்பியம் - எழுத்ததிகரம் - குறிப்புரை-பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி, ப. 20

பதிப்பாசிரியர் கு. சுந்தரமூர்த்தியும் 'சேயென் கிளவி' என்ற இளம்பூரணர் பாடமே பொருந்தும் எனக் கூறும் கருத்தினரே. இதனை இருகாரணங்களால் நிறுவுவர்.

சென்ற நூற்பாவில் 'செயவெனெச்சத்தைப் பற்றிக் கூற வில்லையாதலின் இந்நூற்பாவில் எய்தியதன்மேல் சிறப்பு விதி வகுத்தது எனக் கருத்துரை கூறல் பொருந்தாது ஆதலினாலும், இது செயவெனச்சமேல், மேல் "சாவ என்னும் செயவென் எச்சத்தோடு (எ.209)" இதனையும் ஒருங்குவைத்தல் பொருந்து மாகலின், அவ்விடத்து வையாது ஈண்டுவைத்தல் பொருந்தாமை யாலும் சேயென் கிளவி-என்ற பாடமே சிறப்புடைத்தாதல் பெற்றும்' எனக் கூறுவர் கு. சுந்தரமூர்த்தி[1].

பதிப்பாசிரியர்களும் ஆய்வாளர்களும் 'சேயென் கிளவி' என்ற இளம்பூரணர் பாடமே பொருத்தமுடைத்தாகும் என நிறுவி யுள்ளனர். 'வாழிய' என்னும் சொல், கூறுவான் கருத்துக்கேற்பப் பிற பொருளும் பயக்கும் தன்மையது ஆதலால், சொல்லும் அதன் பொருளும் இணைந்த நிலையில் கூறப்படும் 'வாழிய வென்னும் சேயென் கிளவி' என்ற பாடமே பொருந்துவதாகும்.

15. மொழிந்தவற்றியற்றே

"உயிர் மயங்கியலில் ஒழிந்ததன் நிலையும், ஒழிந்த வற்றி யற்றே" (293) எனவரும் நூற்பா ஒழியிசை ஓகாரம் முடியும் இயல்பை விளக்குவது. இங்கு 'ஒழிந்த வற்றியற்றே' எனப்பாடங் கொண்டு "மேற்சொல்லியொழிந்த ஓகாரங்களின் இயல்பில் இயல் பாய் முடிந்து கொளலோ கொண்டான் எனவரும்" என்று கூறுவர் இளம்பூரணர்.

இதனை 'மொழிந்தவற்றியற்றே' என்ற பாடமாகக் கொண்டு "முற்கூறிய ஓகாரங்களின் இயல்பில் இயல்பாய் கொளலோ கொண் டான் என முடியும்" என்று நச்சினார்க்கினியர் உரைப்பர்.

இருவர் பாடமும் ஒரே கருத்தை விளக்குவனவே எனினும், நச்சினார்க்கினியர் பாடம் பொருள் கொள்ளத் தெளிவுடையதாக

[1] தொ. எ. இளம்-கு. சுந்தரமூர்த்தி (1969) ப. 145.

உள்ளமையால் **'மொழிந்த வற்றியற்றே'** என்ற பாடமே சிறப்புடையதாகும். இளம்பூரணர் பாடம் பொருளை வேறுபடுத்தும் மயக்கத்துடன் உள்ளது. "ஒழிந்ததன் நிலையு மொழிந்தவற்றி யற்றே' என உள்ள மூலத்தைப் பிழையாகப் பிரித்தமையால் இளம்பூரணர் பாடம் எழுந்திருக்கலாம் என்றும் கருத இடம் உண்டு. எனவே, நச்சினார்க்கினியர் பாடத்தை இங்குச் சிறப்புடையதாக ஏற்கலாம்.

16. உகரம் நிறையும்

குற்றியலுகரப் புணரியலில் அல்வழியிலும் வேற்றுமையிலும் ஆறு ஈற்றுக் குற்றியலுகரமும் மாத்திரையில் நிறைந்து ஒலிக்கும் என்ற கருத்தை விளக்கும் வகையில்

> "அல்லது கிளப்பினும் வேற்றுமைக் கண்ணும்
> எல்லா இறுதியும் உகரம் நிறையும்" (எ. 409)

எனவரும் நூற்பா அமைந்துள்ளது. இதில் **'உகரம் நிறையும்'** என்பது இளம்பூரணர் பாடம் **'உகரம் நிலையும்'** என்பது நச்சினார்க்கினியர் பாடம்.

இப்பாடத்தால் பொருள் வேறுபடுகிறது. உரையாசிரியர்கள் கருத்துக்களும் மாறுகின்றன.

அறுவகைக் குற்றுகரங்கள் தனிமொழியில் வருங்கால் குறுகி அரை மாத்திரையாயும், புணர்மொழியில் வருங்கால் குறுகாது ஒரு மாத்திரையாயும் நிற்கும் என்பது **'உகரம் நிறையும்'** எனப்பாடங் கொண்ட இளம்பூரணர் கருத்து.

அறுவகைக் குற்றுகரங்களும் தனிமொழியில் நிற்குங்கால் அரைமாத்திரை பெற்றுக்குறுகி ஒலிப்பது போலவே, புணர்மொழிக் கண் வரினும் அதே அரை மாத்திரை பெற்று நிற்கும் என்பது **'உகரம் நிலையும்'** எனப் பாடங்கொண்ட நச்சினார்க்கினியர் கருத்து.

இளம்பூரணர் பாடப்படி அமையும் கருத்துப் பொருந்தாது என்பதை நச்சினார்க்கினியர் விளக்கியுள்ளார்.

குற்றியலுகரத்தை அடிப்படையாகக் கொண்டே நேர்பசை, நிரைபசை கொள்ளலும், அவற்றால் அறுபது வஞ்சிச்சீர் அமைதலும் 19291 எனத்தொடை கொள்ளலும் அமைகின்றன. இங்கு முற்றிய

லுகரமாகக் கொண்ட இவற்றை ஆண்டுக் குற்றியலுகரமாகக் கொண்டால் 'மாறுகொளக்கூறல்' என்னும் குற்றம்தங்கும். இங்ஙனம் கூறி இளம்பூரணர் கருத்தை நச்சினார்க்கினியர் மறுப்பர்.

நச்சினார்க்கினியர் கூறும் மறுப்புப் பொருந்தாது என்பதை வேங்கடராஜுலு ரெட்டியாரும், கு. சுந்தரமூர்த்தியும் விளக்குகின்றனர்.

அ) "இருவகை உகரமோடு..." (பொ. 313) என்ற செய்யுளியல் நூற்பாவால் முற்றியலுகரத்தாலும் நேர்பசை, நிரைபசை கொள்ளலாம். அதனால் வஞ்சியுரிச்சீர் அறுபதும் கொள்ளலாம். எனவே நச்சினார்க்கினியர் மறுப்புப் பொருந்தாது.

ஆ) தொடை பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. இளம்பூரணர் 13699 என்பர்: யாப்பருங்கல விருத்தியும் இக்கருத்தினதே. பேராசிரியர் 13708 என்பர். நச்சினார்க்கினியர் 19291 என்று கூறுவர். எனவே நச்சினார்க்கினியர் கூறும் தொடை விகற்பம் பற்றிய கருத்தும் பொருந்தாது.

இங்ஙனம் வேங்கடராஜுலு ரெட்டியார் விரித்துக் கூறிய செய்தியை[1] கு. சுந்தரமூர்த்தி "இருவகை யுகர மோடு... என ஆசிரியர் முற்றுகரத்தையும் நேர்பசை, நிரைபசையுமாகக் கொண்டிருத்தலின் இவற்றான் சீர்கோடற்கோ, அன்றித் தொடை கோடற்கோ தடையில்லையாதலால் இம்மறுப்புப் பொருந்துவதன்றாம்" எனச் சுருங்க உரைப்பர்[2].

நச்சினார்க்கினியர் கருத்துப் பொருந்தாது என்பதை உரிய முறையில் தக்க காரணங்கள் காட்டி இவர்கள் மறுத்துள்ளனர்.

இக்கருத்தை நாமும் ஏற்று நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் பொருள் சிறப்பில்லாதது என்று உணரலாம்.

17. ஒருவினை-ஒருஉவினை

கிளவியாக்கத்தில் "வேறுவினை" என்னும் சொல்லையே இளம்பூரணர் உள்ளிட்ட அனைவரும் பாடமாகக் கொண்டுள்ளனர்.

---

[1] தொல்காப்பியம்-எழுத்ததிகார ஆராய்ச்சி-வேங்கடராஜுலு ரெட்டியார், ப. 164

[2] தொ. எ. நச்சி. கு. சுந்தரமூர்த்தி (1967) ப. 236

இளம்பூரணரின் உரையில் இனி 'ஒருவும் வினை' என்பது 'ஒரூஉ வினை' என்றாயிற்று என்றலும் ஒன்று. ஒரூஉதல்' என்பது 'நீங்குதல்' எனக் குறிப்பிடுவதன் மூலம் 'ஒருவினை' என்பதற்கு 'ஒரூஉவினை' என்ற பாட வேறுபாட்டைக் காட்டியுள்ளார்.

'ஒருவினை' என்பது 'ஒருவினைச்சொல்' என்ற பொருளில் நின்றது. 'ஒரூஉவினை' என்பது 'ஒரூஉதல்' என்ற தொழிற் பெயரைச் சார்ந்து பிறந்த வினைச் தொகையாய் உள்ளது.

கு. சுந்தரமூர்த்தி இளம்பூரணர் கூறும் இவ்வேறுபாட்டைச் சுட்டி எனவே வெவ்வேறு வினையுடைய பொதுச் சொல்லை அப் பொதுவினின்றும் நீக்கி ஒன்றற்கே உரியதாய சிறப்பு வினை கொடுத்து முடித்தல் வழுவாம் என அறியலாம். இப்பாடம் பிறர் உரையில் காணாதது. இதுவும் சிறந்த பாடமேயாம்'' எனப் பாராட்டுவர்[1].

இளம்பூரணர் காட்டும் இப்பாடம் வேறுபாடும், சிறப்பும் உடையதாயினும் பின்னர் வந்த உரையாசிரியர் எவரும் இதனைச் சுட்டவில்லை என்பதனால் 'ஒருவினை கிளவார்' என்பதே பொருட் சிறப்புடையது என இங்குக் கொள்ளத்தக்கதாம்.

18. மயங்கல் கூடா

கிளவியாக்கத்தில் ஒன்றொழி பொதுச் சொல்லை விளக்கி ம பு வழுக்காத்தலை நுதலும் நூற்பாவில் (சொ. 50) 'மயங்கல் கூடா வழக்கு வழிப்பட்டன'' என்னும் தொடர் உள்ளது. இதில் 'மயங்கல் கூடா' என்பதே உரையாசிரியர் அனைவரும் கொண்ட பாடம். டாக்டர் தெ. பொ.மீனாட்சிசுந்தரத்தின் கல்லாட உரைப் பதிப்பில் ''மயங்கல் சுட்டா' என்று பாடம் ஒன்று குறிப்பிடப் பட்டுள்ளது.

வேறுபட்டு அமைந்துள்ள இப்பாடம் மிகுதியும் பொருள் வேறுபாடு உடையதன்று. இரண்டும் ஏறத்தாழ ஒரே கருத்தையே சுட்டுகின்றன என்பதை நுனித்து நோக்கின் அறியலாம். எனவே, இங்குப் பழமைச் சிறப்பும், அனைத்து உரையாசிரியர்களாலும் ஏற்கப்பட்ட சிறப்பும் நோக்கி 'மயங்கல் கூடா' என்பதையே பொருந்திய பாடமாக உரைக்கலாம்.

---

[1] தொ. சொ. இளம்-கு. சுந்தரமூர்த்தி-கழகம் (1963) ப. 266

19. இயல்பின்றே

"நின்றாங்கு இசைத்தல் இவண் இயல்பின்றே" (சொ. 59) எனவரும் பிறிதொரு கிளவியாக்க நூற்பாத்தொடரில் **'இயல்பின்றே'** என்பது அனைத்து உரையாசிரியர்களாலும் கொள்ளப்பட்ட பாடம். டாக்டர் தெ. பொ. மீனாட்சி சுந்தரத்தின் கல்லாட உரைப்பதிப்பில் **'இயல்பின்மேல'** எனப் பொருள் நிலையில் முரண்பட்ட பாடம் ஒன்றுள்ளது.

காலம், உலகம் முதலாய சொற்கள் நின்றாங்கு நின்று உயர்திணைச் சொற்களாய் வாரா என்பது நூற்பாவால் உணர்த்தப்படும் கருத்து. 'இயல்பின் மேல' என்று பாடங்கொண்டால் 'நின்றாங்கு நின்று உயர்திணைச் சொற்களாய் வரும் இயல்பின' எனப் பொருள்படும்.

நின்றாங்கு நின்று உயர்திணைச் சொற்களாய் வாரா என்பதை இந்நூற் பாவாலும், ஈறு திரிந்து வாய்பாடு வேறுபாட்டால் அவை உயர்திணைச் சொற்களாய் வரும் என்பதை "இசைத்தலும் உரிய வேறிடத்தான" என வரும் அடுத்த நூற்பாவாலும் ஆசிரியர் தொல்காப்பியர் தெளிவுறக் கூறியுள்ளமையால் **'இயல்பின்மேல'** எனப் பொருள் நிலையில் முரண்பட்டு வரும் இப்பாடம் இங்குப் பொருந்தாது என்பது தெளிவாம்.

20. ஒப்பின் - ஒப்பின்

வேற்றுமை இயலில் இரண்டாம் வேற்றுமைக்குரிய பொருள்களை விரித்துரைக்கும் நூற்பாவில்

"காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின் என்று" (சொ. 72)

எனவரும் பகுதி இளம்பூரணர் கொண்ட பாடப்படி உள்ளது. இளம்பூரணரைப் போலவே நச்சினார்க்கினியரும் பாடம் கொண்டுள்ளார். பிற உரையாசிரியர்கள்,

"காப்பின் ஒப்பின் ஊர்தியின் இழையின்
ஒப்பின் புகழின் பழியின் என்று"

எனப்பாடம் கொண்டுள்ளார்.

இங்கு ஒப்புதல், ஒப்புமை எனவரும் இருபொருள் பயின்ற சொற்களும் இடம் மாறி நிற்கின்றன. இடம் மாறி அமைந்தாலும் இருவகைப் பொருளும் முன்பின்னாக இடம் பெற்று விடுதலால், பொருள் கொள்ளும் வரிசையில் மட்டும் மாற்றம் நிகழ்ந்துள்ளது. எனினும் தனித்த நிலையில் நோக்குங்கால் **'ஒப்புதல்'** என்ற பொருள் பயக்கும் சொல்லுக்கு **'ஒப்புமை'** என்ற பொருள் பயக்கும் சொல்லும், **ஒப்புதல்'** என்ற பொருள் பயக்கும் சொல்லும் பாடவேறுபடுகளாக அமையும்.

யாப்பமைப்பு நோக்கில் முதலடி 'காப்பின்' என நெடிலாய்த் தொடங்குதற்கு ஏற்ப இரண்டாம் அடியும் 'ஒப்பின்' என நெடிலாய்த் தொடங்கின் சந்த ஓசை பொருத்தமாக இருக்கும். எனவே இளம்பூரணர், நச்சினார்க்கினியர் கொண்ட முறையில் கொள்ளாது, பிற உரையாசிரியர் கொண்டதைப்போல காப்பின் **ஒப்பின்** என்றும் **ஒப்பின் புகழின்-என்றும்** இந்த இரு அடிகளையும் அமைத்துக் கொள்ளலே சிறப்பாகும்.

21. தொகை வருகாலை

ஓம்படைப் பொருளில் இரண்டு மூன்றும் வேற்றுமைப் பொருள்கள் மயங்கி வருவதை உணர்த்தும் வேற்றுமை மயங்கியல் நூற்பா ''தாம் பிரிவிலவே தொகை வருகாலை'' (சொ. 93) என முடிகின்றது. இங்குத் **'தொகை வருகாலை'** என்பதே நச்சினார்க்கி னியர், கல்லாடர் தவிரப் பிறர் கொண்ட பாடம். நச்சினார்க் கினியரும் கல்லாடரும் **'தொக வருகாலை'** எனப் பாடம் கொள்ளு கின்றனர். **வேற்றுமைத்** தொகை வருமிடத்து என்பது இளம் பூரணரும் பிறரும் கொண்ட பாடத்துக்குப் பொருள். 'வேற்றுமை உருபுகள் தொகுத்து வருமிடத்து' என்பது நச்சினார்க்கினியர், கல்லாடர் ஆகியோர் கொண்ட பாடத்துக்குப் பொருள்.

இரண்டும் ஏறத்தாழப் பொருள் முடிபில் ஒரே கருத்துடையன **எனினும்,** பொருள் கொள்ளும் நெறியில் இங்கு வேறுபாடு **உள்ளது.**

''எல்லாத் தொகையும் ஒரு சொல் நடைய'' **(சொ. 414)** என்ற தொல்காப்பிய நூற்பாக்கருத்துப்படி **தொகைச் சொற்கள்** ஒரு சொல் நடையாய்த் தொகுத்துவரும் **என்ற கருத்தும் [illegible]** வே பெறப்படும். எனவே வேற்றுமை உருபுகள் தொகுத்து வருதலே

இங்கு வலியுறுத்தப்பட வேண்டிய கருத்தாகக் கொள்ளலாம், அங்ஙனம் கொள்ளவே அப்பொருளைத்தரும் வகையில் அமைந்த நச்சினார்க்கினியர் கல்லாடர் ஆகியோரின் 'தொகவருகாலை' என்ற பாடம் இங்குப் பொருத்தமாக அமையும்.

22. அ எனப் பிறத்தல்

கு, ஐ, ஆன் ஆகிய உருபுகள் செய்யுளில் அகர ஈருக நிற்கும் எனக்கூறி, (சொ. 104) அவற்றுள் கு, ஐ, ஆகியன அஃறிணைக் கண் அகர ஈருகாது என்ற கருத்தை விளக்கும் வேற்றுமை மயங் கியல் நூற்பா "அவற்றுள் அ எனப்பிறத்தல்..." (சொ. 105) எனத் தொடங்குகிறது. "அவற்றுள்" என்பது சொற்சீரடி. சொற் சீரடி இல்லாமலும் இங்குச்சில உரையாசிரியர்கள் பாடம் கொண்டு ள்ளனர்.

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரத்தின் கல்லாடப்பதிப்பின் அடிக்குறிப்பில் இதற்கு அவற்றுள் ஆயெனப் பிறத்தல்' என்ற பாடம் அமைந்துள்ளது.

கடி நிலையின்றே 'ஆசிரியர்க்கு' என்பது ஆசிரியர்க்க எனவும், கானலோனைக் களிறஞ்சும்மே' என்பது' காலலோனக் களிறஞ்சும் எனவும், அகர ஈருகத்திரிந்து வருதலே இலக்கிய வழக்காம். ஆகார ஈருகத்திரிந்து வருதலுக்குச் சான்றெதுவும் இல்லை. எனவே 'அ எனப்பிறத்தல்' என்ற பாடமே இங்கு ஏற்கத்தக்கது. ஒலி ஒப்புமையால் பிற்காலத்தில் இப்பிழைப்பாடம் தோன்றியிருக்கலாம்

23. மானம் இலவே

வேற்றுமை மயங்கியலில் நான்காம் வேற்றுமை உருபல்லாத பிற, ஒன்றன் பொருண்மைக்கண் பிறிதொன்று மயங்கும் நிலை உணர்த்தப்படுகிறது. இதனை,

> "ஏனையுருபும் அன்ன மரபின
> மானம் இலவே சொல் முறையான" (சொ. 107)

எனவரும் நூற்பா கூறும். இங்கு ,மானம் இலவே' என்ற பாடத்தை அனைத்து உரையாசிரியர்களும் ஏற்றனர். அனைவரும் 'குற்றம்' என்றே 'மானம்' என்ற சொல்லுக்குப் பொருள் கூறியுள்ளனர்.

பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரி, தன் சொல்லதிகாரக் குறிப்புரையில் 'மானமிலவே' என்பதற்கு 'ஆனமிலவே' என்ற பாடங் கூறி, இதுவே பொருத்தம் என்றும் உரைத்துள்ளார்.[1]

பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் வடமொழிச்சார்பு நிலையில் பாடமொன்றைச்சுட்டி, தன் கருத்தை வழங்கியுள்ளார். தமிழ் நூலுக்கு உரை வழங்குங்கால் பிறமொழி மரபைக் களமாகக் கொண்டு பொருளுரைத்தல் பொருந்தாது எனவே உரையாசிரியர்கள் கொண்டவாறு, 'மானமிலவே' என்ற பாடமே தமிழ் மரபு நிலையில் பொருந்துவதாகும் எனக் கொள்ளலாம்.

24. வழுக்கின்று வழக்கின்று

ரகர ஈற்று வினையாலணையும் பெயர், விளி ஏற்பதைக் கூறும் விளிமரபு நூற்பா (சொ. 134)வில் 'ஏகாரம் வருதலும் வழுக்கின்றென்மனார்' என்ற தொடர் உள்ளது. 'உண்டார்' என்பது 'ஆரும் அருவும் ஈரொடு சிவணும்' (சொ. 135) என்ற விதிப்படி 'உண்டீர்' என்றாகி, 'ஏகாரம் வருதலும் வழுக்கின்று' என்றமையால் உண்டீர் + ஏ = உண்டீரே எனவரும்.

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரத்தின் கல்லாடப் பதிப்பில் 'வழுக்கின்று' என்பதற்கு 'வழக்கின்று' என்ற பாடம் உள்ளது.[2] ஏகாரம் வந்தால் குற்றமில்லை என்பதற்கு 'ஏகாரம் வருதல் வழக்கில்லை' என்று பொருள் நிலையில் இது முரணான பாடமாக உள்ளது. 'வழக்கின்று எனவரும் இப்பாடம் ஏற்கத்தக்கதன்று. வழக்கில்லாத ஒனறுக்குத் தொல்காப்பியர் நூற்பா செய்தார் எனக் கொள்ளல், பொருந்துவதாக அமையாது.

''ஏகாரம் வருதலும் வழுக்கின்று-என்றதனால் ஏகாரம் பெறுது. ஈரொடு சிவணலே பெரும்பான்மை என்பதாம்'' எனச் சேனாவரையர் இங்கு விளக்கம் வரைந்துள்ளார். சேனாவரையர் இங்ஙனம் குறிப்பிட்டமையால் பிற்காலத்தில் 'வழக்கின்று' என்ற பாடம் தோன்றியிருக்கலாம் என்று கருத முடிகின்றது.

---

1. தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-குறிப்புரை, பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி (1930) ப. 114.
2. தொ. சொ. கல் - டாக்டர். தெ. பொ. மீனாட்சிசுந்தரம் பதிப்பு - ப. 198.

25. ஆளெனிறுதி-ஆனெனிறுதி

வினையாலணையும் பெயர், பண்புப்பெயர் ஆகியவற்றில் 'ஆள்' என்ற இறுதி 'ஆய்' என மாறி விளியேற்கும் என்பதைக் கூறும் நூற்பாவில் (143) 'ஆளெனிறுதி ஆயாகும்மே விளிவயினான' என்ற தொடர் அமைந்துள்ளது. இதன்படி உண்டாள் என்பது உண்டாய் என்றும், கரியாள் என்பது கரியாய் என்றும் வரும்.

டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரத்தின் கல்லாட உரைப் பதிப்பில் **'ஆளெனிறுதி'** என்பதற்கு **'ஆனெனிறுதி'** என்ற பாடம் அமைந்துள்ளது.[1]

தொல்காப்பியர் லகார ளகார ஈற்றுப்பெயர்களுக்கே இங்குத் தொடர்ந்து ஆறு நுற்பாக்களில் (சொ. 141-146) விதி கூறுகின்றா ரேயன்றி ளகர ஈற்றுப் பெயருக்கு விதிகூறவில்லை.

மேலும் ளகர ஈறு விதியேற்பது குறித்து முன்னரே ஏழு நூற்பாக்களில் (சொ. 127-133) தொல்காப்பியர் கூறியுள்ளார். எனவே அன்னீறு விளியேற்பது பற்றி மீண்டும் அவர் கூறியிருத்தல் இயலாது.

ஆனிறுதி வினையாலணையும்பெயர், பண்புப்பெயர் ஆகிய வற்றில் விளி ஏற்கும் முறைகள் முன்னரே இருநூற்பாக்களில் (சொ. 130, 131) கூறப்பட்டுள்ளது. எனவே இப்பாடம் பொருந்தாது என்பது அங்கை நெல்லி,

26. பன்மைக்கல்லது ஆக்கமில்லை

எல்லாம் என்பது உயர்திணையில் பெரும்பான்மையும் தன்மைப்பன்மையில் வரும் என்பதை,

> "தன்னு ளுறுத்த **பன்மைக் கல்லது**
> உயர்திணை மருங்கின் **ஆக்கமில்லை**" (சொ. 184)

எனவரும் பெயரியல் நூற்பா உணர்த்துகின்றது. இந்நூற்பாவில் உரையாசிரியர்களிடையே எந்தப்பாடவேறுபாடும் இல்லை.

---

[1] 6 தொ.சொ.கல்-டாக்டர்.தெ.பொ. மீனாட்சி சுந்தரம் பதிப்பு-ப.198

எனினும் கருத்துரைப்பதில் உரையாசிரியர்களுக்கிடையே வேறுபாடு உள்ளது என்பதைச் சேனாவரையர் உரையால் அறிகிறோம். எல்லாம் என்னும் இருதிணைக்கும் உரிய பெயர்ச்சொல் உயர்திணைக்கு வருங்கால் தன்மைப் பன்மைக்கு வருமேயன்றி ஏனை முன்னிலைப் பன்மைக்கும், படர்க்கைப் பன்மைக்கும் வராது என்பது சேனாவரையர் கூறும் கருத்து. எல்லாம் என்னும் சொல் தன்மைப் பன்மைக்கு வருங்கால் உயர்த்திணைக்கண் வருமேயன்றி அஃறிணையில் வாராது என்பது இளம்பூரணர் கருத்து. இளம்பூரணர் இங்ஙனம் கருத்துரைப்பதற்குக் காரணம் எல்லாம் என்னும் சொல் உயர்திணையில் தன்மைப் பன்மைக்கேயன்றி ஏனைய படர்க்கையிலும் வருவதை நோக்கியேயாம். சேனாவரையர் இளம்பூரணர் கருத்தை மறுப்பர்.

பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் சேனாவரையரின் மறுப்பை[1] அடிப்படையாகக் கொண்டு "சேனாவரையர் மறுப்பை நோக்கின்

தன்னு ளுறுத்த பன்மைக் காங்கால்
உயர்திணை மருங்கி னல்ல தாகாது

என்றே இளம்பூரணத்தில் இருத்தல் வேண்டுமெனத் தோன்றுகிறது' என்று குறிப்புவரைந்துள்ளார்[2]. உண்மையில் இந்நூற்பாவுக்கு இளம்பூரணரின் உரைப்பகுதி இல்லாமையால் இளம்பூரணர் கொண்ட பாடம் எதுவாக இருத்தல் வேண்டும் என அறிய இயலவில்லை. சேனாவரையர் குறிப்பை வைத்துக் கொண்டு இளம்பூரணர் பாடம் இப்படி இருத்தல் வேண்டும் என்று கூறப்படுகிறது. இப்பாடத்தை வலியுறுத்தப் போதுமான சான்று இல்லை. ஏடுகளில் இத்தகைய பாடம் இருந்தமைக்குச் சான்றில்லை. மேலும் சேனாவரையர் பாடமும், கருத்தும் பொருத்தமாக உள்ளன.

---

[1]"எல்லாப் பார்ப்பாரும், எல்லாச்சான்றோரும் எனப்படர்க்கைக் கண் வருதலும் கோடற்குத் தன்னுளுறுத்த பன்மைக்காங்கால் உயர்திணை மருங்கிணல்லதாகதென மொழிமாற்றி உரைத்தாரால் உரையாசிரியர் எனின்...' என்பது சேனாவரையர் மறுப்புப்பகுதி. தொ. சொ. சேனா. நூ. 187.

[2]தொ. சொ. குறிப்புரை, பி. சா. சுப்பிரமணிய சாஸ்திரி (1930) ப. 133.

நச்சினார்க்கினியர் தெய்வச்சிலையார் ஆகியோர் சேனாவரையரைப் பின்பற்றியே கருத்துக் கூறுகின்றனர். எனவே இளம்பூரணர் பாடங்களாகக் கருதப்படும் **'பன்மைக் காங்கால்'** **'அல்லதாகாது'** என்பன பொருந்தாதவை எனத் துணியலாம்.

27. எல்லே இலக்கம்

'எல்' என்னும் இடைச்சொல்லின் பொருளை விளக்கும் இடையியல் நூற்பா **'எல்லே விளக்கம்'** (சொ. 264) என இளம்பூரணத்திலும், **''எல்லே இலக்கம்''** எனச் சேனாவரையம், தெய்வச்சிலையம், நச்சினார்க்கினியத்திலும் அமைந்துள்ளது.

'எல்வளை' என வருவதால்[1] **'எல்'** என்ற சொல் **'விளக்கம்'** என்ற பொருளில் பயின்றதாக இளம்பூரணரும் **'இலங்குதல்'** என்ற பொருளில் பயின்றதாகச் சேனாவரையரும் பிறரும் உதாரணம் காட்டுவர்.

மேலும் **'எல்'** என்பது இடைச்சொல்லா, உரிச்சொல்லா என்ற வினாவுக்கும் சேனாவரையர் தெய்வச்சிலையார் இருவரும் தம் உரை விளக்கத்தில் கருத்து வரைந்துள்ளனர்.

எல் லென்பது உரிச்சொல்நீர்மைத்தாயினும் ஆசிரியர் இடைச்சொல்லாக ஓதினமையான் இடைச்சொல்லென்று கோடும் எனச் சேனாவரையரும், இது உரிச்சொல்லன்றோ எனின், அது குறைச்சொல்லாகி நிற்கும்; இது குறையின்றி நிற்றலின் இடைச் சொல்லாயிற்று என்று தெய்வச்சிலையாரும் உரைத்துள்ளனர்.

தாமோதரம்பிள்ளை பதிப்பில் **'எல்லே இரக்கம்'** என்று ஒரு வேறுபாடு குறிப்பிடப்பட்டுள்ளது. இதுவே உரையாசிரியர்கள் கொண்ட பிற இரு பாடங்களைவிடப் பொருள் பொதிந்த பாடம் என்பது ஆராய்ச்சியாளர் துணிபு[2].

1. எல் என்னும் லகர ஈற்றுச்சொல் உரிச்சொல்லே. இதைத்தொல்காப்பியர் இடையியலில் கூறினார் என்பதும், உரிச்

---

[1] புறம். 24

[2] தொல்காப்பியச் சிந்தனைகள் - தொல்காப்பியத்தின் சில நூற்பாக்களின் பொருள்விளக்கம் - க. வெள்ளைவாரணம், ப. 273

சொல்லாகிய இதனை இடைச்சொல்லென்றே கொள்க என்பதும் பொருத்தமில்லாதவை.

2. எல்லே என்னும் ஏகார ஈற்று இடைச்சொல்லுக்கே இங்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

3. இருப்பை என்னும் சொல் இலுப்பை என்றுகும். ரகரம் லகரமாக ஒலிக்கும் ஒலிப்பிறழ்ச்சி இங்கு உள்ளது. இதுபோலவே இரக்கம் என்னும் பாடம் இங்கு இலக்கம் என மாறியிருத்தல் வேண்டும்.

4. இச்சொல் பயின்று வரும் இலக்கியப்பயிற்சி இடங்கள் இப்பாடத்துக்கும் கருத்துக்கும் அரண் செய்கின்றன.

மேலே கூறிய கருத்துக்களால் '**எல்லே இரக்கம்**' எனவரும் பாடமே பொருள் சிறப்புடையது எனத் துணியலாம், உரையாசிரியர்கள் கொண்ட பாடங்கள் இம்முறையில் திருத்தம்பெறத்தக்கன என்று கொள்ளலாம்.

இக்காரணங்களை ஆராய்ந்து கூறியவர் இலக்கணப் பெரும் புலவர் அரசன் சண்முகனுர் என்றும், இவ்விளக்கத்தைத் தனக்கு அறிவுறுத்தியவர் ரா. கந்தசாமியார் என்றும் க. வெள்ளைவாரணம் குறிப்பிட்டுள்ளார்.

28. அதிர்வு-அதிழ்வு

அதிர்வு, விதிர்ப்பு, என்ற உரிச்சொற்கள் 'நடுக்கம்' என்னும் பொருளைத் தருவன. இதனை "அதிர்வும் விதிர்ப்பும் நடுக்கம் செய்யும்' (சொ. 310) எனவரும் உரியியல் நூற்பா உணர்த்தும். அனைத்து உரையாசிரியர்களும் இம்முறையிலேயே பாடங்கொண்டுள்ளனர். இச்சொல் பயின்ற இலக்கியப்பயிற்சி இடங்களும் இப்பொருளை விளக்கும்.

சேனுவரையர் உரையில் "அதிழ்வென்று பாடமோதி அதிழ் கண்முரசம் என்று உதாரணங்காட்டுவோருமுளர்" என்ற விளக்கம் அமைந்துள்ளது. இதனல் '**அதிர்வு**' என்பதற்கு '**அதிழ்வு**' என்ற பாடவேறுபாடு பெறப்படும்.

சேனாவரையர் அதிழ் கண்முரசம் என உதாரணம் காட்டுவர் எனக்குறிப்பிட்டுள்ளார். ஆனால் இளம்பூரணர் அதிர்வு என்பதற்கு அதிர்கண் முரசம் என்பதையே உதாரணமாகக் காட்டியுள்ளார். இவ்வுதாரணத்தையே அதிழ்கண் முரசம் எனக் காட்டுவதை நோக்க, இலக்கியத் தொடரில் ஏற்பட்ட பாடவேறுபாடு காரண மாக இலக்கண நூலுள்ளும் இவ்வேறுபாடு இடம் பெற்றது எனலாம். மிகுதியும் பொருள் வேறுபாடு இன்மையாலும், சேனாவரையர் உள்ளிட்ட அனைத்து உரையாசிரியர்களும் இதனைப்பாடமாக ஏற்காமை யாலும் **அதிர்வு** என்ற பாடமே ஏற்கத்தக்கது.

29. சிறப்பும் இடும்பையும்

விழுமம் என்ற சொல் சீர்மை, இடும்பை என்ற பொருள் களைத் தரும் ஓர் உரிச்சொல். இக்கருத்தை ''விழுமம் சீர்மையும், இடும்பையும் செய்யும்'' (சொ. 34) எனவரும் உரியியல் நூற்பா உணர்த்தும். இது இளம்பூரணர் கொண்ட பாடம். சேனாவரை யரும் நச்சினார்க்கினியரும் ''விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும் பையும்'' என நூற்பாவைக்கூறி இளம்பூரணர் கூறியதற்கு மேலும் ஒரு பொருளையும் சேர்த்துச்சுட்டினர். தெய்வச்சிலையார் ''விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் செய்யும்'' எனக்கூறி நூற்பாவின் அமைப்பில் இருசாராரையும் தழுவியுள்ளார்.

இந்நூற்பாவின் அமைப்புக்களால் விழுமம் என்ற சொல் சீர்மை, சிறப்பு இடும்பை என்ற மூன்று பொருள்களைத்தரும் உரிச் சொல்லாகும் என்பது சேனாவரையர், தெய்வச்சிலையார் நச்சினார்க் கினியர் ஆகியோர் கருத்தென்பது அறியப்படும்.

''வேலிடுதானை விழுமியோர்''[1] என்றும், ''ஆடுகுடி மூத்த விழுத்தினை சிறந்த என்றும்[2] ''வேந்து விழுமுறலே''[3] என்றும் வரும் இலக்கியப்பயிற்சிகளால் சேனாவரையார் கருத்துண்மை பெறப் படும். எனவே பொருள் நிலையில் 'விழுமம்' என்ற சொல் மேலே காட்டியாங்கு மூன்று பொருள்களை உணர்த்துவது என்று கொள்ள லாம்.

---

[1]புறம் 41:2
[2]புறம் 24:28
[3]புறம் 316:12

தெய்வச்சிலையார் கொள்ளும் நூற்பா அமைப்பு ஐஞ்சீரினதாக நீண்டு, தொல்காப்பிய நூற்பா அமைப்புக்கு மாறுபட்டுள்ளது. சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் கொள்ளும் அமைப்பு தொல்காப்பிய நூலமைப்பை அடியொற்றியதாக உள்ளது.

''விழுமஞ் சீர்மையும் சிறப்பும் இடும்பையும்'' என்றே நூற்பா அமைந்ததாகக் கொள்ளல் ஏற்புடையதாகும். இம்முறையில் கொள்ள **'இடும்பையும் செய்யும்'** என இளம்பூரணரும் **'சிறப்பும் இடும்மையும் செய்யும்'** எனத் தெய்வச்சிலையாரும் கொண்ட பாடங்களை விடச் **சிறப்பும் இடும்பையும்** எனச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் கொண்ட பாடம் சிறப்புடையது என உணரலாம்.

30. மொழிபுணர் இயல்பு

பொருள்கோள் வகையை உணர்த்தும் எச்சவியல் நூற்பாவில ''அவை நான் கென்ப மொழிபுணர் இயல்பே'' (சொ. 398) என்ற தொடர் உள்ளது. 'மொழிபுணர் இயல்பே' என்பதற்குத் தெய்வச்சிலையார் மட்டும் 'பொருள்புணர் இயல்பே' எனப் பாடங் கொள்கின்றார்.

செய்யுளில் பொருள் கொள்வதற்காக மொழிகள் ஒன்றோடொன்று புணரும் இயல்பே நிரல் நிறை, சுண்ணம், அடிமறி, மொழிமாற்று எனப்பாகு படுத்தப்பெற்றுள்ளது. **''நான்கு வகையான் மொழிகள் தம்முள் புணரும் செய்யுளகத்து''** என்று இளம்பூரணர் விளக்கம் வரைந்துள்ளது இதனை உணர்த்தும்.

நிரனிறைப் பொருள்கோள் நூற்பாவில் (சொ. 399) **'சொல் வேறு நிலைஇ'** என்றும், சுண்ணப் பொருள்கோள் நூற்பாவில் (சொ. 400) **'ஒட்டுவழி அறிந்து துணித்தனர்'** என்றும் அடிமறிப் பொருள்கோள் நூற்பாவில் (சொ. 401) **'அடிநிலை திரிந்து'** என்றும், மொழி மாற்றுப் பொருள் கோள் நூற்பாவில் (சொ. 403) **'மொழி மாற்றியற்கை'** என்றும் வரும் தொடர்கள் மொழிகள் ஒன்றோடொன்று புணரும் இயல்புடைமையைப் பேசுவனவே.

இளம்பூரணர், சேனாவரையர், நச்சினார்க்கினியர் **ஆகியோர்** கொண்ட **'மொழிபுணர் இயல்பே'** என்ற பாடமே இங்குப் பொருந்தும் பாடமாகும்.

'பொருள்கோள்' என்னும் அமைப்புக்கேற்பப் **'பொருண் புணர் இயல்பு'** என்ற பாடம் தோன்றியிருக்கலாம் எனக் கருத முடிகிறது.

31. கொண்டீர் - இசைக்கும்

எச்சவியலில் அசைநிலைஅடுக்கைக்கூறும் நூற்பா (சொ.419) அமைந்துள்ளது. இதில் 'கொண்டீர்' என்றும் 'இசைக்கும் என்றும் உள்ளவை இளம்பூரணர் கொண்ட பாடங்கள். **'கொண்டீர்'** என் தற்குக்**'கேட்டீர்'** என நச்சினார்க்கினியரும் தெய்வச்சிலையாரும் பாடம் கொள்வர். **'இசைக்கும்'** என்பதற்கு **'அசைக்கும்'** எனச் சேனாவரையர் நச்சினார்க்கினியர் ஆகியோர் பாடங்கொள்வர்.

'கொண்டீர்,' 'கேட்டீர்' என்பன வேறு சொற்கள். வினை வொடு பொருந்திய வழி இவை அசைநிலையாய் அடுக்கி வரும். எனவே இரு சொற்களும் அசைநிலையாய் அடுக்கி வருதற்கு உரியனவே. எனினும் இளம்பூரணர் சேனாவரையர் கொண்ட **'கொண்டீர்'** என்பது பழமைச்சிறப்புடையதாக உள்ளமையால் இதுவே பொருந்திய பாடமாக அமையும் சிறப்புப் பெற்றுள்ளது.

'இசைக்கும்' என்று இளம்பூரணரும், தெய்வச்சிலையாரும் கொண்ட பாடத்தைவிட **'அசைக்கும்'** என்று சேனாவரையரும், நச்சினார்க்கினியரும் கொண்ட பாடம் இவ்விடத்துக்குப் பொருத்தமாக உள்ளது.

'அசைநிலை அடுக்காகி வரும் என்ற பொருளை **'அசைக்கும்'** என்ற சொல்லே இனிது விளக்குகிறது.

எனவே, **'கொண்டீர்'** **'அசைக்கும்'** எனவரும் இருபாடங்கள் இங்குக் கொள்ளத்தக்கன.

32. சினைநிலைக் கிளவி

ஒரு சில சொற்களின் வழுவமைதியைக் கூறும் எச்சவியல் நூற்பாவில் (சொ. 4:3) **'சினைநிலைக் கிளவி ஆஅகுநவும்'** என்ற தொடர் இளம்பூரணர் பாடமாக உள்ளது. இதற்குத் **'திசைநிலைக் கிளவியின் ஆஅகுநவும்'** என்பதைப் பிற உரையாசிரியர்கள் பாடமாகக் கொண்டனர்.

இளம்பூரணர் தான் கொண்ட 'சினைநிலைக்கிளவி' என்பதற்கு 'வெண்கொற்றப் படைத்தலைவன், வென்வேறக் காவிதி' என்பனவற்றை உதாரணமாகக் காட்டுவர்.

'திசைநிலைக் கிளவி' என்பதற்குத் 'திசைச் சொல்லிடத்து வாய்பாடு திரிந்து வருவன' என விளக்கம் கூறி அவை **'புலியான்,' 'பூசையான்'** என்னும் தொடக்கத்தக்கன என உதாரணமும் காட்டுவர் சேனாவரையர்.

நச்சினார்க்கினியர், இளம்பூரணர் சினைநிலைக் கிளவிக்குக் கூறும் உதாரணங்களைச் சிறப்பினாகிய பெயர்நிலைக் கிளவி என்பதில் அடக்கி மொழிந்துள்ளார்[1]. நச்சினார்க்கினியர் கருத்துப்படி இளம்பூரணர் கூறும் சினைநிலைக்கிளவி பெயர்நிலைக் கிளவியின் ஒரு வகையே என்பது அறியப்படும். எனவே **'திசைநிலைக் கிளவி'** என்னும் பாடம் வேறுபட்ட பொருளைச் சுட்டுவதாய் அமைந்துள்ளமையால் சிறந்த பாடமாகக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.

33. மாயோன்-மாயோள்

"மாயோன் மேய" எனத் தொடங்கும் பொருளதிகார அகத்திணையியல் நூற்பாவில் (பொ. 5) **'மாயோன்'** என்பதே இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் கொள்ளும் பாடம். இதற்கு கா. சுப்பிரமணியபிள்ளை இங்கு **'மாயோள்'** என்பதே சிறந்த பாடம் என்பர் "காட்டிற்குத் தெய்வம் மாயோன் என்று பிற்காலத்தார் கருதினும், மாயோளாகிய கருநிறமுடைய அம்மையையே சிறப்பாகக் கொள்ள வேண்டும். **'மாயோன் மேய காடுறை உலகமும்'** என்ற பாடமே சிறந்தது" என அவர் குறிப்பிட்டுள்ளார்[2].

மேலும் நாட்டுப் புறங்களிலும், காடுகளிலும் பெருவழக்காக வழிபடப்படும் தெய்வம் சக்தியின் வேதவடிவமாகிய காளியே என்றும், பிற்காலத்தே மரபொற்றுமைபற்றிக் கோவலர் மாயோன் வழிபாட்டைக் கைக்கொண்டனர் என்றும், மாயோளும் மாயோனும் உடன்பிறந்தார் என்னும் கொள்கையும் கருதத்தக்கது என்றும் அவர் கூறுவர்.

---

[1] வெண்கொற்றப் படைத்தலைவனும் சிறப்பினாகிய பெயர்க்கண் அடங்கும் தொ. சொ. நச்சி. நூ. 449. விளக்கம்.

[2] பழந்தமிழர் நாகரிகம் அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து - கா. சுப்பிரமணிய பிள்ளை ப. 21

தொல்காப்பியத்தில் நிரைநவர்தலாகிய வெட்சித் திணையில் தான் கொற்றவை நிலையும் ஒருசிறப்புத் துறையாகக் கூறப் பட்டுள்ளது[1]. சிலப்பதிகாரத்தில் முல்லைநிலப் பாடலாகிய ஆய்ச்சியர் குரவைப்பகுதியில் மாயோனையும் பாலைநிலப் பாடலாகிய வேட்டுவ வரியில் கொற்றவையையும் போற்றியிருப்பதும் அறியத்தக்கது. எனவே முல்லை நிலத்துக்குத் தெய்வமாகக் கொற்றவையைக் குறிப்பிடும் வழக்குப் பொருந்தாது. இதனால் 'மாயோள்' என்ற பாடமும் பொருந்தாமை அறியலாம்.

34, வைகறை விடியல்

மருதத்திணைக்கு வைகறைவிடியல் என்ற இரு சிறு பொழுதுகள் உரிய. இதனை '**வைகறை விடியல் மருதம்**' (பொ. 9) எனவரும் அகத்திணையியல் நூற்பா உணர்த்தும். '**வைகறை விடியல்**' என இளம்பூரணரும் '**வைகுறு விடியல்**' என நச்சினார்க் கினியரும் பாடங்கொள்வர். எனினும் இருவருக்கும் கருத்து ஒன்றே. '**வைகுறு விடியல்**' என்பதற்கு வைகறையும் விடியற்காலமும் என்றே நச்சினார்க்கினியர் பொருளுரைத்திருப்பது அறியத்தக்கது.

நாவலர் சோமசுந்தர பாரதியார், தம்புத்துரையில், '**வைகுறிள வேனில் மருதம்**' என்ற பாடத்தைச் சுட்டுவர். 'வைகுறிளவேனில் மருதம்'-என்னும் பாடம் மருதத்திணைக்குப் பொழுதும் பருவமும் வழுவாதுரைக்கும் சிறப்புடைத்து என்றும் பாரதியார் பாராட்டுவார். பெரும் பொழுதையும் சுட்டலால் இப்பாடம் சிறப்பு உடையது எனக் கொண்டாலும் மருதத்திற்குரிய பிறிதொரு சிறு பொழுதாகிய விடியல் என்பது இப்பாடத்தில் குறிப்பிடப் பெறவில்லை. எனவே உரையாசிரியர்கள் கொண்டவாறு மருதத்திற்குரிய சிறுபொழுது இரண்டையும் சுட்டும் பாடமே மிகுதியும் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

---

[1] தொ. பொ. இளம். நூ. 62.

இக்கருத்தை, இப்புதிய பாடம் சிறப்புடைத் தென்றாலும், விடியலுக்கு வேறிடங்காட்டாமையால் சிறுபொழுது ஐந்தெனவே கொள்ளப்படும். சிறுபொழுதாகிய ஆறென்னும் இவர் கொள்கை யோடு இது மாறுபடும்'' என மு. அருணாசலம்பிள்ளை விளக்கியிருப் பதும் அறியத்தக்கது.[1]

'வைகறைவிடியல்' 'வைகுறுவிடியல்' எனவரும் உரையாசிரி யர்கள் கொண்ட இரு பாடங்களில் 'வைகறை விடியல்' என்ற இளம்பூரணர் பாடம் தெளிவுடையதாக இருத்தலால், அதனையே சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

35. ஒன்றியமொழி-ஒன்றியதோழி

பிரிவின்கண் தலைமகற்குக் கூற்று நிகழும் இடங்களைக்கூறும் ''ஒன்றாத்தமரினும்'' (பொ. 44) என்ற அகத்திணையியல் நூற்பாவில் 'ஒன்றிய **மொழியோடு** வலிப்பினும் விடுப்பினும்' என இளம்பூரண ரும் 'ஒன்றிய **தோழியொடு** வலிப்பினும் விடுப்பினும்' என நச்சினார்க் கினியரும் பாடங்கொண்டுள்ளனர்.

இங்கு நச்சினார்க்கினியர் கொண்ட பாடமே சிறப்புடையது. ஒன்றாத்தமரினும் பருவத்தும், சுரத்தும், தலைவியை உடன்போக்கில் அழைத்துச் செல்லுமுன் தலைவன் தோழியொடு துணிதல் அகப் பொருள் மரபு. மேலும் பிரிவின்கண் தோழிக்குக்கூற்று நிகழும் இடங்களைச்சுட்டும் நூற்பாவில், உடன் கொண்டு பெயரும் தலை மகனோடு தோழிக்குக்கூற்று நிகழும் எனக்கூறப்பட்டுள்ளது. மேலும் 'ஒன்றித்தோன்றும் தோழி மேன' (பொ. 42) என்ற தொடரமைப் போடு ஒத்த நிலையில் இங்கும் 'ஒன்றிய தோழியொடு வலிப்பினும் விடுப்பினும்' என்றுள்ளது. எனவே உரையாசிரியர்களின் இரு பாடங்களில் நச்சினார்க்கினியர் கொண்ட '**ஒன்றிய தோழியொடு**' என்ற பாடமே சிறப்புடையது எனத்துணியலாம்.

---

[1] தொல்காப்பியம்-பொருளதிகாரம்-அகத்திணையியல் உரைவளம், மு. அருணாசலம்பிள்ளை ப. 102.

36. உரைப்பதே

உள்ளுறை உவமம் கூறும் அகத்திணையியல் நூற்பாவில் "உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்" (பொ. 51) என்ற தொடர் இளம்பூரணர் பாடமாக அமைந்துள்ளது. இதில் **'உள்ளுறுத்து உரைப்பதே'** என்பதற்கு **'உள்ளுறுத்து இறுவதை'** எனப் பாடங்கொள்கின்றார் நச்சினார்க்கினியர். நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் சொல்லமைப்பில் பொருந்துவதாக அமையவில்லை. மேலும் மர்ரே பிற்சேர்க்கையில் 'உரைப்பதே' என்பதற்கு **உரைப்பதை** என்றும் **'உறுவதை'** என்றும் பாட வேறுபாடுகள் அமைந்திருக்கக் காண்கிறோம்.

பொருள் நிலையாலும், அமைப்பு நிலையாலும், இளம்பூரணரின் **'உரைப்பதே'** என்ற பாடமே இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளத் தக்கதாம்.

37. ஆயிருபாவினும்

அகத்திணைக்கு இன்றியமையாத செய்யுளை வரையறுத்துக் கூறும் "நாடக வழக்கினும்' எனத் தொடங்கும் நூற்பாவில் (பொ, 56) "கலியே பரிபாட்டு ஆயிருபாவினும்' என்ற தொடர் உள்ளது **'ஆயிருபாவினும்'** என்பது இளம்பூரணர் பாடம். இங்கு நச்சினார்க்கினியர் **ஆயிரு பாங்கினும்** எனப்பாடம் கொள்கின்றார்.

நச்சினார்க்கினியர் "கலியும் பரிபாடலுமென்கிற அவ்விரண்டு கூற்றுச்செய்யுளிடத்தும்" என்றே உரை கூறியுள்ளார். நச்சினார்க்கினியர் உரைகூறும் அமைப்பை **'ஆயிருபாங்கினும்'** என்ற பாடத்தைவிட **'ஆயிரு பாவினும்'** என்ற பாடமே சிறப்புற உணர்த்துவது புலனாகும். மேலும் 'கலியே பரிபாட்டு' என்று எண்ணி ஆயிரு பாவினும் என்று முடிவதே பொருத்தமுடையதாக இருக்கும். எனவே இளம்பூரணர் கொண்ட **'ஆயிருபாவினும்'** என்ற பாடத்தை இங்குச் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

38. குடிநிலை—துடிநிலை

வெட்சித்திணைக்குக் குடிநிலை, கொற்றவை நிலை என்னும்' துறைகளும் உரியன என்பதை விளக்கும் புறத்திணையியல் நூற்பா

வில் (பொ. 62) மறங்கடைக் கூட்டிய 'குடிநிலை' என்ற தொடர் இளம்பூரணர் பாடமாக உள்ளது. இதற்கு நச்சினார்க்கினியர் மறங் கடைக்கூட்டிய 'துடிநிலை' எனப்பாடம் கொண்டார்.

நாவலர் பாரதியார் தம்புறத்திணையியல் புத்துரையில் (1965) துடிநிலை என்றே பாடங்கொண்டார். மேலும் 'துடிநிலை என்பதே பொருந்தும் என்பதை இனி "துடிநிலை என்னுமிடத்துக் 'குடிநிலை என இளம்பூரணர் கொண்ட பாடத்தின் பொருத்தம் புலப்பட வில்லை. 'ஆகோள்,' கொற்றவை நிலைகளைப் போலக் 'குடிநிலை' போர்த்தொடக்கத்திற்கு இன்றியமையாததன்று" என்றும் கூறி யுள்ளார்.[1]

எனினும் நாவலர் பாரதியாரே நச்சினார்க்கினியர் கொண்ட 'துடிநிலை' என்னும் பாடம் தொல்காப்பியர் கருத்தாகத் தோன்ற வில்லை என 1958ல் எழுதியுள்ளதும் அறியத்தக்கதாகும். இதனைப் பின்வரும் பகுதியால் அறியலாம்.

'கொற்றவை நிலையைக் கூறும் மறங்கடைக் கூட்டிய' என் னும் நூற்பாவில் மற்றதைக் 'குடிநிலை' என இளம்பூரணரும் 'துடி நிலை' என நச்சினார்க்கினியரும் பாடங்கொண்டுள்ளனர். 'குடிநிலை' யாதெனத் தொல்காப்பியர் கூறாததாலும், அதுபோர் துவங்குவதற்கு இன்றியமையாத நிகழ்ச்சி அன்றாதலானும் அது நேரானபாடமாகா தெனக் கண்ட நச்சினார்க்கினியர் அதைத் ,துடிநிலை' என மாற்றிக் கூறினார் போலும். 'துடிநிலை' மற்றக் கொற்றவைநிலை, கொடி நிலை போல் போர் துவங்குவதற்கு முதல் நிகழ்ச்சியாகாததோடு தொல்காப்பியரும், பிற தொன்னூல் ஆசிரியர்களும் அதனை அத்த கைய வெட்சியின் சிறப்பு வகையாகச் சுட்டாததால் அதுவும் நச்சி னார்க்கினியர்கொண்டதன்றித் தொல்காப்பியர் கருத்தாகத் தோன்ற வில்லை" என்பது நாவலர் பாரதியார் விளக்கம்.[2]

இக்குறிப்புக்களால் முதலில் நச்சினார்க்கினியர் கொண்ட 'துடி நிலை' என்னும் பாடம் பொருந்தாது என்று கருதி, பின்னர் இரு பாடங்களில் 'துடிநிலை' என்பதே பொருத்தம் எனப் பாரதியார் எண்ணினார் என்பதை இதனால் அறியலாம்.

1. தொல்காப்பியப் பொருட்படலம் - புறத்திணையியல் புத்துரை ச. சோமசுந்தர பாரதியார், ப. 54.

2. பழந்தமிழ்நாடு–ச.சோமசுந்தரபாரதியார், பக் 85-86

இவ்விரு பாடங்களில், இளம்பூரணரின் 'குடிநிலை' என்னும் பாடமே சிறப்புடையது எனக் கொள்ளலாம். சிலப்பதிகாரத்தில் வேட்டுவ வரியில் "மறக் குடி தாயம்" என்றும்[1] "இட்டுத் தலை யெண்ணும் எயினரல்லது சுட்டுத் தலைபோகாத் தொல்குடிக்குமரி" என்றும் குடிநிலை பற்றிக் கூறப்பட்டது காணலாம். மேலும் வேட்டுவ வரியில் 'வள்ளிக்கூத்து' என்னும் பகுதியில் ஒரு பொருள் மேல் அடுக்கி வந்த மூன்று தாழிசைகளும், "விற்றொழில் வேடர் குல னே குலனும்" எய்வில் எயினர் குலனே குலனும்" "வேய்வில் எயினர் குலனே குலனும்" எனக் குடிநிலையின் பெருமையையே கூறுகின்றன.

எனவே இளம்பூரணர் கொண்ட 'குடிநிலை' என்ற பாடமே இங்குச் சிறப்புடையது எனக் கொள்வதில் தடையேதுமில்லை.

39. பெருமை-எருமை

தும்பைத்திணைத் துறைகளை உணர்த்தும் புறத்திணையியல் நூற்பாவில் (பொ. 72) கூழை தாங்கிய **பெருமையும்** என்று இளம் பூரணரும் கூழை தாங்கிய **எருமையும்** என நச்சினார்க்கினியரும் பாடம் கொண்டுள்ளனர்.

உடையும் படையின் பின்னணி தாங்கித் தொடரும் பகை ஞரைத்தாக்கித் தகையும் தறுகண்மை, இங்குக் குறிப்பிடப் பெறு தலால் **எருமையும்** என்ற நச்சினார்க்கினியர் பாடமே பொருள் சிறப்புடையதாக உள்ளது.

"தொடர்கொள் யானையிற் குடர்கால் தட்பக்
கன்றமர் கறவை மான
முன்சமத்து எதிர்ந்ததன் தோழற்கு வருமே"

என்று புறநானூற்றுப் பாடற் பகுதியில்[2]

"**கன்றமர் கறவைமான**" எனக் குறிப்பிடப் பட்டுள்ளதும்,
"சிற்றங் கனற்றச் சிறங்கனித்துச் செல்லுங்கால்
என்றெருமை போன்றுன் இகல்வெய்யோன்"

---

1. சியம்பு-வேட்டுவவரி 14
2. புறம், 275

என்று வரும் பழம்பாடற் பகுதியும் எருமை என்ற பாடமே இங்குப் பொருந்துவதாகும் எனக் கூறும் இலக்கியச் சான்றுகளாயுள. புறப்பொருள் வெண்பா மாலையில் எருமை மறம் ஏமஎருமை என வரும் தும்பைப் படலத்துறைப்பெயர்களும்[1] இப்பாடத்தைச் சிறப்பிப்பனவாகவே உள. எனவே நச்சினார்க்கினியர் கூறியாங்கு **கூழைதாங்கிய எருமையும்** என்பது இங்குப் பொருந்திய பாடமாகக் கொள்ளத் தக்கதாகும்.

கூழை தாங்கிய எருமையும் என்பது தோற்ற ஒப்புமையால் கூழைதாங்கிய பெருமையும் என்று ஆகியிருக்கலாம் எனக் கருதவும் இடம் உண்டு.

40 கடிமனை-கட்டில்

வாகைத் துறைகளை உணர்த்தும் 'கூதிர் வேனில்' எனத் தொடங்கும் புறத்திணையியல் நூற்பாவில் (பொ. 75) **'கடிமனை'** நீத்த பாலின் கண்ணும்' என்னும் தொடரை இளம்பூரணரும், **'கட்டில்** நீத்த பாலினானும் என்னுந்தொடரை நச்சினார்க்கினியரும் பாடமாகக் கொண்டுள்ளனர்.

'கடிமனை நீத்தபாலும்' என்பது 'பிறர்மனை நயவாமை' என்பர் இளம்பூரணர். 'கட்டில் நீத்த பாலினானும்' என்பது 'அரசன் அரச உரிமையைக் கைவிடுதல்' என்பர் நச்சினார்க்கினியர்.

அரசவாகை நிலையுடன் தொடர்புடையதாதலால் இங்கு நச்சினார்க்கினியர் கொண்ட **'கட்டில் நீத்தபாலினானும்'** என்ற பாடமே சிறப்புடையது.

நச்சினார்க்கினியரின் பாடமே சிறப்புடையது என்பதையும், இளம்பூரணர் பாடம் இங்குப் பொருந்தாது என்பதையும் நாவலர் சோமசுந்தர பாரதியார் மூன்று காரணங்கள் சுட்டி நிறுவுவர்[2].

---

1 பு. வெ. மா. 139, 140.

2. தொல்காப்பியப் பொருட்படலம், புறத்திணையியல் புத்துரை, ச. சோமசுந்தரபாரதியார், ப. 147

1. "இங்குக் கடிமனை நீத்த பாலினும் எனப்பாடங்கொண்டு பிறர்மனை நயவாமையைக் குறிக்கும் என்பர் இளம்பூரணர். அஃது அறவொழுக்கமாமெனினும் இல்வாழ்வார் எல்லார்க்கும் பொது அற மாதலின் தனி ஒருவர் வாகைக்குரிய வீருகாது. 2. அன்றியும் அதனினும் அருமைத்தாகும் அறவழி காம வெறியொழி விறலை இதன்கீழ்க் காமநீத்த பாலினும் எனக் கூறுதலால் அதிலடங்கும் பிறர் மனை நயவாமையைத் தனித்தொரு துறையாக்குதலிற் சிறப் பில்லை. 3. இன்னும் அப்பாடங் கொள்ளின் இறைமைச் செல்வத் தை இகழ்ந்து துறக்கும் உள்ள வெறுக்கையைக் குறிக்கும் வாகைத் துறை இல்லாதொழியும். ஆகையால் இங்குக் 'கட்டில் நீத்தபால்' எனும் பாடமே சிறத்தலறிக".

நாவலர் சோமசுந்தரபாரதியார் காட்டும் காரணங்கள் சிறப் பானவை. எனவே நச்சினார்க்கினியர் பாடமே இங்கு ஏற்கத்தக்கது என்பது வெள்ளிடைமலை.

41. காஞ்சி பாடாண்திணைகளில் பாடங்கள்

காஞ்சித் திணையின் துறைகளை உணர்த்தும் நூற்பாவில் (பொ. 77) 'தாமே எய்திய தாங்கரும்பையுள்' என்ற பாடத்தை விட 'தாமே ஏங்கிய தாங்கரும் பையுள்' என்பதும் 'சொல்லிடையிட்ட மாலைநிலையும்' என்பதைவிடச் 'சொல்லிடையிட்ட பாலைநிலையும்' என்பதும், 'புதல்வன் பயந்த தாய்தப' என்பதைவிடப் 'புதல்வன் பெயரத் தாய்தப' என்பதும் சிறந்த பாடங்கள். முன்னர் அமைந் தவை இளம்பூரணர் பாடங்கள். பின்னர் உள்ளவை நச்சினார்க் கினியர் பாடங்கள். இங்கெல்லாம் நச்சினார்க்கினியர் கொண்ட பாடங்களே காஞ்சித்திணையின் பொருண்மையைச் சார்ந்து ஏற்றம் பெற அமைந்துள் என்பதை நூற்பாவின் பொருள் நிலையால் தெளியலாம்.

பாடாண் திணையின் துறைகளை உணர்த்தும் 'தாவில் நல்லிசை' (பொ.88) எனத் தொடங்கும் நூற்பாவில் 'சிறந்த

நாளினிற் செற்றம் நீக்கி' என்பது இளம்பூரணர் கொண்ட பாடத் தொடர். இதற்கு 'சிறந்த நாளணி' செற்றம் நீக்கி' என்ற பாடத்தை நச்சினார்க்கினியர் கொண்டார்.

பொருளுரைக்கும் இயல்பாலும், கொண்டுகூட்டு முறையாலும் அனைத்துக்கும் மேலாக இன்னோசையுடைமையாலும் இங்கும் 'சிறந்த நாளணி' செற்றம் நீக்கி' என்ற நச்சினார்க்கினியர் பாடமே ஏற்கத் தக்கதாகும்.

42. தலைவன் கூற்று

களவியலில் 'இருவகைக் குறிபிழைப்பாகிய இடத்தும்' எனத் தொடங்கும் நூற்பா தலைவனுக்குரிய கூற்றுவகைகளைக் கூறுவது என இளம்பூரணரும், தலைவிக்குரிய கூற்று வகைகளைக் கூறுவது என நச்சினார்க்கினியரும் கொள்வர். இதற்கு ஏற்றவகையில் நூற்பாவின் இறுதியடியில் 'கிழவோன் மேன' என இளம்பூரணரும் 'கிழவோண் மேன' என நச்சினார்க்கினியரும் பாடம் கொள்வர்.

நச்சினார்க்கினியர் கருத்துப்படி இவை தலைவி கூற்று என்ற கருத்தை ஏற்பாரும் உளர்.[1] எனினும் இவற்றைத் தலைவன் கூற்றாகக் கொள்ளுதலே ஏற்புடையது. தலைவியின் பால் நிலைபெற்றுள்ள நாணமும் மடனும் பெண்மைக்கு அங்கமாதலால் காம ஒழுக்கத்தின் கண் குறிப்பினாலும் இடத்தினாலுமல்லது அவள் பால் வேட்கை புலப்படுதல் இல்லை. வேட்கை உரையாத கண்கள் யாண்டு மின்மையால் வேட்கை காரணமாக அச்சம் நீங்கினாலும் நாணமும் மடனுமாகிய இரண்டும் தலைவியிடத்து என்றும் நீங்காதுளவாம் எனக் க. வெள்ளைவாரணரும் கூறி இவை தலைவன் கூற்றே என்னும் கருத்தை விளக்குவர்.[2]

---

1. கிழவோன்மேன என்மனார் புலவர் - These the learned men have said and the places when the heroine will talk or have her 'say' Tolkappyam - Porulathi Karam E.S. Varatha Rara ayyar - P. 121.

2. தமிழ் இலக்கிய வரலாறு தொல்காப்பியம். க. வெள்ளைவாரணம், ப. 124

இளம்பூரணர் கொண்டவாறு தலைவன் கூற்று எனக் கொள்ளுவதே பொருந்தும் என்பதை இருவகைக் குறி பிழைப்பாகிய இடத்தும்-என்று தொடங்கும் சூத்திரம் தலைமகனுக்குரியது என்று இளம்பூரணர் கொண்டது பொருத்தமே; இச்சூத்திரத்தை நச்சினார்க்கினியர் கொண்டது போலத் தலைவிக்குரியதாகக் கொண்டால் தலைவி களவொழுக்கத்தின்கண் நாணமும் மடமும் அச்சமுமின்றி உரை நிகழ்த்திய நாகரிகக் குறைபாட்டிற்கு ஆளாவாள்' என மு. வை. அரவிந்தன் கூறுவார்.[1]

மேலும் களவியற் கண் தலைவி கூற்று நிகழ்தற்குரிய இடங்கள் இவ்வியலில் "மறைந்தவற்காண்டல்" எனத் தொடங்கும் நூற்பாவில் (பொ. 109) கூறப்படுதலாலும் இவை தலைவன் கூற்றுக் களேயாம் என்னும் கருத்து உறுதிப்படும்.

இக்கருத்திற்கேற்ப இந்நூற்பாவில் அமைந்த பொருள் வேறுபடும் சில பாடங்கள் முடிவு செய்யப்பெறுதல் வேண்டும்.

'வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்' என்றும், 'தாளாண் எதிரும் பிரிவினானும்' என்றும் "கிழவோன்மேன" என்றும் வரும் மூன்று தொடர்களிலும் அடிக்கோடிட்டனவாக அமைந்த சொற்களுக்கு நச்சினார்க்கினியர் முறையே **விருந்தின்** கண்ணும் வாளாண் எதிரும், **கிழவோண்மேன** எனப் பாடங்கொண்டுள்ளார்.

உரையாசிரியர்களின் உரை அமைப்பை நோக்குங்காலும், இலக்கிய வழக்கினை எண்ணுங்காலும் இளம்பூரணர் கொண்ட பாடங்களே இவ்விடத்து ஏற்புடையனவாக அமைந்துள்ளன என்பது அறியப்படும்.

43. அழிவு – அறிவு

தலைவி கூற்றுக்களைத் தொகுத்துரைக்கும் "மறைந்தவற் காண்டல்" எனத் தொடங்கும் பிறிதொரு களவியல் நூற்பாவில் (பொ. 109) "அழிவு தலைவந்த சிந்தைக் கண்ணும்" என்னும் தொடரில் உரையாசிரியர் இருவரும் 'அழிவு' என்றே பாடங் கொண்டுள்ளனர். தலைமகள் தன்வயின் உரிமையும் அவன் வயின் பரத்தமையும் தோன்றக் கூறும் இடங்களில் இதுவும் ஒன்று.

---

[1]. உரையாசிரியர்கள் - மு. வை. அரவிந்தன், ப. 157.

'**அழிவு**' என்ற பாடமே பொருள் நிலையில் 'இங்குப் பொருத்த முற அமைந்துள்ளது. இதற்கு '**அறிவு**' **தலைவந்த** எனப் பாடங் கொள்வர் புலவர் குழந்தை. இது பொருந்தாது.

இங்கு மட்டுமன்றி "ஆடிய சென்றுழி '**அழிவு** தலைவரினும்" (பொ. 113) என்ற இடத்திலும் **அறிவு** தலைவரினும் எனப் புலவர் குழந்தை பாடங்கொண்டுள்ளதும் பொருந்தாது.

ஈரிடத்தும் "அழிவு" என்பதற்கு 'அறிவு' என வேறுபாடு இடம் பெற்றுள்ளதை நோக்க, எழுத்து ஒப்புமையால் தவருக அச்சிடப்பட்ட பாடமாகவும் இது இருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

44. பிற களவியல் பாடங்கள்

பொருள் வேறுபாடு கொண்ட நிலையில் களவியலில் மேலும் சில வேறுபாடுகள் உள.

'தன்னொடும் அவளொடும் **முன்னமுன் தளைஇ**' (பொ. 112) என்றும், '**அவள்** விலங்குறினும்' (பொ. 112) என்றும் '**காமமேற் படுப்பினும்**' (பொ. 113) என்றும் வரும் இளம்பூரணர் பாடங்களுக்கு முறையே 'தன்னொடு மவளொடும் **முதல் மூன்றளைஇ**' '**அவன்** விலங் குறினும்' '**காமமெய்படுப்பினும்**' என்பனவற்றை நச்சினர்க்கினியர் பாடங்களாகக் கொண்டுள்ளார். இவ்விடங்களில் இளம்பூரணர் பாடங்களே முன்னும் பின்னுமுள்ள நூற்பாக்களின் பொருள்நிலைக்கு உகந்த வகையிலும், பழமைச் சிறப்புடையனவாயும் உள.

'**உணர்வுடம்படினே**' (பொ. 114) என்று வரும் உரையாசிரியர்கள் இருவரும் கொண்ட பாடத்துக்கு இணையாகப் '**போக்குடன்கிளப்பின்**' எனப் புலவர் குழந்தை கூறும் பாடமும் பொருள் சிறப்பின்றி அமைந்துள்ளது. "அன்னவகையான்" (பொ. 126) எனத் தொடங் கும் நூற்பாவில் 'பின்னிலை முயற்சி **பொறாள்**' என இளம்பூரணர் பாடங்கொண்டிருப்ப, 'பின்னிலை முயற்சி **பெறான்**' என நச்சினர்க் கினியர் கொண்டுள்ளதும் பொருத்தமற்று உள்ளது.

மூவகையாலும் மதியுடம்பட்ட பின் அல்லது கூட்டத்திற்குத் தோழி முயலப்பெறாள் என்ற இயல்பான பொருள்நிலை இளம்பூரணர்

பாடத்தால் தெளிவாகிறது. நச்சினார்க்கினியர் 'முயற்சி பெருன்' எனப் பாடம் கொண்டதற்கேற்ப இதனைத் தலைவனுக்குரியதாக்குகிருர். இளம்பூரணர் பாடமே இங்கு ஏற்புடையது.

45. தலைவனுக்குரியகிளவிகள்

கற்புக் காலத்தில் தலைவற்கு உரிய கிளவிகளைக் "கரணத்தின் அமைந்து" (பொ.144) எனத் தொடங்கும் கற்பியல் நூற்பா தொகுத்துரைக்கின்றது.

"புதல்வற் பயந்த **புனிறுதீர்பொழுதின்**" என்ற தொடரில் **புனிறு தீர் பொழுது**' எனப்பாடங்கொண்டார் இளம்பூரணர். நெய் யணி மயக்கத்தைப் புரிந்தவளாகிய தலைவி என்று பொருள் கொண்டால் **'புனிறுதீர் பொழுது'** என்ற இளம்பூரணர் பாடம் பொருந்தும். ஆனல் நச்சினார்க்கினியர் எண்ணெயாடும் மயக்கத்தை விரும்பிய தலைவி' எனப் பொருள் கொண்டு அதற்கு ஏற்பப் **'புனிறு சேர் பொழுதின்'** எனப் பாடங் கொண்டுள்ளது சிறப்பாக உள்ளது. **'புனிறு தேர்பொழுதின்'** எனப் பதிப்பில் அமைந்த பாடம் அத்துணை சிறப்புடையதன்று.

"கிழத்தியைக் குறுகி **அல்கல் முன்னிய** நிறையழி பொழுதின்" என்பது இந்நூற்பாவில் பிறிதொரு தொடர். 'அல்கல்' என்பதற்கு இளம்பூரணர் 'தங்குதல்' எனப் பொருள் கொண்டுள்ளார்.

நச்சினார்க்கினியர் **'புல்கு என முன்னிய'** எனப் பாடங் கொண்டு 'கூடுதலைக் கருதின' எனப் பொருளும் வரைந்துள்ளார். இங்கும் நச்சினார்க்கினியர் கொள்ளும் பாடம் பொருள் சிறப்பும் பொருத்தமும் உடையதாக உள்ளது. 'அல்கென' எனப் பதிப்பில் காணப்பெறும் பிறிதொரு பாடம் 'அல்கல்' என இளம்பூரணர் பாடத்தையொட்டிப் பிறந்த பொருட் சிறப்பில்லாப் பாடமாகும்.

இந்நூற்பாவின் இறுதிப்பகுதியில் "பிரிவினெச்சத்துப் புலம்பிய இருவரைப் **பரிவுநீக்கிய** பகுதிக்கண்ணும்" என்ற தொடர் உள்ளது. பிரிவு நிமித்தமாக வருந்தும் தலைவி, காமக்கிழத்தி ஆகிய இருவரின் துன்பத்தையும் நீக்கிய என்பது இதன் பொருள், இது இளம்பூரணர் கொண்ட பாடம்.

இங்குப் 'பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப் **பரிவின் நீங்கிய'** எனப் பாடங்கொண்டுள்ளார் நச்சினார்க்கினியர். நச்சினார்க்கினியர் பாடத்தை விட இளம்பூரணர் பாடம் பொருளாழம் உடையதாக உள்ளது. 'பிரிவின் நீங்கிய' எனவரும் மர்ரே பதிப்பின் மூல பாடம் இளம்பூரணர் பாடத்தை விடப் பொருள் தெளிவும் இன்னோசையும் பெற்றுள்ளதும் குறிப்பிடத்தக்கதாம்.

46. உணர்ப்பு வயின் வாரா ஊடல்

''பெறற் கரும் பெரும் பொருள்'' எனத் தொடங்கும் தோழி கூற்றுக்களைக் கூறும் பிரிதொரு கற்பியல் நூற்பாவில் (பொ.148) **''உணர்ப்புவயின்** வாரா ஊடலுற்றோன்'' என்ற பாடம் உள்ளது. இது இளம்பூரணர் கொண்ட பாடம். நச்சினார்க்கினியர் பாடத்தின்படி அமையும் பொருள் அகப்பொருள் மரபுக்கு முரண்பாடாக உள்ளது.

எனினும் நச்கினார்க்கினியர் தான் கொண்ட மூல ஏட்டில் 'உணர்ப்பு' என்பது 'புணர்ப்பு' எனத் தோன்றியமையால் தான் **'புணர்ப்பு வயின் வாரா ஊடல்'** எனப் பாடங்கொண்டுள்ளார். தான் கொண்ட மூல ஏட்டுப் பாடமே தவறுடையது என உணர்ந்த நச்சினார்க்கினியர் 'உணர்ப்பு' எனக் கொண்டே பொருள் வரைந்துள்ளார். மேலும் தன் மூல ஏட்டில் கண்ட இப்பிழையைச் சுட்டும் வகையில் 'உணர்ப்புப் புணர்ப்புப் போல நின்றது' என விளக்கமும் வரைந்துள்ளார். மூல ஏட்டின் பாடத்தைப் போற்றும் பண்பும், அதே சமயம் பொருளுணர்ச்சியும் மரபுநிலையும் பிறழாமல் உரை கூறும் போக்கையும் இங்குக் காண்கிறோம். 'உணராப் புலவியின்' என இங்கு வரும் பதிப்புப் பாடம் சிறப்பில்லாதது.

47. இறந்த தனைய-புணர்வதாகும்

தலை மகளுக்குரிய மரபு கூறும் கற்பியல் நூற்பாவில் (பொ. 170) 'இறந்ததனைய கிழவோன் ஆங்கட் கலங்கலுமுரியன்' என இளம்பூரணர் பாடங் கொண்டிருக்க, 'கிழவோன் இறந்தது நினைஇ ஆங்கட் கலங்கலு முரியன்' என நச்சினார்க்கினியர் பாடங்கொண்டுள்ளார். 'தலைவன் பரத்தமை செய்து ஒழுகியதை நினைத்து' என்ற பொருளில் வரும் நச்சினார்க்கினியர் பாடம் தெளிவுற அமைந்துள்ளமையால் இங்கு **'கிழவோன் இறந்ததுநினைஇ ஆங்கட் கலங்கலு முரியன்'** என்ற பாடத்தையே சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

புறத்தோராங்கண்புணர்வதாகும்'' (பொ. 174) எனவரும் புறனடை நூற்பா, பாசறையில் தாதியர், கணிகையர் ஆகியபுறப் பெண்டிரொடு புணர்ச்சி பொருந்தும் என்ற பொருள்படும். இது இளம்பூரணர் கொண்ட பாடமும் பொருளுமாகும். 'புறத்தோர் ஆங்கண் புரைவதென்ப' என நச்சினார்க்கினியர் இங்குப் பாடங் கொண்டார். புறத்தோர் என்பதற்கு அடியோர், வினைவலர் ஆகிய அகப்புறத்தலைவர் எனப் பொருள் கொண்டார். 'ஆங்கண் புரைவது என்ப' என்பதற்குப்'பாசறையின் பெண்ணொடு புணர்த்துப்புலனெறி வழக்கம் செய்தல் பொருந்தும்' எனப் பொருள் கூறுவர்.

',**எண்ணரும் பாசறைப் பெண்ணொடும் புணரார்''** (பொ.173) என்ற முன் நூற்பாவுடன் இணைத்துக் காணுங்கால் தலைமக்களுக் குரிய மரபினையே இந்நூற்பாவும் கூறுவதாகக் கொண்டு, அம் முறையில் அமைந்த இளம்பூரணர் உரையே இங்குப் பொருந் துவதாகக் கொள்ளலாம். எனவே **'புறத்தோர்ஆங்கண் புணர்வ தாகும்'** என்ற இளம்பூரணர் பாடம் இங்குப் பொருள் சிறப் புடையது.

48. அவள் - அவன்

தலைமகளுக்கு மடன் அழியும் இடம் கூறும் பொருளியல் நூற்பாவில் (பொ.202) தன்வயிற்கரத்தலும் **அவள் வயின்** வேட் டலும் என்பது இளம்பூரணர் கொண்ட பாடம். இதற்குத் 'தன் வயிற் கரத்தலும் **அவன் வயின் வேட்டலும்**' எனப் பாடங்கொள்வர் நச்சினார்க்கினியர். 'தன்வயின் கரத்தல்' என்பது தலைவன் தலை வியிடத்தே புறத்தொழுக்கம் இன்றென்று பொய் கூறுதல். **'அவன் வயின் வேட்டல்'** என்பது கரந்து கூறிய **தலைவனிடத்துத்** தலைவி விரும்புதல்.

'அவள் வயின் வேட்டல் - எனப் பாடங்கொண்ட இளம் பூரணர் **'தலைமகள் மாட்டுப்** புணர்ச்சி வேட்கை தோன்றிய வழி, எனப் பொருள் கூறுவர். நச்சினார்க்கினியர் கூறும் பொருளைவிட' இளம்பூரணர் உரை இங்குச்சிறந்துள்ளது. **'அவள் வயின்'** என்ற பாடத்தை ஏற்புடையதாகக் கொள்ளலாம்.

49. உரிப்புறத்ததுவே

இறைச்சிப் பொருள் உணர்த்தும் பொருளியல் நூற்பா (பொ 225) **'இறைச்சி தானே உரிப்புறத்ததுவே'** என இளம்பூரணத்

திலும் 'இறைச்சிதானே பொருட்புறத்ததுவே' என நச்சினார்க்கினியத்திலும் அமைந்துள்ளது.

"வெளிப்படச்சொல்லப்பட்ட பொருளின் புறத்தே தங்கிய குறிப்புப் பொருளே இறைச்சியென வழங்குவது தமிழ் மரபு" என இறைச்சி என்பதற்கு விளக்கம் கூறுவர் அறிஞர்.[1]

இளம்பூரணர் "இறைச்சிப்பொருள் என்பது உரிப்பொருளின் புறத்தாகித் தோன்றும் பொருள். அஃதாவது கருப்பொருளாகி நாட்டிற்கும் ஊர்க்கும் துறைக்கும் அடையாகி வருவது" என்பர்.

இறைச்சி என்பதற்குக் கருப்பொருட்கு நேயப்பொருள் என்று கூறி அது கூற வேண்டுவதோர் பொருளின் புறத்தே புலப்பட்டு அதற்கு உபகாரப்படும் பொருட்டன்மையுடைத்தாம் என நச்சினியர் விளக்குவர்.

இவ்விரு பாடங்களில் 'உரிப்புறத்ததுவே' என இளம்பூரணர் கொண்ட பாடமே பொருத்தமாகும். உரிப்புறம் எனக் கூறுங்கால் கருப்பொருள் என்பது பொருளாகக் கிடைக்கும் இயல்பு 'பொருட்புறம்' என்ற நச்சினார்க்கினியர் பாடத்தில் இல்லை.

மேலும் உள்ளுறைஉவமம் இறைச்சி முதலிய ஐந்தும் பெரும்பாலும் அகத்திணைப் பாடலுக்கே உரியவையாகும் (பொ. 45) அகத்திணைப் பாடல்களில் முதல், கரு, உரி என்ற மூன்று பொருளும் இடம் பெறும் (பொ. 3) உள்ளுறை உவமம் தெய்வம் ஒழிந்த கருப்பொருளை இடமாகக் கொண்டு பிறக்கும் (பொ. 50) இறைச்சி உரிப்பொருளுக்கும் புறம்பாய் வரும் (பொ. 43) என்ற தொல்காப்பியர் கருத்துக்களை நினைவில் கொண்டு பார்த்தால் 'உரிப்புறத்தது' என்ற பாடம் பொருத்தமாய் இருக்குமோ என்று எண்ண வேண்டியுள்ளது எனக் கூறப்படும் கருத்தும்[2] இப்பாடத்தை உறுதி செய்யத் துணையாக உள்ளது.

---

[1] தமிழ் இலக்கிய வரலாறு-தொல்காப்பியம்- க. வெள்ளைவாரணம், ப. 148

[2]. உரையாசிரியர்கள் - மு. வை. அரவிந்தன், ப. 156

50. இன்பம் - மொழியும்

உள்ளுறை மரபுரைக்கும் பொருளியல் நூற்பாவில் (பொ.239) அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்' என இளம்பூரணரும் 'அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்' என நச்சினார்க்கினியரும் கொண்ட பாடத்துக்கு மாறாக, அந்தமில் சிறப்பின் 'ஆகிய மொழியும்' என்ற பாடம் மர்ரே பிற்சேர்க்கையில் உள்ளது.

'உயர்மொழி' (பொ. 236) 'மங்கல மொழி' (பொ, 240) 'அவையல் மொழி' (பொ. 240) 'சொல்லிய மொழி' (பொ. 240) என இந்நூற்பாவின் முன்னும் பின்னும் பயின்ற 'மொழி' என்னும் சொல்லின் தாக்கத்தால் மர்ரே பதிப்பின் பிற்சேர்க்கையில் காணப்பெறும் இப்பாடம் எழுந்திருக்கலாம். இப்பாடப் பொருள் சிறப்பில்லாதது. நச்சினார்க்கினியர், இளம்பூரணர் இருவர் பாடங்களில் இளம்பூரணர் பாடத்தைச் சிறந்ததெனக் கொள்ளலாம்.

51. அவையல்மொழி-வைஇய மொழி

''மங்கல மொழியும்...'' எனத் தொடங்கும் நூற்பாவில் (பொ. 240) 'அவையல் மொழியும்' என்று இளம்பூரணர் ஒரு தொடரைப் பாடமாகக் கொண்டார். இதற்கு ''வைஇய மொழியும்' என்பதை நச்சினார்க்கினியர் பாடமாகக் கொண்டார்.

வைஇயமொழி என்பது தலைவியும் தோழியும் தலைவன் தம்மை வஞ்சித்தானைக் கூறும் மொழி தீங்கை வைத்த மொழியுமாம்'' என்று நச்சினார்க்கினியர் கூறுவர். இது வசவு மொழி என்னும் பொருளினையுடையது எனலாம்.

இங்கு இளம்பூரணர் கூறும் பொருள்விளக்கம் சொல்லதிகாரப்பகுதிக்கு உரியதுபோல் மங்கலமொழி, இடக்கரடக்கல் என்றெல்லாம் வருகிறது. நச்சினார்க்கினியர் இத்தொடர்களுக்கு அகப்பொருள் மரபொடுசார்த்திப் பொருளுரைக்கும் பகுதிகள் சிறப்பாக உள்ளன. எனவே இங்கு 'வைய மொழியும்' எனப்புலவர் குழந்தை கொண்ட பாடமும் பொருந்துவதன்று. மேலும் 'வை இய' என்பதே 'வைய' எனப் பிழையாக அச்சில் அமைந்திருக்கலாம் என்று கருதவும் இடமுண்டு.

52. முன்னம்-முன்னை

பிறிதொடு படாது பிறப்பொடு நோக்கி, முன்ன மரபிற் கூறுங்காலே' என வரும் உவமையியல் நூற்பாத் தொடரில் (பொ. 294) 'முன்ன மரபில்' என இளம்பூரணர் கொண்ட பாடத்துக்கு 'முன்னை மரபில்' என நச்சினார்க்கினியர் பாடங்கொள்கிறார்.

'முன்னம்' என்பது குறிப்பு. இதனைத் தொல்காப்பியர் செய்யுளியலில் விளக்கிக் கூறுவர்.[1] இளம்பூரணர் முன்னம் என்பது உணர்த்தும் பொருளுணர்ச்சியைக் கருத்தில் கொண்டு ஆண்டுள்ள பாடமே சிறப்புடையதாக உள்ளது. நச்சினார்க்கினியர் கொண்ட 'முன்னை மரபு' என்பது 'முன்பு சொல்லிய மரபு' எனப் பொருள் படும்.

53. ஈரிடம்

"கிழவோட்குவமை ஈரிடத்துரித்தே" (பொ. 302) என்ற உவமையியல் நூற்பா, தலைமகள் உவமைகூறும் இடம் இரண்டு என்பதைச் சுட்டுகிறது. ஈரிடம் என்பதை இனிதுறு கிளவி துன்புறு கிளவி எனச் சுட்டுவர் இளம்பூரணர்.

நச்சினார்க்கினியர் 'ஈரிடத்துரித்தே' என்று பாடம் கொண்டாலும் ஈரிடம் என்பன 'மருதமும் நெய்தலும்' எனக்கூறி இவ்விரண்டிடத்தும் பிறந்த பொருள்களைக்கொண்டே தலைவி உள்ளுறை உவமம் கூறுவாள் எனக் கூறுகின்றார்.

நச்சினார்க்கினியர் உரையில் 'கிழவோட்குவமம் பிரிவிடத்துரித்தே' என்று பாடம் உரைப்பாருமுளர் என்று குறிப்பிடப் பெற்றுள்ளது. "யாதானுமொரு நிலத்தாயினும் பிரிந்திருந்தவிடத்து உள்ளுறை யுவமம் கூறப்பெறும் கிழத்தி" என்பது இதன் கருத்தாகக் கூறப்படும். இப்பாடம் பொருண்மையும் சிறப்புமுடையது அன்று. இதனை "ஈரிடமென்றலே வலிதென்பது" எனவரும் நச்சினார்க்கினியர் உரைக்குறிப்பால் அறியலாம்.

---

[1] தொ. செய்யுளியல், நூ 199.

உரையாசிரியர்கள் கொண்ட "ஈரிடத்துரித்து' என்ற பாடமே இங்குச் சிறப்புடையது என்பதும், இளம்பூரணர் கூறும் பொருளே அதற்குப் பொருத்தமுடையது என்பதும் இதனால் அறியத் தக்கவை.

54. செய்யுளியலில் வேறுபாடுகள்

செய்யுளியலில் பொருள்நிலையில் மாறியமைந்த 25 வேறுபாடு களும் கீழே பட்டியலில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

நூற்பா எண்	உரையாசிரியர்கள் பாடங்கள்	பதிப்புப் பாடங்கள்
310.	பொருள்வகை (இளம்) கூற்றுவகை (பேரா, நச்சி)	
311.	மாத்திரை வகையும் (இளம்) மாத்திரை அளவும் (பேரா, நச்சி)	
349.	நேர் நிரை (இளம்) நேர் நிலை (பேரா, நச்சி)	நேர்நிறை
362.	ஓரசை ஒப்பின் (இளம்,பேரா,நச்சி)	நேரசை, ஒப்பின்
366.	அவ்வடிக்கென்ப (இளம்,பேரா,நச்சி)	அளவடிக்கென்ப
381.	எழுசீர் இறுதி, (இளம்,பேரா,நச்சி)	முச்சீரிறுதி
406.	எழுநூற்றென்ப, பஃதென்ப (இளம், பேரா, நச்சி)	எழுநூற் றென்றுமென்ப
417.	வேம்பும் கடுவும் (இளம்,பேரா,நச்சி)	வேம்பும் கரும்பும்
419.	அவிதல் (இளம்,பேரா,நச்சி)	நவிலுதல்
437.	போக்கடையென (இளம்,பேரா,நச்சி)	போக்கிடையென
438.	நாலடியிழிபாய் (இளம்,பேரா,நச்சி)	நாலிரண்டடி இழிபாய்
440.	அடைநிலைக்கிளவி(இளம்,பேரா,நச்சி)	இடைநிலைக்கிளவி

491. அறுவரொடு தொகைஇ (இளம்)
கிளவியொடு தொகைஇ (பேரா, நச்சி)

499. எனவிரு வீற்றும் (இளம், நச்சி)
எனவிரு கூற்றும் (பேரா)

512. தொடைநிலை பெறுமே (இளம்)
தொடர்நிலை பெறுமே (பேரா, நச்சி)

526. முடிந்தது போன்று (இளம்,பேரா,நச்சி) முடிந்தது ஒன்று

528. ஒரூஉத்தொடை (இளம்)
ஒரீஇத் (பேரா, நச்சி)

536. சீர்புனைந்தியாப்பின் (இளம்)
தாயபனுவலோடு (பேரா) தாயபனுவலொடு
தாயபனுவலின் (நச்சி)

541. ளகரா ஈற்று (இளம்)
னகாரை ஈற்று (பேரா) ளகாரை ஈற்று
ளகார ஈற்று (நச்சி)

341. தெரிந்த மொழியான் (இளம்)
சேரி மொழியால் (பேரா, நச்சி)

மேலே கண்ட 20 இடங்களில் அமைந்தமொத்த வேறுபாடுகள் 25. இவற்றுள் பொருள் சிறப்புடையன யாவை எனக் காண்போம்.

55. செய்யுளியலில் சிறந்த பாடங்கள்

மாத்திரை எழுத்தியல் எனத் தொடங்கும் நூற்பாவில் (பொ. 310) 'பொருள்வகை' என இளம்பூரணர் கொண்ட பாடத்தின்படி செய்யுளியல் நூற்பாவில் பொருள்வகை இலக்கணம் கூறப்படவில்லை. பேராசிரியர், நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் '**கூற்றுவகை**' என்பது. கூற்றுவகைகளைப் பற்றியே செய்யுளியலில் நிறுத்த முறையானே உணர்த்தப் பட்டுள்ளது. எனவே '**கூற்றுவகை** என்பதே சிறந்த பாடம்.

'மாத்திரை வகையும்' (பொ. 311) என்ற இளம்பூரணர் பாடத்துக்குப் பிறர் 'மாத்திரை அளவும்' எனக் கொண்டுள்ளனர். மாத்திரை என்பதோடு அளவு என்னும் சொல் தொடர்புடையது மேலும் மாத்திரைகளின் வகைபாடுகளை எழுத்ததிகாரம் பேசவில்லை. மாருக, எழுத்ததிகாரத்தில் "ஓரளபிசைக்கும் குற்றெழுத்தென்ப" (எ. 3) "ஈரள பிசைக்கும் நெட்டெழுத்தென்ப" (எ. 4) "மூவள பிசைத்தல்" (எ 5) "மெய்யின் அளபே அரையென மொழி (எ. 11) என மாத்திரைகளின் அளவே சுட்டியுரைக்கப்பட்டுள்ளது. எனவே பேராசிரியர், நச்சினார்க்கினியர் கொண்ட 'மாத்திரை அளவும்' என்பது சிறப்புடைய பாடம்.

சீர்க்கு எழுத்து வரையறை உணர்த்தும் நூற்பாவில் நே இறுதியாகுங் காலத்து ஒருசீரில் ஐந்தெழுத்துக்கு மிகாது என்பதும் நிறை ஈருகிய வஞ்சியுரிச்சீருக்கு ஆறெழுத்தென்பதும் கூறப்பட்டுள்ளது. இந்நூற்பாவின் முதலடியைத் தனி நூற்பாவாகவும், இரண்டாமடியைத் தனி நூற்பாவாகவும் ஆக்கிப் பொருள் கொள்வர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும். 'ஒருசீர் ஐந்தெழுத்து இறந்து வாராது' என்பது முதலடியாகிய நூற்பாவிற்குப் பொருள்.

இரண்டாம் அடியை 'நேர்நிலை வஞ்சிக்காறும் ஆகும்' எனக் கொண்டு இரு சீரால் வரும் சமநிலை வஞ்சிக்கு ஒருசீரில் ஆறெழுத்து வரும் எனப் பொருள் கூறுகின்றனர் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும். இவர்கள் கொள்ளும் பாடமும் கூறும் பொருளும் பொருத்தமாக உள்ளன. எனவே 'நேர்நிரைவஞ்சி' என்னும் பாடத்தைவிட "நேர்நிலை வஞ்சி" என்ற பாடமே ஏற்புடையதாகக் கொள்ளலாம்.

"சீரியல் மருங்கின்" (பொ. 362) எனத் தொடங்கும் நூற்பாவில் 'ஓரசையொப்பின்' என உரையாசிரியர்கள் மூவரும் பாடங் கொண்டுள்ளனர். சீர்கள் பொருந்தும் நிலையில் நிலைமொழி அசையோடு வருமொழி அசை ஒத்து வருவது நேரொன்றாசிரியத்தளை, நிரையொன்றாசிரியத்தளை எனப்படும் என்பது இந்நூற்பாக் கருத்து. 'ஓரசை ஒப்பின்' என்பதற்கு, 'நேரசை ஒப்பின்' என்று பதிப்புப் பாடம் ஒன்றுள்ளது. இதனால் நேரொன்றாசிரியத்தளை ஒன்று மட்டுமே வருவதாகப் பொருள் கொள்ள முடியும். நிரையொன்றாசிரியத்தளையைக் கொள்ள இயலாது. எனவே 'ஓரசையொப்பின்' என வருவதே ஏற்புடைய பாடம்.

"நிரை முதல்" (பொ. 369) எனத் தொடங்கும் நூற்பாவில் **வரைநிலையின்றே அவ்வடிக்கென்ப** என உரையாசிரியர்கள் மூவரும் கொண்ட பாடத்துக்கு '**வரைநிலையின்றே அளவடிக்கென்ப**' என்ற வேறுபாடு பதிப்பில் காணப்படுகிறது. அவ்வடி என்பதால் சுட்டப் படுவன கலிப்பாவுக்குரியதாகக் கூறப்படும் நெடிலடி, கழிநெடிலடி ஆகியனவே (பொ. 365) தவிர அளவடியன்று. எனவே பதிப்பில் காணப்பெறும் **அளவடிக்கென்ப** என்னும் பாடம் பொருத்தமில் லாதது.

"எழுசீரிறுதி ஆசிரியங்கலியே" (பொ. 381) என்பது கலிப் பாவுக்கு முடிவுணர்த்தும் நூற்பா. "வெண்பா இயலினும் பண்புற முடியும்" (பொ. 382) எனவரும் அடுத்த நூற்பாவும் கலிப்பாவுக் குரிய முடிவுணர்த்துவதே. உரையாசிரியர்கள் மூவரும் இவ்விரு நூற்பாக்களிலும் ஒருமித்த பாடங் கொண்டுள்ளனர். '**எழுசீரிறுதி**' (பொ. 381) என்பதற்கு '**முச்சீரிறுதி**' என்ற பாடம் பதிப்பில் உள்ளது. பொருள் நிலையில் 'முச்சீரிறுதி' என்னும் பாடம் பொருத் தமுடையதே. எனினும் 'எழுசீரிறுதி' என்பதால் கலிப்பாவின் இறுதி, ஆசிரியம்போல் ஈற்றயலடி முச்சீராகவும், வெண்பாவைப் போல ஈற்றடி முச்சீராகவும் வரும் என்ற கருத்து உணர்த்தப் படுகிறது. எழுசீரிறுதியாசிரியம் - எனவே ஆசிரியவடி, பலவும் வந்து ஈருத்தடி முச்சீராகவே வருமென்பதூஉம் வெண்பாவியல்; எனவே கட்டளை வெண்பாவானும் சீர்வகைவெண்பாவானும் வந்து ஈற்றடி முச்சீரான் வருமென்பதூஉம் பெற்றும் என இக்கருத்தை நச்சினார்க்கினியர் விளக்குவர். இக்கருத்து '**முச்சீரிறுதி**' என்னும் பாடத்தால் பெறப்படாமையால் '**எழுசீரிறுதி**' என உரையாசிரியர் கள் மூவருங்கொண்ட பாடமே சிறப்புடையது எனக் கொள்ளலாம்.

தொடைகளின் எண்ணிக்கையை விரித்துணர்த்தும் நூற்பா வில் (பொ. 406) ஐயிராயிரத்தாறைஞ்ஞூற்றிருடு, தொண்டு தலை யிட்ட பத்துக்குறை எழு நூற்றொன்பஃது எனவரும் எண்ணிக்கைத் தொடர் உள்ளது. இந்தொடர் மூன்று உரையாளர்களாலும் ஒன் ருகவே உரைக்கப்பட்டாலும், தொண்டு கூட்டிப் பொருள் கொண்டு மொத்த எண்ணிக்கை செல்வதில் வேறுபாடு உண்டு. இளம் பூரணர் கருத்துப்படி 13699 என்றும், பேராசிரியர் கருத்துப்படி 13708 என்றும், நச்சினார்க்கினியர் கருத்துப்படி 19291 என்றும் இவ்வெண்ணிக்கை கூறப்படும். பதிப்பொன்றில் 'எழுநூற்றொன்பஃது

என்பதற்கு 'எழுநூற்றென்று' என்ற பாடம் உள்ளது. முன்னரே எண்ணிக்கை வகையில், மூன்று தொகை உள்ளமையால் இப் பாடம் தேவையில்லாதது.

வாயுறை வாழ்த்தை உணர்த்தும் நூற்பாவில் (பொ. 419) **'வேம்பும் கடுவும் போல'** எனவரும் உரையாசிரியர்கள் பாடத்துக்கு **'வேம்பும் கரும்பும் போல'** என்றும், செவியறிவுறூஉவை உணர்த்தும் நூற்பாவில் (பொ. 419) 'புரையோர் நாப்பண் **அவிதல்** கடனென' எனவரும் உரையாசிரியர்கள் பாடத்துக்கு 'புரையோர் நாப்பண் **நவிலுதல்** கடனென' என்றும் பதிப்புக்களில் காணப்பெறும் பாடங் கள் சிறிதும் பொருத்தமற்றவை என்பதோடு முரணிய பொருள் பயப்பனவுமாகும்.

ஒத்தாழிசைக் கலியின் பாகுபாட்டைக் கூறும் நூற்பாவில் 'தரவு போக்கு **அடையென**' எனவரும் உரையாசிரியர்கள் மூவருங் கொண்ட பாடத்தில் '**அடையென**' என்பதற்கு '**இடையென**' எனப் பதிப்பில் பாடம் உள்ளது. அடை என்பது தனிச்சொல் என்னும் கலி உறுப்பைச் சுட்டும் சொல். 'இடை' என்பது தனிச்சொல்லைக் குறிப்பிடாது. எனவே '**அடையென**' என வருவதே ஏற்புடையது. இது போலவே அடைநிலைக் கிளவி (பொ. 440) எனவரும் பிறி தொரு நூற்பாவிலும் '**இடைநிலைக் கிளவி**' என்ற பதிப்புப் பாடம் உள்ளதும் பொருத்தமன்று. தரவுக்கு அடிவரையறை உணர்துங் கால் (பொ. 438) '**நாலடி இழிபாய்**' எனவரும் உரையாசிரியர்கள் பாடத்துக்கு '**நாலிரண்டடி இழிபாய்**' எனவரும் பதிப்புப் பாடமும் ஏற்புடையதன்று.

கற்பின்கண் கூறத்தகுவோரை உணர்த்தும் நூற்பாவில் (பொ. 491) முன்னுறக் கிளந்த **அறுவரொடு தொகைஇ'** என இளம்பூரணரும் முன்னுறக் கிளந்த '**கிளவியொடு தொகைஇ**' எனப் பேராசிரியர், நச்சினார்க்கினியர்ரும் பாடங் கொண்டுள்ளனர். இந் நூற்பாவில் (பொ. 491) பாணன் முதலாக அறுவரும், முன்னூற் பாவில் (பொ. 490) பார்ப்பான் முதலாக அறுவரும் கூறப்பட்டுள்ள னர். இவர்கள் கற்பின் கண் கூற்று நிகழ்ததுதற்குரியார் என்பதே நூற்பாவின் கருத்து. முன்னர்க் கூறப்பட்ட கிளவியொடு என்பதை

விட 'அறுவரொடு' என்ற பாடமே பொருத்தமாக உள்ளது. எனவே இங்கு இளம்பூரணர் கொண்ட பாடமே சிறப்புடையது.

பிறிதொரு நூற்பாவில் (பொ. 499) 'பரத்தை வாயில் எனவிரு வீற்றும்' என இளம்பூரணர், நச்சினார்க்கினியரும், பரத்தை வாயில் எனவிரு கூற்றும், எனப்பேராசிரியரும் பாடங் கொண்டுள்ளனர். இங்கு 'எனவிரு வீற்றும்' என்பதைவிடப் பேராசிரியர் கொண்ட 'எனவிரு கூற்றும்' என்ற பாடமே பொருள் நிலையில் பொருத்தமுற அமைந்துள்ளது.

புறனடைவிதி கூறும் ஒரு நூற்பா,"மாட்டும் எச்சமும் நாட்ட மின்றி, உடனிலை மொழியினும் தொடைநிலை பெறுமே" (பொ. 512) என அமைந்துள்ளது. இது இளம்பூரணர் கொண்ட பாடம். இதில் 'தொடை நிலை பெறுமே' என்பதற்குத் 'தொடர் நிலை பெறுமே' எனப் பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் பாடங்கொண்டுள்ளனர். தொடர் நிலை பெறுமே' என்ற பாடமே இங்குப் பொருந்தியதாக அமைந் துள்ளது. தொடர்நிலைச் செய்யுள், மாட்டு எச்சம் ஆகியன இன்றிக் கிடந்தவாறே அமையச் செய்யப் பெறுதலும் உண்டு. என்பது நூற்பாக்கருத்தாகும். எனவே கருத்தைச் சிறப்புறப் பொருந்தும் வகையில் விளக்குவதாக அமைந்த 'தொடர்நிலை பெறுமே' என்ற பேராசிரியர், நச்சினார்க்கினியர் பாடம் இவண் ஏற்கத்தக்கதாகும்.

"புறப்பாட்டு வண்ணம்முடிந்தது போன்று முடியாதாகும்' (பொ. 526) எனவரும் நூற்பா, புறப்பாட்டு வண்ணம் பற்றிக் கூறுவதாகும். இளம்பூரணர் பேராசிரியர், நச்சினார்க்கினிய' மூவரும் 'முடிந்தது போன்று' என்றே பாடம் கொண்டனர். பதிப்பு ஒன்றில் 'முடிந்தது போன்று' என்பதற்கு 'முடிந்தது ஒன்று' என்ற வேறுபாடு உள்ளது. அகப்பாட்டு வண்ணம் முடியாததுபோல முடிந்து வருவது (பொ. 525) புறப்பாட்டு வண்ணம் முடிந்தது போல முடியாதது வருவதுமே இலக்கணங்கள் ஆதலால், 'முடிந்தது ஒன்று' என்ற பதிப்புப்பாடம் பொருத்தமற்றதாக உள்ளது.

"ஒரூஉ வண்ணம் ஒரூஉத் தொடை தொடுக்கும்" (பொ. 528) என்பது ஒரூஉ வண்ணம் உணர்த்தும் நூற்பா. ஒரூஉத் தொடை தொடுக்கும்' எனப் பாடங்கொண்ட இளம்பூரணர் 'ஒரூஉ

வண்ணமாவது நீங்கின தொடையாகித் தொடுப்பது' எனப் பொருள் கூறி அது 'செந்தொடையாம்' என விளக்கமும் கூறுவர்.

பேராசிரியர் 'ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும்' எனப் பாடங் கொண்டுள்ளார். மேலும் ஒரீஇத் தொடுத்தலென்பது எல்லாத் தொடையும் "ஒரீஇச் செந்தொடையால் தொடுத்தலென் பாரும் உளர். செந்தொடையும் தொடையாகலான் அற்றன் றென்பது" என இளம்பூரணர் கருத்தை மறுத்தும் கூறுவர். நச்சினார்க்கினியரும் பேராசிரியர் கொண்ட பாடத்தையே தன் பாட மாகவும் கொண்டுள்ளார்.

இளம்பூரணர் கொண்ட பாடமும், கூறும் விளக்கமும் தொடைப் பகுதிக்குரிய விளக்கமாக அமைந்துள்ளதே தவிர, வண்ணத்திற்குரிய விளக்கமாக அமையவில்லை ஆதலாலும், பேராசிரியர், நச்சினார்க்கினியர் கொண்ட பாடம் பொருள் விளக்க நிலையில் சிறப்பாக அமைந்திருத்தலாலும் 'ஒரீஇத் தொடுக்கும்' என்ற பாடமே சிறப்புடையதாக ஏற்கலாம்.

அம்மையென்னும் செய்யுள் வனப்பைக் கூறும் நூற்பா "சின் மென்மொழியால் சீர்புனைந்தியாப்பின் அம்மை தானே அடிநிமிர் வின்றே" (பொ. 536) என வருகிறது. இதுஇளம்பூரணர் கொண்ட அமைப்பு. 'சின்மென்மொழியால் தாய பனுவலோடு' என்று பேராசிரி யரும் 'சின்மென் மொழியால் தாய பனுவலின்' என்று நச்சினார்க் கினியரும் இங்குப் பாடங்கொள்கின்றனர்.

"தாயபனுவலின் என்பது அறம் பொருளின்ப மென்னும் மூன்றற்கும் இலக்கணங் கூறுவன போன்றும் இடையிடையே அன்றியும் தாவிச் செல்வதென்றவாறு. அங்ஙனம் வந்தது பதி னெண் கீழ்க்கணக்கு" என்று நச்சினார்க்கினியர் இங்கு விளக்கம் தந்திருப்பதும் பேராசிரியரும் இம்முறையிலேயே விளக்கம் கூறி யிருப்பதும் சிறப்பாக உள்ளன.

எனவே 'சின்மென் மொழியால் தாயபனுவலோடு என்ற பாடம் சிறப்புடையதாக ஏற்கத்தக்கது. 'சின்மென் மொழியால் தாய பனுவலின்' என்ற நச்சினார்க்கினியர் பாடமும் 'சின்மென் மொழியால் தாயபனுவலொடு' என்ற பதிப்புப் பாடமும் பொருள் நிலையில் பேராசிரியர் பாடத்தை ஒத்தனவே.

"செய்யுள் மொழியால் சீர்புனைந்து யாப்பின்" (பொ.537) எனப்பின்னூற்பா அமைப்பின் தாக்கத்தால் "சின்மென் மொழியால் சீர்புனைந்துயாப்பின்" (பொ.536)எனவரும் பாடம் எழுந்திருக்கலாம் எனக் கருதத்தோன்றுகிறது.

இயைபு என்னும் வனப்பைக் கூறும் நூற்பா (பொ. 541) "ஞகார முதலா னகார ஈற்றுப் புள்ளி இறுதி இயைபெனப்படுமே" என இளம்பூரணத்தில் அமைந்துள்ளது. பேராசிரியர் 'ஞகாரை முதலா **னகாரை ஈற்று'** என வேற்றுமை உருபுடன் இணைத்துப் பாடங்கொண்டாலும் இதில் பொருள் மாற்றமில்லை. நச்சினார்க்கினியர் **'ஞகாரை முதலா ளகார ஈற்று'** எனப்பாடங் கொள்கின்றார். 'ஞகாரை முதலா **னகாரை** ஈற்று' என்றும் ஒரு பதிப்புப் பாடம் உள்ளது.

தனி மெய்களில் மொழிக்கு ஈருகவரும் பதினொரு மெய்யெழுத்துக்களே இங்குக் குறிப்பிடப்பெறும் மெய்யெழுத்துக்கள். எனவே ஞகரம் முதல் ளகரம் இறுதியாக என்றிருப்பதே பொருத்தம். எனவே **ஞகாரை முதலா ளகார** ஈற்று' எனவரும் நச்சினார்க்கினியர் பாடத்தை இங்குச் சிறப்புடையதாக ஏற்கலாம்.

புலன் என்னும் வனப்பை உணர்த்தும் நூற்பாவில் (பொ. 542) **'தெரிந்த மொழியால்'** என்று இளம்பூரணரும், **'சேரிமொழி யால்'** எனப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் ஆகியோரும் பாடங் கொண்டுள்ளனர். 'தெரிந்த மொழி என்பதற்கு வழக்குச் சொல்' என இளம்பூரணர் பொருள் கொள்வர். 'சேரி மொழி-என்பதற்குப் பாடிமாற்றங்கண்' என்று விளக்கம் கூறப்படும். இளம்பூரணர் கூறும் பாடத்தை விடப் பேராசிரியர், நச்சினார்க்கினியர் கொண்ட பாடமே இங்குச் சிறந்து விளங்குகிறது.

56. அப்பர்-உம்பல்

"எருதும் ஏற்றையும்" (பொ. 546) எனத் தொடங்கும் ஆண் பாற் பெயர்கூறும் மரபியல் நூற்பாவில் "மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்" எனவரும் தொடரை இளம்பூரணர் பேராசிரியர் இருவரும் பாடமாகக் கொண்டுள்ளனர். மர்ரே பிற்சேர்க்கையில் **'அப்பரும்'** என்பதற்கு **'உம்பலும்'** என்பது பாடமாக உள்ளது. இங்குக் குறிப்பிடப் பெறும் ஆண்பாற் பெயர்கள் பின்னே நூற்பாக்

களில் பயில்பவை. "மோத்தையும் தகரும் உதளும் அப்பரும், யாத்த வென்ப பாட்டின் கண்ணே" (பொ. 592) எனவரும் நூற்பாவில் பயின்ற சொற்களே முன்னரும் (பொ. 546) அமைந்தன பின்னுள்ள நூற்பாவில் 'அப்பரும்' என்றே உள்ளதால் 'உம்பலும்' என்பது பொருத்தமில்லாத பாடம் என்பது தெளியப்படும்.

"அப்பரென்பது இக்காலத்து வீழ்ந்தது போலும்" என்ற பேராசிரியரின் குறிப்புரையால் வழக்கிழந்த சொல்லை விடுத்துப் பிறிதொரு சொல்லைப் புகுத்தும் முயற்சியால் இப்பாடம் பிறந்திருக்கலாம்.

57. மாவும் மாக்களும்

ஐயறிவு உயிரை உணர்த்தும் மரபியல் நூற்பாவில் (பொ. 576) 'மாவும் புள்ளும் ஐயறிவினவே' என இளம்பூரணரும் 'மாவும் மாக்களும் ஐயறிவினவே' எனப் பேராசிரியரும் பாடங் கொண்டுள்ளனர். மாவென்பது நாலுகால் விலங்கு; புள்ளென்பது பறவைகள்; மாக்கள் என்பது மனவுணர்ச்சியில்லாதார். இங்கு மாக்கள் எனப் பொது நிலையில் கூறுவது பொருத்தமின்றி உள்ளது, நன்னூல் நூற்பாவிலும் [1] 'விலங்கு புள்' ஆகியனவே சுட்டப்பட்டுள. எனவே இங்கு இளம்பூரணர் கொண்ட 'புள்ளும்' என்ற பாடத்தைப் பொருத்தமுடையதாகக் கொள்ளலாம்.

58. அறுபிறப்புரிய

ஆண் பெயர்களைப்பாகுபடுத்தி உரைக்கும் நூற்பா வரிசையில் "நீர் வாழ் சாதியும் அது பெறற்குரிய" (பொ. 588) என இளம்பூரணர் ஒரு நூற்பாவில் பாடங்கொண்டார். 'அது' என்ற சுட்டு முன் நூற்பாவில் (பொ. 587) உள்ள 'போத்து' என்ற பெயரைக் குறிப்பிடும். எனவே நீர்வாழும் உயிரினங்களின் ஆண்பாற் பெயரும் போத்து' எனக் கூறுதற்குரியது என்ற கருத்துப் பெறப்படும்.

பேராசிரியர் 'நீர்வாழ் சாதியுள் அறுபிறப்புரிய எனப் பாடங் கொண்டு "நீர்வாழ் சாதியுள் அறுபிறப்பென்பன சுறவும் முதலையும் இடங்கரும் கராமும் வராலும் வாளையுமென இவை" என விளக்கமும்

1. நன்-உரியியல், நூ. 8

கூறியுள்ளார். இளம்பூரணரைப்போல் பொதுவாகக் கொண்டால், நீர்வாழ் சாதி அனைத்துக்கும் உரியதாகும்; அது தவறாகிவிடும். எனவே பேராசிரியர் வரையறுத்து ஆறுஉயிரினங்களை மட்டும் சுட்டியிருப்பது பொருத்தமாக உள்ளது. 'அறுபிறப்புரிய' என்ற பேராசிரியர் பாடத்தை இங்குச் சிறந்ததாகக் கொள்ளலாம்.

59. பாட்டி என்பது

"பாட்டி என்பபன்றியும் நாயும்" (பொ. 610) என்ற மரபியல் நூற்பா 'பாட்டி' என்னும் பெண்பாற் பெயர் பன்றிக்கும் நாய்க்கும் உரியது எனச் சுட்டுகிறது. இது இளம்பூரணர் கொண்ட பாடம். இதே கருத்தைப் "பாட்டி என்பது பன்றியும் நாயும்" எனப்பேராசிரியரும் கூறுவர். மர்ரே பிற்சேர்க்கையில் "பாட்டி பன்றியும் நரியும் நாயே" என்றுள்ளமையால் பாட்டி என்னும் பெண்பாற் பெயர் பன்றி, நரி, நாய் ஆகியமூன்றுக்கும் உரியது என்னும் கருத்துச் சுட்டப்படுகிறது. இங்குப் புதிதாக 'நரி' என்பதும் சேர்கிறது.

தொல்காப்பியர் இதற்கு அடுத்து "நரியும் அற்றே நாடினர் கொளினே" (பொ. 611) எனத் தனி நூற்பா ஒன்று செய்து நரிக்கும் இப்பெயர் உரியது என்பதைச் சுட்டுவதால் இவ்வேறுபாடு தேவையற்றதாகிறது. இளம்பூரணர் பாடத்தை இங்குச் சிறந்ததாகக் கொள்ளலாம். முன்னும் பின்னுமுள்ள இரு நூற்பாக்களின் கருத்தையும் ஒரு சொல் மாற்றத்தால் இவ்வேறுபாடு சுட்டுகிறது என்பதும் குறிப்பிடத் தக்கதாகும்,

60. ஆரமும் தேரும்

வைசியர், வேளாளர் ஆகியோருக்கும் வில், வேல், கழல், கண்ணி, தார், ஆரம், தேர், மா ஆகியன உரிய என்பதை உணர்த்தும் மரபியல் நூற்பாவில் (பொ.628) சில வேறுபாடுகள் உள.

'கழலும்' என இளம்பூரணரும் பேராசிரியரும் கூற, 'குழலும்' என ஒரு பாடவேறுபாடு பதிப்பில் உள்ளது. 'கழல்' என்பதே வீரத்தோடு வாழ்ந்த மன்னருக்கு உரியது. எழுத்து மாற்றம் விளைத்த பிழையால் இங்குக் 'குழலும்' என்ற பொருந்தாப் பாடம் எழுந்தது.

'ஆரமும்' என்றும், 'தேரும்' என்றும் இளம்பூரணர் கொண்ட பாடங்களுக்குப் பேராசிரியர் 'மாலையும் வாளும்' எனக் கொண்டுள்ளார். பேராசிரியர் கூறுவனவும் பொருந்தும் எனினும், பழமைச் சிறப்புடையனவாய இளம்பூரணர் பாடங்களையே இங்குக் கொள்ளலாம்.

மேலும் இச்சிறப்புக்கள் அனைத்தும் மன்னறல் பெற்ற மரபினுல் வைசியருக்கும் வாணிகருக்கும் உரிய என இளம்பூரணர் கூற, இவை முடியுடை வேந்தரல்லாத குறுநில மன்னர்க்குரியன எனப் பேராசிரியர் கூறும் பொருள் மாற்றமும் அறியத்தக்கது.

81. மரத்துக்கு அங்கம்

இலை, முறி, தளிர், தோடு, சினை, குழை, பூ, அரும்பு, நனை ஆகிய உறுப்புப் பெயர்கள் மரத்துக்கு அங்கமாவன எனக் கூறும் மரபியல் நூற்பாவில் (பொ, 633) 'முறியே தளிரே' என இளம் பூரணர் கொண்டதைப் பேராசிரியர் 'தளிரே முறியே' என மாற்றிக் கொள்வர். தளிரே என்பதற்குக் 'கோடே' என்றும் ஒரு பதிப்பு வேறுபாடு உள்ளது.

மேலும் தோடே குழையே என இளம்பூரணரும், பேராசிரியரும் கொள்ளும் பாடங்களுக்குக் கோடே தழையே என்றும் பதிப்புக் களில் பாடம் உள. இவையெல்லாம் பிறழ்ச்சியால் விளைந்தவை. இங்கெல்லாம் இளம்பூரணர் பாடங்களையே பழமைச் சிறப்பு நோக்கிப் பொருந்துவதென ஏற்கலாம்.

எழுத்ததிகாரப் பகுதியில் அமைந்த மொத்தமுள்ள 483 நூற் பாக்களில் பாடவேறுபாடு அமைந்த 72 நூற்பாக்களில் மட்டும் 83 இடங்களில் பொருள் மாற்றம் செய்யும் 22 வேறுபாடுகள் இப்பகுதி யில் ஆராயப்பட்டு நிறுவப்பட்டுள.

சொல்லதிகாரத்தில் அமைந்த மொத்தமுள்ள 456 நூற்பாக் களில் பாடம் வேறுபடும் 153 நூற்பாக்களில் மட்டும் 218 இடங்களில் 251 வேறுபாடுகள் உள. இவற்றுள் பொருள் வேறுபாட்டு நிலையில் ஆயத்தக்கனவாய் அமைந்த 26 வேறுபாடுகள் இப்பகுதியில் ஆராயப்பட்டு நிறுவப்பட்டுள்ளன.

பொருளதிகாரப் பகுதியில் அமைந்த 656 நூற்பாக்களில் வேறுபாடுகள் அமைந்த 317 நூற்பாக்களில் 593 இடங்களில் 699 வேறுபாடுகள் உள. இவற்றில் பொருள் வேறுபாடுடையே 83 பாடங்கள் இப் பகுதியில் ஆராயப்பட்டு நிறுவப்பட்டுள.

மொத்த நூற்பாக்களின் எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு பங்கு அளவு மொத்தப் பாடவேறுபாடுகள் தொல்காப்பியத்துள் அமைந்துள. மொத்தப் பாடவேறுபாடுகளின் எண்ணிக்கையில் பாதிக்குமேல் உரையாசிரியர்களின் பாடங்களால் அமைந்தனவே. மொத்த வேறுபாடுகளின் எண்ணிக்கையில் ஏறத்தாழ 10 சதம் மட்டுமே பொருள் வேறுபாடுடைய பாடங்கள். எழுத்தை விடச் சொல்லிலும், சொல்லை விடப் பொருளிலும் பாடவேறுபாடுகளின் எண்ணிக்கை, பொருள் வேறுபாடில்லாதவற்றின் எண்ணிக்கை, பொருள் வேறுபாடுள்ள பாடங்களின் எண்ணிக்கை ஆகியன மிகுந்து கொண்டே வருகின்றன.

6. சங்க இலக்கியப் பாடவேறுபாடுகள் பகுப்பாய்வு

எட்டுத் தொகை, பத்துப்பாட்டு என அமைந்த நூல்கள் தமிழிலுள்ள தொன்மையான இலக்கியங்கள். அகம், புறம் என்ற இரு பொருள்களின் மேலும் இவ்விலக்கியங்கள் எழுந்துள. இவற்றுக்கு அடிப்படை இலக்கண நூலாக விளங்குவது தொல்காப்பியமேயென்பது பலரும் ஒப்புக்கொண்ட கருத்து.

தொல்காப்பியத்தின் பாட வேறுபாடுகளை முற்பகுதியில் விளக்கிய இவ்வாய்வில், அதனோடு மிகுதியும் தொடர்புடைய சங்க இலக்கியப் பாட வேறுபாடுகளை ஆய்வதே இயல்பும் நெறியுமாகும். சங்க இலக்கியங்களைத் தொகுத்த பெருமக்கள் தம் காலத்தில் பல ஏடுகளைப் பார்த்து மூலபாடங்களைச் செம்மை செய்திருக்கக் கூடும். அதற்குரிய நேர்சான்றுகள் இல்லையெனினும் உரையாசிரியர்கள் மேற்கொண்ட உரைநெறிகளை நோக்கும்போது, பல்வேறு பாட வேறுபாடுகளைப் பார்த்து மூலபாடங்களைச் செப்பம் செய்வதும் ஒரு நூலுக்குரிய ஒழுங்கு முறையாக இருந்தது என ஊகிக்கலாம்.

தொல்காப்பியத்திற்கு உரையாசிரியர்கள் பெருகியிருந்த அளவிற்கு இடைக்காலத்தில் சங்க இலக்கியங்களுக்கு உரையாசிரியர்கள் பலர் தோன்றவில்லை. நச்சினார்க்கினியரே இவ்விலக்கியங்களுக்குப் பேருரையாசிரியராக விளங்குகின்றார். குறுந்தொகைக்குப் பேராசிரியர் உரை எழுதியிருந்தாலும் அவ்வுரை இன்று நமக்குக் கிட்டவில்லை. பரிபாடலுக்குப் பரிமேலழகர் உரையுண்டு. பதிற்றுப்பத்துக்குக் குறிப்புரை யொன்று உளது. புறநானூறு, ஐங்குறு நூற்றுக்குப் பெயர் அறியப்பெறாத பழைய உரையாசிரியர்கள் சில குறிப்புக்கள் வரைந்துள்ளனர். பத்துப்பாட்டு முழுமைக்கும் நச்சினார்க்கினியர் உரைவிளங்குகிறது. இவ்வகையில் பாடவேறுபாடுகளைக் காண்பதற்குரிய சார்பு நிலைகள் நமக்குக் குறைவாகவேயுள. எனினும் நச்சினார்க்கினியர் உள்ளிட்ட தொல்லுரை ஆசிரியர்கள் தம் உரைகளில் ஆங்காங்கு தம் காலத்து வழங்கிய பாட வேறுபாடுகளைக் காட்டியும் போந்தனர்.

சங்க இலக்கியங்கள் நெடுங்காலமாக வழி வழி கற்கப்பட்டு வந்த பனுவல்கள் ஆதலின் அவற்றுக்குரிய ஏடுகளின் எண்ணிக்

கைகளுக்குக் குறைவில்லை. எனவேதான் உ. வே. சாமிநாதையர் போன்ற பதிப்பாசிரியர்கள் ஏடுகள் பலவற்றைத் தேடிப் பார்த்துப் பாட வேறுபாடுகளைத் தொகுத்து இந்நூற்றுண்டில் பல்வேறு பதிப்புக்களைக் கொண்டு வந்தனர். இப் பதிப்புக்களே சங்க இலக்கியம் பற்றிய இப்பாட வேறுபாட்டு ஆய்வுக்குரிய கருவி நூல்கள்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்ற வழக்குப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்டு எட்டுத் தொகை பற்றிய பாட வேறு பாட்டுச் செய்திகள் முன்னரும், பத்துப்பாட்டிற்குரியன பின்னருமாக இக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

பாட வேறுபாடுகள் பற்றிய ஆய்வு என்பதால் இது தொடர்பான கட்டுரைகளை எந்த வரிசையில் அமைப்பினும் பொருந்தும். எனினும்

"நற்றிணை, நல்லகுறுந்தொகை, ஐங்குறுநூறு
ஒத்தபதிற்றுப்பத்து, ஓங்கு பரிபாடல்,
கற்றறிந்தார் ஏத்தும் கலியே, அகம், புறம், என்று
இத்திறத்த எட்டுத்தொகை."

எனவரும் பழம் பாடலின் வைப்பு முறைப்படி எட்டுத் தொகை நூல்கள் இக்கட்டுரையில் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன.

'முருகு, பொருநாறு, பாணிரண்டு, முல்லை,
பெருகு வளமதுரைக் காஞ்சி - மருவினிய
கோலநெடுநல்வாடை, கோல்குறிஞ்சி, பட்டினப்
பாலை, கடாத்தொடும், பத்து'

எனவரும் பிறிதொரு பழம் பாடலைப் பின்பற்றி இவ்வாய்வுரையில் பத்துப் பாட்டு நூல்கள் வரிசைப்படுத்தப்பட்டுள.

சங்க இலக்கியப் பாட வேறுபாடுகள் எழுத்து, சொல், பொருள், இலக்கணம், ஒப்புமையென ஐம்பெரும் பிரிவுகளில் பகுக்கப்பட்டு இக்கட்டுரைக்கண் வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. நற்றிணை

எட்டுத்தொகை நூல்களின் வரிசையில் முதலாவதாக அமைந்த நற்றிணையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை நானூறு.

'நற்றிணை நானூறு' என்பதே இந்நூலுக்கு அமைந்த பழைய பெயர். பெருந்தேவனார் பாடிய கடவுள் வாழ்த்துப் பாடல் நூலின் தொடக்கத்தில் உள்ளது.

இந்நூலில் அமைந்த பாடல்கள் ஒன்பது முதல் பன்னிரண்டு அடி வரை அமைந்தவை. இளம்பூரணரும் நச்சினார்க்கினியரும் தொல்காப்பியப் பொருளதிகாரப் பகுதியில் மேற்கோள் காட்டும் ஒரு நற்றிணைப் பாடலில் (380) முறையே இரு புதிய அடிகளும், மூன்று புதிய அடிகளும் காணப்படுகின்றன. இப் புதிய அடிகள் நற்றிணைப் பதிப்புக்களில் இல்லை.

இந்நூலில் அமைந்த பாடல்களில் 234ஆவது பாடலின் முழுப் பகுதியும் 385 ஆவது பாடலின் பிற்பகுதியும் ஏடுகளில் இல்லை என இந்நூலின் முதல் பதிப்பாசிரியரும் உரையாசிரியருமான பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் குறிப்பிட்டுள்ளார் [1].

'சான்றோர் வருந்திய வருத்தமும் ...' எனத் தொடங்கும் மேற்கோள் பாடல் [2] கிடைக்கப் பெறாத நற்றிணைப் பாடலாக (234) இருத்தல் வேண்டும் எனக் களவியற் காரிகைப் பதிப்பில் பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை முதன் முதலாகக் குறிப்பிட்டார். 1957ல் மர்ரே பதிப்பில் 'சான்றோர் வருந்திய வருத்தமும்' எனத் தொடங்கும் பாடலையும் 'நெருநலும் முன்னாள் எல்லையும்.........' [3] எனத் தொடங்கும் பாடலையுங் காட்டி மேற்குறித்த செய்யுட்கள் இரண்டில் எது நற்றிணையில் மறைந்துபோன பாடல்? என்ற வினாக்குறியும் எழுப்பப்பெற்றது.

1962 ல் வெளியான கழகப் பதிப்பில் 'சான்றோர் வருந்திய வருத்தமும் எனத் தொடங்கும் பாடலே நற்றிணையில் மறைந்த 234 ஆம் பாடல் என ஏற்றுப் பதிப்பிக்கப் பெற்றது. பின்னிணைப்பில் 'நெருநலும் முன்னாள்...' எனத் தொடங்கும் பாடலையும் சுட்டி 'அறிஞர் ஆய்ந்து பொருந்துவதைக் கொள்க' என விளக்கமும் இப் பதிப்பில் எழுதப்பெற்றது. 385 ஆம் பாடலின் பிற்பகுதி எந்தப் பதிப்பிலும் இல்லை.

1. நற்-பின்னத்தூர் நாராயணசாமி ஐயர் உரை-முகவுரை.
2. இறை-உரை-நூ 28-மேற்கோள்
3. தொ. பொ. களவியல்-நூ. 23. நச்சி. மேற்கோள்

1. 1. பாடிய புலவர்கள்

சங்க இலக்கியத்தில் அமைந்த 2381 பாடல்களில் 1862 அகத்திணைக்கு உரியவை. இவற்றை 378 புலவர் பெருமக்கள் இயற்றியுள்ளனர்.[1] நற்றிணையில் மட்டும் அமைந்த பாடல்களைப் பாடிய புலவர்களின் எண்ணிக்கையைப் பலவாருகக் கூறுவர். 275 புலவர்கள் என்றும்,[2] 192 புலவர்கள் என்றும்[3] 187 புலவர்கள் என்றும்[4] பல கருத்துக்கள் உள. பல பாடல்களுக்கு ஆசிரியர் களின் பெயர் அறியப்பெருமையே வேறுபட்ட இக்கருத்துக்களுக்குக் காரணம்.

1. 2. பதிப்புக்கள்

நற்றிணை உரைப்பதிப்பு முதன் முதலாகப் பின்னத்தூர் நாரா யணசாமி ஐயரின் பொழிப்புரையோடு 1914ல் வெளிவந்தது. 1952லும், 1956லும் கழகம் இந்நூலை வெளியிட்டது. 1962ல் பெருமழைப்புலவரின் விளக்கவுரையோடு இணைத்துக்கழகப் பதிப்பு வெளியானது. தொடர்ந்து கழக வழி, இப்பதிப்பு மேலும் சிலமுறை வெளிவந்தது. ஔவை துரைசாமி பிள்ளையின் உரையொடு அருணு வெளியீட்டகத்தின் மூலம் இரு தொகுதிகளாக வெளிவந்த நற்றிணைப் பதிப்புக்களில் (1966) அடிக்குறிப்பில் பாடவேறுபாடுகள் தொகுத்து அமைக்கப்பட்டுள்ளன.

நற்றிணையின் மூலப்பதிப்பு 1940ல் சைவ சித்தாந்த சமாசம் மூலமாகவும், 1957ல் மர்ரே வெளியீட்டகத்தின் மூலமாகவும், 1967ல் பாரி நிலைய வழி சமாச வெளியீட்டின் மறுபதிப்பாகவும் வெளியானது.

1. 3. வேறுபாட்டு வகையும் தொகையும்

நற்றிணையில் கடவுள் வாழ்த்துடன் கூடிய 401 பாடல்களில் 269 பாடல்கள் பாட வேறுபாடு கொண்டவை. எஞ்சிய 132 பாடல்களில் பாடவேறுபாடுகள் இல.

---

1. தமிழ்க்காதல் - டாக்டர். வ. சுப. மாணிக்கம், ப, 328.
2. நற் – கழகம்- ப.7.
3. நற் - மர்ரே - ப.4
4. தமிழ் மொழி இலக்கிய வரலாறு – டாக்டர். ம. இராச மாணிக்கம், ப. 165

பாடம் வேறுபடும் 269 பாடல்களில் 607 இடங்களில் 666 வேறுபாடுகள் அமைந்துள. இவற்றுள் பொருள் வேறுபாடு உடையவை 96 மட்டுமே. எஞ்சிய 570 பொருள் வேறுபாடு இல்லாதவை.

2. குறுந்தொகை

நாலடிச் சிற்றெல்லையும் எட்டடிப் பேரெல்லையும் உடைய அகவற்பாக்களால் இயன்ற நூல் குறுந்தொகை. எட்டுத்தொகை நூல்களில் இதுவே முதலில் தொகுக்கப்பட்ட நூல். இந்நூலில் கடவுள் வாழ்த்துச் செய்யுளொன்றும் அகப்பொருள் பற்றிய பாக்கள் 401 ம் உள.

இந்நூலில் 8அடி எல்லையைக் கடந்து 9 அடிகளையுடையதாக 307 ஆம் செய்யுள் அமைந்துள்ளது என்றும், அடியளவின்படி தொகுக்கப்பட்ட மூன்று நூல்களில் நற்றிணை, அகநானூறு என்பன 400 பாடல்களே கொண்டுள்ளதற்கு ஏற்ப, மூன்றில் பிறிதொன்றான குறுந்தொகையிலும் 400 பாடல்கள் இருப்பதாகக் கொள்வதே முறையென்றும், இக்கருத்துக் கேற்ப 307 ஆம் செய்யுளைக் குறுந்தொகைச் செய்யுளன்று என விலக்குதல் நேரிது என்றும் உ. வே. சாமிநாதையர் கூறுவர். எனினும் இவ்வாய்வு அனைத்துப் பதிப்புக்களிலும் உள்ளவாறு அனைத்துப்பாடல்களையும் ஏற்றுச் செய்யப் பெற்றுள்ளது.

2. 1. பதிப்புக்கள்

குறுந்தொகையை முதலில் தி. சௌ. அரங்கசாமி அய்யங்கார் 1915 ல் வெளிப்படுத்தினர். கா. ரா. நமச்சிவாய முதலியார், இராமரத்தின ஐயர் ஆகியோரும் முறையே 1920, 1930ஆம் ஆண்டுகளில் வெளிப்படுத்தியுள்ளதாக அறிகிறோம். இன்று பழமையும் முழுமையும் உடைய பதிப்பாக டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பே விளங்குகிறது. 1937 ஆம் ஆண்டில் இது முதலில் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

கழகம், மர்ரே-நிறுவனம், சைவசித்தாந்த மகாசமாசம் ஆகியவற்றின் பதிப்புக்களும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பதிப்பும் பின்னர் வெளியாயின.

உ. வே. சாமிநாதையரின் பதிப்பில் பாடவேறுபாடுகள் பாடலின் கீழே தொகுத்துச் சுட்டப்பெற்றுள்ளன. அண்ணாமலைப் பல்கலைக்

கழகம் வெளியிட்ட ரா. ராகவையங்காரின் குறுந்தொகை விளக்கப் பதிப்பு இன்றியமையாத சில வேறுபாடுகளை ஆய்ந்து நிறுவியுள்ளது. பிற பதிப்புக்களில் ஆங்காங்கே ஓரிரு புதிய வேறுபாடுகள் குறிப்பிடப் பெற்றுள்ளன.

2. 2. வேறுபாடுகளின் - எண்ணிக்கை

குறுந்தொகையில் கடவுள் வாழ்த்துப் பாடலுடன் மொத்த முள்ள 402 பாடல்களிலும் கிடைக்கக் கூடிய மொத்த வேறுபாடு களின் எண்ணிக்கை 1480 ஆகும். முதல் நூறு பாடல்களில் 7பாடல் களில் மட்டும் வேறுபாடுகள் இல்லை. இரண்டாம் நூறு, மூன்றும் நூறு, நான்காம் நூறு பாடல் தொகுதிகளில் ஒவ்வொன்றிலும் மும்மூன்று பாடல்கள் மட்டுமே வேறுபாடு இல்லாதனவாக உள. மொத்தமுள்ள 402பாடல்களில் 16பாடல் மட்டும் வேறுபாடு இல்லாதனவாக உள. எஞ்சிய 386 பாடல்களில் 1031 அடிகளில் 1196 இடங்களில் 1480 வேறுபாடுகள் அமைந்துள்ளன. பாடல்களின் அடியெண்ணிக்கை, பயின்ற இடங்கள், மொத்த வேறுபாடுகள் ஆகிய விவரங்கள் நான்கு பாடற்றொகுதிகளிலுமாகத் தனித்தனியேஅமைந்துள்ள விவரத் தைக் கீழ்க்காணும் பட்டியலில் காணலாம்.

பாடல் தொகுதி	மொத்தப் பாடல்கள்	வேறுபாடு உள்ளவை	வேறுபாடு இல்லாதவை	வேறுபாடு உள்ள அடி எண்	வேறுபாடு உள்ள இடங்கள்	மொத்த வேறுபாடுகள்
கடவுள் வாழ்த்து	1	1	—	2	2	3
1-100 பாடல்கள்	100	93	7	215	267	361
101-200 ,,	100	97	3	239	276	333
201-300 ,,	100	97	3	285	322	386
301-401 ,,	101	98	3	290	329	397
கூடுதல்	402	386	16	1031	1196	1480

இந்நூலில் 11ஆம் பாடலில் மிக அதிகபட்சமாக 11 இடங்களில் வேறுபாடு அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. 8, 7, 6, 5, இடங்களில் வேறுபடுவனவாகவும் ஒருசில பாடல்கள் உள. அடிப்படைப் பாடமும் ஒரு வேறுபாடுமாக அமைந்தனவே பெரும்பான்மை.

3. ஐங்குறுநூறு

மருதம், நெய்தல், குறிஞ்சி, பாலை, முல்லை என்ற ஐந்திணைகளில் ஒவ்வொன்றுக்கும் உரிய ஒழுக்கங்களைத் தனித்தனியே நூறு பாடல்களால் விளக்கும் அமைப்பு ஐங்குறுநூற்றுக்கு உரியது. ஒவ்வொரு திணையிலும் பத்துப் பத்துப் பாடல்களும், பாடல்கள் மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் உடையனவாகவும் உள.

ஓரம்போகியார், அம்மூவனார், கபிலர், ஓதலாந்தையார், பேயனார் ஆகிய புலவர்கள் முறையே ஐந்து திணைகளையும் பாடியவர்கள். தொடக்கத்தில் அமைந்த கடவுள் வாழ்த்துச் செய்யுளைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார்.

3. 1. பதிப்புக்கள்

உ. வே. சாமிநாதையர் 1903ல் முதன் முதலாக இந்நூலை வெளிப்படுத்தினார். ஔவை துரைசாமிப்பிள்ளையின் விளக்கவுரையோடு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழியாகவும், பொ. வே. சோமசுந்தரனார் உரையோடு கழக வழியாகவும் வெளிவந்துள்ளவை பிற உரைப்பதிப்புக்கள். மர்ரே நிறுவன வெளியீடு சைவ சித்தாந்த மகா சமாச வெளியீடு ஆகியன மூலப் பதிப்புக்கள்.

3. 2. அமைப்பு

உ. வே. சாமிநாதையர் பதிப்பில் ஓரளவு பாடவேறுபாடுகள் அடிக்குறிப்பில் தொகுத்துத் தரப்பட்டுள்ளன. ஔவை துரைசாமி பிள்ளையின் பதிப்பில் இன்றியமையாத பாட வேறுபாடுகள் மட்டும் சிற்சில இடங்களில் பொருள் விளக்கங்களோடு சுட்டப் பெறுவதுடன், சிறந்த பாடம் பயின்ற பிற இலக்கிய மேற்கோள்களும் ஆங்காங்கே காட்டப்பெற்றுள்ளன. கழக உரையில் அடிக்குறிப்பில் சிலவிடங்கள் பாடவேறுபாடுகள் குறிப்பிடப்பெற்றுள.

"இந்நூலின் 129, 130 ஆம் செய்யுட்கள் ஒரு பிரதியிலும் காணப்படவில்லை. 416, 490 ஆம் செய்யுட்களின் இரண்டாமடிகளிற் சீர்கள் குறைந்துள்ளன" என்று உ. வே. சாமிநாதையர் குறிப்பிட்ட இடங்கள் பிற பதிப்புக்களிலும் நிறைவு செய்யப்பட இயலா நிலையி லேயே இன்று வரை உள.

3. 3. வேறுபாடுகள்

ஐங்குறுநூற்றில் கடவுள் வாழ்த்துடன் அமைந்த மொத்த முள்ள 501 பாடல்களில் 298ல் வேறுபாடுகள் உள. எஞ்சிய 203 பாடல்களில் மட்டுமே வேறுபாடுகள் இல. மேலே குறிப்பிடப் பெற்ற 298 பாடல்களில் 436 அடிகளில் 460 இடங்களில் அமைந்த மொத்த வேறுபாடுகளின் எண்ணிக்கை 521 ஆகும். மருதம் முதலாய ஐந்து பகுதிகளில் குறிஞ்சிப் பகுதியில் அதிகமான அளவிலும், முல்லைப் பகுதியில் குறைந்த அளவிலும் பாட வேறுபாடுகள் உள என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாடல்களின் எண்ணிக்கை, வேறுபாடு உள்ளவை, இல்லா தவை, வேறுபாடு பயின்ற அடிகள், இடங்கள், வேறுபாடுகளின் எண்ணிக்கை ஆகியன கீழே பட்டியலில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

பகுதி	மொத்தப் பாடல்	வேறுபாடு உள்ளவை	வேறுபாடு இல்லாதவை	அடிகள்	இடங்கள்	மொத்த வேறு பாடுகள்
கடவுள் வாழ்த்து	1	1	—	1	1	2
மருதம் (1-100)	100	60	40	79	83	99
நெய்தல் (101-200)	100	58	42	82	86	97
குறிஞ்சி (201-300)	100	77	23	119	127	143
பாலை (301-400)	100	66	34	108	116	131
முல்லை (401-500)	100	36	64	47	47	49
கூடுதல்	501	298	203	436	460	521

4. பதிற்றுப்பத்து

சேர மன்னர்கள் பதின்மர் வரலாற்றை விளக்கும் பதிற்றுப் பத்து உ. வே. சாமிநாதையரால் முதன் முதலாக 1904ல் பழைய உரையுடன் அச்சிடப்பெற்றது. பிற பதிப்புக்களைப் போலவே இந்நூற் பதிப்பிலும் உ. வே. சாமிநாதையர் தமக்குக் கிடைத்த பாடவேறுபாடுகளையும் அடிக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார்.

1950ஆம் ஆண்டு முதல் கழகம் ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை உரையுடன் இந்நூலைச் சில முறை பதிப்பித்துள்ளது. இப்பதிப்பில், உ. வே. சாமிநாதையரின் பதிப்பில் அடிக்குறிப்பில் காட்டப்பெற்ற சில வேறுபாடுகளும், ஒரு சில இடங்களில் புதிய வேறுபாடுகளும் காட்டப் பெற்றுள்ளன.

மர்ரே நிறுவனம் 1957-ல் மூலம் மட்டும் வெளியிட்டது. பண்டிதர் சு. அருளம்பலவனார் விளக்கத்தோடு 1960-ல் இரு பகுதிகளாக இந்நூல் இலங்கையில் வெளியிடப்பெற்றது. சங்க இலக்கிய மூலப் பதிப்பு 1967-ல் முதலில் வெளியிடப்பெற்றது. பாட வேறுபாட்டு நோக்கில் இப்பதிப்புக்களின் பணி குறிப்பிடத்தக்க நிலையில் இல்லை.

4. 1. அமைப்பு

உ.வே. சாமிநாதையர் இந்நூலை முதன்முதலில் எந்த முறையில் பதிப்பித்தாரோ, அந்த அமைப்பைச் சிறிதும் மாற்றாமல் பிற பதிப்புக்களும் அம்முறையையே இன்றுவரை பின்பற்றி வருகின்றன. முதலாம் பத்து, பத்தாம் பத்து ஆகிய இரு பத்துக்களிலும் உள்ள இருபது பாடல்கள் எந்தப் பதிப்புக்களிலும் இல்லை. 34, 73ஆம் பாடல்களில் முறையே 8ஆம் அடிக்குப் பின்னரும், 3ஆம் அடிக்குப் பின்னரும், உ. வே. சாமிநாதையர் தம் பதிப்பில் குறிப்பிட்ட சிதைவு பிற பதிப்புக்களிலும் நிறைவு பெறவில்லை.

கழகத்தின் முதற் பதிப்பில் (1950) 2ஆம் பத்தின் பதிகத்தில் 'நயனில் வன்சொல் யவணர்ப்பிணித்து' என்ற எட்டாம் அடி விடுபட்டுப் போயுள்ளது. இது அச்சுப்பிழை. மேலும் 72ஆம் பாடலின் 14-ஆம் அடியில் 1, 2, 3, 4 என்ற சீர்கள் 3, 4, 1, 2 என்ற முறையில் மாறியமைந்துள்ளன. ஒவ்வொரு பத்துப்பாட்டும் முடிந்த பிறகு பதிகம் உள்ள பிற பதிப்புக்களின் அமைப்பிலிருந்து மாறுபட்டுக் கழகப் பதிப்பில் தொடக்கத்தில் பதிகமும், பின்னர்த்

தொடர்ந்து பத்துப் பாடல்களும், அமைக்கப்பட்டுள்ள மாற்றமும் குறிப்பிடத்தக்கதாம்.

4. 2 வேறுபாடுகளின் எண்ணிக்கை

பதிற்றுப்பத்தில் கிடைத்துள்ள பாடல்களின் எண்ணிக்கை 80 மட்டுமே. இரண்டாம், ஏழாம் பத்துக்களில் எல்லாப் பாடல்களிலும், மூன்றும் எட்டாம் பத்துக்களில் ஒரு பாடல் நீங்கப் பிற பாடல்களிலும், நான்காம், ஐந்தாம், ஆறும், ஒன்பதாம் பத்துக்களில் இரு பாடல்கள் நீங்கப் பிற பாடல்களிலும் பாட வேறுபாடுகள் அமைந்துள. இம்முறையில் மொத்தமுள்ள 80 பாடல்களில் 70பாடல்களில் மட்டும் பாடவேறுபாடுகள் உள. நான்காம், ஐந்தாம் ஆறும், ஒன்பதாம் பதிகங்களிலும் வேறுபாடுகள் உள. பிற பதிகங்களில் இல்லை.

மேலே குறிப்பிடப்பெற்ற 70 பாடல்களில் 247 அடிகளில் 256 இடங்களில் 266 வேறுபாடுகள் நிகழ்ந்துள. மேலும் நான்கு பதிகங்களில் ஐந்து அடிகளில் மட்டும் 5 இடங்களில் 7 வேறுபாடுகள் உள. இம்முறையில், பாடல்களிலும் பதிகங்களிலும் அமைந்துள்ள மொத்தப்பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை 273 ஆகும்.

5. பரிபாடல்

பழமையான இசைப்பா வகையான பரிபாடல் என்னும் பாவகையால் அமைந்துள்ள நூல் பரிபாடல். உ. வே. சாமிநாதையர் 1918 ல் முதன் முதலாக இந்நூலை ஏட்டுச் சுவடிகளிலிருந்து அச்சு வடிவத்திற்குக் கொணர்ந்தார். பரிபாடலில் எழுபது பாடல்கள் இருந்திருக்கவேண்டும் என அறிகிறோம். ''நூற்றைம்பது கலியும், எழுபது பரிபாடலுமாகச் சங்கத்தார் தொகுத்தவற்றுள் ...'' எனவரும் பேராசிரியர் உரைப்பகுதி [1] இதனை உணர்த்தும். இன்று கிடைப்பது இருபத்திரண்டு பாடல்களே. இவற்றுக்குப் பரிமேலழகர் உரையும் உண்டு. பழைய உரைகளில் காணப்பெறும் இரு பாடல்களும் மற்றும் சில பகுதிகளும் பரிபாடலைச் சார்ந்தவை என்று கருதுகின்றனர். உ. வே. சாமிநாதையரின் பதிப்பில் ஏடுகளில் கிடைத்த பாடவேறுபாடுகள் அடிக்குறிப்பில் தரப்பெற்றுள்ளன.

1957 முதல் கழகத்தின் மூலமாக பொ. வே. சோமசுந்தரனார் உரையோடும் இந்நூல் பல முறை பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பாட

[1] தொ. பொ. நூ. 452

வேறுபாட்டு நோக்கில் காணும்போது, ஒரு சில வேறுபாடுகளே இப்பதிப்புக்களினால் அறியப்பெற்றுள்ளன. 1957 ல் மர்ரே நிறுவனத்தின்மூலமும் 1940 ல் சைவ சித்தாந்த சமாசத்தின்மூலமும் பரிபாடலின் மூலப் பதிப்புக்கள் வெளியாகியுள்ளன. இவற்றுள்ளும் ஒரு சில வேறுபாடுகள் மூல பாடங்களாகக்கொள்ளப்பட்டுள்ளன.

5. 1. அமைப்பு

முதற் பாடலின் அராகப்பகுதி உ. வே. சாமிநாதையர் பதிப்பிலும் கழகப் பதிப்பிலும் உருவின்றி ஏட்டில் உள்ளவாறே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. பின்னர் வந்த சங்க இலக்கியப் பதிப்பில் இப்பகுதி ஓரளவு செம்மை செய்யப்பட்டு வெளியிடப் பெற்றுள்ளது. மர்ரே பதிப்பில் மேலும் செம்மையான திருந்திய வடிவம் அமைந்துள்ளது.

மேலும், "மெல்லிய வெறூஅ வெரூஅ தல்லிய" (1.35) எனவரும் முதற்பாடல் அடியொன்று சங்க இலக்கியப் பதிப்பில் மட்டும் முதன் மூன்று சீர்கள் ஓரடியாகவும், நான்காம் சீர் அடுத்த அடியின் முதற் சீராகவும் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இரண்டாம் பாடலில் முதலடியில் மூன்றும் சீருக்குப் பின்னரும், இரண்டாம் பாடலில் முதலடியில் மூன்றும் சீருக்கு முன்னரும் எல்லாப் பதிப்புக்களிலும் சிதைவு காணப்படுகிறது. இதே போல பிற இடங்களிலும் அனைத்துப் பதிப்புக்களிலும் சிதைவுற்ற இடங்கள் கீழே தொகுத்துத் தரப்பெற்றுள்ளன.

பாடல் எண்	அடியெண்	சிதைவு விவரம்
முதற் பாடல்	72	முதலிரு சீர்கள் இல
ஆறும் பாடல்	77	அடி 77க்குப் பின் சில பகுதிகள் சிதைவு
எட்டாம் பாடல்	52	அடி 52க்குப் பின் சில பகுதிகள் சிதைவு
இருபதாம் பாடல்	74	அடி 74க்குப் பின் சில பகுதிகள் சிதைவு
இருபத்திரண்டாம் பாடல்	10, 12, 14, 15, 20, 37 42, 47	இவ்வடிகளுக்குப் பின்னரும் இறுதிப் பகுதியும் சிதைவு

உ. வே. சாமிநாதையர் பதிப்பில் முதன் முதலாகக் காணப் பெறும் இச்சிதைவுப் பகுதிகள் அனைத்துப் பகுதிப்புக்களிலும் நிறைவு பெறாமல் சிதைவுற்ற நிலையிலேயே உள்ளன.

5.2. பாடவேறுபாடுகள்

பரிபாடலில் கிடைத்த இருபத்திரண்டு பாடல்களிலும் வேறு பாடுகள் உள. பத்தாம் பாடலில் அதிக அளவில் 58 இடங்களிலும், இருபத்திரண்டாம் பாடலில் குறைந்த அளவில் 2 இடங்களிலும் வேறுபாடுகள் உள்ளன. மொத்தமுள்ள இருபத்திரண்டு பாடல் களில் 519 இடங்களில் 557 வேறுபாடுகள் அமைந்துள. 34 இடங்களில் ஓர் இடத்தில் 3 வேறுபாடுகள் விதமும், இரண்டு இடங்களில் ஓரிடத்தில் 4 வேறுபாடுகள் விதமும் உள்ளன. ஓர் அடியில் இரண்டு விதம் வேறுபாடு அமைந்த இடங்களின் எண் ணிக்கை 41. ஓர் அடியில் மூன்று விதமும், நான்கு விதமும் வேறுபாடுகள் அமைந்த இடங்கள் ஒவ்வொன்று ஆகும்.

6. கலித்தொகை

கலித்தொகையில் கடவுள் வாழ்த்தொடு 150 பாடல்கள் உள. பாலை, குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் என்ற முறை வைப்பில் இதில் அமைந்த பாடல்களின் எண்ணிக்கை முறையே 35, 29, 35, 17, 33. சேரமான் பாலைபாடிய பெருங்கடுங்கோ, கபிலர், மதுரை மருதனிளநாகனுர், சோழன் நல்லுருத்திரன், நல்லந்துவனுர் ஆகிய ஐவர் முறையே இப்பகுதிகளைப் பாடியோர் ஆவர்.

6. 1. பதிப்புக்கள்

கலித்தொகையை முதலில் 1887ல் அச்சுக்குக் கொணர்ந் தவர் சி. வை. தாமோதரம்பிள்ளை. பின்னர் 1925, 1931 ஆம் ஆண்டுகளில் இ. வை. அனந்தராமையர் கலித்தொகையை மூன்று தொகுதிகளாக வெளியிட்டார். பாகனேரி காசிவிசுவநாதன் செட்டி யார் மூலம் 1938ல் மீண்டும் கலித்தொகை முழுமையும் ஒரே தொகுதியாக வெளியிடப்பெற்றது. 1940ல் சைவ சித்தாந்த மகா சமாசம் சங்க இலக்கியப் பதிப்பில் இந்நூலை முழுமையும் ஒரு தொகுதியாக வெளியிட்டுள்ளது. மர்ரே நிறுவனம் மூலமாக 1957லும் கழக வாயிலாக 1969லும் இந்நூல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

பாடவேறுபாடு நோக்கில் இ. வை. அனந்தராமையர் பதிப்புக் குறிப்பிடத்தக்க அளவில் பணிபுரிந்துள்ளது.

6. 2. பாடவேறுபாடுகள்

கலித்தொகையில் பாலைக்கலிப்பகுதியில் அமைந்த 35 பாடல்களில் ஒரு பாடல் தவிர 34லும் பிற பகுதிகளில் அனைத்துப் பாடல்களிலும் வேறுபாடுகள் உள.

பாலைக்கலியில் 34 பாடல்களில் 132 அடிகளில் 143 இடங்களில் இடம் பெற்ற வேறுபாடுகளின் எண்ணிக்கை 154. குறிஞ்சிக் கலியில் 29 பாடல்களில் 143 அடிகளில் 154 இடங்களில் 184 வேறுபாடுகள் உள. மருதக் கலியில் 35 பாடல்களில் 268 அடிகளில் 304 இடங்களில் இடம் பெற்ற வேறுபாடுகள் 331. முல்லைக்கலியில் 17 பாடல்களில் 163 அடிகளில் 194 இடங்களில் 204 வேறுபாடுகள் அமைந்துள. நெய்தற் கலியில் 33 பாடல்களில் 273 அடிகளில் 297 இடங்களில் 332 வேறுபாடுகள் உள. இவையன்றிக் கடவுள் வாழ்த்துப் பாடலில் ஓரடியில் ஓரிடத்தில் ஒரு வேறுபாடு உள்ளது.

இவையனைத்தையும் தொகுத்து நோக்க, கலித்தொகையில் ஒரு பாடல் தவிர எஞ்சிய 149 பாடல்களின் 980 அடிகளில் 1093 இடங்களில் மொத்தம் அமைந்துள்ள பாடவேறுபாடுகளின் எண்ணிக்கை 1206 ஆகும்.

7. அகநானூறு

எட்டுத்தொகை நூல்களில் அகப்பொருள் பற்றிக் கூறும் ஐந்து நூல்களில் 'அகம்' என்ற பெயராலேயே சிறப்பாக அமைந்த நூல் அகநானூறு. 'நெடுந்தொகை' என்ற பெயராலும் இந்நூல் வழங்கப்பெறும்.

அகநானூற்றுப் பாடல்கள் அடியளவில் சிறுமை பதின்மூன்றும் பெருமை முப்பத்தொன்றுமாக அமைந்தவை. அகநானூற்றுப் புலவர்களின் எண்ணிக்கை 145.

7. 1. பதிப்புக்கள்

ரா. ராகவையங்கார் அகநானூறு முழுமையையும் மூன்று பகுதிகளாகப் பிரித்து வெளியிட்டுள்ளார். இப்பகுதிகள் முறையே

1920, 1923, 1935 ஆம் ஆண்டுகளில் முதன் முதலாக வெளி வந்துள்ளன. கழகம், சைவசித்தாந்த மகாசமாசம், மர்ரே நிறுவனம் ஆகிய நிலையங்கள் வழியாகவும் இந்நூல் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

7. 2. பாடல்களும் பிரிவுகளும்

அகநானூற்றில் அமைந்த மொத்தப் பாடல்களின் எண்ணிக்கை 400. தொடக்கத்தில் கடவுள் வாழ்த்துச் செய்யுளொன்றும் பாரதம் பாடிய பெருந்தேவனாரால் பாடப் பெற்றுள்ளது.

முதல் 120 பாடல்கள் களிற்றியானை நிரை என்ற பெயராலும், 121-300 வரையுள்ள 180 பாடல்கள் மணிமிடை பவளம் என்ற பெயராலும் 301-400 வரையுள்ள 100 பாடல்கள் நித்திலக்கோவை என்ற பெயராலும் வழங்கப் பெறும்.

7. 3. வேறுபாடுகள்

களிற்றியானை நிரைப்பகுதியிலுள்ள 120 பாடல்களில் 10 பாடல்கள் மட்டுமே வேறுபாடுகள் இல்லாதவை. எஞ்சிய 110பாடல் களில் 291 அடிகளில் 303 இடங்களில் மொத்தம் 310 வேறுபாடுகள் அமைந்துள. மணிமிடை பவளம் பகுதியிலுள்ள 180 பாடல்களில் 5 பாடல்கள் மட்டுமே வேறுபாடுகள் இல்லாதவை. எஞ்சிய 175 பாடல்களில் 602 அடிகளில் 635 இடங்களில் அமைந்த மொத்த வேறுபாடுகளின் எண்ணிக்கை 709.

நித்திலக்கோவை என்ற இறுதிப் பகுதியில் 96 பாடல்களில் வேறுபாடுகள் உள. இவற்றில் 361 அடிகளில் 400 இடங்களில் அமைந்த வேறுபாடுகளின் எண்ணிக்கை 443.

கடவுள் வாழ்த்துச் செய்யுளில் 4 அடிகளில் 4 இடங்களில் 4 வேறுபாடுகள் உள.

அகநானூற்றுப் பாடல்களில் வேறுபாடு அமைந்த 382 பாடல் களில் 1258 அடிகளில் 1342 இடங்களில் இடம் பெற்ற மொத்தப் பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை 1466.

8. புறநானூறு

புறநானூறு 1894 ஆம் ஆண்டில் முதன் முதலாக உ. வே. சாமிநாதையரால் பதிப்பிக்கப் பெற்றது. பதிப்பித்த காலம் முதல் இரு பாடல்கள் (267, 268) மட்டும் இன்று வரை கிடைக்கப் பெறவில்லை.

8. 1. பதிப்புக்கள்

உ. வே. சாமிநாதையரின் பதிப்பு பல மறு பதிப்புக்களாகவும் வெளியாகியுள்ளன. அடுத்து 1940, 1967 ஆகிய ஆண்டுகளில் சங்க இலக்கிய மூலப் பதிப்புக்கள் இரு முறை பதிப்பிக்கப் பெற்றுள்ளன. 1947 முதல் கழகம் வழியாக ஔவை துரைசாமி பிள்ளையின் உரையோடு பல பதிப்புக்கள் வெளியிடப் பெற்றுள்ளன. 1957 லும் 1981 லும் மர்ரே நிறுவனத்தின் புறநானூற்று மூலப் பதிப்புக்கள் வெளியாகியுள்ளன.

பாட வேறுபாட்டு நோக்கில் உ. வே. சாமிநாதையர் பதிப்பும், கழகப் பதிப்பும் குறிப்பிடத்தக்க வகையில் அமைந்துள. ஏடுகளில் இருந்து கிடைத்த வேறுபாடுகள் அனைத்தையும உ. வே. சாமிநாதையர் தம் பதிப்பில் அடிக்குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். அவற்றுள், பல சிதைவுற்ற பாடங்களாயினும் வேறுபாடுகளைத் தொகுத்துத் தரும் வகையில் குறிப்பிடப்பெற்றுள்ளன. உ. வே. சாமிநாதையருக்குப் பிறகு, கழகப் பதிப்பில் மேலும் சில ஏடுகளின் துணையோடு உ. வே. சாமிநாதையர் பதிப்பில் சிதைவுற்றுக் காணப்படும் பல அடிகளுக்குச் செம்மையான திருந்திய பாடங்கள் பதிப்பிக்கப் பெற்றுள.

உ. வே. சாமிநாதையர் பதிப்பில் புறநானூற்றில் 266 பாடல்களுக்கு மட்டுமே பழைய உரை உள்ளது. அனைத்துப் பாடல்களுக்கும் உரை எழுதும் முயற்சியில் முதன்முதலாக ஈடுபட்டுள்ளமையால் கழகப் பதிப்பில் திருத்திய பாடங்கள் பல இடம் பெற்றுள. உ. வே. சாமிநாதையரால் அடிக்குறிப்பில் காட்டப் பெற்ற சிற்சில இடங்களில் கழகப் பதிப்பில் மூல பாடங்களாகவே கொள்ளப் பெற்றுள. மிகச் சில இடங்களில் மட்டுமே இதுவரை அறியப் பெறாத பாடங்களும் மூல பாடங்களாக ஏற்கப்பட்டுள.

8. 2. அமைப்பு மாறுபாடுகள்

உ. வே. சாமிநாதையர் பதிப்பில் உள்ள பாடல்களில் அமைப்பு, பிறர் பதிப்புக்களில் சில இடங்களில் மாற்றம் பெற்று அமைந்துள்ளது. கழகப் பதிப்பில் இத்தகைய மாற்றங்கள் மிகுதியாக உள. அமைப்பு மாறுபாடுகளும் சில இடங்களில் பாடவேறு பாட்டுக்குரிய களங்களாக அமைதல் உண்டு.

> "செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
> பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
> வளிதிரிதரு திசையும்" (30)

என உ. வே. சாமிநாதையர் பதிப்பில் மூன்றடிகளாக அமைந்த பகுதி,

> "செஞ்ஞாயிற்றுச் செலவும்
> அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
> பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
> வளிதிரிதரு திசையும்"

என நான்கு அடிகளாகச் சங்க இலக்கியப் பதிப்பிலும் மர்ரே பதிப்பிலும் அமைந்துள்ளது.

உ. வே. சாமிநாதையர் பதிப்பில் ஏட்டுச் சிதைவால் விடுபட்ட பாடல்களின் அடிகள் பல, கழகப் பதிப்பில் நிறைவு பெற்றுள்ளன. இம்முறையில் புதியனவாக நிறைவுபெற்ற ஒரு பாடலின் அடிகள் கீழே தரப்பெற்றுள்ளன.

பாடல் எண்	விடுபட்ட அடி எண்	புதிதாகச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பில் அமைந்த அடிகள்
355	3-5	மற்றே...................................... எண்ணு மையலன் றந்தை தன்னையர் கண்ணூர் கண்ணிக் கடுமான் கிள்ளி

இம்முறையில் மேலும் ஏழு பாடல்களில்[1] புதியனவாக நிறைவு பெற்ற அடிகள் கழகப் பதிப்பில் உள.

உ. வே. சாமிநாதையர் பதிப்பில் அமைந்த ஒரு பாடலின்[2] 2ஆம் அடியின் 4ஆம் சீர் மர்ரே பதிப்பில் 3ஆம் அடியின் முதற் சீராக மாற்றப்பட்டுள்ளது. மற்றுமொரு பாடலில்[3] உ. வே. சாமிநாதையர் பதிப்பில் உள்ள 1-4 அடிகள் கழகப் பதிப்பில் மாறிக் கிடக்கின்றன. பிறிதொரு பாடலில்[4] உ. வே. சாமிநாதையர் பதிப்பில் அமைந்த 20ஆம் அடி கழகப் பதிப்பில் 18ஆம் அடியாக அமைந்துள்ளது.

இவை புறநானூற்றுப் பதிப்புக்களில் பாடல் அமைப்பில் காணப்பெறும் மாறுபாடுகள்.

3. 3. பாட வேறுபாடுகள்

புறநானூற்றில் 83 பாடல்களில் மட்டுமே பாடவேறுபாடுகள் இல. எஞ்சிய 317 பாடல்களில் 1318 இடங்களில் வேறுபட்டு அமைந்த வேறுபாடுகளின் மொத்த எண்ணிக்கை 1500 ஆகும் புறநானூற்றில் ஓரளவு செம்மையான உருவில் காணப்பெறும் பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை 981 எனக் குறிப்பிடுவர் ஆராய்ச்சி யாளர் ஒருவர்[5]. இவ்வெண்ணிக்கைக் கணக்கு உ. வே. சாமி நாதையர் பதிப்பு ஒன்றை மட்டும் வைத்துக் கணக்கிட்டு உரைப் பது. புறநானூற்றுப் பாடல்களை ஐம்பது பாடல் கொண்ட எட்டுத்

---

1 புறம்-கழகம்
2 ,, 134
3 ,, 337
4 ,, 366

பாடல் எண்	அடிகள்
357	5-6
361	9, 14, 22-23
366	23
382	11
383	6
384	5
385	7-8

5 பிரதிபேத ஆராய்ச்சி — மு. இராமகிருட்டினன், ப. 5

தொகுதிகளாகப் பிரித்து அவற்றில் அமைந்த வேறுபாட்டு விவரங்கள் கீழே குறிக்கப்பெற்றுள்ளன. எந்தப் பகுதியில் மிகுதியாக வேறுபாடுகள் அமைந்துள என அறிய இப்பட்டியல் துணைபுரியும்.

பாடல்கள்	வேறுபாடு இல்லாதவை	வேறுபாடு உள்ளவை	வேறுபடும் இடங்கள்	மொத்த வேறுபாடுகள்
1- 50	13	37	111	119
51-100	9	41	96	103
101-150	21	29	69	73
151-200	16	34	55	59
201-250	14	36	90	97
251-300	9	41	171	199
301-350	—	50	253	307
351-400	1	49	473	543
கூடுதல்	83	317	1318	1500

புறநானூற்றில் 266 பாடல்கள் வரைதான் பழையவுரை அமைந்துள்ளது என்பதும், 267, 268 ஆம் பாடல்கள் இன்று வரை கிடைக்கப்பெறவில்லை என்பதும் முன்னர்ச் சுட்டப்பட்டன. பட்டியலில் அமைந்த குறிப்புக்களால் 251 ஆம் பாடலுக்குப் பின்னர் அமைந்த 150 பாடல்களில் தான் மிகுதியான அளவில் பாட வேறுபாடுகள் உள்ளன. எனவே பழையவுரையுள்ள பகுதியைவிட உரையில்லாத பாடல்களில்தான் மிகுதியான அளவில் வேறுபாடுகள் நிகழ்ந்துள்ளன என உணரலாம். புறநானூறு முழுமைக்கும் பழையவுரை கிடைத்திருந்தால் பிற்பகுதியில் இந்த அளவுக்கு மிகுதியான வேறுபாடுகள் தோன்றியிரா என்றும் கருத முடிகிறது.

மேலேயுள்ள பட்டியலால் பாடல்களில் அமைந்த மொத்த வேறுபாடுகள் 1500 என அறிகிறேம். எட்டுத்தொகை நூல்களில் அதிக அளவில் பாட வேறுபாடுகள் உள்ள நூல் புறநானூறு. இவ் வேறுபாடுகள் ஓர் அடியினுள் ஒரு சீர், இரண்டு சீர், மூன்று சீர் வரையிலுங்கூட அமைந்துள. இம்முறையில் ஓர் அடியில் மூன்று

சீர்களில் 9 அடிகளிலும் வேறுபாடுகள் நிகழ்ந்துள. எஞ்சிய வேறு பாடுகள் அனைத்தும் ஓர் அடியில் ஒரு சீரில் மட்டும் வேறுபடுவன. ஓர் அடியில் நான்கு சீர்களிலும் வேறுபாடு அமைந்த நிலை புற நானூற்றில் இல்லை.

பாடம் வேறுபடும் 317 பாடல்களில் ஒரே பாடலில் ஓர் அடி முதலாகப் 18 அடிவரை வேறுபாடுடைய அடிகளின் எண்ணிக்கை அமைந்துள்ளது. சான்றுக 395 ஆம் பாடலில் மிக அதிகமான அளவில் 18 அடிகளில் பாடவேறுபாடுகள் உள. இதில் 18 அடிகளில் 22 இடங்களில், 22 வேறுபாடுகள் உள.

9. பத்துப்பாட்டு

'பாட்டும் தொகையும்' எனவரும் தொடரில் 'பாட்டு' என்ற சொல்லால் பத்துப்பாட்டில் உள்ள பத்து நூல்களும் குறிப்பிடப் பெறும்.

9. 1. பதிப்புக்கள்

பத்துப்பாட்டு நூல்கள் அனைத்தையும் தேடி வகைப்படுத்திப் 'பத்துப்பாட்டு மூலமும் உரையும்' என்ற பெயரில் 1889-ஆம் ஆண்டில் உ. வே. சாமிநாதையர் முதன் முதலாகத் தமிழுலகுக்கு வழங்கினர். இப்பதிப்பில் அடிக்குறிப்பில் பல்வேறு ஏடுகளிலும் வேறு பட்டு அமைந்த பாட வேறுபாடுகளை உ. வே. சாமிநாதையர் குறிப்பிட்டுள்ளார்.

உ. வே. சாமிநாதையருக்குப் பின்னர் பத்து நூல்களையும் கழகம் வெவ்வேறு ஆண்டுகளில் தனித்தனியே வெளியிட்டுள்ளது. பின்னர் கழகத்தினர் 1956 ஆம் ஆண்டில் பத்து நூல்களையும் ஒரே பதிப்பாகத் தொகுத்து வெளியிட்டனர்.

சைவ சித்தாந்த மகாசமாசம் 1940 ல் ஆசிரியர் அகர வரிசை யில் சங்க இலக்கியப் பதிப்பை வெளியிட்டது. வை. மு. கோபால கிருட்டிணமாச்சாரியார், சி. ஜெகந்நாதாச்சாரியார் ஆகிய இருவரும் உரையெழுதிப் பதிப்பித்த பத்துப்பாட்டுப் பதிப்பு 1961 ல் வெளி வந்துள்ளது. பின்னர் 1967 ஆம் ஆண்டில் இதன் இரண்டாம் பதிப்பு வெளியானது. மர்ரே நிறுவன வெளியீடாக, பத்துப்பாட்டு மூலம் 1957 ல் முதலிலும், பின்னர் 1981 ல் இரண்டாம் பதிப்பாகவும் வெளிவந்துள்ளது.

உ. வே. சாமிநாதையர் குறிப்பிட்ட பாட வேறுபாடுகளுக்கு மேல், பிற்காலப் பதிப்புக்களில் ஒரு சில வேறுபாடுகளே மட்டுமே புதியனவாக அறிய முடிகிறது.

நச்சினார்க்கினியர் தம் உரைப் பகுதியில் பொருட் சிறப்புடைய அரிய பாடவேறுபாடுகள் சிலவற்றைச் சுட்டிச் செல்வதும் குறிப்பிடத் தக்கதாகும்.

9. 2. பாட வேறுபாடுகள்

பத்துப் பாட்டு நூல்களின் மொத்தப் பரப்பையும் அவற்றில் பாடம் வேறுபடும் அடிகளின் எண்ணிக்கையும் கொண்டு நோக்குழி, பெரும்பாணாற்றுப் படையில் அதிகமான அளவிலும், பட்டினப் பாலையில் குறைவான அளவிலும் அடிகளில் பாடங்கள் வேறு படுகின்றன. பெரும்பாணாற்றுப்படையில் ஏறத்தாழ ஐந்தில் ஒரு பங்கு அளவிலும், பட்டினப்பாலையில் ஏறத்தாழ முப்பத்து மூன்றில் ஒரு பங்கு அளவிலும் பாடங்கள் வேறுபட்டுள்ளன. பாட வேறுபாடு களின் எண்ணிக்கையை மட்டும் கருத்தில் கொண்டால் மதுரைக் காஞ்சியில் அதிக அளவிலும், பட்டினப்பாலையில் குறைந்த அளவி லும் பாடம் வேறுபடும் அடிகளும், பாடம் வேறுபடும் இடங்களும் அமைந்துள்ளன. பத்துப்பாட்டு நூல்களின் மொத்த அடி அளவுப் பரப்பில், பாடம் வேறுபடும் அடிகளின் எண்ணிக்கை, ஏறத்தாழ பத்தில் ஒரு பங்கு மட்டுமேயாகும்.

பத்துப்பாட்டு நூல்களில் 363 அடிகளில் 376 இடங்களில் பாடங்கள் வேறுபட்டுள்ளன. இவ்விடங்களில் சிலவற்றில் இரண்டுக்கு மேற்பட்ட நிலையில் மூன்று அல்லது நான்கு வேறுபாடுகளுங்கூட இடம் பெற்றுள்ளன. சான்றுகப் பெரும்பாணாற்றுப்படையில் பாடம் வேறுபடும் 96 இடங்களில் ஓர் இடத்தில் நான்கு வேறுபாடுகளும், ஒன்பது இடங்களில் மூன்று வேறுபாடுகளும், எஞ்சிய 86 இடங்களில் இரு வேறுபாடுகளும் உள. இம்முறையில் மூல பாடங்களாக அமைந்த 96க்கும் மேல் 11 பாடங்கள் அதிகம் உள்ளன. எனவே பெரும்பாணாற்றுப்படையில் உள்ள 500 அடிகளில்9அடிகளில்மட்டும் 96 இடங்களில் 107 வேறுபாடுகள் உள என்று அறியலாம்.

பத்துப்பாட்டு நூல்களின் மொத்தம் அமைத்த 3552 அடி களுள் பாடம் வேறுபடுவன 368 அடிகள். இவற்றில் 376 இடங்களில்

இடம் பெற்ற வேறுபாடுகளின் மொத்த எண்ணிக்கை 402. 376 இடங்களில் இரு வேறுபாடுகள் அமைந்த இடங்கள் 353 ம் மூன்று வேறுபாடுகள் உள்ள இடங்கள் 20ம் நான்கு வேறுபாடுகள் இருக்கும் இடங்கள் 3ம் அடங்கியுள்ளன.

10. பட்டியல் தொகுப்பு

எட்டுத் தொகை நூல்களில் அமைந்த 7669 வேறுபாடுகள் நூல் வரிசையில் கீழே பட்டியலில் குறிப்பிடப்பெற்றுள்ளன.

நூல்	பாடல்	வேறுபாடு உள்ளவை	வேறுபாடு இல்லாதவை	வேறுபடும் அடிகள்	வேறுபடும் இடங்கள்	மொத்த வேறுபாடுகள்
நற்றிணை	401	269	132	560	607	666
குறுந்தொகை	402	386	16	1031	1196	1480
ஐங்குறுநூறு	501	298	203	436	460	521
பரிபாடல்	22	22	—	473	519	559
பதிற்றுப்பத்து	80+8	74	14	252	261	273
கலித்தொகை	150	149	1	980	1093	1206
அகநானூறு	401	382	19	1258	1342	1466
புறநானூறு	400	317	83	1174	1318	1500
கூடுதல்	2365	1897	468	6164	6796	7669

இப்பட்டியலின் துணையால் எட்டுத்தொகையில் அமைந்த 2365 பாடல்களில் 1897 பாடல்கள் பாடவேறுபாடு உள்ளவை என்பதும், இவற்றில் 6164 அடிகளில் 6796 இடங்களில் 7669 பாட வேறுபாடுகள் உள என்பதும் அறியப்பெறும்.

பத்துப்பாட்டு நூல்களில் அமைந்த 402 வேறுபாடுகள் நூல் வரிசையில் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

நூல்	மொத்தஅடி	வேறுபடும் அடிகள்	வேறுபடும் இடங்கள்	மொத்த வேறுபாடுகள்
திருமுருகாற்றுப்படை	317	10	10	10
பொருநராற்றுப்படை	248	31	31	31
சிறுபாணாற்றுப்படை	269	32	32	33
பெரும்பாணாற்றுப்படை	500	91	96	107
முல்லைப்பாட்டு	103	10	11	13
மதுரைக்காஞ்சி	782	104	108	111
நெடுநல்வாடை	188	16	17	19
குறிஞ்சிப்பாட்டு	261	18	18	18
பட்டினப்பாலை	301	9	9	9
மலைபடுகடாம்	583	42	44	51
கூடுதல்	3552	363	376	402

இப்பட்டியலால் பத்துப்பாட்டு நூல்களில் மதுரைக்காஞ்சியில் மிகுதியான அளவிலும் குறிஞ்சிப்பாட்டு, நெடுநல்வாடை ஆகிய வற்றில் குறைந்த அளவிலும், பாடவேறுபாடுகள் அமைந்துள எனவும், பத்துப்பாட்டின் பத்துப்பாடல்களில் அமைந்த 3552 அடிகளில் 363 அடிகளில் மட்டும் 376 இடங்களில் 402 பாடவேறுபாடுகள் இடம் பெற்றுள என்றும் அறியலாம்.

எட்டுத்தொகை, பத்துப்பாட்டு ஆகிய இரு தொகுதிகளிலும் அமைந்த மொத்த வேறுபாடுகளின் எண்ணிக்கை 8071. இவற்றுள் பொருள் வேறுபாட்டுக் கோணத்தில் ஆயத்தக்கவை 2407 மட்டும். எஞ்சிய 5664 வேறுபாடுகளில் அவை எழுந்த களம் ஆராயப்பட்டுப் பகுத்துரைக்கப்பட்டுள. தேவையான இடங்களில் சில நூல்களிலிருந்து மட்டும் ஒருசில சான்றுகள் சுட்டிக் காட்டப் பட்டுள்ளன.

எழுத்துவகை வேறுபாடுகள், சொல்வகை வேறுபாடுகள், இலக்கண வகை வேறுபாடுகள், ஒப்புமை நிலை வேறுபாடுகள் என்பன இப்பகுப்பாய்வில் கொள்ளப்பட்டுள்ள நான்கு பெரும்

பிரிவுகள். எட்டுத்தொகை நூல்களிலும், பத்துப்பாட்டு நூல்களிலும் இவ்வேறுபாடுகள் தனித்தனியே குறிக்கப்பெற்றுள்ளன.

முதலில் எட்டுத் தொகை நூல்களில் இடம் பெற்ற இவ்வேறு பாட்டு வகைகள் மொழியப் பெற்றுள்ளன.

11. எழுத்துவகை வேறுபாடுகள்

சொற்களில் புதிதாக ஓர் எழுத்துச் சேர்தலாலும், முன்னர் நின்ற எழுத்து விடுபட்டமையாலும், ஓர் எழுத்துக்குப் பதில் பிறிதோர் எழுத்து இடம் பெறலாலும், எழுத்துக்கள் முன்பின்னாக மாறி அமைதலாலும் வரும் நால்வகைப் பிரிவுகளும் எழுத்துவகை வேறுபாடுகளாகும். இம்முறையில் அமைந்த பாட வேறுபாடு களுக்குச் சில சான்றுகளைக் காண்போம்.

11. 1. எழுத்துச்சேர்க்கை

'எய்தி' (நற். 35.6) என்னும் சொல்லில் மொழியிறுதியில் அமைந்த யகரச் சேர்க்கையால் 'எய்திய' என்றும், 'தமியவைகிய' (குறுந். 9.2) என்பதில் நிலைச்சொல்லின் இறுதியில் ளகர ஒற்றுச் சேர்ந்து 'தமியள் வைகிய' என்றும், 'செல்லாதீமோ' (ஐங்கு. 186.5) என்பது 'சொல்லாதீமோ' என்றும் 'உடம்படுவாரா' (பரி. 2.66) என்பதற்கு 'உடம்பாடு வாரா' என்றும் 'செய்தமேவல்' (பதிற். 15.28) என்பது 'செய்தன மேவல்' என்றும் 'புலம்பிலுள்ள மொடு' (கலி. 7.13) என்பது 'புலம்பியலுள்ளமொடு' என்றும் 'பசந்தநுதலும்' (அகம். 95. 1) என்பது 'பசந்தது நுதலும்' என்றும் 'பிறவரிசை' (புறம். 140. 5-6) என்பது 'பிறர் வரிசை' என்றும் வருவன இவ்வகைக்குரிய சான்றுகள்.

11.2. எழுத்து விடுபடல்

'நீடுதோன்றினியர்' (நற். 1.1) என்பதில் னகரம் விடுபட்டு 'நீடுதோறினியர்' என்றும் 'இமைதீய்ப்பன்ன' (குறுந்.4.2) என்பதில் யகர ஒற்றுவிடுபட்டு 'இமைதீப்பன்ன' என்றும் 'கொள்குவை' (ஐங். 243.3) என்பதில் கு விடுபட்டு 'கொள்வை' என்றும், 'இருவர் வான்கிளி' (பரி. 9.42) என்பதில் வ ர் என்ற எழுத்துக்கள் விடுபட்டு 'இருவானகிளி' என்றும் 'போல அரண் கொன்று' (பதிற். 11.10) என்பதில் அகரம் விடுபட்டு 'போலரண்கொன்று' என்றும் 'அறல்வா

ரும் வையை' (கலி. 30.16) என்பதில் வகரம் விடுபட்டு 'அறலாரும் வையை' என்றும் 'கவலையவதர்'(அகம். 17.17) என்பதில் வகரம் விடுபட்டு 'கவலையதர்' என்றும், 'கழூவாயுமுளவென' (புறம். 34.4) என்பதில் இறுதியெழுத்து விடுபட்டமையால் 'கழூவாயுமுளவே' என்றும் வருவன எழுத்து விடுபட்டமையால் அமையும் பாட வேறு பாடுகளுக்குச் சான்றுகள்

11. 3. எழுத்து மாற்றம்

'வட்டரங்கிழைத்து' (நற். 3.3) என்பது 'இட்டரங்கிழைத்து' என்றும் 'கயிருடு பறையில்' (குறுந். 7.4) என்பது 'கயிருள் பறையில்' என்றும், 'முச்சியூதும்' (ஐங். 93.5) என்பது 'முச்சூயூதும்' என்றும், 'இறுகிறுக' (பரி. 9.40) என்பது 'இறுதிறுக' என்றும், ஓங்கி நடந்து' (பதிற். 20. 10) என்பது 'ஓங்கு நடந்து' என்றும் ''பிரிந்துறை' (கலி. 18. 2) என்பது 'பிரிந்திறை என்றும், 'மணியேரைம்பால்' (அகம். 8,15) என்பது 'மழையேரைம்பால்' என்றும், 'நடுக்கின் றிலியரோ' (புறம். 2. 20) என்பது 'நடுக்கின்றி நிலையரோ' என்றும் வருவன எழுத்துக்கள் மாறிவரும் வகைக்குச் சான்றுகளாயுள.

11. 4. எழுத்து முன்பின் மாற்றம்

'பரவல் ஊறல்' (நற். 333. 3) என்பது 'பரலவ லூறல்' என்றும், 'காழ்விரிகவையாரம்' (கலி. 4. 9) என்பது 'காழ்விரி வகையாரம்' என்றும், 'பாடவும்' (புறம். 296. 1) என்பது 'படாவும்' என்றும் வருவன எழுத்து முன்பின் மாற்றத்திற்குரிய சான்றுகள்.

33. சொல்வகை வேறுபாடுகள்

சொல்வகையால் ஏற்படும் பாடவேறுபாடுகளில் முன்னுள்ள பாடத்தில் புதிதாக ஒருசொல் சேர்ந்தமையாலும், முன்னுள்ள பாடத்தில் ஒரு சொல் விடுபட்டமையாலும், சொற்கள் ஒன்று இருக்கும் இடத்தில் பிறிதொரு சொல் இடம் பெறுவதாலும், சொற்கள் முன்பின்னுக மாறியமைவதாலும், சொல் இரட்டித்து வருவதாலும் அமையும் வேறுபாடுகள் குறிப்பிடத்தக்கவை.

12. 1. சொற்சேர்க்கை

'மடவைமன்ற' (நற். 183. 6) என்பதில் மன்ற என்பதன் பின் அம்ம என்ற ஒரு சொல் சேர்ந்தமையால் 'மடவை மன்றம்ம,

எனப் பாடம் எழுந்தது. சொல் சேர்க்கையால் அமைவது இஃதொரு வேறுபாடேயாம். 'வெய்ய' (குறுந். 196.5) என்பதில் அதுவே என்ற சொல் கூடி 'அதுவேவெய்ய' எனப் பாடமாயிற்று. 'செருவத்தானே' (பதிற். 51.37) என்பதில் அகம் என்ற சொல் சேர்ந்து 'செருவகத்தானே' எனப் பாடம் எழுந்துள்ளது.

'அமர்செல்வன்' (பரி. 5. 51) என்பதற்கு 'அமரர் செல் வன்றன்' எனவரும் வேறுபாடு சொற்சேர்க்கையால் அமையும் வேறுபாடுகளுக்குரிய சான்று.

'நடுநின்று' (கலி. 24.11) என்பதுடன் எம் என்னும் சொல் சேர்ந்தமையால் 'நடு நின்றெம்' என்ற வேறுபாடு அமைந்தது.

'ஒற்றிப் புலையர் போல' (கலி. 55.17) என்பதற்கு 'ஒற்றி யென்னெஞ்சு நெகிழ்ந்த செவ்வி காணுஉப் புலையர்போல' என வரும் வேறுபாட்டில் சொற்களின் இடையில் புதிய அடி ஒன்று இணைந்துள்ளது. சொல் சேர்க்கை வேறுபாட்டுடன் இணைத்து எண்ணத்தக்கது இது. மாண்வினைத் தேரன்' (அகம். 4. 12) என் பதில் அவன் என்ற சொல் இறுதியில் சேர்ந்து மாண்வினைத் தேரவன்' எனப் பாடவேறுபாடு அமைந்தது. புதிதாய சொற் சேர்க்கையால் நிலைமொழியிறு தியிலுள்ள பால் விகுதி கெட்டதும் இவண் அறியத்தக்கது.

'தபுதியஞ்சி' (புறம். 43.7) என்பதற்குத் 'தபுதி கண்டஞ்சி' எனவரும் புறநானூற்று வேறுபாட்டில் சொற்சேர்க்கை நிகழ்ந் துள்ளது.

12. 2. சொல் விடுபடல்

'நெய்த்தோர் வாய வல்லியம்' (நற். 2.4-5) என்பதில் வாய என்ற சொல் விடுபட்டமையால் 'நெய்த்தோர் வல்லியம்' என்று ஆயிற்று. 'அங்கணேர் வானத்து' (பரி. 1.41) என்பதற்கு வரும் 'அங்கண் வானத்து' என்னும் பாடத்தில் சொல் விடு பட்டுள்ளது.

'நெஞ்சமென்றைந்துடன்' (பதி. 21:1-2) என்பதில் என்று என்பது விடுபட்டு 'நெஞ்சமைந்துடன்' என வந்தது.

நிரைதொடிக்கை வீசினை' (கலி. 58.5) என்பதில் கை என்ற சொல் விடுபட்டு 'நிரைதொடிவீசினை' என்ற வேறுபாடாக அமைந்துள்ளது.

'பிற பிறரிசை' (புறம். 22. 32) என்பதற்குப் 'பிறரிசை' எனவரும் புறநானூற்று வேறுபாட்டில் முன்னுள்ள சொல் விடுபட்டமை காணலாம்.

12. 3. சொல் மாற்றம்

'வளிகலந்தீய' (நற். 56:2) என்பதற்கு 'அவள் கலந்தீய' என்றும் 'தோளிணைத்தத்தி' (கலி. 97. 22) என்பதற்குத் 'தோளி ணைத்தாங்கி' என்றும் 'நுதிவேல் கொண்டு' (புறம் 349. 1) என் பதற்கு 'நுதிபலகொண்டு' என்றும் வருவன சொல் மாற்றத்திற் குரிய சான்றுகள்.

12. 4. சொல் முன்பின் மாற்றம்

'கொக்கின் கூம்புமுகை அன்ன' (நற். 230. 2) என்பதில் சொற்கள் முன்பின்னாக மாறியமையால் 'கொக்கின் அன்ன கூம்பு முகை' என்ற பாடம் அமைந்துள்ளது. இவ்வகையில் இஃதொரு வேறுபாடே உள்ளது. 'மாண்டேர்ச்சீயிசை' (பரி. 11. 137) என் பதற்கு 'இசை மாண்டேர்ச்சி' என்ற வேறுபாடு உள்ளது. 'செல விற் பல்யானை' (பதி. 77:11-12) என்பதில் 'பல்' என்னும் சொல் முன்பின்னாக மாறி அமைந்தமையால் 'பல்செலவின் யானை' என்ற பாடம் அமைந்துள்ளது. இவ்வொரு வேறுபாடு இவ்வகையில் பதிற்றுப்பத்தில் உள்ளது. 'அமைத்தடைத்து' (கலி. 135. 3) என்பதற்கு 'அடைத்தமைத்து' என்ற வேறுபாடு உள்ளது. 'துடியன் பாணன் பறையன்' (புறம். 335. 7) என்பதற்குப் 'பாணண் பறை யன் துடியன்' என வரும் வேறுபாட்டில் சொல் முன்பின்னாக மாறி நிற்றல் காணலாம்.

12. 5. சொல் இரட்டித்தல்

எழுத்து இரட்டித்து வருதல்போல சொற்கள் இரட்டித்து வரும் இரு வேறுபாடுகளும், உள, இவ்வகைக்கு எடுத்துக்காட் டாகப் பரிபாடலில் உள்ள 'யாமத் தன்மையில்' (பரி. 15. 26) என்பதற்கு 'யாமத்தன்மைத்தன்மையில்' என்றும் 'தைஇயவளியும்'

13. இலக்கண வகை வேறுபாடுகள்

இலக்கண வகை வேறுபாடுகள் பலவகை. அவை வரிசையாகக் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன. ஒவ்வொரு வகைக்கும் உரிய சான்றுகளும் காட்டப் பெற்றுள்ளன.

13. 1. எழுத்து மயக்கம்

எழுத்துக்களில் நேரும் மயக்கமும் பாடவேறுபாடுகள் அமையக் களமாகிறது. 'பிரிபறியலரே' (நற். 1. 2) என்பது 'பிரிவரியலரே' என வருங்கால் பகர வகர மயக்கம், குறுங்கை (நற். 36. 1)' குறுக்கை, உணக்கல் (நற். 45. 6) - உணங்கல், உருப்பிடத்தன்ன (நற். 4. 7) - உருப்பிடந்தன்ன, விசைத்தெழுந்து (நற். 95. 5)- விசைந்தெழுந்து என வருவன இன எழுத்துக்களின் மயக்கத்தால் அமையும் வேறுபாடுகள்.

பரிபாடலில் உருபு-உருவு (3. 3); உயர்பு-உயர்வு (பரி. 5. 19) இழிபு-இழிவு (பரி. 5. 20) என வரும் வேறுபாடுகள் பகர வகர மயக்கத்தால் நிகழ்ந்தவை.

13. 2. உடம்படுமெய்

'அறிஅமர் வனப்பின்' (நற். 326.8) என்பது 'அரியமர் வனப்பின்' என்று வருவது உடம்படு மெய்ச் சேர்க்கைக்கும், வியுக' (நற். 232. 8) என்பது 'விடக' என வருவது உடம்படு மெய் விடுபட்டமைக்கும் உரிய சான்றுகள்.

13. 3. அளபெடை

'பரிமெலிந்து' (நற். 110.7) என்பதற்குப் பரீஇமெலிந்து' என்றும், 'அயாவுயிர்த்தாஅங்கு' (நற். 77.3) என்பதற்கு 'அயாவு யிர்த்தாங்கு' என்றும் வருவன முறையே அளபெடைக்குறிச் சேர்க்கையாலும், விடுபடலாலும் அமைவன.

பதிற்றுப்பத்தில் மகாரின்' (பதிற். 71.7) என்பது 'மகா அரின்' என வருவதும், 'கூஉமுறை' (பதிற். 22-35) என்பது 'கூமுறை' என வருவதும் முறையே அளபெடைக்குறிச் சேர்க்கைக் கும் விடுபடுதலுக்கும் சான்றுகள்.

13. 4. வல்லினம் இரட்டித்தல்

மறுதரற்கு (நற். 32.6) என்பது 'மறுத்தரற்கு' என்றும் வீதா வேங்கைய (நற். 51.11) என்பது 'வீத்தா வேங்கைய என்றும் வரும் இரு வேறுபாடுகள் வல்லின எழுத்து இரட்டித்தலால் விளைந்தவை.

'வேறுபுலம்' (பதிற். 71.18) என்பது 'வேற்றுப் புலம்' என வல்லினம் இரட்டித்து வந்துள்ளது. இம்முறையில் இந்நூலில் இவ்வொரு வேறுபாடே உள்ளது.

'ஓதுடையந்தணன்' (கலி. 69.5) என்பதில் வல்லெழுத்து இரட்டித்தமையால் 'ஓத்துடையந்தணன்' என்ற வேறுபாடு உண்டாயது. 'போகி' (புறம்.20-7) என்பதற்குப் 'போக்கி' எனவும்' 'விடுதல்' (புறம். 160-28) என்பதற்கு 'விடுத்தல்' எனவும் வருவன எழுத்துக்கள் இரட்டித்தலால் வரும் வேறுபாடுகள்.

13. 5. சுட்டெழுத்து

'அல்லேம் அதனல்' (நற். 380.6) என்பது 'அல்லேம் இதனல்' என்றும் 'இல்லேன் இதனல்' என்றும் வருவன சுட்டெழுத்து மாற்றத்தால் நிகழ்ந்தன.

13. 6. நெடில்-இரு குறிலாதல்

'ஒகையுமணர்' (நற். 331.2) என்பது 'ஒழுகையுமணர்' என வருவதை நெடில் இரு குறிலாகும் மரபின்படி அமைந்ததாகக் கொள்ளலாம்.

13. 7. உம்மை

'நுமரொடும்' (நற். 32. 5) 'மதிலராகவும்' (நற். 39. 8) என வரும் பாடங்களில் உம்மை விடுபட்டமையால் முறையே 'நுமரொடு' மதிலராக' என வருகின்றன. 'சான்ரேருரைப்ப' (பதிற். 73. 15) என்பதில் உம்மை சேர்ந்து 'சான்ரேருரைப்பவும்' என்று பதிற்றுப்பத்தில் வருவது ஒரே வேறுபாடு.

13. 8. ஏகாரம்

'அரும்படர்' (நற். 307.10) என்ற பாடம் ஏகாரம் சேர்ந்து 'அரும்படரே' என வருகிறது. 'இனிதே தெய்ய' (நற். 230.10)

என்பதில் ஏகாரம் விடுபட 'இனிதுதெய்ய' என்ற பாடமாகிறது. 'வென்றேய் அதனுல்' (பதிற். 63. 15) என்பதில் ஏகாரம் சேர்ந்து 'வென்றேயே அதனுல்' என்று வருவது இந்நூலில் இம்முறையில் அமைந்த ஒரே வேறுபாடு.

13. 9. போலி

'தௌவென்றன்றே' (நற். 319. 2) என்பதற்குத் 'தவ்வென் றன்றே' என்றும் 'இமயத்துச்சி' (நற்.356.3) என்பதற்கு 'இமையத் துச்சி' என்றும் வருவன போலி எழுத்துக்களால் அமைந்த வேறு பாடுகளுக்குரிய எடுத்துக்காட்டுக்கள்.

திறன்-திறல் (பரி. 1. 2) மால்-மான் (பரி. 1. 28) புலம்-புலன் (பரி. 1. 46) அமையம்-அமயம் (பரி. 3. 91) கடம்படுவோர்-கடன்படுவோர் (பரி. 8. 106) உடம்புணர்தல்-உடன்புணர்தல் (பரி. 8. 125) கவுதமன்-கௌதமன் (பரி. 19. 51) என வருவன எழுத்துப் போலிகளால் நிகழ்ந்த வேறுபாடுகள்.

'பைஞ்ஞிலம்' (பதி. 17. 9) என்பதற்குப் 'பஞ்ஞிலம்' என்பது எழுத்துப் போலி.

13.10. ஒருமை-பன்மை மயக்கம்

'செல்வன்' (நற். 45. 5) 'செல்வர்' என்று வருவது ஒருமை பன்மை மயக்கத்துக்கு உரியது. 'இயற்கையல்லது' (புறம். 35-38) என்பதற்கு 'இயற்கையல்லன' என்பது போன்று வரும் வேறு பாடுகள் பன்மை-ஒருமை மாறுபடுகளால் அமைவன.

13.11. புணர்ச்சி

'பாழாகுமனளியதாமே' (பதி. 22.38) என்பது 'பாழாகு மன்னளிய தாமே' என வருவது புணர்ச்சி வகை வேறுபாடு. 'அடர் புகர்ச் சிறுகண்' (புறம். (6-12) அடர்ப்புகர்ச் சிறுகண்' என்பதில் புணர்ச்சியில் ஒற்று மிகுந்து வருவதாலும் 'படப்பைக் கொய்த' (புறம். 140.3) 'படப்பை கொய்த' என்பதில் புணர்ச்சியில் ஒற்று விடுபட்டு வருவதாலும் அமையும் பாட வேறுபாடுகள்.

13. 12. விகுதி

'சிறுகோல் சென்னி' (நற். 265.6) என்பது 'சிறுகோல் சென்னியர்' என வருவது விகுதிச் சேர்க்கையாலும் 'அல்லல் உறீ இயர்' (நற். 56. 4) என்பது 'அல்லல் உறீஇ' என வருவது விகுதி விடுபட்டமையாலும் 'நகுவேன்' (நற். 130. 1) என்பது 'நகுவன்' என வருவது விகுதி மாற்றத்தாலும் வரும் வேறுபாடுகளுக்குரிய உதாரணங்கள். 'சேணனுயினும்' (பதிற். 44. 11) என்பது விகுதி மாற்றத்தால் 'சேஞேனுயினும்' என வருகிறது.

13. 13. விகாரம்

'வரம்பில் வெள்ளம்' (பதிற். 33. 6.) என்பது 'வரப்பில் வெள்ளம்' என வருவது விகார வகை வேறுபாட்டுக்கும் உரிய சான்று.

13. 14. வேற்றுமை உருபு

'மடந்தை' (நற். 60. 10) என்பது 'மடந்தைக்கு' என வேறுபட்டு வருவது வேற்றுமை உருபுச் சேர்க்கையால் விளைந்தது. 'சாரலின்' (நற். 14. 7) என்பது 'சாரல்' என வேறுபட்டு வருவது வேற்றுமை உருபு விடுபட்டமையால் அமைவது. 'பொழுதின்' (நற். 109. 6) என்பது 'பொழுதில்' என வேறுபட்டு வருவது வேற்றுமை உருபு மாறுவதால் வந்த வேறுபாடு. 'குன்றுநிலை' (பதிற். 63.10) என்பது 'குன்றினிலை' என வருவதும், 'முதல்வர்க் கோம்பினர்' (பதிற். 72.4.) என்பது 'முதல்வரோம்பினர்' என வருவதும் 'மருங்கின்' (பதிற். 58. 17) என்பது 'மருங்கில்' என வருவதும் முறையே வேற்றுமை உருபுச் சேர்க்கைக்கும், விடுபாட்டுக்கும் மாற்றத்துக்கும் உரிய சான்றுகள்.

'பொன்னோடை' (புறம். 3.7) 'பொன்னிஞேடை' என வேற்றுமை உருபுச் சேர்க்கையாலும், 'பரிசிலர்க்கு' (புறம். 334. 10) 'பரிசிலர்' என வேற்றுமை உருபு விடுபட்டமையாலும் 'இரும்பே ரொக்கலை' (புறம். 69. 6) 'இரும்பே ரொக்கலொடு' என வருவது வேற்றுமை உருபு மாறுவதாலும் வரும் வேறுபாடுகள்.

13. 15. உவம உருபு

பதிற்றுப்பத்தில் 'தோன்றியாங்கு' (பதிற். 64.13) என்பதில் உவம உருபு மாறித் 'தோன்றியன்ன' என்று வருவது உவம உருபு மாற்றத்திற்கு உதாரணம். இத்தகைய வேறுபாடுகள் அரியன.

இலக்கண வகையால் அமையும் வேறுபாட்டு வகைகளுக்கு மேலும் பல சான்றுகள் பிற நூல்களிலும் உள. எனினும் விரிவஞ்சி அவை விடுக்கப்பட்டன.

14. ஒப்புமை வகை வேறுபாடுகள்

ஒப்புமை வகை வேறுபாடுகளில் ஏடுகளில் அமையும் எழுத்துக்களில் குறில் நெடில் ஒப்புமை,. ஒலிப்பிறழ்ச்சியால் ஓர் எழுத்து பிறிதோர் எழுதாக அமையும் ஒலி ஒப்புமை, ஏடுகளில் எழுது முறையாலும் சிதைவினுலும் எழுத்துக்களிடையே அமையும் தோற்ற ஒப்புமை எனப் பல பிரிவுகள் உள.

'மரல் நோக்கும் இண்டிவர்' (நற். 2. 6) என்பதற்கு 'மானேக்கு மீண்டிவர்' என்றும் 'வைஇய செல்வோள்' (நற் 12. 6) என்பதற்கு 'வைகிய செல்வோள்', என்றும் 'நோவர் மாதோ' (நற். 12. 7) என்பதற்கு 'நோவாம் மாதோ' என்றும் வருவன ஏடுகளில் அமைந்த எழுத்துக்களின் தோற்ற ஒப்புமையால் விளைந்த வேறு பாடுகள்.

ஒருவர் ஏடு படிக்க, அதனைச் செவியால் கேட்டுப் பலர் படி எடுக்கும் முயற்சியின்போதும், ஒருவரின் உச்சரிப்புப் பிறழ்ச்சி அல்லது ஒருவரின் கேட்புப் பிறழ்ச்சி நிகழும்போதும் ந-ன, ண-ன, ந-ண, ழ-ள, ள-ல, ற-ர ஆகிய எழுத்துக்கள் மாறிய மைதல் இயற்கை, இதனுலும் பாடங்கள் வேறுபட்டமைக்கு நெருநல்' (நற். 25· 5) என்பது 'நெருனல்' என்றும், 'முணஅது' (நற். 6. 6) என்பது 'முனஅது' என்றும், 'பூநாறு குருஉச்சுவல்' (நற். 149. 6) என்பது 'பூணுறு குருஉச்சுவல்' என்றும், 'நன்மானு ழையின்' (நற். 19. 4) என்பது 'நன்மானுளையின்' என்றும் 'புள்ளொலி' (நற். 287. 9) என்பது 'புள்ளொளி' என்றும் 'நன்மொழி தேறிய' (நற். 10. 9) என்பது 'நன்மொழி தேரிய' என்றும் வருவன சான்றுகளாம்.

குறில்-நெடில், வல்லினம்-மெல்லினம் மற்றும் சில எழுத்துக் கள் வேறுபாடின்றி எழுதப்பெறும் முறையால் புறநானூற்றில் சில வேறுபாடுகள் உள. இவற்றுள் வகைக்கு ஒன்று கீழே தரப்பெற்றுள்ளது.

பாடம்	வேறுபாடு	வேறுபாடின்றி அமைந்தவை
குடை நிழலான் (22.12)	குடைநீழலான்	குறில்-நெடில்
ஞாலத்தியக்கும்(185-1)	ஞாலத்தியங்கும்	வல்லினம்-மெல்லினம்
எறிபுனக் குறவன்(23.1)	எரிபுனக்குரவன்	றகர-ரகரம்
இரவு மெண்ணெய் (7-7)	இரவு மென்னெய்	ணகர-னகரம்
முந்நீர் (9.10)	முன்னீர்	நகர-னகரம்
போலமாய்ந்திசினோர்(27-6)	போன் மாய்ந்திசினோர்	லகர-னகரம்
வலம்படுதுய்வாள் (91.1)	வளம்படு துய்வாள்	லகர-ளகரம்
முன்னூர்ப் பழுனிய (254.7)	முள்ளூர்ப் பழுனிய	னகர-ளகரம்
வான்பெயத்தூங்கிய(277.6)	வான்பெயற்றூங்கிய	தகர-றகரம்
நெடுமாணெற்றின்(297.2)	நெடுமாநெற்றின்	ணகர-நகரம்
முளவுமா (325-6)	முழவுமா	ளகர-ழகரம்
நடுங்கவேத்துவென்(382.21)	நடுங்க வேந்துவென்	தகர-நகரம்

'இளையவாடுநடை' (பதிற். 12.11) என்பதற்கு 'இழைய வாடு நடை' என்பது எழுத்துக்களிடையே வேறுபாடின்றி வழங்குவதற்குச் சான்று. இழிவென (கலி. 2.11) என்பதற்கு 'இளிவென' என்றும், 'போறிர்' (கலி. 9.11) என்பதற்குப் 'போறீர்' என்றும் வரும் வேறுபாடுகளும் இவ்வகைக்குச் சான்றுகள்.

'உயர் மருப்பின' (புறம். 22.2) என்பதற்கு 'உயர் மருப்பின்' எனவரும் வேறுபாடு எழுத்து ஒப்புமையால் ஏற்பட்டமைககும் 'வெவ்வெரிநைப்ப' (புறம். 23.10) என்பதற்கு 'வெவ்வெரியிணைப்ப' எனவரும் வேறுபாடு ஒலி ஒப்புமையால் ஏற்பட்டமைக்கும் உரிய சான்றுகன்.

முந்திய பாடலில் இடம் பெற்ற ஒரு பாடவேறுபாட்டின் தாக்கம் பிந்திய பாடலொன்றிலும் இடம் பெறுதல் உண்டு. 'கன் முழை அருவி' (புறம் 147.1) என்பதற்குக் 'கன்முகையருவி' என்ற பாடவேறுபாடு உள்ளது. மூன்று பாடல்களுக்குப் பின்னரும் இவ் வேறுபாட்டின் தாக்கம் தொடரக் காண்கிறோம். 'கன்மிசையருவி (புறம். 150.16) என்ற பாடத்துக்கும் 'கன்முகையருவி' என்று வேறுபாடு ட:யின்றுள்ளது. இது முந்திய பாடலின் பாடவேறுபாட்

டுத் தாக்கத்தின் தொடர்ச்சியே என்பது புலனாகும். ஒப்புமை நிலையால் நிகழும் பாட வேறுபாட்டில் இதுவும் கொள்ளத்தக்கதாம்.

15. பத்துப்பாட்டு நூல்களில் வேறுபாடுகள்

பத்துப் பாட்டில் அமைந்த பத்து நூல்களிலும் பொருள் வேறு பாடு அற்றனவாய் அமைந்த மொத்தப் பாட வேறுபாடுகளின் எண்ணிக்கை 306. திருமுருகாற்றுப்படையில் 5, பொருநராற்றுப் படையில் 23, சிறுபாணாற்றுப் படையில் 24, நெடுநல்வாடையில் 13, பெரும்பாணாற்றுப்படையில் 83, முல்லைப்பாட்டில் 11 மதுரைக் காஞ்சியில் 83, குறிஞ்சிப்பாட்டில் 10, பட்டினப்பாலையில் 7, மலைபடுகடாமில் 42 எனவரும் இவ்வேறுபாடுகள் 306ம் எழுத்து, சொல், இலக்கணம், ஒப்புமை எனவரும் நால்வகைப் பகுப்பில் இப் பகுதிக்கண் நூல்வரிசையில் அடக்கிப் பகுத்துரைக்கப்பட்டுள்ளன. இவற்றுள் சில அச்சுப் பிழை வேறுபாடுகளும் உள. அவை குறிப் பிடப்பெறவில்லை.

15. 1. திருமுருகாற்றுப்படை

திருமுருகாற்றுப்படையில் 'பராரை மரா அத்து' (10) என வரும் பாடத்திற்குக் கழகப் பதிப்பில் 'பராஅரை மராஅத்து' என வேறுபாடு உள்ளது. பின்னுள்ள சொல் அளபெடுத்தமைக்கு ஏற்ப முன்னுள்ள சொல்லையும் அளபெடுக்கச் செய்து இருக்கலாம் என உணர முடிகிறது.

'ஒரு நீயாகித் தோன்ற' (294) என்பதற்கு ஒரு 'நீயாகத் தோன்ற' என உ. வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் ஒரு வேறுபாடு உள்ளது. இது ஒரு பொருள் தரும் வேறுசொல் பயின்றமையால் வரும் வேறுபாடு.

15. 2. பொருநராற்றுப்படை

பொருநராற்றுப்படையில் உள்ள 23 வேறுபாடுகளும் பல் வேறு களங்களைக்கொண்டு எழுந்துள்ளன. முன்புள்ள பாடத்தினைப் பெயர்த்து எழுதுங்கால் அறிந்தோ அறியாமலோ ஓர் எழுத்தைச் சேர்த்து எழுதியமையால் பலவேறுபாடுகள் எழுந்தன. இவற்றைக் கீழ்வரும் பட்டியலில் காணலாம்.

பாடம்	அடி	வேறுபாடு	வேறுபாடுஉள்ள இடம்
ஒழுகிய தோற்றம்	1	ஒழுங்கிய தோற்றம்	உ.வே. சாமிநாதையர் பதிப்பு
இசையேன்புக்கு	67	இசையெனப்புக்கு	,,
களைந்தேறென்றேற்றி	167	களைதந்தேறென்றேற்றி	,,
வெருவரு செலவின்	172	வெருவருஞ் செலவின்	,,
களவு முனையின்	184	கவர்வு முனையின்	மர்ரே,,பதிப்பு
பகைமுரண் செலவும்	188	பகைமுரண்சொலவும்	உ. வே. சாமி நாதையர் பதிப்பு

இப் பாடவேறுபாடுகளில் பெரும்பாலானவை உ. வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் உள. 'இசையேன்புக்கு' (67) என்பதில் ஒற்றுச்சேர்ந்தமையால் 'இசையெனப்புக்கு' எனமாறியது.

முன்புள்ள பாடங்களில் ஓர் எழுத்து, பிற்காலத்தில் விடுபட்டமையாலும் பாடங்கள் வேறுபட்டுள. இம்முறையில் 'களிறுவழங்கதர்க் கானத்து' (49) என்பதில் ரகர ஒற்றுவிடுபட்டமையால் 'களிறு வழங்கதரகானத்து' என்றும், 'முறையுளிக்கழிப்பி' என்பது ககர வொற்றின்றி 'முறையுளி கழிப்பி' என்றும், 'தூக்கிச் செல்கென' (176) என்பது ஒற்றின்றி 'தூக்கி செல் கென' என்றும் மாறி வேறுபாடுகளாயுள.

இனி ஒலியாலும் தோற்றத்தாலும் ஒப்புமையுடைய நிலையில் எழுத்துக்களிடையே வேறுபாடற்ற நிலையில், சில பாடவேறுபாடுகள் எழுந்தன.

ஆடு பசி (61) — அடு பசி என்பது நெடில் குறில் வேறுபாடின்மையால் அமைந்தது. வென்வேல் (129) வெல்வேல், 'வென்வேற் குரிசில்' (231) 'வெல்வேல் குரிசில்' என வருவன னகர லகர வொற்றுக்களுக்கிடையே வேறுபாடின்மையால் எழுந்தவை. 'வெண்ணித்தாக்கிய' (147) என்பது தகர றகர ஒலியொப்புமையால் 'வெண்ணிற்றாக்கிய' என்றாயிற்று. 'பரல்;வறைக் கருணை' (115)

என்பது தோற்ற ஒப்புமையால் 'பால்வறைக்கருணை' ஆயிற்று. தகர ககர வொற்றுக்களின் தோற்ற ஒப்புமை 'நசையுநர்த்தடையா' (66) என்பதை 'நசையுநர்க்கடையா' என மாற்றியது.

இல், இன், என்ற வேற்றுமை உருபுகளின் வேறுபாடற்றநிலை மருங்கிலணுகுபு' (149) - 'மருங்கினணுகுபு' என்றும் 'முனையில்' (202) - 'முனையின்' என்றும் வேறுபாடுகளைத் தோற்றியது. உவம உருபு இடம் மாறியமைந்தமையால் 'துடியடியன்ன' (125) என்பதற்குத் 'துடிபுரையடிய' என வேறுபாடு அமைந்தது. 'படைவிட வருளின்' (21) என்பதற்குப் 'படையிட வருளின்' என வேறுபாடு அமைந்தமைக்கு யகர வகர உடம்படு மெய்களிடையே வேறுபாடின்மையையோ ஏடுகளில் அமைந்த தோற்ற ஒப்புமையையோ காரணமாகக் கூறலாம். 'மராத்த' (50) என்னும் சொல்லில் அளபெடைக் குறி சேர்ந்தமையால் 'மராஅத்த' என்ற பாடம் உருவானது. 'கற்றதட்டொட்டுச் சிறந்த' (137) என்பது ஒலி ஒப்புமை காரணமாக 'கற்றது தொட்டுஞ் சிறந்த' என வேறுபாட்டுடன் அமைந்தது.

15. 3. சிறுபாணாற்றுப்படை

சிறுபாணாற்றுப்படையில் 'தோட்புணையாகிய' (117) 'நாவினிலங்கெயிற்று' (196) 'அறிவுமடம் படுதலும்' (216) என்பனவற்றில் உள்ள ஒவ்வோரெழுத்துக்கள் விடுபட்டமையால் முறையே தோட்புணையாகி, நாவிலங்கெயிற்று, அறிமடம் படுதலும் என்பன வேறுபாடுகளாக அமைந்துள்ளன.

'ஆமான் சூட்டின்' (177) 'தங்கை பிடிக்கை' (190-91) என்பவற்றில் பிற்காலத்தில் புதிதாக ஓர் எழுத்துக்கூடியமையால். 'இயாமான் சூட்டின்' என்றும் 'தங்கைப் பிடிக்கை' - என்றும் பாடங்கள் எழுந்துள. புதிய இவ்வெழுத்துக்கள் புணர்ச்சிநிலையில் தோன்றியவை.

'மணிவயிற் கலாபம்' (15) 'மணி மயிற் கலாபம்' என்றும் 'நகாஅரன்ன' (57) - 'நகா அவன்ன' என்றும் வருவன எழுதும் போது நிகழ்ந்த எழுத்து மாற்றத்தால் உருவான வேறுபாடுகள்.

னகர லகர வேறுபாடின்மையால் 'நன்மென்சீறடி' (32)- 'நலமென்சீறடி' என்றாயிற்று. னகர நகர வேறுபாடின்மையால் 'நைவளம் பழுநிய' (36) 'நைவளம் பழுனிய' என அமைந்தது.

பகர வகரங்கள் வேறுபாடின்றி இடைப்போலியாய் வரும் நிலையால் 'கோவத்தன்ன' (71) - 'கோபத்தன்ன' என்றும் 'சாவந்தாங்கிய' (98) 'சாபந்தாங்கிய' என்றும் ஆயின.

'மயின் மயிற்குளிக்கும்' (16) என்பது 'மயின்மயிற் கொளிக்கும்' என்று ஒலி ஒப்புமை நிலையால் மாற்றம் பெற்றது. 'செப்பங் கடைந்த' (53) என்பது 'சேயங்கடைந்த' என்றும் 'உண்டுறை மருங்கில்' (70) என்பது 'வண்டுறை மருங்கில்' என்றும் மாறியுள்ளன. ஏடுகளில் அமைந்த எழுத்துக்களின் தோற்ற ஒப்புமை இதற்குக் காரணம்.

'வாயில் வஞ்சியும் வறிதே' (50) என்பதில் உள்ள சொற்கள் இடம்மாறி அமைந்தமையால் 'வஞ்சிவாயினும் வறிதே' என வேறு பாடாக அமைந்தது. மணிநீர்வைப்பு (152) என்பதுடன் சாரியை சேர்ந்து 'மணி நீர்வைப்பின் என்ற வேறுபாடாக ஆனது.

'பிடிக்கணஞ்சிதறும்' (124) - 'பிடிக்கணுஞ்சிந்தும்' என்றும் கொட்டங் கொள்ளவும்' (166) கொட்டை கொள்ளவும்' என்றும், விரும்புவனபேணி' (244) 'விரும்பினன் பேணி' என்றும் 'ஆறு விருப்பின்' (245) 'ஆறுமரபின்' என்றும் மாறியுள்ளன. ஏறத்தாழ ஒரே பொருளைத்தரும் இருவேறு சொற்கள் ஈரிடத்தும் பயின்றமை யால் இத்தகைய வேறுபாடுகள் எழுந்தன.

'துயல் வரூஉ மாரம்' (2) என்பதில் அளபெடைக்குறியாகிய எழுத்து விடுபட்டமையால் 'துயல்வரும் ஆரம்' என்ற பாடம் உருவாகியுள்ளது.

15. 4. பெரும்பாணாற்றுப்படை

பெரும்பாணாற்றுப்படையில் பொருட் சிறப்பின்றி எழுத்து, சொல், இலக்கணம், ஒப்புமை ஆகிய நிலைகளில் பகுக்கத்தக்கன வாய் 88 வேறுபாடுகள் உள. அவற்றுள் ஓர் எழுத்துக் கூடிய மையால் வேறுபாடுகளாக அமைவன சில. அவை கீழே குறிப் பிடப் பெற்றுள்ளன.

பாடம்	அடி	வேறுபாடு	வேறுபாடு அமைந்த இடம்
கூடுடைப்புதவின்	52	கூட்டுடைப்புதவின்	உ.வே.சாமிநாதையர் பதிப்பு
நீளரையிலவந்து	83	நீள்வரையிலவத்து	,,
பறைதாள்	95	பறைத்தாள்,	
மடையிற்றேக்கிலை	104	மடைவயிற்றேக்கிலை	,,
பாமழை கடுப்ப	190	பாய்மழை கடுப்ப	உ.வே. சாமிநாதையர் பதிப்பு
கடுப்பக் கண்பின்	220	கடுப்பக் கணப்பின்	,,
பாற்கேழ்	319	பொற்கேழ்	,,
கைபுனை	334	கைப்புனை	,,
பைபய	334	பைப்பய	,,
பெருநீர்போகும்	432	பெருநீர்ப்போகும்	,,
கடுஞ்சூர் கொன்ற	457	கடுஞ்சூரக்கொன்ற	கழகப் பதிப்பு

எழுத்துக்கள் மிகுந்தமையால் வரும் இவ்வேறுபாடுகளில் பெரும்பாலானவை பொருள் மாற்றம் செய்யாதவை.

முன்னர்ப்பயின்று வந்த ஓர் எழுத்துவிடுபட்டமையாலும் வேறுபாடுகள் எழுந்தன என்பதைப் பின்வரும் பட்டியலால் அறியலாம்.

பாடம்	அடி	வேறுபாடு	வேறுபாடு அமைந்த இடம்
சாபஞ்சார்த்திய	121	சாபஞ்சாத்திய	உ. வே. சாமிநாதையர் பதிப்பு
கலப்பை சார்த்தி	188	கலப்பை சாத்தி	,,
உழாஅநுண்டொளி	211	உழவு நுண்டொளி	,,
பைபயத்தோன்றும்	318	பையத் தோன்றும்	,,
நெய்ம் மிதிகவளம்	394	நெய்மிதிகவளம்	,,
இடைத்தெரிந்துணரும்	445	இடைதெரிந்துணரும்	,,
உரும்பில் சுற்றமோடு		உருமில் சுற்றமோடு(447)	,,

'உழா நுண்டொளி' (211) என்பதில் நெடிற்குறி (ா) விடுபட்டு 'நு' என்ற எழுத்து 'வு' என்ற எழுத்தாய் மாறி நின்றது. 'உரும்பில் சுற்றமோடு' (447) என்பதில் மகரவொற்று விடுபட்டு பகர இகரம், மகர இகரமாயிற்று.

ஓர் எழுத்துக்குப் பதிலாகப் பிறிதோர் எழுத்து இடம் பெறுதலால் அமையும் வேறுபாடுகளும் உள.

'நுண்புலடக்கிய' (94) என்பதில் டகரத்திற்குப் பதில் டகர வுகரம் இடம் பெற்று 'நுண்புலடுக்கிய' என்றும் 'எயினக்குறும்பில்' (129) என்பதில் ககரவொற்றுக் கெட்டு ரகர வொற்று இடம் பெற்று 'எயினர் குறும்பில்' என்றும் அமைந்த வேறுபாடுகள் இவ்வகைக் குரியவை.

'உதள நெடுந்தாம்பு' (151-152) என்பதற்கு 'உதணெடுந் தாம்பு' என்று அமையும் வேறுபாடு புணர்ச்சியைப் பிரித்தலால் அமைவதாகும். 'உதள் நெடுந்தாம்பு' என்பது புணர்ச்சியில் 'உதணெடுந்தாம்பு' என வரும். புணர்ச்சியின்றுப் பிரிப்பு நிலையில் 'உதள்நெடுந்தாம்பு' என வருவதை 'உதளநெடுந்தாம்பு' எனப் படிப்பதால் வேறுபாடு வந்தது. 'நெய்விலை கட்டி' (164) நெய் விலைக்கு அட்டி' 'துரும்புநீக்கி' (239) 'துரும்பும் நீக்கி' என்பன இம்முறையில் அமைந்த பிற வேறுபாடுகள்.

ஓரின எழுத்துக்கும் பிரிதோரின எழுத்துக்கும் வேறுபாடின்றிப் படித்தல், ஓரினத்துக்குள்ளாகவே ஓர் எழுத்துக்குப் பிறிதோ ரெழுத்தைப்படித்தல், குறில் நெடில் வேறுபாடின்மை ஆகியவற்றல் அமைந்தன பின்வரும் வேறுபாடுகள்.

பாடம்	அடி	வேறுபாடு	வேறுபாடின்றி அமைந்தவை
பாசிலை ஒழித்த	வி 4	பாசிலை ஒழிந்த	வல்லினம்-மெல்லினம்
நொடித்தாங்கு	459	நொடிந்தாங்கு	,, ,,
உலைவிடத்தொழித்த	491	உலைவிடத்தொழிந்த	,, ,,
செந்தீத்தோட்ட	179	செந்தீத்தொட்ட	குறில்-நெடில்
முப்புடைத்திரள்காய்	364	மூப்புடைத்திரள்காய்	,, ,,
கடுப்பநெறியில்	78	கடுப்பநெரியல்	றகர-ரகரம்
வாராதட்ட	100	வாருதட்ட	,, ,,

புல்லணற்காளை	138	புல்லணர்க்காளை	,, ,,
சென்றையன்ன	139	செந்நாயன்ன	னகர-நகரம்
நீர்ப்பெயற்றெல்லைப் போகி	319	நீர்ப்பெயர்த்தெல்லை போகி	தகர-றகரம்

வல்லின-மெல்லினம், குறில்-நெடில், றகர-ரகரம், னகர-நகரம், தகர-றகரம் ஆகியவற்றிடையே மேலே கண்ட வேறுபாடுகள் எழுந்தன.

மடிதலை புலம்ப (286)-வடிதலை புலம்ப வருவது ஒலி ஒப்புமையால் நிகழும் வேறுபாடு.

துளிசொரிந்தாங்கு(24)-தளிசொரிந்தாங்கு, இருநிலக்கரம்பை (93) இடுநிலக்கரம்பை-என்பன தோற்ற ஒப்பமையால் அமைந்தவை.

ஒரே பொருள் தரும் இருவேறு சொற்களைப் பயன்படுத்துவதாலும் வேறுபாடுகள் எழுகின்றன. 'வகுத்ததன்' (5) 'வகிர்ந்ததன்' என்றும் 'உள்ளகம்' (6) 'உள்ளம்' என்றும் வருவன இதற்குச் சான்றுகள்.

'அல்லது கடிந்த' (36) 'அல்லவை கடிந்த' என ஒருமை பன்மை நிலையிலும் 'வான்மடிப் பொழுதின்' (107) 'வான் மடி பொழுதின்' எனப் புள்ளிமீன்றிப் படித்தலாலும் 'பைஞ்சாய்' (209) 'பஞ்சாய்' என எழுத்துப் போலியாலும், 'செம்பூத்தூய' (338) 'செம்பூத்துஉய்' என அளபெடைக் குறிச்சேர்கையாலும் 'செவ்வி கொள்பவரோடசைஇ' (390) 'செவ்வி கொள்பவரோடு மசைஇ' என உம்மைச் சேர்க்கையாலும் 'அழலவிர் தாமரை' (481) 'அழலிவர் தாமரை' என இகரக் குறியீடு இடம் மாறி அமைவதாலும் எழுந்தவை இந்நூலில் இடம் பெற்ற பிறவகை வேறுபாடுகள்.

15. 5. முல்லைப்பாட்டு

முல்லைப்பாட்டில் ஒரே பொருள் தரும் வேறு சொற்கள் பயின்றமையால் வேறுபாடுகளாயவை நான்கு, களைமாயோயென' (21) என்பதற்குக் 'களைமாயோளென' என்றும், 'பரந்பாடி' (28) என்பதற்குப் 'பரந்த பாசறை' என்றும் 'நந்துதொறி மாட்ட' (49) என்பதற்கு 'நந்துதொறு மாட்டி' என்றும் இழை நெகில்ந்து' (84) என்பதற்கு 'இழைநெகிழ' என்றும் வரும் வேறுபாடுகள் இவ்வகையின.

'நெடுநாவொண்மணி' (50) என்பதில் கால் வீழ்ந்தமையால் 'நெடுநாவெண்மணி' ஆயிற்று. 'மிலேச்சர்' (66) என்பது 'மிலேச்சர்' என எழுத்து மாற்றத்தால் அமைந்தது. 'மறந்த வேழம்' (69) 'மாசிந்தித்து' (74) என்பவற்றில் உம் சேர்ந்து 'மறந்த வேழமும் 'மாவுஞ்சிந்தித்து' என்ற பாட வேறுபாடுகள் எழுந்தன. 'கவனம் கைப்ப' (36) என்பது ளகரழகர வேறுபாடின்மையால் 'கவழம் கைப்ப' என்றுகிக் 'கவழமகைப்ப' என்ற வேறுபாடாகவும் உருக் கொண்டது.

15. 6. மதுரைக்காஞ்சி

மதுரைக்காஞ்சியில் பொருள் வேறுபாடற்றனவாய் அமையும் 83 பாட வேறுபாடுகள் உள. 'பயனெதிர்பு நந்த' (12) என்பதில் நகரம் விடுபட்டமையால் 'பயனெதிர்புந்த' என்ற பாடம் அமைந்தது. 'நட்பினையே' (198) என்பதில் பகரவொற்று ஒன்று சேர்ந்தமையால் 'நடப்பினையே' என்ற வேறுபாடு வந்தது. 'குறுமுறிய டகும்' (531) என்பதில் குகரம் இடம்பெற்ற இடத்தில் ரகர உகரம் இடம் பெற்றமையால் 'குறுமுறியடரும்' என்ற வேறுபாடு எழுந்துள்ளது.

'மேதகமிகப்பொலிந்த' (14) என்பதில் 'மிக, என்னும் சொல் விடுபட்டு 'மேதகப்பொலிந்த' என்ற வேறுபாடும், சுடர்வர (720) என்பதில் 'வர' என்பது விடுபட்டுச் 'சுடர' என்ற பாடமும் 'இனி தினிதுறையும்' (473) என்பதில் இனிது என்று மேலும் ஒரு சொல் சேர்ந்தமையால் இனிதினிதுறையும்' என்ற பாடமும்' விரிநீர் நல்வரல் அவிரறல்' (339-340) என்பதில் சொற்கள் முன்பின்னுக மாறியமைந்தமையால் 'விரிநீர் அவிரறல் நல்வரல்' என்ற பாடமும் எழுந்தன. இவை சொல் வகையால் நிகழ்ந்த வேறுபாடுகள்.

ஒலி ஒப்புமையால், 'தண்டாமிகுவளத்தான்' (17) 'தண்டா விகு வளத்தான்' என்றும் 'அளறுபட்ட' (45) 'அயறுபட்ட' என்றும் இரு பாடங்கள் உள. 'பூரிமவிழுத்தெருவில்' (28) 'பூரிய விழுத் தெருவில்' என்பது போல ஏடுகளில் அமைந்த எழுத்துக்களின் தோற்ற ஒப்பமையாலும் பாடவேறுபாடுகள் தோன்றியுள.

'பேய்மகள்' (25) 'பேஎய்மகள்' என அளபெடைக் குறிச் சேர்க்கையாலும் 'படையோர்க்கு முருகயர' (38) 'படையோர் முருகயர' என வேற்றுமை உருபு விடுபட்டமையாலும், 'களனுழக்

கவும்' (48) 'களனுழக்க' என உம்மை விடுபட்டமையாலும் 'கயனகைய' (92) 'கயமகைய' என்றும் 'குளிர்ப் பொதும்பர்' (115) 'குளிர்ப் பொதும்பு' எனப்போலி வகையாலும் 'தொட்டன்ன' (304) 'தொட்டென்ன' என உவம உருபு மாற்றத்தாலும் நிகழ்ந்த வேறுபாடுகள் இந்நூலில் உள.

வகர பகர வேறுபாடின்மையால் 'வீழ்வன்ன' (446) 'வீழ்பன்ன' என்றும் றகர ரகர வேறுபாடின்மையால் 'பெறும் பெயர்' (618) 'பெரும் பெயர்' என்றும், ளகர ழகர வேறுபாடின்மையால் 'கவளங்கைப்ப' (659) 'கவழமகைப்ப' என்றும் குறில் நெடில் வேறுபாடின்மையால் 'நிணஊன்சுட்டு' (755) 'நிணஊன்சூட்டு' என்றும், றகர தகர வேறுபாடின்மையால் 'ஏற்ற' (90) 'ஏத்த' என்றும் வல்லின மெல்லின வேறுபாடின்மையால் 'பரப்பின்' (375) பரம்பின்' என்றும் வருவன எழுத்துக்களிடையே வேறுபாட்டுணர்வின்றி ஒன்றுக்குப் பிறிதொன்றைப் பயன்படுத்தியமையால் எழுந்தவை.

ஒரே பொருள் தரும் வேறு சொற்களை ஆள்வதாலும் பாடங்கள் வேறுபடுகின்றன. வரை நீந்தி (57) என்பதற்கு 'மலை' நீந்தி என வரும் வேறுபாடு இவ்வகையைச் சார்ந்தது.

15-7. நெடுநல்வாடை

நெடுநல்வாடையில் 13 வேறுபாடுகள் பொருள் மாற்றம் செய்யாதவை. அவற்றுள் நரை விராவுற்ற' (152)என்பதில் நெடிற் குறியாகிய கால் விடு பட்டமையால் 'நரைவிரவிற்ற' என்ற வேறுபாடு அமைந்தது. 'ஞெமிறிய' (90) என்பதும் 'வாயுறை யழுத்திய' (140) என்பதும் எழுத்துக்கள் மாறியமைந்தமையால் முறையே ஞெமறிய என்றும், வாயறை யழுத்திய' என்றும் வேறுபாடுகளாயின.

ல-ள ஒலி ஒப்புமையால்' கலிமயிலகவும்' (99) என்பது 'களிமயிலகவும் என்ருயிற்று. ல-ழ, ஒலிஒப்புமையால் பெயலுலந் தெடுத்த' (19) என்பது 'பெயலுழந்தெடுத்த' என மாறியது.ண-ன எழுத்து ஒப்புமையால் தண்மையிற் றிறிந்த' (68) என்பது 'தன்மை யிற்றிறிந்த' எனவந்தது. இவை எழுத்துக்களை வேறுபாடின்றிப் படித்தலாலும், எழுதலாலும்ஒப்புமை நிலையில் நேர்ந்தவை.

புலம்பொடு, கலங்கி, (5) என்பதில் ஒரு உருபு மாறி வேறு உருபு இடம் பெற்றமையால் 'புலம்பிற் கலங்கி' என்ற பாடம் பிறந்தது.

வள்ளி விங்கிறை, (36) என்பதில் முன்பு இல்லாமல் புதிதாக வேற்றுமை உருபு சேர **வள்ளியின்** விங்கிறை' என்ற பாடம் அமைந்தது.

'வில் கிடந்தன்ன' (109) என்பது புணர்ச்சி நிலையில் **'விற்கிடந்தன்ன'** என்று ஆனது. ஏட்டில் உள்ள எழுத்தை ஒற்ருகவும் உயிர் மெய்யாகவும் படிப்பதால் 'பல்வயின்' (109) என்பதற்குப் 'பல வயின்' என்ற வேறுபாடு உருவானது. 'யாமத்தும் பள்ளி' (186) என்பது எழுத்துக்களின் தோற்ற ஒப்புமையால் 'யாமத்துப்பள்ளி' என மாறியது.

15. 8.

குறிஞ்சிப் பாட்டில் 10 வேறுபாடுகள் பொருட் சிறப்பற்றவை. **'தாசினே** பிளந்து' (149) என்பதில் ஓர் எழுத்துக் கூடியமையால் **'ததர்சினே** பிளந்து' எனப்பாட வேறுபாடு வந்தது. 'கணேவிடு புடையூ' (160) என்பதில் ஓர் எழுத்தினேக் கட்டி 'கணேவிடு (பு) புடையூ' என்ற வேறுபாட்டு மர்ரே பதிப்பில் உள்ளது.

'வனே தெழிப்ப' (167) என்பது ழகர ளகர வேறுபாடின்மையால் 'வனேதெளிர்ப்ப' என்ருயது. 'பறியா' (101) என்பது றகர ரகர வேறுபாடின்மையால் 'பரியா' என மாறியது. 'யானுமாற்ற லேன் (29) என்பது நெடில் குறில் ஒப்புமையால் 'யானு மாற்றலென்' எனச் சங்க இலக்கியப் பதிப்பில் பாடமாயிற்று. 'வாராராயினும்' (23) என்பதும், 'திணேயாகக் கன்ன' (132) என்பதும் தோற்ற ஒப்புமை காரணமாக முறையே **'வா ரா தாயினும்'** என்றும் **'கிளே** யாக்கன்ன' என்றும் அமைந்தன.

'வெடிபடுத்தெதிர' (161) என்பது அதே பொருளேத் தரும் வேறு சொல் பயின்றமையால் 'வெடிபடுத்**தார்த்து**' என்று வேறு பாடாயிற்று.

15. 9. பட்டினப்பாலே

பட்டினப்பாலேயில் பொருட் சிறப்பில்லாத ஏழு பாடங்களில் 'கதிருந்து (13) என்பதில் எழுத்து மாற்றம் நிகழ்ந்து 'கதிருந்தி' என்ற வேறுபாடு ஏற்பட்டுள்ளது. 'நிலத்தேற்றவும' (129) என்பதில் ஓர் எழுத்து விடுபட்டமையால் 'நிலத்தேறவும்' என்ற வேறுபாடு தோன்றியது. கொடுஞ்சி-கொடிஞ்சி என்பது போல 'நெருஞ்சியோடு' (256) என்பதற்கு எழுத்துப் போலி வகையால் 'நெரிஞ்சியோடு' (256) என்ற வேறுபாடு உள்ளது.

'பிழிமாந்தியும்' (89) என்பதற்குப் 'பிழிமகிழ்ந்தும்' என்று அமைந்த பாடம் ஒரு பொருள் தரும் இருசொற்களை ஈறிடத்தும் பயன்படுத்தலால் எழுந்தது. 'நெரிய விண்டி' (192) 'நெயளி விண்டி' என்றும் 'குறை கொடாது' (210) 'குறை படாது' என்றும் வரும் வேறுபாடுகளும் இவ்வகையினவே.

15. 10. மலைபடுகடாம்

'அனித் தழை' (5) என்பதில் தகர வொற்று விடிபட்டு 'அணி தழை' என்றும், 'பொருந்தியளவினில்' (33) என்பதில் ஓர் எழுத்துச் சேர்ந்தமையால் 'பொருந்திய வளவினில்' என்றும் 'கேள்வி போ காக்' (22) என்பதில் ஓர் எழுத்து மாற்றம் பெற்றுக் 'கேள்வி போ காது' என்றும் வேறுபாடுகளாய் அமைந்துள்ளன.

நகர னகர ஒலி ஒப்புமையால் 'எய்திநோனுச் செருவின்' (162, 163) என்பதற்கு 'எய்திஞேனுச் செருவின்' என்ற வேறுபாடும் னகர ளகர வேறுபாடின்மையால் 'என்னெறிந்தியற்றிய' (441) என்பதற்கு எள்ளெறிந்தியற்றிய' என்ற வேறுபாடும், நகர னகரம், றகர ரகரம் ஆகியவற்றில் வேறுபாடின்மையால் 'நுணங்கர துவறிய' (35) என்பற்தகு 'நுணங்கறனுவரிய' என்ற வேறுபாடும் தோன்றி உள்ளன.

'குலவுக் குரலேனல்' (108) என்பதற்குக் குவவுக் குரலேனல்' என்று தோற்ற ஒப்பமையாலும் 'பாலுமிதவையும்' (417) என்ப தற்குப் 'பாலும் விதவையும்' என்று ஒலி ஒப்புமையாலும் வேறு பாடுகள் எழுந்துள்ளன.

'உடையவாறே' (195) என்பதில் முன்னே ஒரு சொல் சேர்ந்து 'அரும் பொறி உடையவாறே' என ஒரு பாடம் இடம் ெற்றுள்ளது. 'நள்ளிருள் அலரி விரிந்த விடியல்' (195—196) என்பதில் ஒரு சொல் விடுபட்டு 'நள்ரிருள் விரிந்த விடியல், என்றும் பாடம் அமை-ந்துள்ளது. 'மூத்தபுரிசை' (229) என்பது 'புரிசைமூத்த' என்றும், 'நுண்ணிடிநுவலே' (445) என்பது 'இடி நுண்ணுவணே' என்றும் சொற்கள் முன்பின் மாற்றத்தால் வேறுபாடுகளாக அமைந்துள.

'தொழாநிர்' (231) 'தொழாநீர்' 'அசைவிடப்பருகி' (251) 'அசைவீடப்பருகி' எனவருவன குறில் நெடில் வேறுபாடின்மையால் விளைந்தவை 'வருந்திற் கானத்து' (242) 'வருந்தின் கானத்து' எவைருவது புணர்ச்சிப் பிரிப்பில் எழுந்தது.

ஒரே பொருள்தரும் இருவேறு சொற்களின் பயிற்சியாலும் பாடங்கள் வேறுபட்டுள. 'ஞெரேரென' (340) என்பது 'ஞேயென' வருவது இதற்குச் சான்று. எட்டுத்தொகை நூல்களிலும் பத்துப் பாட்டு நூல்களிலும் பொருள் வேறுபாடற்ற நிலையில் எழுத்து, சொல், இலக்கணம், ஒப்புமை என்ற நிலைகளில் எழுந்த மொத்த வேறுபாடுகள் 5664ல் இன்றியமையாதன சில உரிய சான்று களோடு இக்கட்டுரைக்கண் பகுத்துரைக்கப் பட்டுள்ளன.

7. சங்க இலக்கியம்-மூலபாட ஆய்வு

1. நற்றிணை

நற்றிணையில் அமைந்த 401 பாடல்களில் வேறுபாடு உள்ளவை 269 பாடல்கள். இவற்றில் அமைந்த மொத்த வேறுபாடுகளின் எண்ணிக்கை 666. இவ்வேறுபாடுகளில் பொருள் மாற்றத்துடன் அமைந்த இன்றியமையாத வேறுபாடுகள் 72. இவை இங்கு ஆராயப் பட்டுச் சிறந்த மூலபாடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

1. பொருள் மாற்றமும் பாடவேறுபாடும்

இலக்கியத்தின் சுவையில் தோய்ந்த நிலையில் சுவைஞர்கள், இன்ன பாடத்துக்குப் பதில் இன்ன பாடம் இருப்பின் பொருள் இவ் வகையில் சிறக்கும் என்று கருதிச் செய்தனவாக அமைந்த சில வேறுபாடுகள் நற்றிணையில் உள. நற்றிணைப் பாடல்களைத் தம் உரையில் மேற்கோள் காட்டிய உரையாசிரியர்கள் தங்கள் கருத்துக்கிசையப் பாடல்களைத் திருத்தியனவாகவும் சில உள.

பொருள் மாற்றம் கொண்ட வேறுபாடுகள் 72–ல் கழகப் பதிப்பால் அறிவன 12; பெருமழைப் புலவரின் விளக்கவுரையால் அறியப் படுவன 8; சங்க இலக்கியப் பதிப்பில் காணப்பெறுவன 28; ஔவை துரைசாமிப்பிள்ளையின் உரைப் பதிப்பால் அறியப்பெறுவன 18; மர்ரே பதிப்பில் அமைந்தவை 6.

2. கழகப் பதிப்புப் பாடங்கள்

'நின்றசொல்லர் நீடுதோன்றினியர்' (1:1) என்பதில் **'நின்ற சொல்லர்'** என்பதற்கு **'நின்ற சொல்லோடு'** என்ற பாடம் கழகப் பதிப்பில் உள்ளது. **'நின்ற சொல்லால்'** என்ற பாடம் நச்சினார்க்கினியரின் மேற்கோளில் உள்ளது. 'நின்ற சொல்லின்' என்பது ஔவை பதிப்புப் பாடம்

> "நின்ற சொல்லர் நீடு தோன்றினியர்
> என்றும் என்றோள் பிரிபறியலரே"

எனவரும் பாடல் அமைப்பில் 'சொல்லர்', 'இனியர்' என்பன குறிப்பு வினை முற்றுக்களாய் அமைந்து, ஓசை இனிமை தருகின்றன.

பிற பாடங்களில் இத்தகைய அமைப்பு ஒழுங்கும், ஓசை நயமும் இல்லாததால் **'நின்றசொல்லர்'** என்பதைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

'வையெயிற்றையள் மடந்தை' (2:7) என்பதில் 'மடந்தை' என்பதற்கு **'மாயள்'** என்ற பாடத்தைக் கழகப் பதிப்பு வழங்குகிறது 'மடந்தை' என்பதும் 'மாயள்' என்பதும் தலைவியைக் குறிக்கும் சொற்களே. மடந்தை முன்னே செல்ல இருள் நிறைந்த அச்சுரத்தில் இளையோன் செல்கின்றான் என்பதை

> "வையெயிற் றையள் மடந்தை முன்னுற்று
> எல்லிடை நீங்கும் இளையோன்."

எனக்கூறுகிறது பாடல். 'மாயள்' எனப்பாடங் கொண்டு 'கரு நிறத்தாள்' எனப்பொருளும் கொண்டால் 'எல்லிடை' செல்லும் இயல்பால் பொருள் சிறவாமை அறியப்படும். எனவே 'மடந்தை' என்பதே சிறப்புடையதாம்.

தலைவன் பிரிந்தமை கருதி இயற்பழித்த தோழிக்குத் தலைவி இயற்பட மொழியுங்கால்,

> குட்டுவன், அகப்பா அழிய நூறிச் செம்பியன்
> பகல் தீவேட்ட ஞாட்பினும். (14:3-5)

என்ற வரலாற்றுக் குறிப்பு உள்ளது. இதில் 'செம்பியன்' என்பதற்கு 'அருமிளை' என்ற பாடம் உள்ளது. 'செம்பியல்' என்பது ஔவை துரைசாமிப்பிள்ளை கூறும் பாடம். இப்பாடத்திற்கேற்பப் 'பகல்தீ' என்பதற்கு 'மதில்தீ' என்னும் பாடம் கொள்ளப்பட்டுள்ளது. அருமிளையாகிய காவற்காட்டைப் பகலில் தீ வேட்டான் என்பது பொருள் நிலையில் பொருந்துவதாயினும், தீ வேட்ட மன்னர் யார் என்ற வினாவிற்கு விடையில்லாமல் போய்விடுகிறது. செம்பியன் குட்டுவனுடைய அகப்பா அழித்துத் தீவேட்டான் என்பதில், அருமிளையைத் தீவேட்டான் என்ற பொருளும் அடங்கிவிடும். எனவே இன்றியமையாத வரலாற்றுக் குறிப்பான இதில் 'செம்பியன்' எனச் செய்தானைச் சுட்டும் பாடமே பொருள் சிறந்து நிற்கின்றது. வென்ற மன்னர் பகைவர் நாட்டைத் தீக்கொளுத்துதல் என்பதும், அந்நாட்டு மதில் செம்பியல் மதிலாக இருத்தலும் இயல்பாதலால் ஔவை. பதிப்புப் பாடங்கள் பொருந்துவனவல்ல.

தலைமகளைத் தோழி குறைநயப்புக் கூறும் பாடலில் 'செவ்வரி யிதழ சேணுறு நறவின்' (25-2) என்ற தொடர் உள்ளது. 'சேணுறு நறவின்' என்பதற்குச் 'சேணுறு பிடவின்' என்று நச்சினார்க்கினியர் மேற்கோள் பாடலிலும் 'சேணுறு பிடவியன்' என்று கழகப் பதிப்பிலும் பாடம் உள. 'சேணுறு பிடவின்' என்பதே எழுத்துச் சேர்க்கையுடன் கூடிச் சேணுறு பிடவியன்' எனக் கழகப் பதிப்பில் நின்றது. எஞ்சிய சேணுறு நறவின்', 'சேணுறு பிடவின்' என்ற இரு பாடங்களில் எது சிறப்புடையது எனத் துணிதல் வேண்டும். நறவு என்பதும் பிடவு என்பதைப்போல ஒருவகை மலரைச் சுட்டும் பெயரே. எனினும் 'நந்தி நறவம் நறும் புன்னாகம் 1' எனவரும் அடியில் 'நறவம்' என்ற பெயரும் 'குல்லை பிடவஞ் சிறுமாரோடம்2' எனவரும் அடியில் 'பிடவம்' என்ற பெயரும் குறிஞ்சிப்பாட்டில் பயின்றுள. 'பிடவம்' என்பதற்குப் 'பிடவம்பூ' என்று பொருள் எழுதிய நச்சினார்க்கினியர் 'நறவம்' என்பதற்கு 'நறவக்கொடி' என்று பொருள் எழுதியுள்ளார். நெடுந்தூரம் மணங்கமழும் இயல்புடைய மலர்வகையே இங்குக் குறிப்பிடப்படுதல் பொருந்தும் என்பதைச் 'சேணுறு' என்ற அடை சுட்டுகிறது. எனவே 'சேணுறு நறவின்' எனக் கொள்வதை விடச் 'சேணுறு பிடவின்' எனக் கொள்ளுதல் பொருத்தமாக இருக்கும்.

தோழி, தலைவியின் இற்செறிப்பை அறிவுறுத்தும் நிலையில் கிழவனுக்குக் கூறுவதாக வரும் பாடற் செய்தியில் 'நீருறு செறுவில்' (60-7) என்பதற்கு 'நீலச்செறுவில் என்ற பாடம் உள்ளது. 'நீருறு செறுவில் நாறுமுடிய ழுத்த' எனவரும் தொடரால் நாற்று நடுதற்கு ஒத்த நிலையில் 'நீருறு செறுவாக' இருத்தலே பொருந்தும் என்பது அறியப்படும்.

இப்பாடலில், பிறிதொரு பாடமும் உள்ளது. நடுநரோடுநீ சேறியாயின் 'வண்சாயும் நெய்தலும் ஓம்புமதி' (60 8-9) எனவரும் தொடரில் நடுநரோடு சேறியாயின் 'அவரை சாயும் நெய்தலும் ஓம்புமதி' என்றும் கழகப் பதிபபு ஒரு பாடம் தருகிறது.

---

1. குறி. பா-91
2. ,, ,, 78

'நின் உழத்தியரோடு நீ செல்லுவையாயின், வளமிக்க கோரையையும் நெய்தலையும் களையாது பாதுகாப்பாயாக' என்பது இத்தொடரின் பொருள். இற்செறிக்கப்பட்ட நிலையில் தலைவி உழவனால் உழாது விடப்பட்ட கோரையையும் நெய்தலையும் வளையாகவும் உடையாகவும் அணிவள் என்பது இங்குச்சுட்டப் படும் பொருட்குறிப்பு. கழகப் பதிப்புப் பாடம் இந்நுண்மையைச் சுட்டவில்லை. இங்குச் சங்க இலக்கியப் பதிப்பில் 'சேறியாயிவைண' என்றொரு பாடம் உள்ளது. இப்பாடத்திலும் பொருள் நுட்பம் பெறப்படவில்லை. எனவே இங்குப் பின்னத் தூரார் கொண்ட பழைய பாடமே சிறந்தது.

'வேய்பிறங்கு அழுவத்து' (62.3) எனவருவதற்கு 'வேர் பயில் அழுவத்து' 'குற்றகம் சிலம்ப' என்ற பாடங்கள் உள. வேர்பிணி வெதிரத்துக் கால்பொரு நரலிசை (62.1) என முன்னடியில் மூங்கில் என்ற பொருளைத் தரும் 'வெதிரம்' என்ற சொல்லாட்சி இடம் பெற்றமையால் அதனோடு பொருள் பொருத்தமுடைய நிலையில் இங்கும் மூங்கில் என்ற பொருள் தரும் 'வேய்' என்பது 'பயின்ற 'வேய் பிறங்கழுவத்து' என்ற பாடமே சிறந்து விளங்குகிறது. பிற பாடங்கள் பொருட் சிறப்புடையனவல்ல.

'ஒளிறு வெள் அருவி யொண்டுறை' (65. 4) என்பதில் 'ஒண் டுறை' என்பதற்கு 'உண்டுறை' என்றொரு பாடம் உள்ளது. கான் யாற்றில், கலங்கும் பாசியை நீர் அலைப்ப அவை யாண்டும் கலந்து ஒளிறும் அருவியாகப் பெருக்கெடுத்துப் பாய்கிறது. அருவித்துறை யில் கானவர் பாய்ந்து ஆடுகின்றனர் என்பதே இங்குப் பாடலின் கருத்து. கலங்கும் பாசியுடன் கலந்த நீர் நிறைந்த துறை, நீரை உண்ணும் துறையாக இருத்தல் இயலாது. மேலும் கானவர் பாய்ந்து ஆடும் சிறப்புடையது. 'ஒண்டுறையே' தவிர 'உண்டுறை' யாக இருத்தல் இயலாது. எனவே இங்கு 'அருவி யொண்டுறை' என்பதே பொருத்தமான பாடம்.

காமமிக்க கழிபடர் கிளவிப் பாடலொன்றில் தலைவியொருத்தி செவ்வாய்ப் பைங்கிளியை நோக்கித் தன் தலைவனுக்குச் சேதி சொல் லுமாறு வேண்டுகிறாள். 'கானக் குறவர் மடமகள் ஏனல் காவல் ஆயினள்' (102. 8-9) என்பது கிளி தலைவனிடம் கூறவேண்டிய செய்தி. 'அம்மலை கிழவோர்க்கு உரைமதி' (102. 7) என்றும் தலைவி

கூறுகின்றாள். இப்பாடலின் முற்பகுதியில் 'நின்குறை முடித்த பின்றை என்குறை செய்தல் வேண்டுமால் கைதொழுவ இரப்பல்' (102. 3-4) என்று உள்ளது. இங்குச் 'செய்தல் வேண்டுமால்' என்பதற்குச் '**சொல்லல் வேண்டுமார்**' என்று கழகப் பதிப்பிலும், '**சொல்லல் வேண்டுமால்**' என நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோளிலும் பாடங்கள் உள. 'உரைமதி' எனப் பின்னே சொல்லல் வேண்டும் என்ற குறிப்புடைய தொடர் வருதலாலும் 'நின்குறை முடித்த பின்றை' என் குறையும் முடிக்க வேண்டும்' என வேண்டுவதே தலைவியின் கருத்தாக இருப்பது பொருத்தமாதலாலும் பிற பாடங்களை விடச் 'செய்தல் வேண்டுமால்' எனவரும் பின்னத்தூரார் பதிப்புப் பாடமே பொருத்தமுடையதாகும்.

தலைவன் சிறைப்புறத்தானாக, தோழி தலைவிக்கு உரைக்கும் செய்யுளொன்றில் '**செம்பேர் இரலை அலவன்**' (123. 10) என்ற தொடர் அமைந்துள்ளது. சிவந்த பெரிய இரட்டையாக அமைந்த நண்டுகளை என்பது இத்தொடரின் பொருள். இதற்குச் '**செம்பேர் ஈரளை அலவன்**' என்று சங்க இலக்கியப் பதிப்பிலும் '**சேர்ப்பேர் ஈரளை**' அலவன் என்று கழகப் பதிப்பிலும் பாடங்கள் உள. 'சேர்ப் பேர் ஈரளை அலவன்' என்ற பாடம் பொருள் நோக்கில் சிறப்புடையதன்று. சங்க இலக்கியப் பதிப்பின் 'செம்பேர் ஈரளை அலவன்' என்பதற்குச் சிவந்த பெரிய ஈரமான அளையில் வாழும் நண்டு என்பது பொருளாகும். 'கொடுந்தாள் கண்டல்' என்பதால் வளைந்த அடியினையுடைய கண்டல் மரமும் அதன் அடியில் அமைந்த நண்டு வாழும் ஈர அளையும் பெறப்படும். எனினும் அங்கே இரட்டையாக் உள்ள நண்டுகளைக் கண்டு மகிழும் இயல்புடையவள் தலைவி எனக் கொள்ளும்போது, தலைவன் தன்னை விரைந்து வரைதலைத்தலைவியின் உள்ளம் விரும்பும் என்ற குறிப்பும் அறியப்படும். எனவே, 'செம்பேர் இரலை அலவன்' என்ற பாடமே ஏற்புடையது எனத் துணியலாம்.

தோழி வரைவு கடாவும் பொருளமைந்த பாடலொன்றில் 'குருளை நீர்நாய் கொழுமீன் மாந்தித் தில்லையம் பொதும்பில் பள்ளி கொள்ளும் மெல்லம் புலம்ப' (195. 3-4) என்ற தொடர் உள்ளது. 'கழியிலுள்ள நீர்நாயின் குருளை, கொழுவிய மீன்களை உண்டு தில்லை மரப்பொந்துகளில் பள்ளி கொள்ளும்', எனத் தலைவனின் நாட்டு வளம் இங்குச் சுட்டப்படுகிறது. '**தில்லையம் பொதும்பில் என்பதற்குக்** '**திதலையம்** பொதும்பில்' என்றும், '**தில்லைப்பொதும்பில்**' என்றும்

பாடங்கள் உள. 'திதலையம் பொதும்பு' என்பது திதலை படிந்தாற் போலக் காட்சிதரும் பொந்து எனப் பொருள்படும். இங்குப் பொதும் பின் தோற்றம் மட்டுமே வெளிப்படுகிறது. 'தில்லையம் பொதும்பு' எனக் கொண்டால் கருப்பொருளும் சுட்டப்பெறும் சிறப்பு அமைகிறது. எனவே 'தில்லையம் பொதும்பில்' என்ற பாடமே சிறப்புடையது. தில்லைப் பொதும்பில் என்ற பிறிதொரு பாடம் 'அம்' என்ற சொல்லால் பெறும் இன்னோசை இழந்து நிற்கின்றது.

2. பெருமழைப்புலவர் உரைக்குறிப்புப் பாடங்கள்

கழகப் பதிப்பில் பாடல்களுக்குப் பெருமழைப்புலவர் பொ வே. சோமசுந்தரனார் விளக்கவுரை எழுதியுள்ளார். இவ்வுரைக் குறிப்பில் பொருள் வேறுபாடு பயக்கும் பாடங்கள் சில உள.

வினைமுற்றி மீளும் தலைவன் தேர்ப்பாகற்குச் சொல்லும் பாடலொன்றில் பாக! பன்னாள் வறத்தொடு பொருந்திய உலகு தொழிற் கொளீஇய பழ மழை பொழிந்த, '(42.1-3) என்ற தொடர் அமைந்துள்ளது. பல நாள் வறண்டு கிடந்த உலக உயிர்கள் தத்தம் தொழிலை மேற்கொள்ளப் பழமையான நிலைபோல மழை பொழிய. என்பது இத்தொடரின் பொருள். இதில் 'வறத்தொடு பொருந்திய' என்பதற்கு 'வறத்தொடு வருந்திய' என இளம்பூரணர் மேற்கோள் பாடலிலும் 'அறத்தொடு வருந்திய' எனச் சங்க இலக்கியப் பதிப்பிலும் 'அறத்தொடு பொருந்திய' எனப் பெருமழைப் புலவர் உரைக் குறிப்பிலும் பாடங்கள் உள. 'வறத்தொடு பொருந்திய' என்பதற்கும் வறத்தொடு வருந்திய' என்பதற்கும் மிகுதியும் வேறுபாடில்லை. ஆனால் 'அறத்தொடு பொருந்திய' 'அறத்தொடு வருந்திய' என்ற பாடங்கள் பொருள் வேறுபட்டவை. இதுவரை அறத்தொடு பொருந்திய உலகம், தன் தொழிலைக் கொள்ளும்படி பழமழை பொழிந்தது என்றும், இதுவரை அறம் செய்ய இயலாது வருந்திய உலகம் வருத்தம் ஒழிந்து தன் தொழிலைச் செய்யும் படி பழமழை பொழிந்தது என்றும் இப்பாடங்களால் பொருள் உணரப்படும். வறட்சியால் வருந்தியது என்பதைவிட, வறட்சி காரணமாக அறத்தொடு பொருந்திய செயல்களைச் செய்ய இயலாமல் வருந்தியது எனக்கொள்வது சிறப்புடையது. மேலும் இல்லறம் நிகழ்த்த வியலாமல் பிரிந்து வருந்திய தலைவன் இப்பொழுது. நிகழ்த்தச் செல்கிறான் என்ற நிகழ்ச்சியையும் பொருத்திக் காண்புழி, இப்பாடங்களில் 'அறத்தொடு வருந்திய' என்ற சங்க இலக்கியப் பதிப்புப் பாடம் சிறப்பாயிருத்தலை உணரலாம்.

தன்னைத் தேற்றுவிக்கும் தோழிக்குத் தலைவி கூறுவதாய் வரும் பாடல் ஒன்றில், 'என் நெஞ்சம் தலைவனிடம் சென்று ஆண்டு அவர் செய்யும் வினைக்குச் சூழ்ச்சி சொல்லும் துணையாயிருந்து விட்டதோ' எனக்கூறிப் புலம்புகிருள். இதனைச் 'சென்ற நெஞ்சம் செய்வினைக் குசாவாய் ஒடுங்குவரல் நசையொடு வருந்துங் கொல்லோ' (56. 5-6) எனவரும் தொடர் சுட்டும். இதில் 'செய்வினைக் குசாவாய்' எனவரும் தொடருக்குச் 'செய்வினைக் குசாவா' என்று எழுத்தொன்று விடுபட்டமையால் எழுந்த பாடம் பெருமழைப் புலவரின் உரைக்குறிப்பில் உள்ளது. 'செய்வினைக்கு ஆசாவா' என்ற பாடம் மர்ரே பதிப்பில் உள்ளது. 'தலைவன் செய்யும் வினைக்கு அயராமல் உள்ளது. என்பது இப்பாடத்தால் உணர்த்தப் படும் பொருள். இவ்விரு பொருளில் தலைவனிடம் சென்ற நெஞ்சம் அவனுக்கு உசாத்துணையாய் விளங்கியதோ என்ற பொருளைப் பயக்கும் 'செய்வினைக்குசாவாய்' என்ற பாடமே சிறப்புடையது என்பதைப் பொருளுணர்ச்சியால் அறியலாம்.

தோழி வரைவு கடாவும் பாடலொன்றில் 'முழவிசைப்புணரி எழுதரும் உடை கடற்படப்பை எம் உறைவின் ஊர்க்கே தங்கின் எவனே' (67. 11-12) எனத்தோழி தலைவனிடம் கூறுவதாக வருகிறது. முழவுபோல ஒலிக்கும் அலை எழுந்து உடையும் எம் நெய்தல் நில ஊரில் தங்கிச் சென்ருல் என்ன குறை நேரும்? என்ற பொருளைத் தரும் இத்தொடர் தோழியால் வரைவு கடாவும் நிலையை விலக்குகிறது. 'முழவிசைப்புணரி' என்பதற்கு ஏற்ப 'உடை கடற்படப்பை' என்பது பொருத்தமாக உள்ளது. 'உடை கடற்படப்பை' என்பதற்கு 'உழைகடற்படப்பை' 'படுகடற்படப்பை' என்பதும் பாடங்கள். இது அருகில் உள்ள கடற்கரைப்பட்டினம் என்னும் பொருளைத் தருகிறது. தோழி கூறும் பொருள் நுட்பத்தின் வெளிப்பாடும் முன்னர் அமைந்த தொடருக்கு ஏற்பப் பொருட் சிறப்பும் 'உடை கடற்படப்பை' என்ற பாடத்திலேயே அமைந்துள்ளது அறியலாம்.

இடைச்சுரத்து ஆற்ருத தலைவன், தான் செல்லும் வழியைக் கூறுங்கால் மானினம் நிமிர்ந்து தழை உண்ண ஏற்றவாறு சிறிது வளைந்துள்ள கிளைகளையும், புல்லிய அடிப்பக்கத்தையும் உடைய இலந்தை மரத்தின் காய்கள் நெடுகப் பரந்து கிடக்கும் வழி' என்பதை, "உழையணந்து உண்ட இறைவாங்கு உயர்கிளைப் புல்லரை இரத்திப் பொதிப்புறப் பசுங்காய், கல்சேர் சிறுநெறி மல்கத்தாஅம்" (113.1-3) எனக் கூறுகிருன். இதில் இறைவாங்கு

உயர்சினை' என்பதற்கு 'விரைவாங்கு உயர்சினை' என்ற பாடம் உள்ளது. இலந்தையின் கிளை, மான் உண்பதற்கு ஏற்ற வகையில் சிறிது வளைந்தது என்பதே பொருத்தமாக உள்ளது. மான் உண்ணுதற்கு ஏற்ற வகையில் மணம் நிறைந்தது என்ற பொருள் தரும் 'விரைவாங்கு உயர்சினை' என்ற பாடம் பொருத்தமின்றி உள்ளதை இதனால் அறியலாம்.

மதியுடன்படுக்கும்தலை மகன் கூற்றுப் பாடலொன்றில் 'வேர்க் கொண்டு தூங்கும் கொழுஞ்சுளைப் பெரும்பழம்' (213.3) என்ற தொடர் உள்ளது. 'வேரில் காய்த்துத் தொங்கும் கொழுவிய சுளையுடைய பலாப்பழம்' என்பது இதன் பொருள். தொழுஞ்சுளைப் பெரும்பழம்' என்பதற்குக் 'கொடுஞ்சினைப் பெரும்பழம்' என்ற பாடம் பெருமழைப் புலவர் உரைக்குறிப்பில் உள்ளது.' வேர்க்கொண்டு தூங்கும்' என வேர்ப்பலாவே சுட்டப்பெறுதலால் 'கொழுஞ்சுளைப் பெரும்பழம்' என்பதே பொருந்திய பாடமென்பதும், கோட்டுப் பலாவை உணர்த்தும் 'கொழுஞ்சுளைப் பெரும்பழம்' என்பது பொருந்தாது என்பதும் வெளிப்படை.

தலைவன் சிறைப்புறமாக, தோழி தலைவியின் இற்செறிப்பைக் கூறுவதாக வரும் பாடலொன்றில் 'தொடங்கு நிலைப்பறவை உடங்கு குரல் கவரும்' (251.9) என்ற தொடர் அமைந்துள்ளது. உடங்கு குரல் - என்பது வளைந்த கதிரைக் குறிக்கும். இதற்கு 'உடங்குபின் கவரும்' என்ற பாடம் பெருமழைப் புலவரின் உரைக் குறிப்பில் உள்ளது. பொருள் மாறியிருப்பினும் இப்பாடத்தில் பொருள் பொருத்தமுற இயையவில்லை. உடங்குபின் கவரும் என்பது போல உடங்குபீன் கவரும்' என்றொரு பாடத்தைச் சங்க இலக்கியப் பதிப்பு தருகிறது. 'பீன்' என்பது சூல் நிறைந்த கதிரைக் குறிக்கும். சங்க இலக்கியப் பதிப்புப் பாடத்தின் பொருள் சிறப்புற அமையவில்லை. எனவே உடங்கு குரல் கவரும்' என்பதே சிறப்புடையது.

இற்செறிப்பு அறிவுறுத்தும் பிறிதொரு பாடலில் 'குலவுப் பொறை இறுத்த கோல்தலை இருவி' (306.6) என்ற தொடர் உள்ளது. 'வளைந்த கதிர்களாகிய குலவும் சுமையைக் கொய் தழித்த கொம்பாகிய தலையுடைய தினைத்தாள்' என்பது இதன் பொருள். 'குலவுப்பொறை' என்பதற்குச் 'சூர்ப்பொறை' எனப்

பெருமழைப் புலவரின் உரைக்குறிப்பிலும், 'சூற்பொறை' எனச் சங்க இலக்கியப் பதிப்பிலும் பாடங்கள் உள. 'சூர்பொறை' என்பதற்கு 'அச்சந்தரும் சுமை' என்றும் 'சூற்பொறை' என்பதற்கு 'சூல்கொண்ட சுமை' என்றும் பொருள். சூல்நிலை மாறி கதிர் முதிர்ந்து அறுவடை செய்யும் குறிப்புப் பாடலில் உள்ளமையால் 'சூற்பொறை' என்பது பொருத்தமின்றி உள்ளது. 'சூற்பொறை' என்பதே ஒலிப் பிறழ்ச்சியால் 'சூர்ப்பொறை' என்ற பாடமாகவும் திரிந்திருக்கலாம். எனவே 'சூலவுப்பொறை' என்பதே பொருட் சிறப்புடைய பாடம்.

வினைமுற்றி மீளும் தலைவன் இடைச்சுரத்தில் கண்டார்க்குக் கூறுவதாக வரும் பாடலொன்றில் 'களரிப் புளியிற் காய்பசி பெயர்ப்ப' (374. 3) என்ற தொடர் உள்ளது. களர் நிலத்தில் விளைந்த புளிங்கனியைச் சுவைத்துத் தம்மை வருத்தும் பசியைப் போக்க என்பது இதன் பொருள். 'காய்ப்பசி பெயர்ப்ப', என்பதற்குக் 'காய்செவி பெயர்ப்ப' என்ற பாடம் பெருமழைப் புலவர் உரைக் குறிப்பில் உள்ளது. இதற்குப் 'பசியாலாய செவி அடைப்புத்தீர' என்பது பொருள். இடைச்சுரத்துச் செல்வோர் களர் நிலத்து விளைந்த புளிங்கனியை உண்டு ஓரளவு பசி வருத்தம் நீங்கப் பெற்றனர் என்னும் கருத்து, முதற் பாடத்தால் மட்டுமே தெளிவடைகிறது. 'களறிப் புளியிற் காய் செவி பெயர்ப்ப' என்பது பொருள் பொருத்தமுறஇயைய வில்லை. எனவே 'காய்பசி பெயர்ப்ப' என்பதைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

3. சங்க இலக்கியப் பதிப்புப் பாடங்கள்.

சங்க இலக்கியப் பதிப்பு பின்னத்தூரார் பாடம் கொண்ட 28 இடங்களில வேறுபடுகிறது.

'பொறிப்பூம் புன்கின் எழில்தகை ஒண்முறி' (9.6) என்ற தொடரால் 'பொரியை ஒத்த பூக்களையுடைய புன்கின் அழகுமிக்க ஒள்ளிய தளிர்' சுட்டப் படுகிறது. 'எழில்தகை ஒண்முறி' என்பதற்கு 'அழற்றகை ஒன்முறி' என்ற பாடம் உள்ளது. இப் பாடத்தால் பொறியை ஒத்த புன்கின் பூக்கள், தீப்பிழம்பை ஒத்த ஒள்ளியதளிர் என ஈறிடத்தும் பொருத்தமான உவமை பெறப்படுதலால் இங்கு 'அழற்றகைஒண்முறி' என்பதைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

மற்றொரு பாடலில் 'மாசில் கற்பின் மடவோள் குழலி ஒய்ய வாங்கக்கைவிட்டாங்கு' (15.7.8) என்ற தொடர் உள்ளது. 'குற்ற

மற்ற கற்பினையுடைய மடவாளொருத்தி, தன் குழவியைப் பலி கொடுப்ப வாங்குதலும் அவள் அதனைக் கைவிட்டாற்போல' என்பது இதன் பொருள். பலி கொடுக்கும் மரபு சங்ககாலத்தில் இருந்தமைக்குச் சான்றின்மையாலும், பலிக்காகக் குழவியைத் தந்த தாய் கைவிட்ட நிலையில் வாளா இராள் ஆதலாலும் இப்பாடற் கருத்துப் பொருந்துவதாயில்லை. இங்கு 'ஓய்யவாங்கு' என்பதற்கு' பேஎய்வாங்க என்ற பாடம் உள்ளது. சங்க இலக்கியங்களில் இதற்குச் சான்றுகள் உளவாதலால் 'பேஎய்வாங்க' என்பதை இங்கு ஏற்புடைய பாடமாகக் கொள்ளலாம்.

பெருமழைப் புலவர் 'பேஎய்வாங்கக் கைவிட்டாங்கு என்றும் பாடம்; இப் பாடமே சிறப்புடையது, என எழுதியிருப்பதும் அறியத்தக்கதாம்

பொருள் தேடிவந்தான் எனக்கேட்ட தலைவி தோழிக்கு உரைப்பாளாய் வரும் பாடலில் 'உழுந்தின் அகவிலை அகலவீசி இகலாது அல்கலும் அலைக்கும் நல்கா வாடை' (89-5-7) எனவரும் தொடரில் 'இகலாது' என்பதற்கு 'அகலாது' என்ற பாடத்தைச் சங்க இலக்கியப் பதிப்புத் தருகிறது. வாடை 'இகலாது அலைக்கும்' எனக் கொள்வதைவிட 'அகலாது அலைக்கும்' என்பதே பொருத்தமாகும். எனவே 'அகலாது' என்ற பாடம் சிறப்புடையதாகும்.

பொருள் தேடப் பிரிய விழைந்த தலைவன் கூற்றாக வரும் பாடலில் இருஞ் செம்முடிய கொடுங்கவுள் 'கயவாய் மாரியானை' (141.1-2) என்ற தொடரில் "இருஞ்செம்முடிய" என்பதற்கு இருஞ் சேருடிய' என்ற பாடம் உள்ளது. மாறிக்காலத்துத் தோன்றும் யானை என்பதால் இருஞ்செம்முடிய எனக்கொள் வதைவிட 'இருஞ்சேருமுடிய' என்பதே சிறந்த பாடமாக இருப்பது உணரலாம்.

தோழி வரைவுகடாவும் பிறிதொருபாடலில் 'காமர் கொண்கன் நாமவெங் கேண்மை அமைந்து ஏதுஇல்லா விளங்கும்' (145.4-5) எனவரும் தொடர் உள்ளது. அமைந்து ஏது இல்லா ஊங்கும்-என்பதால் கொண்கன் கேண்மை முன்பு அமைந்து இப்போது ஏதுவின்றி உள்ளநிலை சுட்டப்படுகிறது. இந்நிலை 'ஐதேய்ந்தில்லா ஊங்கும்' என்றபாடத்தின் பொருளால் அறியப்பெறவில்லை. எனவே 'அமைந்தேதில்லா' எனவரும் பழம்பாடம்சிறப்புடையதாக உள்ளது. 'அமைந்தமை கல்லா ஊங்கும்' என்பது ஔவை பதிப்புப் பாடம். இதில் பொருட் சிறப்பும் நயமுமில்லை.

ஆறுபார்த்துற்ற அச்சத்தால் சிறைப்புறமாக நின்ற தலைவனுக்குச் சொல்வதாக வரும் பாடலொன்றில் 'கல்லதர் மன்னும் கான் கொல்லும்மே, கனையிருள் மன்னும் கண்கொல்லும்மே' (158.3-4) எனவரும் தொடர் அமைந்துள்ளது. தலைவன் வரும் கல்லதர் நிறைந்த காலம் வருத்துகிறது. நிறைந்த இருள் கண்ணை வருத்துகிறது எனத் தலைவலி துன்புறுகிறள். கண்கொல்லுமே -என்பது போல முன்னடியில் கான் கொல்லும்மே என்பதற்குக் கால் கொல்லும்மே' என்றொரு பாடம் உள்ளது. இங்குக் "கால்' என்பதற்குக் காற்று என்றே, காலாகிய உறுப்பு என்றே பொருள் கொள்ள வேண்டும். எவ்வகையில் கொண்டாலும் கல்லதர் மன்னும் என்பதற்கேற்பக்கானம் என்ற பொருளைத்தரும் 'கான்கொல்லும்மே' என்ற பாடமே சிறப்புடையதாக இருத்தல் அறியலாம்.

பிறிதோர் பாடலில் 'நெடுங்கடல் அளித்த கொடுந்திமில் பரதவர்' (175.1) என்பதில் நெடுங்கடல் அளித்த 'என்பதற்கு' நெடுங்கடல் அலைத்த என்ற பாடம் உள்ளது. பரதவரின் கொடுந் திமில் கடலில் அலைக்கப்படுமேயன்றி அளிக்கப்படுதல் இல்லை. எனவே நெடுங்கடல் 'அலைந்த' என்பது சிறந்த பாடம். ஔவை பதிப்பிலும் இப்பாடமே பயின்றுள்ளது.

மற்றுமோர் பாடலில் 'செம்புலப் புறவின் நீரணிப் பெருவழி நீளிடைப் போழச் செல்க' (221.5-7) எனத் தலைவன் தன் பாகனிடம் கூறுவதாக உள்ளது. செம்புலப் புறவு என்பது முல்லை நிலம். தலைவன் திரும்பும் காலம் கார் காலம். எனவே பெருவழி மழை பொழிந்தமையால் 'நீரணிப் பெருவழி'யாக உள்ளது. இதற்கு ஈரணிப்பெருவழி' என்றொரு பாடம் உண்டு. ஈரம் நிறைந்த அழகிய பெருவழி என்பது இதன் பொருள். ஈரம் நிலைத்திருப்பதாகக் கொள்வதைவிட நீர் நிறைந்துள்ளதாகக் கொள்வதே காலத்திற்கேற்பச் சிறப்புத்தரும். மேலும் நீரணிப் பெருவழியாக இருப்பதால்தான் 'நீண்ட இடமெங்கும் பிளவுபடும்படிச் செல்க என்ற பொருளில் நீளிடைப் பொழச்செல்க' எனக் கூறுகிறன் தலைவன். எனவே 'நீரணிப்பெருவழி' என்ற பாடம் இங்குச் சிறக்கக் காணலாம்.

'கலிசிறந்து தொடங்குநிலை' (251. 8-9) என்று உள்ளதற்குக் 'கலிசிறந்து நுடங்குநிலை' என்ற பாடம் உள்ளது. மகளிர் வெறியாடத் தொடங்கும் நிலை இங்குச் சுட்டப்பெறலால் 'நுடங்குநிலை' என்பதைவிடத் 'தொடங்குநிலை' என்பது சிறந்த பாடமாகும்.

பருவம் வேறுபட்டதெனக் கூறிய தலைவிக்குத் தோழி பதி லிறுப்பதாக வரும் பாடலில் 'உழையாகிய அழகிய பிணைமான் உராய்தலால் குமிழ மரத்திலிருந்து பழங்கள் உதிரும் அத்தம்' எனத் தலைவர் சென்ற அத்தத்தைக் கூறுகிருள் தோழி. இங்கு வரும் 'உழைமான் ஆம்பிணை' (274. 3) என்பதற்கு 'உழைபடு மாண்பிணை' என்ற பாடம் உள்ளது. முதற்பாடத்தைவிட இரண்டாம் பாடம் சிறப்பாகவும் தெளிவாகவும் உள்ளது.

வாயிலாக வந்த விறலியை நோக்கித் தலைவி வெகுண்டு கூறுவதாக வரும் பாடலொன்றில் 'மகட்கொடை எதிர்ந்த மடங்கெழு பெண்டே' (310. 5) என விறலியை விளிப்பதாக உள்ளது. 'மடங் கெழு பெண்டே' என்பது பெண்டிருக்குரிய மடப்பத்துடன் இணைத் துக் கூறப்படும் இயல்புமொழி. எனினும் தலைவி வெகுண்டு கூறு கின்ருளாதலால் விறலியை ஏளனமாக 'மறங்கெழு பெண்டே' என விளித்தாள் எனக் கொள்ளலாம். அங்ஙனம் கொள்ளின் பாடலின் பொருண்மை மேலும் சிறத்தல் அறியலாம். எனவே சங்க இலக் கியப் பதிப்பில் உள்ள 'மறங்கெழு பெண்டே' என்ற பாடம் இங்குச் சிறந்து நிற்கிறது எனலாம்.

'கன்றுபெறு வல்சிப்பாணன்' (310. 9) என்பதற்குக் 'களிறு பெறு வல்சிப்பாணன்' என்ற பாடம் உள்ளது. முதல் பாடத்துக்கு 'ஆவின் கன்றினை உரித்து உணவாகக் கொள்ளும் பாணன்' என் பது பொருள். 'உணவுக்காகக் களிற்றினைப் பரிசிலாகப் பெறும் பாணன்' என்பது இரண்டாம் பாடத்துக்குப் பொருள். இரண்டாம் பாடங் காட்டும் பொருண்மையே சங்க மரபுக்கு ஏற்புடையதாக இருத்தலால் 'களிறுபெறு வல்சிப்பாணன்' என்பதைச் சிறந்த பாட மாக ஏற்கலாம்.

இப்பாடலிலேயே விறலியின் வாய்மொழியைச் சுட்டுமிடத்து 'உள்யாதும் இல்லதோர் போர்வையஞ்சொல்லே' (310. 11) என் பதற்குப் 'பொய்படுஞ் சொல்லே' என்ற பாடம் உள்ளது. 'உள்ளே யாதுமில்லாத மேற்போர்வையுடைய சொல்' என்ற முதற்பாடத்தின் பொருளைவிட, இரண்டாம் பாடப்பொருளில் எளிமையும், தெளிவும் இருப்பதை உணரலாம். எனவே 'பொய்படுஞ்சொல்லே' என்பதை இங்குப் பொருந்திய பாடமாகக் கொள்ளலாம்.

தோழி தலைவனுக்கு இரவுக்குறி நேருங்கால், தன் ஊரின் இயல்பை விளக்குகிருள். 'பிறர் பிறர் அறிதல் யாவது, தமர்தம்

அறியாச் சேரியும் உடைத்தே' (331. 11-12) என்பது தோழி கூற்று. சுற்றத்தார் ஒருவரையொருவர் அறியாத சேரியை உடையது. இந்நிலையில் அயலார் ஒருவரை அறிவது எவ்வண்ணம்? என்பது இப்பகுதியின் கருத்து. இங்கு, 'சேரியும் உடைத்தே' என்பதற்குச் 'செறிவும் உடைத்தே' என்ற பாடம் உள்ளது. 'எம்முனிவில் நல்லூர் இனிதேதெய்ய' என்றும், 'தமர்தம் அறியாச் சேரியும் உடைத்து பிறர் பிறர் அறிதல் யாவதும் என்றும் தோழி கூறுகிறுள். 'நல்லூர்' எனக் கூறுவதால் அங்குச் சேரி இருத்தல் இயல்பாகவே பெறப்படும். எனவே 'சேரியும் உடைத்து' என்பதால் சிறப்பில்லை. ஊரிலுள்ள சேரியில் மக்கள் செறிவாக உள்ளனர். எனவே ஒருவரை யொருவர் அறிதல் இல்லை. இந்நிலையில் புதியவராக வரும் பிறரை அறிவது யாங்ஙனம்? எனத் தோழி கூறுவதாகக் கொள்வது பொருத்தமாக உள்ளது. எனவே 'செறிவும் உடைத்தே' என்ற பாடத்தைச் சிறப்புடையதாக இங்குக் கருதலாம்.

பாலைப்பாடல் ஒன்றில் தலைவன் பொருள் தேடப்பிரிந்ததைச் சுட்டுமிடத்து 'உண்மலி நெஞ்சமொடு' (333. 8) என்று உள்ளது. 'உள்ளே மகிழ்ச்சியுற்ற நெஞ்சுடன்' என்பது இதன் பொருள். இதற்கு 'ஊண்மணி நெஞ்சமொடு' என்றும் ஒரு பாடம் உள்ளது. 'உளமலி நெஞ்சமொடு' என்பது ஔவை பதிப்புப் பாடம். உணவைப் பற்றிக் கருதும் மணிபோன்ற தெளிந்த நெஞ்சம் என 'ஊண் மணி நெஞ்சமொடு' என்பதற்குப் பொருள் அமையும். 'ஊக்கம் மிகுந்த நெஞ்சமொடு' என்பது உளமலி நெஞ்சமொடு என்பதற்குரிய பொருள். எனினும் இப்பாடங்களின் பொருள் இயைபுற அமையவில்லை. எனவே 'உண்மலி நெஞ்சமொடு' என்பதே பொருந்திய பாடம்.

நெய்தல் பாடலொன்றில் 'இளநீர்ப் பொங்குதிரைப்புணரி' (335. 1-2) என்று உள்ளது. 'மெல்லிய நீர்மையிற் பொங்கி எழும் கடல்' என்பது இதன்பொருள். இதற்கு 'இமிழ்நீர்ப் பொங்குதிரைப் புணரி' என்றும் 'இருநீர்ப் பொங்குதிரைப் புணரி' என்றும் பாடங்கள் உள. இது, காமமிக்க கழிபடர் கிளவி மீதூர்ந்த நிலையின் தலைமகள் சொல்லுவதாக வரும் பாடல். எனவே பிற பாடங்களைவிட இமிழ்நீர்' என்பது பாடற்பொருண்மைகேற்பச் சிறந்து விளங்குதல் அறியலாம்.

'கரும்பின் வேல்போல் வெண்முகை பிரியத்தீண்டி' (366. 7-8) என்று உள்ளது. 'வாடைக்காற்று கரும்பினுடைய வேல் போன்று வெள்ளிய முகை விழுமாறு வீசுகிறது' என்பது இங்கு உணர்த்தப்

படும் கருத்து. 'பிரியத்தீண்டி' என்பதற்கு 'விரியத்தீண்டி' என்றும் ஒரு பாடம் உண்டு. வெண்முகை என்பதற்கு ஏற்ப, 'விரியத்தீண்டி' என்ற பாடம் எழுந்ததாகக் கருதலாம். எனினும், அடுத்து 'தூக்கணாங் குருவியின் கூடு சிதையுமாறு வீசும் வாடைக்காற்று' என வருதலால், வாடைக் காற்றின் வேகம் இங்குச் சுட்டப்படுகிறது. எனவே 'வெண் முகை விரியத்தீண்டி' என்பதைவிட 'வெண்முகை பிரியத்தீண்டி' என்று பாடம் சிறப்புடையதாக அமைகிறது.

நெடுந்தேர்க் குட்டுவன் 'வேந்தடுகளத்தின்' முரசதிர்ந்தன்ன (395. 4-5) என்ற தொடர் உள்ளது. இங்கு வேந்தடு களத்தின் என்பதற்கு 'வேந்தடு மயக்கத்து' என்ற பாடம் உள்ளது. பொருள் நிலையில் நோக்குங்கால் 'வேந்தடு களத்தின்' என்பதே சிறந்த என்பது அறியப்படும்.

'பல்காலலவன் கொண்ட கோட்கூர்ந்து' (35. 4) என்ற தொடரில் 'கொண்டகோட் கூர்ந்து' என்பதற்கு 'கொண்ட கோட் கசாந்து' என்றும் ஒரு பாடத்தைச் சங்க இலக்கியப் பதிப்புத் தரு கிறது. ''கொண்ட கோட் கசர்ந்து'' என்றும் இளம்பூரணரின் மேற் கோள் பாடலில் இதற்குப் பாடம் உள்ளது. 'கொண்ட கோட் கசாந்து' என்பதே தோற்ற ஒப்புமையால் 'கொண்ட கோட் கசர்ந்து' என வந்தது. இனி 'கொண்ட கோட் கூர்ந்து' என்பதைவிடக் 'கொண்ட கோட் கசாந்து' என்பது சிறப்புடைய பாடமாக உள்ளது. கடற் கரையில் கிடக்கும் நாவற்கனியை நண்டு கைக்கொண்டுள்ளது. அதற்குத் தளர்ந்து அக்கனியைத் தம்மினமெனக் கருதி வண்டுகள் யாழோசைபோல் ஒலிசெய்கின்றன. இதுவே இங்கு விளக்கப்படும் காட்சி. எனவே 'அலவன் கொண்ட கோட் கசாந்து' என்ற சங்க இலக்கியப் பதிப்புப்பாடம் இங்குச் சிறந்து விளங்குகின்றது,

'புன்னை விழவு நாறு விளங்கிணர் விரிந்துடன் கமழும்' (63. 3-4) எனவரு தொடரில் இணர் விரிந்துடன் கம்ழும் என்பதற்கு 'இவர் வியந்துடன்' கமழும் என்றும் 'இணர் அவிழ்ந்துடன்' கமழும் என்றும் பாடங்கள் உள. இவற்றுள் இணர் வியந்துடன் கமழும் என்பது பொருத்தமில்லாதது. இணர் என்பதால் விரிதல் என்பதை விட அவிழ்தல் என்பது மென்மையாக விரியும் நிலையைச் சுட்டும். எனவே 'இணர் அவிழ்ந்துடன் கமழும்' என்பது ஏற்ற பாடமாக உள்ளது. இப்பாடம் சங்க இலக்கியப் பதிப்பில் உள்ளது.

'கொடுங்குழை பெய்த **செழுஞ்செய்பேதை'** (120.3) என்பதில் செழுஞ்செய்பேதை என்பதற்குச் 'செழுமிய, செய்ய பேதைமை யுடைய பெண்' என்பது பொருள். இதற்குக் **'கொழுஞ்செய் பேழை'** என நச்சினார்க்கினியரின் மேற்கோள் பாடலும், **'செழுஞ்செய் பேழை'** எனச் சங்க இலக்கியப் பதிப்பும் **'செழுஞ்செவிப்பேதை'** என ஔவை பதிப்பும் பாடங்கொண்டுள்ளன. **'செழுகு செய்பேழை'** என்பதும் ஔவை பதிப்பில் காணப் பெறும்பிறிதொரு பாடம். 'பேழை' எனக் கொண்டால் பாடலுக்கு எழுவாய் இராது. எனவே பிற பாடங்களைவிடச் **'செழுஞ்செய்பேதை'** என்ற பாடத்தைச் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

'ஓய்விடு நடைப்பகடு' (290.3) எனவரும் தொடருக்கு **'ஓய்நடை முதுபகடு'** என்றும் **'ஓய்வுடை நடைப்பகடு' 'ஓய்நடைப் பெரும்பகடு'** என்றும் பாடங்கள் உள. 'வயலில் மள்ளர் அறுத்துப் போட்ட ஆம்பலின் பூவை ஈன்றணிமையுடைய பசு தின்றது; அதன் மிச்சிலே உழுதபின் ஓய்வுக்காக விடப்பட்ட பகடு தின்னும்' என்பது இங்கு விளக்கப்படும் காட்சி. இங்கு அமைந்த பாடங்கள் அனைத்துமே பொருள்நோக்கில் சிறந்தனவே. 'எனினும் ஓய்விடு நடைப் பகடு' ஓய்விடை 'நடைப்பகடு' 'ஓய்நடைப்பெரும்பகடு' மூன்றும் ஏறத்தாழ ஒரு பொருள் கொண்டனவே. இங்குப் பழமைச் சிறப்பு நோக்கி 'ஓய்விடு நடைப்பகடு' என்ற பாடத்தையே ஏற்கலாம்.

'இற்படவாங்கிய' (307.6) என்ற தொடருக்கு **'இறைபட வாங்கிய' 'நிறைபட வோங்கிய'** என்ற பாடங்கள் உள. தோழி தலைவியிடம் 'நம்மனையருகில் வளைந்த குடமுழா போன்ற அடியை யுடைய புன்னையின் அடிமரத்தின் கண்ணே மறைந்துகொள்வோம்! எனக் கூறுவதாக வருமிடத்தில் 'இற்பட வாங்கிய முழவு முதற் புன்னை' எனக்குறிப்பிடுகிறாள். 'இல்லத்துக்கு அருகிலுள்ள புன்னை' என்பதைவிட மறைவதற்கு ஏற்றவகையில் 'நிறைந்து விளங்கும் புன்னை' எனக் கொள்வது பாடலின் கருத்தைச் சிறப்பிக்கும். எனவே **'நிறைபட வோங்கிய'** என்பதை இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

ஔவை உரைப்பதிப்புப் பாடம்

பகற்குறி வந்து நீங்கும் தலைமகனைத் தோழி வரைவு கடாவும் பாடலில் பயின்ற 'உடைகடற் படப்பை' (67.12) எனவரும் தொடருக்குப் 'படுகடற் படப்பை' என்னும் பாடம் இப்பதிப்பில் உள்ளது. முதற் பாடத்திற்கு 'அலை எழுந்து உடைந்து விழும் கடற்கரை' என்பது பொருள். இரண்டாம் பாடத்திற்கு 'ஒலிக்கின்ற கடலையுடைய ஊர்' என்பது பொருள். இவ்விரு பாடங்களுமே கடலின் இயல்பைச் சுட்டுவனவே. எனினும் முழவிசை எனவரும் முன் அடியின் சந்தத்திற்கேற்ப இங்குப் 'படுகடற் படப்பை' என்ற பாடத்தை ஏற்கலாம்.

காமம் மிக்க கழிபடர் கிளவிப் பாடலொன்றில் 'அம்மலை கிழவோர்க்கு' (102.7) என்பதற்கு 'கிழவோற்கு' என்ற ஒருமைப் பாடம் இப்பதிப்பில் பயின்றுள்ளது. பன்மைப் பாடத்தையே பிற பதிப்புக்கள் அனைத்தும் ஏற்று 'அம்மலைக்கு உரியனாகிய காதலன்' எனப் பொருள் கூறுகின்றன. ஒருமைப் பாடத்தைச் சுட்டி இப்பொருளைக் குறிப்பிடும் ஔவை பதிப்புப் பாடம் ஏற்புடையதாக வுள்ளது. இப்பாடம் ஏட்டில் காணப்பட்டதாகவோ பொருளுணர்ச்சிக்கு ஏற்ப உரையாசிரியரால் திருத்தம் பெற்ற தாகவோ இருக்கலாம்.

சிறைப்புறமாக நிற்கும் தலைவனுக்குத் தோழி, தலைவியின் இற்செறிப்பைச் சுட்டும் கருத்தை விளக்கும் பாடலில் 'தொடங்கு நிலைப் பறவை' (251.9) எனவரும் பாடத்திற்கு 'இடம் கொள் புள்ளினும்' என்ற வேறுபாடு இப்பதிப்பில் மட்டும் சுட்டப் பெறுகின்றது. முதற் பாடத்தில் பயின்ற 'தொடங்குநிலை' என்பது வெறியாட்டத்தின் தொடக்கநிலையைக் கூறுவதாகவும் 'பறவை' என்பது கிளி முதலாயவற்றை உணர்த்துவதாகவும் பாடலின் கருத்து அமைந்துள்ளது. ஔவை பதிப்புப் பாடத்திலும் 'இடங்கொள் புள்ளினும்' என்று கூறுவதற்கேற்ப முன்புள்ள அடியின் கருத்து அவ்வடியிலேயே முற்றுப் பெறுகின்ற வகையில் மாற்றிக் கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய மாற்றத்தால் நுட்பமான பொருள் வேறுபாடு பெறப்படவில்லை. ஆதலால் முதற் பாடத்தினையே இங்குச் சிறப்புடையதாக நாம் ஏற்கலாம்.

தோழி தலைவியை உடன்போக்கு வலித்த கருத்தமைந்த பாடலொன்றில் தலைமக்களின் களவொழுக்கத்தை ஊர்ப்பெண்டிர் அம்பல் தூற்றும் காட்சி விளக்கப் பெற்றுள்ளது.

"சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகின் பெண்டிர் அம்பல் தூற்ற" (149. 1-3)

எனவரும் பகுதி இக்காட்சியை விளக்கும். தெருக்களில் கூடி நின்று கடைக்கண்ணால் சுட்டிநோக்கி மூக்கின் நுனியில் சுட்டு விரலை வைத்து அம்பல் தூற்றும் செய்தி இங்குக் குறிப்பிடப் பெற்றுள்ளது. **'மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி'** எனவரும் தொடருக்கு **'மூக்கின் ஊக்கி வாய் விரல் பொத்தி'** எனவரும் தொடரை ஔவையின் உரைப்பதிப்பு வேறுபாடாகத் தருகின்றது. ஔவை பதிப்புப் பாடமே பொருட் சிறப்புடையது என்பதை "ஒருத்தி கூறுவாள்; மற்றொருத்தி வியப்பால் வாயில் கை பொத்திப் பெருமூச் செறிந்து இச்செய்தியின் புதுமையை வியந்து நிற்பாள். அப்பொழுது அம்பலுக்குரிய தலைவியோ, அவள் உறவினரோ அவ்வழி வருவாராயின் பேசியிருந்த பெண்டிர் அனைவரும் பேசாத பெரு நிலையுற்றுத் தம் கைகளால் வாய்பொத்தி மூக்கி னின்றும் பெருமூச்செறிந்து, தமது அலரைச் சொல்லாமல் சொல்வர். இக்காட்சியைத் தம் தேர்ந்த அனுபவத்தால் கண்ட உரையாசிரியர் அதற்கு ஒத்த பாடத்தினையே பதிபித்துள்ளார்" என்னும் பகுதி விளக்கும்.[1]

தோழி தலைமகளுக்கு உரைப்பாளாய்ப் பாணனை நெருங்கி வாயில் மறுத்துரைக்கும் பாடலில் **'உடையோர் பான்மையின் பெருங்கை தூவா'** (90.2) என்னும் தொடர் பயின்றுள்ளது. விழா அயர்கின்ற ஒலியுடைய மூதூரில் ஆடைகளை ஆராய்ந்து கழுவும் தன்மையில் சலிப்பில்லாத புலத்தியைப் பற்றிய செய்தி யைச் சுட்டும் பகுதி இது உடையோர் பான்மை என்னும் தொடர் ஆடைகளை ஆராய்ந்து கழுவும் தன்மையைச் சுட்டுவது

1. நற்றிணை – ஔவை உரைப்பதிப்பு – தொகுதி 1 – உரைநலம் ப. XXII

எனினும், உடை அணிந்தோருடைய தன்மை என்று பொருள் மயக்கம் தரும் வகையிலும் இத்தொடர் அமைந்துள்ளது. இங்கு **'உடையோர் பான்மை'** என்பதற்கு **'உடைதேர் பான்மை'** என்பது ஔவை பதிப்பில் காணப்பெறும் பாடம். உடைகளைத் தேர்ந்து பெற்று வெளுத்துத் தரும் இயல்பை இத்தொடர் பொருள் மயக்க மின்றிச் சுட்டுதலால் இங்கு **'உடைதேர் பான்மை'** எனவரும் பாடத்தையே பொருத்தமுடையதாகக் கொள்ளல் சிறப்புடைய தாகும்.

பரத்தை தலைவனை நெருங்கிப் பாணனுக்குரைக்கும் பாடலில் **'நகைநன்குடையன்** பாண நும் பெருமகன்' (150.1) என வரும் தொடர் உள்ளது. தலைவன் ஒரு பரத்தையைக் கைவிட்டு மற்றொரு பரத்தையைச் சேர்ந்ததை அறிந்த முதற் பரத்தை, தன்னிடம் தூதாக வந்த பாணனை நோக்கிக் கூறுவதாக வரும் இப்பாடலில், தலைவன் தன்னுடைய செயலால் பிறரால் நகைக்கப் படுவதற்குரியனாக விளங்குகின்றான் என்ற எள்ளற்குறிப்பு வெளிப் படுகின்றது. 'பாண நும் பெருமகன் நகை நன்குடையன் எனக் கொண்டு கூட்டி இங்குப் பொருள் கொள்ளல் வேண்டும். இத்தொடருக்கு **'நகைநன்குடையை பாண நும் பெருமகன்'** எனப் பாடவேறுபாடு இப்பதிப்பில் அமைந்துள்ளது. இதன்படி கண்டோர் எள்ளி நகைத்தற்குரிய நிலை பாணனுக்குரியதாக மாற்றம் பெறுகிறது. தலைவனின் பரத்தமை ஒழுக்கத்துக்கு உடன்பட்டவனாகச் செயற்படும் பாணனே எள்ளி நகையாடுதற் குரிய நிலையுடையான் என எண்ணி இப்பாடம் மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. எனினும் தலைவனின் பெருமைக்கு மாசு விளையும் வகையில் ஊரவரால் எள்ளி நகைக்கப்படும் தன்மையே 'பாணன் நகைக்கப்படும் தன்மையினும் சிறப்புடையது ஆதலால் **'நகை நன்குடையன்'** எனவரும் முதற் பாடத்தைச் சீரியதாகக் கொள்ளலாம்.

'**குறுமுகிழ்** எருக்கங்கண்ணி' (220.2) எனவரும் தொடருக்குக் '**குவிமுகிழ்** எருக்கங்கண்ணி' என்ற வேறுபாடு இப்பதிப்பில் அமைந் துள்ளது. எருக்கம்பூவின் இயல்பைச் சுட்டும் வகையில் குறிய அளவுடைய எருக்கம்பூமாலை என இங்கே சுட்டப் பெறுகிறது,

எனினும் இப்பாடம் 'சிறுமணி' எனவரும் முதலடியின் முதற் சீருக்கு ஏற்றவகையில் எதுகை இயைபு அமைய 'குறுமுகிழ்' எனத் திருத்தப் பட்டு அமைந்திருக்கலாம் எனக் கருதத் தோன்றுகிறது. ஔவையின் உரைப் பதிப்பில் காணப்பெறும் **'குவிமுகிழ்** எருக்கங்கண்ணி' என்னும் பாடம் பிற இலக்கியப் பயிற்சி இடங்களை ஒத்து அமைந்துள்ளது. 'குவிமுகிழ் எருக்கங்கண்ணியும் சூடுப[1] என்பது குறுந்தொகையில் பயின்ற தொடர். எனவே பிற இலக்கியப் பயிற்சி இடங்களை ஒத்து அமைந்த **'குவிமுகிழ் எருக்கங்கண்ணி'** என்ற பாடத்தை இங்கு சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

'தேர்நடை பயிற்றும் தேமொழிப் புதல்வன்' (250 3) எனவரும் தொடருக்குச் **சிறுதேர் உருட்டும்** தேமொழிப் புதல்வன்' என்றும், 'கடியுடை வியனகர் **கானவர்'** (255.3) என்னும் தொடருக்கு 'கடியுடை வியனகர் **காவலர்'** என்றும் **'வெஞ்சுடர் கரந்த** கமஞ்சூல் வான**ம்**' (261.3) எனவரும் தொடருக்கு **'கனைகடல் முகந்த** கமஞ்சூல் வானம்' என்றும் 'தண்டலை **கமழும் வண்டு'** (270.2) என்பதற்கு 'தண்டலை **உலமரும் வண்டு** என்றும் **'பூவேபடையொடும் கதிரொடு'** (275 2-3) என்பதற்கு **பூவேபடை யொடும் கதிரொடும்**' என்றும் **'தமியே கண்ட தண் தலையும்** (305.4) என்பதற்கு **'தமியேன் கண்ட கண் தலைத்தலை'** என்றும், **'தன்புலன் நயந்த'** (375.4–5) என்பதற்குக் **'கொடிதே தன்புலன்'** என்றும், **'வெண்ணி சூழ்ந்த'** வயல் (390 3-4) என்பதற்கு **'வெண்ணி வாயில்** வயல்' என்றும் **'ஓங்ககல் புணரி'** (395.6) என்பதற்கு **'ஓங்கல்புணரி'** என்றும் 'பல்பூமரீஇ **ஆர்ந்த'** (395.7) என்பதற்கு 'பல்பூமரீஇ **ஊர்ந்த'** என்றும் வரும் ஔவை பதிப்பில் அமைந்த பாடங்கள் பொருள் மாற்றம் உடையவையாயினும் பொருட் சிறப்புடையனவல்ல. இத்தகைய புதிய பாடங்களைப் பொருத்திக் கூறும் இடங்கள் சிலவற்றில் புதிய பாடங்களுக்குத் தக முன்பின் அடிகள் பொருள் இயைபுக்கேற்பத் திருத்தம் பெற்றிருப்பதும், பாடல்களின் அடிகள் அமைந்த வரிசை முறையைப் புதிய பொருளமைப்புக்கேற்ப முன்பின்னாக மாற்றிக் கொண்டிருப்பதும் ஔவையின் உரைப் பதிப்பில் அமைந்த சிறப்புக் கூறுகள்.

1. குறுந். 27

8. மர்ரே பதிப்புப் பாடங்கள்

மர்ரே வெளியீட்டகத்தின் நற்றிணைப் பதிப்பில் சில பொருள் வேறுபாடுடைய பாடங்கள் அமைந்துள.

தலைவி, வாயில் மறுத்துரைக்கும் குறிஞ்சித் திணைப்பாடலொன்றில் 'புலம்பு சேண் அகல நீந்தி' (217.8) எனவரும் தொடர் உள்ளது. நீடிய வருத்தம் சேய்மையில் அகலும்படிச் செய்து என்பது இதன் பொருள். தலைவன், வருத்தம் நீங்குமாறு ஊடல் கொண்ட தலைவியை மகிழச் செய்வான் என்பது இங்கு உணர்த்தப்படும் கருத்து. **'புலம்பு சேண் அகல நீந்தி'** என்ற பாடத்தை விட 'புலம்புசேண் **அகல நீக்கி'** எனவரும் பாடம் பொருள் நோக்கில் தெளிவுற நிற்றல் காணலாம். எனவே இங்கு **'அகல நீக்கி'** எனவரும் மர்ரே பதிப்புப் பாடத்தைச் சிறந்ததாகக் கருதலாம். பெருமழைப் புலவர் தம் உரைக் குறிப்பில் 'புலம்பு சேண் அகல நீக்கி' என்றும் பாடம், இதுவே சிறந்த பாடமாம் எனக் குறிப்பு எழுதியுள்ளதும் கருதத்தக்கதாகும்.

'காடு தேர் நசைஇய' (276.2) என்ற தொடருக்கு, காடு தேர்ந் தசைஇய' என்ற பாடம் மர்ரே பதிப்பில் உள்ளது. இங்கும் மர்ரே பதிப்புப் பாடம் சிறந்தது எனப் பெருமழைப் புலவர் உரைக் குறிப்பில் கூறுவர். காட்டின் கண் ஆராயும் விருப்புடைய மான் என்பது முதல் பாடத்தின் பொருள். காட்டினைத் தேர்ந்து இயங்கும் மான் என்பது இரண்டாம் பாடத்தின் பொருள். வேட்டையாடப் படும் மானின் இயல்பு இரண்டாவது பாடத்தில் சிறந்துள்ளது. எனவே **'காடு தேர்ந்தசைஇய'** என்ற பாடத்தை ஏற்புடையதாகக் கொள்ளலாம்.

யானை நல்ல ஆடை அணிந்தது போலத் தோன்றும் பெரிய தாழைப்புதர், அதில் காற்று மோதலால் மலரிலுள்ள தாதுக்கள் மகளிர் வளை உடைந்து உதிர்வது போல் உதிர்ந்து பரவும் ஊர் என நெய்தல் நில ஊரின் வண்ணனை இடம் பெற்றுள்ள பாடலில் 'வயங்கிழை மகளிர் வண்டின் தாஅம்' (299.4) என்ற தொடரில் **'வண்டின் தாஅம்'** என்பதற்கு **'உடைந்த வளை போல் உதிர்ந்து பரவும்'** எனப் பொருள் உள்ளது. தாழையிலிருந்து தாதுக்கள்

உதிர்வதற்கு இது உவமையாக உள்ளது. **'வண்டின் தாஅம்'** என்பதற்கு **'வண்டல் தாஅம்'** என்ற பாடம் மர்ரே பதிப்பில் உள்ளது. **'வளையின் தாஅம்'** என்பது ஔவை பதிப்புப் பாடம். 'தாழையின் நுண் தாது மகளிரின் வண்டலிழைத்த மணைக்கண் உதிரும் என்பதும், மகளிர் வளை போல் உதிரும்' என்பதும் இப் பாடங்களின் பொருள். பிற பாடங்கள் தரும் பொருள்களைவிடத் தாழையின் அடியில் மகளிர் வண்டலிழைத்து ஆடலும், அம்மணை மீது தாழையின் தாதுக்கள் உதிர்வதும் இயற்கையொடு பொருந்திய காட்சிகளை விளக்கும் **'வண்டல் தாஅம்'** என்ற பாடமே இங்குச் சிறந்துள்ளது.

எருமைப்போத்து ப்ற்றிய விளக்கத்தில் 'தட மருப்பு எருமைப் பிறழ் இரும்போத்து' (330.1) என்ற தொடர் உள்ளது. 'வளைந்த கொம்பும் வளமையுடைய பிடரியும் பெற்ற எருமைப் போத்து' என்பது இதன் பொருள். **'பிறழ் கவல்'** என்பதற்குப் **'பிணர்ச் சுவல்'** என்றும் ஒரு பாடம் உள்ளது. 'பிணர்ச் சுவல்-என்பதற்குப் பிடரி என்பது பொருள். இவ்விரு பொருள்களில் முதலாவது பாடத்தின் பொருளே ஏற்புடையதாக அமைந்திருத்தலால், **'பிறழ் சுவல்'** என்ற பாடத்தைச் சிறந்ததாகக்கொள்ளலாம்.

தலைவியுடன் கூடி மாணில் சேய்நாட்டு அதரிடை (384 6) செல்வதைத் தலைவன் கூறுகிறன். மாண்பு சிறிதும் இல்லாத நெடுந்துரத்துக்கு அப்பாலுள்ள நாட்டுக்குச் செல்லும் நெறி என்பது இத்தொடரின் பொருள். **மாணில் சேய் நாட்டு** என்பதற்கு **அரணில் சேய் நாட்டு** என்னும் ஒரு பாடம் உள்ளது. காவலில்லாத சேய்மையிலுள்ள நாடு என்பது இப்பாடத்தின் பொருள். மாண்பு இல்லாத நாடு எனக் கூறவே அரணில்லாத இயல்பும் பெறப்படும். எனவே **மாணில் சேய்நாட்டு** என்ற பாடத்தையே பொருத்த முடையதாகக் கொள்ளலாம்.

நற்றிணையில் அமைந்த பொருள் வேறுபாடுள்ள பாட வேறு பாடுகள் பல; இவை சுவை நோக்கில் சுவைஞர்களாலும் உண்டாக்கப்பட்டுள்ளன என்பதை உணர்த்துகின்றன. எழுத்து வேறுபாடுகளாலும், சொல் வேறுபாடுகளாலும், இலக்கண வேறு

பாடுகளாலும் எழுந்த பாடங்களுள் சிலவும், பொருள் நோக்கில் ஆயத்தக்க வேறுபாடுகளுடன் விளங்குகின்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். எனினும் அவை மாறியமைந்த களங்கள் தெளிவுற அறியப்படுதலால் அவற்றைப் பொருள் நோக்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவில்லை.

2. குறுந்தொகை

குறுந்தொகையில் அமைந்த 402 பாடல்களில் உள்ள வேறுபாடுகளின் மொத்த எண்ணிக்கை 1480. இவற்றுள் பொருள் வேறுபாட்டு நோக்கில் ஆயத்தக்க பாடவேறுபாடுகளின் எண்ணிக்கை 110. இவை ஆராயப்பட்டு சிறந்த மூல பாடங்கள் இப்பகுதியில் நிறுவப்பட்டுள்ளன. இவ்வேறுபாடுகள் இங்குப் பாடல் வரிசையில் குறிப்பிடப் பெற்று ஆராயப்பட்டுள.

1. சுடர்நெடுவேல்

கடவுள் வாழ்த்துப் பாடலில் **'அஞ்சுடர் நெடுவேல்'** (க.வா.4) என்பதற்கு **'வெஞ்சுடர் நெடுவேல்' 'செஞ்சுடர் நெடுவேல்'** என்ற வேறுபாடுகள் உள. 'குன்றின் நெஞ்சு பக எறிந்த' என முருகனது வேலின் செயற்பாடு இங்குச் சுட்டப்பெறுதலால் 'அஞ்சுடர்' என்பதைவிடச் 'செஞ்சுடர்' 'வெஞ்சுடர்' என்பன வற்றுள் ஒன்றே இங்குப் பொருத்தமாக விளங்கும். 'தாமரை', 'சேவடி' 'பவழத்தன்ன மேனி', 'குன்றி ஏய்க்கும் உடுக்கை' என அனைத்தும் செவ்வண்ணத்தனவாகவே இப்பாடலில் கூறப் படுவதற்கேற்ப இங்கும் 'செஞ்சுடர் நெடுவேல்' என்று பாடம் அமைவது பொருத்தமாகும். மேலும் 'செவ்வேற்சேஎய்[1] என்றும், செவ்வாயெஃகம்[2] என்றும் 'அரத்த நெடுவேலோய்[3] என்றும் வரும் இலக்கியப் பயிற்சி இடங்களை நோக்குமிடத்தும்

---

1 திருமுரு. 61

2. பதிற். 117

3. கல். க. வா. 2. 15

'செஞ்சுடர் நெடுவேல்' என அமைவதே நேரிது என்பது தெளிவுறும். இராகவையங்காரின் குறுந்தொகை விளக்கத்தில் **'செஞ்சுடர் நெடுவேல்'** என்ற பாடமே கொள்ளப்பட்டுள்ளது. இதனைப் "படையும் பவழக்கொடி நிறம் கொள்ளும்" (பரி. 19) என்பதனுற் 'செஞ்சுடர் நெடுவேல்' என்ற பாடமே கொள்ளப் பட்டுள்ளது' என அவர் குறிப்பிட்டுள்ளதால் அறியலாம்

2. இன்னிழற்புன்னை

'குருகுறங்கு மின்னிழற்புன்னை' (5.2) என்ற தொடர் உள்ளது. 'உறங்கு **மின்னிலைப் புன்னை**' என்றும் **'உறங்கு மென்னிழற் புன்னை'** என்றும் இதற்கு வேறுபாடுகள் உள. குருகு உறங்கும் இயல்புடைமையைச் சுட்டுவதால் 'உறங்கு மின்னிலைப்புன்னை' என்ற பாடத்தை விட நிழலைச் சுட்டுவனவாக அமைந்த பிற இருபாடங்களே ஏற்புடையவை. இன்னிழற் புன்னை 'மென்னிழற் புன்னை' - என்ற இரண்டனுள் இனிய நிழலே உறக்கந்தரும் சிறப்புடையது. எனவே குருகுறங்கு **'மின்னிழற் புன்னை'** என்பதை இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம். அதன் நிழல் உறக்கத்தையும் உண்டு பண்ணுவதாதலின் இன்னிழற் புன்னை என்ருர் என நச்சினர்க்கினியரும், 'மீனுண்டு தன்னிலத்தையுய மறந்து உறங்குவதற்குத் காரணமாக இனிய நிழலையுடைய புன்னை' என இராகவையங்காரும் இப்பாடத்தின் சிறப்பை விளக்கியுள்ளனர். புன்னை நிழலில் பறவைகள் உறங்கும் சிறப்பு "புன்னைத் தடவுநிலை மாச்சினை புள்ளிறை கூரும்"[1] எனவரும் அகநானூற்றுப் பகுதியாலும் அறியப் பெறும்.

3. மேவன செய்யும்

'ஆடிப்பாவை போல மேவன செய்யும் என்பதில் **'மேவன செய்யும்'** (8.6) என்பதற்கு **'மேவின செய்யும்' 'ஏவின செய்யும்'** என்ற வேறுபாடுகள் உள. கண்ணுடியில் தோன்றும் உருவம், தன்னெதிர் நின்ருர் செயலை எதிரொளிக்கும் இயல்பினது.

1. அகம் 10: 3-4

கண்ணுடிப் பாவை தன்னைச் சேர்ந்தவர் செயலாயே இருக்கும்'[1] என்றும் நச்சினர்க்கினியரும் இதனை மொழிவர்.

"ஆடி வந்த நற்பாவை போலடியார்
கடவினை யாடிவந்த கோமானே"[2]

எனத்தமிழ்விடு தூது நூலும் ஆடிப்பாவையின் இயல்பைச் சுட்டியுள்ளது. எனவே 'ஏவின செய்யும் இயல்பு' ஆடிப்பாவைக்கு இல்லை. எஞ்சிய இரண்டனுள் 'மேவன செய்யும்' என்பதே பொருள் சிறப்புடைய பாடம் 'விரும்பியவற்றைச் செய்வான்' என்பது இதன் பொருள் "தேவரனையர் கயவர் அவருந்தாம் மேவன செய்தொழுகலான்"[3] என்ற குறளிடத்தும் 'மேவன' என்னும் சொல்லாட்சி இப்பொருளில் பயின்றது அறியலாம். 'மேவின செய்யும்' என்பது சிதைவு பெற்ற பாடம். எனவே 'மேவன செய்யும்' என்பது இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளத்தக்கது.

4. தமியவைகிய

'மடைமாண் செப்பிற்றமிய வைகிய' (9.2) என்னும் தொடரில் 'தமியவைகிய' என்பதற்குத் 'தமியள் வைகிய' என்ற வேறுபாடு உள்ளது. குறுந்தொகையைப் பதிப்பித்த சௌரிப் பெருமாள் அரங்கனுர் தம் பதிப்பில் 'தமியள்வைகிய' என்று பாடங் கொண்டு விளக்கியுள்ளார். இது பிழையான பாடம் என்றும் அவர் கூறியுள்ள விளக்கம் பொருந்தாது என்பதையும் "முதலுரை யாசிரியர் 9-ஆம் பாடல் இரண்டாமடியினை 'மடைமான் செப்பிற்றமியள்வைகிய' எனத் தவருகக் கொண்டமையால் பிழை படச் சொன் முடிவு கூறி விளக்கமின்றியுரையெழுதியுள்ளார்' என டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் குறுந்தொகை விளக்கப் பதிப்பின் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் 'தமியவைகிய' எனவரும் பாடமே சிறப்புடையது எனவும் அவர் சுட்டியுள்ளார். 'தமியவைகிய' என்பதற்குத் தனித்தனவாய் நாட்கழிந்த என்பது

1. சீவக. 2327 – நச்சி. உரை.
2. தமிழ். கண்ணி 252.
3. குறள். 1073

பொருள். "தமிய என்றது கொடியினுமின்றிச் சூடுவார் குழலினுமின்றி மூடிய செப்பிற்றனித்தனவாதல் பற்றி" என இராகவையங்கார் இப்பாடத்துக்கு விளக்கம் கூறுவார். செப்பினுள் மலர் வைக்கப்படு- இயல்பை "வகைவரிச் செப்பினுள் வைகிய மலர் போல்[1] எனவரும் பகுதியாலும் அறியலாம். இக்குறிப்புக்கள் விளக்குவது போலத் **'தமியவைகிய'** என்ற பாடத்தை இங்குச் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

5. பெய்யாப்பூ

இப்பாடலில் 'தமியவைகிய' என்பதனைத் தொடர்ந்து **'பெய்யாப்பூவின்'** (9.3) என்ற தொடர் உள்ளது. உ. வே. சாமிநாதையர் பதிப்பில், இதன் விளக்கவுரையில் 'தமியவைகிய பூ பொய்யாப்பூ வென்க' என்ற தொடர் உள்ளது. **'பொய்யாப்பூ** என்பது 'பெய்யாப்பூ' என்பதற்குப் பதிலாக அச்சுப் பிழையால் ஏற்பட்ட பாடமாகலாம். 'பெய்யாது வைகிய கோதை போல'[2] எனவரும் நற்றிணைத் தொடரும் **'பெய்யாப்பூ'** என்பதே பொருந்திய பாட மெனச் சுட்டுதல் உணரலாம். இராகவையங்கார் 'பெய்யாப் பூவின்' என்பதற்கு 'ஒருவர் சூடாத மலர்களைப் போல' என விளக்கம் வரைந்துள்ளார். 'பெய்யாப்பூ' என்பதே இங்கு ஏற்ற பாடமாகும்.

6. வழிபடல்

'வழிபடல் சூழ்ந்திசின் அவருடை நாட்டே' (11.8) என்னும் தொடரில் **'வழிபடல்'** என்பதற்கு **'வழிவிடல்'** என்றும் **'நாட்டே'** என்பதற்கு **'நட்பே'** என்றும் வேறுபாடுகள் உள. 'அவருடைய நாட்டினிடத்துச் செல்லுதலை எண்ணினேன்' என்பது இத் தொடருக்குப் பொருள்.

'மொழிபெயர் **'தேஎத்தராயினும்'** என முன்னர் வரும் விளக்கத்தால் **'நாட்டே'** என்ற பாடமே இயைபுடையதாய் அமைதல் சிறப்புடையது. வழிபடல் சூழ்ந்திசின், வழிவிடல்

---

1. மணி. 4 65
2. நற். 11: 1-2

சூழ்ந்திசின் - என்பனவற்றுள் பின்பற்றிச் செல்லுதல் என்ற பொருளைத்தரும் '**வழிபடல்**' என்னும் பாடமே சிறப்பாக அமைந்துள்ளது. '**வழிப்படல்**' என்பதே '**வழிபடல்**' என ஆயிற்று இலங்குவளைநெகிழ்தல், கலிழும் கண், புலம்பல் முதலிய ஆற்றுமைக் குறிகள் இப்பாடலில் முன்னரே சுட்டப்பெறுதலால் இங்கு வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிந்த தலைவனிடத்துக்குச் செல்லுதலை எண்ணினேன் எனத் தலைவி கூறுவதாகக் கொள்ளல் பொருத்தமுடையதாகும். எனவே '**வழிபடல்**', '**நாட்டே**' என்பன சிறந்த பாடங்கள்.

7. நோய்தந்தனன்

'நாடனோய்தந்தனனே' (13. 3-4) என்பது பாடமாகும். இப்பாடத்தை '**நாடன் நோய் தந்தனனே**' என்றும் '**நாடன் ஒய்தந்தனனே**' என்றும் பிரிக்கலாம். இராகவையங்கார் 'நாடன் ஒய்தந்தனனே' என்று பிரித்து இங்குப் பாடமாகக் கொண்டுள்ளார்.

இப்பாடமே பொருந்திய பாடம் என்பதைப் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"சேக்கும் நாடன் ஒய்தந்தனன்—உடன் தங்கும் தலைவன் என்னினின்று ஒழியத் தலைப்பட்டனன், ஒய்தருதல்-நெருங்காது ஒழிதல், அடியார்க்கு நல்லார் ஒய்யென-நெருங்கா தொழியென (சிலப். அடைக்கல. 48) எனக் கூறுதலான் உணர்க. பைதல் ஒருதலை என்பதற்கு எதுகையாக ஒய்தந்தனனே என வந்ததனுலும் இதுவே பாடமாகப் படிக்க வேண்டுவது உணரலாம்' என்பன அவர் விளக்கம்.

பொருள் நிலையாலும், எதுகையமைப்பாலும் இப்பாடம் சிறப்புடையதாகவே அமைந்துள்ளது. 'ஒய்தந்தனனே' என்பதையே இங்குச் சிறந்த பாடகக் கொள்ளலாம்.

இப்பாடம் சிறப்புடையது என்பதை அ. சிதம்பரநாத செட்டியாரும் பாராட்டியுள்ளார்.[1]

8. வந்த-நிவந்த

'அமிழ்து பொதி செந்நாவஞ்ச **வந்த**' (14.1) என்னும் பாடல் தொடரில் '**வந்த**' என்பதற்கு '**நிவந்த**' என்ற வேறுபாடு உள்ளது. 'வந்த' என்பதற்கு 'முளைத்த' என்பது உரை. 'நிவந்த என்பதற்கு 'எழுந்த' என்பது பொருள். 'செந்நா அஞ்சும்படி முளைத்த எயிறு'' என்பதற்கும் 'செந்நா அஞ்சும்படி **எழுந்த** எயிறு' என்பதற்கும் பொருள் நோக்கில் மிகுதியும் வேறுபாடு இல்லை. எனவே 'வந்த' என்ற பாடத்தையே இங்கு ஏற்கலாம்.

9. யாம் நாணுகம்

இப்பாடலில் 'பல்லோர் கூற யாம் நாணுகஞ் சிறிதே' (14.6) என்பது கடைசி அடி. இதில் '**கூறயாம் நாணுகம்**' என்பதற்குக் '**கூறுகயா அம் நாணுகம்**' என்றும் '**கூறயாம் நண்ணுகம்**' என்றும் உ.வே. சாமிநாதையர் பதிப்பில் வேறுபாடுகள் உள. இவற்றுள் 'கூறயாம் நா்ணுகம்' என்ற பாடமே சிறந்தது. மடலேறும் போது தலைவனுக்குரிய தலைவியை ஊரினர் அறிவர். இதனை 'இன்னள் செய்தது இதுவென முன்னின்றவள் பழி நுவலு மிவ்வூர்'[2] என்ற பகுதியாலும் இதனால் தலைவனுக்குரிய நாணம் கெடல் இயல்பு

---

1. 13-ஆம் செய்யுளில் 'நாடன் நோய்தந்தனன்' எனப் பிரித்தற் கேற்றவாறு 'நாடனோய் தந்தனனே' என்ன முன்னைப் பதிப்புக்களிற் கண்ட பாடத்தை 'நாடனொய் தந்தனனே' எனக்கொண்டு 'நாடன் ஒய்தந்தனன்' எனப் பிரித்து 'நாடன் (அருகினின்றும்) ஒழியத் தொடங்கினன் எனப் பொருள் கூறியுள்ளார். இப்பகுதிக்கு ஒய்யென - நெருங்கா தொழியென எனச் சிலப்பதிகாரம் அடைக்கலக்காதை 48-ஆம் அடியில் அடியார்க்கு நல்லார் வரைந்த உரைக் குறிப்பை மேற்கோளாகக் காட்டியது இவ்வாசிரியது நூலறிவைக் காட்டுவதொன்றாம்.

குறுந்தொகை உரைவிளக்கம் - டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், முகவுரை, ப. 8

2. குறுந். 173. 5-6

என்பதைப் பூண்மணி கறங்க ஏறி நாண் அட்டு'[1] என்ற பகுதியாலும், அறியலாம். எனவே பிறவற்றை விட 'யாம் நாணுகஞ் சிறிதே' என்ற பாடம் பொருத்தமுடையது.

10. நாலூர்-நல்லூர்

'நாலூர்க்கோசர்' (15.3) என்பதற்கு **'நல்லூர்க்கோசர்'** என்ற வேறுபாடு அமைந்துள்ளது. 'நாலூர்க்கோசர்' என்பதற்கு நான்கு ஊர்களிலுள்ள கோசர் என்பது பொருள். கோசர் என்பார் மோகூர்ப் பழையனுடைய அவையத்தில் இருந்த ஒருவகை வீரர் என்றும், அவர்கள் நான்கு பிரிவினராக நான்கு ஊர்களில் வாழ்ந்தமையால் 'நாலூர்க்கோசர்' என அழைக்கப்பட்டனர் என்றும் நச்சினார்க்கினியர், உரைக்குறிப்புத் தெரிவிக்கின்றது.[2] இக்குறிப்பால் **'நாலூர்க்கோசர்'** என்பதே பொருந்திய பாடம்.

'நாலூர்-ஒரூருமாம்' என்று உ. வே. சாமிநாதையர் குறிப்பு வரைந்துள்ளார். இம்முறையிலும் 'நாலூர்க்கோசர்' என்பதே பொருந்திய பாடமாகிறது. நல்லூர் என்பதுடன் கோசரை இணைத்துக் கூறும் இலக்கியப் பயிற்சி இல்லை.

11. கள்வர்-கணவர்

'கள்வர் தம் பொன்புனை பகழி' (16.1-2) என்னும் தொடரில் **'கள்வர்தம்'** என்பதற்குக் **'கணவர்தம்'** **'காணவர்'** **'கள்வர்'** என்ற வேறுபாடுகள் உள. பாலைநிலத்தில் வாழும் ஆறலைக்கள்வர் பற்றிய குறிப்பு இது. எனவே **'கணவர்தம்'** **'காணவர்'** என்ற இருவேறு பாடுகளும் பொருத்தமின்றி அமைந்தவை. 'கள்வர்' என்ற பாடம் பொருள் நிலையில் ஒத்ததாயினும் சந்தக்குறைபாடு உள்ளது. எனவே இங்குக் **'கள்வர்தம்'** என்ற பாடத்தைச் சிறந்ததாகக் கொள்ளலாம்.

---

1. குறுந் 173. 3
2. ம. காஞ்சி. 508-9 நச்சி-உரை.

12. தேமூர்-தேனூர்

‘தேமூரொண்ணுதல்’ (22.5) என்ற தொடருக்குத் **‘தேனூரொண்ணுதல்’** என்ற வேறுபாடு உள்ளது. **‘தேமூர் ஒண்ணுதல்’** என்பதற்கு மணம் பரவிய]ஒளி பொருத்திய நெற்றியை உடையவள் என்பது பொருள். **‘தேமூசு ஒண்ணுதல்’** என்ற பாடத்தை உ.வே. சாமிநாதையர் உரை விளக்கத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நுதலின் மணத்தையும் விளக்கத்தையும் புலப்படுத்தும் வகையில் ‘தேமூரொண்ணுதல்’ என்ற பாடம் அமைந்துள்ளது. சிறப்புடைய மகளிரின் நுதல் இயற்கை மணமுடையது என்பர். ‘நறுநுதல்’ என்ற வழக்கும் இவ்வுண்மையைத் தெரிவிக்கும். திலக முதலியவற்ருல் நுதல் நறுமணம் பெற்றது என்றும் கொள்ளலாம். ‘திலகம் தைஇய தேங்கமழ் திருநுதல்[1] என்னும் தொடரும் இதனைச் சுட்டும். எனவே, **‘தேமூ ரொண்ணுதல்’** என்ற பாடத்தை இங்குச் சிறந்ததாகக் கொள்ளலாம்.

‘தேனூரொண்ணுதல்’ என்பதற்கு இனிமை தவழும் ஒளி பொருந்திய நெற்றி என்பது பொருள். ‘தேமூரொண்ணுதல் என்பதற்கு ‘வண்டு மொய்க்கும் ஒளி பொருந்திய நெற்றி’ என்பது பொருள். இவற்றைவிட முந்தைய பாடம் பொருட்சிறப்புடையது புலனுகும்.

13. எழுகுளிறு

‘எழுகுளிறு மிதித்த ஒரு பழம்போல்’ (24.4) என்ற தொடரில் பயின்ற **‘எழுகுளிறு’** என்பதற்கு **‘எழுகளிறு’** **‘எழுகுளிர்’** என்ற வேறுபாடுகள் உள. அயலார் கூறும் அலர் தன்னை வருந்திய நிலையைக் கூற இந்த உவமை தலைவியால் கூறப்பட்டுள்ளது. ‘எழு குளிறு மிதித்த ஒரு பழம்போல’ என்பதற்கு ‘ஏழு நண்டு களால் மிதிக்கப்பட்ட ஓர் அத்திப்பழம் போல’ என்பது பொருள். அத்திப்பழம் இயல்பாகவே மென்மை உடையது. நண்டுகள் மிதித்தலால் அது மேலும் குழைந்தது. இந்நிலையை அலரால் வருந்திய தன் நிலைக்குத் தலைவி உவமையாகக் கூறியுள்ளாள்.

---

1. திரு முரு. 24

'எழுகளிறு மிதித்த' என்பது முதலுரையாசிரியர் சௌரிப் பெருமாளரங்கனார் கொண்ட பாடம். உ.வே. சாமிநாதையர் 'எழு குளிறு மிதித்த' என்று பாடங் கொண்டார். 'குளிறு' என்பதற்கு நண்டு எனப் பொருள் கொண்டு அவர் உரை கூறியுள்ளார்.

இராகவையங்கார் 'குளிறு' என்பது நண்டின் பெயர் அன்று என மறுத்து 'குளிர்' என்பதே நண்டுக்கு உரிய பெயர் எனக் காட்டியுள்ளார். 'களவன் குளிர்ஞெண்டு' என உரிச்சொல் நிகண்டும், 'குளிர் கற்கடக' என அமர கோசமும் கூறுவதைத் தன் கருத்துக்கு அவர் சான்றுகளாகக் காட்டியுள்ளார். எனவே இராகவையங்கார் கொண்ட பாடம் 'எழுகுளிர் மிதித்த' என்பதாகும். அ. சிதம்பரநாதச் செட்டியார் தம் முகவுரையில் இராகவையங்கார் உ.வே. சாமிநாதையர் ஆகியோர் கொண்ட பாடங்கள் பொருந்தா எனக் கூறி **'எழுகளிறு மிதித்த'** என்ற பாடமே சிறந்தது என விளக்கியுள்ளார்[1].

இவ்வேறுபாடு அறிஞர்களின் ஆராய்ச்சிப் பொருளாகிய சிறப்புடையது. எனவே இதுபற்றி மேலும் ஆராய்தல் கடனும். அத்திப்பழத்தை ஏழுகளிறு மிதித்தால் முற்றிலும் உருவழிந்து சிதையும். ஏழு நண்டுகள் மிதித்தால் ஓரளவே உரு சிதையும்.

1. அத்திப்பழம் நன்கு முற்றியதாயினும் ஏழு நண்டுகள் ஏறி மிதித்த அளவே அப்பழம் உருவறக் குழைந்து சிதையுமென உறுதியாகக் கொள்ளுதல் இயலாது என்னை? நண்டுகளின் கால்கள் மிதித்த அளவே, அப்பழத்தினைக் குழைவித்தற் கேற்ற வண்மையுடையது அல்லவாதலின் என்க. ஏழு யானைகளால் அடுத்தடுத்து மிதித்தற்கேற்றவாறு வழியிற் கிடந்த அத்திப்பழம் அவ்யானைகளின் கால்களால் அடுத்தடுத்து மிதிக்கப் பெற்ற நிலையில் உருவின்றிக் குழைந்து சிதைதல் போலக் கொடியாருடைய நாவானது உருவறக் குழைந்து சிதைக என்பதே தலைவியின் கருத்தாகலின் முதலுரையாசிரியர் கொண்ட 'எழு களிறு மிதித்த ஒரு பழம் போல' என்ற பாடமே சிறப்புடையதாகும். இதனுல் முதலுரையாசிரியராகிய சௌரிப் பெருமாள் அரங்கனார் உரையும் ஆராய்ச்சியாளரால் உற்றுநோக்கும் சிறப்புடைய தென்பது பெறப்படும் - குறுந்தொகை விளக்கம் - டாக்டர் அ. சிதம்பரநாதசெட்டியார், முகவுரை, ப. 7.

ஊரவர் அலர் கேட்டுத் தலைவியின் உள்ளமே அழிவது; உடலன்று. உள்ளத்தின் சிதைவுக்கே இவ் உவமையைக் கொள்ள வேண்டும். உடற்சிதைவுக்கு எனக் கொள்ளல் கூடாது. எனவே யானை மிதித்த என்பதைவிட நண்டுமிதித்த என்பது பொருத்தமாகும். ஊரவர் கௌவை அடுத்தடுத்துத் தலைவியின் உள்ளத்தைத் தாக்கும் இயல்பினது என்பதற்கு ஏற்ப ஏழு நண்டுகள் அடுத் தடுத்து அத்திப்பழத்தை மிதிப்பதாகக் கொள்ளலாம். இனி குளிறு, குளிர் என்ற இரு சொற்களில் நண்டைக் குறிப்பது எது என்பது காணல் வேண்டும். இராகவையங்காரின் விளக்கம் 'குளிர்' என்னும் சொல்லே நண்டைக் குறிப்பது எனச் சான்றுகளோடு நிறுவியுள்ளது. எனவே **'எழுகுளிர் மிதித்த'** என்ற பாடம் சிறந்த தெனலாம். நாவற் பழத்ினைக் கவின் சிதையும்படி பற்றித் தன் பெடைக்கு நண்டு தரும் காட்சியை.

"அகனிலை நாவ லுண்டுறை யுதிர்த்த
கனி கவின் சிதைய வாங்கிக் கொண்டு தன்
தாழை வேரளைவிழ் துனைக் கிடூஉம்
அலவன்............[1]

எனவரும் பகுதியும் இங்கு ஒப்பு நோக்கத்தக்கது,

14. கள்வன்-களவன்

'தானே கள்வன்' (25. 1) எனவரும் தொடருக்குத் **'தானே களவன்'** எனவரும் வேறுபாடு அறிஞர்களின் ஆராய்ச்சிக்கு உட் பட்ட சிறப்புடையதாகும். உ.வே. சாமிநாதையர் 'தானே கள்வன்' எனப் பாடங் கொண்டார். 'தலைவன் தன்னைக் களவு மணம் செய்த காலத்தில் சான்றுவார் எவருமிலர் தலைவனுகிய **கள்வன்** ஒருவனே இருந்தான்' என்பது இங்குச் சுட்டப்படும கருத்து.

இராகவையங்கார் 'தானே களவன்' எனப் பாடங்கொண்டு 'தலைவனே களத்திருந்த சான்றுவான்' எனப் பொருள் கூறியுள் ளார். தான் கொண்ட பாடம் சிறப்புடையது என்பதைக்

1. அகம் 380. 4-7

"கள்வன் பொய்ப்பின் யானென் செய்கோ என்பது இயைபுடைத்தன்று, கள்வன் பொய்த்தல் இயல்பாதலால் பல்லோர்க்கு நடுச் சொல்லும் களவனான தலைவன் என்பாற் பொய்ப்பின் யானெவன் செய்கோ என்பது இயல்புடையதாதல் நன்கு நோக்கிக் கொள்க" என்றும் விளக்கியுள்ளார்.

இராகவையங்கார் கொண்ட 'தானே களவன்' என்ற பாடம் பொருட் சிறப்புடையது என டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார் பாராட்டியுள்ளார்.[1]

எனினும் இராகவையங்கார் கொண்ட 'களவன்' என்ற பாடம் பொருட் சிறப்புடையதன்று என்பதே என் துணிபு. களத்தில் இருந்தவனைக் களவன் எனக்கூறுதல் பிழையன்று. எனினும் தலைவிக்கும் தனக்குமுள்ள களவுண்மையைப் பல்லோர் நடுநின்று சொல்லும் மரபு தலைவற்கில்லை. எனவே களவன்-களத்தில் உள்ளவன் எனப்பொருள் கொண்டு, பல்லோர் நடுவில் நின்று தங்கள் களவு வாழ்க்கையைப் பறையறைந்து கூறும் மரபினனாகத் தலைவனை உருவகப்படுத்தல் தேவையற்றது.

களவுக்காலத்தில் தன் நலமுண்டு பொய்த்த தலைவனைக் கள்வன் என உரிமை தோன்றக் கூறும் இயல்பு தலைவிக்கு உரியது என்பதற்குப் பல சான்றுகள் உள.

"இவனென் னலங்கவர்ந்த கள்வ னிவனெனது
நெஞ்சு நிறையழிந்த கள்வன்[2]

என்றும்

---

1. களவன் என்ற பண்டைய வழக்கு இக்காலத்திய 'களத்தான்' என்னும் வழக்குடன் ஒப்புநோக்கத் தகுவதாகும். பல்லோர்க்கும் நடுநின்று சான்று பகரும் களவனான தலைவன் என்பாற் பொய்ப்பின் யான் யாது செய்வேனே எனத் தலைவி தோழிக்குக் கூறினார் என ஐயங்காரவர்கள் கூறும் பொருள் அறிஞர்களால் வியந்து பாராட்டத் தகும் சிறப்புடையதாகும்-குறுந் தொகை விளக்கம், டாக்டர் அ. சிதம்பரநாதச் செட்டியார், முகவுரை, ப.9.
2. முத். 102.

"காடுடைய சுடலைப்பொடி பூசி யென்னுள்ளங்கவர்கள்வன்[1] என்றும் வரும் பகுதிகளைக் காணலாம். மேலும் தலைவன் சூளுறவு செய்து அதனைப் பொய்த்தவிடத்துக் 'கள்வன்' என உரிமை தோன்றக் கூறப்படும் சிறப்பைக் குறுந்தொகையில் வரும் பிறிதொரு பாடலும் அறிவிக்கின்றது.

"பனையெழின் மென்றோ ளணைஇய வந்நாட்
பிழையா வஞ்சினஞ் செய்த
கள்வனும் கடவனும் புணைவனுந்தானே[2]

என்பது குறுந்தொகை. இக்குறிப்புக்களால் 'தானே களவன்' என்ற படமே இங்குச் சிறப்புடையதாகக் கொள்ளத்தக்கதாம்.

15. முட்டுவேன் கொல்

'முட்டுவேன்கொல் தாக்குவேன் கொல்' (28. 1) என்னும் பாடல் தொடரில் 'முட்டுவேன் கொல்' என்ற பாடத்துக்கு 'மூட்டுவேன் கொல்' என்ற வேறுபாடும் உள்ளது.

உ.வே. சாமிநாதையர் 'முட்டுவேன் கொல்' என்ற பாடங் கொண்டார்; இராகவையங்கார் 'மூட்டுவேன் கொல்' என்ற பாடங்கொண்டார். முட்டுதல் என்பதற்கு 'உடம்பால் முட்டுதல்' என்பது பொருள். மூட்டுதல்-நினைவு மீளச் செய்தல்.

இராகவையங்கார், மூட்டுதல்-நினைவு மீளச் செய்தல்; தாக்குதல்-பாய்தல்-உடம்பால் விரையத்தீண்டுதல்; கூவல்-வாயாலரற்றல் என விளக்கம் கூறி 'இவற்றல் மனம், மெய், வாக்கு மூன்றுலும் முயலத் தொடங்கியவாறு கூறினள். முட்டுதலும் தாக்குதலும் உடம்பின் வினையேயாதலின் முட்டுவேன் என்பது பாடமின்மையறிக' என்றும் தெளிவுபடுத்தியுள்ளார். அ. சிதம்பரநாதச் செட்டியார் இவ்வாசிரியர் கூறும் விளக்கம் நோக்கத் தக்கது என மொழிந்துள்ளார்.

1. தே. திருநானசம்பந்தர் 1—1—1.
2. குறுந் 318: 6-8

தலைவி தனது வருந்தும் நிலையறியாமல் துஞ்சும் ஊரைத் துயிலெழுப்ப முட்டுவேனோ? தாக்குவேனோ? கூவுவேனோ எனக் கூறுவதாக இப்பாடற் கருத்து அமைந்துள்ளது. உறங்கும். ஊரை எழுப்பத் தேவை செயலும், ஒலியுமே. ஒலியைவிடச் செயலே மிகுதியும் தேவை என்பதைக் கூறும் வகையில் முட்டுவேனோ தாக்குவேனோ என இரு செயல்கள் கூறப்பட்டுள. 'முட்டுதல் உடம்பாற் றீண்டுதல் என்றும், தாக்குதல் கோல் முதலிய கருவிகளால் தீண்டுதல் என்றும் கொள்க' என உ.வே. சாமிநாதையர் விளக்கம் தந்துள்ளார்.

இனி, ஊரினர் பொருட்டுச் சுவர் முதலியவற்றில் முட்டிக் கொள்வேனோ? தாக்கிக் கொள்வேனோ? என்று பொருள் கூறலுமாம் எனப் பிறிதொரு வகையில் பொருள் கொள்ளும் நெறியையும் உ.வே. சாமிநாதையர் மொழிந்துள்ளார். இவ்விளக்கங்களால் 'முட்டுவேன் கொல்' எனவரும் பாடமே பொருட்சிறப்புடையது புலனாகும்.

'மூட்டுதல்' என்று பாடங்கொண்டு 'நினைவு மூளச் செய்தல்' என்று உரையும் எழுதியுள்ளார் இராகவையங்கார். உறங்கும் ஊரவரை நினைவு மூளச் செய்யும் வழியாது? செயல் அல்லது ஒலி மட்டுமே ஊரவரை நினைவு மூளச் செய்யும் கருவிகள், முட்டுதல், தாக்குதல் முதலிய செயல்களாலும், கூவுதல் என்ற ஒலியாலும் ஊரவர் நினைவு மூளும் நிலை உண்டு. எனவே தேவையின்றிப் பாடத்தைத் திருத்துவதும் புதிய பொருந்தா விளக்கம் தரலும் சிறப்புடையதல்ல. எனவே 'முட்டுவேன் கொல்' என்ற பாடத்தையே இங்குச் சிறப்புடையதாகக் கொள்ளல் நேரிது.

16. அவாவுற்றனை

'அரிதவாவுற்றனை நெஞ்சே' (29.4) என்னும் தொடரில் அவாவுற்றனை' என்பதற்கு 'அயர்வுற்றதனை' என்ற வேறுபாடு உள்ளது. 'மழை நீரை ஏற்ற பசுமட்கலம் போல, ஆசையாகிய வெள்ளத்தில் நீந்தி அரியதைப் பெற அவாவுற்றனை' என்று அவாவுற்ற தன் நெஞ்சுக்குத் தலைவன் கூறுவதாக இப்பாடல் அமைந்துள்ளது. பசுங்கலம் நீரைத் தாங்காதது போல, உள்ளமும்

ஆசை என்ற வெள்ளத்தைத் தாங்க இயலவில்லை என்பது கருத்து. எனவே நெஞ்சம் பெரிய, அரிய, அவா கொண்டது என்பதை விளக்க **'அரிதவாவுற்றனை'** எனவரும் பாடம் சிறப்பாக உள்ளது. 'பின்னும் கூடுதற்கு அவாவுற்ற நெஞ்சினை நோக்கிக் கூறியது' எனவரும் துறை விளக்கத் தொடருக்கு ஏற்பவும் இங்கு **'அரிதவாவுற்றனை'** என்ற பாடம் இருத்தலே பொருத்தமுடையதாகும்.

17. இளமாணாக்கன்

'அன்னாய் இவனோர் இள மாணாக்கன்' (33.1) என்பதில் **'இளமாணாக்கன்'** என்பதற்கு **'இன மாணாக்கன்'** என்ற வேறுபாடு உள்ளது. தலைமகன் பாணனிடம் வாயில் நேர்ந்துரைக்கும் துறையது இப்பாடல். 'இப்பாண் மகன் இளைய கற்றுச் சொல்லி, பிற்காலத்தில் இவன் பெருஞ்செம்மலனாக விளங்குவான்' எனக் கூறி வாயில் நேர்ந்தாள் என்பது துறைக்கருத்து. 'அன்னாய் இவன் ஓர் இள மாணாக்கன்' என இன்றைய நிலையும், 'விருந்தினூரும் செம்மலனே' எனப் பின்றைநிலையும் இப்பாடற்கண் உரைக்கப்படுதலால் **'இளமாணாக்கன்'** என்னும் பாடமே ஏற்புடையது.

18. மரந்தை-மாந்தை

'குட்டுவன் மரந்தை அன்ன' (34.6) என்னும் தொடரில் **'மரந்தை'** என்பதற்கு **'மாந்தை'** என்ற வேறுபாடு உள்ளது. மரந்தை-மாந்தை என்பன ஏடுகளில் ஒத்த அமைப்போடு விளங்குவன.

இரா. இராகவையங்கார், முத்தொள்ளாயிரத்தில் 'மல்லனீர் மாந்தையார் மாக்கடுங்கோதைக்கு' எனவரும் வெண்பாவடியைக் காட்டி **'குட்டுவன் மாந்தையன்ன'** என்ற பாடமே சிறப்புடையது என மொழிவர். மேலும் மாந்தை என்பது கடற்றுறை ஊர் என்றும், மரந்தை எனவரும் ஊர் அகநாட்டில் உள்ள பிறிதோரூர் என்றும் குறித்தனர்.

எனினும் மரந்தை என்னும் ஊரே கடற்கரை ஊர் என்ப தனைக் குறுந்தொகைச் சான்றின் மூலம் உ.வே. சாமிநாதையர் காட்டியுள்ளார்.

''தன்கடற் படுதிரை பெயர்த்தலின் வெண்பறை
நாரை நிரைபெயர்ந் தயிரை யாரும்
ஊரோ நன்றுமன் மரந்தை[1]

எனவரும் குறுந்தொகைப் பாடற் பகுதியைக் காட்டி 'இது மேலைக் கடற்கரைக் கண் உள்ளதொரு நகர்' என்றும் குறிப்பிடுகின்றார். எனவே 'மரந்தை அன்ன' என்ற பாடத்தையே சிறந்ததெனக் கொள்ளலாம்.

19. யாஅம்பொளிக்கும்

'மென்சினையா அம்பொளிக்கும்'(37.3) என்பதில் **'பொளிக்கும்'** என்பதற்கு **'பிளக்கும்'** **'பிளிக்கும்'** என்பன வேறுபாடுகள். யாஅம் என்பன பாலை நிலத்தில் உள்ள ஒருமரம். இம்மரத்தின் பட்டை நீர்ப்பசையுடையது என்பர். எனவே பிடியின் பசிகளைய களிறு யாஅமரத்தின் பட்டையை உரித்துத் தரும் என்பது கருத்து. 'பொளித்தல்' என்பதற்கு 'உரித்தல்' என்பது பொருள். எனவே 'பிளக்கும்' என்ற பாடம் பொருள் நிலையில் பொருத்தமாக அமையவில்லை. **'பிளிக்கும்'** என்பது சிதைந்த பாடம். 'யாஅம் பொளிக்கும்' என்பதே சிறந்தது.

20. உள்ளாதாற்றல்

'உள்ளாதாற்றல் வல்லு வோர்க்கே' (38.6) எனவரும் பாடல் தொடரில் **'உள்ளாதாற்றல்'** என்பதற்கு **'உள்ளாதகற்றல்'**, **'உள்ளாதகறல்'** என்பன பிற வேறுபாடுகள். தலைவனுடைய நட்பு, அவன் பிரிவை எண்ணி வருந்தாமல் பொறுத்துக் கொள்ளும் வல்லவர்க்கு எந்நாளும் இனியதாகும் என்னும் கருத்து இப் பாடற்கண் உரைக்கப்பட்டுள்ளது. பிற பாடல்களின் பொருள் நிலை இப்பாடற் கருத்துக்கு இயையவில்லை. எனவே, **'உள்ளா தாற்றல்'** என்ற பாடமே சிறப்புடையது.

1. குறுந். 166:1-3

21. யாயும் ஞாயும்

'யாயும் ஞாயும் யாராகியரே' (40.1) என்பது பலரும் அறிந்த பாடற்றொடர். யாய்-என்தாய் ஞாய்-நின்தாய் என்பது பொருள். இங்கு **'யாயும் ஞாயும்'** என்பதற்கு **'யாயும் யாயும்'** என்ற பொருத்த மில்லாத பாடம் உள்ளது. பொருள் வேறுபடினும் இப்பாடம் சிறந்ததன்று.

22. ஒல்வாள் அல்லள்

'செல்வார் அல்லர் என்று யானிகழ்ந்தனனே ஒல்வாளல்லள் என்று அவரிகழ்ந்தனரே' (43.1-2) என்பதில் **'ஒல்வாளல்லள்'** என்பதற்கு **'வீவாள் அல்லள்' விடுவாள் அல்லள்'** என்பன வேறுபாடுகளாயுள. இங்கு 'வீவாள் அல்லள்' என்பது பொருத்த மில்லாத பாடம். இதற்கு 'இறந்து படுவாள் அல்லள்' என்பது பொருள். 'ஒல்வாளல்லள்' என்பதற்கு 'உடம்படுவாளல்லள்' என்றும் 'விடுவாள் அல்ல்ள்' என்பதற்கு 'வெளியே செல்ல விடாள்' என்றும் பொருள். இரண்டும் பொருந்துவனவே எனினும் 'செல்வரல்லர்' என்ற முதலடியின் முதற்சீருக்கு ஏற்ப **'ஒல்வாளல்லள்'** என்றிருப்பது இனிய சந்தச் சிறப்புத் தருவதாகும்.

23. மகளிர் தழீஇய சென்ற

'வாலிழை மகளிர்த் தழீஇய சென்ற' (45.2) என்னும் பாடற்றொடரில் **'மகளிர்த்தழீஇய சென்ற'** என்பதற்கு நான்கு வேறு பாடுகள் உள. **'மகளிர்த்தரீஇய சென்ற' 'மகளீர் மரீஇய சென்ற' 'மகளிர் மரீஇச் சென்ற' 'மகளிர்க் காணிய சென்ற'** என்பன அவை.

'காலையில் எழுந்து, தேரை ஆயத்தம் செய்து பரத்தை மகளிரைத் தழுவும் பொருட்டுச் சென்ற ஊரன் என ஊரன்' செயல் இங்குக் கூறப்பட்டுள்ளது. இப்பொருளைப் பொருத்திக் காணுங்கால் 'மகளிர்த்தரீஇய சென்ற' என்பது பொருத்தமில்லாது அமைந்தது அறியலாம். தலைவன் தேரில் ஏறிப் பரத்தை

யரைக்காண, மருவ, தழுவச் செல்லல் என்பது பொருத்தமே யாதலால் பிற பாடங்கள் அனைத்தும் பொருள் நிலையில் பொருத்த முடையனவேயாகும். எனினும் பழமைச்சிறப்பும் பயிற்சி மிகுதியும் நோக்கி '**மகளிர்த்தழீஇய சென்ற**' என்ற பாடத்தையே சிறந்ததெனக் கொள்ளலாம்.

24. துறைதொறும் பரக்கும்

'**துறைதொறும் பரக்கும்**' (51.3) என்னும் பாடற்றொடருக்குத் '**துறைதொறும் பரிக்கும்,**...............' '**துறைதொறும் வரிக்கும்,** என்பன பாட வேறுபாடுகள். கழி முள்ளி மலர், உதிர்த்த முத்துக்களைப் போலக் காற்றால் சிதறி நீர்த்துறை தோறும் பரவும் என்பது இத்தொடரின் பொருள். துறை தொறும் வரிக்கும் என்ற பாடத்திற்குக் கோலம் செய்தாற்போல மலர்கள் கிடக்கும் என்பது பொருள். காற்றால் சிதறிப்பரந்து கிடக்கும் எனக் கூறுவதைவிடக் காற்றால் சிதறிப்பரந்து கோலஞ் செய்தாற் போலக் கிடக்கும் எனக் கூறுவது நயமுடையதாக உள்ளது. 'துறைதொறும் பரிக்கும்' என்பது பொருட் சிறப்பில்லாப் பாடம். எனவே **துறைதொறும் வரிக்கும்**' என்பதனை இங்கு ஏற்றல் சிறப்பாகும்.

25. ஆர்களிறுமிதித்த

'ஆர்களிறுமிதித்த நீர் திகழ் சிலம்பில்' (52.1) என்னும் தொடரில் '**ஆர்களிறுமிதித்த**' என்பதற்கு '**ஆர்கலிமிதித்த**' '**ஆர்கலிமிகுத்த**' '**ஆர்களிமிதித்த**' என்பன வேறுபாடுகள். களிறுகள் மிதித்து உண்டாய பள்ளங்களில், நீர் தங்கிய இடங்களை யுடைய மலை என்பது இத்தொடரின் பொருள். 'ஆர்களிறுமிதித்த' என்பது உ. வே. சாமிநாதையர் பதிப்புப் பாடம். இராகவை யங்கார் 'ஆர்கலிமிதித்த' என்று பாடங்கொண்டு 'கடலை மிதித்தற்குக் காரணமான அருவி நீர் விளங்கும் மலை' எனப் பொருள் கூறியுள்ளார். மேலும் ஆர்கலி இரவில் எழுந்து பரந்து ஊர்தலால் உண்டாகிய நீர் நிறைந்த மலை என்றும் வேறு பொருளும் கூறியுள்ளார். இராகவையங்கார் கூறும் பொருள்

இடர்ப்பட்டு உரைப்பதாகவும், ஆற்றொழுக்காகப் பொருள் கொள்ளும் இயல்பும் இன்றி அமைந்துள்ளது. எனவே உ.வே. சாமிநாதையர் கூறியாங்கு **'ஆர்களிறு மிதித்த'** எனப் பாடங் கொள்ளல் நேரிது. மேலும் களிறு மிதித்த இடங்கள் பள்ளங்களாகி, ஆங்கே நீர் தங்கல் உண்டு என்னும் செய்தியை

"விலங்கு மலைக் கவாஅற்
கரும்பு நடு பாத்தியன்ன
பெருங்களிற் றடிவழி நிலைஇய நீரே[1]

எனவரும் குறுந்தொகைப் பாடற் பகுதியாலும் அறியலாம். பிற பாடங்கள் பொருள் இயைபு உடையன அன்று.

26. பரிசிலர் கோமான்

'பதலைப் பாணிப் பரிசிலர் கோமான்' (59.1) என்பது பிறிதொரு பாடற்றொடர். இங்குப் **'பரிசிலர் கோமான்'** என்பதற்குப் **'பரதவர் கோமான்'** என்ற வேறுபாடு உள்ளது. 'பரிசிலர் கோமான்' என்பதற்குப் பரிசிலர்க்குப் பரிசில் தந்து பாதுகாக்கும் தலைவன் என்பது பொருள். இத்தலைவனுக்கு அரலை என்னும் பெயருடைய குன்றம் உரியது என இப்பாடலில் கூறப்பட்டுள்ளது. எனவே அவனை நெய்தல் நில மக்களாகிய பரதவர்களின் தலைவனாகக் கொள்வது பொருத்தமன்று. மேலும் பரிசிலர் கோமான் என்பதால் அவனது வள்ளன்மைப் பண்பு வெளிப்படும் சிறப்பும் உள்ளது. எனவே **'பரிசிலர் கோமான்'** என்ற பாடத்தைச் சிறந்ததெனக் கொள்ளலாம்.

27. இருக்கை முடவன்

'பெருந்தேன் கண்ட இருக்கை முடவன்' (60.2) என்னும் தொடரில் **'இருக்கை முடவன்'** என்பதற்கு **'இருகை முடவன்'** **'இருங்கை முடவன்'** **'இருங் கால் முடவன்'** என்ற வேறுபாடுகள் உள. இருக்கை முடவன் என்பதற்குக் காலின்மை யால் எழுந்து

---

1. குறுந். 262: 6-8.

நிற்றற்கும் இயலாமல் இருக்கையில் அமர்ந்த நிலையினனாகிய முடவன் என்பது பொருள். எனவே பொருட் சிறப்பும் நயமும் அமையப்பெற்ற 'இருக்கை முடவன்' என்பது சிறந்த பாடம். முடவன் என்றமையால் கை அல்லது கால் ஊனமாயுள்ள நிலை அறியப் பெறுதலால் அவற்றை விளக்கிக் கூறும் வகையில் அமைந்த பிற பாடங்கள் சிறப்புடையனவல்ல. மேலும் 'தமக்கு உற்றது உரைக்கலாத மூத்தார்களும் பெண்டிர்களும் இருக்கை முடவர்களும்[1] எனவரும் தொடரும், பயின்ற இப்பாடமே சிறப்புடையது என்பதைத் தெளிவுறுத்துகிறது.

28. சுட்டுபு நக்கியாங்கு

முற்பகுதியில் கண்ட 'இருக்கை முடவன்' தான் இருந்த இடத்திலேயே மலையின் கீழிருந்து மலையுச்சியிலுள்ள தேனடையைச்சுட்டி உள்ளங்கையை நக்கி இன்புறுகிறான் என்ற கருத்துத் தொடர்ந்து சுட்டப் பெறுங்கால் '**சுட்டுபு நக்கியாங்கு**' (60. 4) என்ற தொடர் பயின்றுள்ளது. '**நீட்டுபு நக்கியாங்கு**' '**உருட்டுபு நக்கியாங்கு**' '**ஊட்டுபு நக்கியாங்கு**' எனவரும் பிற வேறுபாடுகள் பொருட் சிறப்பில்லாதவையாதலால் '**சுட்டுபு நக்கியாங்கு**' என்ற பாடம் ஏற்புடையதாகும்.

29. கேண்மை - கெண்மை

'பொய்கை யூரன் கேண்மை' (61. 5) என்ற தொடருக்குப் 'பொய்கையுடைய ஊரனின் நட்பு' என்பது பொருள். இதனைப் '**பொய்கை யூரற் கெண்மை**' என மாற்றிப் படாங்கொண்டார் இராகவையங்கார். '**பொய்கை ஊரனுக்கு என்மைசெய்து**' (உணவிடுதல்) என்பது இதன் பொருள். இந்தப் பாடமும் பொருளும் உலகியலுடன் பெரிதும் இயைபுடையன என இதனை அ. சிதம்பரநாதச் செட்டியார் பாராட்டியுள்ளார்.[2] இராகவையங்கார் இங்குக் கொள்ளும் பாடமும் பொருளும் வலிந்து கொள்ளப்பட்டனவாகவே உள. ஊரனோடு கேண்மை பெருகுங் கால் எண்மை செய்தலாய உணவிடுதல் முதலியன இயல்பாகவே

1. இறை. உரை. நூ. 35
2. குறுந்தொகை விளக்கம், டாக்டர். அ. சிதம்பரநாதச் செட்டியார், முகவுரை ப.18

அதனுள் அடங்கும். ஆதலால் அதனை விதந்து கூறுதல் தேவையற்றது. எனவே, **'ஊரன் கேண்மை'** என்ற பாடத்தையே சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

30. மடக்கட் குழவி

'மடக் கட்குழவி' (64. 3) என்பதற்கு **'மக்கட்குழவி'** என்றொரு வேறுபாடு உள்ளது. 'மடக்கட்குழவி' என்பதற்கு 'மடப்பத்தையுடைய கண்ணையுடைய கன்று' என்பது பொருள். 'பல்லா என்று பசுக்களையும் 'மன்றம்' என்று அவை தங்கியுள்ள இடத்தையும் குறிப்பிடுவதற்கேற்ப **'மடக் கட்குழவி'** என்ற பாடமே இங்குச் சிறப்புடையது. அதில் எழுத்து ஒன்று விடுபட்டமையால் 'மக்கட் குழவி' என்ற பொருத்தமில்லாத பாடம் எழுந்தது எனலாம்.

இதனையொட்டி அமைந்த தொடர் **'அணவந்தன்ன'** (64.3) என்பது இங்கு **'அலம் வந்தன்ன'** **'அவண் வந்தன்ன'** **'எனவந்தனரே'** என்று வரும் பிற பாடங்கள் பொருத்தமற்றவை. 'அணவந்தன்ன' என்பதற்குத் 'தலையெடுத்துப் பார்த்தல்' என்பது பொருள்.

31. புது நாணுழைப்பான்

'புது நாணுழைப்பான்' (67.3) என்பதற்குப் **'புது நுணுழைப்பான்'** என்ற வேறுபாடு உள்ளது. 'புது நாணுழைப்பான்' என்பதற்குப் 'புதிய பொற் கம்பியை ஊடு செலுத்தும் பொற்கொல்லன்' என உ.வே. சாமிநாதையர் பொருளுரைப்பர். இப்பாடத்தையே ஏற்கும் இராகவையங்கார் புதிய நூலை நுழைக்கும் பொருட்டு எனப்பொருள் கூறியுள்ளார். பொருள் நிலையில் இப்பாடமே சிறப்புடையது. புது நுணுழைப்பான் என்பது ஒப்புமை நிலையில் ஏற்பட்ட பிழைப்பாடம்; பொருளியைபற்றது.

32. பிற பாடங்கள்

பொருள் வேறுபாட்டு நிலையில் ஆய்வுக்கு அமைந்த பாடங்கள் பல உள. அனைத்தையும் விரிந்த நிலையில் நோக்குதல் இயலாது, பிற பாடங்களும் அவற்றுக்குரிய வேறுபாடுகளும் கீழே தொகுத்துத் தரப்பெற்றுள்ளன. அவற்றுள் இன்றியமையாதமைந்த சில பாடங்கள் மட்டும் விரிவாக ஆயப் பெற்றுள்ளன.

அடிப்படைப் பாடம்	பாட்டல், அடி	வேறுபாடுகள்
பாடல் பெறீஇயர்	75.3	பாடில் பெறீஇயர் பாடினி பெறீஇயர்
வந்த விருந்துறை	80.2	வந்த விருத்தி வந்த விருந்திறை வந்த விருந்தின்றி வந்த விருந்தினர்
கிளையொடு காக்க	80.7	கிளையொடு நுகர்க
சாரல்	82.3	காழகில்
முரண் சோரும்	88,3	முரண் கொல்லும் முரண் சொல்லும்
பாடினன் குறினே	80.7	பாடிநன்குறினே
குறுமகள்	95.2	குறமகள்
கயிறரியெருத்தில்	117.4	கயிறரிபெருந்தீரத்து கயிறரி பெருந்திறந்து
திண்டேர்ப் பொறையன்	128.2	திண்டோட் பொறையன்
காலிற் செல்வார்	130.2	ஆவிற் செல்லார்
விளைதிணைக்கடீஇயர்	141.1	விளைதினை கடியா விழைதினைகடிய
பரல் பாழ் படுப்ப	144.5	பரல் பாற்படுப்ப பால் பரற் படுப்ப பரலாற் படுப்ப

நின்சொலுள்ளும்	156.5	நின் செயலுள்ளும்
இறவினன்ன	160.2	இரவினன்ன அரவினன்ன
பெரும்பெயல்விடியல்	168.3	பெரும்புலர் விடியல்
பணிமொழி	176.2	பனிமொழி
மரபில்	182.2	மார்பில்
கல்லினும்	187.1	பல்லினும்
பகுவாய்த்தேரை	193.2	பகுவாய்த்தட்டை
வீஇசுமந்துவந்து	200.2	வீசுமஞ்துவந்து வீசும் வீசுமந்து வீசும் வளிகலந்து வீசும் வந்து
மாமழை	200.5	மாமறை
அறந்தலைப்பட்ட	209.1	சுரந்தலைப்பட்ட
முடச்சினை	209.5	முட்சினை
எழுகலத்து	210.4	ஒரு கலத்து
மாலைசூட்டி	214.6	மாலைசூடி
இருவிசேர்	220.3	அருவி சேர்
முன்றில்	228.3	குன்றில்
காலமாரி	251.2	காலைமாரி
அவனெதிர்பேணி	252.4	அவனே பேணி
சேந்தன்றந்தை	258.4	சேந்தனுறந்தை
வில்லுடை விளையர்	272.2	வில்லுடை இளையர்
புல்லார்	275.4	புல்லூர்
பசுங்குழை	294.6	பசுங்கழை
அகுதை பின்றை	298.5	அஃகுதை பின்றை அகுதை தந்தை

கடற்கரையது	313.1	கடற்றிரையது
கொடுங்கோன்முதலே	324 1	கொடுந்தாண்முதலே
பண்பிணையெனினே	342 7	பணிவிணையெனினே
மீன்படு சுடரொளி	357.7	மின்படு சுடரொளி
மள்ளர் போரே	364.8	மன்னர் போரே
மகிழ்க நின் சூளே	384.4	மகிழ்ந்தநின் சூளே
பாக்கத்து	394.2	பாகத்து

மேலே கண்டவற்றுள் பொருந்திய பாடங்கள் இன்னவை யெனச் சுட்டியும் தேவையான இடங்களில் விரிவாக விளக்கியும் கீழேயுள்ள பகுதி அமைக்கப்பட்டுள்ளது.

தலைவன் வரவுரைத்த பாணற்குத் தலைமகள் கூறிய பாடலில், நற்செய்தி உரைத்தமைக்காகப் 'பொன்மிக்க பாடலி நகரைப் பெறுவாயாக' என வாழ்த்துவதாக வரும் நிலையில் 'பாடலி பெறீஇயர்' (75.3) என்ற பாடம் உள்ளது. இங்குப் 'பாடினிபெறீ இயர்' என்பது பொருத்தமற்றது. பாணனைப் பாடினியைப் பெறுமாறு தலைவி வாழ்த்துவதும் மரபன்று. பாடலி நகரம் செல்வம் மிக்கது என்பதை,

> "சீர்மிகு பாடலிக் குழீஇக் கங்கை
> நீர்முதற் கரந்த நிதியங் கொல்லோ,[1]

எனவரும் பகுதியாலும் அறியலாம் எனவே, பாணன் செல்வம் பெற்று வாழ்க என்னும் பொருளில் 'பாடலிபெறீஇயர்' என வாழ்த்தியதாகக் கொள்ளலே பொருந்தும்.

'வந்த விருந்துறை' (80 2) என்பதற்கு 'வெள்ளம் வந்த பெரிய நீர்த்துறை' என்பது பொருள். நீர்த்துறைக் கண்ணே புனல் விளையாட்டைச் செய்வோம் என்ற குறிப்புடன் 'யாமஃது அயர்கம்' (80.3) என்ற தொடரும் தொடர்ந்து உள்ளது. இதற்கு அமைந்த வேறுபாடுகள் அனைத்தும் பொருளியைபின்றி அமைந்தவை.

1. அகம் 265, 5 6.

'கிளையொடுங் காக்க தன் கொழுநன் மார்பே (80.7) என்ற தொடர் 'தன் கணவன் மார்பைப் பாங்காயினரோடு காக்க என்னும் பொருளைத் தருகிறது. 'கிளையொடு நுகர்க' என்பது பண்பாட்டு முரண்பாட்டுடன் அமைந்த பொருந்தாப் பாடம்.

'சாரல்' (82.3) 'முரண் சோரும்' (88.3) என்பன அவற்றின் வேறுபாடுகளை விடப் பொருட் சிறப்புடையவை. 'பாடினன் குறினே' (89.7) என்பதற்குத் 'தலைமகன் பெயர்பாடி இடிப்பாளா யின்' என்பது பொருள். 'பாடி நன்குறினே' என்ற வேறுபாடு இதனினும் பொருட் சிறப்புடையதாக உள்ளது. 'தலைமகன் பெயர்பாடி நன்கு இடிப்பாளாயின்' என்பது இதன் பொருள் எனவே இங்குப் **'பாடி நன்குறினே'** என்பதைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

'சிறுகுடிக்குறவன் பெருந்தோட் குறுமகள்' (95 2) என்னும் தொடரில் **'குறுமகள்'** என்பதே சிறந்த பாடம். இதற்கு வேறுபாடு 'குறமகள்' என்பது. குறவன் எனக் குறிப்பிடப் பெறுதலால் 'குறமகள்' எனக் கூறவேண்டுவதில்லை ஆதலாலும், 'பெருந்தோட் குறுமகள்' என முரண் தொடைச் சிறப்பு அமைந் திருத்தலாலும் 'குறுமகள்' என்பதைச் சிறந்ததாக ஏற்கலாம்.

'கயிறரி யெருத்தில்' (117.4) என்பதற்குக் 'கயிற்றை அறுத்துச் செல்லும் எருது போல' என்பது பொருள். இதன் வேறுபாடுகள் பொருட்சிறப்பு உடையன அல்ல.

'திண்டேர்ப் பொறையன்' (128.2) 'திண்டோட் பொறையன்' என்பன பொறையன் சிறப்பைக் கூறுவனவே; மிகுதியும் வேறுபாடில்லை. எனவே பழம் பாடத்தையே ஏற்கலாம். 'விலங்கிருமுந்நீர் காலிற் செல்லார்' (130.2) என்னும் தொடருக்குக் 'குறுக்கிடும் பெரிய கடலின் மேல் காலினால் நடந்து செல்லார்' என்பது பொருள். **'காலிற் செல்லார்'** என்பதற்கு அமைந்த வேறுபாடு முற்றிலும் இயைபின்றி அமைந்தது புலனாகும்.

'வினைதிணைக் கடீஇயர்' (141.1) 'பரல் பாழ் படுப்ப' (144.5) என்பன அவற்றுக்கமைந்த வேறுபாடுகளைவிடப் பொருட் சிறப்புடைய பாடங்கள்

"எழுதாக் கற்பின் நின் சொலுள்ளும்
பிரிந்தோர்ப் புணர்க்கும் பண்பின்
மருந்து முண்டோ" (156.5-7)

என்னும் பகுதியில் வேதம் அறிந்த நின் சொல்லில், பிரிந்த தலைவியரையும் தலைவரையும் சேரச் செய்யும் தன்மையுடைய பரிகாரம் உண்டோ எனப் பார்ப்பன மகனைத் பார்த்துக் கிழவன் வினவும் பொருள் அமைந்தது. தலைவன் தலைவியரைச் சேரச் செய்தல் என்பது பாணன் நிகழ்த்தும் செயல். எனவே, **'நின் சொலுள்ளும்'** (156.4) என்பதைவிட **'நின் செயலுள்ளும்'** என வரும் வேறுபாடு சிறப்புடையதாக அமைகிறது.

'இறவினன்ன கொடுவாய்ப்பெடை' (160.2) என்னும் தொடருக்கு 'இரு மீனை ஒத்த வளைந்த அலகுடைய அன்றிற் பெடை' என்பது பொருள். இங்கு **'இரவினன்ன'** என்பது பொருள் பொருத்தமில்லாத பாடம். **'அரவினன்ன'** என்பது உவமைப் பொருத்தம் இல்லாதது. எனவே, **'இறவினன்ன'** என்பது சிறந்த பாடம்.

'பெரும் பெயல் விடியல்' (168.3) என்பதில் 'பெரும் பெயல்' என்பது மாரிக்காலத்தைக் குறிப்பது. 'மாரிப்பித்திகத்து' எனப் பாடலின் தொடக்கத்தில் மாரிக்காலம் குறிப்பிடப் பெற்றுள்ளது. மேலும் பிச்சி மலரின் அரும்பு விடியலில் விரிந்தது போலத் தலைவி நறுமையும் தன்மையும் உடையவள் என்றும் கூறப் பட்டுள்ளது. எனவே இயல்பான விடியற்காலையில் என்று பொருள் தரும் 'பெரும்புலர் விடியல்' என்பதைவிட மழைக் காலத்து விடியல் என்று பொருள் தரும் 'பெரும் பெயல் விடியல்' என்பதை இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

தலைவன் 'பன்னாள் வந்து பணிமொழி பயிற்றி' (176.2) தலைவியின் நெஞ்சத்தை நெகிழ்த்தான் எனத் தோழி கூறுகிறாள். தலைவன் பன்னாள் வருதலும் பணிமொழி பயிற்றலும் இயல்பு. 'இரவன் மாக்களிற் பணிமொழி பயிற்றி'[1] எனவரும் தொடராலும் இதனை அறியலாம். எனவே 'பணிமொழி' என்பதே இங்குச் சிறந்த பாடம்.

மடல் ஏறுதற்குரியபனைமடலாற் செய்த குதிரையின் 'மணியணி பெருந்தார் மரபிற் பூட்டிய' (182. 5) என்ற செய்தியைச் சுட்டும் பிறிதொரு தொடரில் 'மரபிற் பூட்டி' என்பதற்கு 'மார்பிற் பூட்டி' என்ற வேறுபாடு உள்ளது. மடல் மாவுக்குக் கழுத்தில் தார் பூட்டுதலே இயல்பு. எனவே 'மார்பிற்பூட்டி' என்ற பாடம் பொருத்தமில்லாதது.

'கல்லினும் வலியன்' (187. 4) எனத் தலைவனின் வன்னெஞ்சம் கல்லைவிடக் கடினமானது எனச் சுட்டப்படும் தொடரில் 'கல்லினும்' என்பதற்குப் 'பல்லினும்' எனப் பொருத்தமில்லாத பாடம் உள்ளது.

'பகுவாய்த் தேரை, தட்டைப் பறையிற் கறங்கு நாடன்' (193. 2--3) என்னும் தொடர் தலைவனின் நாட்டுவளம் கூறுவது. தேரையின் ஒலி தட்டைப் பறை போல ஒலிக்கும் நாடு என்பது கருத்து. 'பகுவாய்த் தேரை' என்பதற்குப் 'பகுவாய்த் தட்டை' என்று வரும் பாடமும் பொருத்தமில்லாதது அங்கை நெல்லி.

'வீ இசுமந்துவந்து' (200.2) 'மாமழை' (200.5) 'அறந்தலைப் பட்ட' (209. 1) 'முடச்சினை' (209. 5) 'எழுகலத்து' (210. 4) என்பன அவற்றுக்குரிய வேறுபாடுகளைவிடப் பொருட் சிறப்பும் இயைபும் உடைய பாடங்கள்.

'மாலைசூட்டி' (214. 6) என்பதும் 'மாலை சூடி' எனவரும் வேறுபாட்டை விடப் பொருத்தமுடைய பாடம்.

1 அகம் 32.4

'இருவினேர் மருங்கிற் பூத்தமுல்லை' (220. 3) எனவரும் தொடர் 'மான்கள் மேய்ந்து பின் மழையினுல் தழைத்த புனத்தி லுள்ள வரகுப் பயிரின் கதிர் அரிந்த தாள்களின் பக்கத்தில் பூத்துக் கிடக்கும் முல்லை மலர்கள்' பற்றிக் கூறுகிறது. 'இருவி' என்பதற்குக் 'கதிர் அரிந்ததாள்' என்பது பொருள், 'இருவி சேர் மருங்கில்' என்பதற்கு 'அருவி சேர் மருங்கில்' எனவரும் வேறு பாடும் இங்கு இயைபின்றி உள்ளது.

'கானல் நண்ணிய சிறுகுடி முன்றில் (228. 3) என்னும் தொடருக்குக் கடற்கரைச் சோலையைச் சேர்ந்த சிற்றூரின் முன்னிடம் என்பது பொருள். இங்கு 'முன்றில்' என்பதற்குக் 'குன்றில்' என வருவதும் பொருத்தமற்ற பாட வேறுபாடு.

'காலமாரி' (251. 2) 'அவனெதிர் பேணி' (252. 4) என வருவன அவற்றின் வேறுபாடுகளைவிடச் சிறந்த பாடங்கள்.

'ஏந்து கோட்டியானைச் சேந்தன் றந்தை' (258. 4) என்பதில் 'சேந்தன்றந்தை' என்பதற்குச் 'சேந்தனுறந்தை' எனவரும் பாடம் பொருத்தமற்றது.

மான் வேட்டையாடும் கானவர் பற்றிய குறிப்பை வில்லுடை வீளையர் (272. 2) என்ற தொடர் தருகிறது. வில்லேந்திய வீளை யொலியுடையார்' எனக் கானவர் சுட்டப்படுகின்றனர். 'வில்லுடை இளையர்' எனவரும் பாடமும் பொருத்தமுடையதே. எனினும் சீழ்க்கையொலியுடன் மான்களை மருட்டி ஓடச் செய்து வில்லில் அம்பெய்து வேட்டையாடும் சிறப்பு 'வில்லுடை வீளையர்' என்ற பாடத்தில் உள்ளது.

'புல்லார்' (275. 4) 'பசுங்குழை' (294. 6) 'அகுதைபின்றை' (298. 5) 'கடற்கரையது' (313. 1) 'கொடுங்கோண்முதலை' (324.1) 'பண்பினை யெனினே (342.7)என்பன அவற்றுக்குரிய வேறு பாடுகளைவிடப் பொருட் சிறப்புடைய பாடங்கள்.

தலைவனின் மலை நாட்டில், தினைப்புனம் காக்கும் குறவனின் கொள்ளிக் கட்டையால் அஞ்சிய யானை, விண்மீன் விழும் ஒளியைக் கண்டு மேலும் அஞ்சியது என்ற செய்தியைக்

கூறுமிடத்து 'மீன்படு சுடரொளி' (357.7) என்ற பாடம் உள்ளது. குறவனின் கொள்ளிக்கட்டைக்குப் பயந்து, பின்னரும் விண்மீன் விழும் ஒளியைக் கண்டு யானை அஞ்சும் செய்தியை

"பெருவிற்பகழிக் குறவர்கைச் செந்தீ
வெருவிப் புனந்துறந்த வேழம்—இருவிசும்பில்
மீன்விழக் கண்டஞ்சும் வேங்கடமே மேலசுரர்
கோன்விழக் கண்டுகந்தான் குன்று"[1]

எனவரும் பாடலிலும் காணலாம். எனவே 'மின்படு சுடரொளி' என்ற பாடத்தை விட 'மீன்படு சுடரொளி' பாடம் சிறந்தது.

பின்னே வரும் 'மன்னர் போரே' (364. 8) 'மகிழ்க நின் சூளே' (384. 4) 'பாக்கத்து' (394. 2) எனவரும் பாடங்கள் அவற்றின் வேறுபாடு களைவிடச் சிறந்தவை.

மொத்தமுள்ள 1480 வேறுபாடுகளில் பொருள் சிறப்பு வகையிலும், பொருள் வேறுபாட்டு நிலையிலும் ஆயத்தக்கனவாக அமைந்தவை 110 வேறுபாடுகள். எஞ்சிய 1370 வேறுபாடுகளும் மிகுதியும் பொருட் சிறப்பில்லாதவை. பொருட் சிறப்பில்லாத பாடங்களின் எண்ணிக்கை மிகுதியாகவும், பொருட்சிறப்புடைய பாடங்களின் எண்ணிக்கை குறைவாகவும் அமைந்துள்ளதை நோக்குழி, பொருள் நோக்குடனே இவ்வேறுபாடுகள் அனைத்தும் எழுந்தவை அல்ல என்பது புலனாகும்.

3. ஐங்குறுநூறு

ஐங்குறுநூற்றில் அமைந்த 501 பாடல்களில் 298 பாடல்கள் மட்டும் வேறுபாடு உள்ளவை. இவற்றில் அமைந்த மொத்தப் பாடங்கள் 521-ல் 89 மட்டும் பொருள் வேறுபாட்டுக் கோணத்தில் ஆயத்தக்கன. இவை, இக்கட்டுரைக் கண் ஆராய்ந்து மூல பாடங்கள் நிறுவப்பட்டுள்ளன. திணை வரிசையில் இப்பாட வேறுபாடுகள் இக்கட்டுரைக்கண் ஆராயப்பட்டுள.

1. திவ்ய. முதற்றிருமொழி 40

1. மருதப்பகுதி

ஐங்குறுநூறு தொடக்கத்தில் நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன் (க.வா. 1-2) என்பது கடவுள் வாழ்த்துச் செய்யுளில் பயின்ற தொடர் 'நீலத்திருமேனியும் வாலிய இழையும் உடைய உமையம்மையைக் கூருக உடைய இறைவன்' என்பது இதன் பொருள். உமையம்மை 'நீலநிற மேனியன் என்பதை உணர்த்தும் **'நீலமேனி'** என்பதற்கு **'மாஅமேனி' 'மாமலர்மேனி'** என்பன வேறுபாடுகள் 'மாஅமேனி' என்பதற்குக் 'கரியமேனி' என்றும், 'மாமலர்மேனி' என்பதற்குக் 'கரிய குவளை மலர் போலும் மேனி' என்றும் பொருள். மூன்றும் பொருட் சிறப்புடையனவே. எனினும் நீலமேனி வாலிழை பாகத்து என முதற் சீரிலும் மூன்றும் சீரிலும் பொழிப்பெதுகைத் தொடைச் சிறப்பு அமைந்துள்ளமையால் **'நீலமேனி'** என்பதைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

1. 1. நடுவயலை

'மனைநடுவயலை' (11.1) என்பது வேழபபத்துப் பாடலில் அமைந்த தொடர். 'மனைக்கண் நட்ட வயலைக் கொடி' என்பது இதன் கருத்து. **'மனைநெடுவயலை'** என்பது இதன் வேறுபாடு. 'மனையில் வளரும் நீண்ட வயலைக் கொடி.' என்பது இதன் பொருள். இவற்றிடையே பொருள் மிகுதியும் வேறுபடவில்லை. எனினும் "மனைநடுவயலை மரன் இவர் கொழுங்கொடி"[1] என வரும் இலக்கியப் பயிற்சியால் **'மனைநடுவயலை'** என்பதை இங்குச் சிறந்த படமாகக் கொள்ளலாம்

1. 2. நன்றும்ஆற்றுக

'ஊரன் கொடுமை நன்றும் ஆற்றுக' (12.2-3) என்னும் தொடரில **'நன்றும் ஆற்றுக'** என்பதற்கு **'நாணி ஆற்றுக'** என்ற வேறுபாடு உள்ளது. 'நன்றும் ஆற்றுக' என்பதற்குப் 'பெரிதும் ஆற்றியிருப்போமாக' என்பது பொருள். இப்பொருளே இங்குச் சிறப்புடையது 'கொடுமை நாணி ஆற்றுக' என்பது பொருட்

1. அகம். 176

சிறப்பில்லாப் பாடம். முதற்பாடலின் இரண்டாம் அடி அமைப் போடு இவ்வேறுபாடு ஒத்துள்ளது. "கொடுமை நாணி என்றும் பாடம் உண்டு. இஃது ஏடெழுதிஞேரால் முன்பாட்டை எழுதிய நினைவினுல் நேர்ந்த பிழையாகும் போலும் என்று" ஔவை துரைசாமிப்பிள்ளை குறிப்பிடுவதும்[1] இவண் அறியத்தக்கது.

1 3. பரியுடைநன்மான்

'பரியுடை நன்மான் பொங்குளையன்ன' (13.1) என்பது அடுத்து வரும் பாடல் தொடர் **'பரியுடை நன்மான்'** என்பதற்குச் செலவினையுடைய நல்ல குதிரை என்பது பொருள். **'புரியுடை நன்மான்' 'புரிவுடைநன்மரன்'** எனவரும் இதன் வேறுபாடுகள் பொருட்சிறப்புடையன அல்ல.

1.4. துஞ்சூர் யாமம்

இப்பாடலில் 'துஞ்சூர் யாமத்தும்' (13.4) என்பது இறுதியடி. இதனை **'ஊர் துஞ்சு யாமத்தும்'** என மாற்றி **'ஊரார் துயிலும் யாமத்திலும்'** எனப் பொருள் கொள்ள வேண்டும். இதில் ஊர் என்பதை விடுத்து 'துஞ்சும் யாமத்தும்' என்று வரும் வேறுபாடு சிறவாது.

1. 5. மலிர் நிறை

'மணலாடுமலிர் நிறை விரும்பிய வொண்டழை' (15.1) என்னும் தொடரில் **'மலிர் நிறை'** என்பதற்கு **'மலர் நிறை'** என்றும் **'ஒண்டழை'** என்பதற்கு **'வெண்டழை'** என்றும் வேறுபாடு உள. 'மலிர் நிறை' என்பதற்கு 'மணலை அலைத்துக்கொண்டு வரும் நீர்ப்பெருக்கு' என்பது பொருள். 'காவிரி மலிர் நிறை'[2] என்றும் 'மலரார் மலிர் நிறை'[3] என்றும் ஐங்குறுநூற்றிலேயே இத்தொடர் பயின்றுள்ள சிறப்பாலும் 'மலர் நிறை' என்பதில் மிகுதியும் பொருள் சிறவாமையாலும் 'மலிர் நிறை' என்பதை ஏற்புடைய பாடமாகக் கொள்ளலாம்.

1. ஐங். 12, ஔவை துரைசாமிப்பிள்ளை உரை.
அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பு, (1978) ப. 46
2.. ஐங். 42
3. ஐங். 72

'ஒண்டழை' என்பது புனலாடும் மகளிர் உடுத்திய தழை யுடையைச் சுட்டும். இங்கும் **'வெண்டழை,** என்னும் பாடம் பொருட் சிறப்புடையதன்று என அறியலாம். "ஞாழன் மலரின் மகளிர் ஒண்டழை அயரும துறைவன்"[1] எனவரும் இலக்கியப் பயிற்சி இப்பாடத்தின் சிறப்பைப் புலப்படுத்தும்.

1. 6. சீக்கும்

'வேழ வெண்பூ வெள்ளுளை சீக்கும்' (19.3) என்பது பிறிதொரு பாடற்றொடர். இங்குச் **'சீக்கும்'** என்பதற்குச் **'சீய்க்கும்'** என்ற வேறுபாடு அமைந்துள்ளது. இவற்றுள் 'சீக்கும்' என்ற பாடமே ஏற்கத்தக்க சிறப்புடையது என்பதை "சீத்தல்' என்பது 'சீய்த்தல்' என வருமாறு வழக்கினுள் இன்மையாலும், நூற்றிதழ்த் தாமரைப் பூச்சினைச் சீக்கும்[2] என்புழி அன்னதொரு பாடமின்மை' யாலும் அது பாடமென்றென்க" எனவரும் ஒளவை. துரைசாமிப் பிள்ளையின் விளக்கம் தெளிவுறுத்தும்.

1. 7. பிறபாடங்கள்

இனி, ஐங்குறுநூறு மருதப் பாடல்களில் பொருளாய்வு நோக்குக்குரிய பிற பாடங்களும் அவற்றின் வேறுபாடுகளும் கீழே சுட்டப் பெற்றுள.

பாடம்	பாடல்/அடி	வேறுபாடு
பூச்சினை சீக்கும்	20.2	பூச்சினைச் சேக்கும்
இறையோர் எல்வளை	20.5	நிறையே போல்வளை
மார்புற மரீஇ	29.3	மார்புறவறீஇ
விலக்கல் தொடகிங்யோளே	42.4	விலங்கல் தொடங்கி யோளே
ஐயநின் மார்பே	44.3	ஐயன் மார்பே

1. ஐங். 147
2. ஐங். 20

ஈண்டு நீவரலே	48.3	ஈண்டு வரலே ஈண்டு வாரல்லே ஈண்டு நின்வரவே
தாமரை மலரும்	53.3	தாமரை மல்கும்
தேனூரன்ன	54.3	தேனூறென்ன
பகல் கொள்விளக்கோடு	56.1	பகல்கொல் விளக்கோடு
மகிழ்நவாற்றுற	59.1	மகிழ்நவாற்றும்
விரும்புதிநீயே	61.5	இகுமதி நீயே
நீர்நாய்	63.1	நீர்வாய்
தானேதேரொடு	66.2	தானைத்தேரொடு
யாஞ்செய்பயந்தனமே	70.5	யாஞ்சேபயந்தனை சென்மே
கதழ்பு நெறிவந்த	78.2	கதவுநெரிதந்த
வினைஞரல்கு மிசை	81.2	வினைஞர்நல்கு மிசை
நல்குதல் அரிது	86.3	நல்குதல் அறிதும்
வளமலர்ப்பொய்கை	88.1	வளர்மலர்ப்பொய்கை
பெண்டென	89.4	வேண்டென
பழனவெதிரின்	91.4	பழநல்வெதிரின்
கருங்கோட்டெருமை	92.1	அருங்கோட்டெருமை
முச்சியூதும்	93.5	முச்சூயூதும்
அணிநடையெருமை	96.1	அணிநிறவெருமை

மேலே கூறியனவற்றுள் ஆறு இடங்கள் மிகுதியும் ஆய்வுக்குரியன.

'ஈண்டு நீவரலே' (48. 5) என்பதற்கு அமைந்த வேறு பாடுகள் மூன்று. இவற்றுள் 'ஈண்டு நின்வரவே' என்ற வேறுபாடு பொருட்சிறப்பும் சந்த இனிமையும் உடையது.

'பகல்கொள் விளக்கோடு இராநாள் அறியா வெல்போர்ச் சோழர் ஆமூர்' (56. 1-2) என்பதில் **'பகல் கொள்விளக்கோடு'** என்பதற்குப் பகற் போதின் ஒளியினை உடைய விளக்கு என்பது பொருள். **'பகல்கொல் விளக்கோடு'** என்ற வேறுபாடும் இதற்கு உண்டு. பகலைத்தன் ஒளிமிகுதியால் 'மறைக்கும் விளக்கு' என்பது இதன் பொருள். இவற்றுள் 'பகல்கொள் விளக்கோடு என்பதே தெளிவும் சிறப்பும் உடைய பாடம்.

'வதுவை அயர விரும்புதி நீயே' (61. 5) என்பதில் **'விரும்புதி நீயே'** என்பதற்கு **'இகுமதிநீயே'** என்ற வேறுபாடு உண்டு, 'வதுவை அயர்தற்பொருட்டு அவர்பால் நீ விழுகின்றாய்' என்பது 'இகுமதிநீயே' என்பதன் பொருள். இவ்வேறுபாடு பொருட் சிறப் புடையதாகவும் பொருளியையுடையதாகவும் உள்ளது.

புலவுநாறு நீர்நாய் வாளை நாளிரை பெறுஉம் ஊர' (63. 1-2) என்பதற்குப் 'புலவு நாறு நீர்வாய் வாளை நாளிரை பெறுஉம்' ஊர' என்பது வேறுபாடு. இங்கு முதற்பாடமே சிறப்புடையது. "அரிற் பவர்ப் பிரம்பின் வரிப்புற நீர்நாய், வாளை நாளிரை பெறூஉம் மூரன்"[1] எனவரும் பகுதியும் நீர்நாய் வாளைமீனை நாளிரை யாகப் பெறும் செய்தியைச் சுட்டும்.

'நல்குதலரிது' (8?.3) என்பதற்கு அமைந்த **'நல்குதல் அறிதும்'** என்ற வேறுபாடு பொருட் சிறப்புடையதாக உள்ளது. பரத்தை தலைமகனுக்குக் கூறுவதாக வரும் இப்பாடலில் மகனின் விடு மாற்றம் கேட்டொழுகும் நினக்கு அவன் பாலும், அவன் தாய் பாலும் அன்பு செல்வதன்றி, எம்பால் செல்லாமை இனிது விளங்குதலை யான் அறிவேன் என்ற நயமான பொருள், வேறு பாட்டால் பெறப்படுகிறது. எனவே **'நல்குதல் அறிதும்'** என்பதைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

---

1. குறுந். 364

'கருங்கோட்டெருமை' (92. 1) என்பதற்கு 'அருங் கோட்டெருமை' என்ற வேறுபாடும் பொருட் சிறப்புடையதே. "பகையினம் நெருங்குதற்கரிய கொம்பினை உடைய எருமை என்பது இதன் பொருள்.

மேலே கண்ட ஆறு இடங்களில் நான்கு பாடங்கள் பொருட்சிறப்புடையன வாக இங்குக் குறிக்கப் பெற்றன. பட்டியலில் கண்ட பிற பாடங்களில் மூலமாக விளங்குவனவே அவற்றின் வேறுபாடுகளை விடச் சிறந்தவை.

2. நெய்தல் பகுதி

ஐங்குறுநூற்றில் இரண்டாவதாக அமைந்த நெய்தல் பகுதியில் பொருள் வேறுபாடுடைய இன்றியமையாத பாடங்கள் கீழே பட்டியலில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

பாடம்	பா/அடி	வேறுபாடு
இசைக்கும்	102.4	இரைக்கும்
திரைதருமுத்தம்	105 2	திரிதருமுத்தம்
எவன்கொல்மற்றவன்	108.4	என்னுங்கொல்லவன்
நாணிரைகொளீஇ	111.2	நாளிரைகொளீஇ
ஏதிலபற்றி	119 2	ஏதிலபெற்றி ஏதிலர்ப்பற்றி ஏதில் பற்றி
இருங்கழிநீரறல்	120.3	இருங்கழி மலரும் இருங்கழி மல்கும் இருங்கழி மலிநீர் இருங்கழி மலிரறல்
நின்றுபின்முனிவு செய்த	143.2-3	நின்றுயின்முனிவுசெய்த
பதைப்பத் ததைந்த	155.3	பறைப்பத் ததைந்த
இருங்கழி மருங்கின்	164.2	இருங்கரை மருங்கின்

பண்பும் பாயலும்	176.1	பண்பும் பாலும்
சிறுநணி வரைந்தனே	180.1	சிறுநனிவரைந்தனே
வெளவியோளே	195.4	வறுவியோளே
இறைஞ்சிநின்றோளே	197.2	ஆயத்துநின்றோளே
குறுந்துறைவினவிநின்ற	198.3	விருந்தென வினவி நின்ற
நெடுமனலேறி	199.2	நெடுவரை யேறி

2. 1. இசைக்கும்

'இன்புற இசைக்கும் அவர் **தேர்மணிக்குரலே**' (102.4) என்பதில் '**இசைக்கும்**' என்பதற்கு '**இரைக்கும்**' என்ற வேறுபாடு உள்ளது. 'பறவை ஒலி போல, தேர்மணியொலி' இசைக்கின்றது என்பது கருத்து. 'புள்ளிரைப்பன்ன பொற்றூர்ப் புரவித்தேர்'[1] என்பது சிந்தாமணி. எனவே '**இசைக்கும்**', '**இரைக்கும்**' என்பன பொருள் நிலையால் பொருந்திய பாடங்களே. இவற்றுள் **இசைக்கும்**' என்பது சந்த இனிமை உடையது.

2. 2. திரைதருமுத்தம்

'**திரைதரு முத்தம்**' (105.2) என்பதற்குத் '**திரிதரு முத்தம்**' என்ற வேறுபாடு உள்ளது. கடலில் பிறக்கும் முத்துக்களைத் திரைகள் அலைத்துக் கொணர்ந்து கரையில் சேர்த்தலால் '**திரைதருமுத்தம்**' என்றும்' கடல் ஓதத்தால் அலைப்புண்ட முத்தம் என்பதனுல் '**திரிதரு முத்தம்**' என்றும் கூறப்பட்டன என அறியலாம். "புலவுப பொருதழிந்த பூநாறு பரப்பின் இவர் திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்" என்பது அகநானூறு[2] எனவே இரு பாடங்களில் '**திரைதருமுத்தம்**' என்பதே இலக்கியப் பயிற்சியும் சிறப்பமுடையது என அறியலாம்.

1. சீவக. 768
2. அகம். 130

2. 3. எவன்கொல்

'எவன் கொல் மற்றவன்' (108.4) என்பதற்கு **'என்னுங் கொல்லவன்'** என்ற வேறுபாடு உள்ளது **'எவன் கொல் மற்றவன்'** என்பதில் எவன் என்பது வினுப்பெயர், கொல், மற்று என்பன அசை நிலைகள். 'எவன் கொல் மற்றவன் நயந்த தோளே' (108.4) என்ற முழுத் தொடரில் பொருட் சிறப்பு உடைமை **'எவன் கொல் மற்றவன்'** என்ற பாடத்திற்கே உள்ளது.

2. 4. நாணிரை

'சூழ் கழி மருங்கின் நாணிரை கொளீஇச் சினைக்கயல் மாய்க்கும் துறைவன்' (111. 2-3) என்பதற்குச் 'சூழ்ந்த கழி யிடத்தில் தூண்டில் கயிற்றில் இரைகொள்வித்து சினையுடைய கயல் மீன்களைப் பிடிக்கும் துறையையுடையவன்' என்பது கருத்து. இங்கு **'நாணிரை கொளீஇ'** என்பதற்கு 'நாளிரைகொளீஇ' என்பது பாடம். இதற்குப் பாணன் நாட்காலையில் உணவுண்டு கழியின்கண் சினைக் கயலைப்பிடிக்கும் துறையை உடையவன் என்பது பொருள். முதற் பாடமே தொழிற் சிறப்பை விளக்குவ தாகவும், உள்ளுறைப்பொருள் சிறப்பதற்கு இடம் தருவதாகவும் உள்ளது.

2. 5. ஏதிலபற்றி

'ஏதிலபற்றி' (119.2) என்பது அதற்கு அமைந்த மூன்று வேறுபாடுகளைவிடப் பொருட் சிறப்புடையது. தான் விரும்பும் களவொழுக்கமே விரும்பி அதனை நீட்டித்து ஒழுகுகின்றான் என்பதை **'ஏதிலபற்றி'** என்னும் பாடம் விளக்குகிறது.

2. 6. இருங்கழிநீரறல்

'இருங்கழி நீரறல்' (120.3) என்பதற்கு அமைந்த வேறுபாடுகள் நான்கனுள்ளும் **'இருங்கழி மலிநீர்'** என்ற வேறுபாடு பொருட் சிறப்புடையதாக உள்ளது. 'மல்லல் இருங்கழி மலிநீர் விரியும் மெல்லம் புலம்பன்' (120 3-4) என்பதற்கு 'வளவிய பெரிய

கழியின்கண் நீர்மிக்குப் பரவும் நெய்தற் புலங்களையுடைய தலைவன்' என்பது பொருள். இப்பொருட் சிறப்பு, பிற பாடங்களில் இல்லை.

2. 7. நின்றுபின்

'**நின்று பின் முனிவு செய்த**' (143.2-3) என்ற பாடத்திற்கு '**நின்றுயின் முனிவு செய்த**' என்ற வேறுபாடு உள்ளது. இவ்வேறுபாடு பொருட்சிறப்புடன் திகழ்கிறது. 'இவள் தோள்கள் கூட்டத்திப்போது இனியன செய்து மார்பிடை உறங்கும் துயிலின்கண் தலைவன் புறத்துத் தங்கியமையால் முனிவினைப் பயப்பன' என்பது 'நின்றுயின் முனிவு செய்த' என்ற பாடத்தால் சுட்டப்பெறும் கருத்து. கூடிய இடத்தில் இனிமையைச் செய்த நின் நன்றியைத் தலைவி மறவாளாயினும் அவள் தோள் அந்நன்றியைக் கொன்று நின் துயிலை முனிவு செய்தன எனத் தலைவனின் புறத்தொழுக்கம் தோன்ற உணர்வுடையதுபோல் தோள்மேலேற்றிக் கூறியநயம் '**நின்றுயின் முனிவுசெய்த**' என்ற பாடத்துக்கு அமைந்துள்ளதால் இதனைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்

2 8. பதைப்பத் ததைந்த

'நாரை பதைப்பத் ததைந்த' (155 3) என்பதற்கு 'நாரை சிறகடித்து அசைதலால் நெருங்கிய' என்பது பொருள். இதற்குப் '**பறைப்பத் ததைந்த**' என்றும் வேறுபாடு உண்டு. பதைப்ப என்பது சிறகடித்து அசைதலால் என்னும் பொருளைச் சுட்டுவது. பறைப்ப என்பதற்கு விதிர்தலால் என்பது பொருள். 'மடநடை நாரை பதைப்பத் ததைந்த நெய்தல்' (155.2-3) என்ற முழு நிலையில் வைத்துக் காணுங்கால் இரண்டு பாடங்களுமே பொருட் சிறப்புடையனவாக அமைந்துள என்பது குறிப்பிடத்தக்கது.

2. 9. இருங்கழி

'சிறுவெண் காக்கை இருங்கழி மருங்கின் அயிரையாரும்' (164.1-2) என்ற தொடருக்குச் சிறுவெண் காக்கை பெரிய கழிக்கண் இருந்து அயிரை மீன்களை உண்ணும் என்பது பொருள்.

பெரியகழியிடத்து உறையும் காக்கை சிறிய அயிரை மீனை உண்ணும் என்பதற்கேற்ப, பெருமனைக்கண் இருந்து நல்லறம் புரியும் தலைவன் சிற்றினமாகிய பரத்தையரை நுகர்ந்து வாழ்கிறான் என உள்ளுறையும் இங்குச் சிறந்துள்ளது **'இருங்கழி மருங்கின்'** என்பதற்குப் பாடமாயமைந்த **'இருங்கரை மருங்கின்'** என்பதில் இத்துணைப் பொருட் சிறப்பு இல்லை.

2. 10. பாயலும்

'பண்பும் பாயலும்' (176.1) என்பதற்குப் 'பண்பும் பாலும்' என்ற வேறுபாடு உள்ளது. வேறுபாட்டில் பொருள் மாற்றம் இருப்பினும் சிறப்பில்லை. மேலும் 'பாயலும்' என்பதில் யகரம் விடுபட்டமையால் **'பாலும்'** என்ற பாடம் எழுந்ததாகக் கொள்ளவும் இடமுண்டு.

2. 11. சிறுநணி

'சிறுநணி வரைந்தனை' (180.1) என்பதற்கு **'இறுநணி** வரைந்தனை' என்பது வேறுபாடு. 'சிறுநணி வரைந்தனை' என்ற வேறுபாடு இங்குப் பொருட் சிறப்புடையதாக உள்ளது. 'சிறுநணி' என்பதற்கு மிகக் குறுகிய போது என்பது பொருள். 'இவளைக் குறுகிய போதுக்குள் வரைந்து நுகர்க' எனத் தோழி கடிது வரைய வேண்டும் எனத் தலைவனுக்கு அறிவுறுத்தும் செய்தி இங்கு இடம் பெற்றுள்ளது. 'நின் அணிமான் சிறுபுறம் காண்கம் சிறுநணி ஏகென ஏகல் நாணி'[1] எனச் சான்றோர் செய்யுளகத்துப் பயிற்சியாலும் **'சிறுநணி'** என்ற பாடத்தைச் சிறந்ததாகக் கொள்ளலாம்.

2. 12. வெளவியோளே

'பாயல் **வெளவியோளே'** (195.4) என்பதற்குப் 'பாயல் **வறுவியோளே'** என்ற வேறுபாடு உள்ளது. துயிலைக் கவர்ந்து கொண்டாள் என்பது 'பாயல் **வெளவி'** யோளே என்பதற்குப்

1. அகம். 261.

பொருள். 'பாயல் வறுவியோளே' என்பதற்குத் துயிலை இல்லை யாக்கினுள் என்பது பொருள். இவ்விரண்டனுள் 'பாயல் **வெளவி யோளே'** என்ற பாடம் பொருட் சிறப்பும் நயமும் உடையது.

2. 13. இறைஞ்சி நின்றேளே

'இறைஞ்சி நின்றேளே' (197.2) என்பதற்கு **'ஆயத்து** நின்றேளே' என்ற வேறுபாடு உள்ளது. வளைகள் ஒலிக்க, அலவனைக் காலால் அலைத்து முகத்தை மறைக்கும் கூந்தலை உடையாளாய்த் தலைகுனிந்து நின்றுள் என்பது இறைஞ்சி நின்றேளே என்ற பாடங் கொண்டால் கிடைக்கும் பொருள். தலைமகன் இடந்தலைப் பாட்டின்கண் தலைவியது நிலைமை கண்டு சொல்லிய துறைக்கு உரியது இப்பாடல். எனவே **'ஆயத்து நின்றேளே'** என்னும் பாடத்தைவிட **'இறைஞ்சி நின்றேளே'** என்பது சிறப்புடையதாகத் திகழ்கிறது.

2. 14. விருந்தென

'குறுந்துறை வினவி நின்ற' (198.3) என்பதற்கு 'இளமகளிராடும் குறுந்துறை யாண்டுளது என வினவி நின்ற' என்பது பொருள். இது களவுக் காலத்து நிகழ்ந்த செய்தியைக் கூறும் சிறப்பினது. எனவே இங்கு **'விருந்தென வினவி நின்ற'** என்ற பாடம் பொருந்தாமை அறியலாம்.

2 15. நெடுமணல்

'நெடுமணலேறி' (199.2) என்பது 'உயர்ந்த நெடிய மணல் திடர் மேல் ஏறி' என்னும் பொருளினது. 'கானலம் பெருந்துறை (199.1) என்பதற்கேற்ப **'நெடுமணலேறி'** என்ற பாடம் பொருத்த மாக உள்ளது. நெய்தல் நிலமாதலின் இங்கு **'நெடுவரையேறி'** என்ற பாடம் பொருந்தாமல் அமைந்திருப்பது வெள்ளிடைமலை. **'நெடுவரையேறி'** எனவரும் வேறுபாடு அத்துணைப் பொருட் சிறப்புடையதன்று என்பது பெறப்படும்.

ஐங்குறு நூற்றில் நெய்தல் பகுதியில் பட்டியலில் கண்ட பொருட் சிறப்புடைய 15 இடங்களில் 12 பாடங்கள் உ.வே. சாமிநாதையர் பதிப்பிலுள்ளவற்றையும், 3 பாடங்கள் வேறு பாடுகளாய் உள்ளவற்றையுங் கொள்ளல் வேண்டும் என இப் பகுதியில் உரைக்கப்பட்டது.

3. குறிஞ்சிப்பகுதி

குறிஞ்சிப் பகுதியில் பொருட் சிறப்புடையவையாய் அமைந்த பாடங்களும் வேறுபாடுகளும் கீழே பட்டியலில் தொகுத்துத் தரப் பட்டுள்ளன.

பாடம்	பாடல்/அடி	வேறுபாடு
தானுமலைந்தான்	201.2	தரினுமலைந்தான்
தலைகிழவோர்க்கே	204.5	மலைகிழவோற்கே
மாரிக்குளத்து	206.2	மாரிக்குன்றத்து
மறுத்தல்	209.2	மறத்தல்
உழுந்துநூற்றன்ன	211·1	உழுந்துதூற்றன்ன
வளையுஞ்செறூஉம்	218.2	விளையுஞ்செற்றும்
ஏதிலாளனை	232.2	ஏதிலாபிடியை
எய்யாது விடுதலோ	242.3	அறியாது/விடுதலோ
கெடுதலானுது	258.5	இன்னுமாருது
அதுவேமன்ற	261.4	அதுவேதெய்ய
வளமலைச்சிறுதினை	268.2	வளமலிசிறுதினை வளமலைசிறுதினை
உணீஇக்கானவர்	268.2	உணீஇய்கானவர் உணீஇ யுறங்கும் உணீஇய வுயங்கும்
தலைவிளை	270.2	தலைவிதை

கழைக்கோல்	278.1	கணைக்கோல் கணைக்கோல்
கல்லாவன் பார்ப்பு	280.1	கல்லாஇளம்பார்ப்பு
உன்னு நாட	282.2	உண்ணு நாட
புகரின்று நயந்தனன்	286.4	புகரின்றுய்ந்தனன்
எந்தை வாழியர்	294.3	நுந்தைவாழியர்
பிரிவதன்றே	297.3	பிரியாயன்றே

3. 1. தானுமலைந்தான்

'தானுமலைந்தான் எமக்குந் தழையாயின' (201.2) என்பது பாடற்றொடர். தலைவன் பூத்தரு புணர்ச்சி கொண்டதும் தலைவிக்குத் தழை உதவியதும் இத்தொடரால் சுட்டப்படுகிறது. **தானுமலைந்தான்**' என்பதற்குத் **'தரினுமலைந்தான்'** எனவரும் வேறுபாடு பொருட் சிறப்புடையதன்று.

3. 2. கிழவோற்கே

அடுத்து 'தீயேன்றில்ல மலைகிழவோர்க்கே' (204.5) என்னும் பாடல் தொடரில் **'மலைகிழவோர்க்கே**' என்னும் பன்மைத் தொடர் பொருத்தமற்றது. இங்கு **'மலைகிழவோற்கே** என ஒருமைத் தொடராக வரும் வேறுபாடே ஏற்புடையது.

3. 3. மாரிக்குளத்து

'மாரிக் குன்றத்துக் காப்பாளன்னன்' (206.2) என்பது பிறிதொரு பாடற்றொடர். மழையால் நனைந்த குன்றம் போலும் தோற்றத்தையுடைய காப்பாள் என்பது இதன் பொருள். **'மாரிக் குன்றத்து**' என்பதற்கு **'மாரிக்குளத்து'** என்று வேறுபாடு உண்டு. 'மழை பெய்ய நிறைந்த குளத்தின் கரைக்கண் நின்ற காவலாளனை ஒப்பான்' என்பது இதற்குப் பொருள். இரண்டும் தலைவனைச் சுட்டப் பயன்படும் உவமைத் தொடர்கள். "தொழின் மழை பொழிந்த பானாட்கங்குல், எறிதிரைத்திவலை தூஉஞ் சிறுகோட்டுப்

பெருங்குளக் காவலன் போல''[1] எனப்பிற இலக்கியங்களிலும் இத்தகைய உவமை பயிற்சி பெற்றுளதைக் காணலாம். குன்றத்துக்குக் காப்பு வேண்டுவதில்லை. குளத்துக்கே காப்பாள் தேவை. எனவே, **'மாரிக்குளத்துக் காப்பாளன்னன்'** என்பதைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

3. 4. மறத்தல்

'மறுத்தல் வேண்டுதியாயின்' (209.2) என்பது பிறிதொரு பாடல் தொடர். இதற்குத் 'தலைவன் வரின் யான் அவரைக் கொள்ளாது மறுத்தல் வேண்டும் என நீ கூறின்' என்பது பொருள். 'அவரை மறுக்க இயலாதவாறு அவரைப்பூவைப் போன்ற முகில்கள் தவழும் அவர்நாட்டு மணிநெடுங் குன்றம் என்முன் தோன்றுகிறது என்றும் தொடர்ந்த தலைவி தன் இயலாமையைக் கூறுகின்ருள். இங்கு **'மறுத்தல்'** என்பதற்குப் பதிலாக **'மறத்தல்'** என்ற வேறு பாட்டைப் பாடமாகக் கொள்வது சிறப்புடையதாக உள்ளது.

3. 5. நூற்றன்ன

உழுந்து நூற்றன்ன (211.1) என்பதற்கு **உழுந்து தூற்றன்ன** என்ற வேறுபாடு உள்ளது. உழுத்தின் நூறு என்பது உழுந்தின் காயை உலர்த்தித் துவைத்து எடுத்து நூறப்பட்டது. உழுந்து மணியினை நெய்பெய்துமயக்கிய வழி நிறமும் ஒளியும் பெறும். வயலை படர்ந்த நிலம் நெய்யொடு மயக்கிய உழுந்தினைப் பரப்பியது போல் தோன்றுகிறது. ஆதலின் நெய்யொடு மயக்கிய உழுந்து நூற்றன்ன என்று கூறப்பட்டுள்ளது. இங்கு உழுந்து தூற்றன்ன என்பது பொருட் சிறப்பில்லாப் பாடம். உழுந்து தூற்றன்ன என்பதற்கு உழுந்தினது தூறுகள் போன்ற வயலைக் கொடிகளின் தூறுகள் நிறைந்த மலை என்பது பொருள்.

3. 6. வளையும்

'மயிர்வார் முன்கை வளையுஞ் செறூஉம்' (218.2) என்பதற்கு மயிர் ஒழுகிய முன்கையில் அணிந்த வளைகள் நெகிழாது செறி

1. அகம் 2֊2.

தலினால் என்பது பொருள். இங்கு **'வளையுஞ் செறாஉம்'** என்பதற்கு **'விளையுஞ் செற்றும்'** என்ற வேறுபாடு உள்ளது, இவ்வேறுபாடு பொருட் சிறப்புடையதன்று.

3. 7. ஏதிலாட்டி

'ஏதிலாளனை' (232.2) என்பதற்கு **'ஏதிலாட்டியை'** என்ற வேறுபாடு உள்ளது. போதார் கூந்தல் இயலணியழுங்க ஏதிலாளனை நீ பிரிந்ததற்கே'' என்பது பாடல் தொடர். இங்கு ஏதிலாளனாகிய நீ எனப்பொருள் கொள்ள வேண்டும்! இங்கு 'ஏதிலாட்டியை' என்பதைப் பாடமாகக் கொண்டால் 'பூக்கள்' நிறைந்த கூந்தலை யுடையாளின் இயலும் அணியும் வருந்த ஏதிலாட்டியை நீபிரிந்ததன் பொருட்டு' என்பது பொருளாக அமையும். இது பொருத்தமுடை யதாக உள்ளது. எனவே **'ஏதிலாளனை'** என்பதை விடுத்து **'ஏதிலாட்டியை'** என்பதைப் பாடமாகக் கொள்ளலாம்.

3. 8. எய்யாது

'எய்யாது விடுதலோ கொடிதே' (242.3) என்பது தோழி கூற்றாக வரும் பாடலொன்றில் பயின்ற தொடர் **'எய்யாது விடுதலோ'** என்பதற்கு **'அறியாது விடுதலோ'** என்ற வேறுபாடு உள்ளது. களவொழுக்கத்தால் வந்த நோயை அன்னை அறியா தொழிதல் நன்றன்று ஆகலின் அதனை அறிவித்தல் வேண்டும் என்பது இங்குச் சுட்டப்பெறும் கருத்து. எய்யாமையே அறியாமையே'[1] என்பது தொல்காப்பிய நுற்பா. அறியாது விடுதலோ என வருவதில் பொருள் வேறுபாடு இல்லை. எனவே பழமைச் சிறப் புடைய **'எய்யாது விடுதலோ'** என்ற பாடத்தையே இங்குச் சிறந்ததாகக் கொள்ளலாம்.

3. 9. கெடுதலானது

'கெடுதலானது நன்னுதறுயரே' (258.5) என வரும் பாடல் தொடருக்கு நன்னுதலையுடைய இவள் துயர் கெடாது மிகும்' என்பது பொருள். வரைவு நீட்டித்தலால் தலைவியின் துயர்

1. தொ. சொ. நூ. 342

கெடாது மிகும் என்பது கருத்து. இங்கு **'இன்னுமாருது நன்னுதல் துயரே'** என்று வேறுபாடு உள்ளது. 'தலைமகன் வரைவு வேண்டி விட்டமை கண்ட பின்னும் துயர் நீங்காதாயிற்று' என்பது இதன் பொருள்.

"பெருவரை நாடன் வரையு மாயின்
கொடுத்தனெ மாயினோ நன்றே"

என்பது இத்தொடரின் முன்னைமந்த பகுதி. எனவே இப்பகுதிக்கு இயைபுடைய வகையில் **'கெடுதலானது'** என்ற பாடமே பொருட் சிறப்புடையதாய் உள்ளது என அறியலாம்.

3. 10 அதுவே தெய்ய

அதுவே மன்ற வாராமையே' (261.4) என்பதற்கு 'அதுவே தெய்ய வாராமையே' என்ற வேறுபாடு அமைந்துள்ளது. அல்லகுறிப்பட்டுத் தலைவன் நீங்கினன் என்பதனை அறிந்து வைத்தும் அறியாதாள் போன்று வரைவு கடாவும் கருத்தினளாய்க் கூறுவதை வெளிப்படுத்தும் வகையில் **'அதுவே தெய்ய'** என்ற பாடம் அமைந்துள்ளது. தலைவன் வாராமைக்கு ஏது அச்சம் எனத் தோழி கூறுவது படைத்து மொழிதலேயாகும்' உண்மையன்று 'அவவே மன்ற' என்ற பாடமும் பொருட் சிறப்புடையதே. இன்னதுகாரணம் என உறுதி செய்யும் பொருண்மைச் சிறப்பு இப்பாடத்தில் உள்ளது. எனவே **'அதுவே மன்ற' 'அதுவே தெய்ய'** என்ற இரு பாடங்களும் பொருட் சிறப்புடையனவாய் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

3.11. பிறபாடங்கள்

'வளமலைச் சிறுதினை' (268.2 'உணீஇக் கானவர்' (268.2) 'தலை விளை' (270.2) 'கழைக்கோல்' (278.1) என்பன அவற்றுக்கு அமைந்த வேறு பாடுகளைவிடப் பொருட் சிறப்புடையவை.

'கல்லாவன்பார்ப்பு' (280.1) என்பதனை விட அதற்கு வேறுபாடாய் அமைந்த 'கல்லா இளம் பார்ப்பு' என்பது பொருளியையுடையது. பெரிய மூங்கிலின் கழைமேலேறிச்

சிறுகோலைக்கொண்டு மதியத்தைப் புடைப்பது போலும் தோற்றத்தைக் கொண்டதாக மந்திக்குட்டி விளங்குகின்றது என்பதால் அதன் இளமைத் தன்மை மேலும் சிறப்பாக விளங்கும் வகையில் **'கல்லா இளம் பார்ப்பு'** என்ற பாடம் சிறப்புடையதாக உள்ளது அறியலாம்.

'சோலைச் சிறுகிளி **உன்னுநாட'** (282.3) என்பதைவிடச் 'சோலைச் சிறுகிளி **உண்ணுநாட'** என்பது சிறப்புடைய பாடம். கொடிச்சிகடியவும், பெருங்குரல் சிறுதினையைச் சோலைச்சிறுகிளி உண்ணும்' என்பது சிறப்புடையது. எனவே **'உண்ணுநாட'** என்பதைப் பொருந்திய பாடமாக ஏற்கலாம்.

'புகரின்று நயந்தனன்' (286.4) 'எந்தை வாழியர்' (294.3) 'பிரிவதன்றே' (297.3) என்பன அவற்றின் வேறுபாடுகளைவிடப் பொருட் சிறப்பும் பொருத்தமும் உடைய பாடங்கள்

ஐங்குறுநூறு-குறிஞ்சிப் பகுதியில் இன்றியமையாத பொருட் சிறப்புடைய 19 இடங்களில் டாக்டர் உ. வே. சாமிநாதையர் பதிப்பில் அமைந்தவற்றுள் 13 பாடங்களும், பிற 6 பாடங்களும் சிறப்புடையனவாக இங்கு நிறுவப்பட்டுள்ளன.

4. பாலைப்பகுதி

பாலைப்பகுதியில் அமைந்த இன்றியமையாத பொருள் வேறுபாடுடைய பாடங்களும் அவற்றின் வேறுபாடுகளும் கீழே குறிப்பிடப்பெற்றுள்ளன.

பாடம்	பாடல்/அடி	வேறுபாடு
தப்பற்குழூரித்தே	302.1	தப்பற்குழூரியள்
போகிறனைத்தடுக்கும்	303.2	போகினினித் தடுக்கும் போகிறடுக்கும்
புலம்படராது	305.1	புலம்படர்ந்து
சுடர்த்தொடி	305.3	சுடக்கொடி, சுடர்தொடி

நீளிடை அருஞ்சுரம்	314.4	நீரிடை அருஞ்சுரம்
நீடிய பொருளே	317.4	நீட்டிய பொருளே, ஈட்டிய பொருளே
காடிறந்தேற்கே	328.4	காடிறந்தோற்கே
வைகுசினைவான்பூ	331.2	வெஞ்சினைவான்பூ
மாக்கணம்	332.3	மான்கணம்
காதலவர் சென்ற	339.4	தோழியவர் சென்ற, காதலர் சென்ற
அருந்தினர் கழியும்	351.2	அருத்தினர் கழியும் வருந்தினர் கழியும்
உயர்கரைக்கான்யாற்று	361.1	உயரறற் கான்யாற்று
இவளுயிரே	367.5	இவள்கவினே
நீநயந்துறைய	370.3	நீ நயந்துலைய
போகிய சுரனே	371.1	போகியகானே
அசைநடை	384.1	விரைநடை
பழிக்குமணிகண்ணுட்டி	393.2	பழிக்குமுன்கணுட்டி பழிக்கும்அண்கணுட்டி
அருளிற்று மன்ற	394.2	அருளின்று மன்ற

4. 1. தப்பற்கு முரித்தே

'தப்பற்குமுரித்தே' (302.1) என்ற தொடருக்குத் **'தப்பற்கு முரியள்'** என்ற வேறுபாடு உள்ளது.

> "அரும் பொருள் செய்வினை தப்பற்கு முரித்தே
> பெருந்தோ ளரிவை தகைத்தற்கு முரியள்" (302.1-2)

எனவரும் பகுதியைக் காணுங்கால் செய்வினை என்ற எழுவாய்க்குத் 'தப்பற்கு முரித்தே' என்பது பொருந்திய வினை என்பது அறியப்படும். **'தகைத்தற்கும் உரியள்'** என்ற இரண்டாம் அடியில் பயின்ற சொல்லின் தாக்கம் முதலடியிலும் **'தப்பற்கு முரியள்'** என்ற பாடத்தைத் தோற்றுவித்திருக்கலாம்.

4. 2. போகிறடுக்கும்

'போகிறனைத்தடுக்கும்' (303.2) என்பதற்குப் **'போகினினித் தடுக்கும்' 'போகிறடுக்கும்'** என்ற வேறுபாடுகள் உள. இவற்றில் **'போகிறடுக்கும்'** என்பதே பொருந்திய பாடம். பிற இரண்டும் சொற்சிதைவுற்ற பாடங்கள்.

4. 3. புலம்படர்ந்து

'புலம்படராது' (305.1) என்பதற்குப் **'புலம் படர்ந்து'** என்ற வேறுபாடு உள்ளது. 'களிறுபிடிதழீஇப் பிறபுலம் படராது பசிதின வருந்தும் பைதறு குன்றம்' என்பது பாடற்றொடர். களிறு தன் பிடியைத் தழுவி வெப்பம் மிகுதலால் பிற இடங்களுக்குச் செல்லாமல் பசிப்பிணியால் வருந்தும் குன்றம் என்பது இதன் பொருள். வெப்ப மிகுதியால் பிற புலம்படராது என்றும், வெப்ப மிகுதியால் பிடி உடன்வரமாட்டாமையால், அதனைத் தனித்து விடுத்துச் சேறற்கு அஞ்சிப் பிற புலம் படராது எனப் பொருள் சிறப்பது **'பிறபுலம்படராது'** என்ற பாடத்தினால்தான். எனவே **'புலம்படர்ந்து'** என்ற பாடம் இங்குச் சிறப்புடையதன்று.

4. 4. நீளிடை

'சுடர்த்தொடி' (305.3) என்பதற்குச் **'சுடர்க்கொடி'** என்றும் **'சுடர்தொடி'** என்றும் வேறுபாடுகள் உள. இவற்றுள் **'சுடர் தொடி'** என்ற பாடமே சிறப்புடையது. **'நீளிடை அருஞ்சுரம்'** (314.4) என்பதற்கு **'நீரிடை** அருஞ்சுரம்' எனவரும் பாடமும் பொருள் சிறப்புடையதன்று. 'நீளிடை அருஞ்சுரம்' என்பதற்கு 'நீண்ட இடத்தினையுடைய கடத்தற்கரிய காடு' என்பது பொருள். 'நீளிடை ஆட்கொள்யானை அதர் பார்த்தல்குடும்'[1] எனவரும் இலக்கியப் பயிற்சியாலும் **'நீளிடை அருஞ்சுரம்'** என்ற பாடமே இங்குக் கொள்ளத்தக்கது என்பது புலனாகும்.

4. 5. நீடிய பொருளே

'நீடிய பொருளே' (317.4) என்பதற்கு இரு வேறுபாடுகள் உள. 'சென்ற நெஞ்சம் நீடிய பொருளே' என்ற இப்பாடம்

---

1. அகம் 325

பயின்ற தொடருக்குத் 'தூது சென்ற என் நெஞ்சம் விரைய வாராது நீட்டித்தலின் பொருள் தெரிந்திலது' என்பது பொருள். தலைவி தோழிக்குக் கூறுவதாக அமைந்த இப்பாடலில் **'நீடிய பொருளே'** என்பதே பிற வேறுபாடுகளைவிடப் பொருட் சிறப்புடைய பாடம்.

4. 6. பிறபாடங்கள்

'காடிறந்தேற்கே' (328 4) **'வைகுசினை வான்பூ'** (331.2) **'மாக்கணம்'** (332.3) என்பன அவற்றின் வேறுபாடுகளைவிட பொருட் சிறப்பும் பொருத்தமும் உடைய பாடங்கள்.

'காதலவர் சென்ற நாட்டே' (339.4) என்பதற்குத் **'தோழியவர்** சென்ற நாட்டே' எனவரும் பாடம் பொருட் சிறப்பும் இயைபும் உடையதன்று. **'காதலர்** சென்ற நாட்டே' எனவரும் வேறுபாடு 'காதலவர் சென்ற நாட்டே' என்பதைவிடச் சந்த இனிமை வாய்ந்தது. எனவே **'காதலர் சென்ற நாட்டே'** என்பதை இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

'அருந்தினர் கழியும்' (351.2) என்பதற்கு 'அருத்தினர் கழியும்' 'வருந்தினர் கழியும்' என்பன வேறுபாடுகள். இவற்றுள் **'அருந்தினர் கழியும்'** என்பதே சிறப்புடையது. சுரத்தின் கண் செல்வோர் அருந்தி நீங்கும் காடுகள் என்னும் கருத்து இங்குச் சுட்டப் பெற்றது.

'உயர்கரைக் கான்யாற்று, (361.1) 'இவளுயிரே' (367.5) 'நீ நயந்துறைய' (370.3) 'போகிய சுரனே' (371.1) என்பன அவற்றிற்கமைந்த வேறுபாடுகளைவிடப் பொருட் சிறப்புடைய பாடங்கள்.

'சேட்புல முன்னிய அசைநடை அந்தணிர் (384.1) என்பதில் **அசைநடை'** என்பதற்கு 'விரைநடை' என்ற வேறுபாடு உள்ளது. 'சேட்புல முன்னிய என்பதற்குச் சேய்த்தாய நிலத்தை அடைந்த' என்பது பொருள். 'தொலைதூரம்' என்ற குறிப்பால் 'விரைநடை' என்பதற்குப் பதிலாக **'அசைநடை'** என்ற பாடத்தை

இங்குப் பொருந்தியதாகக் கொள்ளலாம். தொலைதூரம் நடந்தமையால் அவர் அசை நடையுடையராய் இருந்தனர் எனக் குறிப்பிடப் பெறுதல் பொருந்துவதாகும். 'குடையார் நிழல் உறிசேர் கரகத்தொடு குன்றிடத்து நடையான் மெலிந்து வருகின்ற அந்தணிர்[1] எனவரும் இலக்கியப் பயிற்சியும் இப்பாடமே சிறப்புடையது என்பதைச் சுட்டிற்று.

'பழிக்குமளை கண்ணுட்டி' (393.2) 'அருளிற்று மன்ற' (394.2) என்பன அவற்றின் வேறுபாடுகளைவிடப் பொருட்சிறப்புடையவை.

இங்ஙனம் பாலைப் பகுதியில் பொருள் வேறுபாட்டுடன் இன்றியமையாத 18 இடங்களில் 15 இடங்களில் பழைய பாடங்களும் 3 இடங்களில் பின்னர் அமைந்தனவாகக் கருதப்பெறும் 3 வேறுபாடுகளும் சிறப்புடையனவாகக் காட்டப் பெற்றுள்ளன.

5. முல்லைப் பகுதி

முல்லைப் பகுதியில் வரும் பொருள் வேறுபாடுடைய பாட வேறுபாடுகள் சில இங்கு ஆராயப்பெற்றுள்ளன.

5, 1. அழுமினி முலைக்கே

'காதலம் புதல்வன் அழுமினி முலைக்கே' (424.4) என்பதில் '**அழுமினி முலைக்கே**' என்பதற்கு '**அழுமணி முலைக்கே**' என்ற வேறுபாடு உள்ளது. 'நீ பிரிந்தால் நின் மனையாள் உயிர் வாழாது ஒழிவாளாதலால் தாய்ப்பாலின்றிக் குழந்தை இனி அழும்' என்ற கருத்துஇங்குச் சுட்டப்பெற்றது. '**அழுமணி முலைக்கே**' என்பதில் மிகுதியும் பொருள் வேறுபாடு இல்லையெனினும் **இனி** என்ற எதிர்காலக் குறிப்பு வேறுபாட்டில் இல்லை. எனவே '**அழுமினி முலைக்கே**' என்ற பாடத்தைச் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

5. 2. சுடுபொன்னன்ன

'சுடுபொன்னன்ன கொன்றை சூடி' (432.2) என்பது உவமைத்தொடர் '**சுடுபொன்னன்ன**' என்பதற்குக் '**கடும் பொன்னன்ன**' என்ற வேறுபாடு உள்ளது. கொன்றையின் புதுப்பூ

1. இறை. உரை. நூ. 23. மேற்கோள்

பொன்னின் நிறமும் ஒளியும் ஒருங்கு அமையப் பெற்றது. சுடுபொன் ஒளியும் நிறமும் சிறப்புடையதாக விளங்குதல் இயல்பு. எனவே **'சுடுபொன்னன்ன'** என்ற பாடமே இங்குப் பொருட் சிறப்பும் பொருத்தமும் உடையதாம்.

5, 3. தவிர்தல் யாவது

''தவிர்தல் யாவது' (451.2) என்பதற்குத் **'தகுதல் யாவது'** **'தவிர்குதல் யாவது'** என்பன வேறுபாடுகள். இவற்றுள் **'தவிர்தல் யாவது'** பொருள் பொருத்தமுடையது. **'தகுதல் யாவது'** என்பதில் பொருளியைபு இல்லை.

5. 4. பிற பாடங்கள்

'பீரமிரும்புதல்' (464.2) பிறிது நினைந்து' (478.2) என்பன அவற்றிற்கமைந்த வேறுபாடுகளை விடப் பொருட்சிறப்புடைய பாடங்கள்.

'சென்னிலம்' (495.1) என்பதற்குச் **'செங்நிலம்'** என்ற வேறுபாடு உள்ளது. இதனை ஒலி ஒப்புமையால் நிகழ்ந்த வேறுபாடாகவும் கொள்ளலாம். சென்னிலம் என்பதற்குப் 'பிரிந்து சென்ற நிலம்' என்பது பொருள். இப்பொருளுடைய பாடமே பாடற்பொருளோடு இயைபுடையதாக உள்ளது. **'செங்நிலம்** என்பது பொருந்தாது,

'வரகு இணர் சிறப்ப' (496.1) என்பதற்குச் **'சேர அரசிறை'** என்ற வேறுபாடு உள்ளது. 'வரகுகள் பூங்கொத்து எடுத்துத் திகழவும்', என்பது முதற் பாடத்தின் பொருள். இதன் வேறுபாடு பொருளியையின்றிச் சிதைவாக உள்ளது. வரகு கார்காலத்து மலர்ந்து விளையும் சிறப்புடையது.

''செவ்விகொள் வரகின் செஞ்சுவற் கலித்த
கௌவை நாற்றின் காரிருள் ஓரிலை
நவ்வி நாண்மறிக் கவ்விக் கடன்கழிக்கும்
காரெதிர் தண் புனம்''[1]

---

1. குறுந். 282.

என இவ்வியல்பு இலக்கியங்களில் சுட்டப் பெறுவதையும் அறியலாம்.

முல்லைப்பகுதியில் 7 பாடங்களும் அவற்றின் வேறுபாடுகளும் ஆராயப்பட்டு முந்தைய பாடங்களே அனைத்திடத்தும் சிறப்புடையனவாய் உள்ளன என விளக்கப்பட்டது.

ஐங்குறு நூற்றில் இன்றியமையாத பொருட் சிறப்புடையனவாக அமைந்த பாடங்களும், அவற்றின் வேறுபாடுகளும், அவற்றுள் சிறந்தனவாக நிறுவப்படும் பாடங்கள், பிற வேறுபாடுகளின் எண்ணிக்கை ஆகியனவும் கீழே பட்டியலில் விரிவாகத் தரப்பெற்றுள்ளன.

பகுதி	பாடம் வேறுபடும் இடங்கள்	இன்றியமையாத பொருள் வேறுபாடு உடையவை	நிறுவப்பட்ட பாடங்களில் அடிப்படைப் பாடங்கள்	நிறுவப்பட்ட பாடங்களில் புதிய வேறுபாடுகள்
கடவுள் வாழ்த்து	1	1	1	-
மருதம்	83	30	26	4
நெய்தல்	86	15	12	3
குறிஞ்சி	127	18	12	6
பாலை	116	18	15	3
முல்லை	47	7	7	-
கூடுதல்	460	89	73	16

எனவே ஐங்குறுநூற்றில் பாடம் வேறுபடும் மொத்தமுள்ள 460 இடங்களில் 89 இடங்கள் மிகுதியும் பொருள் வேறுபாடு உடையனவாய், ஆழ்ந்த ஆய்வு நோக்குக்கு உரியனவாய் உள. இவற்றை ஆய்ந்து 73 இடங்களில் உ.வே. சாமிநாதையர் பதிப்புப் பாடங்களும் 16 இடங்களில் பிற வேறுபாடுகளும் மூல பாடங்களாகக் கொள்ளத்தக்கவை என நிறுவப்பட்டுள்ளன.

4. பதிற்றுப்பத்து

பதிற்றுப்பத்து நூலில் 80 பாடல்களிலும் 8 பதிகங்களிலும் அமைந்த மொத்த வேறுபாடுகள் முறையே 266ம் 7ம் ஆகும். இந்த 273 வேறுபாடுகளில் 105 பொருள் வேறுபாட்டுக்கோணத்தில் ஆயத்தக்கவை. பாடவேறுபாடுகள் பதிப்பு வரிசையில் இங்கு ஆராயப்பெற்று நிறுவப்பட்டுள்ளன.

1. பொருள்நிலை ஆய்வுக்கு உரியன

பொருள்நிலையில் ஆயத்தக்க வேறுபாடுகள் 105ல் ஒரே பொருள் தரும் இரு வேறு சொற்கள் பயின்றமையால் பாட வேறு பாடுகளாகியவற்றின் எண்ணிக்கை 5. 'சான்ருக **பகைவராயின்'** (62.12) என்பதற்கு 'பகைஞராயின்' எனவரும் வேபாட்டைச் சுட்டலாம்.

பொருள் மாற்றம் மிகுதியும் இன்றி அமைந்த வேறுபாடுகள் 45 உள்ளன. இவற்றில் ஓரளவு பொருள் மாற்றம் இருப்பினும் இம்மாற்றத்தால் அதிக விளைவு ஏற்படுதல் இல்லை. **'நீர் நிறம்'** (11.9) என்பதற்கு **'நீனிறம்'** என்ற வேறுபாடு உள்ளது. நீரின் நிறம் நீலம் ஆதலால் நீர்நிறம்-நீல் நீறம் என்ற இவ்வேறுபாடு களால் மிகுதியும் பொருள் மாற்றம் நிகழவில்லை என அறியலாம்.

இவ்விருவகைகளிலும் அமைந்த 50 வேறுபாடுகள் போக எஞ்சிய 55 வேறுபாடுகள் பொருள் வேறுபாட்டு நோக்கில் சிறப்பாக ஆயத்தக்கவை.

2. உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்புப் பாடங்கள்

உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் காட்டப் பெற்ற வேறுபாடுகளில் பொருள் மாற்றத்தோடு அமைந்தவற்றுள் 33 வேறுபாடுகள் பின்னே வந்தபிற பதிப்புக்கள் எவற்றிலும் மேற்கொள்ளப் பெருதவை. பொருள் மாற்றமுடைய இவ்வேறு பாடுகள் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

மூலபாடம் (உ.வே சாமிநாதையர்) பதிப்பு	பா/அடி	வேறுபாடு
சிறுமகிழானும்	19.12	சிறுமதிமானும்
ஓங்கி நடந்து	20.10	ஒருங்கு நடந்து
துறைநணிமருதம்	27.6	துறையணி மருதம்
இளையினிது	28.5	விளையினிது
கூரையிழிதரு	28.10	கூரையழிதரு
குழாஅலின்	29.5	குமுறலின், குழறலின்
மாந்தரொராங்கு	31.2	மாந்தரோங்குக
நகைவர்க்கரணமாகி	31.34	நயவர்க்கரணமாகி
பிழையா விளையுளொடு	32.14	பிழையாவிளையினொடு
தோட்டி நீவாது	40.27	தோட்டி நிவந்து
எண்ணுமுறை	43 5	எண்ணுமெய்
சொல்பலநாட்டை	43.10	சொல்புனனாட்டை
குடைச்சூல்	57.11	குடச்சூல்
தோற்றமொடு	64.17	நோக்கமொடு
படர்ந்தனை செல்லும்	66.3	கடறுழந்து செல்லும்
பல்செருக்கொன்று	67.12	பல்செருக்கடந்து
தாழ்கரும்பாசவர்	67.16	தாழிரும்பாசகர்
குடைச்சூல்	68.18	குடச்சூல்
அயிரைநெடுவரை	70.26	நேருயர் நெடுவரை
செறுவினை	71.3	செறிவளை
தலைமடங்க	71.17	தலைமயங்க
நாடுநின்	72.3	நாடென
தோலுனுதிர்த்து	74.10	தோலுனெதிரத்து
வண்மையுமாண்பும்	74.25	வண்மையுமாண்மையும்
வேறுபடுநனந்தலை	74.27	வேறுபுல நனந்தலை

கொள் ளுடைக்கரம்பை	75.11	கல்லுடைக்கரம்பை
தேயாவாழியின்	77.5	தெய்வயாழின்
இறும்பிற்றகடூர்	78.9	உறுப்பிற்றகடூர்
நின் வயிற்பிரிந்த	79.4	நின்வயிற்பிறந்த
புரவிநெடுந்தேர்	81.32	புனைவினை நெடுந்தேர்
முன்பிற்செருநர்	82.3	முன்பிற்செல்வர்
இரங்குநீர்ப்பரப்பின்	90.28	இலங்குநீர்ப்பரப்பின்

மேலே குறிப்பிடப் பெற்ற பாடங்கள் உ. வே. சாமிநாதையர் பதிப்பில் மட்டும் அடிக்குறிப்பில் காட்டப் பெற்றவை.

2. 1. சிறுமகிழானும்

'அரிது பெறு பாயற் **சிறு மகிழானும்**' (19.12) என்பதற்கு 'அரிதிற் பெறுகின்ற துயிலின்கண் உண்டாகும் சிறுமகிழ்ச்சியாலும்' என்பது பொருள். இங்குச் '**சிறுமதிமானும்**' என்ற தொடர் பொருள் பொருத்தமின்றி அமைகிறது.

2. 2 ஓங்கி நடந்து

'ஒன்னார் தேப **ஓங்கி நடந்து**' (20.10) என்னும் தொடர் 'பகைவர் கண்டு அஞ்சி உளம் குலையப் பெருமிதத்துடன் நடந்து' என யானையின் பெருமித நடையைச் சிறப்பிக்கின்றது. '**ஒருங்கு நடந்து**' என்னும் தொடரின் பொருள் இத்தகைய பொருள் சிறப்பைத் தரவில்லை.

2. 3 துறைநணிமருதம்

'**துறைநணி மருதம்**' (27.6) என்பதும் '**துறையணி மருதம்**' என்பதும் ஏறத்தாழ ஒரே பொருளையே தருகின்றன. 'நீர்த் துறைக் கண் நிற்கும் மருத மரம்' என்றும் 'நீர்த்துறைக்கு அண்மையில் நிற்கும் மருதமரம்' என்றும், இத்தொடர்கள் பொருள்கள் தருகின்றன எனினும்,

"செந்நெ லுண்ட பைந்தோட்டு மஞ்ஞை
செறிவளை மகளி ரோப்பலிற் பறந்தெழுந்து
துறைநணி மருதத் திறுக்கு மூரொடு"[1]

எனவரும் இலக்கியப் பயிற்சியிடங்களில் **'துறைநணி மருதம்'** என்றே பாடம் பயின்றுள்ளதைக் காண, **'துறையணி மருதம்'** என்ற வேறுபாட்டை ஒதுக்கிவிடலாம்.

2. 4. இளையினிது

'இளையினிது தந்து' (28.5) என்னும் தொடரில் 'இளை' என்பது நாடு காவல் என்னும் பொருளைத் தருகிறது. இதற்கு வரும் '**வினை**' என்னும் சொல் இத்தகைய சிறப்புப் பொருளைத் தரவில்லை.

'கரையிழி தரும்' (28.10) என்பது கரையையும் உயர்ந்து இழியும் பேரியாற்றுச் சிறப்பைச் சுட்டுகிறது. **'கரையழி தரும்'** என்பது கரையை அழிக்கும் அளவு பேரியாறு செல்லும் இயல்பைச் கூறும். எனினும்,

"அருவி யற்ற பெருவறற் காலையும்
நிவந்துகரை யிழிதரும் நனந்தலைப் பேரியாற்றுச்
சீருடை வியன் புலம்"[2]

எனவரும் பகுதியைக் காணுங்கால், **'இழிதரும்'** என்று பாடம் இருப்பதே சிறப்பாகத் தெரிகிறது. அருவிகள் வறண்ட காலத்திலும் பேரியாறு இழிந்து பெருகி நிலங்களை வளமாக்கிச் 'சீருடை வியன்புல' மாக்கும் செய்தியை இப்பகுதியால் அறியலாம். எனவே கரையை அழித்து ஓடியது என்னும் பொருளைத்தரும் '**அழிதரும்**' என்ற பாடத்தைவிடக் கரையளவு உயர்ந்து ஓடியது என்னும் பொருளைத்தரும் **'இழிதரும்'** என்ற பாடமே சிறப்பாக உள்ளதை அறியலாம்.

1. புறம். 344: 1-3
2. பதிற். 28: 9-11

2. 5. குழாஅலின்

'குழாஅலின்' (29.5) என்பதற்குக் 'கொக்கு முதலிய குருகுகள் கூடியிருத்தலால்' என்பது பொருள். இவை கூடியிருத்தலாற்றான் 'வெண்கை மகளிர் வெண்குரு கோப்பும்' செயலைச் செய்கின்றனர் என அடுத்து வரும் அடி கூறுகிறது. இங்குக் **'குமுறலின்'** **'குழறலின்'** என்ற சொற்பொருள்கள் இயைபின்றியுள.

2. 6. மாந்தரொராங்கு

'மண்கெழு ஞாலத்து மாந்தரொராங்குக் கை சுமந்தலமறும் பூசல்' (31. 2-3) எனவரும் பகுதிக்கு 'மணி செறிந்த உலகில் மாந்தர் ஒரு தன்மைபடக் கைகளைத் தலைமேலேந்தித் தம் குறையை எடுத்துக்கூறி வேண்டும் ஆரவாரம்' என்பது பொருள். **மாந்தரொராங்கு'** என்பதற்கு அமைந்த **'மாந்தரோங்குக'** என்ற தொடரின் பொருள் இந்த நயத்தைத் தரவில்லை.

2. 7. நகைவர்க்கு

'நகைவர்க்கு அரணமாகி' (31.34) என்பதில் 'நகைவர்' என்பதற்குத் தன்பால் அன்புடையார்க்கு என்பது பொருள்' **'நயவர்'** என்பதும் இப்பொருளைத் தருவதே எனினும் பதிற்றுப் பத்தில் 'நகைவரார நன்கலஞ்சிதறி'[1] என்று ஈரிடங்களில் **நகைவர்'** என்ற சொல்லே பயிற்சி பெற்று வந்திருத்தலால் இங்கும் **நகைவர்க்கு அரணமாகி'** என்ற பாடத்தைச் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

2. 8. விளையுளொடு

'பிழையா விளையுளொடு' (32.14) என்ற பாடம் **'பிழையா விளையினொடு'** என்ற பாடத்தை விடச் சிறப்புடையது. முடந்தை நெல்லின் கழையமல் கழனிப் பிழையாவிளையுளொடு' என முன் பகுதியோடு சேர்த்துக் கொண்டால் 'விளையுள்' என்பதே சிறப்பாக உள்ளது. கழனிக்கு 'விளையுள்' என்பதேசிறப்பாகப் பொருந்தும். மேலும் 'பிழையாவிளையுள்' என்னும் தொடர் "தள்ளா விளையுளும்" (731) எனவரும் குறள் தொடரையும் ஒத்திருக்கிறது.

1. பதிற் 37; 4; 43. 20

2. 9. நீவாது

'தோட்டி நீவாது' (40.20) என்பது 'தோட்டி என்னும் கருவியால் பாகர் செய்யும் குறிப்புக்களைத் தவறுமல்' என்னும் பொருளைத்தரும். குறிப்புக்கள் தவறுமல் யானைகள் செயல்பட்டன எனக் குறிப்பிடப்படுகிறது. **தோட்டி நிவந்து** எனவரும் வேறுபாடு இங்கு முரண்பட்ட பொருளைத் தருகிறது.

2. 10. எண்ணுமுறை

மலைச்சாரலில் உலவும் யானைகளின் கூட்டங்களின் கூட்டங்கண்டு அதில் பெண் யானைகள் எவ்வளவு உள என்று எண்ணப் புகுந்தால், அவை மிகுதியால் எண்ணில் அடங்காது நின்றன என்னும் கருத்தை **'விருந்தின் வீழ்பிடி எண்ணுமுறை பெருஅ'** (43.5) என்னும் தொடர் விளக்குகின்றது. இங்கு **'எண்ணுமெய் பெருஅ'** என்ற வேறுபாடு பொருள் நயம் தரவில்லை.

'சொல்பல நாட்டைத் தொல்கவின் அழித்த போரடுதானைப் பொலந் தார்க் குட்டுவ' (43.10-11) என்ற தொடர் குட்டுவன் பல நாடுகளை வென்ற பேராற்றலைக் குறிப்பிடுகின்றது. **சொல் புனனாட்டை'** என்புழிப் 'புனனாடு' என்ற 'சோணாடு' ஒன்றே அடங்கும். இதனால் குட்டுவனின் பேராற்றற் சிறப்பு மிகுதியும் வெளிப்படவில்லை.

2. 11. குடைச்சூல்

'குடைச்சூல்' (57.11,68,18) என்ற பாடத்துக்கு **'குடச்சூல்'** என்ற வேறுபாடு ஈரிடத்தில் வந்துள்ளது. 'குடைச்சூல்' என்பதற்குச் சிலம்பு என்பது பொருள்.

'பக்திக் கேவணப் பசும்பொற் குடைச்சூல்
சித்திரச் சிலம்பு..........''[1].

எனவரும் பகுதியில் குடைச்சூல் என்றே பயின்றுள்ளது காணலாம். புடைபட்டு உட்கருவை உடைத்தாதல் பற்றிச் சிலம்பு **'குடைச்சூல்'** எனப்பட்டது. எனவே **'குடச்சூல்'** என்னும் பாடம் பொருந்துவதன்று.

1. சிலம்பு. 16 ;118-119

'நெய்தல் இதழ்வனப்பற்ற தோற்றமொடு உயர்ந்த மழை (64 17-18) எனவரும் தொடருக்கு நெய்தல் மலரிதழ்களின் கருமை வனப்புடைய தோற்றத்தோடு ஒத்திருக்கும் மழைமேகம் என்பது பொருள். இங்குத் **'தோற்றமொடு'** என்பதற்கு **'நோக்க மொடு'** என்ற வேறுபாடு பொருத்தமின்றி அமைந்துள்ளது அறியலாம்.

2. 12. படர்ந்தனே

'படர்ந்தனே செல்லும் முதுவாயிரவல' (66.3) என்னும் தொடர் சேரனை நினைந்து செல்லும் முதுவாயிரவலனைக் காட்டும் படர்த்தல்-நினைவு எனப் பழையவுரைகாரர் உரை எழுதியுள்ளார். இரவலன், புரவலனைப் பற்றிய நினைவோடு செல்லுதல் இயல்பே. எனவே இங்குக் **'கூடறுழந்து செல்லும்'** என்ற வேறுபாட்டில் பொருள் சிறப்புடையதாக அமையவில்லை.

2. 13. பாசவர்

'பல்செருக்கொன்று' (67.12) என்பதற்குப் **'புல்செருக்கடந்து'** எனவரும் வேறுபாடு உள்ளது. இவ்வேறுபாடு மிகுதியும் பொருள் சிறப்பு உடையதாக அமையவில்லை. **'தாழ்கரும் பாசவர்'** (67.16) என்பதற்குத் **'தாழிரும் பாசகர்'** எனவரும் வேறுபாடும் சிறப்புடைய தன்று. 'பாசவர்' என்பதே இலக்கிய வழக்கு. 'பாசவரும் ஊனமும்'[1] எனப் பிறிதோரிடத்தும் பதிற்றுப் பத்தில் 'பாசவர்' என்பதே பயின்றுள்ளது. எனவே **தாழிரும் பாசகர்** என்பது சிறப்புடைய தன்று.

2. 14. அயிரைநெடுவரை

'அயிரை நெடுவரை' (70.26) என்பதற்கு **'நேருயர் நெடுவரை'** என்ற வேறுபாடு உள்ளது. சேரமன்னருக்குச் சிறப்புரிமை அயிரை மலை. இது மேற்கு மலைத்தொடரிலுள்ளது. அயிரை மலையைச் சுட்டிச் சேரமன்னரை வாழ்த்தும் மரபு பதிற்றுப்பத்தில் வேறிடத்திலும் பயின்றுள்ளது.

---

1. பதிற் 21. 9-10

''கடவுள் அயிரையின் நிலைஇக்
கேடிலவாக பெரும நின்புகழே''[1]

எனவரும் பகுதியைக் காணலாம். எனவே **'அயிரை நெடுவரை'** என்ற பாடத்தையே சிறந்ததாகக் கொள்ளலாம்.

எட்டாம் பத்தின் முதற்பாடலில்
''அருஅ யாணர் அகன்கட் செறுவின்
அருவி யாம்பல் நெய்தலொ டரிந்து
செறுவினை மகளிர்''[2]

எனவரும் பகுதியில் **'செறுவினை மகளிர்'** (70.3) என்பதற்குச் **'செறிவளை மகளிர்'** என்ற வேறுபாடு உள்ளது. இங்கு வயலில் தொழில் செய்யும் மகளிர் என்ற பொருளைத் தரும் செறுவினை மகளிர் என்பதே சிறந்த பாடமாகும். **'செறிவளை மகளிர்'** எனப் பொதுவாகச் சொல்வதைவிட, வயல்வேலை செய்வோரைச் சிறப்பாகச் சுட்டும் **'செறுவினை மகளிர்'** என்பது சிறப்புடையதாகும்.

2. 15. நாடுநின்

கழுவுள் என்பவன் ஆயர் தலைவன். இவனைச் சேரன் வென்ற சிறப்பையும், கழுவுள் தலைவணங்கி நின்ற இயல்பையும் **'தலை மயங்க'** எனவரும் வேறுபாட்டைவிடத் **'தலைமடங்க'** (71.17) எனவரும் பாடமே சிறப்பாகத் தெரிவிக்கிறது, 'நாடுநின்முன்றினை முதல்வர்க்கு ஓம்பினர் உறைந்து' (72. 3-4) எனவரும் தொடரில் **நாடுநின்** என்பதற்கு **'நாடென'** எனவரும் பாட வேறுபாடு பொருத்தமின்றி உள்ளது.

2. 16. தோலூனுதிர்த்து

வேள்வி செய்வோன் மான்தோலைப்போர்த்துக் கொள்ளுதலும், அவன் மனைவி அத்தோலை வட்டமாக அறுத்து அதனைச் சுற்றிலும் முத்துக்களையும் மணிகளையும் கட்டி நடுவில் மாணிக்கங்களைத் தைத்து அணிதலும் பழைய மரபு. 'புள்ளி இரலைத் தோல்

1 பதிற் 79: 18-19
2. பதிற் 71: 1-3

ஊன் உதிர்த்து தீது களைந்து எஞ்சிய திகழ்விடு பாண்டில் (74.10–11) எனவரும் பகுதி மான்தோலைத் தூயதாக்கிச் செய்யும் ஒப்பனையைக் குறிப்பிடுகிறது. இங்குத் **'தோலூனுதிர்த்து'** என்பதற்குத் **'தோலூனெதிரத்து'** எனவரும் வேறுபாடு பொருந்துவதன்று.

'வண்மையும் மாண்பும் வளனும் எச்சமும்' (74.25) எனவரும் தொடரில் **'மாண்பும்'** என்பதற்கு **'ஆண்மையும்'** என்ற பாடம் உள்ளது. 'மாண்பும்' என்பதால் மாட்சிமையுடையை பல குணங்கள் குறிப்பிடப்படுகின்றன. எனவே 'ஆண்மையும்' என ஓர் இயல்பைச் சுட்டுவதாக வரும் வேறுபாடு சீரியதன்று.

வேறுபடும் இயல்புடையதாகிய காட்டை **'வேறுபடு நனந்தலை'** (74.27) என்ற பாடம் உணர்த்தும். இதற்கமைந்த **'வேறுபுல நனந்தலை'** என்ற வேறுபாடு சிறந்த பொருளைத் தரவில்லை.

வென்ற பகைவர் நாட்டில் வெள்வரகும், கொள்ளும் விதைத்தல் இயல்பு.

> "வெள்வாய்க் கழுதைப் புல்லினம் பூட்டி
> வெள்ளை வரகும் கொள்ளும் வித்தும்"[1]

எனவரும் புறநானூற்றுப் பகுதி இதனை உணர்த்தும். இதனைச் சுட்டும் வகையில் 'வெள் வரகுழுத கொள்ளுடைக் கரம்பை' (75.11) எனவரும் தொடர் உள்ளது. **'கொள்ளுடைக் கரம்பை'** என்பதற்கு வரும் **'கல்லுடைக் கரம்பை'** என்ற பாடம் அத்துணைப் பொருட் சிறப்புடையதன்று.

2. 17. தேயா வாழியின்

'தேயா வாழியின்' (77.5) என்பது தேரில் உள்ள வாய்தேயாத சக்கரத்தைக் குறிப்பது. இதற்குத் **'தெய்வயாழின்'** எனவரும் வேறுபாடு பொருத்தமின்றி உள்ளது. 'வெல்போராடவர் மறம் புரிந்து காக்கும் வில்பயில் இறும்பிற்றகடூர்' (78.8–9) என்பதில்

1. புறம் 392: 9–10

இறும்பின் தகடூர் என்பதற்குக் 'காவற் காட்டினையுடைய தகடூர்' என்பது பொருள். **'இறும்பின் தகடூர்'** என்பதற்கு **'உறுப்பின் தகடூர்'** எனவரும் வேறுபாடு பொருள் சிறப்பின்றி உள்ளது.

உன்னிடமிருந்து பிரிந்து பல திசைகளிலும் பரவியுள்ள நினது நல்லிசைகள் களவிலும் பிறரை விரும்புதலை யறியா' என்று **'நின்வயிற் பிரிந்த நல்லிசை களவினும் பிறர் நசையறியார்'** (79. 4–5) என்னும் தொடருக்கு விளக்கம் தருவர் உரையாசிரியர். இங்கு **'நின்வயிற் பிரிந்த'** என்பதற்கு **'நின் வயிற்பிறந்த'** என்னும் வேறுபாடு உண்டு. உன்னிடம் பிறந்த நல்லிசை என்பதைவிட, உன்னிடம் பிறந்து பல திசைகளிலும் பரவிய என்று பொருள் கொள்வது சிறப்பாக உள்ளது. எனவே **'நின் வயிற் பிரிந்த'** என்ற பாடத்தைச் சிறந்ததெனக் கொள்ளலாம்.

குடக்கோச் சேரலிரும்பொறையைப் பெருங்குன்றூர்க் கிழார் பாடிய ஒன்பதாம் பத்தின் முதற் பாடலில்,

"மாணிழை அரிவை காணிய ஒருநாட்
பூணிக மாளநின் புரவி நெடுந்தேர்" (31–32)

எனவரும் பகுதி உள்ளது. போரில் ஈடுபட்டிருக்கும் மன்னனை நோக்கி நின்மனையாளைக் காணச் செல்க என்றும், அங்ஙனம் செல்ல நின் புரவிபூட்டிய தேரில் ஏறுவாயாக என்றும் புலவர் இங்கு வேண்டுகின்றார். மன்னன் விரைந்து செல்ல வேண்டும் என்ற வேட்கைக் குறிப்புக்கு ஏற்பப் **'புரவி நெடுந்தேர்'** என்ற பாடம் பொருத்தமாக உள்ளது. 'வண்பரி நெடுந்தேர் பூண்க நின் மாவே'[1] என்று வரும் புறநானூற்றுப் பகுதியிலும் இக் கருத்துப் பயின்றுள்ளது. இங்குப் **'புனைவினை நெடுந்தேர்'** என்ற வேறுபாடு உள்ளது. பொருள் பொருத்தமாக அமைந்திருப்பினும் விரைந்து செல்லும் வேட்கைக் குறிப்பு, **'புரவி நெடுந்தேர்'** என்ற பாடத்தினாலேயே பெறப்படுகிறது.

1. புறம் 146: 11

2. 18. முன்பிற் செருநர்

'**முன்பிற் செருநர்**' (82.3) என்பதற்கு அமைந்த '**முன்பிற் செல்வர்**' என்ற வேறுபாடு பொருள் சிறப்பில்லாதது. 'இரங்கு நீர்ப் பரப்பின் மரந்தையோர் பொருந' (90.28) எனவரும் தொடருக்கு 'ஒலிக்கின்ற கடலாகிய நீர்ப் பரப்பினையுடைய மரந்தை நகரின் தலைவனே' என்பது பொருள். கடலின் இயல்பு தோன்ற '**இரங்கு நீர்ப்பரப்பு**' என்ற பாடம் அமைந்துள்ளது. இதற்கு '**இலங்கு நீர்ப் பரப்பு**' என அமைந்த வேறுபாடு இந்தப் பொருட் சிறப்பைத் தரவில்லை என்பதை அறியலாம்.

உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் காட்டப் பெற்ற 33 வேறுபாடுகளில் எந்த வேறுபாடும் பொருள் சிறப்பும் நயமும் உடையதாக அமையவில்லை.

3. கழகத்தின் மூலபாடங்கள்

கழகப் பதிப்பில் 4 இடங்களில் புதிய பாடங்களை மூலபாடங்களாக ஏற்று உரை கூறப்பட்டுள்ளது. இந்த 4 இடங்களேயன்றி வேறு 6 இடங்களிலும் புதிய பாடங்கள் உள்ளன. எனினும் இங்கெல்லாம் **மூலத்தில் புதிய பாடங்கள் இருப்பினும்** உரை எழுதும் போது அவ்விடங்களில் பழைய உ.வே.சாமிநாதையர் பதிப்பின் பாடங்களே மூலபாடங்களாக ஏற்கப்பட்டுள்ளன. **எனவே அந்த ஆறு இடங்களும் அச்சுப் பிழைகளாகக் கொள்ளத்** தக்கனவாகவே உள்ளன.

அச்சுப்பிழையற்ற பாடங்கள் அமைந்த நான்கு இடங்களையும் காண்போம். 'நெடுவெள்ளூசி' (42.3) என்பதற்கு 'நெடுவள்ளூசி', என்றும், 'சேர்ந்தோரல்லது' (42.5) என்பதற்கு 'நேர்ந்தோரல்லது' என்றும், 'ஒழுகையுய்த்த' (44.17) என்பதற்கு 'ஒழுகையுய்த்தோய்' என்றும், 'அரும்பறை வினைஞர்' (75.9) என்பதற்கு 'மருபுல வினைஞர்' என்றும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகப் பதிப்பில் பாடங்கள் உள்ளன.

3. 1. நெடுவெள்ளூசி

'நெடுவெள்ளூசி' என்பதற்கு 'நெடிய வெண்மையான ஊசி' என்று பொருள். எனவே **'நெடுவள்ளூசி'** என்ற புதிய பாடத்தில் பொருள் சிறப்பில்லை.

3. 2. சேர்ந்தோரல்லது

'அம்பு சேருடம்பினர்ச் சேர்ந்தோரல்லது' (42.5) என்ற தொடருக்கு 'அம்புகள் தைத்த உடம்பினையுடையராய்ச் சேர்ந்தவர்களோடல்லாமல்' என்பது பொருள். இங்குச் **'சேர்ந்தோரல்லது'** என்பதற்கு **'நேர்ந்தோரல்லது'** என்று பாடங் கொண்டால் 'அம்புகளால் புண்பட்ட உடம்பினையுடையராய்ப் பொர வந்தாரோடு' எனப் பொருள் அமையும். விழுப்புண் பட்டோரோடன்றிப் பிறரோடு பொரற்கு விரும்பாத மறமிகுதியை வலியுறுத்தும் வகையில் **'நேர்ந்தோரல்லது'** என்ற பாடம் அமைந்துள்ளது. எனவே **'சேர்ந்தோரல்லது'** என்பதைவிட **'நேர்ந்தோரல்லது'** என்ற பாடத்தைச் சிறப்புடையதாக இங்குக் கொள்ளலாம்.

3. 3. ஒழுகையுய்த்த

'ஒழுகையுய்த்த' (44.17) என்ற எச்சத்திற்கும், 'ஒழுகையுய்த்தோய்' எனவரும் விளிக்கும் பொருள் நிலையில் மிகுதியும் வேறுபாடு இல்லை. 'ஒழுகையுய்த்த' என எச்சமாகக் கொண்டால் 'ஆடுநடையண்ணல்' (7) எனவரும் முடிவோடு பொருத்திப் பொருள் கொள்ள வேண்டும். இதனை 'ஒழுகையுய்த்த' (17) 'ஆடு நடையண்ணல்' (7) என மாறிக கூட்டுக என்று பழைய உரைகாரர் குறிப்பிடுவர். பின்னுள்ள எச்சத்தை முன்னுள்ள முடிவோடு கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டிய இடர்ப்பாடு மற்றொரு பாடத்தில் இல்லை. 'ஆடுநடை அண்ணல்' (7) என்பதைத் தனியாகவும் 'ஒழுகையுய்த்தோய்' (17) என்பதைத் தனியாகவும் ஆற்றொழுக்காகப் பொருள் கொள்ளும் வாய்ப்பு இப்பாடத்தில் உள்ளது. எனவே **'ஒழுகையுய்த்தோய்'** என்பதைச் சிறப்புடையதாக இங்குக் கொள்ளலாம்.

3. 4. அரும்பறை வினைஞர்

'அரும்பறை வினைஞர்' (75.9) என்பதற்குப் பாடமாக அமைந்த **'மருபுல வினைஞர்'** என்பதும் பொருட் சிறப்போடு அமைந்துள்ளது. 'அரும்பறை வினைஞர்' என்பதற்கு 'அரிய பறையையுடைய தொழில் செய்வோர்' என்பது பொருள். 'மருபுல வினைஞர்' என்பதற்குக் 'களர் நிலத்தே தொழிலைச் செய்வோர்' என்பது பொருள். 'வன்புலம் தழீஇ மென்பால் தோறும்' என முன்னுள்ள அடியின் பொருளோடு இயைத்துக் காணுங்கால் 'மருபுல வினைஞர்' என்ற பாடம் பொருந்துவதாக உள்ளது. மென்பாலில் நல்ல விளைவு உண்டாதலின் அதனைக் கோடற்கு ஏனை வன்புலத்து வாழும் மருபுலத்தார் விரும்பி முயல்வது இயல்பு. அதுகாலை மென்புலத்து வாழ்வார் அவரோடு பொருதலும் இயல்பு. போரில் தோற்கும் 'மருபுல வினைஞர்' தம்பால் உள்ள வரகும் கொள்ளும் தண்டமாகத் தருவர். எனவே இப்பொருட் சிறப்பினைத்தந்து நிற்கும் **'மருபுல வினைஞர்'** என்ற பாடத்தைச் சீரியதாகக்கொள்ளலாம்.

இங்ஙனம் கழகப் பதிப்பில் காட்டப்பெற்ற புதிய பாடங்கள் நான்கில் இரண்டு சிறப்புடையனவாய்த் திகழ்கின்றன.

4. அருளம்பலவனர் பதிப்புப் பாடம்

இலங்கை வெளியீடாகிய அருளம்பலவனர் பதிப்பில் **'வளம் படு வென்றி'** (4ஆம் பத்து, பதிகம் 12) என்பதற்கு **'வலம்படு வென்றி'** என்ற பாடம் உள்ளது. ளகர லகர வேறுபாடின்றி இப்பாடம் எழுந்தது எனக் கொள்ளவும் இடமுண்டு. அதற்கு மேலும் வளம்-வலம் என்பவற்றில் பொருள் வேறுபாடும் உள்ளது. மிகுதியான 'வளம் தருகின்ற வெற்றி' என்பது முன்னுள்ள பாடத்துக்கு உரிய பொருள். 'வலம்படு வென்றி' என்பதில் பொருள் சிறப்பில்லை. வலம், வென்றி, என்பன ஒரு பொருள் தரும் சொற்கள். எனவே இங்கு **'வளம்படு வென்றி'** என்பதனைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

5. மர்ரே பதிப்பில் பாடம்

மர்ரே பதிப்பில் பொருள் வேறுபாட்டு நிலையில் பாடம் ஒன்று அமைந்துள்ளது. 'களிறு முழங்கும் பாசறை' (16.8) என்பதற்குக் 'களிறு வழங்கும் பாசறை' என்ற வேறுபாடு உள்ளது. மர்ரே பதிப்பில் காணப்பெறும் இவ்வேறுபாடு பிற பதிப்புக்களில் சுட்டப் பெறவில்லை.

"கடாஅம் வார்ந்து கடுஞ்சினம் பொத்தி
மரங்கொன் மழகளிறு முழங்கும் பாசறை
நீடினை யாகலிற் காண்குவந் திசினே" (16.7-9)

என்னும் பகுதியில் களிறுகளின் இயல்பு, பாசறை இயல்பு, பாசறையில் மன்னன் நீண்ட நாள் தங்கிய நிலை ஆகியனசுட்டப் படுகின்றன. பாசறையில் தங்கியிருக்கும் மன்னன் தன்னை நாடி வரும் பரிசிலர்க்குக் களிறு வழங்கும் சிறப்புடையனுயிருந்தான் என்ற பொருளைத் தருவது **'களிறு வழங்கும் பாசறை'** என்னும் பாடம். 'யானைகள் முழங்கும் இயல்புடைய பாசறை' என்று கூறுவதை விட, யானைகளைப் பரிசிலர்க்கு வழங்கும் பாசறை என்று கொள்வதில் மன்னனின் வண்மைச் சிறப்பு வெளிப்படுகிறது. எனவே **'களிறு வழங்கும் பாசறை'** என்ற பாடத்தைச் சிறப்புடையதாக இங்குக் கொள்ளலாம்.

இம்மன்னன் நாடு, மிகுந்தகளிற்று வளம் நிறைந்தது என்பதை 'அண்ணல் மழகளிறு அரிஞிமி றோப்பும் கன்று புணர் பிடிய குன்றுபல நீந்தி'[1] எனவரும் பகுதியாலும், மன்னன் இரவலர்க்கு வாரி வழங்கும் கொடைச் சிறப்பு உடையவன் என்பதைப் 'பரிசின் மாக்கள் வல்லாராயினும் கொடைக் கடன மர்ந்த கோடா நெஞ்சினன்'[2] எனவரும் பகுதியாலும் அறியலாம்.

1. பதிற் 12: 12-13
2. ,, 20: 20-23

6 உ.வே சாமிநாதையர், கழகப் பதிப்புக்களின் அடிக் குறிப்புக்கள்

உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் குறிப்பிடப் பெறும் 7 பாட வேறுபாடுகள், கழகப் பதிப்பின் அடிக்குறிப்பிலும் இடம் பெற்றுள்ளன. இவற்றின் மூல பாடங்களைவிட இவ்வேறு பாடுகள் பொருட் சிறப்போ, பொருள் நயமோ உடையனவல்ல. இம்மூல பாடங்களும், வேறுபாடுகளும் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

உ.வே. சாமிநாதையர் மூல பாடம்	பா.அடி.	அடிக்குறிப்புப் பாடம்
ஏமம் புணர்க்கும்	11.4	ஏமம் புணர் காக்கும்
ஐந்தொருங்கு புணர்ந்த	14.4	வந்தொருங்கு புணர்ந்த
வரினு மாற்றும்	14.10	வரினும் பாற்றும்
கழங்கழி	15.5	கழங்கு வழி
பகைவரார	37.3	பகைவராயினும்
கண்ணறுத்தியற்றிய	41.4	கண்ணுறுத்தியற்றிய
கொல் படை	67.5	தொல் படை

அடிக்குறிப்பில் பாடம் குறிப்பிடும் பதிப்பு நெறியை உ.வே. சாமிநாதையர் பதிப்பைப் பின்பற்றிக் கழகப் பதிப்பிலும் தொடக்கத்தில் ஒரு சில பாடல்களில் குறிப்பிடப் பெற்றுள்ளன. பின்னர் அங்கும் இங்குமாக ஓரிரு பாடங்களில் மட்டுமே குறிப்பிடப் பெற்றுள்ளன. பல பாடல்களில் அடிக்குறிப்பில் வேறுபாடுகள் சுட்டப்பெறபெறவில்லை.

மேலே கண்ட 7 இடங்களிலும் உ.வே. சாமிநாதையர் பதிப்பில் பாடங்களாக அமைந்தவை ஏற்கத்தக்க நிலையில் சிறப்புடைய பாடங்களாக உள்ளன.

7. மர்ரே, சங்க இலக்கியப் பதிப்புக்கள்

உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக் குறிப்பில் குறிப்பிடப் பெற்ற இரு பாடங்களை இரு அடிகளில் மர்ரே பதிப்பும், சங்க இலக்கியப் பதிப்பும் தம் மூல பாடங்களாகக் கொண்டுள்ளன என்பதும் குறிப்பிடத் தக்கது.

"குய்யிடு தோறு மாறு தார்ப்பக்
கடலொலி கொண்டு செழுநகர் நடுவண்
அடுமை யெழுந்த அடுநெய் யாவுதி" (21.11-13)

என்பது பதிற்றுப்பத்துப் பகுதி. **'செழுநகர் நடுவண் அடுமை எழுந்து'** (21.12-13) என்பதற்குச் **'செழுநகர் வரைப்பின் நடுவண் எழுந்த'** என்ற வேறுபாடு உ.வே.சாமிநாதையர் பதிப்பின் அடிக் குறிப்பில் உள்ளது. இதனை மர்ரே பதிப்பும் சங்க இலக்கியப் பதிப்பும் தம் மூலபாடங்களாகக் கொண்டுள்ளன. பாடவேறு பாட்டில் பொருள் சிறப்பு இல்லை. எனவே உ.வே. சாமிநாதையர் பதிப்பில் மூல பாடங்களையே சிறந்தவையாகக் கொள்ளாலம்.

8. பழைய உரையாசிரியர் குறிப்பு

பதிற்றுப் பத்தின் பழைய உரையாசிரியர் தம் குறிப்புரைப் பகுதியில் ஆங்காங்கே சில இடங்களில் தம் காலத்து வழங்கிய வேறுபாடங்களையும் குறிப்பிட்டுள்ளார். இம்முறையில் அவரால் குறிப்பிடப் பெற்றிருக்கும் பாடங்களின் எண்ணிக்கை 7. இந்தப் பாடங்களைப் பிற்காலத்து வந்த பதிப்பாசிரியர்களோ உரையாசிரியர்களோ யாரும் குறிப்பிடவோ, ஏற்கவோ இல்லை என்பதும் குறிப்பிடத் தக்கது. உ. வே. சாமிநாதையர் அவர்களும் தம் பதிப்பில் அடிக் குறிப்பில் பிற ஏட்டுப் பாடங்களைக் குறிப்பிட்டுள்ளாரேயன்றி, பழைய உரையாசிரியரின் உரைக்குறிப்புப் பாடங்களைக் குறிப்பிடவில்லை. இப்பாடங்கள் அனைத்தும் வேறு பொருள் உடையனவாயினும் பொருட் சிறப்புடையன அல்ல.

'**கோடுறழ்ந்தெடுத்த**'(16.1) என்பதற்குக் '**கோடு புரந்தெடுத்த** என்பது ஒரு பாடம். 'கோடுபுரந்தெடுத்த' என்பது பாடமாயின், 'மதிலில்லாத இடங்களை மலைகாவலாய்ப் புரக்க வெடுத்தவென்க', எனப் பழைய உரையாசிரியர் இப்பாடத்தையும், பொருளையும் குறிப்பிடுவர்.

'கடலொலி **கொண்டு**' (21.13) என்பதற்குக் 'கடலொலி **கொண்ட**' என்பது பாடம். இனி, 'கடலொலி கொண்ட—என்பது பாடமாயின் கடலொலி கொண்ட நகர் என்க' என விளக்கம் கூறுவர் பழைய உரையாசிரியர்.

'வசையுநர்க்**கறுத்த**' (32.13) என்பதற்கு வசையுநர் **கறுத்த** என்பது பாடமாகச் சுட்டப் பெற்றுள்ளது. இதனை 'இனிக் ககர வொற்றின்றி 'வசையுநர் கறுத்த' என்பது பாடமாயின் அதனை வினையெச்ச வினைக்குறிப்பு முற்றுத் திரிசொல்லாக்கி, வசை சொல்லுதலுடையவராய் வெகுண்ட பகைவர் என்று உரைப்பாருமுளர்' என்று பழையஉரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். வசை **யுநர்க் கறுத்த**—என்பது ககர வொற்றுவிடுபட்டு ஏடுகளில் வசை**யுநர்கறுத்த** என்று பாடமாக அமைந்த இயல்பையும் பழைய உரையாசிரியர் இங்குக் குறிப்பாக உணர்த்தியுள்ளார்.

'**பொழில் வதிவேனில்**' (48.15) என்பதற்குப் '**பொழில் வயவேனில்**' என்றொரு பாடமும் பழைய உரையாசிரியரால் குறிப்பிடப் பெற்றுள்ளது. 'பொழில் வயவேனிலென்பது பாடமாயின் பொழில் வயப்படுவதான பொருளுண்டாகிய வேனிலென உரைக்க' என இதனை விளக்கியுள்ளார்.

'பிறங்கிய' (64.3) என்பதற்கு 'ஈய' என்றும், பாடலில் பயின்ற தொடரைக் கூறுக்கி அமைப்பினை மாற்றியமையால் 'நீர்பட்டு' (64.5) என்பதற்கு 'உரிய நீர்பட்டு' என்று வரும் பாட வேறுபாடு களும் உள. இதனை 'ஈய வென்றது' பாடமாயின் உரைசாலென்றது கூறும். 'உரைசால் வேள்வி முடித்த கேள்வி யந்தணர் அருங்கல மேற்ப வீயநீர் பட்டு' என்று பாடமாக வேண்டும் எனக் குறிப்பிட்டுள்ளார் பழைய உரைகாரர்:

இதுவரை தன் காலத்து மாறுபட்டு வழங்கிய பாடவேறு பாடுகளைச் சுட்டிய உரையாசிரியர், இங்கு அமைப்பு முறையை மாற்றுவதால் அமைய வேண்டிய பாட வேறுபாடுகளைச் சுட்டு கின்றார்.

''அறங்கரைந்து வயங்கிய நாவிற் பிறங்கிய
உரைசால் வேள்வி முடித்த கேள்வி
அந்தணர் அருங்கல மேற்ப நீர்பட்டு'' (64. 3-5)

என்பது பாடற் பகுதியின் இயல்பான அமைப்பு. பழைய உரையாசிரியர் குறிப்பிடும் முறையில் பாடத்தையும் கூழையும் கொண்டால்,

''அறங்கரைந்து வயங்கிய நாவில் ஈய
உரைசால் வேள்வி முடித்த கேள்வி யந்தணர்
அருங்கல மேற்ப வியநீர் பட்டு''

என இப்பகுதி அமையும்.

'ஆகலினசையாது' (69.11) என்பதற்கு **ஆண்டோரசையாது** என்ற ஒரு பாடமும் பழைய உரையாசிரியர் குறிப்பில் உள்ளது. 'ஆண்டோரசையாது' – என்பதைப் பாடமாக்கி அதற்கேற்ப உரைப்பாரும் உளர் என இதனைச் சுட்டியுள்ளார்.

பழைய உரையாசிரியரின் குறிப்பில் காணப்பெறும் இவ்வேழு பாடங்களும் பொருள் நிலையில் சிறப்புடையனவல்ல. இவ்விடங் களில் உ. வே. சாமிநாதையர் பதிப்பின் மூல பாடங்களையே சிறப்புடையனவாகக் கொள்ளலாம்.

இக்குறிப்புக்களால் பழங்காலத்திலேயே மூல பாடங்களில் மாறுதல் நிகழ்ந்து பாட வேறுபாடுகள் தோன்றத் தொடங்கின என்பதை அறியலாம்.

இனிப் பதிற்றுப் பத்தில் அமைந்த அனைத்து வேறுபாடுகளின் எண்ணிக்கையையும் வகைகளையும் கீழேயுள்ள பட்டியலில் ஒரு சேரக் காணலாம்.

வகையும் பிரிவும்	வேறுபாடுகள்
ஒரே பொருள் தரும் இரு வேறு சொற்கள் பயின்றவை	5
பொருள் மாற்றம் மிகுதியும் இன்றி வருவன	45
பொருள் மாற்றம்-ஆயத்தக்கவை:	
உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்புப் பாடங்கள்	33
கழகப் பதிப்பின் மூல பாடங்கள்	4
அருளம்பலவனர் பதிப்புப் பாடம்	1
மர்ரே பதிப்புப் பாடம்	1
உ.வே. சாமிநாதையர் கழகப் பதிப்பு அடிக்குறிப்புக்கள்	1
மர்ரே, சங்க இலக்கியப் பதிப்புப் பாடங்கள்	2
பழைய உரையாசிரியர் காட்டும் பாடங்கள்	7
மொத்த வேறுபாடுகள்	105

பதிற்றுப் பத்தில் நிகழ்ந்த பாட வேறுபாடுகள் இவையே. பதிப்பு நிலையிலும், ஏடுகளிலும் அமைந்த இவ்வேறுபாடுகளில் பெரும்பாலானவை பொருட் சிறப்பும் பொருள் நயமும் இல்லாதனவே.

5. பரிபாடல்

பரிபாடலில் இன்று கிடைக்கும் 22 பாடல்களில் மொத்தமுள்ள வேறுபாடுகள் 557-ல் 290 மட்டும் பொருள் வேறுபாட்டு நோக்கில் ஆயத்தக்கனவாய் அமைந்துள. இவை பதிப்பு வரிசையில் இக்கட்டுரைக்கண் ஆராயப் பெற்றுச் சிறந்த மூலபாடங்கள் இவையென நிறுவப்பட்டுள்ளன.

1. பொருள்-மாறுபாடுகள்

பொருள் மாற்ற நோக்கில் ஆராயத்தக்க 290 வேறுபாடுகளில் ஒரே பொருள் பயின்ற இரு சொற்களாக அமைந்தவை, மிகுதியும் பொருள் வேறுபாடின்றி அமைந்தவை, பொருள் மாற்றம் இருப்பினும் இனங்காணத் தக்க வகையில் அமையாமல் சிதைந்து உருமாறி வழங்குபவை ஆகியனவும் உள.

'முனைவர்க்கு' மரிதே (1.30) என்பதற்குக் கழகப் பதிப்பில் 'முனிவர்க்கு மரிதே' என்ற வேறுபாடு உள்ளது. 'கொள்ளலும்' (2.62) என்பதற்குக் 'கோடலும்' என்ற வேறுபாடு உ. வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் உள்ளது. இவ்வேறுபாடுகளில் பயின்றவை ஏறத்தாழ ஒரே பொருள் தரும் வேறு சொற்கள். எனவே இம்முறையில் அமைந்த 22 வேறுபாடு களும் மிகுதியும் பொருள் வேறுபாடு அற்றவை.

ஒரே பொருளைத் தரும் சொல்லாக இல்லாமல், பிற வகைச் சொற்களால் அமைந்து பொருளை வேறுபடுத்துவனவாகச் சில வேறுபாடுகள் உள. ஆனால் இவை விளக்கும் பொருள் மாற்றம் நயமற்றவை, இயைபு இல்லாதவை. சான்றாக 'மன்னுயிர் முதல்வனை, (1.53) என்பதற்கு 'மண்ணிய முதல்வனை' என்ற வேறுபாட்டைச் சுட்டலாம். இவ்வேறுபாட்டல் ஏற்படும் பொருள் மாற்றத்தில் மிகுதியும் சிறப்பில்லை. இம்முறையில் மிகுதியும் பொருள் வேறுபாடும் சிறப்புமின்றி அமைந்தவை 115 வேறுபாடுகள்.

இங்ஙனமே, பொருள் காணவகையின்றிச் சிதைத்து வரும் வேறுபாடுகளும் உள. 'பன்மாண் யாமும்' (2,73) என்பதற்குப் 'பலமா பன்மாயாண்டும்' என்று வேறுபாடு உள்ளது. இவ்வேறு பாடு சிதைந்த நிலையில் அமைந்துள்ளது தெற்றெனப் புலனாகும். சிதைவுற்றுப் பொருள் காண வகையின்றி வரும் வேறுபாடுகளின் எண்ணிக்கை 95 ஆகும்.

மேலே குறிப்பிடப்பெற்ற மூவகையிலும் வரும் 232 வேறு பாடுகள் நீங்க எஞ்சிய 58 வேறுபாடுகள் இங்கு விரிவாக ஆராயப் பெற்றுள்ளன.

2. உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பு

உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் காணப்பெறும் பாட வேறுபாடுகளில் பொருள் மாற்றம் உடையனவாக அமைந்தவை சில. இவற்றுள் சிலவற்றைப் பின்னே வந்த பதிப்புகளும் குறிப்பிடுகின்றன. எனினும் பின்னே வந்த பதிப்புக்களில் சுட்டப்பெருமலும், பொருள் மாற்றத்திற்கு உரியனவாகவும் அமைந்துள்ள 15 வேறுபாடுகள் இங்கே ஆராயப்பட்டுள்ளன.

'புலமும் பூவனு நாற்றமும் நீ' (1.46) என்னும் தொடருக்கு புலமும் 'பூவினு ஞற்றமு நீ' என்ற வேறுபாடு ஒன்று உள்ளது. 'வேதமாகவும், பிரமனுகவும், படைத்தல் தொழிலாகவும் விளங்குபவன் நீ' என்பது இதன் பொருள். இறைவன் எல்லாமாகப் பரந்து விளங்கும் தன்மை இங்குச் சுட்டப் பெற்றுள்ளது. பூவன் என்பதற்குப் 'பூவிலுள்ள பிரமன்' என்பது பொருள். நாற்றம் என்பது படைத்தல் தொழிலை உணர்த்தும். 'பூவினு ஞற்றமு நீ' என்ருல் பிரமனுவும் இறைவன் அமைந்துள்ள சிறப்புப் பெறப்படல் இல்லை. மேலும் பூவினுன் முகனும் அவனிருகிய உலகுயிர்களின் தோற்றமும் நீ எனவரும் பரிமேலழகர் உரைக்குறிப்பும் 'பூவனு நாற்றமும் நீ' என்ற பாடத்தின் பொருட் சிறப்பை விளக்குகின்றன. எனவே இங்கு 'பூவனு நாற்றமும் நீ' என்ற பாடத்தைச் சிறப்புடையதாக ஏற்கலாம்.

அடுத்து 'விசும்பிலூழி யூழூழ் செல்ல' (2.4) என்ற தொடரில் 'செல்ல' என்பதற்குச் 'செய்ய' என்ற வேறுபாடு உள்ளது. இப் பகுதியில் உலகத்தின் ஒடுக்க முறை கூறப்பட்டுள்ளது. 'பசும் பொனுலகமும் மண்ணும் பாழ்பட விசும்பிலூழி யூழூழ் செல்ல' (2.3-4) எனவரும் தொடர்களில் 'பாழ்பட, செல்ல எனவரும் எச்ச பொருள்கள் ஒடுக்க நிலையைச் சுட்டி முறையே வந்துள்ளன. இதனைத் தொடர்ந்து தோற்றமுறை உரைக்கப்பட்டுள்ளது. 'ஊழிகள் முறையாகக் கழிய' என்பது இத்தொடரின் பொருள். எனவே இங்குச் 'செல்ல' என்னும் பாடமே பொருத்தமுடையதாக உள்ளது.

'சாறும் சேறு நெய்யு மலரும், நாறுபு நிகழும் யாது வரலாறு' (6 41-42) என வையையாற்றின் வருணனை கூறப்பட்டுள்ள இடத்தில் **'நெய்யும்'** என்பதற்கு **'நேயமும்'** என்ற வேறுபாடு ஒன்று உள்ளது. 'சாறு' என்பது மணப் பொருள்களில் ஊறிய நீர். 'பத்துத்துவர் முதலாயின ஊறின நீரும்' என்பர் பரிமேலழகர். இளங்கோவடிகளும் இதனைச்சுட்டுவர்[1]. 'சேறு' என்பது சந்தனம் முதலியவற்றின் குழம்பு. 'நெய்' என்பது வாச எண்ணெய், 'மலர்', மைந்தரும் மகளிரும் சூடிய மலர். இவையெல்லாம் கலந்து மணக்க வையையாறு ஓடிவருகிறது என விளக்கப்பட்டுள்ளது. இங்கு **'நெய்யும்'** என்பதற்கு **'நேயமும்'** என்று வரும் பாடம் பொருத்தமின்றி உள்ளது.

வையையின் தூய்மைக்கேட்டை உணர்த்தும் வகையில் தொடர்ந்து வரும் பகுதியில் **'நலனழிந்து'** என்பதற்கு **'நலனணிந்து'** என்ற முரண்பாடான பொருள் தரும் பாடமும் பொருந்தா நிலையில் உள்ளது,

'இனம் வீழ் தும்பி' (8.22–23) என்பதற்கு **'நனை வீழ் தும்பி** என்ற வேறுபாடு உள்ளது. 'இனம் வீழ் தும்பி' என்பதற்கு **'இனம் விரும்பும் தும்பி'** என்பது பொருள். இப்பாடம் தும்பிகளின் இயல்பைச் சிறப்பாக விளக்கி நிற்கின்றது. 'நனைவிழ்தும்பி' என்பதற்கு 'அரும்புகளை விரும்பும் வண்டினம்' என்பது பொருள். வண்டு மலரை நாடல் இயல்பேயன்றி அரும்பை நாடல் இயல்பில்லை. எனவே, இங்கு **'நனை வீழ் தும்பி'** என வரும் வேறுபாடு பொருட் சிறப்போடு அமையவில்லை.

தோழி தலைவனைச் சூள் விலக்கக்கூறும் பகுதியில் 'அறவரடி தொடினும் ஆங்கைவ சூளேல்'(8.68) எனவரும் தொடர் உள்ளது. பார்ப்பார் அடி தொழுது சூள் கூறினும், முருகனின் மயிலையும், வேலையும் நோக்கிச் சூள் செய்யாதே என்பது இத்தொடரின் பொருள். இங்கு, **'அறவரடி தொடினும்'** என்பதற்கு **'யாவரடி தொடினும்'** என்ற வேறுபாடு உள்ளது. அறவரடியைத் தொட்டுச் சூளுறல் மரபு. அங்ஙனம் சூள் செய்தலும் கூடாது என்பதைக்

1. சிலம்பு. 6: 76-79. உரை

குறிப்பிடத் தொடினும் என எதிர்மறை உம்மை ஆளப்பட்டுள்ளது. எனவே, இங்கு **யாவரடி தொடினும்**' என்ற பாடம் சிறப்புடைய தாக அமையவில்லை.

இப்பாடலில், '**உரிமை மாக்கள் உவகை** அமிர்துய்ப்ப' (8. 121) எனவரும் தொடருக்கு அடிசில் சமைத்தற்குரிய மடைத்தொழிலாளர் **இன்பந்தரும்** அமிழ்தம் ஒத்த '**அடிசில் தர**' என்பது பொருள். இங்கு 'அமிர்து' என்பது அமிர்தம் ஒத்த உணவைச் சுட்டும். எனவே '**அமிர்து வாக்க**' என, இங்கு வரும் வேறுபாடு பொருள்சிறப்புடன் அமையவில்லை.

'ஆடனவின்றோர்அவர்போர் செறுப்பவும், பாடல் பயின்றோரைப் பாணர் செறுப்பவும், (9. 72-73) எனவரும் பகுதியில் 'ஆடல் வென்றி, பாடல் வென்றி ஆகியன குறிப்பிடப் **பெற்றுள**. ஆடல் தொழில் பயின்றோரை ஆடல் தொழில் பயின்றோர் வெல்லவும்' என்பது முதலடிக்குரிய பொருள். இங்கு '**அவர் போர்** செறுப்பவும்' (9. 72) என்பதற்கு '**அவை போர்** செறுப்பவும்' என்ற வேறுபாடு உள்ளது. இது பொருத்தமில்லாத வேறுபாடு என்பது தெளிவு.

'**பல களவு** கொண்டோடி' (10.107) என்பதற்குப் '**புலன் களவு கொண்டோடி**' என்ற வேறுபாடு உள்ளது. மைந்தர், மகளிர் இடையே நிகழும் ஆடல்கள் **உணர்த்தப்பட்டுள்ளன**. மைந்தர் சிலர், தமக்குச் சிற்றில் இடாமல் அசதி யாடும் மகளிரின் பந்தையும் கழங்கையும் பிற பல பொருள்களையும் கவர்ந்து ஓடினர் என்ற செய்தி இங்குக் கூறப்படுகிறது. விளையாட்டுப் பருவத்தில் சிறுமியரின் பந்து முதலியவற்றை இளைஞர் கவர்ந்தோடும் இயல்பை 'வரிப்பந்து கொண்டோடி'[1] என்றும் 'முற்றிலைப் பந்தைக் கழங்கைக் கொண்டோடினை'[2] என்றும் வரும் பகுதிகளும் தெரிவிக்கின்றன. பல பொருளையும் கவர்ந்து சென்ற குறிப்பை உணர்த்தும் வகையில் '**பல களவு கொண்டோடி**' எனவரும் பாடமே இங்குச் சிறப்புடையது.

1. கலி. 51
2. திருவேங். அந்தாதி. 97

இப்பாட்லிலேயே **'பலிவளராவியும்'** எனவரும் (10.123) பாடத்திற்குப் **'பலி வளர்வாவியும்'** என்ற வேறுபாடு உள்ளது. மகளிர் மாடங்களில் எழுப்பும் அகிற்புகை பலியாகிய ஆவியைப் போல் உள்ளது என்ற செய்தி இங்கு உவமையோடு விளக்கப் பட்டுள்ளது. புகைக்குப் பலியாகிய ஆவி உவமையாகக் கூறப்படும் இயல்பை,

> "புகையெனப் புதல் சூழ்ந்து பூவங்கட் பொதி செய்யா
> முகை வெண்ப னுதிபொர முற்றிய கடும்பலி";[1]

எனவரும் பகுதியாலும் 'புகை நிற உருவின் அற்சிரம்'[2] எனவரும் தொடராலும் அறியலாம். எனவே **'பலிவளர்' ஆவியும்'** என்பதே இங்குப் பொருந்திய பாடம் என்பது புலனாகும்.

'திகழ நோக்கி' (12.21) என்பதற்குத் 'திசை நோக்கி' என வரும் வேறுபாடும் பொருத்தமற்றதே 'தேசும் ஒளியும் திகழ நோக்கி' என்பது செயற்கை யழகும் கலவியால் வந்த நிறமும் விளங்க அதனைக் கண்டு களித்து என்னும் பொருளைத் தருகிறது. **'திசை நோக்கி'** என்பது இங்குப் பொருத்தமற்ற பாடம்.

'தாளும் தோளும்' (13.53) என்பதற்குத் **'தாரும் தோளும்'** என்ற வேறுபாடு உள்ளது. இப்பகுதி, திருமாலின் அவயச்சிறப்பை உணர்த்தும் பகுதி.

முதலடியிலேயே 'அடியும்' என வந்திருப்பதால் மீண்டும் 'தாளும்' என்று வருவது கூறியது கூறலாய்விடும். உறுப்புக்களோடு 'தோளணி வலயம்' எனப்பிறவும் எண்ணப்படுதலால் இங்குத் 'தாரும்' என்றிருப்பது பொருத்தமாக உள்ளது. எனவே **'தாளும் தோளும்'** என்ற பாடத்தைவிடத் **'தாரும் தோளும்'** எனவரும் பாடத்தைச் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

'பன்மாண் அடுக்க' (13.62) என்பதற்குப் **'பன்மாணடுக்கல்'** என்ற வேறுபாடு அமைந்துள்ளது. இது திருமாலின் பல்வேறு சிறப்புக்களையும் கூறிப் 'பன் மா ண் அடுக்க இறைஞ்சினெம்

---

1. கலி. 31
2. அகம். 317:3

வாழ்த்தினெம்' என முடிகிறது. பல காலும் அடுத்து இறைஞ்சி 'வாழ்த்தப் பெற்றேம்' என்பது இதன் பொருள். இங்குப் 'பன்மானடுக்கல்' என்பது எவ்வகையிலும் இயைபின்றி அமைந்தது தெளிவு.

'பொலம்புனை அவிரிழை' (16.6) என்பதற்குப் **'பொலம்புனை கருவினன்'** எனவரும் வேறுபாடும் பொருள் இயைபற்றதேயாம். **'மலர் நனையுறுவ'** (19.71) என்பதற்கு வரும் வேறுபாடாகிய **'மலர் கனையுறழ'** என்பதும் பொருள் இயைபற்ற நிலையிலேயே அமைந் துள்ளது.

உ. வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்புப் பகுதியில் இடம் பெற்ற மேலே கண்ட 15 வேறுபாடுகளில் ஒன்று தவிர எஞ்சிய அனைத்தும் பொருள் சிறப்பின்றியும் இயைபின்றியும் அமைந்த வேறுபாடுகளாக உள்ளன.

3. கழகத்தின் மூல பாடம்

உ. வே. சாமிநாதையர் பதிப்பில் அடிக்குறிப்பிலோ, பின்னர் வந்த பதிப்புக்களிலோ குறிப்பிடப் பெறுமல் கழகப் பதிப்பில் மட்டும் மூலபாடங்களாக அமைந்தவேறுபாடுகள் இரண்டு.

'சொறிந்ததூஉம்' (12.52) என வருவதற்குச் **'சொரிந்ததூஉம்'** என்ற வேறுபாடு உள்ளது. மேலோட்டமாகக காணுங்கால் றகர-ரகர வேறுபாடின்மையால் இவ்வேறுபாடு அமைந்தது எனக் கருதவும் இடமுண்டு.

'சொறிந்ததூஉம் சொற்றதூஉம் பற்றுணிறந் திரிந்தாள் (12.52) என்பது இப்பாடம் பயின்ற தொடர். தலைவனைப் பற்றி அறியாத நிலையில் அத்தலைவனிடம் மனம் வைத்துப்பசலை பூத்த மேனிய ளாகத் தலைவி ஆனுள் என்னும் கருத்தை விளக்குகிறது. 'சொறிந் ததூஉம்' எனவரும் பாடத்திற்கு எவ்வாற்ருனும் பொருள் கொள்ள வாய்ப்பின்மையால் **'சொரிந்ததூஉம்'** என்ற இப்பாடம் மாற்றிக் கொள்ளப்பட்டுள்ளது. இதனைச் 'சொறிந்ததூஉம்' என்னும் பாடத் திற்கு எவ்வாற்ருனும் பொருள் விளங்கவில்லை. ஆதலின் சொரிந்

தூஉம்' எனத் திருத்தப்பட்டது என்று உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார். பொருள் விளங்காத பாடங்களைப் பதிப்பாசிரியர் பொருள் இயைபுக்கேற்பத் திருத்திக் கொண்டுள்ளனர் என இதனுல் அறியலாம். இங்குச் 'சொறிந்ததூஉம்' எனவரும் பொருள் விளங்காப் பாடத்தைவிட **'சொரிந்ததூஉம்'** என்ற திருத்தப்பாடமே சிறப்புடையது.

'ஒள்ளொலி' (16.40) என வருவதற்கு **'ஒள்ளொளி'** என்ற வேறுபாடும் கழகப் பதிப்பில் மூலபாடமாகக் கொள்ளப்பட்டுள்ளது. 'கெண்டை மீனையொத்த மகளிர் கண்ணின் சிவப்பு நிறம் கள்ளுண்டல், நீரில் ஆடல், காதலரோடு ஊடல் என்ற மூன்று காரணங்களாலும் மேலும் சிவந்தது' என்பது இப்பகுதியால் உணர்த்தப்படும் பொருள். 'ஒளிகிளர் உண்கட் கெண்டை மது பானம், புனலாட்டு, புலவியென்னும் இம்மூன்றினுலும் ஒள்ளிய நிறம் சிவக்க........என இப்பகுதிக்கு உரை எழுதியுள்ளார் பரிமேலழகர். பொருள் இயைபு நிலையில் **'ஒள்ளொலி'** என்பதைவிடக் கழகத்தின் மூலபாடமாகிய **'ஒள்ளொளி'** என்பதே பொருத்த முடையதாக உள்ளது. 'ஒள்ளொளி' என்று இப்பாடம் கொள்ளப் பட்டமைக்குக் கழக உரையாசிரியர் எந்த விளக்கமும் எழுத வில்லையெனினும் பரிமேலழகர் உரை விளக்கம் இப்பாடம் கொள்ளக்காரணமாக அமைந்திருக்கும் எனக் கருத முடிகிறது.

கழகப் பதிப்பில் புதியனவாகவும் மூலபாடங்களாகவும் கொள்ளப்பட்ட இருபாடங்கள் பொருட் சிறப்புடையனவாக அமைந்துள்ளது என்பது இதனுல் அறியப்படும்.

4 சங்க இலக்கியப் பதிப்பில் பாடம்

சங்க இலக்கியப் பதிப்பில் இதுவரை பிற பதிப்புக்களில் காணப்பெருத பாடம் ஓர் இடத்தில் மட்டும் அமைந்துள்ளது. **'நாற்றமும் ஒண்மையும்'** (4.29) என்பது உ.வே. சாமிநாதையர் பதிப்பிலும் பிற பதிப்புக்களிலும் காணப்பெறும் மூல பாடம். இதற்கு **'நாற்றமும் வன்மையும்'** என்ற வேறுபட்ட பாடம் சங்க இலக்கியப் பதிப்பில் அமைந்துள்ளது. இது பொருந்தும் சிறந்த பாடமாக அமையவில்லை.

"நின் சுரத்தலும் வண்மையும் மாரியுள
நின் புரத்தலும் நோன்மையு ஞாலத்துள
நின் நாற்றமும் ஒண்மையும் பூவையுள" (4. 27-29)

எனவரும் பகுதியில் 'வண்மையும்' மாரியிடத்தில் அமைந்ததாகக் குறிப்பிடப் பெற்றுள்ளது. மீண்டும் 'நாற்றமும் வண்மையும்', எனப் பாடங்கொண்டு காயாம் பூவிடத்தில் அமைந்ததாகக் கொள்வது ஏற்புடையதாக இல்லை. மேலும் வண்மைப் பண்பு மாரிக்கு உரிய தாகவும், ஒண்மை இயல்பு பூவைப் பூவுக்கு உரியதாகவும் கொள்ளப்படலே மரபு. எனவே **'நாற்றமும் ஒண்மையும்'** என்ற பாடமே சிறப்புடையதாகக் கொள்ளத்தக்க நிலையில் அமைந் துள்ளது.

5 உ. வே. சாமிநாதையர் அடிக்குறிப்பும் பிற பதிப்புக்களும்

உ. வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் வரையப் பட்டுள்ள வேறுபாடுகளைப் பின்னர் வந்த பதிப்புக்கள் எடுத்து ஆண்டுள்ளன.

'எழில் வேழ மேந்திய' (1.4) என்பதற்கு 'எழில்மேழி யேந்திய' என்ற வேறுபாடு உள்ளது. உ.வே.சாமிநாதையர் பதிப்பின் அடிக் குறிப்பில் குறிப்பிடப் பெற்ற இவ்வேறுபாட்டைச் சங்க இலக்கியப் பதிப்பு, தன் மூலபாடமாகவே கொண்டுள்ளது.

திருமால் பலராமனுகவும் விளங்கும் சிறப்பு இங்குக் குறிப்பிடப் பெற்றுள்ளது. யானைக் கொடியை உடையவனும், கூர்மை செய்த வளைந்த கலப்பைப் படையை உடையவனும், ஒற்றைக் குழை யுடையவனுமாகிய பலதேவனுகவும் திகழ்கின்ருன் என்னும் கருத்து இங்குச் சுட்டப்பெற்றுள்ளது. 'சேயுயர் பணிமிசை' என்ப தால் 'வேழம்' என்றே அமைய வேண்டிய இயல்பும். 'நாஞ்சில்' பற்றிப் பின்னே குறிப்பிடப் பெறுதலால் முதலில் 'மேழி' பற்றிக் குறிப்பிடுதல் பொருந்தாமல் உள்ள இயல்பும் இதனுல் பெறப்படும். எனவே **'எழில் வேழ மேந்திய'** என்னும் பாடமே இங்கு ஏற்கத் தக்கது.

'கள்ளே புனலே புலவியிம் மூன்றினும்' (16.39) எனவரும் தொடரில் **'கள்ளே'** என்பதற்குப் **'புள்ளே'** என்ருெரு வேறுபாடு உள்ளது. உ.வே.சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் சுட்டப் பெறும் இவ்வேறுபாட்டை மர்ரே பதிப்பு தன் மூலபாடமாகக் கொண்டுள்ளது. மகளிரின் கண்கள் மதுவுண்டமையாலும், புனலில் ஆடியமையாலும் காதலரிடத்தில் புலவி கொண்டமையாலும் மேலும் சிவந்து விளங்கும் செய்தி இங்குச் சுட்டப் பெறுகிறது. எனவே **'புள்ளே'** என்னும் வேறுபாடு இயைபின்றி அமைந்தது தெற்றெனப் புலனுகும்.

'திறனிலோர்த் திருந்திய தீது தீர் சிறப்பின் மறனும்' (1 39-40) என்பதில் **'சிறப்பின்'** என்பதற்குக் **'கொள்கை'** என்ற வேறுபாடு உள்ளது. உ.வே.சாமிநாதையர் பதிப்பின் அடிக் குறிப்பில் சுட்டப்பெற்ற இவ்வேறுபாட்டினைப் பின்னே வந்த மர்ரே பதிப்பும், சங்க இலக்கியப் பதிப்பும் தம் மூலபாடமாகக் கொண்டுள்ளன. நன்னெறியில் செல்லும் திறனில்லாதவரை நன்னெறிக்கண் செலுத்தும் குற்றம் தீர்ந்த சிறப்பினையுடைய மறம் என்பது இத்தொடரின் பொருள். இங்கு 'கொள்கை' என்பதை அமைப்பதால் பொருள் சிறப்பு ஏற்படவில்லை. எனவே **'தீதுதீர் சிறப்பின் மறனும்'** என்பதையே சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

6. கழகப் பதிப்பின் அடிக்குறிப்பும் உரைக்குறிப்பும்

கழகப் பதிப்பில் சுட்டப்பெற்ற மூல பாடங்கள் சிலவற்றைப் பின்னர் வந்த பதிப்புக்கள் ஏற்றுள்ளதையும் காண்கிறோம்.

'நாம மருடலும்' (20.108) என்பதற்கு **'நாமமர் ஊடலும்'** என்ற பாடம் கழகப் பதிப்பிலும் பின்னர் வந்த மர்ரே பதிப்பிலும் உள்ளது. 'நாம மருடலும்' என்பது மூல பாடமா, அன்றி அச்சுப் பிழையா எனக் கணிக்க இயலவில்லை. பரிமேலழகரின் உரைக் குறிப்பு இப்பகுதிக்கு இல்லை. புதிய பாடம் பொருட் சிறப்போடு கழகப் பதிப்பில் விளக்கப்பட்டுள்ளது. எனவே பழைய பாடம் பொருள் விளங்காத நிலையில் இருத்தலால், கழகத்தின் மூலபாட மாகிய **'நாமமர் ஊடலும்'** என்பதைப் பொருந்திய பாடமாக ஏற்கலாம்.

'வயந்தணிந்தேகுநின்யாணரிருநாள் பெற' (11.40) எனவரும் தொடரில் '**இருநாள்**' என்பதற்கு '**இறுநாள்**' என்ற பாடம் கழகப் பதிப்பில் மூலமாகக் கொள்ளப்பட்டுள்ளது. ரு-று எழுத்துக்கள வேறுபாடின்றி ஏடுகளில் ஆளப்படும் மரபு நிலையில் தோன்றிய தாகக் கொள்ளத்தக்க நிலையில் இப்பாடம் அமையவில்லை. பொருள் வேறுபாட்டு நோக்குடன் இப்பாடம் ஆளப்பட்டுள்ளது.

'வையையே! நீ பெருகிய நாளின் யாணரேயன்றி வற்றின நாளின் யாணரையும் உலகம் பெற இந்நீர் மிகுதியைத் தணிந்து ஏகு' என்பது இப்பகுதிக்குப் பரிமேலழகர் கூறும் உரை. பெருகிய நாள், வற்றின நாள்-என இரு நாட்கள் இங்குக் கூறப்படுதலால் '**இருநாள்**' என்னும் பாடம் பொருத்தமுடைய தாகலாம் என எண்ணி உ. வே. சாமிநாதையர் பதிப்பில் இது மூலபாடமாகக் கொள்ளப்பட்டுள்ளது. ஆனல்,

"நாள் குறைபடுதல் காணுநர் யாரே
சேணிகந்து கல்லூர்ந்த மாணிழை வையை
வயந்தணிந்து ஏகுநின் யாணரிரு நாள்பெற" (11: 3-40)

என்ற முழுப்பகுதியும் காணுங்கால் 'நாள் குறைபடுதல் காணுநர் யாரே?, என்ற வினாப்பகுதிக்கேற்ப இங்கு '**இறுநாள்**' என அமைவது பொருத்தமாக இருக்கும். '**இறுநாள்**' என்ற பாடமே பொருத்தமானது என்பதைக் கழகப் பதிப்பின் உரைக்குறிப்பும் வலியுறுத்தக் காண்கிறோம்.[1] இருநாளும் எனக்கொண்டு உம்மை தொகுத்து வந்ததாகக் கொள்ளுதல் பொருந்தாது என்றும், தணிந்தேகுதல் என்ற குறிப்பால் இருநாளின் யாணர் பெறுதல் இல்லை. இறுநாளின் யாணரே பெறப்படும் என்றும், இப்பாடம் சிறப்படைவதற்கு இரு காரணங்கள் கழகப் பதிப்பில் உரை விளக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. எனவே, '**இறுநாள்**' என்ற பாடத்தை இங்குச சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

'**கடந்த வாஞற் சீற்றத்தவன்**' (22.,3) என்பதற்குக் '**கடந்த ஆஞச் சீற்றத்தவன்**' என்ற வேறுபாடு கழகப் பதிப்பில் மூல பாடமாக உள்ளது. சங்க இலக்கியப் பதிப்பும் கழகப் பதிப்பைப்

1 கழகப் பதிப்பு உரைக் குறிப்பு- அடி 31- 40

பின்பற்றி இப்பாடத்தையே மூலபாடமாகக் கொண்டுள்ளது. இப்பகுதிக்குப் பரிமேலழகர் உரைக்குறிப்பு இல்லை. கழகப் பதிப்பில் 'ஆனுச் 'சீற்றத்தவன்' என்ற பாடத்திற்குப் பொருள் பொருத்தமுற விளக்கம் கூறப்பட்டுள்ளது. எனவே, **'ஆனுச் 'சீற்றத்தவன்'** என்பதை இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

7. மர்ரே, சங்க இலக்கியப் பதிப்புப் பாடங்கள்

மர்ரே பதிப்பிலும், சங்க இலக்கியப் பதிப்பிலும் ஒத்தமைந்த புதிய பாடங்கள் மூன்று இடங்களில் உள.

'ஏவலும் பணிந்தமை' (1.12) என்பதற்கு **'ஏவலுழந்தமை'** என்றும் **'வையை நின்'** (6.77) என்பதற்கு **'வையை நின'** என்றும், **'நிறை** காடாக' (20.38) என்பதற்கு **'நிரை** காடாக' என்றும் வேறுபாடுகள் இப்பதிப்புக்களில் உள. இப்பாடவேறுபாடுகளில் ஓரளவு பொருள் வேறுபட்டாலும் பொருட் சிறப்பில்லை என்பது பொருளோடு பொருந்திக் காணுங்கால் புலனுகும். இம்மூவிடங்களிலும் பழம் பாடங்களையே ஏற்புடையனவாகக் கொள்ளல் நேரிதாம்.

8. பிற பதிப்புக்கள் அனைத்தும் வேறுபடும் பாடங்கள்

உ.வே.சாமிநாதையர் பதிப்பில் மூலமாக அமைந்த பாடங்களை விடுத்து, வேறு புதிய வேறுபாடுகளைக் கழகம், மர்ரே சங்க இலக்கியப் பதிப்புக்கள் தம் மூல பாடங்களாகக் கொண்டுள்ளன. இம்முறையில் ஏழு இடங்கள் உள்ளன.

உ.வே.சாமிநாதையர் பதிப்பில் மூலபாடம்	பா/அடி	வேறுபடும் பாடம்
உயர் கொடியானை	4.38	உயர் கொடிபனை
பணி பசி	6.63	பணி பொசி
அருவிதழ் மாலைச்சுனை	8.16	அருவிதாழ்மாலைச்சுனை
ஒள்ளொளியாவை	15.55	ஒள்ளொளியவை
ஒரு குழையாமை	15.55	ஒரு குழையவை
தலைத்தலைமுகூஉம்	16.44	தலைத்தலைமிகூஉம்
பிணியாட்சேரேற்க	20.68	பிணியாட்செறேற்க

இவற்றுள் '**உயர்கொடியானை**' (4.38) என்பதைவிட '**உயர் கொடிபனை**' என்பது சிறப்புடைய பாடம்.

''நின்றென்று உயர்கொடி யானை
நின்றென்று உயர்கொடி நாஞ்சில்
நின்றென்று உயர்கொடி யானை''(4:38-40)

எனவரும் பகுதியில் 'யானைக்கொடி' பற்றிப் பின்னர் குறிப்பிடப் பெறுதலால் முதலடியிலும் யானைக்கொடி பற்றிய குறிப்புப் பொருந்தாமல் உள்ளது. சேவலோங்குயர் கொடியையுடைய நின்னுயர்கொடி ஒன்று பனை.... எனப் பரிமேலழகர் உரைக்குறிப்பு உள்ளது. பனைக்கொடி என்பதற்கு மூலத்தில் இடமில்லை. எனவே முதலடியை '**உயர்கொடிபனை**' என்று கொள்வது மிகுதியும் பொருத்தமுடையதாகும்.

'பணிபசி. (6.63) என்பதை விடப் **பணிபொசி** என்ற பாடமும் சிறப்புடைய்தாகவே உள்ளது. 'பணி பசி' என்று பாடங் கொண்டால் பணிப + அசி எனப் பிரியும். 'அசி' என்பதை 'ஹாஸி' என்ற வடமொழிச் சொல்லின் திரிபாகக் கொள்ள வேண்டும். 'அசித்தல்' என்பதற்கு 'நகுதல்' என்பது பொருளாகும். ஆனால் '**பணி பொசி பண்ப**' என்பதே பரிமேலழகர் கொண்ட பாடமாக இருத்தல் வேண்டும் என்பதைப் பணியா நிற்கவும் அன்பின்றி முறிந்த பண்பினையுடையாய் எனவரும் அவர் உரைக்குறிப்பால் அறியலாம். 'ஒசிதல்' எனபதற்கு 'முறிதல்' என்பது பொருள் எனவே பரிமேலழகர் உரைக்குறிப்பின் படியும், பொருட் சிறப்பு நோக்கிலும் '**பணிபொசி**' என்பதே சிறந்த பாடமாக அமைகிறது.

'**அருவிதழ் மாலைச்சுனை**' (8.16) என்னும் பாடத்தை விட '**அருவிதாழ் மாலைச்சுனை**' என்பது பொருள் பொருத்தமுடைய பாடம். 'அருவிதங்கும் ஒழுங்குபட்ட சுனை' என்பது இத் தொடருக்குப் பரிமேலழகர் தரும் உரைக்குறிப்பு. இவ்வுரையை விளக்கும் வகையில் அமைவது '**அருவிதாழ் மாலைச்சுனை**' என்னும் பாடமேயாகும். பிற பதிப்புக்கள் அனைத்தும் 'அருவிதாழ் மாலைச் சுனை' என்னும் பாடத்தையே ஏற்புடையதாகக் கொண் டிருப்பதைக் காண '**அருவிதழ் மாலைச்சுனை**' என்பது அச்சுப் பிழையால் அமைந்த பாடமாகக் கொள்ளவும் இடமுண்டு.

'ஒள்ளொள்ளி யாவை' (15.55) என்று வருவதும், **'ஒரு குழை யாவை'** (15.55) என்று வருவதும் அச்சுப்பிழையால் நேர்ந்த பாடங்கள். பிற பதிப்புக்கள் **'ஒள்ளொளியவை' 'ஒரு குழையவை'** என்றே பாடங்கள் கொண்டுள்ளன. இப்பாடலின் அமைப்பும், 'ஒள்ளொளியவை,' 'ஒரு குழையவை' என்றே முதலடி அமைந் திருக்க வேண்டிய இயல்பினைச் சுட்டிக் காட்டுகின்றது. எனவே **'ஒள்ளொளியவை'** என்றும், **'ஒரு குழையவை'** என்றும் வருவன வற்றை இங்குச் சிறந்தனவாகக் கொள்ளலாம்.

'தலைத்தலை முகூஉம்' (16.14) என்பது பொருத்தமின்றி அமைந்த பாடம். **'தலைத்தலைமிகூஉம்'** என்பதே பொருட் பொருத்தமுற அமைந்துள்ளது. மேலும் மேலும் நெருங்கி மொய்க்கும் வண்டுகள் என்பது தலைத்தலை மிகூஉம் 'சுரும்பு' என்பதற்குப் பொருள். மேன்மேலும் நெருங்கும் சுரும்புகள், எனப் பரிமேலழகர் உரைக்குறிப்பும் இங்கு அமைந்துள்ளது. எனவே **'தலைத்தலைமிகூஉம்'** என்ற பாடத்தை ஏற்புடையதாகக் கொள்ளலாம்.

'சிந்திக்கத் தீரும் பிணியாட்சேறேற்க' (20.68) என்பதனை விடச் **'சிந்திக்கத் தீரும் பிணியாட்செறேற்க'** என்பதே சிறந்த தாகும். சிந்தித்த அளவிலே பாவம் நீங்கும் தன்மையானைச் செருதொழிக என்பது இப்பகுதிக்குப் பரிமேலழகர் தரும் உரைக் குறிப்பு. 'செறேற்க' என்பதற்குச் 'சினவாமல் கொள்' என்பது பொருள். 'சேறேற்க' என்பதும் அச்சுப்பிழையால் நேர்ந்த பாட மாகக் கொள்ளவும் வாய்ப்புண்டு.

இங்ஙனம் மேலே கூறிய ஏழு பாடங்களுமே ஏற்கத்தக்க சிறந்த பாடங்களாக அமைந்துள்ளன.

ஓரிடத்தில் இரண்டு மூன்று வேறுபாடுகள்

ஒரே இடத்தில் ஒரு பாடத்துக்கு ஒரு வேறுபாடேயன்றி இரண்டு அல்லது மூன்று வேறுபாடுகளும் பயின்ற 11 இடங்கள் உள்ளன. இவற்றில் அமைந்த வேறுபாடுகளின் மொத்த எண்ணிக்கை 24 ஆகும்.

உ.வே. சாமிநாதையர் பதிப்பில் மூல பாடம்	பாடல்/அடி	வேறுபாடுகள்	அமைந்த பதிப்பு இடம்
அல்லா விழுந்தானை	6.88	அல்லா விழுந்தானை	சங்.இல.பதிப்பு
குன்றதிரக்கூவ	8.19	குன்றதிர்கூவ	,,
		குன்றெதிர்கூவ	,,
		குன்றெதிரக்கூவ	கழக உரைக் குறிப்பு
கேட்டுதும்	8.81	தேற்றுதும்	கழக மூலம்
		தோற்றுதும்	உ.வே.சா. அடிக்குறிப்பு
சேராத் தொழுநர்	8.102	சேராத்தொடுநர்	உ.சே.சா. அடிக்குறிப்பு
		சேஎத்தெடுநர்க்கு	கழக மூலம்
காறிரியவார்க்கும் புகை	10 125	காறிரிவாக்கும் புகை	உ.வே.சா. அடிக்குறிப்பு
		காவிரிவாக்கும்புகை	கழக மூலம்
		காறிரியவாக்கும்புகை	கழக உரைக் குறிப்பு
தேசுமொளியும்	12.21	தேசுமொலியும்	கழக மூலம்
		தேசுறுமொளியும்	உ.வே.சா. அடிக்குறிப்பு
பெரும்படை	12.27	பெயரும் படை	உ.வே.சா. அடிக்குறிப்பு
		பெரும் படை	கழக மூலம்
துறக்கத் தொழிலைத்தன்	12.84	துறக்கத் தெழிலைத்தன்	சங்.இல.பதிப்பு
		துறக்கத்தொழிலை	உ.வே சா. அடிக்குறிப்பு

இதுவெனவுரைத்தனெம்	15.64	இதுவுரைத்தனெம்	உ.வே.சா. அடிக்குறிப்பு
		இதுவெனவுரைத்தலினெம்	மர்ரே,சங்.இல. பதிப்புகள்
கமஞ்சூலெழிலிபோல்	18.2	கமஞ்சூவெழிலிபோல்	சங் இல.பதிப்பு
		கயஞ்சூழெலிபோல்	உ.வே.சா. அடிக்குறிப்பு
ஏர்த்ததும்புவன	18.33	ஏர்தயங்குவன	உ.வே.சா. அடிக்குறிப்பு
		பேர்தயங்குவன	உ.வே.சா. பதிப்பு

இவற்றில் பொருந்தும் பாடங்கள் எவை எனக் காண்போம்.

'அல்லாவிழுந்தானை' (6.88) என்பது 'நல்லாள்' (87) எனவே விழுந்தானை' 'விழுந்தாரை' எனவரும் பிற பாடங்கள் பொருந்தாதவை.

யானையின் இடி போன்ற முழக்கம் கேட்டுச் செவ்வேளின் கோழிச் சேவல் குன்றம் அதிரும்படி கூவிற்று என்னும் கருத்தை விளக்கும் வகையில் **'குன்றதிரக்கூவ'** (8.19) என்ற பாடம் உள்ளது. **'குன்றதிர்கூவ'** என்றும், **'குன்றெதிர்கூவ'** என்றும் வரும் பாடங்கள் பொருட் சிறப்பற்றவை. இனி, பரிமேலழகர் குன்றெதிரக்கூவ என்பதையே பாடமாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்னும் கருத்தைக் கழக உரைக்குறிப்புக் கூறுகின்றது. இதனைக் 'குன்றெதிர் கூவக் கூவுதலானும்'—என்னும் பரிமேலழகர் உரையான் அவர் 'குன்றெதிரக்கூவ' என்றே பாடம் கொண்டனர் என்பது உணரப்படும் எனவரும் கழக உரைக்குறிப்புப் பகுதி உணர்த்தும். 'குன்றெதிரக்கூவ' என்பதைப் பரிமேலழகர் கருதிய பாடம் எனகொண்டாலும் அதில் அவ்வளவாகப் பொருட் சிறப்பில்லை. 'குன்றம் எதிரொலிக்கும்படிக் கூவுதல்' என்பதை விடக் 'குன்றம் அதிரும்படிக் கூவுதல்' எனக் கொள்வதுசிறப்பாகும். எனவே **'குன்றதிரக்கூவ'** என்பதை இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

'கேட்டுதும் பாணி' (8.81) என்பதற்குத் **'தேற்றுதும் பாணி'** என மூலத்தில் பாடம் உள்ளது ஆனால் உரையில் **'தோற்றுதும் பாணி'** எனக் கூறிப் பொருள் உரைக்கப்பட்டுள்ளது. உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் **'தோற்றலும் பாணி'** என்ற பாடம் உள்ளது. கேட்டுதும் என்பதைப் பாடமாகக் கொண்டால் பிறர் பாடுவதாகவும், அதைக் கேட்பதாகவும் பொருள் அமையும். தோற்றுதும் என்பதைப்பாடமாகக் கொண்டால் வழிபாடு செய்ய விழைபவர்களே பாடுவதாகப்பொருள் அமையும். மலர் தூவி, அவி ஊட்டி, பாணி தோற்றி வழிபாடு செலுத்தலே முறை. 'நறும்புகை எடுத்துக் குறிஞ்சிபாடி, இமிழிசையருவியொடு இன்னியங்கறங்க'[1] எனவரும் பகுதியாலும், 'குறிஞ்சி பாடுமின் நறும்புகை யெடுமின்'[2] எனவரும் பகுதியாலும், வழிபடுவார் தாமே பாடி வழிபாடு நிகழ்த்துதலே மரபு என அறியலாம். எனவே **'தோற்றுதும்** பாணி' என்ற பாடம் இங்குச் சிறப்பாக அமைந்தது.

'சேராத் தொழுநர்' (8 102) என்பதற்குச் **'சேராத்தொாநடுர்'**, என்ற வேறுபாடு கழக மூலமாகவும், உ.வே. சாமிநாதையர் அடிக்குறிப்பிலும் உள்ளது. 'தொடுநர்' என்பதற்குத் திருவடிகளைத் 'தொழுபவர்' என்பதே பொருள். எனவே பொருள் மாற்றமின்றி அமையும் 'தொடுநர்' என்பதைவிடத் 'தொழுநர்' எனவரும் பாடத்தையே ஏற்கலாம் உ வே சாமிநாதையர் அடிக்குறிப்பில் காணப்பெறும் **சேஎத்தெடுநர்க்கு**' என்ற பாடம் பொருள் கொள்ள இயலா நிலையில் சிதைந்து வருவதாகும்.

'காறிரிய வார்க்கும் புகை' (10.125) என்பது உ.வே. சாமிநாதையர் பதிப்பில் மூலபாடம். இதற்குக் காற்று மணமுடையதாய்த் திரியும்படி ஆரவாரித்து எழும் **'அகிற்புகை'** என்பது பொருள். மகளிர் மேன் மாடங்களில் எழுப்பும் அகிற் புகையின் மணம் காற்றோடு கலக்கிறது என்பது கருத்து. இதற்குக் கழக முலத்தில் **'காவிரி வாக்கும் புகை'** என்றும் உரையில் **'கால் திரிய ஆக்கும் புகை'** என்றும் ஈரிடத்தும் இருபாடங்கள் உள. 'காறிரிய வாக்கும்' என்பதே அச்சில் பிழைபட்டுக் 'காவிரி

1. திருமுரு. 239–240
2. சிலம். காட்சிக்காதை-18

வாக்கும்' என அமைந்ததாகக் கருதலாம். உரையில் உள்ள பாடமே சிறந்தது என்பதைக் "காறிரிய வாக்கும் புகை—என்பதே நல்ல பாடம். 'காறிரிய வார்க்கும் புகை—என்றும் பாடம்'' என கழக உரைக் குறிப்புக் கூறுகின்றது. எனவே '**ஆக்கும் புகை**' '**ஆர்க்கும் புகை—என்ற** இரு பாடங்களில், மகளிரால் ஆரவாரத். தோடு எழுப்பப்படும் புகை என்பதைக் குறிப்பிடும் '**காறிரிய வார்க்கும் புகை**' என்பதையே சிறந்ததாகக் கொள்ளலாம் '**காறிரி வாக்கும் புகை**' என உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக் குறிப்பும் பாடம் பொருட் சிறப்பின்றிச் சிதைவுபெற்ற பாடம்.

'**தேசும் ஒளியும**' (12.21) என்பதற்கு வரும் இரு வேறுபாடு களும் சிறப்பற்றவை. கழகப் பதிப்பில் மூலத்தில் '**ஒலியும்**' என்றும், உரையில் '**ஒளியும்**' என்றும் உள்ளமையால் மூலத்தில் அச்சுப்பிழை வேறுபாடாக இருக்கும். தேசுறு மொளியும் என்பது எழுத்து நீட்டியமைந்ததே தவிரப் பொருள் மாற்றம் இல்லாதது. எனவே '**தேசுமொளியும்**' என்பதே சிறந்த பாடம்.

'**அன்னப் பெரும்படை**' (12.27) எனவரும் மூலபாடத்துக்கு உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் '**அன்னப் பெயரும் படை**' என்றும், கழகப் பதிப்பில் '**அன்னப் பெரும் படை**' என்றும் வேறுபாடுகள் உள. இங்குக் கழகப் பதிப்பில் காணப்பெறும் '**பெரும் படை**' என்னும் பாடம் சிறப்பாக உள்ளது. பெண் யானையின் மீது அன்னப்பெடை போன்ற மகளிர் ஏறினர் என்பது இங்குக் கூறப்படும் கருத்து. இங்குப் 'படை' எனபதைப் பாட மாகக் கொண்டால் 'கூட்டம்' எனப் பொருள் படும். ஆனல் 'பெடை' என்பதனைப் பாடமாகக் கொண்டால் 'அன்னப் பெடையை ஒத்த நடைச் சிறப்புடைய பெண்டிர் என்ற நயமான பொருள் கிடைக்கும். பரிமேலழகர் 'பிடியை நடையால் வென்று ஏறினு ரென்பது போதர அன்னப் பெடையனையோர் என்ருர் என்று குறிப்பிட்டிருப்பதாலும் '**அன்னப் பெரும் படையனையோர்**' என்ற பாடமே சிறப்புடையதெனை அறியலாம்.

நீர் தெளிந்து வானுலகத்தில் நிகழும் தொழிலைத் தன் நிழலில் காட்டும் என்னும் பொருளைத் தரும வகையில் 'துறக்கத் **தொழிலே**' (12 84) எனவரும் பாடம் உள்ளது. இதற்குத் துறக்கத்

தெழிலை எனவரும் பாடம் பொருள் மாற்றமுடையது. 'எழிலைக் காட்டுவது' எனக் கொள்வதினும் 'தொழிலைக் **காட்டுவது'** என்பது சற்று நயமுடையதாக உள்ளது. எனவே **'துறக்கத் தொழிலைத் தன் நிழற்காட்டும்'** என்ற பாடம் சிறந்தது எனலாம். உ. வே. சாமிநாதையர் பதிப்பில் அடிக்குறிப்பில் உள்ள பாடம் **தன்** என்ற சொல் விடுபட்டு வருவது.

'நலம்புரீஇயஞ்சீர் நாமவாய்மொழி இதுவெனவுரைத்தனெம் (15.64-65) என்னும் தொடர் வேதத்தின் சிறப்பறிந்து 'கூறினேம்' என்னும் பொருளைத் தருகிறது. உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் உள்ள பாடம் 'என' என்னும் சொல் விடுபட்டு இதுவுரைத்தனெம் என வருகிறது. இது 'வென' வுரைத்தலினெம் என்பது மர்ரே பதிப்பிலும் சங்க இலக்கியப் பதிப்பிலும் மூல பாடங்களாக உள்ளது. இப்பாடம் எச்சப் பொருண்மையோடு பின்னும் முன்னும் வரும் பொருட் பகுதிகளோடு இணைந்து அமைந்துள்ளது. எனவே **இதுவெனவுரைத்** தனெம்' என்ற பாடத்தைச் சிறந்ததெனக் கொள்ளலாம்.

'கமஞ்சூல் எழிலி போல்' (18.2) எனவரும் உ.வே. சாமிநாதையர் பதிப்புப் பாடம் சிறந்த பாடமாக உள்ளது. நிறைந்த சூலினை யுடைய மேகம்' என்பது இத்தொடரின் பொருள். **'கமஞ்சூவெழிலி போல்'** எனவரும் பாடம் அச்சுப் பிழையால் நேர்ந்ததாகக் கருதத் தக்கது. **'கயஞ்சூலெழிலி'** என்பது பொருள் இயைபற்றது.

'ஏர் ததும்புவன' (18.33) என்ற பாடத்திற்கு 'அழகு துளும்புகின்றவை' என்பது பொருள். சோலைகளும் சுனைகளும் பூவணிந்த செறிவால் அழகு துளும்புகின்றனவாய் அம்பறுத் தூணியை ஒத்திருந்தன என்பது இங்கு உணர்த்தப்படும் கருத்து. உ.வே.சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் உள்ள பிற இரு பாடங்கள் இத்தகைய பொருட் சிறப்பு உடையன அல்ல. எனவே **'ஏர்ததும்புவன''** என்ற பாடத்தைச் சிறந்ததென ஏற்கலாம்.

பதினோரு இடங்களில் எட்டு இடங்களில் உ.வே.சாமிநாதையர் பதிப்பின் மூலபாடங்களும், ஓர் இடத்தில் உ.வே.சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்புப் பாடமும், ஓர் இடத்தில் கழகப் பதிப்பின்

மூல பாடமும், பிறிதோரிடத்தில் மர்ரே பதிப்பு, சங்க இலக்கியப் பதிப்புக்களில் அமைந்த பாடமும் சிறந்த பாடங்களாகக் காட்டப் பெற்றுள்ளன.

பரிபாடலில் அமைந்த மொத்தமுள்ள 557 பாட வேறுபாடு களில் பொருள் மாறுபாடு உடையவை 290 பாட வேறுபாடுகள். இவற்றுள் மிகுதியும் பொருள் வேறுபாடும் ஆய்வு நோக்கும் உடைய 58 இடங்களில் பொருத்தமான வேறுபாடுகள் யாவை என்பது இக்கட்டுரைக்கண் விளக்கப்பட்டது.

6. கலித்தொகை

கலித்தொகையில் அமைந்த 150 பாடல்களில் ஒன்று மட்டுமே பாட வேறுபாடு இல்லாதது. எஞ்சிய பாடல்களில் அமைந்த மொத்த வேறுபாடுகளின் எண்ணிக்கை 1206. இவற்றில் 674 வேறுபாடுகள் பொருள் வேறுபாடு என்னும் பகுப்புக்கு உரியன. இவை இங்கே பதிப்பு வாரியாக ஆயப்பட்டு மூலபாடங்கள் நிறுவபபட்டுள.

1. பொருள் வகை வேறுபாடுகள்

பொருள் நோக்குக்கு உரியனவாகக் கலித்தொகையில் உள்ள 674 வேறுபாடுகளில் ஒரே பொருள் தரும் இருவேறு சொற்களால் அமைந்தவை 161. சான்றுகப் **'பிரிவெண்ணி'** (11 4) என்பதற்குப் **'பிரிவுள்ளி'** என்பது வேறுபாடு. எண்ணி, உள்ளி என்பன ஒரு பொருள் தரும் இரு வேறு சொற்கள். எனவே இம்முறையில் அமைந்தனவற்றை நீக்கி விடலாம்.

இயைபுடன் பொருள் காண இயலாத நிலையில் ஏடுகளில் சிதைந்து காணப்படும் 97 வேறுபாடுகள் உள. 'சான்றுக நினக்கியாம்' (82.18) என்ற பாடத்திற்கு 'நினக்கி வாரேம்' என்ற வேறுபாடு உள்ளது. பொருள் இயைபில்லா நிலையில் சிதைவுற்று இது அமைந்துள்ளது. இம்முறையில் அமைந்த வேறுபாடுகளும் தள்ளத்தக்கவை.

பொருள் வேறுபாடு இருப்பினும் மிகுதியும் பொருள் மாற்றம் செய்யாத நிலையில் அமைந்தனவாகக் கருதத்தக்க 174 வேறு பாடுகள் உள்ளன. சான்றுகக் **'காரெதிர் தளிர்மேனி'** (58.3) என்பதற்குக் **'காரெதிரொளிர் மேனி'** என்று வரும் இடத்தைக் காட்டலாம். சொல்லளவில் பொருளில் வேறுபாடு இருப்பினும், அதனால் பொதுப் பொருண்மை மிகுதியும் மாற்றம் பெருத நிலையை இங்குக் காண்கிறோம். இம்முறையில் அமைவனவும் கருதத்தக்கவை அல்ல.

குறிப்பிடத்தக்க அளவில் பொருள் வேறுபாடு அமைந் திருப்பினும் அதனுல் பொருள் நிலையில் ஏற்படும் மாற்றம் பொருத்த மின்றியும் இயைபின்றியும் அமையும் நிலையிலும் பாட வேறுபாடுகள் அமைதல் உண்டு. சான்றுகப் 'புரிபுனை பூங்கயிற்றில் பையய வாங்கி' (80.7) என்பது கலிப்பாத்தொடர். இங்கு யானை ஒன்றைக் கயிற்ருல் கட்டி, மெல்ல மெல்ல ஈர்த்து வழி நடத்தி வரும் பாகன் செயல் கூறப்பட்டுள்ளது. இங்குப் **'பூங்கயிற்றில்'** என்பதற்குப் **'பூங்கையில்'** என்பது பாடம். இங்கு இந்தப்பாடம் பொருள் சிறப்பின்றி அமைந்துள்ளது. 'கைபுனை வேழம்' என்று முன்னடியில் கையால் ஒப்பனை செய்யப்பட்ட வேழம் பற்றிய குறிப்பு உள்ளது. இங்குள்ள 'கை' என்ற பாடத்தின் தாக்கம் அடுத்த அடியிலும் தொடர்ந்து **'பூங்கையில்'** என்ற பாடம் எழுந்திருக்கலாம். மேலும் புரிபுனை என முன்னுள்ள தொடரோடு **'பூங்கையில்'** என்ற பாடம் பொருந்தாமல் உள்ளது. இங்குப் பூங்கயிற்றில் என்ற பாடமே பொருந்தியதாக அமைந்தது.

பொருள் பொருத்தமும் சிறப்பும் இயைபும் இல்லாதனவாகத் தெளியப்படும் நிலையில் 140 வேறுபாடுகள் அமைந்துள. இவையும் கொள்ளத் தக்கன அல்ல.

மேலே குறிப்பிடப்பெற்ற நான்கு வகைகளிலும் வரும் மொத்தப் பாடங்கள் 572. இவற்றை நீக்கிப் பொருள் நோக்கில் ஆழ்ந்து சிந்திக்கத் தக்கனவாக உள்ள 102 வேறுபாடுகள் இவண் விரிவான ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

2. இ.வை. அனந்தராமையர் பதிப்பின் அடிக்குறிப்பு

இ.வை அனந்தராமையரின் பதிப்பின் அடிக்குறிப்பில் பாட வேறுபாடுகள் தொகுத்துச் சுட்டப் பெற்றுள. இவற்றுள் பொருள் நோக்கில் ஆயத்தக்கனவாய் அமைந்தவை 27 வேறுபாடுகள்.

'அறல் சாஅய்ப் பொழுதோடு' (26.17) என்பதற்கு 'நீரற்று ஓட்டம் சுருங்கிய இளவேனிற்காலம்' என்பது பொருள். இக் காலத்தில் 'தலைவன் தலைவியைத் தண்ணளி செய்தான்' எனக் கூறப்படுகிறது. இங்குப் பாட வேறுபாடாக **'அறல் சாயப் பொருளோடு'** என்பது பொருள் இயைபின்றி அமைந்துள்ளது. 'பல்வரி இனவண்டு புதிதுண்ணும் பருவத்தில்' (26.9) என்றும் 'திசை திசை தேனார்க்கும்' (26.13) என்றும் முந்திய தாழிசை களில் வரும் அடிகளும் இளவேனிற் பருவத்தைச் சுட்டுகின்றன. இங்கும் அப்பருவத்தைச் சுட்டும் வகையில் அமைத்த **'அறல் சாஅய்ப்பொழுதோடு'** என்ற பாடமே ஏற்புடையதாக உள்ளது.

வண்டுகள் திரியும் அருவிகளையுடைய மலை நாடனைச் சுட்டும் வகையில்

"நயனுடி நட்பாக்கும் வினைவர்போல் மறிதரும்

அயமிழி யருவிய அணிமலை நன்னாட" (46.8-9)

எனவரும் பகுதி அமைந்துள்ளது. நட்பு ஆராய்ந்து நட்பாக்கும் சந்து செய்வார் போலத் திரியும் என்று வண்டின் இயல்பும், பள்ளம் நோக்கிப் பாயும் அருவியுடைய மலைநாடு என நாட்டு வளமும் இவ்வடிகளில் கூறப்பட்டுள்ளன. இங்கு **'மறிதரும்'** என்பதற்கு **'மறித்தரும்' 'மறுத்தரும்' 'மறுத்தரு'** என்றும் **'அயமிழி யருவிய'** என்பதற்குப் **'பயமிழியருவிய'** என்றும் வேறுபாடுகள் உள. இதில் **'மறுத்தரு பயமிழி' யருவிய'** என்பது இ.வை. அனந்த ராமையரின் பதிப்பின் அடிக்குறிப்புப் பாடம். **'மறித்தரும் பயமிழி யருவிய'** என்பது நச்சினார்க்கினியர் காட்டும் பாடம். **'மறுத்தரும் அயமிழியருவிய'** என்பது சங்க இலக்கியப் பதிப்புப் பாடம். இவ் வேறுபாடுகள் அனைத்தையும்விட **'மறிதரும் அயமிழியருவிய'** என்ற பழம் பாடமே பொருட் சிறப்புடன் அமைந்துள்ளது அறியலாம்.

'அகலறை வரிக்கும் சாரல்' (49.24) எனவரும் பாடத்திற்கு **'அகலறைவிரிக்கும் சாரல்'** என்ற வேறுபாடு உள்ளது. பூக்கள், அகன்ற பாறையில் கோலஞ்செய்து விளங்கும் சாரல் என்பது இதன் பொருள். பூக்கள் விரிந்து கிடக்கும் சாரல் என்று கொள்வதைவிட, 'பூக்கள் கோலஞ்செய்து விளங்கும் சாரல்' என்று கூறுவது நயமுடையதாக உள்ளது. எனவே **'வரிக்கும் சாரல்'** என்பதையே இங்குப் பொருந்திய பாடமாகக் கொள்ளலாம்.

'கண்பணி கலுழாக்கால்' (53.11) என்பதற்குக் **'கண்பணி கலுழ்பவால்** என்ற வேறுபாடும் பொருந்தாது. மூன்று தாழிசைகளின் இறுதியும் 'கண்பணி கலுழாக்கால்' 'பிறைவனப் பிழவாக்கால்' 'கங்குலும் ஆற்றுக்கால்' என முடிகின்றன. 'கலுழ்பவால்' என்ற வேறுபாட்டை ஏற்றால் இந்தத் தாழிசை இயைபு நலன் கெடுவதோடு பொருள் நிலையும் முரணுகிறது. எனவே **'கண்பணி கலுழாக்கால்'** என்ற பாடமே சிறப்புடையது,

தலைவன் நரந்தம் நாறும் தலைவியின் கூந்தலைப்பிடித்து அதில் ஒரு மாலையை விரலால் சுற்றி மோந்து பார்த்தலும் செய்தான் என்ற பொருளை விளக்கும் வகையில் அமைந்த பகுதியில்.

'விரன்முறை சுற்றி' (54.8) என்பதற்குத் **'தொன்முறை சுற்றி.** என்ற வேறுபாடு உள்ளது. **'விரன்முறை சுற்றி'** என்ற பாடமே நயமுடையதாகத் திகழ்வதைப் பொருளோடு பொருத்தி அறியலாம்.

இ.வை. அனந்தராமையரின் பதிப்பின் அடிக்குறிப்பில் குறிப்பிடப் பெற்ற பிற பாட வேறுபாடுகளும் பதிப்பின் மூல பாடங்களும் பின்வரும் பட்டியலில் குறிப்பிடப் பெற்றுள.

பாடம்	பாடல்/அடி	வேறுபாடு
பிடியளிக்கும்	54.13	பிடிக்களிக்கும்
அஞ்சில வியலுநின்	59.7	அஞ்செலவியலும்நின்
கண்டன்று	62.15	காண்டன்று, கொண்டென்று
ஒலிகொண்ட	68.18	வலிகொண்ட
மறப்பலென்றும்	75.17	மறைப்பலென்றும்
பைபயவாங்கி	80.7	புடையுடைய வாங்கி
கமழ் சென்னி	81.4	கமழ் கண்ணி
முத்தின ஞேக்கி	82.17	முகத்தினி ஞேக்கி
கழலொரு திரை	85.15	கழலொரு சிறை
வேட்டீவாய்	93.16	கேட்டீவாய்
என்னுயிர்	102.8	இன்னுயிர்
வேட்கை	110.3	வாழ்க்கை
கிளைமிசை தொறும்	123.1	சிளைமிசை
குரலிஞேடு	123.2	குழலிஞேடு
வதிசேரும்	123.12	பதிசேரும்
அர்ற்றவுள்ளாய்	124.5	ஆர்ப்பவுள்ளாய்
பாவையுறையுற்றது போல்	138.16	பாறையுறையுற்றது போல்
உரனகத்து	142.21	முரனகத்து

பட்டியலில் கண்ட பாடங்களில் முதலிரு பாடங்களுக்குப் பதிலாக அவற்றின் வேறுபாடுகள் பொருட்டெளிவு உடையன. **'வீழ்பிடியளிக்கும் மையல் யானே'** (54.13–14) என்பதற்குத் 'தான் விரும்பிய பிடிக்கு அளி செய்யும் மருள் கொண்ட யானே' என்பது பொருள். இங்குப் **'பிடியளிக்கும்'** என்பதை விடப் **'பிடிக்களிக்கும்'** என்று வேறுபாடு தெளிவுடன் உள்ளது. 'ஆய்சிலம்பெழுந்தார்ப்ப அஞ்சில இயலும் நீ' (57.7) என்பதற்கு 'அழகிய சிலம்புகள் மிக

ஆரவாரிப்ப அழகினையுடைய சில அடிகள் இட்டு நடக்கும் நீ' என்பது பொருள். '**அஞ்செல இயலும்** என்ற வேறுபாட்டைக் கொண்டால் அழகிய செலவினையுடையாளாய் இயலும் நீ' என்பது பொருளாகும். இந்தப் பொருள் முந்தைய பொருளை விடத் தெளிவும் எளிமையும் உடையது. எனவே இவ்விரிடத்தும் '**பிடிக்களிக்கும்**' (54.13) '**அஞ்செல வியலும் நீ**' (59:7) என்ற இரண்டையும் பொருந்திய பாடங்களாக ஏற்கலாம்.

எஞ்சிய இடங்களில், வேறுபாடுகளை விட மூல பாடங்களே பொருட் சிறப்பும் தெளிவும் நயமும் உடையனவாய் உள. ஆதலால் பழம் பாடங்களையே பொருந்திய பாடங்களாகக் கொள்ளலாம்.

3. நச்சினார்க்கினியர் கூறும் பாடவேறுபாடுகள்

கலித்தொகை உரையாசிரியர் நச்சினார்க்கினியர் தம் உரைப் பகுதியுள் ஆங்காங்கே தம் காலத்து வழங்கிய வேறுபாடுகளை, சிற்சில இடங்களில் உரிய விளக்கங்களோடும் உரைத்துச் சென்றுள்ளார். நச்சினார்க்கினியரால் காட்டப் பெற்றவற்றுள் பொருட் சிறப்புடைய 11 வேறுபாடுகளும், அவ்வேறுபாடுகளுடன் தொடர்பு கொண்ட இ. வை. அனந்தராமையர் பதிப்பு அடிக் குறிப்புப் பாடமொன்றும் இங்குக் குறிப்பிடப் பெற்றுள்ளன.

அடிப்படைப்பாடம்	பா/அடி	வேறுபாடு
தீ நீரைக்கள்ளினும்	4.13-14	திருநீரையும் கள்ளினும் தீநீரக் கள்ளினும்
நாளுங் கோண்மீன்	5.9	நாளுங் கொண்மின்
புறந்தரல் கைவிட்டு	5.17	புறப்படல் கைவிட்டு
பாம்பு சேர் மதிபோல	15.17	பாம்பு சேர்விடம் போல
என்றேள்	18.3	மென்றேள்
தண்ணயந்தனிகொள்ளும்	20.3	தண்ணயத்தணிகொள்ளும்

பாய்திண்டேர்	31.17	பரிதிண்டேர்
உரையாது	88.6	உரையாதி
நின்மெய் தொடுகு	95.24	நின்மெய்தொடும்
எண்ணி எல்லிரா	142.61	எண்ணி எல்லிர எண்ணி

'முளையெயிற்று அமிழ்தூறும் தீ நிரைக்கள்ளினும் மகிழ்செயும் என உரைத்தும் அமையார்' (4.13-4) என்னும் தொடருக்கு 'நாணல் முளை போலும் எயிற்றிடத்தில் ஊறும் அமிழ்து போன்ற இனிய நீரைக் காட்டிலும் மகிழ்ச்சியைத் தருமென்று கூறியும், வேட்கை தணியாதவராகி' என்பது பொருள். இங்கு 'அக்கள்' ளென்று பாடமாயின் இங்ஙனம் மிகக் களிப்பிக்கும் கள்ளென்க; 'திருநீரையும் பாடம்' என நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார். இங்கு மூல பாடப் பொருளே சிறப்புடையது எனத் தெளியலாம். நச்சினார்க்கினியர் காட்டும் இரு பாட வேறுபாடுகளும் சிறந்தவை யல என ஓதுக்கலாம்.

'நாளுங் கோண் மின்' (5.9) என்பதற்கு **'நாளுங் கொண் மின்** என்பது வேறுபாடு. 'நாளும் கோண் மீனுந் தகைத்தலும் தகைமே' (5.9) என்பது தொடர். இது தோழி தலைவனைச் செலவு அழுங்குவிக்கும் பாடல் தொடர். 'நாண்மீனும், மனத்தால் குறித்துக் கொள்ளப்படும் புள்ளும் தகைத்தலைச் செய்யும்' என்பது நச்சினார்க்கினியர் இப்பகுதிக்குத் தரும் உரை. நாளும் கொண்மின் என்பதைக் குறிப்பிட்டு 'இனி நாளுங்கொண்மின்' தகைத்தலும் தகையேம் என்ற பாடத்திற்கு நாளையும் இன்ன நாளென்று குறியும், அப்பொழுது தகைத்தலையும் செய்யேம் என்க' எனக் குறிப்பிட்டுள்ளார். முந்தின பாடத்தைவிட இவ்வேறுபாட்டின் பொருள், தெளிவும் சிறப்பும் உடையதாக உள்ளது. எனவே இங்கு **நாளுங் கொண்மின்** என்ற பாடத்தைச் சிறந்ததாக ஏற்கலாம்.

'புறந்தரல கைவிட்டு' (5.17) என்பதற்கும் **'பாம்புசேர் மதி போல'** (15.17) என்பதற்கும் அமைந்த வேறுபாடுகளாகிய **'புறப்படல் கைவிட்டு' 'பாம்பு சேர விடம் போல'** என்பன பொருட் சிறப்புடையனவல்ல.

தோழி தலைவனைச் செலவழுங்குவிக்கும் பாடலில் விரும்பி நீ என்றோள் எழுதிய தொய்யிலும்' (18.2-3) என்ற தொடரில் **'என்றோள்'** என்பதற்கு **'மென்றோள்'** என்ற வேறுபாடு உள்ளது. தலைவியின் தோளைத் தோழி 'என்றோள்' எனக் கூறுவது அகப் பொருள் மரபாயினும் மென்றோள் எனக் கொள்ளுங்கால் தலைவியின் தோலின் மென்மையும் பெறப்படும் சிறப்பு உள்ளமையால்' இங்கு **'மென்றோள்'** என்பதைச் சீரியதாக ஏற்கலாம்.

'தண்ணயந்தணி கொள்ளும் (20.3) என்பதே **'தண்ணயத் தணிகொள்ளும்** என்ற வேறுபாட்டைவிடச் சிறப்புடையது. **'பாய் திண்டேர்'** (31.17) என்பதை விடப் பரிபூட்டிய திண்டேர் என்ற பொருளைத் தரும் **'பரிதிண்டேர்'** என்பது சிறப்பாகும். பரி தின்டேர் என்பதால் பாய்ந்து செல்லும் இயல்பும் பெறப்படும்.

'உரையாது' (88.6) **'நின்மெய் தொடுகு'** (95.24) **'எண்ணி எல்லிரா'** (142.61) என்பன, அவற்றின் வேறுபாடுகளைவிடப் பொருட் சிறப்பு உடையனவாய் உள.

நச்சினார்க்கினியர் குறிப்பிடுவனவற்றுள் மூன்று வேறுபாடுகள் அடிப்படைப் பாடங்களைவிடப் பொருட் சிறப்புடன் பொலிகின்றன.

4. பாகனேரிப் பதிப்பு-அடிக்குறிப்பு

பாகனேரிப் பதிப்பின் அடிக்குறிப்பில் பிற பதிப்புக்களில் இல்லாத வேறுபாடுகள் உள. **'அகன்ற அல்குல்'** (14.5) என்பதற்கு **'ஆரெழிற்றிதனி** என்றும் **கரந்தியானரக்கவும்'** (84.3) என்பதற்கு **'கரந்தியான் காக்கவும்'** என்றும் **'அன்னை நெஞ்சு'** (107.23) என்பதற்கு **'என்னை நெஞ்சு'** என்றும், **'துன்னிய கலத்துறைந்த** (146.5) என்பதற்குத் **'துன்னிய காலந்துறந்த'** என்றும் **'வினை பொய்ப்பின்'** (149.10) என்பதற்கு **'வினைவாய்ப்பின்'** என்றும் வேறுபாடுகள் உள.

இவ்வேறுபாடுகள் பிற பதிப்புக்களில் சுட்டப்பெறாத சிறப்புக்கு உரியன வேயன்றிப் பொருட் சிறப்புக்கு உரியனவல்ல.

5. அனந்தராமையர் பதிப்பு அடிக்குறிப்பும் நச்சினார்க்கினியரும்

இ.வை. அனந்தராமையர் பதிப்பின் அடிக்குறிப்பிலும் நச்சினார்க்கினியர் உரைக்குறிப்பிலும் குறிப்பிடப் பெறுவது ஒரு பாட வேறுபாடு. **'இனிய செய்தகன்று'** (53.12) என்பதற்கு **'இனிய செய்தமர்ந்து'** என்பது வேறுபாடு.

> "இனிய செய்தகன்று நீ இன்னாதாத் துறத்தலின்
> பனியிவள் படரெனப் பரவாமை ஒல்லுமன்" (53.12-13)

என்பது பாடற்பகுதி. 'துறத்தலின்' என்பதற்கேற்ப முன்னரும் 'அகன்று' என்றிருப்பதே பொருத்தமாக உள்ளது. எனவே இங்கு **'இனிய செய்தகன்று'** என்பதையே சிறந்ததாகக் கொள்ளலாம்

6. அனந்தராமையர் பதிப்பு அடிக்குறிப்பு-பாகனேரிப் பதிப்பு

இ.வை. அனந்தராமையர் பதிப்பின் அடிக்குறிப்பில் குறிப்பிடப் பெற்ற பாடங்கள் ஐந்தினைப் பாகனேரிப் பதிப்பு தன் மூல பாடமாக ஏற்றுள்ளது.

'மாவீழ்வார்' (14.3) என்பதற்கு **'மாவீழ்வான்'** என்றும் **'முன்னிய வாரிடை'** (16.10) என்பதற்கு **'முன்னிய வாற்றிடை'** என்றும், **'பலவனே'** (17.1) என்பதற்குப் **'பயிலனே'** என்றும் 'வெறிகொள' (35.5) என்பதற்கு **'நெறிகொள'** என்றும் **'கொண்டாம்'** (95.20) என்பதற்குக் **'கொண்டோடும்'** என்றும் வரும் வேறுபாடுகள் அனந்தராமையர் பதிப்பு அடிக்குறிப்பில் மட்டுமன்றிப் பாகனேரிப் பதிப்பின் மூலபாடங்களாகவும் உள. இவ்வேறுபாடுகள் ஐந்தும் பொருட் சிறப்பும் நயமும் உடையன என்பதைப் பொருளோடு பொருத்தி அறியலாம். எனவே இவ்வைந்து வேறுபாடுகளும்சிறந்த பாடங்களாகக் கொள்ளத்தக்கவை.

7. இ வை அனந்தராமையர் - பாகனேரிப் பதிப்புக்களின் அடிக் குறிப்புக்கள்

இ.வை. அனந்தராமையர் பதிப்பிலும், பாகனேரிப் பதிப்பிலும் அடிக்குறிப்பாக 34 வேறுபாடுகள் உள. இவ்வேறுபாடுகள் அனைத்தும் பொருட் சிறப்பும் இயைபும் இல்லாதவை. சான்றாகத்

'திறந்துண்ண' (29.20) என்பதற்குத் **'துறந்துண்ண'** என்பது வேறுபாடு. 'வண்டுகள் திறந்து உண்ணும் படியாக நிரைந்த இதழ்கள் அலர்ந்த மண மலர்கள்' என்பது இங்குக் கூறப்படும் கருத்து. இங்குத் **'திறந்துண்ண'** என்னும் பாடம் பொருந்துவது போல் **'துறந்துண்ண'** என்ற வேறுபாடு பொருந்தவில்லை. இம் முறையில் பொருட் பொருத்தமும் சிறப்பும் இன்றியே பிற வேறுபாடுகளும் உள. எனவே மூலபாடங்களையே இவ்விடங்களில் சிறந்த பாடங்களாகக் கொள்ளல் நேரிதாம்.

8. இ.வை. அனந்தராமையர் அடிக்குறிப்பும், பாகனேரிப் பதிப்பும் மர்ரே பதிப்பும்

இ.வை. அனந்தராமையர் பதிப்பின் அடிக்குறிப்பில் குறிப்பிடப் பெற்ற ஒரு வேறுபாட்டைப் பாகனேரிப் பதிப்பு, மர்ரே பதிப்பு ஆகியன தம் மூல பாடமாகக் கொண்டுள்ளன. **'அளித்தி'** (95.31) என்பதற்கு **'அளித்து'** என்பது வேறுபாடு. **'அளித்து'** என்பதே இங்குப் பொருட் சிறப்புடைய பாடம். மேலும் 'அளித்து' – **'விளித்து'** எனத் தொடர்ந்து ஈரடிகளில் (30,31) முதற்சீரின் இயைபுச் சிறப்பும் இப்பாட வேறுபாட்டில் அமைதல் காணலாம். எனவே **'அளித்து'** எனவரும் வேறுபாட்டை இங்குச் சிறந்தபாடமாகக் கொள்ளலாம்.

9. இ.வை. அனந்தராமையர் அடிக்குறிப்பும் பிற பதிப்புக்களும்

இ.வை. அனந்தராமையர் பதிப்பின் அடிக்குறிப்பும் பாடவேறுபாடுகளின் பின்னே வந்த பல பதிப்புக்களில் பொருட் சிறப்புடையவையாகக் கொள்ளப்பட்டுப் பதிப்பில் மூல பாடங்களாக ஏற்கப்பட்டுள்ளன. அம்முறையில் வரும் பாடங்களும் வேறுபாடுகளும் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

'ஒல் கிடத்து' (25.20) என்பதற்கு **'ஒல்கத்து'** என்றும் **'உலப்பிலா உணர்விலார்'** (25.20) என்பதற்கு **'நல்கிலா உணர்விலார்'** என்றும் **'ஏர்நுதலாய்'** (67.19) என்பதற்கு 'ஏர் **நுதரும்'** என்றும், **'உரையாமல்'** (77.15) என்பதற்கு **'உரையாமை'** என்றும் **'வாடில் வெ்குளி'** (104.42) என்பதற்கு **'வாடா வெகுளி'** என்றும் **'அளியே'** (127.22) என்பதற்கு **'அளிமே'** என்றும்

'உளைந்தியான்' (142.31) என்பதற்கு **'வளைந்தியான்'** என்றும் வேறுபாடுகள் உள. இ.வை. அனந்தராமையர் பதிப்பின் அடிக் குறிப்பில் காணப்பெறும் இவ்வேறுபாடுகளைப் பின்னே வந்த கழகம், மர்ரே, சமாசப் பதிப்புக்கள் தம் மூல பாடங்களாகக் கொண்டுள்ளன.

'ஒல்கிடத்து' என்பதற்கு 'வறுமையுற்ற காலத்தில்' என்பது பொருள். ஒல்கத்து என்பதும் ஏறத்தாழ அப்பொருளைப் பயப்பதே' எனினும் 'சொல் வத்து' என முதலடியின் முதற்சீர் அமைந்ததற் கேற்ப 'ஒல்கத்து' என்று அமைந்தால் சந்த நயம் அமையும். எனவே **'ஒல்கத்து'** என்பதனைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம். அதுபோல **'உலப்பிலா உணர்விலார்'** என்பதனைவிட **'நல்கிலா உணர்விலார்'** என்பது சிறந்த பாடம். 'ஒல்கத்து நல்கிலா உணர்விலார் தொடர்பு போல்' (25.20) என்பது முழு அடி.

'ஏர்நுதலாய் எண்ணி' என்பதற்கு **'ஏர்நுதல் தாம் எண்ணி'** எனவரும் பாடமும் பொருட்சிறப்பும் உடையதாக உள்ளது. **'ஏர்நுதலாய் தாம் எண்ணி'** என இ.வை. அனந்தராமையர் பதிப் பின் அடிக்குறிப்பில் இதற்குப் பிறிதொரு வேறுபாடும் உள்ளது. அது சந்த நீட்சியுடையது.

உரையாமை, **வாடா வெகுளி, அளிமே, வளைந்தியான்** என வரும் வேறுபாடுகளும் பொருட் சிறப்புடன் அமைந்தவையா தலால் அவற்றைச் சிறந்தனவாகக் கொள்ளலாம்.

'வயாவிடத்து' (40.22) என்பதற்கு **'வியர்விடத்து'** என்ற வேறுபாடு இ.வை. அனந்தராமையர் பதிப்பின் அடிக்குறிப்பில் உள்ளது. இதனைப் பாகனேரிப் பதிப்பின் அடிக்குறிப்பிலும் காண் கிறோம் எனினும் இவ்வேறுபாடு பொருட்சிறப்பு உடையதாக இல்லை. இங்கு **'அயாவிடா'** எனப் பிறிதொரு வேறுபாடும் பிற பதிப்புக்களில் உள்ளது. இங்கும் பொருள் வேறுபாடுஓரளவு உண்டு; எனினுஞ் சிறப்பில்லை மூலபாடத்தையே சிறந்ததாகக் கொள்ளலாம்.

'**ஒலியிற்றுஞ்சும்**' (42.3) என்பதற்கு '**ஒலியுற்றுஞ்சும்**' என்ற சிறப்புடைய வேறுபாடு ஒன்று உள்ளது. ஒலியிற்றுஞ்சுதலைவிட ஒலியுற்றுஞ்சுதல் (தாலாட்டுப் போலக் கேட்டு உறங்குதல்) இயல்பு. எனவே '**ஒலியுற்றுஞ்சுதல்**' என்பதனைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

இ.வை அனந்தராமையர் பதிப்பின் அடிச்குறிப்பில் மட்டு மன்றி, இதனைப் பாகனேரிப் பதிப்பு, கழகப் பதிப்பு, சமாசப் பதிப்பு ஆகியனவற்றில் மூல பாடமாகவும் காண்கிறோம்.

'**ஏறெதிர் நிற்ப**' (104.51) என்பதற்கு '**ஏற்றெதிர் நிற்ப** என்றும், '**பாட்டதற்கு**' (105.58) என்பதற்குப் '**பட்டதற்கு**' எனறும் '**காத்தோம்பும்**' (120.23) என்பதற்குக் '**காத்தாற்று**' என்றும் '**முனிவன்**' (144.53) என்பதற்கு '**முனிவேன்**' என்றும் வரும் வேறுபாடுகள் உள. இப்பதிப்பின் அடிக்குறிப்பில் பயின்ற இவ் வேறுபாடுகள் மர்ரே, சமாச பதிப்புக்களில் மூல பாடங்களாகக் கொள்ளப்பட்டுள்ளன. இவற்றுள் '**ஏற்றெதிர் நிற்ப**' '**பட்டதற்கு**' என்பன சிறந்தவையே. எஞ்சிய பாடங்களுக்கும் வேறுபாடு களுக்கும் மிகுதியும் பொருண்மை மாற்றமில்லையாதலால் '**காத்தோம்பும்**' '**முனிவன்**' என்னும் பழம் பாடங்களையே சிறப்புடையனவாகக் கொள்ளலாம்.

10. கழகம், மர்ரே, சமாசப் பதிப்புக்கள்

பிற்காலப் பதிப்புக்களில் மட்டும் குறிப்பிடப்பெற்றுள்ள இரு பாட வேறுபாடுகளைக் காண்போம்.

'உழப்பாளை' (99.16) என்பது இ.வை. அனந்தராமையர் பதிப்புப் பாடம். இதற்கு '**இழப்பாளை**' என்ற பாடவேறுபாடு உள்ளது. பாகனேரிப் பதிப்பின் அடிக்குறிப்பிலும் இவ்வேறுபாடு உள்ளது. கழகம், மர்ரே, சமாசப் பதிப்புக்கள் இப்பாட வேறு பாட்டைத் தம் மூலபாடங்களாகவும் கொண்டுள்ளன. வேய்நலம் இழந்த தோள் கவின் வாட உழப்பாளை' (99.16) என்பது தொடர். அழகு கெட்டு வருந்துபவள் என்று தலைவி இங்கு குறிப்பிடப்

பெற்றுள்ளாள். 'கவின் வாட இழப்பாளை-எனப்பாடம் கொண்டால் அழகு கெட்டதோடு தலைவனிடம் பெற வேண்டிய இன்பத்தையும் இழந்தவள் என்ற பொருள் கிடைக்கும். தலைவனிடம் பெற வேண்டிய இன்பத்தையும் இழந்த இத்தலைவிக்கு அருள் நோக்கம் செலுத்துவாய்-என வேண்டுவது பொருத்தமாகவும் அமையும். 'இவளிவட் காண்டிகா' என்பது தலைவனை நோக்க அருள் செய்யுமாறு வேண்டும் குறிப்பாகும். எனவே 'உழப்பாளை' என்ற பாடத்தை விட **'இழப்பாளை'** என்ற பாடத்தைச் சிறந்ததாகக் கொள்ளலாம்.

'நின்னை நோதக்கதோ' (107.22) என்னும் பாடத்திற்கு **'அன்னை நோதக்கதோ'** என்ற வேறுபாடு உள்ளது. பாகனேரிப் பதிப்பின் அடிக்குறிப்பிலும் இவ்வேறுபாடு குறிக்கப் பெற்றுள்ளது. கழகம், மர்ரே, சமாசப் பதிப்புக்கள் இவ்வேறுபாட்டைத் தம் மூலபாடமாகவும் கொண்டுள்ளன.

> ''நின்னை நோதக்கதோ' இல்லமன் நின்னெஞ்சம்
> அன்னை நெஞ்சாகப் பெறின்'' (107.22-23)

என்பது பாடற்பகுதி. இது தலைவி தோழிக்கு அறத்தொடு நிற்கும் பாடல். 'அன்னையின் நெஞ்சு நின்னுடைய நெஞ்சாகப் பெறின் அவள் நோவத்தக்கது இல்லை' என்பது இப்பகுதியின் கருத்து. பாடற் பகுதியின் கருத்துக்கு இயைய 'அன்னை நோதக்கதோ' என்ற வேறுபாடு பொருத்தமான பாடமாக அமைகிறது. எனவே **'நின்னை நோதக்கதோ'** என்ற பாடத்தைவிட **'அன்னை நோதக்கதோ'** என்ற வேறுபாட்டை இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

கலித்தொகையில் அமைந்த பொருள் வேறுபாடுகள் வகை வாரியாக இங்குப் பிரித்துக் காட்டப் பெற்றுள.

பொருள் வகை வேறுபாடுகள்:

ஒரு பொருள் தரும் இரு சொற்கள்	161
ஏடுகளில் சிதைவுற்றவை	97
மிகுதியும் பொருள் மாற்றம் இல்லாதவை	174
பொருத்தமில்லாப் பொருளுடையவை	140

இ.வை.அ. பதிப்பு அடிக்குறிப்பு	27
நச்சினார்க்கினியர் கூறுவன	12
பாகனேரிப் பதிப்பு அடிக்குறிப்பு	5
இ.வை.அ. நச்சினார்க்கினியர்	1
இ.வை.அ-பாகனேரிப் பதிப்பு	5
இ வை.அ-பாகனேரி அடிக்குறிப்பு	34
இ.வை.அ-பாகனேரி - மர்ரே	1
இ.வை.அ-பிற பதிப்புக்கள்	15
கழகம், மர்ரே, சமாசப் பதிப்புக்கள்	2
ஆகக் கூடுதல்	674

மேலே குறிப்பிடப் பெற்ற பட்டியலில் விரிந்த பொருள் ஆய்வுக்கு உரியனவாக எடுத்துக் கொள்ளப்பட்ட 102 பாட வேறுபாடுகளின் இ.வை. அனந்தராமையர் பதிப்பல்லாத பிற பதிப்புக்களில் காணப்பெறும் 23 பாட வேறுபாடுகள் சிறந்தவை என நிறுவப்பட்டுள்ளன- இவை மூல பாடங்களாகக் கொள்ளத் தக்கனவாகும்.

பயிற்சி மிகுதியின் காரணமாகக் கலித்தொகையில் பாட வேறுபாடுகள் மலிந்துள. நெய்தல், மருதம், ஆகிய பகுதிகளில் மிகுதியான அளவில் வேறுபாடுகள் எழுந்துள. பாலைக் கலியில் பாட வேறுபாடுகள் குறைந்த அளவில் உள.

7. அகநானூறு

அகநானூற்றில் கடவுள் வாழ்த்துடன் அமைந்த 401 பாடல்களில் வேறுபாடு அமைந்த 382 பாடல்களில் மொத்தம் அமைந்த வேறுபாடுகளின் எண்ணிக்கை 1466. இவற்றில் பொருள் வேறுபாடு என்னும் பகுப்புக்குரியன. 460 மட்டுமே.

அகநானூற்றுப் பாடல்களை ஐம்பது ஐம்பது பாடல் கொண்ட எட்டுத் தொகுதிகளாகப் பிரித்துக் கொண்டு, அவற்றில் இடம் பெற்ற இன்றியமையாத பொருள் வேறுபாடுடைய 108 பாடங்கள் இக்கட்டுரைக்கண் ஆய்ந்து நிறுவப்பட்டுள்ளன.

1. முதல் தொகுதி

தோழி தலைமகளைப் பருவங்காட்டி வற்புறுத்தும் பாடலொன்றில்

"பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்" (4.10–12)

என்னும் பகுதி உள்ளது. சோலையில் துணையொடு தங்கிய தேன் உண்ணும் வண்டுகள் மயங்கும் என அஞ்சி, தேர்மணிகளின் நாவை ஒளியாமல் கட்டிய தேரினை உடையவன் என்பது இங்குச் சுட்டப்பெறும் கருத்து.

ஆர்த்த என்னும் சொல்லுக்கு ஒலியாமல் கட்டிய என்ற பொருள் அமைந்திருப்பினும் ஆரவாரித்த என்ற பிறிதொரு பொருளும் உண்டாதலால் இப்பாடம் பொருள் மயக்கம் தருவதாக உள்ளது. எனவே **'மணிநாவார்த்த'** என்பதற்குப் பதிலாக **'மணிநாயாத்த'** எனவரும் பாடம் தெளிவுடையதாக உள்ளது. யாத்த என்பதற்குக் கட்டிய என்பது பொருள்.

1.1. வள்ளுகிர்கதுவலின்

ஈசற்புற்றின் குளிர்ந்த மேற்புறத்தில் தங்கிய புற்றுஞ் சோருகிய இரையையுடைய பெரிய கையினைப் பெற்ற ஆண் கரடியின் தொங்கிய தோல் உறைக்குள் பொருந்திய கூரிய நகம் பற்றிக் கொள்வதால் பாம்பு தன் வலிமை அற்றொழியும் இரவு என, இரவுப் பொழுதின் இயல்பைச் சுட்டும் பாடற் பகுதியில் **'வள்ளுகிர்கதுவலின்'** (8.3) என்ற பாடம் உள்ளது. இதற்கு **'வள்ளுகிர்க்காலின்'** என்ற வேறுபாடு உள்ளது. **'வள்ளுகிர் கதுவலின்'** என்ற பாடத்தையே இதுவரை அனைவரும்

ஏற்றுள்ளனர். கரடி தன் கையில் புற்றுஞ்சோருகிய இரையை வைத்திருப்பதால், கையினல் தரையில் ஓடும் பாம்பைப் பற்றுதல் எளிய செயலன்று ஆதலாலும், தரையில் ஓடும் பாம்பின்மீது கரடியின் கால்கள் பட்டு, அதனல் பாம்பின் வலியழிதல் இயல்பாதலானும், இங்கு **'வள்ளுகிர்க்காலின்'** என்ற பாடத்தைச் சிறந்ததாகக் கொள்ள வாய்ப்புண்டு—எனினும், 'உகிர்' என வருதலின் **'கால்'** என்பது மிகையாக அமைதலாலும் பாம்பைப் பற்றுதல் என்னும் செயலுக்குரிய கதுவலின் என்ற வினை இப் பாடத்தில் இன்றியமையாமையாலும் **'வள்ளுகிர் கதுவலின்'** என வரும் பாடமே சிறப்புடையது.

1.2. மணிஏரைம்பால்

இப்பாடலில் 'துளிதலைத்தலைஇய மணிஏர் ஐம்பால்' (8.15) என்பது பிறிதொரு தொடர். மழைத்துளியைத் தன்னிடத்தே கொண்ட நீலமணி போன்ற அழகிய கூந்தல் என்பது இதன் பொருள். **'மணியேரைம்பால்'** என்பதற்கு **'மழையேரைம்பால்'** என்பது வேறுபாடு. 'மழைத்துளிகள் முத்து முத்தாகத் தங்கி நீலமணி போல் காட்சி தரும் இயல்புடைய கூந்தல்' என்பதால் மீண்டும் 'மழை' பற்றிய குறிப்பு இங்குப் பொருத்தமில்லாததாகி விடுகிறது. எனவே **'மணிஏர் ஐம்பால்'** என்ற பாடமே இங்குச் சிறப்புடையது.

1.3. உடைதரும் எக்கர்

'குரு உத்திரைப் புணரி உடைதரும் எக்கர்' (10.9) என்பது பிறிதொரு பாடற்றொடர். **'உடைதரும் எக்கர்'** என்பதற்கு **'அடைதரும் எக்கர்'** என்றும் வேறுபாடு உள்ளது. கடலின் அலைகள் கரையில் உள்ள மணல் மேட்டை உடைப்பன போல் மோதுகின்றன என முதற்பாடத்தால் பெறும் பொருளே இங்குச் சிறப்புடையதாக உள்ளது. கொண்டலொடு என முதலடியில் வரும் குறிப்பும் கீழ்க்காற்று வீசுதலால் கடலலைகள் விரைவுடன் மோதுகின்றன என்னும் குறிப்பைத் தருகின்றது. இங்கு **'அடைதரும் எக்கர்'** என்பது பொருட் சிறப்பில்லாப் பாடம். **'உடைதரும்** எக்கர் எனப் பாடங் கொள்ளல் நேரிது.

1.4. 'தெறலரும் மரபின்

'தன்கடல்' (13.1) என்றும் **'தெறலருமரபில்'** (13.3) என்றும் வரும் தொடர்களுக்கு முறையே **'தண்கடல்' 'தொல்லரும்மரபின்** என்ற வேறுபாடுகள் உள. ஈரிடத்தும் வேறுபாடுகளைவிட முதலிற் குறிப்பிடப்பெறும் பாடங்களே பொருட் சிறப்புடையனவாய் உள. தனக்கு உரிமையுடைய கடலிற் பிறந்த முத்து, தனக்கு உரிமையுடைய மலையில் அமைந்த முருகக் கடவுள் எனத் தன்னுரிமைச் சிறப்பை வலியுறுத்தும் வகையில்தன் கடற்பிறந்த (13.1) 'தன் மலைத் தெறலரும் மரபின் கடவுள் (13.2-3) என்னும் குறிப்புகள் அமைந்திருத்தலால் **தன்கடல்'** என்ற பாடத்தைச் சிறந்ததாகக் கொள்ளலாம். **'தொல்லரும் மரபின்** கடவுள்' எனப் பழமைச் சிறப்பைச் சுட்டுவ்தைவிடத் **'தெறலரும் மரபின் கடவுள்'** என வலிமைச் சிறப்பைச் சுட்டும் பாடத்தைச் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

1.5. மருங்கின் நறும்பூ

'குறும்பொறை மருங்கின் நறும்பூவயர' (14.8) என்னும் தொடர் முல்லைத் திணைப்பாடலொன்றுக்கு உரியது. கோவலர் ஆநிரைகளை முல்லை நிலத்தில் மேயவிட்டு, சிறிய குன்றுகளிடத்தே நறிய பூக்களை மாலையாகக் கட்டி மகிழ்ந்திருப்பர் என்ற செய்தி இங்குக் குறிப்பிடப்பட்டுள்ளது. **'மருங்கின் நறும்பூவயர'** என்பதற்கு **'மருங்கினிறும்பூதயர'** என்ற பாடவேறுபாடு உள்ளது. வேறுபாடு பொருள் பொருத்தமும் சிறப்பும் இல்லாதது.

1. 6. செல்லேன்

தலைமகள் தலைமகனிடம் தான் பரத்தையைச் சந்தித்த நிகழ்ச்சியைக் கூறும் மருதப் பாடலொன்றில் **'கண்டுநிலைச் செல்லேன்'** (16.11) என்பதற்குக் **'கண்டுநிலைச் சொல்லேன்'** என்ற வேறுபாடு உள்ளது. சிறுதேர் ஓட்டிய தன் மகனைக் கண்டு பரத்தை மகிழ்ந்து அவனுடன் உரையாடுகின்றாள். அதனைக் கண்ட தலைவி தன் வியப்பு நிலையினின்று மீளாதவளாய் அவனை அணைத்துநீயும் இவற்குத் தாயே என்று கூறினாள். 'கண்டு நிலைச் செல்லேன்' என்பத்ற்கு வியப்பு நிலையினின்று மீளேனாய் என்பது

பொருள். 'நீயும் இவற்குத் தாய்' எனத்தலைவி பரத்தையிடம் கூறும் சொற்கள் பின்னே வருதலால், **'கண்டுநிலைச் சொல்லேன்'** என்ற வேறுபாடு இங்குப் பொருத்தமில்லாதது.

1. 7. துணிந்து

தோழி இரவு வருவானைப் பகல் வருக எனக் கூறும் குறிஞ்சித் திணைப் பாடலொன்றில் 'நடுங்காது **துறந்து**' (18 6) என்பதற்கு 'நடுங்காது **துணிந்து**' என்ற வேறுபாடு உள்ளது. கடுங்கண் பன்றி போல 'நடுக்கமின்றிக் கடந்து' ஏறி அணங்குறையும் இத்துறையைத் தாண்டி நள்ளிரவில் வருவார் உளரோ என்பது தோழி கூறும் கூற்று. 'நடுங்காது துறந்து' என்பதற்கு, நடுக்கமின்றிக் கடந்து என்பது பொருள். தலைவன் கடந்து வரும் செயலைக் குறிக்கும் வகையில் 'அருந்துறைபேர் தந்து' எனவரும் தொடர்பின்னே வருதலாலும், நடுங்காது 'நாம அருந்துறை' என முன்னும் பின்னும் உள்ள சொற்களுக்கு ஏற்ற வகையில் 'துணிந்து' என்ற சொல் அமைந்திருத்தலாலும், இங்கு **'நடுங்காது துணிந்து'** என வருவதைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

1. 8. ஓங்கு கிளை

'ஞாழல் ஓங்கு கிளை' (20.5) என்பதற்குரிய வேறுபாடு 'ஞாழல் ஒடுங்கு கிளை' என்பதாகும். 'ஞாழல் மரத்தின் உயர்ந்த கிளை' இங்குச் சுட்டப் படுகிறது. அக்கிளையில் ஊசல் கட்டப்பட்டிருக்கும் குறிப்பைக் கொடுங்கழித்தாழை வீழ்கயிற் றுசல் தூங்கி' எனவரும் பகுதி தெளிவுறுத்தும். ஊசல் கட்டுவதற்கு ஏற்ற கிளை என்னும் குறிப்பால் **'ஞாழல் ஓங்கு கிளை'** என்ற பாடமே இங்குச் சிறப்புடையதாதல் தெளியலாம்.

1. 9. சாந்துபுலர்ந்த

மருதப்பாடலொன்றில் 'நறுஞ்சாந்தணிந்த கேழ்கிளர் அகலம்' (26.14) எனத்தலைவனின் மார்பு சுட்டப்பெறுகிறது. 'நறுஞ்சாந் **தணிந்த**' என்பதற்கு 'நறுஞ்சாந்து **புலர்ந்த**' என்ற வேறுபாடு உள்ளது. விடியலில் பரத்தை இல்லத்திலிருந்து தலைவன் வந்தவனுதலால், அவன் மார்பில் சந்தனம் புலர்ந்துள்ளது எனக்

கூறுதலே பொருந்தும். பரத்தையிற் கூடிவந்தமையால் பிள்ளை பெற்ற தன் கிழத்தி புல்லுதலை விரும்பியும், அவள் மார்பில் ஒழுகிய தீம்பால் தன் மார்பில் படுவதை அஞ்சி விலகினன் எனவும் இங்குக் குறிப்பிடப் பெற்றுள்ளது. எனவே **'நறுஞ்சாந் தணிந்த** என்பதைவிட நறுஞ்சாந்து **புலர்ந்த'** என்பது இங்குச் சிறந்த பாடமாக அமைகிறது.

1. 10. அமையாராயினும்

தலைமகள் தோழிக்கு இளவேனிற் காலநிகழ்ச்சிகளையும் சிறப்புக்களையும் உணர்த்தித் தலைவனின்றியே அது கழிந்தமைக்கு வருந்திக் கூறும் பாலைத்திணைப் பாடலொன்றில் **'அமையாராயினும்'** (37.1) என்னும் தொடர் அமைந்துள்ளது. மறந்தவன் அமையார் எனக் கூறிய தோழிக்குத் தலைவி வன்புறை எதிரழிந்து கூறுவதாக வரும் பகுதி இது. **'அமையாராயினும்'** என்பதற்கு **'அமைகு வராயினும்'** என்ற வேறுபாடு உள்ளது. இவ்வேறுபாடு பொருத்த மில்லாதது. 'தலைவர் உன்னை விடுத்து அங்குத் தங்கியிரார் எனத் தோழி கூறலே மரபு'. எனவே **'அமையாராயினும்'** எனவரும் பாடத்தைச் சிறந்ததாகக் கொள்ளலாம்.

2. இரண்டாம் தொகுதி

வினைமுடித்து மீளும் தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லியதாக வரும் முல்லைத்திணைப் பாடலொன்றில் பண்ணன் சிறுகுடிப் படப்பையில் உள்ள 'நுண்ணிலை புன்காழ் நெல்லிப் பைங்காய்' (54 14–15) பற்றிய குறிப்பு வந்துள்ளது. சிறிய இலையும் புல்லிய வித்தும் உடைய நெல்லியின் பைங்காய் என்பது இதன் பொருள். **'புன்காழ் நெல்லி'** என்பதற்குப் **புன்கால் நெல்லி** என்பது வேறுபாடு. காயைச் சார்ந்திருக்கும் இலை, வித்து ஆகியவற்றைச் சுட்டி நெல்லிக்காயைச் சுட்டுவது பொருத்தமாக உள்ளது. இலையையும் அடிமரத்தையும் சுட்டி நெல்லிக்காயைச் சுட்டுவதாகக் கொள்ளல் பொருத்தமாக அமையாது. 'புன்கால்' என்பது புல்லிய அடிமரத்தைச் சுட்டும். எனவே இங்குப் **'புன்காழ் நெல்லி'** என்பதனைப் பொருந்திய பாடமாகக் கொள்ளலாம்.

2. 1. சீர்மிகுமுருகன்

'சினமிகு முருகன்' (59.11) என்பதற்குச் **'சீர்மிகு முருகன்'** என்பது வேறுபாடாக உள்ளது. முருகன் சினச் சிறப்பையும் பெருமையையும் முறையே இவை குறிப்பிடுகின்றன. பொருள் நிலையில் இவற்றிடையே மிகுதியும் மாற்றமில்லை. எனினும் 'சூர் மருங்கறுத்த' என்பதால் முருகனின் சினச் சிறப்பும், 'சுடரிலை நெடுவேல்' என்பதால் முருகனின் கருவிச் சிறப்பும் வெளிப் படுகின்றன. மீண்டும் சினச் சிறப்பைச் சுட்டும் வகையில் **'சினமிகு முருகன்'** எனவருவது பொருத்தமில்லாது உள்ளது. மேலும் **'சூர் மருங்கறுத்த - சீர்மிகு முருகன்'** என்னும் போது எதுகைச் சிறப்பும் அமைகிறது. எனவே இங்குச் **'சீர்மிகு முருகன்'** என்பதைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

2. 2. மண்ணுநள்போல

அல்ல குறிப்பட்ட தலைவன் முந்தைய நிகழ்ச்சியொன்றைத் தன் நெஞ்சிற்குச் சொல்லுவதாய் வரும் குறிஞ்சித்திணைப் பாட லொன்றில் 'நெடுஞ்சுழி நீத்தம் மண்ணுநீர்போல' (62.10) என்ற உவமைத் தொடர் வந்துள்ளது. **'மண்ணுநீர் போல'** என்பதற்கு **'மண்ணுநள் போல'** என்பது வேறுபாடு. 'கடும் புனல் மலிந்த காவிரிப் பேரியாற்று நெடுஞ்சுழி நீத்தம்' என்பதால் காவிரியின் வெள்ளப் பொருக்குச் சுட்டப் பெற்றது. வெள்ளத்தில் குளிப்பவள் போல எனப் பொருள் கொள்ளும் வகையில் **'மண்ணுநள் போல'** என்பதை இங்குச் சிறந்த பாடமாக ஏற்கலாம். மேலும் நீத்தத்தில் நீராடியவர் போல 'நெருநல் நடுங்களுர் தீர ஆகம்அடைதந் தோள்' என அவள் பெற்ற புணர்ச்சியின்பம் இவ்வுவமைக்குப் பொருளாகப் பொருத்தமுற அமைந்துள்ளதும் அறியத்தக்கதாகும்.

2. 3. கடுங்கால் மறவர்

மற்றொரு பாலைப் பாடலில் 'கறவை தந்த கடுங்கால் மறவர்' (63.12) என்றும் 'முதுவாய்ப் பெண்டின் செதுகால் குரம்பை' (63.14) என்றும் தொடர்கள் உள. **'கடுங்கால் மறவர்'** என்பதற்குக் **'கடுங்கண் மறவர்'** என்றும் **'முதுவாய்ப் பெண்டின்'** என்பதற்கு **'முதுகாற் பெண்டின்'** என்றும் பாடவேறுபாடுகள் அமைந்துள.

கறவை **தந்த** மறவர் என்பது வெட்சி வீரரைக் குறிக்கும் தொடர். வெட்சி வீரர்கள் வேகம் மிக்க காலினை உடையராய் இருந்தனர் எனக் கொள்வது அவர்களது நிரைகவர்தல் தொழிலுக்குச் சிறப்பாகும். எனவே '**கடுங்கால்**' மறவர் என்பதைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம். முதிய பெண்டிரின் சோர்ந்த கால்களைப் போல் புல்லிய கால்களை உடைய குடில் எனக் கொள்ளுதல் பொருத்தமாக இருக்கும். எனவே '**முதுவாய்ப் பெண்டிர்**' என்பதைவிட '**முதுகாற் பெண்டிர்**' என்பதைப் பாடமாகக்கொள்வது சிறப்பாகும்.

2. 4. கடுக்கும்

'வேற்றுமுனை **கடுக்கும்**' (67.11) என்பதற்கு '**வேற்றுமுனை கடந்து**' எனவரும் வேறுபாடு பொருத்தமில்லாதது. நடுகற்கள், ஊன்றிய வேலும் சார்த்திய பலகையும் கொண்டிருத்தலால் பகைவருடன் போர் செய்யும் முனைப்புலத்தை ஒத்தது எனவரும் உவமைச் சிறப்பு வேறுபாடாக அமைந்த பாடத்தில் இல்லை. எனவே '**வேற்றுமுனை கடுக்கும்**' என்பது சிறந்த பாடம்.

2. 5 நெடுங்குடை

'விண்பொரு நெடுவரை இயல்தேர் மோரியர்' (69.10) என்பதில் '**விண்பொரு நெடுவரை**' என்பதற்கு '**விண்பொரு நெடுங்குடை**' எனப்பாட வேறுபாடு உள்ளது. 'விண்ணை அளாவும் நெடுவரைகளில் இயலும் தேர்' என்பது முதற் பாடத்தின் பொருள். விண்ணளாவிய வெண்குடை அமைந்த தேர்' என்பது பின்பாடத்தின் பொருள். தேர்கள் இயங்க மலைகளை வெட்டி மோரியர் வழி அமைத்தனர் என்ற குறிப்பு, பின்னேவரும்'பொன் புனை திகிரி திரிதரக் குறைத்த அறை' (69.11-12)என்ற பகுதி யால் சுட்டப்படுகிறது. இக்குறிப்பால் மலைகளில் இயலும் தேர் என்ற செய்தி பெறப்படும். எனவே அச் செய்தியையே உரைக்கும் வகையில் அமைந்த 'விண்பொரு நெடுவரை இயல்தேர்' என்ற பாடத்தை விடுத்துப் பிறிதொரு சிறப்பையும் சுட்டும் வகையில் அமைந்த '**விண்பொரு நெடுங்குடை இயல் தேர்**' என்பதனை இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

2. 6. விடுத்தியாயின்

'சூழ்ந்தனையாயின்' (77.3) என்பதற்கு **'விடுத்தனையாயின் விடுத்தியாயின்'** என்பன வேறுபாடுகள். இவற்றில் 'விடுத்தியாயின்' என்பதைப் பொருட் சிறப்புடைய பாடமாகக் கொள்ளலாம். 'தலைவியின் நெற்றி பசப்ப, பொருள் ஈட்டக் காட்டு நெறியில் செல்லல் நன்று என என்னை 'விடுத்தியாயின்' கொடியதை ஆய்ந்து கொண்டனையாவாய்'-எனத் தலைவன் பிரியக் கருதிய நெஞ்சிற்குக் கூறுவதாக இப்பகுதி உள்ளது. 'விடுத்தனையாயின்' என்பது இறந்த காலக் குறிப்பினது. தலைவன் இன்னும் பிரியவில்லையாதலால் இது பொருந்தாது. 'சூழ்ந்தனையாயின்' என்பதற்கு 'எண்ணுதியாயின்' என்பதுபொருள். இப்பொருளை விட 'விடுத்தியாயின்' என்பது சிறப்புடையதாக உள்ளது. மேலும் 'இன்னுச் சூழ்ந்திசின்' என 4ஆம் அடியில் வரும் பாடத்தின் தாக்கத்தால் 3ஆம் அடியிலும் **சூழ்ந்தனை'** என்ற பாடம் பிறந்ததாகக் கருதவும் இடமுண்டு. எனவே **'விடுத்தியாயின்'** என்பதை இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

2. 7. கல்லுறுத்தியற்றிய

'கல்லுறுத்தியற்றிய வல்லுவர்ப் படுவில்' (79 3) என்பதற்குத் தோண்டுதல் செய்து அமைத்த மிக்க உவர்த்தன்மையுடைய கிணறு என்பது பொருள். இங்குக் கல்லுறுத்தியற்றிய என்பதற்கு வேறுபாடாகக் **'கல்லறுத்தியற்றிய'** என வருவது பொருத்தமின்றி அமைந்துள்ளது.

2. 8. பரப்பகம்

'புணர்திரைப் பரப்பகந் துழை இத் தந்த பன்மீன்' (80.5-6) என்பதற்கும் பொருந்தும் அலைகளையுடைய கடலகத்தே துழவிக் கொணர்ந்த பல மீன்கள் என்பது பொருள். **'பரப்பகம்'** என்பதற்குப் **'பாக்கம்'** என்பது பாட வேறுபாடு. 'புணர்திரை' என்றமையால் **'பரப்பகம்'** என்னும் பாடமே பொருட் சிறப்புடையது.

2. 9. விழவுக்கள விறலி

'நனவுப் புகு விறலியில்' (82.10) என்பதற்கு **'விழவுக் களவிற** லியின்' என்பது பாடம். உலவும் மயில்கள் விழவுக் களத்தில் புகுந்தாடும் விறலி போல் உள்ளன என்பது இங்குச் சுட்டப் பெறும் கருத்து 'நனவுப்புகு' என்பதும் விழவுக்களம் என்பதும் ஒரே பொருளைத் தருவனவே. எனினும் கழைவளர் என்ற முன்னடியின் முதற்சீருக்கேற்ப **''விழவுக்கள விறலியின்'** என்னும் பாடம் எதுகைச் சிறப்புடையதாக அமைந்துள்ளது.

2. 10. தொகல்கொள

'மருது**தொகல்** கொள' (97.19) என்பதற்கு 'மருதமொடு **இகல்** கொள' என்ற வேறுபாடு உள்ளது. ஆற்றங்கரையில் மருத மரத் தொகுதியுடன் பூக்கள் நிறைந்த மாமரங்களும் அடர்ந்து சோலையாக உள என்பது இங்குச் சுட்டப்பெறும் கருத்து. 'புதுப்பூ நிரைத்த பொங்கர்' (97.21) என்பதில் 'பொங்கர்' எனச் சோலை சுட்டப் பெறுதலால், மருத மரம் தொகுதியாக அமைந்த என்ற பொருளைத் தரும் 'மருது **தொகல்**' கொள என்ற பாடம் இங்குச் சிறப்புடையது.

3. மூன்றும் தொகுதி

'சில்பரிக்குதிரைப் பல்வேல் எழினி (105.10) என்னும் தொடரில் **'பல்வேல் எழினி'** என்பதற்கு **'வல்வேல் எழினி'** என்ற பாடம் உள்ளது. இரண்டிற்கும் மிகுதியும் பொருள் வேறுபாடு இல்லையெனினும் 'சில்பரி-பல்வேல்' எனக் கூறுங்கால் ஏற்படும் முரண்தொடைச் சிறப்பு **'வல்வேல் எழினி'** என்னும் பாடத்தில் பெறப்படவில்லை. எனவே **'பல்வேல்'** எழினி என்னும் பாடம் இங்குச் சிறப்புடையது.

3. 1. புண்டோய் விளக்கின்

போர்க்களத்தில் காயம்பட்ட வீரர்களின் காயங்களை ஆராயப் பல சிறு விளக்குகள் ஏந்தியிருத்தல் போல, வானத்தில் விண்மீன்கள் தோன்றுகின்றன என்ற உவமைச் செய்தியை

விளக்குமிடத்தில் **'புண்டேர் விளக்கின்'** (111.14) என்ற பாடம் உள்ளது. இதற்கு அமைந்த **புண்டோய் விளக்கின்'** என்ற பாடம் பொருட் சிறப்பில்லாதது. 'விண்தோய் பிறங்கல்' என வரும் பின்னடிக்கு ஏற்ப **'புண்டோய் விளக்கின்'** என்ற பாடம் எதுகைச் சிறப்பு ஒன்றை மட்டும் நோக்கி எழுந்ததாகக் கொள்ளலாம்.

3. 2. கூனலெண்கின்

'கூனலெண்கின்' (112.1) என்ற பாடம் கூனிய முதுகினை யுடையதாய்க் குறுகிய அடியிட்டு நடக்கும் கரடியின் இயல்பைச் சுட்டி வருகிறது. இங்குக் **'கூருகிர் எண்கின்'** என்ற வேறுபாடு உள்ளது. மேலும் **'கானலெண்கின்', 'கூரலெண்கின்'** என்பனவும் வேறுபாடுகளாக உள. பின்னுள்ள இரண்டும் பொருட் சிறப்பற்றவை. **'கூனலெண்கின்'** என்பது கரடியின் இயல்பைச் சுட்டிவரும் பாடம். ஆனால் **'கூருகிர் எண்கின்'** எனவரும் பாடம் கறையான்புற்றை உடைத்துப் பெயர்க்கும் செயலைச் சுட்டுதற் கேற்ற வகையில் அமைந்துள்ளது. எனவே இங்குக் **'கூருகிர் எண்கின்'** என்ற பாடத்தைச் சிறந்ததாகக் கருதலாம்

3. 3. திரிபில் சூழ்ச்சியில்

'திரிபில் சூழ்ச்சியில்' (113.2) என்னும் தொடருக்குத் **'திருவில்** சூழ்ச்சியில்' என்ற பாடம் உள்ளது. சூழ்ச்சி என்பது அறிவுத் திறனைச் சுட்டும். எனவே அதற்கு ஏற்ற வகையில் அமைவது **'திரிபில்** சூழ்ச்சியில்' என்ற பாடமேயாகும். **'திருவில் சூழ்ச்சியில்'** என்பதுபொருந்துவதன்று.

3. 4. செங்நெல் வினைஞர்

'அரிந்து கால் குவித்த செந்நெல் **வினைஞர்'** (116.2) என்னும் தொடரில் **'செங்நெல் வினேஞர்'** என்பதற்குச் **'செங்நெல் வினைஞர்'** என்ற வேறுபாடு உள்ளது. 'செந்நெல் வினைஞர்' என்பதற்குச் 'செந்நெல் விளைப்பவர்' எனப் பொருள். இங்கு அரிந்து 'கால்

குவித்த' என அரிதல் குவித்தல் முதலிய வினைகள் சுட்டப் படுவதற்கேற்ப **'செந்நெல் வினைஞர்'** என்ற பாடத்தையே சிறந்ததாகக் கொள்ளலாம்.

'பொய்கை சூழ்ந்த பொய்யா யாணர்
வாணன் சிறுகுடி' (117.17-18)

என்னும் பகுதியில் வாணன் என்பானின் வளமைச் சிறப்பும், இடையறுத வருவாய்ச் சிறப்பும் குறிப்பிடப் பெறுகிறது. **'பொய்யாயாணர்'** என்பதற்கு **'பொய்யாப் பண்ணன்'** என்பது வேறுபாடு. 'பொய்யாயாணர் என்ற பாடமே வாணன் சிறப்புரைத்து அமைந்துள்ளது. பண்ணனுகிய வாணன் எனப் பொருள் கொள்வதால் அவன் நாட்டின் இடையறுத வருவாய்ச் சிறப்புச் சுட்டப்பெறவில்லை. எனவே **'பொய்யா யாணர்'** என்பதே இங்குப் பொருந்திய பாடம்.

3. 5 பிற பாடங்கள்

'ஒன்றிற் **கொள்ளாய்'** (123.14) **பொன்னியற்** புனைபடை (124 9) **'மாதிரத்துழிதர'** (125.10) என்பன முறையே அவற்றுக் கமைந்த **'ஒன்றிற் கொல்லாய்' 'பொன்னயிற் புனைபடை' மாதிரத்திழிதர'** என்னும் வேறுபாடுகளைவிடப் பொருட் சிறப்புடைய பாடங்கள்' எழுத்து வேறுபாடுகளால் இவை தோன்றின என்றும் கருதலாம்.

'அஞ்சொல் பாண்மகள் கணைக்கோட்டு வாளை மீனுக்குப் பண்ட மாற்றுகப் பழஞ்செந்நெல்லின் முகவை கொள்ளாது கழங்குறழ் முத்தமும், நன்கலமும் பெறுவாள்' என்னும் கருத்தைச் சுட்டும் மருதத்திணைப் பாடலொன்றில் **'நன்கலம் பெறுஉம்'**(126.12) என்ற பாடம் உள்ளது. இதற்கு **'நன்கலம் தரூஉம்' 'நன்கலம் பொரூஉம்'** எனவரும் வேறுபாடுகள் பொருள் மாற்ற முடையவாயினும் பொருட் சிறப்புடையனவல்ல.

'நல்கூர் பெண்டிர் அல்குற் கூட்டும்' (129.10) என்னும் பாடற்றொடரில் **அல்குற் கூட்டும்** என்பதற்கு **'அல்கல் கூட்டும்'** எனவரும் வேறுபாடு பொருட் சிறப்புடையதாகும். 'அல் ல்'

என்பதற்கு வைத்துண்ணும் உணவு என்பது பொருள். 'அல்குற் கூட்டும்' என்பதற்கு இடைக்குப் பக்கத்திலுள்ள மடியில் சேர்க்கும் எனப் பொருள் கொள்ள வேண்டும். பஞ்சினையுடைய வெள்ளிய கொட்டையை வறுமையுற்ற மகளிர் சேர்த்து வைத்துள்ளனர் என்பது இங்குச் சுட்டப்பெறும் கருத்து. இரு பாடங்களிலும் **அல்கல் கூட்டும்** என்பது சிறப்புடையது.

பாலைத்திணைப் பாடலொன்றில் **'வான்கொடுவல்'** (133.11) **'வளிதரவுண்கும்'** (131.11) என்பனவே சிறந்தபாடங்கள். **'வான்கொடுவல்'** என்பதற்கு **வான்கோலெல்வளை** என்ற வேறுபாடும் **'வளிதரவுண்கும்'** என்பதற்கு **'வளைதர வுண்கும்'** **நீர்தர** வுண்கும்' என்ற வேறுபாடுகளும் உள.

4. நான்காம் தொகுதி

'மணியோர்த்தன்ன தெண்குரல் கணிவாய்ப் பல்லி' (15.14–15) என்னும் தொடருக்கு மணியொலி கேட்டாற் போலும் தெளிந்த குரலைக் கொண்ட சோதிடம் கூறும் வாயைக் கொண்ட பல்லி என்பது பொருள். **'மணியோர்த்தன்ன'** என்பதற்கு **மணி பெயர்த்தன்ன** என்றும் **'தென்குரல்'** என்பதற்குத் **'திணகுரல்'** என்றும் வரும் வேறுபாடுகள் பொருட் சிறப்புடையன அல்ல.

4.1. முதல் தின்றல் அஞ்சி

'நெல்லின் சேயரிப் புனிற்றுக் கதிர் முதல் தின்றல் அஞ்சி' (156.3–4) என்னும் மருதப் பாடற்றொடருக்குச் செழுமைவாய்ந்த நெல்லின் சிவந்த அரிகளையுடைய இளங்கதிரைத் தின்பதைக் கண்டு அஞ்சி என்பது பொருள். 'கதிர்**முதல்** தின்றலஞ்சி' என்பதற்குக் 'கதிர் **மூதா** தின்றலஞ்சி' என்ற வேறுபாடு உள்ளது. பொருள் மிகுதியும் மாற்றமில்லை எனினும் கதிர்முதல் தின்றலஞ்சி என்னும் பாடத்தில் 'மூதா' என்ற எழுவாய் பற்றிய குறிப்பில்லை. எனவே 'கதிர் **மூதா** தின்றலஞ்சி' என்பதைச் சிறந்தபாடமாகக் கொள்ளலாம் இதற்கு 'இளங்கதிரை முதியபசு தின்பதைக் கண்டு அஞ்சி' என்பது பொருள்.

4. 2. தணி மருந்தறியாள்

இப்பாடலில் அன்னை தன் மகளின் நோய் கண்டு அஞ்சித் தெய்வத்திற்கு கள்ளும் மாலையும் படைத்தும், வெள்ளாட்டுக் கிடாயைச் செலுத்தியும் தன்மகளின் நோய் 'தீருமருந்தறியாது' அழும்குறிப்பை,

'நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சித்
தணிமருங் கறியாள் யாய்அழ'' (156.15-16)

எனவரும் பகுதி சுட்டுகிறது. **'தணி மருங்கறியாள்'** என்பதற்குத் **'தருமருந்தறியாள்'** தணி **மருந்தறியாள்** என்பன பாடவேறு பாடுகள். இம்மூன்றில் **'தணிமருத்தறியாள்'** என்பதை இங்கு ஏற்ற பாடமாகக் கொள்ளலாம்.

'கொடுமுடி காக்கும் குரூஉக்கண் நெடுமதில்' (159.18) என்பதில் **'காக்கும்'** என்பதற்குத் **'தாக்கும்'** என்ற முரண் பொருள் கொண்ட பாடவேறுபாடு உள்ளது. கொடுமுடி என்பது ஒரு தலைவன் பெயர். அவனால் காக்கப்படும் நெடுமதில் சூழ்ந்த ஆமூர் என்பது இங்குச் சுட்டப் பெறுவது. இங்குத் **'தாக்கும்'** என்பது பொருட் சிறப்பில்லாப் பாடம்.

4. 3 விளியும் எவ்வமொடு

பிரிந்து சென்ற தலைவனை வருதிசை நோக்கி இறுத்தற் கேதுவாய துன்பத்தோடு உள்ள தலைவியை வாடையும் வருத்து கின்றது என்ற செய்தியைச் சுட்டும் பாலைப் பாடலொன்றில் விளியும் எவ்வமொடு (163.6) என்னும் தொடர்பயின்றுள்ளது. இதற்கு **'விளியா எவ்வமொடு'** **'விளிய வெவ்வமொடு'** எனவரும் வேறுபாடுகள் பொருட் சிறப்பில்லாதவை.

மகட் போக்கிய தாயொருத்தி மகளைப் பிரிந்த துன்பம் மீதூர மகளின் பாவையொன்றை எடுத்து வைத்து மகளே எனக் கூறிப் புலம்புகிறாள். இச் செய்தியைச் சுட்டும் பாலைப் பாடலொன்றில்

"தருயணற் கிடந்த பாவையென்
அருமகளே யென முயங்கினள் அழுமே" (165.12-13)

எனவரும் பகுதி உள்ளது. **'அருமகளே'** என்பதற்கு அமைந்த **'மருமகளே'** என்ற பாடம் பொருள் மாற்றமுடையதாயினும் பொருட் சிறப்படையதன்று என்பது தெளிவு.

4 4. பாஞய் துள்ளிய

தலைவன் செலவழுங்கிய நிலையில் தன் நெஞ்சிற்குக் கூறுவதாக வரும் பாலைப் பாடலில் அவன் தங்கியிருந்த அம்பலத்தின் இயல்புகள் சுட்டப்படுகின்றன. ஈன்றணிமையுடைய நாய் தங்கிய பறிந்த இடத்தையுடைய சிற்றில் ஒன்றும் அவ்வம்பலத்தின் உள்ளது. இதனைப் **'பாஞய் துன்னிய'** பறைக்கட் சீறின் (167.17) என்னும் தொடர் குறிப்பிடும். **'பாஞய் துள்ளிய'** என்பதற்கு **'பாஞய் துன்னிய, பாஞய் துள்ளி'** என்பனவும் 'பறைக்கட் **சீறின்'** என்பதற்குப் 'பறைக்கண் **சிற்றில்'** 'பறைகட் **சீறின்'** என்பனவும் வேறுபாடுகள். இவை அனைத்திலும் **'பாஞய் துன்னிய, பறைக்கண் சிற்றில்'** என்பன பொருட் சிறப்புடைய பாடங்கள். 'பாஞய் துன்னிய' என்பதற்கு ஈன்றணிமையுடைய நாய் தங்கிய என்பது பொருள். 'பறைக்கண் சிற்றில்' என்பதற்குப் 'பறிந்த இடத்தையுடைய சிற்றில்' என்பது பொருள்.

கானவன் யானையைக் கொன்று அதன் வெள்ளிய கொம்பினைக் குடிசையில் ஊன்றி மதுவுண்டு மகிழும் இயல்புடைய குன்றம் எனத் தலைவனின் குன்றத்து வளம் கூறப்பட்ட குறிஞ்சித் திணைப் பாடலொன்றில் **'புல்வேய் குரம்பை'** (172.10) எனக் குடிசை குறிப்பிடப் பட்டுள்ளது. 'ஊகம் புல்லால் வேய்ந்த குடிசை' என்பது இதன் பொருள். இதற்கு **'புதல்போற் குரம்பை'** என்னும் வேறுபாடு உள்ளது. உளகம்புல் வேய்ந்த குடிசை என இயல்பு நிலை சுட்டப் பெறுவதாகக் கொள்ளுவதை விடப் புதர்போல் ஒழுங்கின்றி அமைந்த குடிசை என உவமைநிலை சுட்டப் பெறுவதாகக் கொள்வது நயமுடையதாகும். எனவே **'புதல்போற் குரம்பை'** என்பதைப் பொருந்திய பாடமாகக் கருதலாம்.

4. 5. வாணுதல்

பிறிதொரு பாலைப் பாடலில் இனிய நகையுடைய கூரிய பற்கள், சிவந்த வாய், குவளைக் கண்கள் ஆகியவற்றையுடைய தலைவி வருந்தினாள் என்ற செய்தி சுட்டப்பெறுகிறது. இங்கு 'இம்மதியோர் வாணுதல்' (179.12–13) எனவரும் தொடர் அன்மொழித் தொகையாகத் தலைவியைச் சுட்டி வருகிறது. **'வாணுதல்'** என்பதற்கு **'வாண்முகம்'** என்ற வேறுபாடு உள்ளது. பொருள் நிலையில் இவற்றிடையே மாற்றமில்லை. பல், வாய், கண் ஆகியவற்றைச் சுட்டியதோடு நெற்றியையும் சுட்டி அதே நேரத்தில் அன்மொழித் தொகையாகத் தலைவியைச் சுட்டும் நயம் **'வாணுதல்'** என்ற பாடத்தில் உள்ளது. இச்சிறப்பு **'வாண்முகம்'** என்ற பாடத்தில் இல்லையாதலால் **வாணுதல்** என்பதையே இங்குச் சீரிய பாடமாக ஏற்கலாம்.

'தட்டையோப்பியும்' (188.11) என்பதற்குத் **'தட்டையோச்சியும்'** என்றும் **'அசைவில் நோன்றாள்'** (191.6) என்பதற்கு **'நோன்சுவல் வன்றாள்'** என்றும் செஞ்செவி **'யெருவை'** (193.6) என்பதற்குச் 'செஞ்செவிச் **சேவல்'** என்றும் **'இளமழை சூழ்ந்த'** என்பதற்கு **'இன மழை சூழ்ந்த'** என்றும், வரும் வேறுபாடுகளைவிட அவற்றின் அடிப்படைப் பாடங்களே பொருட் சிறப்புடையனவாய் உள.

5. ஐந்தாம் தொகுதி

மருதப் பாடலொன்றில் எருமையின் முறுக்குண்ட கொம்பை 'நகுவரப் பணைத்த திரிமருப் பெருமை' (206.3) எனவரும் தொடர் குறிப்பிடுகின்றது. விளங்குதலுறப் பெருத்த முறுக்குண்ட கொம்பினையுடைய எருமை என்பது இதன் பொருள். 'நகுவரப் **பணைத்த'** என்பதற்கு 'நகுவரப் **படைத்த'** என்பது பாடவேறுபாடு. 'பணைத்த' என்ற பாடங்கொள்ளுங்கால் 'பெருத்த' எனக் கிடைக்கும் பொருட் சிறப்பு படைத்த என்ற பாடத்தில் இல்லை. எனவே 'நகுவரப் **பணைத்த'** என்பதனை இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

5. 1. முந்நீர் முற்றி

குட்டுவன் நிலவுலகில் பகைவரை யெல்லாம் வென்று கடலும் பிறக்கிடும் படி தன்வென்றிச் சிறப்பை நிலைநாட்டினன் என்னும் குறிப்பைத் தாங்கிய குறிஞ்சித் திணைப்பாடலொன்றில் 'முந்நீர் முற்றி' (212.18) என்னும் தொடர் அமைந்துள்ளது. இதற்கு '**முன்னர்** முற்றி' என்ற வேறுபாடு உள்ளது. ஓங்குதிரைப் பௌவம் நீங்க ஓட்டிய என அடுத்த அடியில் ஓங்கு திரைப்பௌவம் என வரும் குறிப்பால் இங்கு '**முந்நீர் முற்றி**' எனவரும் பாடமே சிறப்புடையது என்பதை அறியலாம்.

பிறிதொரு பாலைப்பாடலில் '**கொழுமுகை அவிழ**' (217.9) என்றும் '**தீப்பிறப்ப**' (217.9) என்றும் வரும் பாடங்களுக்கு முறையே '**கொழுமுகை உடைய**' '**தீப்பரப்ப**' எனவரும் வேறு பாடுகள் உள. 'கோழிலை அவரைக் கொழுமுகை அவிழ' என்பதால் 'உடைதல்' என்பதைவிட முறையாக மென்மையாக மலரும் குறிப்பைத் தாங்கிய அவிழ என்னும் பாடம் சிறப்புடையதாக உள்ளது. 'எயிறு தீப்பிறப்பத் திருகி' என்பதால் புணர்ச்சி வேட்கை மிக்குழிப் பற்களைத் தீயுண்டாகக் கடிக்கும் தலைவியின் நிலை இங்குச் சுட்டப்படுகிறது என அறியலாம் 'தீப்பிறப்ப' என்பதைவிட 'தீப்பரப்ப' எனப் பாடங்கொள்ளுவதால் தலைவியின் புணர்ச்சி வேட்கை மிகுதியும் வெளிப்படல் அறியலாம். எனவே தீப்பரப்ப என்பதை இங்குச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

5. 2. இரும்புள்போல

'**இரும்**புள்போல' (220.14) என்பதற்கு '**இரு** புள்போல' என்ற வேறுபாடு உள்ளது. தலைவன் தலைவியின் புணர்ச்சிச் சிறப்பு இங்குச் சுட்டப் பெறுகிறது.

> "நோலா இரும்புள் போல நெஞ்சமர்ந்து
> காதன் மாறுக் காமர் புணர்ச்சியின்" (220.14–15)

என்பது இப்பாடற் பகுதி. காதலர்களின் புணர்ச்சிச் சிறப்புக்கும் பிரிந்துறைய மாட்டாத் தன்மைக்கும், அன்றிற் பறவைகளை மேற்கோள் காட்டுதல் இலக்கிய மரபு

"பூ விடைப் படினும் யாண்டு கழிந்தன்ன
நீருறை மகன்றிற் புணர்ச்சி போலப்
பிரிவரி தாகிய தண்டாக் காமம்" (குறுந். 57)

எனவரும் பகுதியும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது. தலைவன் தலைவி இருவருடைய புணர்ச்சிச் சிறப்பே மேலே கூறப்படுதலால் '**இருபுள்**' என்ற பாடம் பொருத்தமாக அமையும். 'புள்' எனக் கூறிய அளவில் மரபறிந்த நிலையில் அன்றிற் பறவை என்பது பெறப்படும். எனவே '**இருபுள் போல**' எனவரும் பாடத்தை இங்குச் சிறப்புடையதாக மொழியலாம்.

5. 3. பெருங்கல்நாடன்

நடு இரவில் மழை பொழியும் போது இடிமுழக்கம் கேட்ட யானை அதனைப் புலி முழக்கம் என எண்ணி அஞ்சி மலை எதிரொலிக்கக் கதறிப் பெயரும் மலையுடைய நாடு எனக் குறிஞ்சித் திணைப் பாடலொன்றில் மலைவளம் நுவலப்படுகிறது. இங்கு 'இருங்கல் விடரகஞ் சிலம்பப் பெயரும் பெருங்கல் நாடன்' (232.4-5) என்னும் தொடர் உள்ளது. இதில் '**பெயரும் பெருங்கல் நாடன்**' என்பதற்குப் '**பிடிபடு மருங்கினுடன்**' என்ற பாட வேறுபாடு உள்ளது. இவ்வேறுபாடு பொருட் சிறப்புடையதன்று.

பாலைப் பாடலொன்றில் 'கள்வன் மண்ணளைச் செறிய' (235.11) என்ற தொடர் நண்டு தன் மண்வளையுள் செறியும் காட்சியைச் சுட்டுகிறது. '**கள்வன்**' என்பது இங்கு நண்டைக் குறிப்பிடுகிறது. இந்தக் '**களவன்**' என்ற வேறுபாடு பொருட் சிறப்புடையதன்று.

5. 4. புன்கமுதிர்த்த

'**புன்கமுதிர்த்த**' (237.10) என்பதற்குப் '**புன்கமுயர்த்த**' என்றும் '**நளிர்முகைச்** சிலம்பின்' என்பதற்கு '**நளிறுமுகைச்** சிலம்பின்' என்றும் '**துகிரினீங்கை**' (243-2) என்பதற்குத் '**துகளினீங்கை**' என்றும் '**கண்ணில் வாடை**' (243.8) என்பதற்குக் '**கன்னிவாடை**' என்றும் '**தொல்வினைப்பயனே**' (243.15) என்பதற்குத் '**தொழில் வினைப் பயனே**' என்றும் வரும் வேறுபாடுகள் பொருட் சிறப் பற்றவை.

6. ஆறும் தொகுதி

'குத்திப்புகலொடு' (251.17) என்பது பாலைப் பாடலொன்றில் பயின்றுவரும் தொடர். இதற்குக் **'குத்திய புகலொடு'** **'குத்திய புகழொடு'** என்பன வேறுபாடுகள். புலியொன்றை யானை நி :ம் நெளியும் படிக் குத்திக் கொன்று அந்தப் பெருமையுடன் பிற காப்பின்றி வாழும் தேக்கு மரம் நிறைந்த காடு எனப் பாலைநிலக் காடொன்றின் வண்ணனை இங்கு இடம் பெற்றுள்ளது. இவ்வேறு பாடுகள் மூன்றனுள் **'குத்திய புகழொடு'** எனவரும் பாடம் பொருட் சிறப்புடையதாக உள்ளது.

6. 1. பொன்மலி நெடுநகர்

பிறிதொரு பாலைப் பாடலில் பசும்பூண் பாண்டியனின் மதுரை நகரச் சிறப்புச் சுட்டப்பட்டுள்ளது. **'பொன்மலி நெடுநகர்க் கூடல்'** (253.6) என்பது இங்குப் பயின்ற தொடர். **'பொன்மலிநெடு மதிற் கூடல்'** என்பது இதன் வேறுபாடு. பொன்மலி என்பதாலும் கூடல் என நகர்ப்பெயர் பின்னே சுட்டப் பெறுதலாலும் **'பொன்மலி நெடுமதிற் கூடல்'** என்னும் பாடம் இவண் பொருத்தமுற அமைந் துள்ளது என அறியலாம்.

'கரும்பமல் படப்பை' (256 15) **'மலர்பாய்ந்தூத'** (260.2) **'ஆகு விளை கலித்து'** (262.3) **'துகளறவிளைந்த'** (265 16) என்பன அவற்றுக்கமைந்த வேறுபாடுகளை விடப் பொருட் சிறப்புடையன வாயுள.

6. 2. பெருநீர்க்கானல்

மற்றுமொரு பாலைப் பாடலில் 'திருநுதன் மகளிர் குரவை அயரும் பெருநீர்க் கானல் தழீஇய இருக்கை' (269.20–21) என்னும் பகுதி உள்ளது. **'பெருநீர்க்கானல்,** என்பதற்குப் **'பெருநிழற் கானல்'** என்ற வேறுபாடு உள்ளது. 'மகளிர் குரவை அயரும்' எனவரும் குறிப்பால் **'பெருநீர்க் கானல்'** எனவரும் பாடத்தை விடப் **'பெருநிழற்கானல்'** எனவரும் பாடமே சிறப்புடையது எனக் கொள்ளலாம்.

6. 3. நாணில் பெருமரம்

'நாணில் பெருமரம்' (273.15) என்பதற்கு 'நாரில் பெருமரம்' என்றும், 'கடவுட் காக்குதும்' (282.18) என்பதற்குக் 'கடவுட்கு ஒக்குதும்' என்றும் வேறுபாடுகள் உள. இவற்றில் 'நாணில் பெருமரம்' 'கடவுட்கு ஒக்குதும்' என வருவன பொருட் சிறப்புடைய பாடங்கள். 'கடவுட்கு ஆக்குதும்' என்பதை விடக் 'கடவுட்கு ஒக்குதும்' எனவரும் பாடத்திற்குத் தெய்வத்திற்குப் பலிசெலுத்துவோமாக என்பது பொருர். இதுவே பொருந்திய பொருள்.

6. 4. பழச்சுளை

'பார்ப்பின் தந்தை பழச்சுளை தொடினும்' (288.13) என்னும் தொடர் குறிஞ்சித்திணைப் பாடலொன்றில் பயின்றுள்ளது. 'குட்டியின் தந்தையாகிய கடுவன் பலாப்பழத்தின் சுளையினைத் தோண்டினும்' என்பது இதன் பொருள். 'பழச்சுளை' என்பதற்குப் 'பழச்சினை' எனவரும் பாடம் பொருட் சிறப்பில்லாதது

6. 5. நெடுநிலை

'நெடுநிலை நடுகல்' (289.3) என்னும் தொடருக்கு 'நிரைநிலை நடுகல்' என்பது வேறுபாடு. உயர்ந்த நிலையுடைய நடுகல் என்பது நெடுநிலை நடுகல் என்பதற்குரிய பொருள். வரிசை நிலையுடைய நடுகல் என்பது நிரைநிலை நடுகல் என்பதற்குரிய பொருள். வீழ்ந்து பட்ட வீரர்களின் மிகுதியும், அவர்களுககாக வரிசையாக நடப்பட்ட நடுகற்களின் மிகுதியும் 'நிரைநிலை நடுகல்' என்ற பாடத்தால் பெறப்படுகின்றதாதலால் 'நெடுநிலை நடுகல்' என்பதைவிட 'நிரைநிலை நடுகல்' என்பதனைச் சிறந்த பாடமாக இங்கு ஏற்கலாம்.

'சிறியிலை நெல்லி' (219.16) 'கடுங்கண் மறவர்' (297.6) 'நல் விருந்தயர்தல்' (300.21) என்பன அவற்றுக்கமைந்த வேறுபாடுகளைவிடப் பொருட்சிறப்புடையவை.

7. ஏழாம் தொகுதி

'பேஎய் கண்ட' (303.2) **'வண்புகழ்ப்பாரி'** (303.10) என்பன அவற்றின் வேறுபாடுகளைவிடப் பொருட் சிறப்புடன் அமைந்த பாடங்கள்.

7. 1. வளவயல்

'ஆர்குருகுறங்கும் நீர்சூழ் வளவயல்' (306.5) என்னும் தொடர் மருதப்பாடலொன்றில் அமைந்துள்ளது. 'குருகு உறங்கும்' என வரும் குறிப்புக்கேற்பவும் 'நீர்சூழ்' எனக்கூறியப்பின் வளவயல் எனக்கூற வேண்டுதல் தேவையற்றது ஆதலாலும் **'நீர்சூழ் வள வயல்'** என்பதைவிட **'நீர்சூழ் அகல் வயல்'** எனவரும் வேறு பாட்டைப் பொருட்சிறப்புடைய பாடமாக இங்கு ஏற்கலாம்.

7. 2. ஒடுங்கியகுரல்

ஆறலைகள்வரால் அலைக்கப்பட்டவம்ப மாக்களின் புண்களி னின்று இழியும் குருதிநீரைக் குடித்துக் காகங்கள் ஒற்று மக்களைப் போல் உள்ளடங்கிய குரலினவாய் ஒலித்தன என்னும் செய்தி, பாலைப்பாடலொன்றில் சுட்டப் பெற்றுள்ளது. ஒற்றுச் செல்மாக் களின் ஒடுங்கிய குரல்' (313.15) எனவரும் தொடர் இங்குப் பயின்றுள்ளது **'ஒடுங்கியகுரல்'** என்பதற்கு **'ஒடுங்கியகால'** என வரும் வேறுபாடு இங்குப் பொருத்தமின்றி அமைந்துள்ளது.

7. 3. இரவுச் சிறுநெறி

'இரவழங்கு சிறுநெறி' (318.4) எனவரும் தொடர் பிறிதொரு குறிஞ்சித்திணைப் பாடலில் இடம் பெற்றுள்ளது. இரவு நேரத்தில் தலைவன் வரும் சிறுநெறியின் இயல்பைச் சுட்டுவது இத்தொடர். **'அரவழங்கு சிறுநெறி'** **'இரவுச் சிறுநெறி'** என்பன இதற்கமைந்த வேறுபாடுகள். **'இ ர வ ழ ங் கு சிறுநெறி'** என்பது பொருட் சிறப்புடைய பாடமன்று. 'அரவும் புலியும் அஞ்சுதகவுடைய' (318 3) என முதலடியில் அரவு வழங்கும் குறிப்பு இடம் பெற்றுள்ள மையால் அரவழங்கு சிறுநெறி என்பதும் சிறப்பில்லாத பாடம். எனவே **'இரவுச்சிறுநெறி'** என இறுதியிலமைந்த பாடம் இங்குப் பொருட் சிறப்புடன் திகழ்கிறது.

7. 4. புகற்சியினுடு

'புகற்சியினுடு கொள்ளனைப் பணித்த அதியன்' (325.7-8) என்பது பாலைப் பாட்டுத் தொடர். **'புகற்சியினுடு'** என்பதற்குப் **'புகற்சியின் நாடுகொள்' 'புகற்சியின் நாடுகோள்'** என்பனவும், 'கொள்ளனைப்' பணித்த' என்பதற்கு **'அள்ளனைப் பணித்த, வள்ளைப் பணித்த' கொள்ளைப் பணித்த'** என்பனவும் வேறுபாடுகள். இங்குப் பொருட் சிறப்பின்றி ஏதேனும் சிதைவு நிகழ்ந்திருக்கலாம் எனக் கருத முடிகிறது. 'புகற்சியின் நாடுகொள்' என்பதும் 'அள்ளனைப் பணித்த' என்ற பாடமும் இணையுங்கால் பொருட்டெளிவும் பொருட்சிறப்பும் உண்டாகிறது. எனவே பிறவற்றைக் காட்டிலும் இவ்விரு பாடங்களையும் பொருட்சிறப்பு உடையனவாக இங்குக் கொள்ளலாம்.

7. 5. வழையமலடுக்கத்து

குறிஞ்சிப் பாடலொன்றில் **'வழையமலடுக்கத்து'** (328.1) என்னும் தொடர் உள்ளது. 'சுரபுன்னை மரங்கள் நிறைந்த மலைச் சாரலில்' என்பது பொருள். இதற்கு **'வழையமையடுக்கத்து வரையமலடுக்கத்து'** என்பன பாட வேறுபாடுகள். வழையமை யடுக்கத்து' என்பது பொருள் மாற்றமில்லாதது 'வரைய மலடுக்கத்து' என்பது பொருட்சிறப்பில்லாதது. 'வரை,' 'அடுக்கம்' என்பன ஒரு பொருளையே பெரும்பாலும் தரும் சொற்கள்.

இதேபாடலில் **'இனிதினியைந்த'** (328.7) என்பதற்கு **ஈதலினியைந்த'** எனவரும் பாடம் பொருட்சிறப்பில்லாதது.

'வாட்டிய செம்மலொடு' (332.7) **'குறுகு பெரு நசையொடு'** (333·22) **'அயர்ந்தனர்'** (334.7) **'ஈர்நிலம் துமிப்ப'** (334.14) என்பன அவற்றுக் கமைந்த வேறுபாடுகளை விடப் பொருட் சிறப்புடைய பாடங்கள்.

8. எட்டாம் தொகுதி

'விருந் தொழிவறியாப் பெருந்தண்பந்தர்' (353.17) என்பது பாலைப் பாடலில் பயின்ற தொடர். **'பெருந்தண்பந்தர்'** என்பதற்குப்

'பெருந்தோண் மாதர்' என்றும் வேறுபாடு உள்ளது. விருந்தோம்பற் சிறப்புப் பெண்டிருக்கு உரியதாக இருப்பதாலும் பின்னே வரும் இயல்புகள் மகளிருக்கு உரிய குணங்களைப் பேசுவதாக இருத்தலாலும், இங்குப் **பெருந்தோண்மகளிர்** என்ற பாடத்தையே ஏற்புடையதாகக் கொள்ளலாம்.

8. 1. புகழ்குறிகொண்ட

'புலவர் புகழ்குறி கொண்ட பொலந்தார் அகலத்து' (354 8–9) என்பது முல்லைப்பாடலொன்றில் பயின்ற தொடர். **'புகழ்குறி கொண்ட'** என்பதற்குச் **'சுரும்புகுடி கொண்ட'** என்ற வேறுபாடு உள்ளது. தொடர்ந்து பொலந்தார் என வருவதால் இப்பாட வேறுபாடு எழுந்ததாகக் கருதலாம். எனினும் 'புலவர்' என்ற சொல் பொருட் சிறப்பற்று விடுமாதலாலும் புகழ்குறி என்பது விழுப்புண் சிறப்பைக் கூறுவதாலும் இங்குப் **'புலவர் புகழ் குறி கொண்ட'** என்பதனையே சீரிய பாடமாகக் கருதலாம்.

8. 2 ஆய்பிரம்பன்ன

'நன்னன் ஆய்பிரம் ன்ன மின்னீர் ஓதி' (356.19-20) என்பது மருதப் பாடலொன்றில் பயின்ற தொடர். **'ஆய்பிரம்பன்ன'** என்பதற்கு **'ஆய்பறம்பன்ன'** என்பது வேறுபாடு. தலைவி 'நன்னனின் மலையிலுள்ள பிரப்பங்கொடி போல குளிர்ச்சியுடையவள்' என்பது மேலேயுள்ள பாடத்துக்குரிய பொருள். எனினும் நன்னனின் பறம்புமலைபோன்று குளிர்ந்த கூந்தலையுடையவள் எனப்பொருள் கொள்வது சிறப்பாக உள்ளது. சுனையும் அருவியும் நிறைந்த மலையின் குளிர்ச்சிக்குக் கூந்தலின் குளிர்ச்சி உவமையாகும். மேலும் இப்பாடலில் நன்னன் பறம்பில் (456.8) என முன்னரும் நன்னன், பறம்பு ஆகியவை பற்றிக் குறிப்பு வந்துளதால் இங்கும் **'நன்னன் ஆய்பறம்பன்ன'** என்ற தொடரைச் சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

'பனிநீர்' (326.1) **'அதர்மார்த்திருந்த'** (363.9) **'செய்வினை வலத்தராகி'** (363.16) **'பகடுதனை மாற்றி'** (366.3) **'திம்பொழி வென்றுப்பு'** (366 7) **'மயிலியல்'** (369.4) என்பன அவற்றுக்குரிய வேறுபாடுகளைவிடச் சிறப்புடைய பாடங்களாக உள.

8. 3. ஆகோள் பூசலின்

'ஆடுகொள் பூசலின்' (372.11) என்பது குறிஞ்சிப் பாடலில் பயின்ற தொடர். 'கடுமுனை அலைந்த கொடுவில் ஆடவர்' (372.10) எனவரும் முன்னடியாலும், ஆடுகொள்ளுவதற்குரிய பூசல் பாடல் பெறும் சிறப்புத்தன்மையாலும் இங்கு **'ஆகொள் பூசலின்'** என வரும் பாடத்தைச் சிறந்த பாடமாக மொழிதல் சாலும்.

8. 4. விருந்தெதிர் கொளவே

பாசறை முற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குக் கூறுவதாக வரும் முல்லைத்திணைப் பாடலொன்றில் **'விருந்தெதிர் கொளவே'** (374.18) என்னும் தொடர் பயின்றுள்ளது. பாகனே செல்க· தலைவி விருந்தாக நம்மை ஏற்பாள் என்று தலைவன் கூறுவதாக வரும் செய்தி இங்குப் பயின்றுள்ளது. **'விருந்தெதிர் கொளவே'** என்பதற்கு **'இகழ்ந்தெதிர் கொளவே'** என வேறுபாடு உள்ளது. இவ் வேறுபாடு பொருள் சிறப்பற்றது என்பது அங்கை நெல்லி.

'நனி நனி யொதுங்கி' (380.1) **'நிறைத்திரன்'** (386.6) **'உவர் விளையுப்பின்'** (390.1) **'இதைச் சுவற்கலித்த'** (393.4) **'மாரிமாமலர்'** (395.2) **'வெவ்வளிக்குலமரும்'** (397.15) என்பனவும் அவற்றிற் கமைந்த வேறுபாடுகளைவிடப் பொருட்சிறப்பும் தெளிவும் உடைய பாடங்களாக அமைந்துள.

அகநானூற்றில் அமைந்த பொருட் சிறப்புடைய பாடங்கள் பயின்ற இன்றியமையாத 108 இடங்கள் இக்கட்டுரைக்கண் ஆராயப் பெற்றுள்ளன. அவற்றுள் இராகவையங்கார் பதிப்பில் அமைந்த பாடங்களே சிறப்புடையன என 79 இடங்களில் நிறுவப்பெற்றுள்ளன. 29 இடங்களில் இராகவையங்கார் பதிப்பில் மூலபாடங்களாகக் கொள்ளப் பெறாத பிற பாடங்களே சிறப்புடைய பாடங்களாகக் கொள்ளத் தக்கவை என்றும் நிறுவப் பட்டுள்ளன.

8. புறநானூறு

புறநானூற்றில் அமைத்த 400 பாடல்களில் வேறுபாடுள்ள 317 பாடல்களில் மட்டும் 1500 பாடவேறுபாடுகள் உள. இவற்றுள் 487 பாடங்கள் பொருள் வேறுபாட்டு நோக்கில் ஆயத்தக்கவை. இவற்றுள் இன்றியமையாத வேறுபாடுகள் இக்கட்டுரைக்கண் பதிப்பு வாரியாக ஆராயப்பட்டுச் சிறந்த பாடங்கள் நிறுவப் பட்டுள்ளன.

1. பொருள் நிலை வேறுபாடுகள்

பொருள் வகையில் அமைந்த பாடவேறுபாடுகளில் ஒரு பொருள் பயின்ற இரு சொற்களால் வேறுபாடுகளாயமைந்தவை முன்னர் சிதைவுற்ற நிலையிலிருந்து பின்னர் நிறைவு பெற்று அமைந்தவை, மிகுதியும் பொருள் வேறுபாடின்றி இருப்பவை, முற்றிலும் பொருள் வேறுபாட்டுடன் அமைந்தவை என நான்கு பிரிவுகள் உள.

'சுடர்ப்பூவின்' (17.12) என்பதற்குத் **'தீப்பூவின்'** என்றும் **'அலங்கு செந்நா'** (22.31) என்பதற்கு **'வயங்கு செந்நா'** என்றும் வரும் வேறுபாடுகள் ஒரே பொருள் தரும் இரு வேறு சொற்களாய் அமைந்தவை. இம்முறையில் புறநானூற்றில் அமைந்த வேறு பாடுகளின் எண்ணிக்கை 121.

உ.வே. சாமிநாதையரின் மூலப் பதிப்பில் ஏட்டுச் சிதைவால் நிறைவு பெறுமல் தொடர்ப்புள்ளிகளால் காட்டப்பெற்ற இடங்களில், பிற ஏடுகளின் துணையால் பாடங்கள் கண்டு பிடிக்கப் பெற்று, கழகப் பதிப்பிலும் பிற பதிப்புக்களிலும் அந்த இடங்களில் உரிய பாடங்கள் நிறைவு செய்யப் பெற்றுள்ளன. முதலில் பாடம் இல்லாமலிருந்து பின்னர்ப் பாடங்கள் நிறைவு பெற்ற இவ்விடங்கள் பாட வேறுபாடுகள் என்ற நோக்கில் கொள்ள இயலாதவை. இம் முறையில் 61 பாடங்கள் இந்நூலில் புதியனவாக அமைந்துள. சான்றுக்கு இரு இடங்கள் கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

உ.வே.சா. பதிப்பு	பா.அடி	பிறபதிப்பில் பாடம்
....ண்ட பாசிலை	283.12	இமிழ்ப்புற நீண்ட பாசிலை கழகப் பதிப்பு
...........குருந்தே	335.2	குரவேதனவே குருந்தே கழகப் பதிப்பு

பாடங்கள் பொருள் நிலையில் வேறுபட்டிருப்பினும் மிகுதியும் பொருள் வேறுபாடின்றி அமைந்தனவாக 178 இடங்கள் உள. சான்றாக '**மன்னிய** பெரும' (6.29) என்பதற்கு '**மன்னுக** பெரும' என்றும், '**வெள்வாய்க் கழுதை**' (15.2) என்பதற்குப் '**பேழ்வாய்க்** கழுதை' என்றும் வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

பொருள்வகை வேறுபாடுகளில் ஒரு பொருள் தரும் இரு வேறு சொற்களால் அமைந்தவை 121, சிதைவுற்ற நிலையிலிருந்து நிறைவு செய்யப்பட்டு அமைந்தவை 61, மிகுதியும் பொருள் வேறுபாடின்றி அமைந்தவை 178 ஆகக் கூடுதல் 360 வேறுபாடுகளையும் நீக்கி எஞ்சிய 127 பாட வேறுபாடுகளே பொருள் வேறுபாட்டு நோக்கில் ஆயத்தக்கனவாக உள.

2 உ.வே.சா. பதிப்பின் அடிக்குறிப்புப் பாடங்கள்

127 பாட வேறுபாடுகளில் உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் சுட்டப் பெற்ற பொருள் வேறுபாடுடைய பாடங்களின் எண்ணிக்கை 60 ஆகும். இவ்வேறுபாடுகள் பொருள் வேறுபட்டு அமைந்திருப்பினும் பொருட் சிறப்புடையனவாக அமையவில்லை. இவ்வேறுபாடுகளின் பொருட் சிறப்பின்மையால் பின்னே வந்த பதிப்பாசிரியர், உரையாசிரியர் எவரும் இப் பாடங்களைக் கொள்ளவில்லை.

இவற்றின் பொருட் சிறப்பின்மையை இரு சான்றுகள் மூலம் காண்போம். 'ஈன்மரோ இவ்வுலகத்தானே' (74.7) என்பது புறப் பாடல் தொடர். இதில் '**ஈன்மரோ**' என்பதற்கு '**உண்பரோ**' என்று ஒரு பாடம் உள்ளது. 'ஈன்மரோ' என்பதற்குப் 'பெறுவார்களோ' என்பதும் 'உண்பரோ' என்பதற்கு 'உண்ணுவார்களோ' என்பதும் பொருள்.

"தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே" (புறம். 74. 6-7)

என்பது பாடற்பகுதி. முன்னடியில் 'உண்ணுமளவை' என்று வந்திருப்பதால் **'உண்பரோ'** என்ற பாடம் எவ்வகையாலும் **பொருந்தவில்லை** என்பது அறியலாம். எனவே **'ஈன்மரோ'** என்ற பழம்பாடமே இங்குப் பொருத்தமுற அமைந்துள்ளது.

'ஆர்கலிநறவின் அதியர் கோமான்' (91.3) என்பது பிறிதொரு பாடற்றொடர். **'நறவின்'** என்பதற்கு **'முழவின்'** என்ற பாடம் உள்ளது. பாணர்களின் ஆரவாரம் மிகுந்த இசையும் முழவொலியும் அதனையொட்டி வழங்கப்படும் கட் சிறப்பும் நறவின் என்ற பாடத்தினால் பெறப்படுகிறது. ஆனால் முழவின் எனப் பாடங் கொண்டால் பாணர்களுக்குக் கள் வழங்கும் அதியர் கோமானின் சிறப்புடைமை பெறப்படாது: எனவே **'நறவின்'** என்ற பழம் பாடமே இங்கும் சிறந்திருக்கக் காணலாம்.

உ. வே. சாமிநாதையர் பதிப்பு அடிக்குறிப்பில் சுட்டப்பெற்ற பிற பாடங்களும் பொருள் நிலையால் சிறப்புடையனவாக அமைய வில்லை.

3. பழைய உரையாசிரியர் குறிப்பிடும் பாடங்கள்

புறநானூற்றின் பழைய உரையாசிரியர் தம் உரைக்குறிப்பில் தம் காலத்து வழங்கிய பொருள் வேறுபாடுடைய சில புதிய பாடங்களைக் குறிப்பிட்டுள்ளார். பழைய உரையாசிரியர் காட்டும் பாடங்கள் சிலவற்றை, கழக உரையாசிரியர் ஔவை. துரைசாமி பிள்ளையும் குறிப்பிடுகின்றார். பழைய உரையாசிரியர் காட்டும் பாடங்களில் பிறரால் சுட்டப்படுவன பல. பிறரால் சுட்டப்படாத சிலவும் உள. இவற்றைக் கீழே காணலாம்.

உ.வே.சா. பதிப்பு மூல பாடம்	பா/அடி	பழைய உரையாசிரியர் காட்டும் வேறுபாடு	பிற்காலத்தில் இப்பாடத்தைச் சுட்டியிருப்பவர்
புரையில் நற்பனுவல்-	15.16-17	புரையுநற்பனுவல்	ஒருவருமிலர்
ஓங்குபுகழ்	47-9	ஓங்கிய புகழ்	,,
மண்ணிவாராவளவை	50.6	எண்ணிவாராவளவை	,,
மெல்லியன் கிழவனுகி	184.7	மெல்லியன் கீழவனுகி	,,
பகல்விளங்குதியால்	8.10	பகல்விளங்கலையால்	கழகப் பதிப்பு உரையாசிரியர்
தாங்காவுறையுள்	24.17	தாங்கா விளையுள்	,,
தொன்னிலக்கிழமை	32.7	தொன்னிலைக்கிழமை	,,
பாசறை பொலிய	33.11	பாசிலை மலைய	,,
இடங்கருங்குட்டத்து	37.8	இடங்கரீட்டத்து	,,
செறுத்த செய்யுள்	53.11	சிறந்த செய்யுள்	,,
செய்செந்நாவின்	53.11	செய்த செந்நா	,,
புரைதபுழ	54.4	புரைதப	,,
செல்வமிகுத்தனை	160.27	செல்வமீத்தனை	,,
நிலவரையுயர	160.29	நிலவரையுரை	,,
கிழமையோற் கண்டே	165.15	கிளைமையோற்கண்டே	,,
காவிரி புரக்கும்	166.28	காவிரி பரக்கும்	,,
பெரிதாலத்தை	169.7	எளிதாலத்தை	,,
கண்மாறு நீட்ட	177.6	கைமாறு நீட்டி	,,
புழைகெட விலங்கிய	205.7	புழைகெட விலங்கி	,,
எம்வெங் காதலி	210.5	உயிர்வெங்காதலி	கழகப் பதிப்பு உரையாசிரியர்
மாறெதிர்பெழுந்தவர்	213.6	மாறெதிர்ந்தெழுந்தவர்	,,

அமர்வெங்காட்சி யொடு	213.6	மாவெங்காட்சியொடு	,,
எருவை நுகர்ச்சி	224.8	எருவை நுவற்சி	,,
வென்றி நுவல	225.10	வென்றி நுவலா	,,
காலைத்தோன்றினும்	225.14	காலைத்தோன்றின	,,
புரந்தயாண்டே	236 5	உலந்த யாண்டே	,,
உடம்பு மாய்ந்தது	240.10	**உடம்பு** மாய்ந்தனனென	,,

மேலே குறிப்பிட்ட பாட வேறுபாடுகளில் முதல் நான்கும் சிறப்பில்லாதவை. பகல் விளங்குதியால் (8–10) என்பதற்குப் பகற் பொழுதில் விளங்குவாய் என்பது பொருள். 'பகல் விளங் கலையால்' என்பதற்கு 'திங்கள் மண்டிலமாக விளங்குகிறாய்' என்பது பொருள். செல்வக் கடுங்கோ வாழியாதனைக் கபிலர் பாடும் இப்பாட்டில் 'யாங்ஙனம் ஒத்தியோ வீங்கு செலல் **மண்டிலம்**' எனக் கதிர் மண்டிலமாகிய சூரியனையே சிறப்பித்துக் கூறப்படுதலால் **'பகல் விளங்குதியால்'** என்ற பாடமே பொருத்த முடையதாக உள்ளது.

'தாங்காவுறையுள்' (24.17) என்ற பாடத்தைவிட 'தாங்கா **விளையுள்'** என்ற பாடம் சிறப்புடையதாகத் தோன்றுகிறது. 'தாங்காவுறையுள் நல்லூர் கெழீஇய' என்பதற்குப் 'பல மக்கள் வாழும் நல்ல ஊர்கள் பொருந்திய' என்பது பொருள். ஊரின்கண் மக்கள் வாழ்தல் இயற்கை. எனவே பலவகை மக்கள் நிரம்பிய ஊர்கள் என்பதை விட, பலவகையான இடையறாத வளங்கள் நிறைந்த ஊர்கள் என்னும் பொருளைத்தரும் **'தாங்க விளையுள்** நல்லூர் கெழீஇய' என்ற பாடம் சிறப்பாக அமைந்துள்ளது. 'தள்ளாவிளையுளுந்தக்காரும் நாடு[1] எனத் திருக்குறள் அமைந் திருப்பதும் இவண் ஒத்து நோக்கத்தக்கதாகும். மேலும் 'ஆங்குத் தாங்கா விளையுள் நல்லூர் கெழீஇய' என்னும் பெயரெச்சம்

1. குறள் 731.

இடை நிலையாய் வந்தது எனச் சேனாவரையர் நச்சினார்க்கினியர் ஆகியோர் இப்பாடத்தையே மூலபாடமாகக் கொண்டுள்ளனர்.[1] என்பதும் அறியத்தக்கது.

'தொன்னிலக் கிழமை' (32.7) **'பாசறைபொலிய'** (33.11) என வரும் பழம் பாடங்களே பிற பாடங்களை விடப் பொருட்சிறப் புடையவை. **'இடங்கரீட்டத்து'** எனவரும் பாடத்தினை விடப் பொருட் சிறப்புடைய **'இடங்கருங்குட்டத்து'** (37.8) என்ற பாடமே சிறப்புடையது 'இடங்கருங்குட்டத்து என்பதற்கு இடம் கரிதாகிய ஆழத்தின் கண்' என்பது பொருள். இடங்கருங்குட்டமென் பதனுள் உம்மையை அசைநிலையாக்கி இடங்கரையுடைய குட்ட மென்றும் பொருள் கொள்ள வாய்ப்புண்டு.

எஞ்சிய பாடங்கள் பலவற்றிலும் பழம் பாடங்களே பொருட் சிறப்புடையனவாக அமைந்துள. **'புரந்தயாண்டே'** (236.5) என்னும் பாடத்திற்கு 'நீ எனக்கு உதவி செய்த யாண்டுகள்' என்பது பொருள். இதற்குரிய வேறுபாடு **'உலந்தயாண்டே'** என்பது இதற்கு, 'கழிந்த யாண்டுகள்' என்பது பொருள். இங்கும் முந்தைய பாடமே சிறக்கின்றது **'உடம்பு மாய்ந்தது'** (240.10) என்பதற் குரிய வேறுபாட்டிலும் பொருள் நயமில்லை.

பழைய உரையாசிரியர் குறிப்பிடும் பாடங்களில் ஒன்று தவிர (24.17) எஞ்சியவை அனைத்தும் பொருட் சிறப்பின்றியே அமைந்துள.

4. கழகப் பதிப்பில் மூல பாடங்கள்

உ.வே.சாமிநாதையர் பதிப்பில் அடிக்குறிப்பில் காட்டப் பெற்றவற்றுள் மூன்று பாடங்களைப் பொருட் சிறப்புடையனவாகக் கொண்டு அவை கழகப் பதிப்பில் மூல பாடங்களாகக் கொள்ளப் பெற்றுள்ளன.

1. தொ சொ சேனா, நச்சி. வினையியல் நூ.30 உரை.

'புரளும்' (287.9) என்பதற்குப் **'பிறழும்'** என்ற பாடம் மூல பாடமாகக் கழகப் பதிப்பில் உள்ளது. 'புரளும்' **'பிறழும்'** என்பன ஒரே பொருள் தரும் இருவேறு சொற்கள். 'புரளும்' என்பதை விடப் 'பிறழும்' என்பது பழமையும் இலக்கியப் பயிற்சியும் உடையது. முதலடியில் 'பிறழிய வாளை' என்று வந்திருப்பதால் இங்கும் பிறழும் என்றிருப்பது பொருந்தாது. எனவே, உ.வே. சாமிநாதையர் பதிப்பில் கண்டபடி **'புரளும்'** என்றிருப்பதே சிறப்பு.

'பிறந்த' (376 3) என்பதற்கு **'இறந்த'** என்ற பாடம் கழகப் பதிப்பின் மூலம். 'விசும்பைத் தொடும் நீரில் கடந்து சென்ற ஞாயிற்றில் பசுங்கதிர் குறைந்து சிவந்த அந்திப் பொழுதின் சிறு பொழுது தோன்றிய பிறகு என்பது இதன் பொருள். இங்குப் **'பிறந்த'** என்பதற்கு **'இறந்த'** என்ற வேறுபாடு எவ்வகையிலும் பொருந்தாது. மேலும் கழக உரையாசிரியரே தம் விளக்கத்தில் அந்தி மாலையின் செவ்வொளி மழுக இளையினல் பரவும் மருண் மாலைப் போதினைக் காட்டற்கு 'அந்தி சிறு நனி **பிறந்த** பின்றை என்கிருர்' என எழுதியுள்ளார். தாம் கொண்ட சிறந்த என்ற பாடத்தை மறந்து பிறந்த என்ற பாடத்தையே கொண்டு உரையாசிரியர் கூறிய விளக்கத்தாலும் **பிறந்த** என்ற பாடத்தின் பொருட் சிறப்புப் புலனாகும். இது அச்சுப் பிழையால் ஏற்பட்ட தாகவும் இருக்கலாம்.

'பொருநன் என்று' (389.5-6) எனவரும் பாடத்திற்குப் **'பொருந வென்று'** எனக் கொண்டுள்ள கழகப் பதிப்பின் பிறிதொரு மூல பாடமும் பொருட் சிறப்புடையதன்று.

5. கழக உரையாசிரியர் கூறும் பாடங்கள்

கழகப் பதிப்பின் உரையாசிரியராகிய ஒளவை. துரைசாமிப் பிள்ளை, முன்பு அறியப் பெருத சில பாடங்களையும் தம் உரைக் குறிப்பில் காட்டியுள்ளார்.

மோசிகீரனருக்குப் பெருஞ்சேரலிரும்பொறை கவரி வீசிய செய்தி கூறும் பாடலில் '**தண்ணென** வீசி யோயே' (50.12-13) என்பதற்கு '**எண்ணென** வீசி யோயே' என்**றும்** '**எண்ணி** வீசி யோயே' என்றும் இரு வேறுபாடுகளைக் காட்டியுள்ளார். '**தண்ணென**' வென்பதற்கு வேருக '**எண்ணென**' வென்றும் '**எண்ணியென்றும்**' பாடமுண்டு. அக்காலை எண்ணென்பதற்குக் கருத்தெனவுமாம் எண்ணியென்று பாடமாயின் கருதியென்க– என்று கூறுக வென்ருர் எனவரும் உரை விளக்கப் பகுதியில் இதனைக் காணலாம். இப்பாடங்கள் பொருட் சிறப்புடையனவல்ல.

'**இருதலை**' (80.8) என்பதற்கு '**ஒருதலை**' என்றும் '**ஒசிய வெற்றி**' (80,8) என்பதற்கு '**ஒசிய வொற்றி**' என்றும் வரும் பாடங்களும் சீரிய பொருள் தருவன அல்ல. 'பனை முயலும் யானை போல் ஒருதலை யொசிய வொற்றி என்று பாடமோதி, அம்மல்லன் முற்கூருயினும் பிற்கூருயினும் ஒரு தலைமுறிய மோதி என்று உரைப்பாருமுளர்' என இவ்வேறுபாடுகளையும் அவற்றின் பொருட் கூறுகளையும் உரையாசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

'கடும்பசி **கலக்கிய** இடும்பை **கூர்** நெஞ்சமொடு' (230.9) என வரும் தொடரில் '**கலக்கிய**' என்பதற்குத் '**துளங்கிய**' என்றும் '**செய்துண்டொராங்கு**' (370.2) என்பதற்குச் '**செய்துண்டு பெரு அது**' என்றும் வரும் வேறுபாடுகளும் பொருள் நயம் உடையன வல்ல.

கழகப் பதிப்பில் உரையாசிரியர் காட்டும் வேறுபாடுகள் பல வற்றிலும் பொருள் வேறுபாட்டு நோக்கில் ஆயத்தக்கனவாய் அமைந்த இவ்வேறுபாடுகள் ஆறும் பொருட் சிறப்பின்றியே அமைந்தன.

6. கழகப் பதிப்பின் அடிக்குறிப்பு

கழகப் பதிப்பில், பாடல்களுக்கு அடியில் அடிக்குறிப்பாகப் பாட வேறுபாடுகள் குறிப்பிடப் பெறும் பதிப்பு முறையைப் பல நூல்களில் காணலாம்.

புறநானூற்றுப் பதிப்பைப் பொறுத்தவரை ஒரே பாடலில் ஒரே இடத்தில் மட்டும் ஓர் அடிக்குறிப்புப் பாடம் குறிப்பிடப் பெற்றுள்ளது.

"ஆய் அண்டிரன் பற்றிய பாடலொன்றில்,
நிலவன் மாரோ 'புரவலர்' துன்னிப்
பெரிய வோதினும் சிறியவுணராப்
பீடின்று பெருகிய திருவிற்
பாடின் மன்னரைப் பாடன்மார் எமரே" (375.18-12) இதில்

'**புரவலர்**' (375.18) என்பதற்குக் கழகப் பதிப்பில் பயின்ற மூல பாடம் '**புலவர்**' என்பதாகும். அடிக்குறிப்பில் காட்டப்பெறும் வேறுபாடு '**இரவலர்**' என்பது. மேலேயுள்ள பகுதிக்கும் பொருள் கொள்வதில் அற்றொழுக்கான நிலை இல்லை. 'புரவலர்' என்பது பாடமாயின் 'பாடின் மன்னர்' என்பது தேவையற்றதாய் வரும். எனவே, புரவலர் என்பதற்கு வேறு சொல் பாடமாக அமைதலே சிறப்பு. 'நிலவன்மாரே இரவலர்' என இங்குப் பாடங்கொண்டால்' 'நீ இல்லாமல் வறியதாகிய இவ்வுலகத்தில் எம்மைப் போன்ற இரவலர் இல்லாதொழிக; பாடின் மன்னரைப் பாடன்மார் எமர்' என ஆற்றொழுக்காகப் பொருள் கொள்ள இயலும். எனவே கழகப் பதிப்பின் அடிக்குறிப்பில் காட்டப்பெற்ற '**இரவலர்**' என்ற பாடம் இங்குச் சிறப்பாக அமைந்துள்ளது எனலாம்.

7. மர்ரே பதிப்புப் பாடம்

மர்ரே பதிப்பில் மூல பாடங்களாக அமைந்தனவற்றுள் ஒன்று மட்டும் பொருள் வேறுபாட்டு நோக்கில் ஆயத்தக்கதாக அமைந்துள்ளது. '**கண்டாற் கொண்டு மனை திருந்தடி**' (390.25) என்னும் தொடர் இப்பதிப்பில் '**கண்டாற் கொண்டு மவன் திருந்தடி**' என்று அமைந்துள்ளது. இந்த அடியை அடுத்து வரும் பகுதியில் சிதைவு உள்ளது. ஆதலால் முழுமையான பொருளை அறிதற்கியல வில்லை. ஆற்றொழுக்சாகப் பொருள் கொள்வதில் பொருத்தமுடைய நிலையில் அமைவது 'கண்டாற் கொண்டு மவன் திருந்தடி வாழ்த்தி' என்ற பாடமே. அதியமான்நெடுமானஞ்சியை ஔவையார் பாடிய இப்பாடலில் 'அவனைக் கண்டால் அழைத்துச் சென்று அவனுடைய

திருந்திய அடிகளை வாழ்த்தி' எனப் பொருள் கொள்ள வாய்ப்புடைய நிலையில் அமைவது இப் பதிப்பின் பாடமேயாகும். எனவே இவ்விடத்தில் **'கண்டாற் கொண்டு மவன் திருந்தடி'** என்ற பாடத்தைச் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

8. சங்க இலக்கியப் பதிப்புப் பாடம்

சங்க இலக்கியப் பதிப்பில் பொருள் வேறுபாட்டுச் சிறப்புடன் அமைந்திருப்பவை இரண்டு வேறுபாடுகள் **'ஆர் சூழ்** குறட்டின்' (283.8) என்பதற்கு **'அதிர் சூழ்** குறட்டின்' என்றும், **'தீர்கை** விடுக்கும்' (391.9) என்பதற்கு **'அதிர்கை** விடுக்கும்' என்றும் வரும் வேறுபாடுகள் அமைந்துள்ளன.

'ஆர் சூழ் குறட்டின்' என்பதற்கு 'ஆரக் கால்கள் சூழ்ந்த குடம் போல' என்பது பொருள். அது போல வேல்கள் மார்பிடைப் பாய்ந்துள்ளன என்பது கருத்து. வேல் தைத்த ஆகத்திற்கு 'ஆர் சூழ்ந்த குறடு' என்பதையே உவமை கூறுவது இலக்கிய மரபு என்பதை

> ''ஒருமே வொன்மணிச் சூட்டு வைக்கிய
> ஆரமே யமைந்ததேர்க் குழிசி யாயினர்''[1]

எனவரும் இலக்கியப் பகுதியாலும் அறியலாம். இக் கருத்தையே எய்போற் கிடந்தானென் ஏறு[2] எனவரும் இலக்கணப் பகுதியும் உணர்த்துகின்றது. சங்க இலக்கியப் பதிப்பில் உள்ள மூல பாடமாகிய **'அதிர் சூழ் குறட்டின்'** என்னும் பாடம் பொருள் பொருத்தமின்றி அமைந்துள்ளது.

'தீர்கை விடுக்கும்' என்பதற்கு **'அதிர்கை விடுக்கும்'** என்று அமைந்த பாடமும் பொருட் சிறப்புடையதன்று. 'இரும்பேரொக்கல் தீர்கை விடுக்கும் பண்பின' என்பதற்குப் பெரிய சுற்றம் இந் நாட்டிலிருந்து நீங்குதலைக் கைவிடும் பண்புடையதாய் இருந்தது

---

1. சீவக 790
2. பு வெ.மா. 176

என்பது கருத்து. இதனால் பாணர்களைக் காக்கும் வள்ளன்மைச் சிறப்பு வெளிப்படுகிறது. **'அதிர்கை விடுக்கும்'** எனவரும் பாடத்தில் இத்தகைய பொருட் சிறப்பு இல்லை.

9. உ.வே.சா. பதிப்பின் அடிக்குறிப்புப் பாடத்தை ஏற்றல்

உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் காட்டப் பெற்ற பாடல்களில் சில பொருள் வேறுபாட்டுடனும் அமைந்தவை யாகும். இந்த அடிக்குறிப்புப் பாடங்களைப் பின் வந்த பதிப்பாசிரியர்களும், உரையாசிரியர்களும் ஏற்றுக் கூறியுள்ளனர்.

உ.வே.சா. பதிப்புப் பாடம்	பா.அடி	உ.வே.சா அடிக்குறிப்பு	பிற்காலத்தில் ஏற்போர்
யானைக் கந்தாற்றுனே	57-11	யானைக்குக் கந்தாற்றுவே	கழக.மூலம்,சங் இல.
அறத்தின் மண்டிய	62.7	மறத்தின் மண்டிய	கழக உரையாசிரியர்
அருத்திய	227 7	அருக்கிய	சங்.இல.
முசுறி	343.10	முசிறி	கழக. மூலம், மர்ரே, சங்.இல.
கூவும்	356.2	கூஉம்	மர்ரே
துணையேம்	384.10	கிணையேம்	கழகமூலம்,மர்ரே
மாடெழுந்து	397.4	பாடெழுந்து	மர்ரே.சங்க இல

உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் குறிப்பிடப் பெற்றிருப்பினும் இப்பாடங்கள் பிற்காலத்தில் பல பதிப்புக்களில் மூல பாடங்களாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டிருத்தலைக் காணலாம்.

'யானைக்குக் கந்தாற்றுவே' (57.11) எனவரும் பாடம் வேற்றுமை உருபு சேர்ந்து தெளிவான பொருள் விளக்கம் தருகிறது. இப்பாடம் ஏற்கத்தக்கது. **அறத்தின் மண்டிய'** (62.7) என்பதற்கு **'மறத்தின் மண்டிய'** என்றும் **'அருத்திய'** (227.7)

என்பதற்கு **'அருக்கிய'** என்றும் வரும் பாடங்கள் பொருட் சிறப்புடையனவல்ல. **'முசுறி'** (343.10) என்பதற்கு **'முசிறி'** என்றும் **'கூவும்'** (356-2) என்பதற்குக் **'கூஉம்'** என்றும் வருவன மிகுதியும் பொருள் வேறுபாடற்றவையாயினும் முறையே திருந்திய சொல்லமைப்பும், சந்த அமைப்பும் பெற்றிருத்தலால் ஏற்கத் தக்கவை. **'துணையேம்'** (384.10) என்பதற்குக் **'கிளையேம்'** என்பதும் **'மாடெழுந்து'** (397.4) என்பதற்குப் **'பாடெழுந்து'** என்றும் வரும் பாடங்கள் பொருட் சிறப்புடையன.

10. கழகப் பதிப்பில் மூலபாடம்

கழகப் பதிப்பில், இதுவரை அறியப் பெறாத ஒன்பது வேறுபாடுகள் மூல பாடங்களாகக் கொள்ளப் பெற்றுள்ளன. அவை புறநானூற்றில் இறுதி ஐம்பது பாடல்களில் சிலவற்றில் உள. அப்பாடல்களுக்குரிய இடங்கள் உ. வே. சாமிநாதையர் பதிப்பில் சில சிதைவுற்றும் சில வேறுபட்டும் உள. அவை கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

உ.வே.சா. பதிப்பு	பா-அடி	கழகப் பதிப்பு
..........யுழக்கி	353.14	செருவாயுழக்கி
பிறழ்பல்	356.2	பேழ்வாய்
செய்துண்டொராங்கு	370.2	செய்துண்பெறு அது
புரவலர் துண்ணி	375.18	புலவர் துண்ணி
கன்று பல	383.20	குன்று பல
நிலைக்குந்து	386.15	அலைக்குந்து
விருந்தோர் என்கோ	387.16	விருந்தோர்தங்கோன்
வினைப்பகடேற்ற மேழி	388.11	வினைப்பகடேற்றமெழீஇ
ஆடுமகளல்குல்	393.21	ஆடுமகளொல்கல்

'புரவலர் துண்ணி' (375.18) என்பதற்குரிய **'புலவர் துண்ணி'** என்ற பாடம் பொருந்துவதன்று **'இரவலர் துன்னி'** என்ற கழகப் பதிப்பின் அடிக்குறிப்புப் பாடம் பொருந்தும் என்ற செய்தி முன்னர் விளக்கப்பட்டுள்ளது. எஞ்சிய எட்டுப் பாடங்களும் உ. வே. சாமிநாதையர் பதிப்புப் பாடங்களைவிடப் பொருட் சிறப்புடையனவாயுள. உ. வே. சாமிநாதையர் பதிப்பில் இப்பகுதிப் பாடல்களுக்குப் பழையவுரை இல்லையாதலால் அப்பாடல்களின் பொருட் சிறப்பை உணர இயலவில்லை. கழகப் பதிப்பில் இப்பாடங்களைக் கொண்டு உரை வரையப்பட்டுள்ளது சிறப்பும் பொருத்தமும் உடையனவாயுள. எனவே இவ்வெட்டுப் பாடங்களும் ஏற்கத் தக்கவை.

1. சில பதிப்புக்களின் புதிய மூல பாடங்கள்

உ. வே. சாமிநாதையர் பதிப்பிலும் அப்பதிப்பின் அடிக் குறிப்பிலும் காணப்பெருத பாடங்கள் பிற்காலத்தில் கழகப் பதிப்பில் மூலபாடமாக அமைந்துள்ளதைப் போன்று வேறு சில பதிப்புக்களிலும் மூலபாடங்களாக அமைந்துள்ளதையும் காண்கிறோம்.

'ஆழ்நீர்' (75.7) என்பதற்குத் **'தாழ்நீர்'** என்றும், **'களரியம் பறந்தலை'** (245.3) என்பதற்குக் **'களரி மருங்கின்'** என்றும் **காதனன்மர நீ மற்றிசினே'** (272.3) என்பதற்குக் **'காதனன் மரம் நீ நிழற்றிசினே'** என்றும் **'வெந்துடன்று'** (296.4) என்பதற்கு **'வேந்துடன்று'** என்றும் **'செல்லான்பன் மாண்'** (340 7) என்பதற்குச் **'செல்லான்வன் மாண்'** என்றும். **'வாருக மலர'** (337.14) என்பதற்கு **'வரல் தோறு அகம் மலர'** என்றும் வருவன மர்ரே பதிப்பிலும் சங்க இலக்கியப் பதிப்பிலும் மூல பாடங்களாகக் காணப்பெறும் பாடங்கள்; பொருட் சிறப்பும் சொற் சிதைவின்றித் தெளிவும் இப்பாடங்களில் அமைந்துள்ளன. எனவே இப்பாடங் களும் ஏற்கத்தக்கவை.

'இகழ்ந்தோர்' (176.10) என்பதற்கு **'இகந்தோர்'** என்றும் **'நிறப்புடைக்** கொல்கா யானை மேலோன்' (293.1) என்பதற்கு **'நிறப்படைக் கொல்க யானை மேலோன்'** என்றும் வரும் இரு பாடங்கள் கழகப் பதிப்பில் புதிய பாடங்களாக உள்ளன. இவ்விரு பாடங்களையும் பின்னே சங்க இலக்கியப் பதிப்பும் மூல பாடங்களாக ஏற்றுள்ளது. இவ்விரு பாடங்களும் பொருட் சிறப் புடையனவே. இவையும் ஏற்கத் தக்கனவாம்.

'அடங்கலாளன்' (354.1) என்பதற்கு **'அடங்கல் ஆள'** என்ற பொருட் சிறப்புடைய பாடமொன்றைக் கழகப் பதிப்பிலும் காண் கிறோம். இதுசீரிய பொருளமைப்புப் பெற்றிருத்தலால் பின்னே வந்த மர்ரே பதிப்பும், சங்க இலக்கியப் பதிப்பும் இதனையே மூல பாடமாக ஏற்றுள்ளன. எனவே **'அடங்கல் ஆள'** என்ற பொருட் சிறப்புடைய பாடம் கொள்ளத்தக்கது.

398 ஆம் பாடலில் **'நெடுவாரிப்ப வாட்டித்து'** (398.13) என்றும், **'எனதரை'** (398.18) என்றும் வரும் பாடங்களுக்கு முறையே **'நெடுவாரிரப்ப வாட்டித்து'** என்றும் **'என்னரை'** என்றும் வரும் பாடங்கள் கழகப் பதிப்பிலும், பின்னர் மர்ரே பதிப்பிலும் மூல பாடங்களாக உள. இவ்விரு வேறுபாடுகளும் சிறப்புடையன; உ. வே. சாமிநாதையர் பதிப்புப் பாடங்களைவிடப் பொருள் தெளிவுடையன.

புறநானூற்றில் பொருள் வேறுபாட்டுடன் அமைந்த 127 இடங்களில் உ.வே. சாமிநாதையர் பதிப்பில் இல்லாத 26 புதிய பாடவேறுபாடுகள் பொருட் சிறப்பும் தெளிவும் உடையனவாய் அமைந்துள என்பது மேலேயுள்ள பகுதியால் நாம் அறியும் செய்தி. திருந்திய பொருள் நயமுடைய பாடங்களாக அமைந்த இவ்வேறுபாடுகள் 26ம் ஏற்கத் தக்க சிறப்புடையனவாய் அமைந்துள.

மேலே குறிப்பிடப்பெற்ற புறநானூற்றுப் பொருள் வேறு பாடுகள் அனைத்தும் கீழே விவரமாகப் பட்டியலில் தரப் பெற்றுள்ளன.

பொருள் நிலை வேறுபாடுகள்

1.	ஒரே பொருளுடைய இரு சொற்கள் பயிற்சி	121
2.	சிதைந்த வேறுபாடுகள் நிறைவு பெற்றவை	61
3.	மிகுதியும் பொருள் வேறுபாடின்றி அமைவன	178
4.	முற்றிலும் பொருள் வேறுபடுவன	127
	கூடுதல்	487

எழுத்துவகை வேறுபாடுகள் முதல், ஒப்புமை நிலை வேறுபாடுகள் வரையுள்ள ஆறு பிரிவுகளிலும் அமையும் பாட வேறுபாடுகள் சில, பொருள் நிலை மாற்றத்திற்கு உரியனவாயும் உள; எனினும் அவை பொருட் சிறப்பின்மையுடையனவல்ல. மேலும் அவை வேறுபட்டு அமைந்தமைக்கு உரிய களம், கருத்தின்மையே தவிரப் பொருள் நோக்கம் அல்ல. ஆதலால் அவை இக் கட்டுரைக்கண் ஆய்வுக்கு உரியனவாகக் கொள்ளப் பெறவில்லை. முற்றிலும் பொருள் நிலையால் வேறுபட்டு அமைந்தனவே இங்கு ஆயப் பெற்றுள.

9. பத்துப்பாட்டு

பத்துப்பாட்டு நூல்களில் அமைந்த மொத்த அடிகள் 3552ல் 363 அடிகள் மட்டுமே பாடவேறுபாடுகள் கொண்டவை. இவற்றில் 376 இடங்களில் வேறுபடும் பாடங்களின் எண்ணிக்கை 402. இவற்றுள் பொருள் வேறுபாடற்றனவாய் அமைந்தவை 306 எஞ்சிய 96 பாடங்கள் பொருள் நோக்கில் ஆயத்தக்கவை. இவ் வேறுபாடுகள் இக்கட்டுரைக்கண் நூல் வரிசையில் ஆராயப் பெற்று உரிய மூலபாடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

ஒவ்வொரு நூலிலும் பொருள் வேறுபாட்டுடன் அமைந்த பாடங்களில் அந்தந்த இடத்திற்குப் பொருந்தும் சிறந்த பாடங்கள் எவை என்பதைக் காண்போம்.

1. திருமுருகாற்றுப்படை

திருமுருகாற்றுப்படைக்குப் 'புலவராற்றுப்படை' என்னும் பெயரும் உரியது. இந்நூலில் அமைந்த அடிகளின் எண்ணிக்கை 317. இவற்றுள் பத்து அடிகளில் மட்டுமே பத்து வேறுபாடுகள் உள. இவற்றுள் ஐந்து வேறுபாடுகளே பொருள் வேறுபாட்டுச் சிறப்புடையவை.

1. 1. வென்றடுவிறற்கொடி

'கோழியோங்கிய வென்றடு விறற்கொடி' (38) என்ற தொடரில் **'வென்றடு விறற்கொடி'** என்பதற்கு **'ஏன்றடு விறற்கொடி'** என்ற வேறுபாட்டைக் கழக உரையாசிரியர் குறிப்பால் அறிகிறோம். இதனை, 'ஏன்று,' 'அடு' என்றும், படித்தற்கும் இடமுண்டு என்றும், ஏன்று–எதிர்ந்துநின்று, அடு–கொல்லுகின்ற என்று எனவரும் வை.மு.கோ. பதிப்புக்குறிப்பிலும் இப்பாடமும் அதன் பொருளும் சுட்டப்பெற்றிருத்தல் அறியலாம்.

கழகப் பதிப்பின் மூலம் **'வென்றடு விறற்கொடி'** என்றே உள்ளது. கழக உரையாசிரியர் **ஏன்றடு விறற் கொடி'** எனத்தான் பாடங்கொண்டதோடு அமையாமல் நச்சினார்க்கினியரின் உரைப் பகுதியால், அவரும் **'ஏன்றடு விறற்கொடி'** என்ற பாடத்தையே கொண்டிருக்க வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். **வென்றடு விறற்கொடி'** என்பதற்குப் போரிட்டு வெல்லும் வெற்றிக்கொடி என்பதும் **'ஏன்றடு விறற்கொடி'** என்பதற்கு எதிர்நின்று பொரும் வெற்றிக்கொடி என்பதும் பொருள்.

'வென்றடு விறற்கொடி' என்பதற்கு **'ஏன்றடு விறற்கொடி'** என்ற பாடம் தோன்றியமைக்குப் பின்வரும் நிலைகள் காரணமாகலாம். 'கோழியோங்கிய வென்றடு விறற்கொடி' என்னும் தொடரை ஏட்டிலிருந்து படிக்கும்போது கோழியோங்கிய 'வேன்றடு விறற்கொடி' என்றும் படிக்க வாய்ப்புண்டு. ஆதலால் 'ஏன்றடு விறற்கொடி' என்ற பாடம் உருவாகியிருக்கலாம். 2. வாழிய பெரிதென்றேத்திப் பலருடன்–என அடுத்து வரும்

அடியின் மூன்றும் சீரின் தொடக்கத்தில் நெட்டெழுத்துப் பயின்றதற்கேற்ப முதல் அடியின் மூன்றும் சீர்த்தொடக்கத்திலும் நெட்டெழுத்துப் பயிற்சி இருத்தல் வேண்டும் என்ற கருத்தில் ஏன்றடு விறற்கொடி' என்ற பாடம் தோன்றியிருக்கக் கூடும்.

எனினும் வென்றடு விறற் களம் (55) எனப் பின்னரும் இந் நூலிலேயே இத்தொடர் பயின்று வந்திருத்தலாலும் **'ஏன்றடு விறற்கொடி'** என்ற பாடம் மிகுதியும் பொருளை வேறுபடுத்தாமல் இருத்தலாலும் **'வென்றடு விறற்கொடி'** என்ற பாடத்தினையே சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

1.2. புலம்பிரிந்துறையும்

'**புலம் பிரிந்துறையும்** (63) என்பதற்குப் **'புலம் புரிந்துறையும்'** என்றும் **'இன்னசை வாய்ப்ப'** (65) என்பதற்கு **'இன்னிசைவாய்ப்ப'** என்றும் **'யாண்டாண்டாயினுமாக'** (250) **'ஆங்காங்காயினுமாக'** என்றும் உ.வே.சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் வேறு பாடுகள் உள.

இவற்றுள் புலம்பிரிந்து என்பதற்கு மெய்ஞானத்தால் அறிதலைக் கைவிட்டு என்பது பொருள். 'புலம் புரிந்து' என்பதற்கு மெய்யறிதலைச் செய்து என்பது பொருள். 'புலம் பிரிந்து' எனப் பாடங்கொண்ட நச்சினார்க்கினியர் முன்னுள்ள 'அடி' என்பதோடு இயைத்து 'புலம்பிரிந்து உறையும் அடி' எனக் கொண்டு கூட்டிப் பொருள் கொள்வர். ஆற்றொழுக்காகப் பொருள் கொள்ளுங்கால் **'புலம்பிரிந்து'** என்பதைவிட, தெளிவுடன் அமைந்த **'புலம்புரிந்து'** என்ற பாடமே சிறப்புடையதாக இருத்தல் அறியலாம்.

'இன்னிசை வாய்ப்ப' 'ஆங்காங்காயினுமாக' என்ற வேறு பாடுகளால் மிகுதியும் பொருட் சிறப்பு இல்லை. எனவே **'இன்னசை வாய்ப்ப'** என்றும், **யாண்டாண்டாயினுமாக'** என்றும் அமைந்த பாடங்களையே ஏற்றனவாகக் கொள்ளலாம். வை.மு.கோ.பதிப்பில் 'யாண்டாண்டாயினும்' என்பதற்கு ஆண்டாண்டாயினும் என்பது பாடம்.

1. 3. மாண்டலைக்கொடி

'கந்துடை நிலையினு மாண்டலைக் கொடியோடு' (226–227) என்ற தொடரில், கந்துடை நிலையினும், 'மாண்டலைக் கொடியோடு'-எனப் பிரித்து **'மாண்டலைக்கொடி'** என்பதற்கு மாட்சிமைப்பட்ட 'தலைமையினையுடைய கோழிக்கொடி' என நச்சினார்க்கினியர் பொருளுரைப்பர்.

'கந்துடை நிலையினும் **ஆண்டலைக் கொடியோடு'** எனப் பிரித்துப் பொருள் கொள்ளும் முறையும் இருந்தது. நச்சினார்க் கினியர் காலத்திலேயே இம்முறை இருந்ததை இனி ஆண்டலைக் கொடி-என்று பாடமாயின் பேய் முதலியன பலியை நுகர தலை, ஆண் மகன்றலையும் உடல் புள்ளின் வடிவுமாக எழுதின கொடி என்க எனவரும் நச்சினார்க்கினியர் உரைவிளக்கத்தால் அறியலாம். **'இனி ஆண்டலைக்கொடி'** என்று பாடங்கொண்டு மயிற்கொடி என உரை கூறுதலும் உண்டு என்பதை உ.வே. சாமிநாதையர் குறிப்பால் அறியலாம் கழக உரையாசிரியர் **'மாண்டலைக்கொடி'**, என்றே பாடங்கொண்டு மாட்சிமைப்பட்ட தலைமையினையுடைய கொடி எனப் பொதுநிலையில் பொருள் கூறிச் செல்வர். இவையனைத்திலும் நச்சினார்க்கினியர் கொண்ட பாடமும் பொருளும் சிறப்புடையனவாயிருத்தல் அறியலாம்.

2. பொருநராற்றுப்படை

பொருநராற்றுப்படையின் 248 அடிகளில் மட்டும் 31 இடங்கள் வேறுபட்டுள்ளன. இவற்றுள் எட்டு வேறுபாடுகள் மட்டுமே பொருள் நோக்கில் ஆயத்தக்கவை.

பொருநராற்றுப்படையில் கீழே குறிப்பிடப் பெற்ற 8 பாட வேறுபாடுகள் சொல் நிலையால் மட்டுமன்றிப் பொருள் நிலையாலும் மாற்றம் பெற்று ஆய்வுக்கு உரியனவாக அமைகின்றன.

பாடம்	அடி	வேறுபாடு
இருந்திறைகூடி	79	இமிர்ந்திறைகூடி
நோக்குநுழைகல்லா	82	நோக்குநுழைவேலா
போற்றுபுநோக்கி	151	போற்றுவனநோக்கி
கையதுகேளாவளவை	152	கையது கொள்ளாவளவை
மாசொடு குறைந்த	153	மாசொடு மிடைந்த
வயின்வயினெற்றாழ்தாழை	180	வயின்வயினின்றாழ்தாழை
கூடுகெழீஇய	182	கூடுகுழீஇய
நாடுகுழீஇய	226	நாடு கெழீஇய

மேலே கண்ட பாடங்கள் அனைத்தும் உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் உள்ளவை. ஓரளவு பொருள் வேறுபாட்டு நிலையில் அமைந்திருப்பினும் பொருள் சிறப்புடைய நிலையில் இவ்வேறுபாடுகள் அமையவில்லை என்பது தெற்றெனப் புலனாகும். **'கூடுகெழீஇய'** (182) **'நாடுகுழீஇய'** (226) என்பன வற்றுக்கு முறையே **'கூடுகுழீஇய', 'நாடு கெழீஇய'** என்ற வேறுபாடுகள் ஒலி ஒப்புமையால் நேர்ந்தனவாகவும் கருதத்தக்க நிலையில் உள. 'நாடு குழீஇய' என்பது 'நாடுகுறீஇ' என யகரம் விடுபட்டு வை. மு. கோ. பதிப்பில் பாடமாக அமைந்துள்ளது.

'நோக்குநுழைகல்லா' (82) **கையதுகேளாவளவை'** (152) **'வயின் வயினெற்றாழ்தாழை'** (180) என்பனவற்றுக்கு அமைந்த வேறுபாடுகள் ஏடெழுதுவோரின் பிழையால் நேர்ந்தனவா யிருத்தல் வேண்டும். எஞ்சிய மூன்றும் பொருள் வேறுபட்டி ருப்பினும் பொருட் சிறப்புடையனவாக இல. இவற்றுள் முன்னர்க் கொள்ளப்பட்ட பாடங்களே சிறப்புடையன.

3. சிறுபாணாற்றுப்படை

சிறுபாணாற்றுப்படையில் 269 அடிகளில் 32 அடிகளில் மட்டும் 33 இடங்களில் பாடங்கள் வேறுபட்டுள்ளன. எழுத்து நிலை யாலும் சொல் நிலையாலும் ஒப்புமை நிலையாலும் பிறவகையாலும் பொருள் வேறுபாடின்றி எழுந்த வேறுபாடுகளே இவற்றில் மிகுதி.

சிறுபாணாற்றுப்படையில் பொருள் வேறுபாட்டுடன் அமைந்த ஒன்பது வேறுபாடுகள் கீழே பட்டியலில் தரப்பட்டுள்ளன.

பாடம்	அடி	வேறுபாடு	வேறுபாடு அமைந்த இடம்
அயிலுருப்பனையவாகி	7	அயிலுருக்கனையவாகி	உ.வே.சா. பதிப்பு
		அயிலுருத்தனையவாகி	,,
இல் சேறிகுதரும்	28	இன்செறிநீர்தரும்	,,
பெருங்கனுடன்	87	பெங்கடனுடன்	உ.வே.சா.பதிப்பு
நறுவீயுறைக்கும்	88	நறவுவாயுறைக்கும்	,,
வென்றிவேலூரெய்திண்	173	வென்றியவன்வேலூர்	,,
கயலெடுத்த	181	கயலெறிந்த	,,
நீலச்செங்கட்சேவல்	184	நீலச்செங்கட்செலவு	சங்.இல.பதிப்பு
கூடிவியனகர்	187	கூடிவரைப்பின்	உ.வே.சா.பதிப்பு
ஓடியதுணர்தலும்	214	ஊடியதுணர்தலும்	,,

'அயிலுருப்பனைய வாகி' – என்பதற்கு வேல்காய்ந்த தன்மையவாகி என்பது பொருள். 'பருக்கைக் கற்கள் வெம்மை மிகுதியால் வேல்காய்ந்ததுபோல ஆகி, நடப்பாரின் அடியைக் கிழிக்கின்றன' எனக் கூறப்பட்டுள்ளது. இதன் வேறுபாடுகளும் ஏறத்தாழ இப்பொருளினவே. எனவே '**அயிலுருப்பனையவாகி**, என்பதையே சிறந்த பாடமாகக் கொள்ளலாம்.

விறலியின் எயிறுகள் வருணிக்கப்படும் இடத்தில் இன்சேறிகு தரும் எயிற்றின் என வருகிறது. பனைநுங்கின் இன்சேறு விறலி எயிற்றின் ஊறலுக்கு உவமையாக இங்கு உரைக்கப்படுகின்றது. இங்கு இன்சேறிகுதரும் எயிறு என்றிருப்பதைவிட 'இன்செறிநீர் தரும் எயிற்றின் என்று இருப்பது பொருத்தமாக அமையும். நுங்கின் இனிமைசெறிந்த நீர் ஊறும் எயிறுகள்—எனப் பொருள் அமையும். வை.மு.கோ. பதிப்பிலும் இங்கு இன்செறி நீர்தரும் என்பதே மூலபாடமாக அமைந்துள்ளது. "பாலொடு தேன்

கலந்தற்றே பணிமொழி வாலெயிறு ஊறிய நீர்'' எனத் திருவள்ளுவர் கூறியிருப்பதும் இப்பாடத்தை ஏற்புடையதாகக் கொள்ளத் துணை செய்கிறது.

'பெருங்கலுடன் பேகன்' என்றும் **'பெருங்கடலுடன் பேகன்'** என்றும் வரும் பாடங்களில் முதல் பாடமே சிறப்புடையது. பேகனுக்கு உரியது மலை வளம் நிறைந்த கல் நாடே தவிர கடல்நாடு அன்று,

''அருந்திறற் கடவுள் காக்கும் உயர்சிமைப்
பெருங்கலுடன் பேகனும்''[1]

எனப் புறநானூற்றிலும், பெருங்கல் நாடன் என்றே பேகன் குறிக்கப்பட்டுள்ளான். ''கடாஅ யானைக் கலிமான் பேகன்''[2] என்றும், ''கடாஅ யானைக் கழற்கால் பேகன்''[3] என்றும் பேகன் மலைநாட்டின் களிற்று வளமும் புறநானூற்றில் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளதும் அறியத்தக்கதாகும்.

எஞ்சிய பிறவற்றில் பொருள் நிலை ஓரளவு வேறுபட்டாலும் அதனால் சிறப்பு இல்லை. வேறுபாடுகள் தரும் பொருளைவிடப் பழைய பாடங்களின் பொருளே சிறப்புடையனவாக உள்ளமையால் பழம்பாடங்களை ஏற்புடையனவாகக் கொள்ளலாம்.

4. பெரும்பாணாற்றுப்படை

பெரும்பாணாற்றுப்படை 500 அடிகளால் இயன்ற பாட்டு. இவற்றில் 91 அடிகளில் 96 இடங்களில் 107 பாடவேறுபாடுகள் உள்ளன.

பொருள் மாற்றம் செய்வனவாகப் பெரும்பாணாற்றுப்படையில் அமைந்தவை 19 வேறுபாடுகள். அவை கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

---

1. புறம் 158. 11-12.
2. ,, 141. 12
3. ,, 142. 4

பாடம்	அடி	வேறுபாடு	வேறுபாடு அமைந்த இடம்
பாளையம் பசும்பூ	7	'பாளையின் பசுங்காய்'	உ.வே.சா.பதிப்பு
மிரியல்	78	நெறியல்	,,
நெடுந்தகரீத்தலை	87-8	நெடுந்திடரீத்திலை	
		நெடுந்தோட்டிந்திலை	,,
வாராதட்ட	100	ஆறாதட்ட	உ.வே.சா.பதிப்பு
ஒண்டொழிற் கழற்கால்	102	ஒண்பொறிக்கழற்கால்	,,
தூங்காயிருக்கை	146	முன்தலையிருக்கை	,,
புகை கமழ	177	புகைபிறப்ப	,,
வான்புழுக்கட்டிப் பயில்வுற்று	195	வான்புழுக்கட்டிப் பயிற்றின்	,,
செந்நெல்லின்	230	செய்நெல்லின்	,,
பூம்புறநல்லடை	278	பூம்புறநெல்லடை	நச்சி.உரை
அளைஇத்தேம்பட	278	முளைஇத்தேம்பட	பொ.வே.சோ. உரை
அடைதல் ஓம்பி	290	அடர்தல் ஓம்பி	சங்.இல.பதிப்பு
காரகற்கூவியர்	377	காரகற் கூவியன்	உ.வே.சா.பதிப்பு
நெடுநகர் வரைப்பின்	405	நெடுமதில்வரைப்பின்	,,
எளியவாகலின்	422	தனக்கெளிய	,,
அரிசெத்துணங்கி	473	அரிசெய்துணங்கிய	நச்சி.உரை
அமுதொடு பிறவும்	475	அயிரொடு பிறவும்	உ.வே.சா.பதிப்பு
உரவுக்கடல்	483	புலவுக்கடல்	,,
விறலியர் மலைய	486	விறலியர் வேய	,,

மேலே கண்ட வேறுபாடுகளில் சில பொருள் மாற்றம் செய்வனவாயினும் பொருட்சிறப்பில்லாத நிலையில் அமைவன.

கமுகின் பாளையாகிய அழகிய பசியபூ விரியாமல் கருவாயிருப்பதைப் போல, யாழின் இரண்டு கண்ணும் கூடிய செறிந்த துளை அமைந்துள்ளது என்று பாளைப் பூவின் கருவிருந்த நிலை உவமையாகக் கூறப்பட்டுள்ளமையால் **'பாளையின் பசுங்காய்'** என்பதைவிடப் **'பாளையம் பசும்பூ'** (7) என்ற பாடமே சிறந்தது. **'பாளையின் பசும்பூ'** எனவரும் வை.மு.கோ. பதிப்புப் பாடமும் இப்பொருளினதே. **'மிரியல்'** (78) என்பது மிளகைச் சுட்டும் சொல். இதற்கு வேறுபாடாக அமைந்த **'நெறியல்'** என்பது பொருட் சிறப்புடையதன்று.

'நெடுந்தகரீத்திலை' (87-8) என்பதற்கு நெடிய மேட்டு நிலத்தில் நின்ற ஈந்தின் இலை என்பது பொருள். வேறுபாடுகளும் அப்பொருளைத் தருவனவே. வேறுபட்ட சிறந்த பொருள் தாரா மையால் மூல பாடமே சிறப்புடையதாக அமைகிறது. **'வாராதட்ட புழுக்கல்'** (100) என்புழி அறியாமல் ஆக்கின சோறு என்பது பொருள். ஆருமல் ஆக்கிய சோறு என்பது பாட வேறுபாட்டின் பொருள். 'வாராது அட்ட புழுக்கல்' எனக் கூறும்போது அரிய வேண்டிய தேவையின்றி உயர் வகை அரிசியாக இருந்தது என்பதும், அதனையே பாணர் கூட்டத்துக்கு ஆக்கினர் என்றும் சிறப்பு இருத்தலால் **'வாராது அட்ட புழுக்கல்'** என்பதைச் சிறந்த பாடமாக ஏற்கலாம்.

'ஒண்டொழிற் கழற்கால்' (102) **'தூங்கா இருக்கை'** (146) **'புகைகமழ'** (177) என்பன அவற்றின் வேறுபாடுகளைவிடப் பொருள் நிலையில் சிறப்புடையவை. அவரை **'வான் புழுக்கட்டிப் பயில்வுற்று'** (195) என்பதும் அதன் வேறுபாடு தரும் பொருளைவிடச் சீரிய பொருள் தந்து சிறந்து விளங்குகிறது.

நெல்வகையனைத்தும் செய்யில் விளையும் சிறப்பினவே. எனவே **'செய்நெல்லின்'** என்ற வேறுபாட்டைவிட ஒருவகை உயர் இரகத்தைக் குறிப்பிடும் **'செந்நெல்லின்'** (230) என்ற பாடம் சிறந்துள்ளது.

'பூம்புறநல்லடை' (278) என்பதற்குப் பொலிவு பெற்ற புறமுடைய நல்லமுனை என்பது பொருள். இங்கு நெல்லடையும் பாடம் எனக் குறிப்பர் நச்சினார்க்கினியர் **'அரிசெத்துணங்கிய'** (473) என்பதற்கு **'அசிசெய்துணங்கிய'** என்ற பாடத்தையும் நச்சினார்க்கினியரே தம் உரையில் குறிப்பிட்டுள்ளார். மேலும் தான் கொண்ட பாடமே சிறப்புடையது என்பதை விளக்கும் வகையில் 'அரிசெத்தென்றதற்கு' 'ஞாயிற்றை ஒத்தது' என்று பொருள் கூறியதோடமையாது உவமையன்றாக என்றுமாம் என வேறுபொருளும் கூறுவர். நச்சினார்க்கினியர் உரையில் காட்டும் வேறுபாடுகள் இத்தகைய பொருட் சிறப்புடையனவல்ல. நச்சினார்க்கினியர் அவற்றை ஏற்காமல் விடுத்ததும் அவற்றின் சிறப்பின்மையைச் சுட்டும். **'அளைஇத்தேம்பட** (278) என்பதற்குக் கழகப் பதிப்பின் உரையாசிரியர் பொ. வே. சோமசுந்தரனார் **'முளைஇத்தேம்பட'** என்ற பாடத்தைக் காட்டியிருப்பினும் அதற்குப் பொருட் சிறப்பின்மையால் அவரும் அந்தப் பாடத்தை ஏற்காது விடுத்தார்.

'காரகற்கூவியர்' (377) **'நெடுநகர்வரைப்பின்'** (405) **'எளியவாகலின்'** (422) **'அமுதொடு பிறவும்'** (475) **'உரவுக்கடல்'** (483) **'விறலியர் மலைய'** (486) என்ற பாடங்களுக்கு உ.வே. சாமிநாதையர் பதிப்பில் கண்ட பாடங்கள் மிகுதியும் பொருள் வேறுபடுத்துவன அல்ல. சங்க இலக்கியப் பதிப்பில் **'அடைதல் ஓம்பி'** (290) என்பதற்கு அமைந்த வேறுபாடும் இத்தகையதே.

5. முல்லைப்பாட்டு

முல்லைப்பாட்டின் 103 அடிகளில் 10 அடிகளில் மட்டும் 11 இடங்களில் 13 வேறுபாடுகள் உள்ளன. இரண்டு தவிர அனைத்துமே பொருள் வேறுபாட்டு நோக்கில் ஆயத்தக்கனவாக அமையவில்லை.

பொருள் மாற்றம் செய்வனவாயமைந்த பின்னுள்ள இரு இடங்களும் பொருட் சிறப்புடையனவாக அமையவில்லை. **'வருதறலைவர் வாய்வது'** (20) என்பதற்கு **'வருவராதல் வாய்வது'** என்றும் **'நிழத்திய நடுநாள்'** (50) என்பதற்கு **'நிழத்தலினடுநாள்'**

''**நிழற்றியநடுநாள்**' '**மிழற்றியநடுநாள்**' என்றும் வேறுபாடுகள் பெற்றுள. 'ஒய்தல் ஆய்தல் நிழத்தல் சா அய் ஆவயின் நான்கும் நுணுக்கப் பொருள்' என்று தொல்காப்பியத்து உரிச் சொல்லியலில் வருவதனுல் அதற்கேற்ப நெடுநாவொண்மணி நிழத்தியநடுநாள் என்று தான் பாடம் இருக்கவேண்டுமென்பர் ஒரு சாரார் என வை.மு.கோ. இப்பாட வேறுபாடு சிறப்புடைய தெனப் பிறர் கூறும் கருத்தைச் சுட்டியுள்ளார்.

6. மதுரைக் காஞ்சி

பத்துப்பாட்டு நூல்களில் அடி அளவால் பெரியது மதுரைக் காஞ்சி. இதில் 782 அடிகளில் 104ல் 108 இடங்களில் மொத்தம் 111 வேறுபாடுகள் உள.

பொருள் மாற்றத்தோடு அமைந்துள்ள வேறுபாடுகளேயும் பொருட் சிறப்பில்லாதவை, பொருட் சிறப்புள்ளவை என இரு கூறுகப் பகுத்துக் கொள்ளலாம். சான்றுக '**மொய்யிருங் கூந்தல்**' (417) என்பதற்கு '**ஐம்பாற்கூந்தல்**' என்ற பாடவேறுபாடு உள்ளது. பொருள் நிலேயில் இதில் மாற்றமிருப்பினும் பொருட் சிறப்பில்லே. இத்தகைய நிலேயில் அமைந்த 16 வேறுபாடுகளே நீக்கி, பொருட் சிறப்புடன் அமைந்த ஆய்வுக்குரிய வேறுபாடுகள் 12 மட்டும் கீழே பட்டியலில் குறிப்பிடப் பெற்றுள்ளன.

பாடம்	அடி	வேறுபாடு
அதரிகொள்பவர் பகடு	94	அதரிகொள்பவரிசை
அஞ்சுவரத்தட்கும்	140	அஞ்சுவரக்கடக்கும்
கருங்காற் குறிஞ்சி	300	கருங்கோற்குறிஞ்சி
மண்ணுற வாழ்ந்த	351	மண்ணுற வீழ்ந்த
இருதலே வந்த	402	இருதலே வேந்தர்
தழீஇத்திரிவிலேஞர்	405	தரீஇய திரிவிளேஞர்
தாதணித் தாமரை	463	தாதவிழ்த்தாமரை
கவவுக்கரந்து	570	கவவுக் கவர்ந்து

நீருடைக்கலிங்கம்	721	சோறுடைக் கலிங்கம்
வான்வலம்புணர்ந்த	727	தான்வலம் பழிச்ச
மாக்கண்முரசம்	733	மயிர்க்கண் முரசம்
வளநக்ர்பொற்ப நோன் குறட்டன்ன	741-2	வளங்கெழுநகர் நோன் குறட்டன்ன

மேலே கண்ட பாடவேறுபாடுகளே பொருள் நோக்கில் ஆய்வுக்கு உரியனவாக அமைகின்றன. **'அதரிகொள்பவர் பகடு'** (94) என்பதற்கு அமைந்த **'அதரிகொள்பவரிசை'** என்ற வேறுபாடு பொருள் சிறப்பில்லாதது.

> "அதரி கொள்பவர் பகடுபூண் தெண்மணி
> இரும்பு ளோப்பு மிசையே என்று"[1]

எனவரும் பகுதியில், 'அதரிகொள்பவர்' இசை, பகடுபூண் தெண் மணிஇசை, இரும்புள் ஒப்பும் இசை என இசை என்னும் சொல்லை மூவிடத்தும் கூட்டி நயமுறப் பொருளுரைப்பர் நச்சினார்க்கினியர். இங்குக் கொள்ளப்பட்ட வேறுபாடு அத்தகைய நயத்தை வழங்க வில்லை. மேலும், பொருளுரைக்குங்கால் அதரி கொள்பவரிசை என நச்சினார்க்கினியர் கொண்டு கூட்டிய தொடரே இவ் வேறுபாடு பிறந்தமைக்குக் காரணமாக அமைகிறது.

போரில் வென்ற பகைவர் உள்ளத்தில் அச்சம் தோன்றத் தங்கும் வலிமை என மன்னன் நெடுஞ்செழியனின் வலிமைச் சிறப்புக் கூறுமிடத்து, **'அஞ்சு வரத்தட்கும்** என்ற தொடர் ஆளப் பட்டுள்ளது. இனி **'அஞ்சுவரக் கடக்கும்'** என்றால் அச்சம் தோன்றச் செய்து வெல்லும் வலிமை எனப் பொருள் தரும். முந்திய தொடர்ப் பொருளைவிட, வேறுபாட்டுத் தொடரின் பொருள் மன்னனின் வலிமையை மேலும் சிறப்பிப்பதாக அமைந் துள்ளது. எனவே **'அஞ்சுவரக் கடக்கும்'** என்ற பாடத்தை இங்குச் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

1. மதுரை, 94-95

'**கருங்காற் குறிஞ்சி** (300) எனவரும் பாடத்தினும் '**கருங்கோற் குறிஞ்சி**' என்ற பாடம் சிறப்புடையது.

''கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே''[1]

எனவரும் குறுந்தொகைத் தொடரும் 'கருங்கோற் குறிஞ்சி' என்றே அமைந்துள்ளது. நச்சினார்க்கினியர் உரைப்பகுதியிலும் 'கருங் கோற் குறிஞ்சி' எனப் பாடவேறுபாடு உள்ளது. எனவே 'கருங் கோற் குறிஞ்சி' என்பதையே ஏற்புடைய பாடமாகக் கொள்ளலாம். 'கருங்கால் வேங்கை' (296) என்று நான்கு அடிகளுக்கு முன்னர் பயின்ற சொல்லுக்கு ஏற்ப இங்கும் 'கருங்காற்குறிஞ்சி' (300) எனப் பயின்றிருக்கலாம்.

'**மண்ணுற வாழ்ந்த**' (351) என்பதற்கு மண்ணுள்ள அளவும் ஆழ்ந்த என்பது பொருள். கிடங்கின் ஆழம் இங்குச் சுட்டப் படுகிறது. '**மண்ணுற வீழ்ந்த**' என்பதும் இப்பொருளையே தருகிறது. இங்கு '**மண்ணுற வாழ்ந்த**' என்ற பாடத்தையே சிறந்ததெனக் கொள்ளலாம்.

நச்சினார்க்கினியரின் உரைப்பகுதியில் 'இருதலை வந்த பகை முனைகடுப்ப' என உரை கூறுவதற்குக் கொண்டு கூட்டும் பகுதியில் '**வந்த**' என்பதற்கு '**வேந்தர்**' என்ற பாடவேறுபாடு அமைந் துள்ளது. பின்னுள்ள பகுதியோடு பொருள் நிலையில் இவ்வேறுபாடு இயைபுறப் பொருந்தவில்லை. '**இருதலை வந்த**' என்ற பாடமே சிறப்புடையது. இம்முறையிலேயே உரையாசிரியரின் கொண்டு கூட்டுப் பகுதியில் **தழீஇத்திரிவிலைஞர்**' (405) என்பதற்குத் '**தரீஇயதிரிவிளைஞர்**' என்ற வேறுபாடும் அமைந்துள்ளது. இதுவும் பொருள் இயைபின்றியே அமைந்துள்ளது.

'**தாதணித் தாமரை**' (463) என்பதற்குத் '**தாதவிழ்த்தாமரை**' என்ற வேறுபாடு உரையாசிரியரின் கொண்டு கூட்டுப் பகுதியில் அமைந்ததே யாகும். '**தாதணித்தாமரை**'-என்பதற்குத் 'தாது சேர்ந்த தாமரை' என்பது பொருள். இப்பொருளைவிடத் தாதவிழ்த்

1. குறுந், 3,4.

தாமரை என்னும் தொடர் நயமாக உள்ளது. பொருட் சிறப்பும் அமைந்துள்ளது. எனவே இவ்விரு பாடங்களில் **'தாதவிழ்த்தாமரை'** என்பதைச் சிறப்புடையதாக ஏற்கலாம். வை.மு.கோ. பதிப்பில் **'தாதுணிதாமரை'** என ஒற்றுவிட்டமைந்த தொடர் பாடமாக உள்ளது.

'களவுக்கரந்து' (570) என்பதற்குக் **'கவவுக் கவர்ந்து'** என்று வரும் பாடம், பொருள் இயைபுறப் பொருந்தவில்லை. 'சோறமைவுற்ற **'நீருடைக் கலிங்கம்'** (721) என்பதற்குச் **'சோறமைவுற்ற சோறுடைக்கலிங்கம்'** என்று வரும் பாடமும் பொருத்தமில்லை. **'தாள்வலம் வாழ்த்த'** (727) என்ற தொடருக்குரிய பொருளையே தந்துநிற்கும் **'தாள்வலம் பழிச்ச'** என்ற வேறுபாடும் சிறப்பின்றியே உள்ளது.

'மாக்கண்முரசம் ஓவில கறங்க' (733) என்ற தொடரில் **'மாக்கண் முரசம்'** என்பதற்கு அமைந்த **'மயிர்க்கண் முரசம்'** என்ற வேறுபாடு சிறப்புடையதாக உள்ளது.

> "விசித்து வினை மாண்ட மயிர்க்கண் முரசம்"[1] என்றும்
> "மயிர்க்கண் முரசொடு வான் பலியூட்டி"[2] என்றும்
> "மயிர்க்கண் முரச முழங்க"[3] என்றும்

வரும் இலக்கியப் பயிற்சிகளும் இப்பாடத்தைக் கொள்ள அரண் செய்கின்றன.

'வளநகர் பொற்ப நோன்குறட்டன்ன' (741.42) என்பதற்கு அமைந்த **'வளங்கெழுநகர் நோன் குறட்டன்ன'** என்ற பாடம் ஓசைக்குறைவும், பொருட்சிறப்பு இன்மையும் உடையதாக உள்ளது. எனவே முன் பாடத்தையே சீரியதெனக் கொள்ளலாம்.

---

1. புறம். 63.7
2. சிலம்பு 5.88
3. பு.வெ.மா. 171

7 நெடுநல்வாடை

நெடுநல்வாடை 188 அடிகளால் அமைந்தது. இதில் 16 அடிகளில் 17 இடங்களில் 19 வேறுபாடுகள் உள்ளன. இவற்றுள் 6 மட்டும் பொருள் நோக்கில் காணத்தக்கவை. இவை கீழே பட்டியலில் தரப்பெற்றுள்ளன.

பாடம்	அடி	வேறுபாடு	வேறுபாடு அமைந்த இடம்
செவ்வியரும்பின்	40	செவரியரும்பு	நச்சி.உரை
மனையுறை புறவின்	45	இறையுறைபுறவும்	,,
கட்டளை திரியாது	62	கட்டளை தெரியாது	,,
வாயுறை யழுத்திய	140	வாயுற அழுத்திய	,,
உகத்தவை	156	முகைத்தவை	உ.வே.சா.பதிப்பு
தாதுளிமறைப்ப	185	பரம்புதுளிமறைப்ப	,,
		தாழ்துளி மறைப்ப	நச்சி.உரை

பாட வேறுபாடுகளில் நச்சினார்க்கினியர் உரைக்குறிப்பால் அறியப்பெறுவன ஐந்து. இவற்றுள் 'செவ்வியரும்பின்' (40) என்பதற்கு 'மலரும் செவ்வியுடைய அரும்பு' என்பது பொருள். இதற்கு அமைந்த **'செவ்வரியரும்பு'** என்ற பாடத்திற்குச் சிவந்த வரியினையுடைய அரும்பு' என்பது பொருள். பொருள் நிலையில் செவ்வரியரும்பு என்ற பாடம் சிறப்பாக உள்ளது. 'செவ்வரியரும்பு பாடமாயிற் சிவத்த வரியினையுடைய அரும்பென்க' என நச்சினார்க்கினியர் குறிப்பிட்டுள்ளார். 'அவிழ்பதம் கமழ' என்று மலரும் பருவ நிலை பின்னே குறிக்கப்பெறுதலால், செவ்வியரும்பு என்று கூறுவது தேவையில்லை. **'செவ்வரி யரும்பு'** என்ற பாடத்தை இங்குச் சிறந்ததாகக் கொள்ளலாம்.

'மனையுறை புறவு' (45) **'இறையுறை புறவு'** என வருவன வற்றில் **'மனையுறை புறவு'** என்ற பாடம் சிறப்புடையது.

"...... .... மனையுறை குரீஇ
முன்றி லுணங்கல் மாந்தி மன்றத்
தெருவினுண் டாது குடைவன வாழ"[1]

எனவரும் குறுந்தொகைப் பகுதியிலும் மனையுறை குரீஇ என்ற தொடர் பயின்றது. இப்பாட வேறுபாட்டை **'இறையுறை புறவும்'** பாடம் என நச்சினார்க்கினியர் குறிப்பர்.

'கட்டளை **திரியாது**' (62) என்பதற்குக் 'கட்டளை **தெரியாது**' என்பதும் பாட வேறுபாடு. கட்டளை என்றால் சன்னல்.' 'சன்னலுக்குப் பக்கத்தில் உலவாமல்' என்பது 'கட்டளை திரியாது' என்ற பாடத்துக்குப் பொருள். 'கட்டளை தெரியாது' என்றால் 'சன்னலைத் திறக்காமல்' என்பது பொருள். கதவு சாத்தப் பட்டிருக்கும் நிலை 'கதவம் தாழொடு துறப்ப' எனவரும் தொடரால் பின்னே விளக்கப்படுகிறது. எனவே இங்குத் 'திறக்காமல்' என்ற பொருளைத் தரும் 'தெரியாது' என்ற பாடத்தைவிட 'உலவாமல்' என்ற பொருளைத் தரும் **'கட்டளைதிரியாது'** என்ற பாடம் சிறப்புடையது.

'வாயுறை யழுத்திய வறிது வீழ்காதின்' (140) என்பதற்குத் தாளுருளி என்னும் அணிகலன் அழுத்திய வறிய காது என்பது பொருள். இதற்கு **வாயுற வழுத்திய** என்பது வேறுபாடு. நச்சினார்க்கினியர் வாயுறவென்று பாடமாயின் 'கடுக்கனை வாயுறும்படி அழுத்தின காதென்க' என்று இப்பாடத்தையும் பொருளையும் குறிப்பிடுவர். நூலில் வறிது **வீழ்**காது என்று வந்திருப்பதால் 'கடுக்கன் பொருந்திய' என்பது பொருந்தாது. எனவே**'வாயுறை யழுத்திய'** என்ற பாடமே சிறந்து விளங்குதல் காணலாம்.

'தாதுளி மறைப்ப' (185) என்பதற்கு நச்சினார்க்கினியர் உரைக்குறிப்பில் ஒன்றும், உ.வே.சா. சாமிநாதையர் அடிக் குறிப்பில் ஒன்றுமாக இரு பாடவேறுபாடுகள் உள. 'உகத்தவை' (156) என்பதற்கு உ.வே.சாமிநாதையரின் அடிக்குறிப்பில் ஒரு

1. குறுந 46. 2–4

வேறுபாடு உள்ளது. வேறுபாடுகள் மூன்றும் பொருள் இயைபு பெறுமல் உள்ளன. எனவே **'தாதுளி மறைப்ப'** என்றும், **'உகத்தலை'** என்றும் வருவனவே சிறந்த பாடங்கள்.

8. குறிஞ்சிப்பாட்டு

குறிஞ்சிப்பாட்டில் 261 அடிகள் உள. இவற்றில் 18 அடிகளில் 18 இடங்களில் 18 வேறுபாடுகள் அமைந்துள்ளன. இவற்றுள் பொருள் வேறுபாடுடையன 8 மட்டும். பொருள் வேறுபாட்டு நோக்கில் ஆயத்தக்கனவாக அமைந்தவற்றுள் பொருள் இயைபின்றியும் சிறப்பின்றியும் அமைத்தவை நான்கு. எஞ்சிய நான்கும் கீழே பட்டியலில் தரப்பட்டுள்ளன.

பாடம்	அடி	வேறுபாடு	வேறுபாடு அமைந்த இடம்
வான்றிணைப் புரையோர்	205	வான்றுணைப் புரையோர்	உ.வே சா.பதிப்பு
நெஞ்சமர்ந்து	211	நெஞ்சமைந்து	நச்சி.உரை
நீ துயில் எழினும்	241	நீதுயில் ஒழியினும்	கழகப் பதிப்பு
தீர்ந்தன்றுமிலனே	245	திரிந்தன்று மிலனே	உ.வே.சா பதிப்பு

'வான்றிணைப் புரையோர்' (205) என்பதற்கு 'உயர்ந்த குலத்தில் பிறந்த சான்றோர்' என்பது பொருள். 'வான்றுணைப்புரையோர்' என்பதற்கு 'உயர்ந்த துணையாகிய சான்றோர்' என்பது பொருள். இவ்விரண்டில் முதல் தொடரே சிறந்த பொருட்சிறப்புடன் அமைந்தது. மேலும் 'வான்றிணை' என்பது எழுத்து மாறியமைந்தமையால் 'வான்றுணை' என்று மாறியதாகக் கொள்ளவும் இடமுண்டு

'நெஞ்சமர்ந்து' (211) என்பதற்கு 'நெஞ்சம் சூளுறவில் பொருந்தி' எனப் பொருள் தருவார் நச்சினர்க்கினியர். அவரே **'நெஞ்சமைந்தென்றும்'** பாடம் என இவ்வேறுபாட்டைச் சுட்டியுள்ளார். பாடவேறுபாடு ஏறத்தாழ அதே பொருளைத் தருகின்றதே தவிரப் பொருட் சிறப்புநிலை யாதுமில்லை. எனவே **'நெஞ்சமர்ந்து'** என்ற பாடத்தையே சிறந்ததாகக் கொள்ளலாம்.

'நீ துயில் எழினும்' (241) என்ற பாடத்திற்கு **நீ துயில் ஒழியினும்'** என்ற வேறுபாடு கழகப் பதிப்பில் மூலமாக உள்ளது. உரையாசிரியர் கண்ணழித்துப் பொருளுரைக்குங்கால் நீ துயில் எழினும் என்று பாடங்கொண்டு 'நீ உறக்கந் தீர்ந்து விழித்தனை யாயினும்' என்று பொருள் எழுதியுள்ளார். எனவே மூலப் பதிப்பில் **'நீ துயில் எழினும்'** என்ற பாடமும், உரை எழுதப் பிரித்ததில் 'நீ துயில் ஒழியினும்' என்ற பாடமும் உள்ளது அறியலாம். இவ்விரு பாடங்களும் ஏறத்தாழ ஒரே பொருள் தருவனவே. எனவே **'நீ துயில் எழினும்'** என்ற முதற் பாடத்தைச் சீரியதென ஏற்கலாம்.

'தீர்ந்தன்றுமிலனே' (245) என்பதற்கு அமைந்த பாடமும் பொருட் சிறப்பின்றி உள்ளது.

9. பட்டினப்பாலை

பட்டினப்பாலை 301 அடிகள் கொண்ட பாட்டு. இதில் 9 அடிகளில் மட்டும் 9 இடங்களில் வேறுபாடுகள் உள. வேறுபாடுகளில் 7 பொருள் சிறப்பு இல்லாதனவாக உள.

பொருள் நோக்கில் ஆய்வதற்கு இடம் தந்து நிற்பவை இரு வேறுபாடுகள் மட்டுமே. **'வரையாடுவருடை'** (139) என்பதற்கு உ.வே. சாமிநாதையர் பதிப்பின் அடிக்குறிப்பில் **'வரைபாய் வருடை'** என்ற வேறுபாடு உள்ளது. 'வருடை' என்பது மலையில் வாழும் ஒரு விலங்கு என்பர் உ.வே. சாமிநாதையர்.

"அவன் மலைப்
போருடை **வருடையும் பாயாச்**
சூருடை யடுக்கத்து"[1]

எனவரும் இலக்கியப் பயிற்சியாலும் **வருடை உலாவும்** தோற்றத்தைவிட, வருடை பாயும் தோற்றமே நூலில் பின்னே

1. நற். 359. 7-9

கூறப்படும் பொருளுக்குச் சிறப்பாக உவமை நிலையில் பொருந்துவ தாலும் இங்கு **'வரைபாய் வருடை'** என்ற பாடத்தை ஏற்றதாகக் கொள்ளலாம்.

'பிறங்குநிலை மாடத்து' (285) என்பதற்கு அமைந்த **'பிறங்கு நிலை வாயில்'** என்ற வேறுபாடு அத்துணைப் பொருட் சிறப்புடைய தன்று ஆதலால் **'பிறங்குநிலை மாடத்து'** என்ற பாடத்தைச் சீரியதாக ஏற்கலாம்.

10. மலைபடுகடாம்

மலைபடுகடாம் 583 அடிகளால் ஆகிய பாட்டு. இதில் 42 அடி களில் 44 இடங்களில் 51 வேறுபாடுகள் அமைந்துள்ளன. அவற்றுள் 9 மட்டும் பொருள் நோக்கில் சிறப்புடையவை.

பொருள் நோக்கில் ஆயத்தக்க வேறுபாடுகள் 9. இவற்றுள் ஏழு பொருட் சிறப்பும் முன்பின் பொருளியைபும் அற்றவை. அவை, கீழே குறிப்பிடப் பெற்றுள்ளன.

பாடம்	அடி	வேறுபாடு	வேறுபாடு அமைந்த இடம்
நிலநாடு படர்மின்	192	நிலனெடு படர்மின்	உ.வே.சா.பதிப்பு
		நிலநாள் படர்மின்	
		சிலநாள் படர்மின்	வை.மு.கோ. பதிப்பு
இருங்கலரும்பொறி	194	இருங்கல் அடாஅர்	சங்.இல.பதிப்பு
பெருவெளிற்பிணிமார்	326	பரூஉவெளில்பிணிமார்	உ.வே.சா. பதிப்பு
கண்புமலிபழனம்	454	கண்பமல் பழனம்	,,
		காண்புமலிபழனம்	,,
இறந்துவரிக்கும்	475	இறந்து பனிக்கும்	,,

பொருட் சிறப்புடைய நிலையில் அமைந்தனவாகக் கருதத் தக்கனவற்றில் '**பகனிலை தளர்க்கும்**' (206) என்பதற்குப் '**பகைநிலை தளர்க்கும்**' எனவரும் வேறுபாடு ஒன்று. இவ்வேறுபாட்டை நச்சினார்க்கினியர் தம் உரையில் குறிப்பிட்டுள்ளார். 'பகனிலை' என்பது '**பகல்+நிலை**' எனப்பிரியும். பகல்நிலை தளர்க்கும் என்பதற்கு யானைகளின் பகற் பொழுது நடமாட்டத்தைக் கெடுக்கும் என்பது பொருள். பகற்பொழுதில் தினைப்புனத்தில் வரும் 'யானைகளின் நடமாட்டத்தைக் கெடுக்கும்' வகையில் கவண் கற்கள் எய்யப்படுகின்றன. 'பகைநிலை தளர்க்கு மென்று பாடமாயின் பகைத்த நிலையென்க' என இங்கு நச்சினார்க்கினியர் பிறிதொரு பாடத்தையும் பொருளையும் சுட்டியுள்ளார். பகற் பொழுதில் மட்டுமின்றி எப்பொழுதும் யானையின் நடமாட்டத்தைத் தடுக்கும் வகையில் கவண்கற்கள் எய்யப்பட்டன என்று பொருள் கொள்ளும் நிலையில் அமைந்திருப்பது '**பகைநிலை தளர்க்கும்**' என்ற பாடமே. எனவே இப்பாடத்தைச் சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

அடுத்து வரும் பிறிதொன்று '**முளிகழை இழைந்த**' (248) என்பதற்கு '**முளிகழை யிசைந்த**' எனவரும் வேறுபாடு. இவ் வேறுபாடு **உ.**வே. சாமிநாதையரின் அடிக்குறிப்பில் இடம் பெற்றுள்ளது. '**முளிகழை இசைந்த**' என்ற வேறுபாடு '**முளிகழை இழைந்த**' என்ற பாடத்திற்குரிய அதே பொருளைத் தந்து நிற்கின்றது. எனவே '**முளிகழை இழைந்த**' என்ற முதற் பாடத்தையே சிறப்புடையதாகக் கொள்ளலாம்.

பத்துப்பாட்டு நூல்கள் பத்தும் மிகுதியும் வழக்குப் பயிற்சி பெற்றிருப்பினும் மிகுந்த அளவில் அவற்றில் பாடவேறுபாடுகள் எழவில்லை. எனவே நூலாசிரியரின் மூலபாடங்கள் பிற்காலத்தும் பொன்னேபோல் போற்றப்பட்டிருந்தன என்று அறிய முடிகின்றது.

முடிவுரை

என் சிறப்பாய்வுக்குப்பட்ட தொல்காப்பிய இலக்கணம் சங்க இலக்கியம் என்ற இருவகைப் பனுவல்களிலிருந்தும் 9111 பாட வேறுபாடுகளை நான் எடுத்துக் காட்டியுள்ளேன். அங்ஙனம் காட்டுங்கால் சிறு துரும்பும் பல் குத்த உதவும் என்ற பழமொழி அறத்தை நினைந்து, பயன், பயனின்மை நோக்காது சிறிது பெரிது என்று பாராது, ஓரெழுத்தென்றோ, ஒருசீர் என்றோ ஓரடி யென்றோ வரம்பு கொள்ளாது, காணப்பட்ட அனைத்துப் பாடங்களையும் முழுக்காட்சி நோக்கத்தோடு குறித்திருக்கின்றேன். பொருட்பயனுடைய பாடங்கள் தவச்சிந்தனைக்குரியவை யெனினும் ஏனைய முழுத்தொகுதிப் பாடவேறுபாடுகளும் பாடவேறுபாட்டு வரலாறு காண்பதற்கும், வேறுபாடுகள் எவ்வகையில் வருகின்றன என்று களங்களை அறிதற்கும் பகுத்தாய்தற்கும் பயன்படுவன. வேறுபட்ட பாடங்கள் பிற்காலத்தில் மேலும் வளராமல் காப்பதற்கும் இத்தொகுதி, இந்நூல்களைப் பொறுத்தவரை ஒரு வரம்பாகவும் அணையாகவும் அமையும்.

காலந்தோறும் வந்த பதிப்பனைத்தையும் பார்த்து வேறுபட்ட பாடங்களைத் தொகுப்பது ஒரு கருவித்தனமேயாகும். தொகுத்த அடிப்படையிலிருந்து மூலச் செம்மையைக் காண்பதே ஆய்வின் பயனாகும். இந்த நோக்குடன் தான் என் ஆய்வில் இயல்தோறும் பொருள் சிறந்த பாடங்களைக் காணும் திறத்தில் தனி முயற்சி மேற்கொண்டுள்ளேன். இவ்வறிவு முயற்சியால், தொன்மைசான்ற முதல் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் 131 இடங்களில் உரிய காரணங்களோடு பொருட் சிறப்புடைய பாடங்கள், இவ் வாய்வுக் கட்டுரையில் நிறுவப்பட்டுள்ளன. அங்ஙனம் நிறுவுங்கால் இன்னவர் உரை, இன்னவர் பதிப்பு என்று தனித்தன்மை பாராமல், பொருட் சிறப்பும் தெளிவும் நோக்கி முடிவுகள் காணப்பட்டன. இவ்வறிவுப் பண்புத் தடத்திலேயே எட்டுத் தொகையில் 2311, பத்துப்பாட்டில் 96 ஆகிய இன்றியமையாத பாடங்களும் தக்கனவாக அறுதி செய்யப்பட்டன.

பொருள் நலப்படாத வேறுபட்ட பாடங்களே எண்ணிறந்தவை. பொருள் நலம் இல்லையெனினும் அப்பாட வேறுபாடுகளில் இன்னோசை, யாப்பு நோக்கிக் கொள்ளத் தக்கன வுண்டு. விரிவஞ்சி அனைத்தையும் விதந்து ஆராயாது இயல் தோறும் கொள்கை அடிப்படையில் சில எடுத்துக் காட்டுக்கள் இவ்வாய்வில் இடம் பெற்றுள்ளன. இவற்றின் நிரம்பிய காட்டுக் களைக் காண விரும்புவார் இவ்வாய்வொடு இணைந்த பின்னிணைப்புத் தொகுதியைப் பார்க்க வேண்டுகிறேன்.

நூலாசிரியன் தன் நூலை எத்துணைச் செம்மையாக எழுதி யிருப்பினும், அதனைக் காலந்தோறும் பயன்படுத்தும் மக்களினத்தின் உணர்ச்சியாலும் அறியாமையாலும் கைப்பிழை யாலும் வேறுவகைக் கவனக் குறைவாலும் மாளிகைக்குள் தூசி துகள்கள் புகுதல் போல இவை தவிர்த்துக் கொள்ள இயலாதவை. ஆதலின், பாடவேறுபாட்டு ஆய்வு என்பது என்றும் நிலையான ஓர் ஆய்வுத்துறையாக இலக்கிய உலகில் விளங்கும் என்பது தெளிவு.

தவிர்க்க முடியாத இலக்கியக் குறைபாடு என்றாலும் சில பதிப்புக்களில் சில இன்றியமையாத நெறிமுறைகளைப் பின் பற்றினல் பெருமளவு இவ்வேறுபாட்டு விளைவுகளைக் குறைக்க முடியும்.

இவ்விடத்தில் இக்காலப்போக்கு ஒன்றினை நான் சுட்ட விரும்புகின்றேன். ஏடுகளிற் காணப்படும் வேறுபாடுகளைக் காட்டிலும் விகாரமான வேறுபாடுகள் இன்றைய அச்சுப் பதிப்புக் களில் மலிந்து வருகின்றன. பிற்காலத்து வரலாறு அறியாதார் அச்சுப் பிழைகளையும் பாடவேறுபாடுகளாக மயங்கி ஆய்வைப் பெருக்கிக் கொள்ளக் கூடும். என் ஆய்வில் வரலாறுபட்ட முறையான பாடவேறுபாடுகளே தழுவப்பட்டன. தெளிவாகத் தெரிந்த அச்சுப்பிழைகள் ஒதுக்கப்பட்டன. இவ்வகைப் பிழைகள் பிற்காலத்து இலக்கிய ஆய்விற்குப் பேரூறு செய்யுமாதலின் இலக்கிய இலக்கணப் பதிப்புக்கள், உரைப்பதிப்புக்கள் அனைத்தும் தக்கார் பார்வையில் செப்பமாக வெளியிட வழிவகைகள் விதிக்க

வேண்டும். அச்சுப்பதிப்பில் பிழைகள் வந்திருந்தால் பிழை திருத்தம் போடுவதையாவது பதிப்பாளர்கள் ஒரு கடமையாகக் கருத வேண்டும். இக்குறிப்பினை இம் முடிவுரையில் வலியுறுத்திக் கூறுவதற்குக் காரணம், அச்சுப் பிழைகள் பாட வேறுபாடுகளோடு போட்டியிட்டுத் தந்த தொல்லையாகும்.

பாடவேறுபாடுகளின் தோற்றத்திற்குப் பல காரணங்கள் உள என்பது முன் இயல்களில் காட்டப்பெற்றன. இன்னொரு காரணமும் ஈண்டு நம் சிந்தனைக்குரியது.

இன்றைய எழுத்தாளர்களும் கவிஞர்களும் தங்கள் வாழ்நாள் காலத்தே பல பதிப்புக்களை வெளிப்படுத்தும் போது பதிப்புத் தோறும் சில மாற்றங்களைச் செய்யும் வழக்கினைக் காண்கின்றோம்.

பாரதியார் பாடல்களிலே பாட வேறுபாட்டிற்கு மூன்றுவது காரணம் கவிஞரே தனது பாடத்தில் அவ்வப்போது திருத்தங் களும் மாற்றங்களும் செய்து கொண்டமையாகும். முதலில் ஏதாவது ஒரு சஞ்சிகையில் அல்லது பத்திரிகையில் வெளிவந்த பாடல், பின்னர் நூலில் அச்சிடும் பொழுது மூல ஆசிரியராலேயே திருத்தப் படுவதுமுண்டு எனப் பாரதியாரே தம் வாழ்நாளில் மூல பாடங்களைத் திருத்தியுள்ளார் என்ற கருத்தைக் குறிப்பிட்டு ‘சொல்லில் இனிது தமிழ்ச் சொல்லே’ என்பதற்கு ‘சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே’ என்றும், ‘அதைத் தெய்வமென்று கொண்டாடுபாப்பா’ என்பதற்கு ‘அதைத் தினமும் புகழ்ந்திடடி பாப்பா’ என்றும் அமைந்த வேறுபாடுகளை க. கைலாசபதி சுட்டுவர்.

மேனாட்டுக் கவிஞர் வால்ட் விட்மன் (1819–1892) புல்லின் இதழ்கள் (Leaves of Grass) என்ற கவிதை நூலைத் தம் வாழ் நாளில் ஒன்பது முறை பதிப்பித்தார் என்றும், ஒவ்வொரு பதிப்பிலும் கவிஞரே பற்பல மாற்றங்களையும், திருத்தங்களையும் செய்தார் என்றும் இறுதியில் 1892ல் வெளியான பதிப்பே அனைவராலும் பின்பற்றக் கூடிய பதிப்பாக விளங்குகிறது என்றும் அறிகிறோம். கவிஞருக்குப் பின்னர் 1902ல் ஓ.எல்.திறிக்ஸ் என்பார்

இந்நூலுக்குப் புல்லின் இதழ்களின் பாடவேறுபாடுகள் (Variorum Readings of Leaves of Grass) என்ற பாடவேறுபாட்டு வளப் பதிப்பு ஒன்றை வெளியிட்டார். இந்நூல் ஆராய்ச்சியாளருக்கு இன்றுவரை பெரிதும் பயன்படும் நூலாக விளங்குகின்றது.

